கலைஞரின்
கடிதங்கள்



24

17.08.1993 - முதல்
04.04.1994 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 24

17.08.1993 - 04.04.1994

தி.மு.க. அமைப்புச் செயலாளர்
ஆய்வக நூல் நிலையம்
சென்னை-18
அறிவாலயம்

தலைவர் கலைஞர்

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549 / 97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக
வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM
9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

AVAILABLE @ :

கௌரா ஏஜென்ஸீஸ்
எண்.1 சாமி தெரு,
சாய் பாபா கோவில் பின்புறம்
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES
NO : 1 SAMY STREET,
SAI BABA TEMPLE BACK SIDE
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.**300.00**

CODE :**2300**

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
கலைஞரின் செயலாளர்கள்
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு : 42231
முதற் பதிப்பு – 2022
வெளியீடு : 894-8116
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் அன்பழகன் நூலகம்
நிலையம்
சென்னை-18
அறிவாலயம்



அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

"கலைஞரின் கடிதங்கள்" அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய - பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை - சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் - பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் "அணி"யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் “கோகிலாம்பாள் கடிதங்கள்”, இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய “அன்னைக்கு’, "தம்பிக்கு”, “நண்பர்க்கு’, "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் “தம்பிக்கு” கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய “உடன்பிறப்புக்கு” கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க.'' என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

"எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, "அன்பு நண்பா !" என விளித்து, "ஜாக்குலின்கள்" என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் "முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ’

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

"காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி"
"மகுடி ஊதும் மகானுபாவர்கள்’’
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
"கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

"நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!"
"எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?"
"கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!"
"அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
"இடர் எது வரினும், ஏற்பேன்"
"பறித்து வராத பாரிஜாதம்"

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. **4051 கடிதங்களைக் கொண்ட 54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
2041. ஆகஸ்ட் 19ம் செப்டம்பர் 9ம்!	17-08-1993	23
2042. தலையங்கம் எழுதியோர் தலையைத்தான் சொறிந்து கொள்வர்!	19-08-1993	27
2043. எடுப்பது ஒரு ரூபாய், இழப்பது பத்தாயிரமா?	26-08-1993	31
2044. விளக்கப் பிரச்சாரம், விளக்கொளியாகட்டும்!	29-08-1993	37
2045. பொறுத்திருக்க நேரமில்லை; போர் முரசு கொட்டும் வேளை நெருங்கி விட்டது!	30-08-1993	40
2046. வளைந்திடும் நீதிக்கோலை, நிமிர்த்திடும் வல்லமை, மக்கள் சக்திக்கு உண்டு!	31-08-1993	45
2047. காசு கரியாகும் கதை கேளீர்!	01-09-1993	49
2048. நீதிமன்றங்கள் புனிதமானவை!	03-09-1993	55
2049. தமிழகத்தின், தலையெழுத்தை வலிவாக்க மாணவத் தம்பிகளே! வருக!	05-09-1993	60
2050. வீழ்ச்சியின் விளிம்பு அல்ல; வெற்றியின் படிக்கட்டுகள்!	29-09-1993	64

2051. பகலவனை மணலால் கட்டிப் பட்டம் விடப் பார்க்கிறார்கள்!	30-09-1993	69
2052. அடையாளக் காணிக்கை அன்பின் அறிகுறி!	02-10-1993	74
2053. திரும்பத் திரும்பக் கூறினால், பொய்யும் மெய்யாகிவிடுமா?	04-10-1993	78
2054. கையில் காண்டீபம் இருந்தும் பயன் என்ன?	14-10-1993	83
2055. சோழமண்டிலத்தின் சுயமரியாதைச் சுடரொளி அணைந்து விட்டதே!	18-10-1993	87
2056. அவர்களுக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலி!	20-10-1993	91
2057. நோய்நாடி - நோய்முதல் நாடி...!	25-10-1993	95
2058. இருப்பது ஓர் உயிர்தான்; அது போவதும் ஒருமுறைதான்!	04-11-1993	98
2059. நவம்பர் 9 - நம்பிக்கையளிக்கும் தீர்மானம்!	07-11-1993	102
2060. ஒடுக்கப்பட்ட மக்களின் உயிர்ப் பிரச்சினை! ஓரணியில் திரளுவோம் வாரீர்!	12-11-1993	108
2061. சந்தேகப்படுவதில் தவறு என்ன?	17-11-1993	114
2062. மானம், நாம் கேட்ட தாலாட்டு! மரணம், நாம் ஆடிடும் விளையாட்டு!	19-11-1993	120

2063. செவியில் நுழையட்டும்! சிந்தையில் பதியட்டும்!	20-11-1993	125
2064. உச்ச கட்டம்! உள்ளம் கவரும் கட்டம்!	22-11-1993	128
2065. அந்தப்பாதை, எந்தப்பாதையோ?	24-11-1993	132
2066. அன்றே சிந்தினார்; அண்ணா, கண்ணீர்!	01-12-1993	139
2067. தலைநகர் எதிர்பார்க்கிறது; எழுக! எழுகவே!!	06-12-1993	147
2068. பெரியார் தந்த துணிவு - அண்ணா தந்த கனிவு!	08-12-1993	151
2069. தொடரட்டும், துயர் துடைப்புப் பணி!	09-12-1993	156
2070. காட்டுமன்னார் கோயில், காட்டும் படம்!	14-12-1993	160
2071. ஊனில் உயிரில் கலந்த உணர்வு இது!	15-12-1993	164
2072. கட்டுப்பாடும் - ஜனநாயகமும்!	16-12-1993	169
2073. நான் பலியானாலும் பரவாயில்லை!	17-12-1993	178
2074. கழகத்தின் வலிவுமிக்க படைக்கலன்!	19-12-1993	184
2075. தஞ்சை அழைக்கிறது; வந்திடுக!	22-12-1993	188
2076. பொதுக்குழு கூட்டம் - ஒரு விளக்கம்!	23-12-1993	191
2077. யாரை அழைக்கின்றேன் நான்?	24-12-1993	198
2078. அய்யா, அண்ணா வழியில் அறப்போர் தொடர்ந்திட!	25-12-1993	202

2079. அறிந்திட ஆவலாக உள்ளது நாடு!	29-12-1993	205
2080. நடித்துக் காட்டியதும் - நடத்திக் காட்டியதும்!	07-01-1994	210
2081. வேறு என்ன வெங்காயக் காரணம்?	08-01-1994	215
2082. கோபத்தில் அரும்பி - தாபத்தில் மலர்ந்து ...	09-01-1994	219
2083. வேரில் வெந்நீர் ஊற்றுவதைத் தடுத்திட; வா!	10-01-1994	224
2084. அழைக்கின்றேன் உன்னை; தலைநகர் சென்னை!	11-01-1994	228
2085. அறப்போர்வாள் தூக்கிட, அன்பே! வா!	12-01-1994	232
2086. நினைக்கும்போதே நெஞ்சு இனிக்கிறது!	13-01-1994	239
2087. அந்தோ; செட்டி நாட்டுக் கட்டித் தங்கமே!	17-01-1994	244
2088. தடந்தோள் தாங்கும் கொடி நிழலில்!	18-01-1994	246
2089. அழைக்கின்றார், அழைக்கின்றார் அண்ணா!	20-01-1994	251
2090. தேள் கொட்டித் துடிக்கும் தாயும்; அவள் பெற்றெடுத்த தேன்மலரும்!	21-01-1994	255
2091. என் கால்கள் பரபரக்கின்றன!	22-01-1994	259
2092. உன் காலடிகளுக்கு என் காணிக்கை!	26-01-1994	263

2093. இந்தி எழுத்து, தார் பூசிக்கொள்ளட்டும்!	28-01-1994	268
2094. முதலமைச்சர் - கவர்னர்; மோதல்!	29-01-1994	272
2095. விளக்கமளிப்போம்; வேதனை, களைவோம்!	31-01-1994	280
2096. வைக்கம் விழாவுக்கு வாழ்த்துக் கூறுவோம்!	01-02-1994	283
2097. நிதிசால சுகமா? சந்நிதி சேவ சுகமா?	05-02-1994	289
2098. பறவைகளாய் - பாய்ந்தோடும் மான் கூட்டமாய்!	10-02-1994	294
2099. மக்களின் போராட்டமாக்குவோம்!	12-02-1994	298
2100. வேலியற்றதாகிறது நெய்வேலி!	13-02-1994	302
2101. கழகத்தின் ஜோதி - களங்கமற்ற ஜோதி!	18-02-1994	307
2102. இதிலும் கூடப் பினாமிகளா?	19-02-1994	312
2103. அர்ஜுனர் தொடுக்கும் அம்பு!	24-02-1994	316
2104. மணியோசை வந்தது பின்னே! யானை வந்தது முன்னே!	02-03-1994	322
2105. ஆளுநருக்கும் - முதல்வருக்கும் நன்றி மடல்!	03-03-1994	325
2106. தென்றலாய் - தாமிரபரணியாய்...	10-03-1994	329
2107. அரசியும் - ஆண்டிப் பரதேசியும்!	11-03-1994	334
2108. அங்கும் இங்கும் சிந்திக்கத்தக்கது!	12-03-1994	338

2109. நியாயம் நிலைநாட்டப்பட்டுவிட்டது!	13-03-1994	341
2110. உங்கள் நண்பன் என்பது உண்மையாகிட.....	15-03-1994	346
2111. பால் அருந்தவும் ஒரு பக்குவம் தேவை!	16-03-1994	350
2112. என்ன தேசமடா இது?	17-03-1994	353
2113. வந்தேன்! உவந்தேன்! உணர்ந்தேன்!	23-03-1994	356
2114. நாவலரும் - நமது காவலரும்!	25-03-1994	361
2115. வேங்கையின் வாய்க்கு வெள்ளாட்டுத் தீனி!	26-03-1994	365
2116. உதடு ஒன்று சொல்ல; உள்ளம் ஒன்று நினைக்க!	27-03-1994	368
2117. கேடு பயக்கும் இந்த மூடுவிழா தேவையா?	28-03-1994	373
2118. நற்சான்றிதழை வைத்து நாக்கு வழிப்பதா?	30-03-1994	376
2119. மார்க்சிஸ்டுகளுக்கு நம் மனமார்ந்த நன்றி!	02-04-1994	381
2120. ஓர் ஏமாளிப் பெண்ணின் எலும்புக்கூடு!	03-04-1994	389
2121. ஆரம்பமே அத்துமீறும் செயலா?	04-04-1994	392

2041. ஆகஸ்ட் 19ம் செப்டம்பர் 9ம்!

உடன்பிறப்பே,

விடுதலை நாள் விழா! இந்தத் தேசத்தோர்க்கு ஒரு திருவிழா என்பதில் அய்யமில்லை! எப்போது? கணக்குத் தீர்த்த நாள் ஆகஸ்டு 15 என்று நமது மாபெரும் தலைவர் அண்ணா சொன்னாரே, அப்போது! ஆனால் 46 ஆண்டுகளுக்குப் பிறகு கணக்குப் பார்க்கும் நாளில் அன்று அடைந்த மகிழ்ச்சியின் அளவை விட ஆயிரம் மடங்கு அதிகத் துயரமன்றோ நம் நெஞ்சை அழுத்துகின்றது!

இந்த அழுத்தத்தை ஆகஸ்டு 15-ஆம் நாள், நான் மட்டும் கவிதை வடிவில் எழுதி வெளியிடவில்லை. ஏடுகளில் வாழ்த்து எழுதிய அரசியல் தலைவர்கள், கவிஞர்கள், பெரியோர்கள், அறிஞர் பெருமக்கள் பெரும்பாலோர் தமது ஏக்கப் பெருமூச்சினையே எழுத்துகளாக வடித்துள்ளனர் என்பது வெளிப்படையான உண்மை!

ஏக்கத்தை எழுத்தாக்குவது - பெருமூச்சினைப் பேச்சாக்குவது - கண்ணீரைக் கவிதையாக்குவது - இத்துடன் நிறுத்திவிட்டால், இந்த நாட்டில் விளைந்த சுதந்திரப் பயிரின் மணிக்கதிர்களை வேலி தாண்டும் விலங்கினங்களும் - விண்வழித்தாவிடும் பறவையினங்களும் கொத்திக் கொண்டு போகாமல் பாதுகாத்துவிட முடியுமா?

முடியாது! அதற்காகக் களத்தில் இறங்கும் காவல் சிப்பாய்களாக ஒவ்வொரு குடிமகனும் செயல்பட்டாக வேண்டும்!

நான் குறிப்பிடும் விலங்கினங்களும், விண்வழிப் பறவைகளும் எவை என்பதை நீ உணர்வாய்! உன்னைப் போல் சிந்திப்போர் உணர்வர்! கழனிப் பயிரைச் சேதப்படுத்த காட்டு மிருகங்களும், கானகத்துப் புள்ளினமும் மட்டுமல்ல. கதிர் நடுவே தோன்றும் களைகளும்கூட உடந்தையன்றோ!

மதவெறி - சாதிவெறி - வன்முறைத் தீர்வு - சட்டத்தைத் சாதகமாக வளைத்துக் கொண்டு சமுதாயத்தைச் சீரழித்தல் - பணத்திமிங்கலங்களுக்குப் பரிவு - பாபப்பட்ட ஜென்மங்களின் வாழ்க்கையில் மேலும் மேலும் சரிவு - பதவிப் போட்டி - கிடைத்த பதவியைத் தக்க வைத்துக் கொள்ள பச்சோந்திகளைத் தயாரித்தல் - கட்சித் தாவல் கூடாதென்று கூறிக்கொண்டே அரசியல் சந்தையில் மனிதப் பிராணிகளில் ஏலங்கள் - இத்தனை குமட்டல் வியாதிகளும் இந்த நாட்டைப் பீடித்திருப்பது போதாதென்றுதான், புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பேரால், வெளி மாடுகள் வேலி தாண்டி வர அனுமதி - வெள்ளைக்கார மற்றும் அந்நியப் பறவைகளுக்கு வழிவிட்டு விழியசைத்தல்.

இந்த அழகில் விவேகானந்தர் பாறை அமைந்த குமரி முனையிலிருந்து விந்தியம் கடந்து, இமயப்பனிமுகடு வரையில் எத்தனை கோடி ஊழல்கள் களைகளாக! இல்லை, இல்லை, பார்த்தீனியச் செடிகளாக விளைந்து, செழித்து, இந்தியாவின் முதுகு வளைந்து கிடக்கும் நிலையை சுதந்திர அறுவடையாக அறிவித்துக் கொண்டிருக்கின்றன!

விவேகானந்தர் பாறையை ஏன் குறிப்பிட்டேன் என்றால், அவர்தான் சொல்லியிருக்கிறார்;

வீழ்வது, எழுவதற்காகத்தான்!

என்று! அதனால்தான் - அந்த நம்பிக்கையுடன் தான் அந்தப் பாறையை எல்லையாய்க் கொண்டு சுட்டிக் காட்டினேன்.

வீழ்வது, எழுவதற்காகத்தான் என்ற உறுதியுடன் நாடு முழுதும் உள்ள அனைத்து மக்கள் பிரிவின் அமைப்புகளும், ஆகஸ்டு 19-ஆம் நாளும், செப்டம்பர் 9-ஆம் நாளும் இந்திய நாட்டின் எதிர்காலத்தையாவது இருட் குகையில், இழிவுச் சகதியில் விழாமல் காத்திட, கையூன்றி எழுந்து நின்றிட, பீடு நடை போட்டு நடந்திட போர் முழக்கம் செய்வதாக அறிவித்துள்ளன.

அதன் முதற்கட்டம்தான் வரும் ஆகஸ்டு 19-ஆம் நாள் உழைக்கும் வர்க்கத்தினர் எழுப்ப இருக்கும் உரிமைக் குரல்! அடுத்த கட்டம்தான் செப்டம்பர் 9-ஆம் நாள் முழு அடைப்புப் போர்க் குரல்!

அக்குரல்கள் வெற்றி பெற ஆதரவு தாரீர் என்று கழகச் சார்பில் நானும், மார்க்சிஸ்டு கட்சி சார்பில் திரு. நல்லசிவன் எம்.பி. அவர்களும், இந்திய கம்யூனிஸ்டு கட்சி சார்பில் திரு. நல்லகண்ணு அவர்களும், ஜனதா தளம் சார்பில் திரு. வடிவேல் அவர்களும் விடுத்துள்ள அறிக்கையினை மீண்டும் நினைவூட்டுகிறேன்.

மத்தியில் நரசிம்மராவ் தலைமையில் ஆட்சி நடத்தும் காங்கிரஸ் கட்சி புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பெயரால், அன்னிய நாட்டு முதலாளிகளுக்கு நம் நாட்டைக் கொள்ளையடிக்கும் தளமாக மாற்றி வருகிறது. உலக வங்கியிடமும் சர்வதேச நிதி நிறுவனத்திடமும் கடன் வாங்கி, அவை சொல்லும் நிபந்தனைகளையெல்லாம் தலைவணங்கி ஏற்று, உள்நாட்டு தொழில்வளத்தையும் சீர்குலைக்க முயற்சி எடுத்து வருகிறது!

நம் நாட்டைக் கடன் படுகுழியில் தள்ளி, நாட்டின் சுதந்திரத்திற்கே ஆபத்தை உருவாக்கி வருகிறது. தேர்தல் காலத்தில் கொடுத்த எந்த வாக்குறுதியையும் மத்திய காங்கிரஸ் ஆட்சி நிறைவேற்றவில்லை.

இருக்கின்ற வேலையைப் பறிப்பது, ஆலைகளை ஒன்றன்பின் ஒன்றாக மூடுவது, புதிய வேலை வாய்ப்பைத் தடுப்பது, விலைவாசியை உயர்த்திக் கொண்டே இருப்பது என்பதெல்லாம் அன்றாடக் கொடுமைகளாக மாறிவிட்டன.

மறுபக்கத்தில், மத வெறியர்கள் இந்தியாவின் ஒற்றுமையைச் சீர்குலைக்க வேண்டும் என்ற தீய நோக்கத்தோடு மதக் கலவரங்களை உருவாக்கி வருகிறார்கள். வன்முறைகளைத் தூண்டி, மக்களின் உயிர்களை மதவெறிக்குப் பலி கொடுத்து வருகிறார்கள். மதத்தின்பால் மக்களுக்குள்ள நம்பிக்கையை ஆட்சியைப் பிடிப்பதற்கான ஆயுதமாகப் பயன்படுத்த முயற்சிக்கிறார்கள்.

பி.ஜே.பி.யும், அதன் சார்பு அமைப்புகளும் நாட்டில் உருவாகும் ஒவ்வொரு பிரச்சினையிலும், மதவெறியைக் கிளப்பிவிட்டு அரசியலில் ஆதாயம் தேட முயற்சிக்கின்றன. இத்தகைய அபாயகரமான சூழ்நிலையிலும்கூட, இ. காங்கிரஸ்

கட்சி வகுப்புவாத சக்திகளுடன் சமரசம் செய்து கொள்ளும் சந்தர்ப்பவாத அரசியல் நிலையினையே மேற்கொண்டு வருகிறது.

இந்தக் கொடுமைகளையெல்லாம் முறியடித்திட வேண்டும் என்ற உன்னத நோக்குடன், ஆகஸ்டு 19-ஆம் நாள் இந்தியா முழுவதும் சிறை நிரப்பும் போராட்டமும், செப்டம்பர் 9-ஆம் நாள் நாடு தழுவிய முழு அடைப்பும் நடைபெறவுள்ளது.

இந்தப் போராட்டங்களுக்கு ஆதரவு வழங்கி, வெற்றியடையச் செய்ய வேண்டுமென தேசிய முன்னணி - இடதுசாரி அமைப்புகளின் சார்பில் வேண்டுகிறோம். இந்த அறிக்கைக்கேற்ப கழக உடன்பிறப்புகள் ஆங்காங்கு ஒத்துழைப்பு நல்கி, உடனிருந்து ஆதரவும் தர வேண்டுகிறேன்.

அன்புள்ள,

மு. க.

17-08-1993

2042. தலையங்கம் எழுதியோர் தலையைத்தான் சொறிந்து கொள்வர்!

உடன்பிறப்பே,

இப்போதெல்லாம் எக்ஸ்பிரஸ் தலையங்கத்தைப் படித்தால், தினமணி தலையங்கத்தைப் படிக்க வேண்டியதில்லை. அதேபோல் தினமணி தலையங்கத்தைப் படித்தாலும், எக்ஸ்பிரஸ் தலையங்கத்தைப் படிக்க வேண்டியதில்லை. இரண்டுமே ஒருவரால் எழுதப்பட்டு மொழி பெயர்க்கப்படுபவைகளேயாகும்.

ஆகஸ்டு 18 இரு ஏடுகளிலும் வெளிவந்துள்ள தலையங்கம், ஜெயலலிதா அம்மையாருக்கு வழக்கம்போல், முட்டுக் கொடுப்பதற்கான முயற்சிதான். அதற்காக, அந்தத் தலையங்கத்தில் மின்னலிடுகிற மாநில உரிமைகள், காவிரிப் பிரச்சினை, மத்திய அரசின் மெத்தனம் போன்ற சுட்டிக்காட்டுதல்களில் நமக்கு முழுக்க முழுக்க உடன்பாடு உண்டு என்பதை சொல்லிக் காட்ட வேண்டிய அவசியமே இல்லை. அவை ஏற்கக் கூடியவை மட்டுமல்ல. தி.மு.கழகம் ஆளுங்கட்சியாக இருந்தும், எதிர்க்கட்சியாக இருந்தும் அந்த உரிமைகளுக்காகக் குரல் கொடுத்ததும், கொடுத்து வருவதுமான இயக்கமாகும். அத்தகைய உரிமைக்குரலை ஏதோ சந்தர்ப்பவாதத்திற்காக எழுப்பாமல், தொடர்ந்து ஒலித்து வருகிற இயக்கம் என்பதும், அதனால் பல இழப்புகளுக்கும், தொல்லைகளுக்கும், கடுஞ்சோதனைகளுக்கும் உள்ளான இயக்கம் என்பதும் வரலாற்று உண்மையாகும்.

பேரறிஞர் அண்ணா மறைந்து, அடுத்து நான் முதல்வர் பொறுப்பேற்று அண்ணாவின் திருவுருவப் படங்களை ராஜாஜி மண்டபத்திலும், சட்டப்பேரவையிலும் திறந்து வைத்திட பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் வந்தபோது, அரசு நடத்திய அந்த மகத்தான விழாவில்தான் பிரதமர் முன்னிலையில் நான் உரை நிகழ்த்திய சமயத்தில் மத்திய அரசுடன் உறவுக்குக் கை கொடுப்போம் - உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்று

குறிப்பிட்டேன். அதுவே கழக அரசின் திட்டவட்டமான நிலையாகவும் தொடர்ந்தது. அதனாலேதான் அவசரகால எமர்ஜென்சி பிரகடனத்தைக் கழகம் எதிர்த்து, கழக ஆட்சியும் கலைக்கப்பட வேண்டியதாயிற்று என்பதெல்லாம் நாடறிந்த செய்திகள்தான்!

இன்று எக்ஸ்பிரசும், தினமணியும் என்ன சொல்லுகின்றன!

சுதந்திர தின விழா என்பது கொடியேற்றி வைத்தல், நாட்டு விடுதலைப் போரை நினைவூட்டுதல் என்ற பொதுப் படையான நிகழ்ச்சிதான். மாநில அரசின் தலைவர்கள் மத்திய அரசைத் தாக்கவோ, அரசியல் கட்சிகள் ஒன்றையொன்று திட்டிக் கொள்ளவோ உகந்த நிகழ்ச்சியல்ல. எனவே மத்திய அரசுடன் கருத்து வேறுபாடுகளை வெளிப்படுத்தும் மேடையாக அதை ஜெயலலிதா பயன்டுத்தியிருக்க வேண்டாம்

- என்று விளக்குகிறது அந்த ஏடுகளின் தலையங்கம்!

விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள், கலந்து கொள்ளாமல் உரையினைக் கேட்டவர்கள், உரையினைப் படித்தவர்கள், அவர்களில் பெரும்பாலோரின் கருத்தும் இதுவே என்பதில் அய்யமில்லை. ஆனால் எக்ஸ்பிரசும், தினமணியும் தலையங்கத்தை எவ்வாறு முடிக்கின்றன? அதுதான் வியப்புக்குரியது! அது இதோ,

> சுப்பிரமணிய சுவாமியில் தொடங்கி, ஜெயலலிதாவுக்குப் பல தொல்லைகள். சமீபத்தில் தமிழகம் வந்த மத்திய அமைச்சர் ராஜேஷ் பைலட் தமிழகப் போலீசாருக்கு அறிவுரை கூறினார். அதை ஜெயலலிதா எதிர்த்திருப்பது சரியானது. இது போன்ற இடையூறுகள் நிறுத்தப்படவேண்டும்.

எக்ஸ்பிரசும், தினமணியும் எப்படி உருகிப் போய், படிப்போர் உச்சு கொட்டுகிற அளவுக்கு எழுதியுள்ளன பார்த்தாயா?

ஒரு மாநில அரசின் காவல்துறைக்கு அறிவுரை கூறுகிற முறையில் மத்திய அமைச்சர் ஒருவர் மாநில உரிமையில் தலையிட்டார் என்பதைக் கண்டிக்கிற அதே வேளையில், தலையங்கத்தில் சமீபத்தில் என்று குறிப்பிடப்பட்டுள்ள அந்த

சொல்லுக்குப் பொருள் என்ன? சமீபத்தில் என்றால் என்ன? அதாவது, சென்னையில் ஆர்.எஸ்.எஸ். அலுவலகக் கட்டிடம் குண்டு வெடிப்பால் தகர்ந்து, பதினோரு பேர் மாண்டார்களே. அந்த நாளைத்தான் சமீபத்தில் என்று இரு ஏடுகளும் தலையங்கத்தில் குறிப்பிடுகின்றன.

பகல் 1.45 மணிக்கு சென்னையில் அந்தப் பயங்கர நிகழ்ச்சி நடைபெறுகிறது. பகல் மூன்று மணிக்குக் கூட தனக்குச் சரியான விபரம் தெரிவிக்கப்படவில்லை. ஏதோ ஒரு வீடு இடிந்து போனதாக மட்டும் கேள்விப்பட்டு இடைத்தேர்தல் பிரச்சாரத்துக்குப் புறப்பட்டு விட்டேன் என்று தானே முதலமைச்சர் கூறினார். சென்னைக்குள்ளேயே செய்தி அறிய முடியாத நிலையில் ஒரு முதலமைச்சர்! ஆனால், ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள டெல்லிக்கு செய்தி கிடைத்து மத்திய அமைச்சர் ராஜேஷ் பைலட் சென்னைக்குப் பறந்து வருகிறார். கவர்னர் சென்னா ரெட்டிக்கு மாலை 5 மணிக்குத்தான் தகவல் கூறப்படுகிறது. ஆனால் அவரோ, அதற்கு முன்பே செய்தி நிறுவனங்களான பி.டி.ஐ., யு.என்.ஐ. மூலம் செய்தி அறிந்து இடிந்து தகர்ந்த கட்டிடத்தையும், இறந்து வீழ்ந்த ஆர்.எஸ்.எஸ். தொண்டர்களையும் காண விரைந்து செல்கிறார்.

பி.டி.ஐ. அல்லது யு.என்.ஐ. செய்தி நிறுவனத் தகவல் வசதிகள் ஆளுநர் மாளிகைக்கும், முதல்வர் இல்லத்துக்கும் உண்டு.

இப்படிப்பட்ட ஒரு அதிர்ச்சியானதும், சென்னை நகர் மட்டுமல்ல, நாடே குலுங்கக் கூடியதுமான நிகழ்ச்சி நடைபெற்றிருக்கும் போது, அதனை முதலமைச்சர் பதைப்புடன், பரபரப்புடன், அவசர உணர்வுடன், கவனிப்பதற்கேற்பத் தகவல் தொடர்பு இல்லாதது ஏன்? தகவல் தொடர்பு இல்லையா? அல்லது இருந்தும், முதல்வருக்குக் காவல்துறை தந்தும்கூட அவர் அதனை முதலில் பொருட்படுத்தவில்லையா? இதற்கு விடையும் விளக்கமும் காணாமல், விரைந்து வந்து விசாரித்தவர்கள் மீது குறை கூறிப் பயன் என்ன?

மத்திய அமைச்சர் மாநில அரசுப் போலீசாருக்கு அறிவுரை கூறுவது கூடாது என்ற வாதம் வலுப்பெறவும், அந்த உரிமைக்குரல் உரம் பெறவும் - அதற்கேற்ப மாநில அரசு தனது பொறுப்பை நிறைவேற்றியிருக்க வேண்டுமல்லவா?

ஆர்.எஸ்.எஸ். அலுவலகம் குண்டு வெடிப்பால் தகர்ந்து பத்துக்கு மேற்பட்ட உயிர்கள் பரிதாபமாக பலியாகியுள்ள நேரத்தில், முதல்வருக்கு தகவல் போய்ச்சேர, சென்னை நகருக்குள்ளேயே சுமார் இரண்டு மணி நேரம் ஆகியிருக்கிறதென்றால் - இந்த அலட்சியத்துக்குக் காவல் துறையைக் குற்றம் சாட்டுவதா? அல்லது தகவல் கிடைத்தும் கூட அதனைக் காதில் போட்டுக் கொள்ளாமல் இடைத்தேர்தல் பிரச்சாரத்துக்கு ஹெலிகாப்டரில் பறந்துவிட்ட முதலமைச்சரைக் குற்றம் சாட்டுவதா?

இந்தக் கேள்விக்கு, தலையங்கம் எழுதிய கனவான்கள், தலையைச் சொறிந்து கொள்வார்களே தவிர, சரியான பதிலா சொல்வார்கள்!

அன்புள்ள,

மு. க.

19-08-1993

2043. எடுப்பது ஒரு ரூபாய், இழப்பது பத்தாயிரமா?

உடன்பிறப்பே,

அரசியலில் மதம் கலப்பதைத் தடை செய்வதற்காக என்று கொண்டுவரப்பட்ட சட்ட முன் முடிவுகள் இரண்டும், பிறிதொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான் அவர்கள் நாடாளுமன்ற மக்களவையில் அறிவித்துள்ளார்.

நோக்கம் வரவேற்கத்தக்கது எனினும், அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக வகுக்கப்படும் வழிமுறைகள் ஜனநாயகத்திற்கு அறைகூவலாகவும், எதிர்க்கட்சிகளைப் பழிவாங்குவதற்குப் பயன்படுபவைகளாகவும் இருத்தல் கூடாது என்பதற்காகத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகக் கருத்துக்கள் அழுத்தமாக எடுத்து வைக்கப்பட்டன.

முதல்கட்டமாக 31.7.93 அன்று தி.மு.க. தலைமைக் கழகச் செயலாளர்களின் கூட்டம் நடைபெற்று, அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு அறிவிக்கப்பட்டது. மதம் என்பது மட்டுமல்லாமல் மொழி, இனம், சாதி, வகுப்பு, பிறப்பிடம், வாழும் இடம் ஆகியவற்றின் அடிப்படையில் இயங்கும் கட்சிகளுக்குத் தடை விதிக்கப்படும் என்ற பிரிவில் உள்ள ஆபத்தை அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு மிகத் தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளது.

மதவெறியைத் தூண்டுகிற கட்சிகளுக்குக் கடிவாளம் போடுவதாகச் சொல்லிக் கொண்டு, ஒரு சர்வாதிகார சமுதாயத்தை நோக்கி இந்தச் சட்டத் திருத்தங்கள் நம்மை இழுத்துச் சென்றுவிடும் என்று, அந்தத் தீர்மானம் எச்சரிக்கையும் செய்துள்ளது.

மதவெறியைத் தடுக்கும் போது, சிறுபான்மை மக்களின் உரிமைகள் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பும் நமக்கு இருக்கிறது என்பதையும், தலைமைக் கழகச் செயலாளர்களின் கூட்டத்தின் தீர்மானம் கோடிட்டுக் காட்டியிருக்கிறது.

நாடாளுமன்றக் கூட்டுப் பொதுக்குக்குழு உறுப்பினர்களுக்கும், மத்திய அரசினருக்கும் தி.மு.க. தலைமைக் கழகச் செயலாளர்களின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானம் அனுப்பி வைக்கப்பட்டது.

கூட்டுப் பொறுக்குக்குழுவில் தி.மு.க. இடம் பெறவில்லை. காரணம், ஏற்கெனவே பங்குச் சந்தை ஊழலை விசாரிக்கும் நாடாளுமன்றக் குழுவில் தி.மு.க. இடம் பெற்றபோது, அடுத்தப்படியாக அமைய இருக்கும் நாடாளுமன்றக் குழு ஒன்றில், தெலுங்குதேசப் பிரதிநிதி இடம் பெறுவது என்று உடன்பாடு கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்த உண்மை தெரியாத காரணத்தினாலோ அல்லது தெரிந்தும் தனது தினசரி தில்லுமுல்லுப் பணியை தி.மு.க.வுக்கு எதிராக செய்ய வேண்டுமென்பதற்காகவோ தினமணி ஏடு, ஏதோ இதுபற்றி உளவுத்துறையைத்தான் கேட்க வேண்டுமென்று எழுதி - தனக்கும் உளவுத் துறைக்குமுள்ள ரகசிய உறவை வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறது.

இந்தக்குழுவில் நாடாளுமன்ற இரு அவைகளிலும் உள்ள 17 அ.தி.மு.க.வினரில் ஒருவர் கூட இடம் பெறவில்லை என்பதை அந்த உளவுத்துறை, தினமணியின் தில்லை நிருபருக்குச் சொல்ல மறந்துவிட்டதா? அல்லது மறைத்து விட்டதா? தெரியவில்லை!

கூட்டுப் பொறுக்குக் குழுவில் தி.மு.க. இடம் பெறாவிடினும், இந்த இரு சட்டத் திருத்தங்களைப் பற்றியும் கொண்டுள்ள கருத்தை அந்தக்குழுவில் இடம்பெற்றிருந்த தேசிய முன்னணியைச் சேர்ந்த தெலுங்கு தேசம், ஜனதா தளம் கட்சிகளின் உறுப்பினர்களிடம் வலியுறுத்தத் தவறவில்லை.

வேட்புமனு தாக்கல் செய்த ஒருவர் மீது, இந்த சட்டத்திருத்த அடிப்படையில் புகார் கூறப்படுமேயானால், தேர்தல் நடைபெறுவதற்கு முன்பாகவே அந்த வேட்பாளரைத் தகுதியற்ற

வராக்கும் அதிகாரத்தை நிச்சயமாகத் தவறாகப் பயன்படுத்தக்கூடும் என்ற அச்சத்தை யாரும் அலட்சியப்படுத்திவிட முடியாது.

இதுகுறித்து கழகக் கருத்தை விமர்சித்து, தோழமை உணர்வுடன் மார்க்சிஸ்ட் கட்சியின் ஏடான தீக்கதிர் பின்வருமாறு எழுதியுள்ளது.

> தி.மு.க. தலைமையும், இந்த மசோதாக்களைக் கடுமையாய் எதிர்த்திருப்பது உண்மையில் பலரது புருவங்களை உயர்த்தச் செய்திருக்கிறது. எதிர்க் கட்சிகளைப் பழிவாங்க தவறாகப் பயன்படுத்தப்படும் வாய்ப்புள்ளது என அதற்குக் காரணம் கூறியுள்ளார் கலைஞர் கருணாநிதி அவர்கள். ஒரு வேட்பாளர் மதத்தை தேர்தலில் பயன்படுத்தினால், தேர்தல் முடிவு வருவதற்கு முன்பே அவரைத் தகுதியற்றவராக ஆக்கும் அம்சம் குறித்துத்தான் அவருக்கு ஐயப்பாடும், அச்சமும் இருக்கிறது என்றால் அதுகுறித்து, அதனை துஷ்பிரயோகம் செய்யாமல் தடுப்பது எப்படி என்பது குறித்து இதர மதச்சார்ப்பற்ற கட்சிகளுடன் அவர் கலந்து பேசலாமே. அத்தகையதொரு ஆலோசனையை மார்க்சிஸ்ட் கட்சியின் மத்திய குழு முன்மொழிந்திருப்பதை அவரது கவனத்திற்கு கொண்டு வருகிறோம். ஆனால் அதற்காக, இந்த மசோதாக்களே கூடாது என அவர் வாதிடுவதை எப்படி ஏற்க முடியும்?
>
> – என்று கேட்கிறது தீக்கதிர்!

செவ்வாயன்று மக்களவையில் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட மசோதாவில் - ஒரு வேட்பாளர் மதத்தைத் தேர்தலில் பயன்படுத்தினால் - தேர்தல் வாக்குப் பதிவுக்கு முன்பே அவரைத் தகுதியற்றவராக ஆக்கும் அம்சம் - நீக்கப்பட வில்லையே!

இந்த வரம்பு மீறிய அதிகாரத்தோடு - மசோதாவை நிறைவேற்றிட ஆதரவு தந்துவிட்டால் - பின்னர் இந்த விதியை எதிர்க்கட்சிகளின் வெற்றி வாய்ப்பை பாதிக்கும் கருவியாகப் பயன்படுத்தமாட்டார்கள் என்பதற்கும் என்ன உத்திரவாதம்!

356-வது பிரிவும் - எமர்ஜென்சி காலத்து மிசாவும் - இப்போது தலைவிரித்து ஆடும் தடாவும் - எல்லை கடந்த அதிகாரங்களை மத்திய அரசின் கையில் ஒப்படைப்பது, ஜனநாயகத்தின்

ஆணிவேரையே அறுக்கும் மாபாதகமாக மாறிவிடும் என்பதைத்தானே எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கின்றன.

தடாச் சட்டம் கொண்டுவந்தபோதுகூட, இப்படித்தான் தீவிரவாதத்தை ஒடுக்கத்தான் இதனைப் பயன்படுத்துவோம் - அரசியல் கட்சிகள் மீது இது பாயாது என்று வாய்மொழியாக உறுதிமொழி தந்தவர்கள்தானே இவர்கள்!

எனவே - எதிர்காலத்தில் - வேட்பாளர் மதத்தைப் பயன்படுத்துகிறார் என்று பொய்யாகக் குற்றம் சாட்டி, அரசியல் எதிரிகளை இவர்கள் பழிவாங்கிவிடுவார்கள் என்று ஐயம் கொள்வதிலும், அச்சப்படுவதிலும் அதன் அடிப்படையில் - மசோதாவுக்கு ஆதரவு தரக்கூடாது என்று வலியுறுத்துவதிலும் என்ன தவறு?

எனவே இந்த சட்டத் திருத்தங்கள் குறித்து, நானும், தேசிய முன்னணித் தலைவர் திரு. என்.டி. இராமராவ் அவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினோம். அதைத் தொடர்ந்து, இந்த சட்டதிட்டத் திருத்தங்களை ஏற்க இயலாது என நானும் அறிவித்தேன் கழகச் சார்பாக! என்.டி.ஆர். அவர்களும் அறிவித்தார் தெலுங்கு தேசக் கட்சியின் சார்பாக! கழகச் சார்பில் நான் வெளியிட்ட அறிக்கையில், ஜனதா தளத்துக்கும், இடது சாரிக் கட்சிகளுக்கும் வேண்டுகோள் விடுத்திருந்தேன். அந்த வேண்டுகோள் அறிக்கையை மீண்டும் நினைவு படுத்துகிறேன்.

> மக்கள் சபையிலும், மாநிலங்களவையிலும் இந்தக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்படுகிற 80-வது அரசியல் சட்டத் திருத்த மசோதாவும், மக்கள் பிரதிநிதித்துவ சட்டத் திருத்த மசோதாவும் மதவெறிக்கு எதிரானது என்கிற பெயரில் மீண்டும் ஒரு எமர்ஜென்சி நிலையைத் தேர்தல் நேரத்தில் உண்டு பண்ணும் என்கிற அச்சம் மேலும் உறுதியாகிறது.
>
> எனவே, எதிர்க்கட்சிகளைப் பழிவாங்க தவறாகப் பயன்படுத்தப்படும் வாய்ப்புள்ள இந்த சர்வாதிகார சட்டத்திருத்த மசோதாக்களை ஏற்கக்கூடாது. அதற்கு இன்று துணை போவது, நாளை ஒரு பெரிய ஆபத்திற்கு வழி வகுத்ததாகிவிடும்.

எனவே, ஜனதா தளமும், இடதுசாரிக் கட்சிகளும் இது குறித்துத் தங்கள் நிலையை மறுபரிசீலனை செய்து நாட்டு நன்மையைக் கருதி இந்த இரு மசோதாக்களையும் தோற்கடிக்க வேண்டும் என்று தி.மு.க. சார்பாக வேண்டிக்கேட்டுக் கொள்கிறேன்.

இதேபோல என்.டி.ஆர். அவர்களும், கருத்து அறிவித்து அறிக்கை வெளியிட்டார்.

பின்னர் தேசிய முன்னணியினர், இடது சாரிக் கட்சியினர் கலந்துரையாடலும், ஜனதா தளக்கட்சியின் கூட்டத்தில் விவாதமும் நடைபெற்ற செய்திகள் வந்தது அனைவரும் அறிந்ததேயாகும்.

இந்த நிலைமைகளுக்குப் பிறகும், புதிய சட்டத்திருத்தங்கள் மூலம் அரசியலில் மதவெறியை நுழைத்து ஆதாயம் தேடுகிறவர்களைத் தடுப்பது என்ற பெயரால் - ஜனநாயகத்திற்கே பேராபத்து ஏற்பட்டுவிடக் கூடாது என்பதை எண்ணிப் பார்த்து எதிர்க் கட்சிகள் தங்களின் முடிவை மறுபரிசீலனை செய்ததற்குப் பிறகும், விளைந்துள்ள மாற்றம் தான் இந்த ஒத்திவைப்பு!

இந்த சட்டத்திருத்த முன்வடிவுகளை தாக்கல் செய்ய இருந்த உள்துறை அமைச்சர் திரு. சவான், இந்த மசோதாவுக்கு ஆதரவு தெரிவித்த சில கட்சிகள், தங்கள் நிலையிலிருந்து பின் வாங்கிய காரணத்தால் மூன்றில் இரண்டு மடங்கு ஆதரவைப் பெற்று மசோதாவை நிறைவேற்ற இயலாது என மக்களவையில் கூறியுள்ளார். மேலும், விரிவான விவாதம் நடத்திட அரசு முடிவு செய்திருப்பதாகவும், திரு. சவான் அறிவித்துள்ளார். இது தொடர்பாக விவாதிக்கக் கால அவகாசம் தேவையென்று ஜனதாதளம் கோரியுள்ளது என்றும் சவான் குறிப்பிட்டு, அந்தக் கோரிக்கையை ஏற்பதாகவும் கூறியுள்ளார்.

சென்னையில் ஒரு எத்தன், அமைந்தகரை புல்லாரெட்டி அவின்யூவில் உள்ள வங்கியின் வாசலில் ஒரு ரூபாய் நாணயத்தை கீழே போட்டுவிட்டு, ஒன்றும் தெரியாதவனைப் போல நடித்து, வங்கியிலிருந்து பத்தாயிர ரூபாய் வாங்கிக் கொண்டு வந்தவரிடம் அய்யா! கீழே கிடப்பது உங்கள் பணமா? என்று கேட்க, அவரும் அந்த ஒரு ரூபாயை எடுக்க கீழே குனிந்தபோது, அந்த எத்தன் அவர் பணப்பையை வெடுக்கென்று பறித்துக் கொண்டு போய்விட்டான் என்று ஒரு செய்தி!

அதுபோல மதவெறி ஒழிப்பு என்ற கொள்கையை நிறைவேற்றுவதற்காக, ஜனநாயகம் என்ற பத்தாயிர ரூபாய் பணப் பையைப் பறிகொடுத்து விடக் கூடாதல்லவா?

பத்தாயிரமும் பாதுகாக்கப்பட வேண்டும். ஒருரூபாயும் உரிய இடம் போய்ச் சேர வேண்டும்.

ஆவலும், அதன் காரணமாக அவசரமும், முதலுக்கே மோசம் என்று ஆகிவிடும்.

அதனால்தான் அரசியலில் இருந்து மதத்தை பிரிப்பதற்கு எடுக்கும் நடவடிக்கைகளில், ஜனநாயக உரிமைகளுக்குச் சிறிதளவு சேதாரமும் ஏற்படாமலிருக்கப் போதுமான நிதானம் காட்டப்பட்டு, சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட வேண்டுமெனக் கழகம் கருதுகிறது.

மொத்தத்தில் மசோதாவை எதிர்ப்பது என்பது, ஜனநாயக உரிமைகளை நசுக்குகிற எமர்ஜென்சி காலத்து பாணி பிரிவுகளும் அதற்குள் இடம் பெற்று விடுகிறது என்பதற்காகத் தானே தவிர, மதத்தை அரசியலில் இருந்து பிரிக்கக் கூடாது என்பதற்காக அல்ல! அல்லவே அல்ல!

அன்புள்ள,

மு. க.

26-08-1993

2044. விளக்கப் பிரச்சாரம், விளக்கொளியாகட்டும்!

உடன்பிறப்பே,

செப்டம்பர் 9-ஆம் நாள் முழு அடைப்பும், வேலை நிறுத்தமும் வெற்றிகரமாகவும், அமைதியாகவும், மக்களின் ஏகோபித்த குரலை எதிரொலிப்பதாகவும் அமைய வேண்டியதன் அவசியத்தை உணர்த்தி தேசிய முன்னணி இடதுசாரிக் கட்சிகளின் கூட்டமைப்பின் சார்பில் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையைப் படித்திருப்பாய்! ஆகஸ்டு 19 போராட்டமும், செப்டம்பர் 9 முழு அடைப்பும் ஏற்கெனவே தேசிய முன்னணி இடதுசாரிகட்சிகளின் கூட்டத்தில் முடிவு செய்து அறிவிக்கப்பட்டவைகளேயாகும். ஆகஸ்டு 19 மறியல் அறப்போரில் சுமார் ஒரு லட்சம் பேர் சிறை சென்று முதற்கட்டப் போராட்டத்தை வெற்றிகரமாக ஆக்கியதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகளை விட, செப்டம்பர் 9-ஆம் நாள் நடைபெற வேண்டிய முழு அடைப்பு, வேலைநிறுத்த அறப்போருக்கு நீயும் நமது தோழமைக் கட்சிகளின் செயல் வீரர்களும் மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் மிக அதிகமாகவே இருக்கவேண்டும்.

இப்பொழுதே உடனடியாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் கழக மாவட்டச் செயலாளர்களும், தோழமைக் கட்சிகளின் மாவட்ட நிர்வாகிகளும் முன்னின்று நகர, ஒன்றிய, கிளை அமைப்புகளின் நிர்வாகிகள், செயல்வீரர்கள், பல்வேறு துணை அணியினர் அனைவருடனும் கலந்து பேசி செப்டம்பர் 9-ஆம் நாள் அறப்போர் அமைதியாக - அமோக வெற்றியுடன் நடந்திட ஆவன செய்ய முனைந்திட வேண்டுகிறேன். இந்த மக்கள் சக்தி திரட்டப்படுவது ஏன்? எந்தக் கொடுமைகளை எதிர்த்து இந்தப் போராட்டம் - என்பன குறித்து எங்கள் அறிக்கையில் கோடிட்டுக் காட்டப் பட்டுள்ளவற்றை விரிவாகவும், விளக்கமாகவும் பட்டிதொட்டி

முதல் பட்டினக்கரை வரையிலே மேடைகள் வாயிலாக, ஏடுகள் வாயிலாக, துண்டறிக்கைகள் மற்றும் சுவரொட்டிகள் வாயிலாக எடுத்துரைக்க வேண்டும். இன்று முதல் நடைபெறும் கூட்டங்கள் அனைத்தும் செப்டம்பர் 9-ஆம் நாளுக்கான பிரச்சாரக் கூட்டங்களாகவே திகழ வேண்டும். அதனை விளக்குவதற்கென மேலும் பல கூட்டங்களை ஆங்காங்கு ஏற்பாடு செய்து, மாநில முழுதும் முழக்கம் கேட்டுக் கொண்டேயிருக்க வேண்டும்.

முரசொலி, தினகரன், தீக்கதிர், மாலைமுரசு ஆகிய நாளேடுகள் தவிர மற்ற நாளேடுகளில், இந்தப் போராட்டச் செய்திகளை தமிழக பத்திரிகா தர்மப்படி முக்கியத்துவம் அளித்து வெளியிட மாட்டார்கள். வானொலி, தொலைக்காட்சியைப் பற்றித்தான் கேட்கவே தேவையில்லை. எனவே, கழகம் மற்றும் தோழமைக் கட்சிகளின் பேச்சாளர்களைத் தவிர ஏனைய செயல்வீரர்கள், மக்களைச் சந்திக்குமிட மெங்கும், தொழிற்சாலைகள் எங்கணும், வணிக வீதிகள் அனைத்திலும், அலுவலகங்கள் ஒன்று விடாமல், கல்விக் கூடங்கள் உட்பட அங்கிங் கெனாதபடி எங்கெங்கும் செப்டம்பர் 9-ஆம் நாள் முழு அடைப்பும், வேலை நிறுத்தமும் அதன் நோக்கத்தைப் பரப்பி வெற்றி கண்டிட விளக்கமளிக்கும் பணிகளைத் தொடங்கிட வேண்டும்.

கழக உடன்பிறப்புகளைப் பொறுத்தவரையில், செப்டம்பர் 9-க்கான பணிகள் மட்டுமல்ல. பழநி நாடாளுமன்றத் தொகுதி, இராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல்களிலும் தீவிரப் பங்கு கொள்ள வேண்டியிருக்கிறது. அதுமட்டு மல்லவே! செப்டம்பர் 15 அண்ணா பிறந்தநாளையும், செப்டம்பர் 17 பெரியார் பிறந்த நாளையும் சேஷன் நினைத்துப் பார்த்திருக்க முடியாது. இங்கு ஆள்வோர் கூட நினைவூட்ட வேண்டுமென்று கருதிடவில்லை போலும்! அதனால்தான் செப்டம்பர் 20 அன்று இடைத்தேர்தலுக்கு, பல அமளி துமளிக்கிடையே தேதி குறிப்பிட்டுள்ளது. நமது கழகத்தைப் பொறுத்தவரையில் ஆண்டு தோறும் பெரியார், அண்ணா, கழகம் பிறந்த நாட்களை முப்பெரும் விழாவாக மிகச் சிறப்புறக் கொண்டாடி வருகிறோம். அந்தப் பணிகளும், தேர்தல் பணிகளும், அதனூடே செப்டம்பர் 9 முழு அடைப்பு குறித்த பணிகளும் குவிகின்றன!

செப்டம்பர் 15, செப்டம்பர் 17 இரு நாட்கள் அறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்தல், தந்தை பெரியார் சிலைக்கு

மாலை அணிவித்தல் நிகழ்ச்சிகளை ஆங்காங்கு நடத்திவிட்டு, சென்னையில் ஆண்டுதோறும் நடத்திடும் முப்பெரும் விழாவுக்கு வேறு ஒரு நாளைத் தேர்வு செய்திட வேண்டியுள்ளது. அந்த நாள் எதுவென விரைவில் அறிவிக்கப்படும். தேர்தல் பணிகளுக்குச் செல்வோர், மாவட்டங்களில் உள்ள மற்ற நிர்வாகிகளிடம் செப்டம்பர் 9-ந் தேதி முழு அடைப்பு வெற்றிக்கான பொறுப்புகளை ஒப்படைத்து ஒழுங்கு படுத்திவிட்டுச் செல்லவேண்டு மெனக் கேட்டுக் கொள்கிறேன். இந்த முறை இடைத்தேர்தல் நடைபெறுமென்றுதான் நம்புகிறேன்.

ஊர்ப்பொது மேடைகளில், வீதிகளில், வீட்டுத் திண்ணைகளில், இக்கணமே செப்டம்பர் 9-ஆம் நாள் குறித்த விளக்கப் பிரச்சாரங்கள் விளக்கொளியாகப் பிரகாசிக்கட்டும்! கப்பிய இருள் கடுகித் தொலையட்டும்! தொலைத்திடுவோம், தொல்லை துயரங்களை எனக் கச்சை கட்டிக் கிளம்பிடுக!

அன்புள்ள,

மு. க.

29-08-1993

2045. பொறுத்திருக்க நேரமில்லை; போர் முரசு கொட்டும் வேளை நெருங்கி விட்டது!

உடன்பிறப்பே,

வாராது வந்த மாமணியைத் தோற்போமோ? எனப் பாரதி கேட்ட அதே அழுத்தத்துடன் இன்று ஒரு கேள்வி எழுந்திருக்கிறது நமது உள்ளத்தில்! 1927 ஆம் ஆண்டு நீதிக்கட்சி காலத்திலே வித்தூன்றப் பெற்ற வகுப்புவாரி உரிமை இடஒதுக்கீடு, நமது மாநிலத்தில் பிராமணரல்லாத மக்களுக்கு என்ற அளவில் கல்வியிலும், வேலை வாய்ப்புகளிலும் பயனளிக்கத் தொடங்கி, 1950 ஆம் ஆண்டு இடஒதுக்கீடு கொள்கைக்கே குழி தோண்டுகிற அளவுக்கு அதனை எதிர்த்து உயர் வர்க்கத்தினர் தொடர்ந்த வழக்கில் வகுப்புவாரி உரிமை ஒடுக்கப்பட்டபோது, தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகங்களின் சார்பில் கொட்டிய போர்முரசு காங்கிரஸ் இயக்கத்திலிருந்து கோசல்ராம், ஆர்.வி. சாமிநாதன் போன்றவர்களைக் கூட சட்டப்பேரவையில் சங்கநாதம் செய்திட வைத்து, அரசியல் சட்டத்திலேயே பண்டித நேரு அவர்களால், முதல் திருத்தமாக சமூகரீதியாகவும், கல்வி ரீதியாகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு என்ற திருத்தம் செய்யப்பட்டது என்பது வரலாறு! ஆம்! திராவிட இயக்க வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய புரட்சிக்கரமான அத்தியாயம்!

பெரியாரும், அண்ணாவும் இரட்டைக்குழல் துப்பாக்கியாக விளங்கி அன்று நடத்திய கிளர்ச்சியும், நலிந்த பிரிவு மக்களுக்காக சமூக நீதி வேண்டி ஓங்கிப் பிடித்த கொடியும் - உருவாக்கிய விளைவு 1951 ஆம் ஆண்டு தொடங்கி, 1968 முடிய பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பு, தொழிற்கல்வி ஆகியவற்றில் 25

சதவிகித இட ஒதுக்கீடும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 16 சதவிகித இட ஒதுக்கீடும் எனத் தொய்வின்றி தொடர்ந்ததாகும்

அதுவரையில் பிற்படுத்தப்பட்டவருக்கும், தாழ்த்தப்பட்டவருக்கும் அவர்களின் நலன்களை கவனிக்க ஒரே அமைச்சகம்தான்! ஒரே இலாகாதான்! ஆம்! அரிஜன இலாகாதான் இந்த இரண்டு பிரிவு மக்களின் பிரச்சினைகளை கவனித்தன. அதனால் இரு பிரிவு மக்களுக்கும் உரிய பயன் கிட்டவில்லை என்பதை உணர்ந்து, அறிஞர் அண்ணாவின் மறைவுக்குப் பிறகு முதல்வர் பொறுப்பை ஏற்ற நான், தாழ்த்தப்பட்டோருக்கு அரசுத் துறையில் தனிப்பிரிவு, தனி அமைச்சர் - அதேபோல பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத் தனி இலாகா, தனி அமைச்சர் என அறிவித்து அதனை நடைமுறைக்கு கொண்டு வந்தேன்.

பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டுத் அதன் பரிந்துரைகள் பலவற்றையும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு 25 சதவீதம் என்பதை 31 சதவீதம் எனவும், தாழ்த்தப்பட்டோருக்கு 16 சதவீதம் என்பதையும் 18 சதவீதம் எனவும் மாற்றி அமைக்கப்பட்டது.

பிற்படுத்தப்பட்ட மக்கள் நலன்களுக்கு பட்ஜட்டில் லட்சக்கணக்கில் ரூபாய் ஒதுக்கப்பட்டதற்கு மாறாக, கோடிக்கணக்கில் ஒதுக்கப்பட்டது.

தாழ்த்தப்பட்டோருக்கு இந்தியாவிலேயே முதன்முதலாக இலவச காங்ரீட் வீடுகள், தமிழ்நாட்டில்தான் - கழக ஆட்சியில் கட்டித்தரும் திட்டமே தொடங்கப்பட்டது.

கழக ஆட்சி கலைக்கப்பட்டு நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக்கு வந்தபோது, இடஒதுக்கீட்டுப் பயன் சமூக அடிப்படையிலும், கல்வி அடிப்படையிலும் என்பதற்கு மாறாக, பொருளாதார அடிப்படையைப் புகுத்தி, பிற்படுத்தப்பட்டவருக்கான இடஒதுக்கீடு ஆண்டு வருமான ஒன்பதாயிர ரூபாய்க்குக் குறைவாக உள்ளவர்களுக்கே வழங்கப்படும் என ஆணை பிறப்பித்தார்.

எந்த ஆணை பிற்படுத்தப்பட்ட மக்களின் தலையில் வைக்கப்படும் கொள்ளி என்பதை உணர்த்தி தி.மு.கழகமும்,

திராவிடர் கழகமும் மற்றும் காங்கிரஸ் கட்சியிலும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியிலுமிருந்த ஒருசிலர் மேடையில் நின்று கண்டனக் குரல் எழுப்பிய பிறகும், தி.க.வும், தி.மு.க.வும் போராட்டங்களில் ஈடுபட்ட பிறகும் - அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1980ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் தனது கட்சி பெருந்தோல்வியைச் சந்தித்த பிறகும், வேறு வழியின்றி பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 31 சதவீதம் என்றிருந்ததை 50 சதவீதம் என அறிவித்தார். அந்த 50 சதவீதத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உரிய சதவீத இடஒதுக்கீடு தேவையென வன்னிய சங்கங்களும், ஏனைய மிகவும் பிற்படுத்தப் பட்ட மக்களின் அமைப்புகளும் கிளர்ச்சி நடத்தியும் எந்தப்பயனும் கிட்டவில்லை.

1989-ல் மீண்டும் தி.மு.க. ஆட்சி அமைந்ததும் - இட ஒதுக்கீட்டில் ஒரு புரட்சிகரமான மாறுதலைச் செய்து, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 30 சதவீதம் - மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கும், சீர்மரபினருக்கும் 20 சதவீதம் - தாழ்த்தப்பட்டோருக்கு 18 சதவீதம் - மலை வாழ் மக்களுக்கு 1 சதவீதம் என மொத்தம் 69 சதவீதத்தை வகுத்தளித்து, பொதுப்பட்டியலில் 31 சதவீதம் என அறிவித்து நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

மொரார்ஜிதேசாய் பிரதமராக இருந்தபோது அமைக்கப்பட்டு, இந்திரா பிரதமராக இருந்த போது பரிந்துரைக்கப்பட்ட மண்டல் கமிஷன் அறிக்கை, ராஜீவ்காந்தி காலத்திலும் கிடப்பிலே போடப்பட்டு - பல ஆண்டுக்கால தாமதத்திற்குப் பிறகு தேசிய முன்னணி ஆட்சியில் சமூகநீதிக் காவலர் திரு. வி.பி. சிங் அவர்களால் நடைமுறைப்படுத்தப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது, அதையே காரணமாக வைத்து அவரது ஆட்சியைக் கவிழ்த்தனர். அதற்கு அண்ணா பெயரைக் கட்சிக்கு வைத்திருப்போரே துணை போயினர்! என் செய்வது! ஒடுக்கப்பட்ட மக்களின் தலை எழுத்து அப்படி!

நாடு முழுமையுமுள்ள நலிவுற்ற மக்களின் உரிமைக்குரலை அறவே அலட்சியப்படுத்த முடியாத நிலையில், மத்திய காங்கிரஸ்

அரசு மண்டல் கமிஷன் குறித்து ஒப்புக்கு ஏதோ செய்வதுபோல நாடகம் ஆடிக் கொண்டிருக்கிறது.

இதற்கிடையே மண்டல் கமிஷன் குறித்த உச்சநீதிமன்ற தீர்ப்புடன், மாநிலத்தில் நடைமுறையில் இருந்து வருகிற இட ஒதுக்கீட்டு உரிமையையும் இணைத்து ஒரு குழப்பம் விளைவிக்கப்பட்டுள்ளது. அத்தகைய ஒரு தீர்ப்பு மண்டல் கமிஷன் பரிந்துரை பற்றி வழங்கப்பட்ட போது, மாநிலங்களில் நடைமுறையில் இருந்து வருவதும் - ஏற்கெனவே பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் அனுபவித்து வருவதுமான, தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ளிட்ட 69 சதவீத ஒதுக்கீட்டுக்கு எந்தப் பின்னடைவும் ஏற்படக் கூடிய பிரச்சினையே எழ நியாயமில்லை! காரணம் உச்சநீதிமன்றம் ஆய்ந்தறிந்து தீர்ப்பளித்து முக்கியமாக மண்டல் கமிஷன் பரிந்துரையைப் பற்றியதேயாகும். மாநிலங்களில் கடைப்பிடிக்கப்படும் இட ஒதுக்கீடு குறித்து வழக்கு இல்லை. அதனால்தான் உச்சநீதிமன்ற நீதிபதி திரு. ரத்தினவேல் பாண்டியன் இட ஒதுக்கீட்டால் லாபம் பெறும் சமூகத்தினருக்கு 50 சதவிதத்திற்கு மேலும் ஒதுக்கீடு தாராளமாக அமையலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

16.12.92-ல் மண்டல் கமிஷன் ஆணை பற்றி உச்சநீதிமன்ற நீதிபதிகள் வழங்கிய அந்த தீர்ப்பில், 50 சதவீத விதிக்கு விலக்கு உண்டு என்று கோடிட்டுக் காட்டியிருப்பதை தளபதி வீரமணி அவர்களும் சுட்டிக்காட்டி, அதற்கான தீர்ப்பின் வாசகங்களையும் குறிப்பிட்டிருக்கிறார்.

இங்கே உயர்நீதிமன்றம் 69 சதவீத இடஒதுக்கீட்டில் கைவைக்கக் கூடாது என்றுரைத்து தள்ளிவிட்ட மனுவை, உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீட்டை ஏற்று - இடைக்காலத் தடையையும் வழங்கியுள்ள செயல், பெரும் அதிர்ச்சியை, இங்குள்ள பிற்படுத்தப்பட்ட - மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

எனவே, சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் வாயிலாகவும் - ஒட்டு மொத்தமாக ஒடுக்கப்பட்ட மக்கள் கிளர்ந்தெழுந்து போர்க்குரல் கொடுப்பதின் மூலமும் - அநீதியைக் களைந்து சமூக நீதியை நிலைநாட்டித் தீரவேண்டிய கட்டம் வந்துள்ளது மீண்டும்!

மண்டல் பரிந்துரையை நடைமுறைப்படுத்திட குரல் எழுப்பிக் கொண்டிருக்கும் போது, மாநிலத்தில் கிடைத்திருந்த உரிமையும் பறிபோவது மிகவும் கொடுமையானது!

இதற்கு நீதிமன்றத்தில் தீர்வா? அல்லது மக்கள் மன்றத்தில் தீர்வா?

பொறுத்திருக்க நேரமில்லை - போர் முரசு கொட்டிடும் வேளை நெருங்கிவிட்டது!

அன்புள்ள,

மு. க.

30-08-1993

2046. வளைந்திடும் நீதிக்கோலை, நிமிர்த்திடும் வல்லமை, மக்கள் சக்திக்கு உண்டு!

உடன்பிறப்பே,

மாநில உரிமைகளை முன்னிறுத்திக் குரல் கொடுக்கிற இயக்கம் தி.மு.கழகம். உறவுக்குக் கைகொடுப்போம்! உரிமைக்குக் குரல் கொடுப்போம்! என்பதில், என்றைக்குமே நமது உறுதி சற்றும் சலனத்திற்கு உட்படாததாகும். இந்தியாவிலேயே முதன் முதலாக, ஒரு மாநில சட்டப்பேரவையில், மாநில சுயாட்சித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது 1974 ஆம் ஆண்டு கழக ஆட்சியின் போதுதான்.

1971 ஆம் ஆண்டு இந்திரா காங்கிரஸ் மத்திய ஆட்சியினர் வங்கிகள் தேசிய மயக் கொள்கை, ராஜமானிய ஒழிப்பு போன்ற சோஷலிசப் பின்னணி கொண்ட திட்டங்களை அறிவித்து நடைமுறைப்படுத்தியபோது தி.மு.கழகமும், இடதுசாரிக் கட்சிகளும் இந்திரா காந்தியை ஆதரித்தும், 1971 தேர்தலிலேகூட கழகமும், காங்கிரசும் தேர்தல் உடன்பாடு கொண்டதும் உறவுக்குக் கைகொடுப்போம்! என்பதை உறுதிப்படுத்துவதாக அமைந்து, பின்னர் 1975-ல் இந்திராகாந்தி அவர்கள் நெருக்கடி நிலையைப் பிரகடனப்படுத்தி மிசாக் கொடுமைகளை கட்டவிழ்த்து விட்டபோது உரிமைக்குரல் கொடுப்போம்! என்பதில் திடமாக நின்று, அதன் காரணமாகவே ஆட்சி நீட்டிப்பு சலுகை பெற முடியாமல், இருந்த ஆட்சியையும் இழந்தது, கழகத்தின் தீரமிக்கக் கொள்கை அழுத்தம் வாய்ந்த வரலாறாகும்.

மாநில அதிகாரங்கள், மாநில சுயாட்சி இவை குறித்து ஆராய்வதற்கு யார் அல்லது எந்தக் குழு முற்பட்டாலும், அவர்கள் நூலகத்திலிருந்து எடுத்து விபரங்களைச் சேகரிப்பதற்கு உதவிடக்

கூடியவை, தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் 1970-ல் அமைக்கப்பட்ட ராஜ மன்னார் குழு அறிக்கைப் புத்தகமும், 1974 - ல் தமிழகச் சட்டப்பேரவையில் நிறைவேற்றப் பட்ட மாநில சுயாட்சித் தீர்மானத் தொகுப்பும் என்பதை அலட்சியப்படுத்தி விடமுடியாது.

புதுக்கட்சி கண்ட அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள்கூட, மாநில சுயாட்சி என்பது பிரிவினைவாதம் என்று பேசத் தொடங்கி, பின்னர் கொஞ்சம் கொஞ்சமாகத் தனது கருத்தை மாற்றிக்கொண்டு, அவரது ஆட்சியில் படிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளில் மாநில சுயாட்சியை வலியுறுத்த வேண்டிய நிலைக்கு ஆளானார். 1980 ஆம் ஆண்டுவாக்கில் புதுவை மாநிலத்தில் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் சிலர் ஆதரவுடன் திரு. டி. ராமச்சந்திரன் தலைமையில் தி.மு.க. ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அப்போது கர்நாடக முதல்வர் திரு. ஹெக்டே அவர்கள் பெங்களூரில் தென் மண்டில முதல்வர்கள் மாநாட்டைக் கூட்டினார். அந்த மாநாடு மாநிலங்களின் உரிமைகளை வற்புறுத்தி, அதிகாரங்களைப் பரவலாக்க முடிவுகளை எடுத்து, மத்திய அரசுக்கு கோரிக்கையாக வைத்தது. அந்த மாநாட்டில் ஆந்திர முதல்வர் திரு. ராமராவ், தமிழக முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். கலந்து கொண்டனர். புதுவையில் தி.மு.க. முதல்வருக்கு அழைப்பு வந்தது. காங்கிரசின் ஆதரவு பெற்ற ஆட்சி என்பதால் புதுவை முதல்வர் அந்த மாநாட்டுக்குப் போகலாமா என்ற விவாதம் எழுந்தபோது, நமது கொள்கை மாநில சுயாட்சி, அதனால் பெங்களூர் மாநாட்டில் கலந்து கொள்வதில் தவறில்லை எனக் கூறி, கழகத் தலைமை, புதுவை முதல்வருக்கு அந்த மாநாட்டில் கலந்து கொள்ள ஒப்புதல் அளித்தது.

விளைவு என்ன? பெங்களூரில் இருந்து மாநாடு முடிந்து திரும்பி வந்த புதுவை முதல்வரை அவையிலேயே காங்கிரசார் கண்டித்துப் பேசினர். ஆதரவையும் விலக்கிக் கொண்டனர். அந்த பெங்களூர் மாநாட்டை ஆதரித்தும், பாராட்டியும் தமிழகச் சட்டப் பேரவையில் தோழர் உமாநாத், மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கொண்டுவந்த தீர்மானத்தை நான் ஆதரித்து நீண்டதோர் உரையாற்றி, ஹெக்டே, எம்.ஜி,ஆர்., என்.டி.ஆர்., புதுவை டி.ஆர். ஆகிய முதல்வர்களுக்கு பாராட்டு தெரிவித்தேன். பெங்களூர் மாநாட்டுக்குச் சென்றதற்குப் பரிசாக, முறைகேடான

வழியில் புதுவைக் கழக அரசைக் கவிழ்த்தனர். கலைத்து முடித்தனர். மாநில உரிமைகளை நிலைநாட்டுவதில் நமக்குள்ள உறுதிப்பாட்டிற்கு இதுபோன்ற பல சோதனைகளுக்குக் கழகம் உள்ளாகியிருக்கிறது. இந்தப் பழைய கதைகளும், பீடிகைகளும் எதற்காக என்று கேட்பாய்! மாநில விவகாரம் ஒன்றுக்கு மத்திய புலனாய்வுத் துறையினர் விசாரணை நடத்துவது என்பது கழகத்திற்கு உடன்பாடான காரியமல்ல! ஆனால் நிலக்கரி ஊழல் மோசடியில் மத்திய புலனாய்வுத் துறையினர் சார்பில் நான் கருத்து அறிவித்துள்ளேன்.

காரணம் என்ன? அண்மையில் சென்னையில் ஆர்.எஸ். எஸ். அலுவலகக் கட்டிடம் குண்டு வெடிப்பால் தகர்ந்து 11 பேர் மாண்டுபோன சம்பவத்திற்கு, தமிழக முதலமைச்சர் மிகப் பிடிவாதமாகவும் - விடாப்பிடியாகவும் நின்று மத்திய புலனாய்வுத்துறை விசாரணை CBI வேண்டுமென்று கேட்டு, அ.தி.மு.க. எம்.பி.க்களும் டெல்லியில் வலியுறுத்திப் பேசி இப்போது அந்தப் பிரச்சினை பற்றி விசாரித்தறிய மத்திய புலானய்வுக் குழுவினர் வந்துவிட்டனர்.

குண்டு வெடிப்பு சம்பவத்தில் பிறமாநிலங்களும், அன்னிய நாடுகளும் சம்பந்தப்பட்டிருக்குமென்று சந்தேகப்படுவதால் மத்திய புலனாய்வுத்துறை விசாரணையே சரியாக இருக்குமென்பது ஜெயலலிதாவின் வாதம்!

அதே போலத்தான் நிலக்கரி ஊழல் பிரச்சினையில் ஆஸ்டிரேலியா, இந்தோனேஷ்யா ஆகிய அன்னியநாடுகள் சந்தேகமின்றி சம்பந்தப்பட்டவைகளாக இருக்கின்றன. அதுமட்டுமல்ல! அந்நியச் செலாவணி மோசடியும் நடைபெற்றுள்ளதாகக் குற்றச்சாட்டு. இவைகளே அன்னியில் முதல்வர், நிதியமைச்சர், பொதுப்பணி அமைச்சர், சில ஐ.எஸ். எஸ். அதிகாரிகள் இந்த ஊழலில் பங்கு வகிக்கிறார்கள் என்றும் புகார்கள் ஆதாரக்கோப்புகளுடன் வந்துள்ள நிலையில், மத்திய புலனாய்வுத்துறை விசாரிப்பதே பொருத்தமானதாக இருக்க முடியும்.

இவற்றுக்கெல்லாம் மேலாக, ஆர்.எஸ்.எஸ். அலுவலக குண்டு வெடிப்பு நிகழ்ச்சி விசாரணைக்கு மத்திய புலனாய்வுத்துறையை மாநில முதலமைச்சர் கோரியிருக்கும்போது,

இந்த நிலக்கரி ஊழல் விசாரணைக்கும் மத்திய புலனாய்வுத்துறை விசாரணையைக் கோருவதும், ஏற்பதும் தவறில்லை அல்லவா?

மாநில உரிமைகளில் நமக்குள்ள அக்கறை ஆர்வத்தின் காரணமாக - மத்திய புலனாய்வுத்துறையின் விசாரணையை மாநிலத்திற்குள் அனுமதிப்பதில் தயக்கம் இருப்பினும், மாநில முதலமைச்சரே ஒருவாரத்துக்கு முன்பு அதற்கு அழைப்பு விடுத்து அனுமதி பெற்றிருக்கிறார் என்கிறபோது, இந்த மாபெரும் ஊழல் விவகாரத்தில் - நாடுவிட்டு நாடு பாய்ந்துள்ள ஊழல் மோசடியில் மாத்திரம் மத்திய புலனாய்வுத்துறை விசாரணையைக் கோருவதற்குப் பின்வாங்குவானேன்?

கண்துடைப்பு கமிஷன் மூலம் மக்களை ஏமாற்றலாம் என்று கனவு காணுகிறார் அல்லவா! அதனால்தான், மடியில் கனமுள்ளவன் வழியிலே பயப்படுவது போன்ற நிலைக்கு ஆளாகித் தவிக்கிறார்!

என்னதான் மறைக்க முயன்றாலும் - அதற்கு யார்தான் துணை நின்றாலும் - வளைந்து போன நீதிக்கோலினை நிமிர்த்திடும் வல்லமை மக்கள் சக்திக்கு உண்டு! என்பதை நிரூபிக்கும் காலம் விரைவில் வரத்தான் போகிறது.

அன்புள்ள,

மு. க.

31-08-1993

2047. காசு கரியாகும் கதை கேளீர்!

உடன்பிறப்பே,

காசு கரியாகப்போகிறது என்று ஒரு பேச்சு வழக்கு உண்டு! தீபாவளிப் பண்டிகையன்று பட்டாசுகளை வெடித்து, மத்தாப்புகளைக் கொளுத்தும் சிறுவர்களைப் பார்த்து காசைக் கரியாக்குகிறார்கள் என்று பெரியவர்கள் சிரித்துக் கொண்டே முணுமுணுப்பதைக் கண்டிருக்கிறோம்.

இப்போது தமிழ்நாட்டில் காசு கரியாகிக் கொண்டிருக்கிறது. ஆம்! சூத்திரப்பிரஜைகள் செலுத்தும் வரிக்காசுகள், உயர்ஜாதிக்கார அம்மணியின் ஆட்சியில் கரியாகிப்போய்க் கொண்டிருக்கிறது.

கரியாகத்தானே போறது - நிலக்கரியாகத் தானேபோறது - இல்லேன்னா மின்சாரம் கிடைக்குமோ? - அதுகூட புரியாம இவா இதைப்போயி பொலிடிகல் பண்றாளே!

இந்து, தினமணி, எக்ஸ்பிரஸ்கள் இப்படித் துடித்தெழுந்து, விமர்சிப்பது, விபத்திலிருந்து, அம்மணியைக் காத்திட விழுந்தடித்துக் கொண்டு பேனாக்களைப் போர்வாட்களாக மாற்றிக் கொண்டு புறப்படுவது, ஏன் என்று புரியாமல் இல்லை.

அரசியல் காரணத்துக்காக, யாரும் இட்டுக்கட்டி அம்மணியார் ஆட்சியின் மீது புழுதி வாரித் தூற்றவில்லை.

கடந்த இரண்டு ஆண்டுக் காலமாகத் தமிழ்நாட்டு மக்களின் வரிப்பணம், டான்சி நில ஊழலிலும் - ஸ்பிக் பங்கு விற்பனை ஊழலிலும் - ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அனுமதி ஊழலிலும் - எத்தனை எத்தனை கோடி கரியாகிப்போயிருக்கிறது என்ற ஆதாரபூர்வ புள்ளி விபரங்களை எடுத்துரைத்துக் கொண்டிருக்கும்போதே, இதோ அந்தரத்திலிருந்து வந்து குதித்து விட்டதே ஓர் ஆபத்து நிறைந்த ஊழல்! ஆஸ்டிரேலியாவிலிருந்தும் - இந்தோனேஷியாவில் இருந்தும்!

அதாவது நிலக்கரி ஊழல்! எனவேதான் சொன்னேன்! சூத்திரப்பிரஜைகளின் வரிக்காசு, கரியாகப் போகிறது என்று!

நிலக்கரி வெளிநாட்டிலேருந்து வந்தா லாபமோ இல்லியோ! இதிலே எங்கே வந்தது காசு கரியாகப் போற சங்கதி! நிலக்கரியாதானே இருபது இலட்சம் டன் வருது! அதுவும் 360 கோடி ரூபாய் கிரயம் கொடுக்கிறா! இதிலே என்ன தப்பு கண்டுபிடிச்சா இந்தத் தருதலைங்க?

காரசாரமாக அந்த வட்டாரம் கனல் கக்குகிறது! காரணம் உணர்கிறோம் எனினும் அதனை ஒதுக்கிவிட்டு - அவர்களும் நாமும் இந்த நிலக்கரி, நிலக்கரியா அல்லவா என்பதை அறிய, இந்தக் கரிக்கான ஒப்பந்த விவகார ஓட்டைகள் அடங்கிய குறிப்புகளை முதல் கட்டமாக இப்போது வரிசைப்படுத்திப் பார்ப்போம்.

12.2.93 அன்று நிலக்கரி வாங்குவது சம்பந்தமாக ஒப்பந்தங்கள் டெண்டர்கள் கோரப்பட்டன. இந்த ஒப்பந்தங்கள் இரண்டு பகுதியாகப் பிரிக்கப்பட்டு அவைகளுக்கான நிபந்தனைகள் வகுத்து அறிவிக்கப்பட்டன.

10.3.93 ஒப்பந்தங்களின் முதல் பகுதி பரிசீலிக்கப்பட்டது. மொத்தம் வந்த 16 ஒப்பந்தங்களில் 7 ஒப்பந்தங்கள் பல்வேறு காரணம் காட்டி நிராகரிக்கப்பட்டன.

19.3.93 மின்சாரவாரியத்தின் போர்டு மீட்டிங் நடைபெற்றது. நிலக்கரியின் எரிசக்தித்திறன் 6000 கலோரி என்றுள்ள குறைந்தபட்ச திறனை 5800 கலோரி என்று ஆக்கிக் கொள்ளலாம் என்று வாரியத்தின் தலைவர் அரிபாஸ்கர் ஐ.ஏ.எஸ். யோசனை கூறுகிறார். அதை போர்டு உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

12.4.93 விலை பற்றிய விபரங்கள் அடங்கிய ஒப்பந்தங்கள் பிரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டன.

19.4.93 இந்த ஒப்பந்தங்களில் கூறப்பட்டிருந்த விலைகள் பற்றி மின்சாரவாரிய போர்டு விவாதித்தது. அந்த விலை நிர்ணயித்ததையும், யாருக்கு ஒப்பந்தம் கொடுக்கலாம் என்று கூறப்பட்ட யோசனைகளையும் அந்தக் கூட்டத்தில் இருந்த பொதுப்பணித்துறை செயலாளர் வி.சுந்தரம் ஐ.ஏ.எஸ். ஆட்சேபனை செய்ததையொட்டி முடிவு எடுப்பது ஒத்திசைப்பட்டது.

17.5.93 விலையைக் குறித்து அந்த ஒப்பந்தக்காரர்கள் தங்களின் இறுதி முடிவை 27.5.93க்குள் தெரிவிக்க **வேண்டுமென்று கருத்தறிவிக்கப்பட்டது.**

4.6.93 எந்த ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்குவது என முடிவு மேற்கொள்ளப்பட்டது.

16.6.93 மின்வாரியத் தலைவர் அந்த ஒப்பந்தக்காரர் பட்டியலை அரசுக்கு அனுப்பி வைத்து, அரசின் ஒப்புதலைக் கேட்கிறார்.

17.6.93 மத்திய நிலக்கரித்துறை அமைச்சர், தமிழக அரசுக்கு எழுதிய கடிதத்தில், நிலக்கரி இறக்குமதி நடவடிக்கைகளைத் தொடர வேண்டாம் என்று குறிப்பிடுகிறது.

23.6.93 மின்சார வாரியம் ஏற்றுக்கொண்டு அனுப்பி வைத்த நிலக்கரி இறக்குமதி ஒப்பந்தத்தை பொதுப்பணித்துறைச் செயலாளர் மறுத்து, வாரியத்துக்கே திருப்பி அனுப்பி, கடிதமும் எழுதி விடுகிறார்.

30.6.93 பொதுப்பணித்துறைச் செயலாளர் எழுப்பிய பிரச்சினைகளுக்கு விளக்கமளித்து மின் வாரியத்தலைவர் ஒரு கடிதம் அனுப்புகிறார். அந்தக் கடிதம் இணைக்கப்பட்ட கோப்பில் பொதுப்பணித்துறைச் செயலாளர் மீண்டும் தனது ஆட்சேபனைக் குறிப்புகளைப் பதிவு செய்கிறார். அதாவது 19.3.93 - 26.5.93 ஆகிய இரு தேதிகளில் அவர் எழுப்பிய ஆட்சேபக் குறிப்புகளை நினைவுபடுத்தி, இந்த ஒப்பந்தங்களைப் பற்றிய தனது கருத்து இதனை ஏற்கவேண்டாம் என்பதும், இதனை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்பதே நல்ல முடிவாகும் என்பதும், அந்தக்கோப்பில் பொதுப்பணித்துறைச் செயலாளரால் பதிவு செய்யப்படுகிறது.

5.7.93 இந்த நிலக்கரி பேர சம்பந்தமான கோப்புகளில் முக்கியக்குறிப்புப் பகுதிகள் அமைச்சரவை கூட்டி விவாதிக்காமலே அமைச்சர்களுக்கு சுற்றறிக்கையாக அனுப்பி வைக்கப்படுகிறது. அந்த அறிக்கையில் மின்வாரியத்தலைவர் அரிபாஸ்கர் 30.6.93 அன்று எழுதிய விளக்கக் கடிதம் போதுமானதாக இல்லையென்றும், பொதுப்பணித்துறைச் செயலாளர் எழுப்பிய பிரச்சினைகளுக்குத் திருப்திகரமாக பதில் அளிப்பதாகவும் இல்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதே 5.7.93-ல் நிதித்துறை செயலாளர் நாராயணன் ஐ.ஏ.எஸ். எழுதிய கோப்பில், பொதுப்பணித்துறைச் செயலாளர் எழுப்பிய கருத்துகளை மட்டும் சுட்டிக்காட்டி விட்டு, தனது கருத்தைக் குறிப்பிடாமலே விட்டு விடுகிறார். பொதுப்பணித்துறைச் செயலாளரின் ஆட்சேபனை என்ன?

இந்த நிலக்கரி ஒப்பந்த அடிப்படையில் இறக்குமதி செய்வதை நிறுத்தி விடலாமென நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். இந்த ஒப்பந்தங்களின் அடிப்படையில் இறக்குமதி செய்தால், அது தேவையற்ற சர்ச்சைகளையும், அரசுக்கு மரியாதைக் குறைவையும், எதிர்ப்பையும் ஏற்படுத்துவதாக அமையும்.

பொதுப்பணித்துறைச் செயலாளரின் கருத்தை மட்டும் கோப்பில் கவனமூட்டிய நிதித்துறைச் செயலாளர் தனது முடிவாக எதையும் எழுதாமல், பொதுப்பணித்துறைச் செயலாளரின் கருத்து அலட்சியப்படுத்தப்படக் கூடியதல்ல, என்று மட்டும் குறிப்பிட்டு அத்துடன் நிறுத்திக் கொள்கிறார்.

உடனடியாக, அந்தக் கோப்பு தலைமைச் செயலாளர் வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ்.க்கு அனுப்பப்படுகிறது.

6.7.93 அந்தக் கோப்பில் உள்ள கருத்தின் மீது தலைமைச் செயலாளர், தன்னுடன் நிதித்துறைச் செயலாளரையும் - பொதுப்பணித்துறைச் செயலாளரையும் - விவாதிக்க வருமாறு அழைக்கிறார் Please Discuss என்று குறிப்பிட்டு!

என்ன பேசினார்களோ?

8.7.93 அரசுக்கும், மின்வாரியத் தலைவருக்குமிடையே கடிதப் பரிமாற்றம் நடக்கிறது.

அதே 8.7.93இல் மின் வாரியத்தின் ஒப்பந்த முடிவை அரசு அங்கீகரித்துவிடுகிறது. ஆகா! என்ன அவசரம் அந்தக் கோப்பில் பொதுப்பணித்துறைச் செயலாளரும் கையெழுத்திடுகிறார். நிதித்துறைச் செயலாளரும் ஒப்புதல் அளிக்கிறார். இரு செயலாளர்களையும் விவாதிக்க அழைத்த தலைமைச் செயலாளரும் கையெழுத்திடுகிறார்.

9.7.93 இந்த ஒப்பந்தத்தை பொதுப்பணித்துறை அமைச்சர் கண்ணப்பனும், நிதியமைச்சர் நாவலரும் ஏற்றுக் கையொப்பமிடுகிறார்கள்.

10.7.93 முதலமைச்சர் ஜெயலலிதாவும் ஏற்றுக் கொண்டதாகக் கையொப்பமிடுகிறார்.

12.7.93 பொதுப்பணித்துறையில் உள்ள ஒரு அதிகாரி எழுதியுள்ள குறிப்பில் பின்வருமாறு கூறுகிறார் :

நிலக்கரி இறக்குமதி தொடர்பான கோப்பில், ஏற்கனவே 21 லிருந்து 32 வரையில் இருந்த பக்கங்கள் அகற்றப்பட்டிருக்கின்றன. மேலும், மற்றொரு கோப்பில் 228 லிருந்து 245வது பக்கம் வரையில் அகற்றப்பட்டுள்ளன. அவைகளுக்கு பதிலாகப் பக்க எண்கள் புதிதாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இப்படி அகற்றப்பட்ட பக்கங்கள் பொதுப்பணித்துறைக்கு திரும்ப வந்து சேரவில்லை.

அதே 12.7.93 மின்சார வாரிய ஒப்பந்தங்களை அங்கீகரித்து அரசாணை பிறப்பிக்கப்படுகிறது.

30.7.93 ஒப்பந்தக்காரர்களில் ஒருவரான அழகேந்திரன் என்பவர், தனக்கு வழங்கப்பட்ட ஒப்பந்த உரிமையை மேற்கு ஆஸ்ட்ரேலியாவில் உள்ள சின்டக்ஸ் என்ற நிறுவனத்துக்கு மாற்றித் தரும்படி கோரியதை வாரியம் ஏற்க மறுக்கிறது.

31.7.93 முதல் நாள் செய்த முடிவுக்கு நேர்மாறாக, அழகேந்திரனின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, மின் வாரியம் சின்டக்ஸ் நிறுவனத்திற்கு ஒப்பந்தத்தை மாற்றிக் கொடுக்க வைக்கப்படுகிறது.

இப்படி மாற்றிக்கொடுக்க ஒப்பந்த விதிமுறை இடம் கொடுக்கிறதா?

தேதி வாரியான இந்தச் செய்திகளும் - கோப்புக் குறிப்புகளும் - எத்தகைய உண்மைகளை உலகிற்கு உணர்த்துகின்றன என்பதை தெளிவாக அறியலாம்.

தூங்குபவனைத்தான் எழுப்ப முடியும். கண்ணை மூடிக்கொண்டு தூங்குபவர்களைப் போலப் பாசாங்கு செய்பவர்களை எழுப்ப முடியுமா? இவைகள் மட்டுமல்ல! ஒப்பந்தத்திற்கு என நிர்ணயிக்கப்பட்ட எந்த நிபந்தனையும் நிறைவேற்றப்படவில்லை.

கலோரியில் எரி சக்தித் திறனைக் கணக்கிடும் போது, குறைந்தபட்சம் இவ்வளவு கலோரி இருக்க வேண்டுமென்றுதான் கணக்கிடல் வேண்டும். ஆனால் இவர்கள், 6000 கலோரி என்பதை

அதிகபட்சமாகக் கொண்டு கணக்கிட்டிருக்கிறார்கள். எனவேதான் ஆறாயிரத்துக்கும் குறைவாக இருப்பதாக சோதனைகள் தெரிவிக்கும்போது, அதிக பட்சம் என்ற வரம்பைக் காட்டி சமாளிக்க நினைக்கிறார்கள்.

அதேபோல நிலக்கரி ஈரப்பதம் MOISTURE கணக்கிடப்படும்பொழுது அதிக பட்சம் இதற்கு மேல் போகக் கூடாது என்றுதான் கணக்கிட வேண்டும். ஆனால் இவர்கள், பத்து சதவீதம் ஈரப்பதம் அதிக பட்சம் என்பதற்கு பதிலாக 23 சதவீதம் ஈரப்பதத்திற்குத் தலையசைத்திருக்கிறார்கள்.

எனவே கலோரிக் கணக்குப்படியான இந்தத் தரக்குறைவு, மற்றும் ஈரப்பத உயர்வு இவற்றால் மட்டும் 20 லட்சம் டன் நிலக்கரியில் அரசுக்கு ஏற்படும் இழப்பு சுமார் ஐம்பது கோடி ரூபாய் அளவுக்கு இருக்கும். இதற்கு மேலும் இழப்பு ஏற்படலாம். என் செய்வது! ஸ்பிக் பங்கு விற்பனை ஊழலில் அரசுக்கு சுமார் எண்பது கோடி ரூபாய் இழப்பு ஏற்படவில்லையா? அதுபோலத்தான் இதுவும்! ஏன்? அதைவிடவும் மகா பயங்கரமான ஊழல்!

உடன்பிறப்பே, இந்தக் கடிதத்தில் மேலெழுந்த வாரியாக சிலவற்றைத்தான் கோடிட்டுக் காட்டியுள்ளேன்.

கடிதத் தொடக்கத்தில் இதனை ஓர் ஆபத்தான ஊழல் என்றும் குறிப்பிட்டிருக்கிறேனே! அதற்குக் காரணம் இல்லாமலில்லை!

நிலக்கரியில் ஈரப்பதம் அதிகமாக இருந்தால் அதனை உலர்த்தும் பணி தீவிரமாக்கப்படும் பொழுது, அந்தத் தீவிரத்தின் காரணமாக - ஏற்கெனவே தரம் குறைந்த நிலக்கரியில் உள்ள "VOLATILE" materials எளிதில் தீப்பிடிக்கக் கூடிய பொருள் தீப்பிடித்து விபத்து ஏற்படவும் வாய்ப்பு உள்ளது.

லஞ்சப்பை நிரம்புவதற்காக தமிழ் மக்களின் வரிப்பணத்தைப் பாழாக்கி - அந்நியச் செலாவணி விவகாரம் உள்ளிட்ட, அனைத்து விவகாரத்திலும் ஊழல் புரிந்துள்ள அம்மணியாரின் ஆட்சிக்கு இன்னமும் முட்டுக்கொடுக்க முனைவோர் தமிழ்நாடு எப்படிக் கெட்டு குட்டிச்சுவரானால் என்ன? என்று நினைப்பவர்களேயாவர்!

அன்புள்ள,

மு. க.

01-09-1993

2048. நீதிமன்றங்கள் புனிதமானவை!

உடன்பிறப்பே,

நீதிமன்றங்கள் புனிதமானவை! புனிதமானவைகள், புனிதமானவைகளாக இருக்கும் வரையில், புனிதமானவைகள்தான்!

மக்கள் மன்றம் நியாயம் கேட்கத் கிளர்ந்தெழும் வரையில்! அந்த மக்களின் கடைசி நம்பிக்கையாக இருப்பவை நீதிமன்றங்கள்தான்!

இப்படியொரு நல்ல எண்ணத்துடனும், மரியாதையுடனும் நீதிமன்றங்களைப் பற்றிய கணிப்பு கொண்டுள்ள என்போன்றோர், சில தீர்ப்புகளில் எழும் சந்தேகங்கள் பற்றிக் குறிப்பிடுவது நீதிமன்றத்தை அவமதிப்பது ஆகாது! அந்த நோக்கமும் என்றைக்குமே எனக்கு இருந்ததில்லை.

அண்மையில் நமது உச்சநீதிமன்றமேகூட, மண்டல் கமிஷன் பிரச்சினையையும், மாநிலத்தில் இருந்து வரும் 69 சதவீத இட ஒதுக்கீட்டு உரிமையையும் குழப்பிக்கொண்டதால் வழங்கப்பட்ட இடைக்காலத் தடை ஆணையைத் தமிழகத்தில் திராவிடர் கழகத்தினர் பொது இடங்களில் கொளுத்தியதால் பல்லாயிரவர் சிறைப்பட்டு, பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அந்தத் தடை ஆணை குறித்துத் தளபதி வீரமணி அவர்கள் விடுத்த அறிக்கைகளில் கோடிட்டுக் காட்டப்பட்ட விமர்சனங்களும், விளக்கங்களும்கூட நீதிமன்றங்களுக்கு எதிரான உள்நோக்கம் கொண்டவைகள் அல்ல!

ஒரு பிரச்சினை குறித்து, ஒரே நீதிமன்றத்தில் ஒரு நீதிபதியின் கருத்தை அடுத்த நாள் அதே தகுதியில் உள்ள மற்றொரு நீதிபதி மறுக்கவும் கூடும்.

உதாரணமாக, ஜெயலலிதா அரசின் நிலக்கரி பேர ஊழலில் காங்கிரஸ் தலைவர் திரு. வாழப்பாடி இராமமூர்த்தி சென்னை

உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடர்ந்தார். வழக்கின் முழு விசாரணை முடிவதற்கு முன்பு, நிலக்கரியை இறக்குமதி செய்வதற்கான தொகையைப் பட்டுவாடா செய்யக்கூடாதென்று வங்கிகளுக்குத் தடை விதிக்க வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று, நீதிபதி லட்சுமணன் அவர்கள் இடைக்கால தடை விதித்தார்.

அவர் விடுப்பில் போன காரணத்தால், அவருக்குப் பதிலாக மன்றத்தில் அமர்ந்த நீதிபதி கனகராஜ் அவர்கள், அந்த இடைக்காலத் தடை நீக்கப்பட வேண்டுமென்று ஜெயலலிதா அரசின் மின்வாரிய சார்பில் வைத்த கோரிக்கையை ஏற்று, நீதிபதி லட்சுமணன் அளித்த தடையை ரத்து செய்துள்ளார்.

இடைக்காலத் தடை பிறப்பிக்கும்போது, வழக்கின் பூர்வாங்க ஆதாரங்கள் தனக்குத் திருப்தி அளிக்கும் வண்ணம் இருப்பதால் இத்தடையை விதிக்கிறேன் என்று நீதிபதி லட்சுமணன் கூறியுள்ளார். The Judge said he was satisfied that there was a primafacie case for granting the Injunction... இப்படி 25.8.93-ல் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டிருந்தது.

அந்தத் தடையை ரத்து செய்து ஆணையிட்டுள்ள நீதிபதி கனகராஜ், நிலக்கரி இறக்குமதிக்கான ஒப்பந்தம் செய்ததில் முறைக்கேடுகள் இருப்பதாக கூறப்படும் குற்றச்சாட்டுகளுக்கு பூர்வாங்க ஆதாரம் இல்லை என்று கூறியுள்ளார். I do not think there has been any serious violation as contended by the petitioner atleast on a primafacie consideration இப்படி 2.9.93 - தேதியிட்ட எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

மாண்புமிகு நீதிபதி கனகராஜ் அவர்கள் குற்றச்சாட்டுகளுக்கு குறைந்தபட்சம் பூர்வாங்க ஆதாரமே கூட இல்லை என்று அடித்துக் கூறிய பிறகு, இந்த ஊழல் குற்றச்சாட்டு பற்றி விசாரணை நடத்த ஜெயலலிதா அரசு நியமித்துள்ள முன்னாள் நீதிபதி சந்துர்க்கர் கமிஷன் ஒன்று தேவைதானா என்ற கேள்வியும் எழாமல் இல்லை!

பதவியில் இருக்கும் நீதிபதியே இப்படியொரு கருத்தைக்கூறி பூர்வாங்க ஆதாரம் குற்றச்சாட்டுக்கு இல்லை என தீர்ப்பளித்த பிறகு, சந்துர்க்கர் கமிஷன் விசாரணைக்காக லட்சக்கணக்கில் செலவு செய்ய வேண்டுமா என்ன? மாண்புமிகு நீதிபதி கனகராஜ் அவர்கள் தடையை ரத்து செய்து அளித்த ஆணையில் பின்வரும் குறிப்புகளும் முக்கியமானவை. அவையாவன :-

1 ஒப்பந்தக்காரர்கள் யாருக்கும் தனிப்பட்ட சலுகைகள் ஏதும் காட்டப்படவில்லை.

2 நிலக்கரியின் தரம் குறைவாக இருந்தால், பணம் குறைத்துக் கொடுக்க ஒப்பந்தத்தில் இடம் உள்ளது.

3 அழகேந்திரன் என்பவருக்கு இந்தோனேஷ்யா அளிக்கப்பட்ட ஒப்பந்தம், சின்டெக்ஸ் ஆஸ்ரேலியா நிறுவனத்துக்கு மாற்றப்பட்டதற்கு, ஒப்பந்தத்திலேயே அந்த விதி இருக்கிறது.

4 பொதுப்பணித்துறைச் செயலாளர் நிலக்கரி இறக்குமதி தொடர்பாக எழுதிய குறிப்புகள் அவருடைய தனிப்பட்ட கருத்தாகும்.

மாண்புமிகு நீதிபதி அவர்களின் கருத்துக்கு எதிர்க் கருத்தாக அல்ல, சில சந்தேகங்களைப் போக்கிக் கொள்வதற்காக ஒருசிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

1 ஒப்பந்தக்காரர்கள் யாருக்கும் தனிப்பட்ட சலுகைகள் காட்டப்படவில்லை யென்றால், தரக்குறைவான நிலக்கரியை தரமானது என்று ஏற்றுக்கொள்வதே ஒப்பந்தக்காரர்களுக்கு காட்டப்பட்ட சலுகைதானே!

2 தரம் குறைவாக இருந்தால் பணம் குறைத்துக் கொடுக்க ஒப்பந்தத்தில் இடம் இருக்கிறது என்றால், இறக்குமதியான நிலக்கரியை எடுத்து இங்கு செய்த சோதனையில் தரக்குறைவானதுதான் என்று நிரூபிக்கப்பட்டிருப்பதை, அரசோ - மின்வாரியமோ ஏற்றுக் கொள்ளாமல் ஒப்பந்தக்காரர்களுக்காக வாதாடிக் கொண்டிருப்பது ஏன்?

3 ஒப்பந்தத்தை இன்னொருவருக்கு மாற்றிக் கொடுக்க ஒப்பந்த ஷரத்து இருக்கும்போது முதலில் அதன்படி மாற்றிக் கொடுக்க முடியாதென்று அழகேந்திரனுக்கு 30.7.93-ல் மறுப்பானேன்?

அடுத்த நாள் 31.7.93-ல் அழகேந்திரன் குறிப்பிட்ட நிறுவனத்துக்கு மாற்றிக் கொடுப்பானேன்!

4 பொதுப்பணித்துறைச் செயலாளரின் மறுப்புக் குறிப்பு அவருடைய தனிப்பட்ட கருத்து என்றால், அந்தக் கருத்தை அரசு கவனத்தில் கொள்ள வேண்டுமென்று நிதித்துறைச் செயலாளர் கோப்பில் எழுதுவானேன்? இந்த ஒப்பந்தங்கள் அடிப்படையில் நிலக்கரி இறக்குமதி செய்தால் அது, தேவையற்ற சர்ச்சைகளையும், அரசுக்கு மரியாதைக் குறைவையும், எதிர்ப்பையும் ஏற்படுத்தும் என்று பொதுப் பணித்துறைச் செயலாளர் எழுதியதை அல்லவா நிதித்துறைச் செயலாளர் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

* பொதுப்பணித்துறைச் செயலாளரின் குறிப்பு நீக்கப்பட்ட நிலையில் முதலமைச்சருக்கு அதைத் தெரிந்துகொள்ள வாய்ப்பு இல்லையா? ஆக, அந்த விபரம் தெரிந்தும் டெண்டர் வழங்கப்பட்டிருக்கிறது - அல்லவா? கோப்பிலிருந்து அவ்வாறு பக்கங்கள் நீக்கப்பட்டது ஏன்? அதன் நோக்கம் என்ன? அதைச் செய்தவர்கள் யார்?

இவைகள் நமது உள்மனதில் எழுகின்ற அய்யப்பாடுகளே தவிர, உள்நோக்கம் கொண்டவை அல்ல என்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன்.

இப்படியெல்லாம் சந்தேகங்கள் மனதில் ஊற்றெடுப்பதற்கு எத்தனையோ காரணங்கள்!

ஒரு நீதிமன்றத்தில் இரண்டு தீர்ப்புகள் கிடைக்கலாம் - காரணம், அவர்கள் தனித்தனி நீதிபதிகளாக இருப்பதால்!

ஆனால், இப்போது சில நேரங்களில் ஒரேமாதிரி இரண்டு வழக்குகளில் இரண்டு விதமான தீர்ப்புகளையும் காண நேரிடுகிறது!

இதற்கும் அண்மைக் காலத்து எடுத்துக்காட்டுகள் இருக்கின்றன!

நீதிமன்றங்கள் புனிதமானவை! புனிதமானவைகள், புனிதமானவைகளாக இருக்கும் வரையில், புனிதமானவைகள்தான்!

மக்கள் மன்றம், நியாயம் கேட்கக் கிளர்ந்தெழும் வரையில்! அந்த மக்களின் கடைசி நம்பிக்கையாக இருப்பவை நீதிமன்றங்கள்தான்!

அன்புள்ள,

மு. க.

03-09-1993

2049. தமிழகத்தின், தலையெழுத்தை வலிவாக்க மாணவத் தம்பிகளே! வருக!

உடன்பிறப்பே,

கழகம் கரைந்துவிட்டது, கலகலத்துவிட்டது, தலைமைக்கே அறை கூவல், நிலைமை மிக மோசம்! என்றெல்லாம் முடுக்கிவிடப்படும் ஏடுகளின் பொய்ப் பிரச்சாரங்கள், நாள்தோறும் கூடிப்பேசி திட்டமிட்டபடி நடந்து கொண்டிருக்கும்போது, அதனைக் கண்டும் கேட்டும் உசுப்பிவிட்டவாறு இருக்கும் உளவுத்துறையினர், உவகை பூத்திடத்துள்ளிக் குதித்து ஏவுகணைகளை ஏற்றிப்போற்றிக் கொண்டிருக்கும்போது,

இந்த சலசலப்புகளுக்கெல்லாம் அஞ்சிடாதே தலைவா! சதியும், சோதனையும், வேதனையும் சரமாரியெனப் பொழியப்பட்ட நேரத்தில் எல்லாம் எம் தோள்களால் துன்பதுயரங்களைத் தாங்கித் தகர்த்து, கழகம் காத்து வரும் கண்மணிகள் நாங்கள் இருக்கிறோம் - எதிர் கொள்வோம் எதிர்ப்புகளை! பொடிப்பொடியாக்குவோம் பொய்ப்பிரச்சாரத்தை! தினம் ஒரு புளுகை மேயவிடுவோரும், அதற்குத் தீனிபோடுவோரும் திகைத்துக் கலங்கி திசைகெட்டு ஓடும் அளவுக்குத் திறம் காட்டுவதற்கு, யாம் இருக்கிறோம் - தி.மு.கழகத்தின் இரத்தநாளங்களாம் உன் உடன்பிறப்புகள் சோடைகள் அல்ல, சொத்தைகள் அல்ல என்ற உண்மை உனக்கே தெளிவாகத் தெரியுமே! பிறகேன் கவலை!

எந்த எழுத்து தமிழகத்தை ஆளவேண்டும் என்பதை விட, தமிழனின் தலைஎழுத்து வலிவாக இருக்கவேண்டுமே என்பதில்தானே உனக்கும், உன்னையேற்றுக் கொண்டுள்ள உடன்பிறப்புகளாகிய எமக்கும் பாசறையாக விளங்கும் இந்தக் கழகத்திற்கும் ஒரேகுறி! அந்தக்குறி, தப்பாமல் தவறாமல் நிறைவேற்றப்படும் - ஆள்வது ஒன்றே குறி என்றால் அரசியலில் அன்று தொட்டு இன்று வரையில் எத்தனையோ அகடவிகடங்கள் செய்து ஆண்டு கொண்டு இருந்திருக்கலாமே - ஆட்சியையும்

இழக்காமல் வளைந்து, குனிந்து, பணிந்து வாழ்ந்திருக்கலாமே! தமிழ்இனம் வாழவேண்டும் என்பதேயல்லாது, தமிழகத்தை எப்படியாவது ? நாம் ஆளவேண்டும் என்று என்றைக்கும் தவம் இயற்றியோர் அல்லவே நாம்! எமர்ஜென்சியை எதிர்த்து ஜனநாயகம் காத்திடும் போர் என்ன தேவையா? என ஒருக்கணம் எண்ணியிருந்தால் கணக்கிற்கு மேல் அதிகமாக ஓராண்டு ஆட்சியில் உட்கார்ந்திருக்க முடியுமே? 1976-ல்!

சமூக நீதி எந்த சந்தியிலாவது போகட்டும், மண்டலாவது! மண்ணாங்கட்டியாவது! எனக்கருதி, வி.பி. சிங் அவர்களுக்கு அவர் பதவியிழந்த பிறகும் தமிழகத்தில் நாம் சிவப்புக் கம்பள வரவேற்பு தராமல், அவரைவிட்டு விலகிவிடுவதாக வாக்கு கொடுத்திருந்தாலே 1991-ல் ஜெயலலிதாவின் யோசனையை ராஜீவ்காந்தி கேட்டிருப்பாரா? ராஜீவின் உத்தரவை சந்திரசேகர் நிறைவேற்ற வேண்டிய நெருக்கடிதான் அவருக்கும் ஏற்பட்டிருக்குமா? ஏன்? ஏன் தலைவா, அப்படி நமது கழகம் முடிவு எடுக்கவில்லை! எடுக்க மாட்டோம், அந்த இழிவு பயக்கும் முடிவை! என்றைக்குமே அது நமது நிலை! மாண்புமிகு என்ற எழுத்துகள் கலையும், தேயும், வரும் போகும் - ஆனால் மானமிகுதான் நிலையானது என்று அன்றைக்கே ஒரு கவியரங்கில் தலைமை வகித்து தலைவா! நீ பாடியது செவிகளை விட்டு நீங்கவில்லை - அதனால்தான் தமிழகத்தின் தலையெழுத்து வலிவாக இருக்க வேண்டுமென்பதில் மட்டுமே நமது முதல் கவனத்தை, முழுக் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருக்கிறோம்.

சிந்துபாடிச் செல்லும் அருவியின் ஓரம் சில சிறார் சிறுநீர் கழிக்கின்றனர் என்பதற்காக, அருவியின் ஆலோலம் அடங்கிவிடுவதில்லை! தரணி அதிரப் போர்முரசம் ஒலிக்கும்போது, தகர டப்பிகளைத் தட்டிக் காட்டி அந்த முழக்கத்தை முடக்கி விட இயலாது! அந்தச் சிறார்களின் செயலையுமே செய்வதின் மூலமாக இந்தக் கழகத்தை, செந்நீரும் கண்ணீரும் சிந்தி வளர்ந்த இந்தக் கழகத்தை ஊனப்படுத்தி விடலாமென வியூகங்கள் வகுக்கும் வேதபுரிவாசிகளும், அவர்தம் விசுவாசிகளும், விஷயதானிகளும் இறுதியில் விரக்தியின் விளிம்புக்கே சென்றிடுவர்! அதனைச் செய்து முடிக்கும் ஆற்றல் எம்போன்ற இலட்சக்கணக்கானவர்க்கு உண்டு.

என உன் போன்ற உடன்பிறப்புகள் எனக்கு உற்சாகமூட்டிக் கொண்டிருக்கும்போது, இப்படை தோற்கின் எப்படை வெல்லும்? எனும் வினாவை விழிகளால் எழுப்பியவாறு இதோ அண்ணா அறிவாலயத்தில் என் முன்னும், பேராசிரியர் முன்னும் கழக மாணவர்கள் அணி அணியாக வருகின்றனர். ஈட்டியின் முனைகள் என்றாரே நமது அண்ணா! அந்த ஈட்டி முனைகள் கல்லூரி மாணவர் பேரவைத் தலைவர்களாக, நிர்வாகிகளாக ஒன்றிரண்டு என்றல்ல! மிகப் பெரும்பான்மையான கல்லூரிகளில் வெற்றி பெற்று வந்துகொண்டே இருக்கிறார்கள்.

தமிழகத்தில் அரசுக் கல்லூரிகளில் நடைபெற்ற மாணவர் பேரவை தேர்தலில் மிகப் பெரும்பான்மையான கல்லூரிகளில், மிகப் பெரும்பான்மையான வாக்குகள் வித்தியாசத்தில் கழக மாணவர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

அவர்களை, ஒவ்வொரு கல்லூரியிலிருந்தும் கூட்டம் கூட்டமாக அழைத்து வந்து, அறிமுகம் செய்து எம்மை அகமகிழச் செய்து தாமும் மகிழ்கின்றனர் மாணவர் அணி மாநிலச் செயலாளர் தம்பி சிவாவும், மாநிலத்துணைச் செயலாளர்களான தம்பிகள் சபாபதி மோகன், ஆனந்தன், கணேஷ்குமார், சேக்தாவூது ஆகியோரும்!

ஏ, தாழ்ந்த தமிழகமே! என்ற அண்ணாவின் ஆதங்கம் நிறைந்த உரை கேட்டு தலைநிமிர்ந்தெழுந்த மாணவர் சமுதாயத்தைப் பார்த்துத்தான் புரட்சிக் கவிஞர், கிளம்பிற்று காண் தமிழச் சிங்கக் கூட்டம்! என சிலிர்த்து நின்று பாடினார்!

இடைக்காலத்தில் அந்தக் கூட்டம், நமது இனம், மொழி, வரலாறு, பண்பாடு இவற்றில் அக்கறையற்றுப் போய்விட்டதோ எனும் கவலை அகற்றிட, நீடுதுயில் நீக்கப்பாடி வந்த நிலாப் போல, காடு மணக்கவந்த கற்பூரப் பெட்டகம் போல, இதோ அணி அணியாக! மணி மணியாக! ஆம், கழகமெனும் கண்ணின் கருமணிகளாக!

தேய்கிறது தி.மு.க. எனும் மூன்றெழுத்து என்பவர், தேம்பித் திரிந்து கொண்டே இருக்கட்டும்! வானத்தையே தேய்க்கிற அளவுக்கு தி.மு.க. வளர்ந்து கொண்டேயிருக்க வாடாது உழைப்போர் மத்தியில் நாங்களும் வந்து கொண்டேயிருக்கிறோம் என வீரப் பண் பாடியவாறு அந்த இளங்குருத்துகள், ஈட்டி

முனைகள் கல்லூரிப் பேரவைகளில் பெற்றிட்ட வெற்றிக்கனிகளை அண்ணா அறிவாலயத்தில் கொண்டு வந்து குவித்திடும் காட்சி! அடடா - இன்று என் பேத்தியின் திருமணத்திற்கு வருவோரை வரவேற்கும் மகிழ்ச்சியினும் பெரு மகிழ்ச்சியையன்றோ எனக்கு வழங்கிடுகின்றது!

வாழ்க! அந்த மாணவத் தம்பிகள்!

வலிவுடையதாக்குக! தமிழகத்தின் தலையெழுத்தை!

அன்புள்ள,

மு. க.

05-09-1993

2050. வீழ்ச்சியின் விளிம்பு அல்ல; வெற்றியின் படிக்கட்டுகள்!

உடன்பிறப்பே,

திருவிழாக் கூட்டத்தில் கழுத்து மணியறுத்துத் தன் கழுத்திலே போட்டுக் கொண்டவள் இது என் கணவன் வாங்கிக் கொடுத்த முத்துமணிமாலையென்று அடுத்த வீட்டுக்காரியிடம் ஜம்பம் அடித்துக் கொண்டாளாம்.

இன்னொருத்தியோ, இளமை மாறாமல் என்றும் சிரஞ்சீவியாக இருக்க ஆயிரம் பொன் கொடுத்து, அற்புதமான அவிர்ப்பாகம் எனச் சொல்லப்பட்ட அத்திப்பழம் ஒன்றை வாங்கினாளாம். அதைப் பிட்டுப் பார்த்தால் அத்தனையும் சொத்தையாம்!

இந்த இரண்டு நிகழ்ச்சிகளையும் இடைத்தேர்தலில் வெற்றி பெற்றதாக எகிறிக் குதித்து, எக்காளமிட்டுக் கொண்டிருக்கும் ஜெயலலிதாவின் அறிக்கைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வாய் என நம்புகிறேன்.

ஜெயலலிதா பழனியிலும், இராணிப்பேட்டையிலும் பெற்றுள்ள வெற்றிகளின் முதுகில்கூட அல்ல! நெற்றி முகட்டிலேயே - அந்த வெற்றிகளின் விலை எத்தனை கோடி ரூபாய்கள் என்று எழுதப்பட்டிருக்கிறதே!

ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருப்பவர்களுக்கு வேண்டுமானால், அம்மையார் கழுத்தில் மின்னுவது திருவிழா நெரிசலில் திருடிய முத்துமாலை என்று தெரியாமல் இருக்கலாம். ஆனால் அருகாமையில் இருக்கும் அப்பாவித்தமிழன் கூட, இந்த வெற்றிக்குப் பின்னால் இருக்கும் அநியாயம் - அக்ரமம் - ஆராஜகம் - அடாவடி - அனைத்தையும் அறிவானே!

அறிந்தென்ன பயன்? அவனும்தான் நல்ல விலைக்கு தன் ஓட்டையும், தன் குடும்பத்து ஓட்டுக்களையும் விற்றுவிட்டான்.

உன்னை விற்காதே! என்று பாடினார் புரட்சிக்கவிஞர். நம் தமிழனோ, தன்னை விற்காமல் தன் உரிமையை விற்றுக் கொண்டிருக்கிறான் வாக்குகளின் வடிவத்தில்!

அதனால்தான் களவாடப்பட்ட முத்துமாலை, கணவன் தந்த பரிசு எனக் கதை கட்டப்படுகிறது. கண் குருடானால் கூடப் பரவாயில்லை! கருத்தும் குருடானால் என் செய்ய?

ஊழலில் பெருகியது ஊழிவெள்ளம்போல கோடி கோடியாக - கோணி கோணியாக - அந்தப் பணத்தில் ஒரு பகுதி! ஆனால் பெரும்பகுதி இராணிப்பேட்டை தெருக்களிலும், ஏன், தியாகப் பரம்பரையில் வந்தோர் வீடுகளிலும் மழையாகப் பெய்தது! விலை நிர்ணயிக்கும் கலை உணர்ந்த வாக்காளர்கள் குடையின்றி அந்தப் பணமழையில் நனைந்தனர்.

பழனியிலும் அவ்வாறே! இரு தொகுதிகளிலுமே, ரேஷன் கடைக்கான புதிய அட்டைகள் திடீர் திடீரென விநியோகம் - இலவசமாக உரங்கள், உழவர் கைகளை உயர்த்தவிடாமல் அழுத்திப்பிடித்துக் கொண்ட செய்திகள் அம்பலமாகின!

அமைச்சர்கள் படையெடுப்பு - வாக்களிக்கும் நேரம் முடியும் வரையில் வாக்குச் சாவடிகளுக்குள் அமைச்சர்கள், அவர்தம் பிரதானியர் - அவர்களின் சொற்படி வாக்குச் சாவடி அதிகாரிகளே இலைச் சின்னத்துக்கு முத்திரையிட வேண்டிய நெருக்கடி நிலை!

அரசாங்க வாகனங்களில் அரசு சின்னங்கள், தாள் ஒட்டி மறைக்கப்பட்டு, அவைகளிலே ஆளுங்கட்சித் தொண்டர்கள்! அந்தக் கட்சிக்காகத் திரட்டப்பட்ட கூலி வாக்காளர்கள்! ஏன், குண்டர்களும்கூட!

இப்படிக் கழுத்து மணி அறுத்துக் கழுத்திலே அணிந்து கொண்டு, இது என் கணவன் வாங்கித் தந்தது எனத் தளுக்கிக் குலுக்குகிறவளுக்கும் - ஆகா இதுவன்றோ வெற்றி! என ஆகாயத்திற்கும் பூமிக்குமாகக் குதிக்கும் அம்மணியாருக்கும் என்ன வேறுபாடோ நானறியேன் பராபரமே!

சரி! அப்படிப் பெற்ற வெற்றியின் பவிசுதான் என்ன? அற்புதம் விளைக்குமென ஆயிரம் பொன் கொடுத்து வாங்கிய அத்திப்பழம், அத்தனையும் சொத்தையான கதைதான் அந்த வெற்றியின் கதையும்!

ஜெயலலிதாவை விழுந்து விழுந்து ஆதரிக்கும் இந்து, எக்ஸ்பிரஸ் போன்ற ஏடுகள்கூட, இந்த வெற்றியை வாலி வதைப் படலம் என்று சொல்லாவிடினும், அந்த பாணியில் பெற்ற வெற்றி என்று தானே வர்ணித்திருக்கின்றன! தி.மு.க. வளர்ந்திருக்கிறது - அ.தி.மு.க.வின் வளர்ச்சி குன்றியிருக்கிறது என்றல்லவா அந்த வகை ஏடுகள் தங்களது சஞ்சலத்தைக் கொட்டிக் கட்டுரைகள் தீட்டியுள்ளன. அதற்குச் சான்றாக அந்த ஏடுகள், 1991ஆம் ஆண்டுக்கும் இந்த இடைத்தேர்தலுக்குமிடையே உள்ள வாக்குகள் வித்தியாசத்தையும் கணக்கிட்டுக் காட்டியுள்ளன.

இதோ! நாம் துல்லியமாகக் கணித்துள்ள கணக்கும், நமக்கு எதிர்காலத்திற்குரிய நம்பிக்கை ஒளியை வழங்குவதாகத்தான் இருக்கிறது. இந்தத் தேர்தல்களில் தி.மு.க.வை வீழ்ச்சியின் விளிம்புக்கு விரட்டித் துரத்தி விட்டதாக ஜெயலலிதா, வெற்றி பெற்ற நிலையில் அடக்கத்திற்கு முதலிடம் தராமல், ஆணவத்துக்கு மட்டுமே முக்கிய இடம் தந்து அறிக்கை வெளியிட்டுள்ளார். அவரது வெற்றிக்குப் பின்னால் இருக்கிற கோடிக்கணக்கான ரூபாய்ச் செலவையும், குண்டர் அராஜகத்தையும், அதே சமயம் நாம் பெற்றுள்ள வாக்குகளுக்குப் பின்னால் இருக்கிற என் உயிரினு மேலான உடன்பிறப்புகளின் உழைப்பையும் எண்ணிப் பார்க்கும்போது, நான் துணிந்து சொல்வேன் - வீழ்ச்சியின் விளிம்பில் தி.மு.க. இல்லை! அது வெற்றிப் படிகளில் ஏறிக் கொண்டிருக்கிறது! என்று!

இராணிப்பேட்டையில் கழகம் 1991-ல் பெற்ற வாக்குகளைக் காட்டிலும், இப்போது எட்டு சதவீதம் அதிக வாக்குகளைப் பெற்றிருக்கிறது. அதாவது 16,591 வாக்குகள் அதிகம் பெற்றுள்ளது. அ.தி.மு.க. 1991 தேர்தலைவிட பத்து சதவீதம் குறைவான வாக்குகளைப் பெற்றுள்ளது.

* பழனி நாடாளுமன்றத் தொகுதியில் வெள்ளக்கோயில் சட்டமன்றத்தில் 1991-ல் 30,000 வாக்குகள் கழகத்திற்கு குறைவு! இப்போது 14,000 வாக்குகள்தான் குறைவு!

* காங்கேயத்தில் 1991-ல், 33,000 வாக்குகள் கழகத்திற்குக் குறைவு! இப்போது 10,000 வாக்குகள் மட்டும் குறைவு!

* நத்தம் தொகுதியில் 1991-ல் 47,000 வாக்குகள் குறைவு கழகத்திற்கு! இப்போது 14,000 வாக்குகள் மட்டுமே குறைவு!

* ஒட்டன்சத்திரம் தொகுதியில் 1991-ல் 46,000 வாக்குகள் கழகத்திற்குக் குறைவு! இப்போது 4,000 வாக்குகள் மட்டுமே குறைவு!

* வேடசந்தூரில் 1991-ல் 70,000 வாக்குகள் கழகத்திற்குக் குறைவு! இப்போது 4,000 வாக்குகள் மட்டுமே குறைவு!

* பழனி சட்டமன்ற தொகுதியில் 1991-ல் 40,000 வாக்குகள் குறைவு! இப்போது அ.தி.மு.க.வை விட 2,000 வாக்குகள் அதிகம்!

* மொத்தத்தில் பழனி நாடாளுமன்றத் தேர்தலில் 1991-ல் 2 லட்சத்து 60 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்த கழகம், இப்போது சுமார் 44 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில்தான் வெற்றி வாய்ப்பை இழந்துள்ளது.

எனவே வர இருக்கும் பொதுத் தேர்தலில், இவை தி.மு.க.வுக்கு வெற்றிப்படிகள் என்பதுதான் தெளிவான முன்னறிவிப்பே தவிர, ஜெயலலிதா ஆணவ மொழிப்படி வீழ்ச்சியின் விளிம்பு அல்ல!

எதிர்காலத்தில் இலட்சியப் பாடி வீடாம் - தி.மு.க. பெற இருக்கும் மகத்தான வெற்றியை இனி ஜெயலலிதா எத்தனை கோடி பணத்தைக் குவித்தாலும் - எத்தனைக் கைக்கூலி ஏடுகளை வைத்துக்கொண்டு கழகத்திற்குள் கலாம் விளைக்க நினைத்தாலும் - கண்ணீரையும், செந்நீரையும் கொட்டி இந்த இயக்கத்தை வளர்த்துக் கொண்டிருக்கும் உன்போன்ற என் உடன்பிறப்புகளின் கரங்களில் இருந்து தட்டிப் பறித்திட முடியாது!

தொல்லைகளை ஏற்ற
இயக்கம் இது!

அடக்குமுறைகண்டு
கலங்காத இயக்கம் இது!

துரோகத்தை இடறி
எறிந்த இயக்கம் இது!

அராஜகத்தை தகர்த்து
வீரமுழக்கமிடும் இயக்கம் இது!

கடமையை உயிராய்ப் போற்றும்
இயக்கம் இது!

என் கண்ணின் மணிகளாம்
உடன்பிறப்புகள் –
கண்போல காத்திடும்
கட்டுப்பாடு மிக்க இயக்கம் இது!

அன்புள்ள,

மு. க.

29-09-1993

2051. பகலவனை மணலால் கட்டிப் பட்டம் விடப் பார்க்கிறார்கள்!

உடன்பிறப்பே,

பழனி, இராணிப்பேட்டை இடைத் தேர்தல்கள் குறித்து நேற்று நான் எழுதிய கடிதத்தில்,

> ஜெயலலிதாவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது போல, தி.மு.க. வீழ்ச்சியின் விளிம்புக்குத் துரத்தப்படவில்லை - மாறாக அது, வெற்றியின் படிக்கட்டுகளில் ஏறிக் கொண்டிருக்கிறது என்று சில பல விளக்கங்களுடன், கடந்த தேர்தலுக்கும் இந்தத் தேர்தலுக்குமிடையே கழகம் எவ்வளவு வாக்குகளை மிக அதிகமாகப் பெற்றிருக்கிறது என்ற விபரங்களுடனும் எதிர்காலத்தில் ஒளிமயமான வெற்றியைப் பெறப் போகிறோம்
>
> - எனச் சுட்டிக் காட்டியிருந்தேன்.

இந்த உண்மையை வெளிக் காட்டிக் கொள்ள வெட்கப்படும் சிலரும் - இந்த உண்மை நிலை நாட்டப்பட்டு தி.மு.கழகம் மேலும் மேலும் வலுப்பெற்றுவிட்டால், தமது சூழ்ச்சித் திட்டங்களையும், சூது மாயங்களையும் சுருட்டிக் கொண்டு ஓடவேண்டி வருமே என முன் கூட்டியே கவலைப்படும் சிலரும் - மறுபடியும் கழகத்தில் கசமுசா செய்து பார்க்கலாமா என்று கலக விதை தூவத் தொடங்கி விட்டனர்.

தி.மு.க.வுக்கு காங்கிரஸ் ராணிப்பேட்டையில் விட்டுக் கொடுத்து விட்டது - காங்கிரசுக்கு தி.மு.க. பழனியில் விட்டுக் கொடுத்து விட்டது. இப்படியொரு திட்டமிட்ட சகுனிபாணிப் பிரச்சாரத்தை சில ஏடுகள் முடுக்கி விட்டுப் பார்த்தன. ஏன்? எதற்காக? யார் ஆதாயம் பெறுவதற்காக? உனக்குப் புரியுமென்றே நினைக்கிறேன். புரியாவிட்டால் சொல்லுகிறேன் கேள்.

வாக்காளர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தி அந்த குழம்பிய குட்டையில் ஜெயலலிதா மீன் பிடிக்க விடலாம் என்ற நப்பாசையில்தான் அப்படியொரு இட்டுக் கட்டிய பொய்ப் பிரச்சாரத்தை, பைத்தியக்காரன்கூட நம்ப மறுக்கிற பிரச்சாரத்தைச் செய்து பார்த்தார்கள். ஆனால் அவர்கள் சூழ்ச்சி பலிக்கவில்லை.

பழனியிலும், இராணிப்பேட்டையிலும் எத்தனையோ அராஜகங்கள், எவ்வளவோ பணபலம், எத்தனை எத்தனையோ அதிகார துஷ்பிரயோகம் - அனைத்தையும் எதிர்த்து தி.மு.க. வேட்பாளர்கள் கடந்த தேர்தலைக் காட்டிலும் மிக அதிகமாக வாக்குகளைப் பெற்றிருப்பது, இடைத்தேர்தலிலேயே இந்த நிலையெனில் பொதுத்தேர்தலில் நிச்சயம் வெற்றி தி.மு.க. அணிக்கே என்ற கணிப்பு, தி.மு.க. என்றாலே ஓர் அலர்ஜியாகக் கருதும் கனதனவான்களுக்கும், கண்ணியத்தைக் காற்றிலே பறக்க விடும் சில ஏடுகளுக்கும் கலக்கத்தையும், மெய் நடுக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

அதனால்தான் ஏதேதோ, பேசுகிறார்கள் - தெருவிலும், திண்ணையிலும், அறையிலும், அம்பலத்திலும்! என்னவெல்லாமோ எழுதுகிறார்கள்! பேனாவில் வாய்மையை நிரப்பாமல், பொய்மையை நிரப்பிக் கொண்டு!

உடன்பிறப்பே, நீ உற்சாகமின்றிப் பணியாற்றினாயாம் - அடிமட்டத் தொண்டனாகிய உன்னிடம் ஓர் அலட்சியப் போக்கு இருந்ததாம் -

இது உன்னைப் பற்றி என்னிடம், அதாவது கழகத் தலைமையிடம் மூட்டி விடப்படும் கோள். உன் பணியைப் பற்றி எனக்குத் தெரியாததை அந்த ஏடுகள் உளவறிந்து சொல்லிவிட்டனவாம் - எப்படி சிரிப்பது என்றே எனக்குத் தெரியவில்லை.

நீயா உற்சாகமின்றி ஓய்வுற்று ஒரு மூலையில் கிடந்தாய் - ஆறு நாட்கள் பழனி நாடாளுமன்றத் தொகுதியிலும், மூன்று நாட்கள் இராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதியிலும் - நகரம், கிராமம், குக்கிராமம், பட்டி தொட்டி என்றெல்லாம் விடியவிடிய உன்னை வந்து பார்த்தேனே! நள்ளிரவு நகர்ந்த பிறகும்கூட நீ, அப்போதுதான் சூரியதோயத்தில் எழுந்து நடமாடுவது போலக் கொட்டக்கொட்ட விழித்துக்கொண்டு முகமெலாம் மலர்ச்சியாக

அகமெலாம் மகிழ்ச்சியாக இருவண்ணக்கொடி பிடித்து அண்ணனே! வா, வா, அவர்களிடம் கோடி! இதோ எம்மிடம் கொடி! என்று அசைத்துக்காட்டி, என் வேன் மீது பாய்ந்து ஏறி பாசத்தைப் பொழிந்து தழுவிக் கொண்டாயே - அப்படிப்பட்ட கொள்கை வெறிகொண்ட என் தம்பியான உன்னைப்பார்த்து, நீ உற்சாகமின்றிப் பணியாற்றினாய் எனக்கூறி - என் நெஞ்சில் அல்லவா நெருப்பைக் கொட்டப்பார்க்கிறார்கள்! நான் உன் மீது சினம் கொண்டு சீறுவேனாம் - அதனால் என்னிடமிருந்து உன்னைப்பிரித்து விடுவார்களாம். பாவம், மண்டூகங்கள் மணலைக் கயிறாகத் திரித்து அதில் பகலவனைக் கட்டிப் பட்டம் விடப்பார்க்கிறார்கள்.

சோதனையில், வேதனையில், தியாக நெருப்பில், அடக்குமுறைத் தீக்குண்டத்தில், சிறையில், சித்ரவதைக் கூடத்தில், செந்நீர் சிந்தும் களத்தில், கண்ணீர் உகுக்கும் பாசத்தில் நேசத்தில் - உடன்பிறப்பே! உன்னையும் என்னையும் ஒரு சேர இணைத்துக்கொண்டு ஐம்பத்திஐந்து ஆண்டுகளுக்கு மேலாகிறதே - அந்த உறவு முடிச்சையா அவிழ்க்க முடியும், இந்த முடிச்சு அவிழ்ப்பாளர்களால்! முடியாது உடன்பிறப்பே, முடியாது!

கட்சித் தலைமை இன்னும் சற்று நிதி அளித்திருந்தால்... பழனியில் வெற்றி கிட்டியிருக்கும் என்றும் கதைத்துள்ளனர். கழகத் தலைமை தேர்தல் பிரச்சாரத்துக்கு என வழங்கும் நிதி, பலகோடியிலிருந்து அதில் எதுவும் தராமல் பஞ்சப் பாட்டு பாடிவிட்டதென நீ தலைமையின் மீது பாய்ச்சல் நடத்துவாயாம். என்ன சூழ்ச்சி பார். இன்றா? நேற்றா? எத்தனையோ ஆண்டுக் காலமாக ஆடுகளை மோதவிட்டு இடையில் நின்று ரத்தம் குடிக்கும் நரியின் சூழ்ச்சியல்லவா!

உடன்பிறப்பே, தடா போன்ற வழக்கு நிதிக்கும் மற்றும் கழகத்தினர் மீது தொடரப்பட்டுள்ள வழக்குகளுக்கும், கழகச் சார்பில் இந்த அரசின் மீது தொடர்ந்துள்ள வழக்குகளுக்கும், இவற்றை உச்ச நீதிமன்றம் வரை சென்று நீதியை நிலைநாட்டுவதற்கும் உன்னிடம் கையேந்தி நீ தந்த நிதி - கழக வளர்ச்சிக்கென நீ திரட்டி வழங்கிய நிதி - அது எவ்வளவு என்பதும், அதில் இந்த இடைத் தேர்தலுக்காக எவ்வளவு செலவிட முடியும் என்பதும், உனக்கும் தெரியும். எனக்கும் தெரியும். மாவட்ட வாரியாக வந்த நிதிக்கும், வரவேண்டிய நிதிக்கும், வகை தொகையாக வரவு

செலவுக் கணக்குகள் கழகத்தில் உண்டு. இதையெல்லாம் அறிந்து கொள்ள முடியாத தொலைவில் நீ இருக்கிறாய் என நினைத்து உன் கண்களைப் பொத்திவிட்டு - கழைக் கூத்தாடி விளையாட்டு நடத்திப் பார்க்கிறது, கலக சிந்தனை யொன்றையே மூலதனமாகக் கொண்ட மோசடிக் கூட்டம்!

உடன்பிறப்பே, கழகத்திற்கு நான் என்ன செய்தேன் எனக் கவலைப்பட்டுப் பணியாற்றுகிறவர், கழகத்தின் ரத்தநாளமென்றும் - கழகம் எனக்கு என்ன செய்தது என்று கேட்டு விஷமம் செய்வோர், கழகத்தில் நெளியும் புற்று நோய்க் கிருமி என்றும் - நான் பல ஆண்டுகளுக்கு முன்பே சொன்னதை அடிக்கடி உனக்கு நீயே நினைவூட்டிக் கொண்டு, மற்றவர்களுக்கும் நினைவூட்டியவாறு இந்தக் கழகத்தை வலிவோடு நீ வளர்த்துக் கொண்டு வருவதைப் பார்த்து, பொறாமை கொண்டு பொருமிக் கிடப்போர்,

பழனியிலும், இராணிப்பேட்டையிலும் நூறு அடி உயரக் கட்-அவுட்டுகள் ஆயிரம் வைக்கவில்லை என்கிறார்களா? ஐம்பது விதமான வண்ணச் சுவரொட்டிகள் ஒட்டவில்லை என்கிறார்களா? வாக்குச் சீட்டுகளுக்கு வாரி வாரிப் பணம் வழங்கவில்லை என்கிறார்களா? அவர்கள் இதனை நல்ல எண்ணத்துடன் சொல்வதாக நீ எடுத்துக் கொண்டு -

அடுத்து வரும் பொதுத் தேர்தலில் கட்-அவுட்களுக்கு அல்ல! வண்ணச் சுவரொட்டிகள், தோரணங்கள், கொடிகள் இவை போதுமான அளவுக்கு, தேர்தல் பணியாற்றும் உன் போன்றோர்க்குக் கிடைத்திட வேண்டுமெனில் அதற்கான நிதியை, ஆம் - பொதுத் தேர்தல் நிதியை இப்போதே வழங்கிடத் தொடங்கி விடு! முதல் பெயர் யார் பெயராக இருக்கிறது என்று பார்ப்போம்!

எத்தனை நாளைக்கு இந்த பார்லிமெண்டின் ஆயுளோ? எத்தனை நாளைக்கு இந்த சட்டமன்றத்தின் ஆயுளோ என்ற ஈரெட்டான நிலையில், ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு என்ற முதுமொழிக்கொப்ப இந்த இடைத் தேர்தலில் முடிந்ததைச் செய்துள்ளது கழகத் தலைமை! இதில், மூட்டிவிட்டு வேடிக்கை பார்க்கவோ, முட்டவிட்டு முறுவல் பூக்கவோ ஆசைப்படுகிறவர்கள் யாராயினும், அவர்கள் மூக்கறுபட்டுப் போவார்கள். கழகத் தலைமை திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசனை நம்பவில்லையாம் - எவ்வளவு பெரிய அதிர் வெடிச் செய்தியை அவர்களுக்கேயுரிய அபாரத் திறமையுடன் உருவாக்குகிறார்கள் பார்த்தாயா?

ஒன்றல்ல, இரண்டல்ல, இருநூற்றி இருபத்தி ரெண்டு நாட்கள் தடாக் கைதியாக, மதுரை சிறைச்சாலையில் சித்திரவதைக்காளாகிய சுப்புலட்சுமியை, சில அதிகாரிகள் அணுகி கழகத்தைப் பற்றியும், கருணாநிதியைப் பற்றியும் எதிர்ப்பாக ஏதாவது அறிக்கை எழுதிக் கொடுத்தால் உன்னையும், உன் கணவரையும் விடுதலை செய்து விடுகிறோம் எனக் கேட்டபோது அவர்களைத் தூ! என உமிழ்ந்து துரத்தி யடித்த வீராங்கனை சுப்புலட்சுமி ஜெகதீசன் என்பதை எண்ணி மகிழும் கழகத் தலைமை அவரை நம்பவில்லை என்பது எவ்வளவு அபத்தமான புலம்பல்! அபாண்டமான பொய்!

உடன்பிறப்பே, நாளும் வலிவு பெற்றிடும் நம் கழகத்தைத் தேளாய்க் கொட்டிடும் தீயோர், அழித்திட ஆயிரம் பொய்களை இப்படித் தினந்தோறும் விஷமாய்க் கக்குவர்! புராணக் கதையில் எனக்கு நம்பிக்கையில்லை - ஆயினும் விஷத்தை உண்டு அமுதத்தை அடியார்க்கு அளித்தார் சிவன் என்ற கதை நம்பமுடியாமல் இருக்கலாம். நீ என்னை நம்பு! நாசக்காரர்கள் கக்கும் விஷத்தை உண்டிடவும் - கழகக் கொள்கை வெற்றி என்ற அமுதம் உன் போன்ற உடன்பிறப்புகளுக்கு கிடைத்திடவும் - அந்தச் சிவனாக நானிருப்பேன்! இது மட்டும் உறுதி!

அன்புள்ள,

மு. க.

30-09-1993

2052. அடையாளக் காணிக்கை அன்பின் அறிகுறி!

உடன்பிறப்பே,

மராட்டிய மண்டிலம், தொடர்ந்து இதயமற்றோரின் வெடிகுண்டுத் தாக்குதலுக்கும் - மதவெறியர் தாக்குதலுக்கும் உள்ளாகிப் பல்லாயிரம் உயிரைப் பலிகொடுத்துவிட்டு அந்தக் கண்ணீரைத் துடைத்துக்கொள்வதற்குக்கூட நேரமில்லாத நிலையில், இதோ மீண்டும் இயற்கையின் இரக்கமற்ற தாக்குதலுக்கு உள்ளாகி இருபதாயிரத்துக்கு மேற்பட்ட உயிர்களை, உயிரோடு புதைத்துவிட்டுப் புலம்பி அழுதுகொண்டிருக்கிறது. அந்த பூகம்பத்தின் அதிர்ச்சி, தமிழகம் புதுவை வரையிலே பரவியுள்ளதாகத்தகவல்கள். பற்பல வேதனைச் செய்திகள், தமிழர் நிலத்தில் ஏற்பட்ட அதிர்ச்சியைவிட அவர்தம் நெஞ்சத்தில் ஏற்பட்டுள்ள அதிர்ச்சிதான் பெரியது.

ஆம்! ஒரே ஒரு விநாடிப் பொழுதுக்குள் சாவின் கொடிய கரங்கள் பல்லாயிரக் கணக்கான மனிதஜீவன்கள் மீது நீண்டு, அழுத்தமாகப் பிடித்து, அனைவரையும் தனது சுரங்க வயிற்றுக்குள் சுருட்டிப் போட்டுக்கொண்டது என்ற செய்தியைக் கேட்டு அதிர்ச்சி அடையாதவர்கள் யார்தான் இருக்க முடியும்.

அதனால்தான் இங்கு தமிழகத்தில் ஏற்பட்டது நில அதிர்ச்சியல்ல! நெஞ்சத்து அதிர்ச்சி என்று கூறுகிறேன்.

அடுத்த பொழுது என்ன பணியிருக்கிறது என யோசித்துக்கொண்டே படுத்துறங்கிப் போனவர்கள் நசுங்கியும், காயமுற்றும் மீளா உறக்கத்தில் ஆழ்ந்து போனார்கள். இனி அவர்களுக்கு அடுத்த நாள் பணிபற்றி என்ன கவலை!

குடும்பம் குடும்பமாக குழந்தை குட்டிகளுடன் - ஏன்? ஊர் ஊராக, வெடித்துத் திறந்த பூமியின் வாய்க்குள் போய்விட்டார்கள்

- இந்த அவலத்தை, அநியாயத்தை, அடக்க முடியாத சோகப் பெருவெள்ளக் காட்சியைப் படங்களிலே பார்த்தே பதறிப் போகிறோம். தொலைக்காட்சியில் கண்டே துடிக்கிறோம். நேரில் காணுகிறார்களே பூகம்ப நெருக்கடியில் மாளாமல் மிச்சமிருப்போர்! அவர்கள் எப்படித்தான் தாங்கிக் கொள்கிறார்களோ!

செப்டம்பர் 30 காலையில் இந்தக் கொடுமையான செய்தி அதற்குரிய நிறுவனங்களின் மூலம் கிடைத்துவிட்டது. பிற்பகல் மூன்று மணிக்கு பி.பி.சி. தொலைக் காட்சியில் பூகம்பத்தின் விளைவுகளையும் - மனித உருவங்கள் சடலங்களாக அடுக்கப் பட்டிருப்பதையும் - சாலைகள், புகைவண்டிப் பாதைகள் சீரழிந்து போனதையும் - மருத்துவமனைகளில் காலிழந்தோர், கண்ணிழந்தோர் என நூற்றுக் கணக்கான ஊனமுற்றோர் முணகிக்கொண்டு கிடப்பதையும் - மருத்துவர்கள் அவர்களுக்கு சிகிச்சைகள் மேற்கொள்வதையும் பார்க்க முடிந்தது. ஆனால் நமது நாட்டு தொலைக்காட்சியிலோ, அந்த நேரங்களில் வழக்கமான இந்திப் படங்கள் ஒளிபரப்பப்பட்டுக் கொண்டிருந்தன!

வெளிநாட்டுத் தொலைக்காட்சிகளில் அத்துணை விரைவாக இந்திய நாட்டுப் பூகம்பச் செய்தி சொல்லப்பட்டது மாத்திரமல்ல! எப்படிப் பூகம்பம் ஏற்பட்டது போன்ற விளக்கங்களையும் - பூகம்பத்தினால் சேதமடைந்த பகுதிகளையும், சிதலமுற்ற இடங்களையும், சின்னாபின்னமாகிவிட்ட மனித உடல்களையும் தொலைக்காட்சியில் சிலமணி நேரங்களுக்குள்ளாக ஒளிபரப்ப முடிந்திருக்கும்போது - இங்கே நமது நாட்டில் டெல்லி யானாலும், சென்னையானாலும் தொலைக்காட்சி நிலையங்கள் அந்த வேலையே வைத்துக் கொள்ளவில்லை.

விநாயகர் ஊர்வலமும், விநாயகர் சிலைகள் கடலிலே வீசப்படுவதும் வேண்டுமானால், சில விநாடி இடைவேளையில்கூட, தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பும் இடத்தைப் பிடித்துவிடும். ஆனால், இருபதாயிரம் மக்களைப் பலிகொண்ட பூகம்பத்தின் சேத விபரங்கள் தொலைக்காட்சியில் மறுநாள்தான் ஆர அமர அசைந்தாடிக்கொண்டு ஒளிபரப்பப்படுகின்றன.

விஞ்ஞான வளர்ச்சி, இந்தியாவில் விண்வெளிக் கலன்களை வெற்றிகரமாக விடுவதற்கேற்ற அளவுக்குக் கிட்டவில்லை

என்றாலும்கூட, காலையில் நடந்த உலகையே உலுக்கிய பூகம்ப நிகழ்ச்சிசெய்தியையும், அதன் சேதவிவரங்களையும் தொலைக்காட்சியில் காட்டுகிற அளவுக்கு வளராமல் தொய்வு விழுந்துபோய்விடவில்லையே!

பி.பி.சி.யில் செய்தி வாசிக்கிற பெண்மணி - இந்தியாவில் உள்ள பி.பி.சி. நிருபரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டும், மத்திய ஆசியாவில் உள்ள பி.பி.சி. நிருபரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டும் செய்திகளை அறிந்திடும் காட்சிகளை பி.பி.சி. ஒளிபரப்பிய போது, 30-ந் தேதி பிற்பகல் 3 மணி அளவில் அதைப் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு, ஆயிரம் ஆயிரம் அழிந்து போயினரே ஒருக்கணத்தில்! என்கிற துயரத்துடன் துயரமாக, இந்தச் செய்தியைக் கூட விரைந்து பறந்து நாட்டுக்குத் தெளிவாக்கக் கூடிய ஆர்வம், ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள அந்நியர்க்கு உள்ள அளவுக்கு இந்த நாட்டிலே உள்ளவர்கட்கு இல்லாமற் போய்விட்டதே என்ற இந்தத் துயரமும் என்னைச் சூழ்ந்து கொண்டது.

மராட்டியத்திலே பிணக்குவியல் - தொடர்ந்து வேறு சில மாநிலங்களிலும் - உயிரிழப்புகள் - பெரும்பாதிப்புக்கு, சொல்லவொண்ணா சோகத்துக்கு உள்ளாகியிருப்பது மராட்டிய மாநிலம்! அங்கிருந்து கேட்கும் வேதனைக் குரல் நம் விழிகளை அருவிகளாக்குகின்றன!

மாதாவை இழந்த மகன் - மகனை இழந்த மாதா - கணவனை இழந்த காரிகை - துணைவியை இழந்த தலைவன் - பெற்றோரை இழந்த பிஞ்சுப் பிள்ளைகள் - அந்தப் பிஞ்சுகளை இழந்து கதறும் பெற்றோர் - உற்றார் உறவினர் எங்குற்றனர் என அலறும் ஊரார் - ஊர் இருந்த இடம் எது என அலைந்து மெலியும் அயலூரார் - காலொடிந்தும், கையொடிந்தும், கண்கள் இழந்தும், காதொடிந்த ஊசியினும் மோசமான கதிக்கு ஆளானோர் - இந்தக் காட்சியெல்லாம், தொலைக்காட்சியைக் காணாமலே கூட நம் உள்ளத்தைத் துளைத்துக் கொண்டுதானிருக்கின்றன.

மத்திய அரசும், மராட்டிய மாநில அரசும் இராணுவ வீரர்களைப் பயன்படுத்தி மீட்புப் பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கின்றன. மேலும் பல துயர்துடைப்புப் பணிகள் அவசர அவசியமாகத் தேவைப்படும் என்பதை உணர்ந்து, அந்த அரசுகள் விரைந்து செயலாற்றிட வேண்டும்.

முதல் கட்டமாக பிரதமர் அவர்கள் இரண்டு கோடி ரூபாய் நிவாரண நிதி வழங்கியுள்ளதாகச் செய்தி! போதாது! பல கோடி தேவை! அந்தத் தேவையை அரசுதான் நிறைவு செய்ய இயலும்!

நம்மால் முடிந்தது, தி.மு.க. அறக்கட்டளையிலிருந்து அதாவது உன் போன்ற உடன்பிறப்புகள் வழங்கிய சிறு துளிகள் - ஒரு லட்ச ரூபாய் துயர் துடைப்பு நிதி! இது கடலில் பெருங்காயம் கரைத்தது போல என்று எனக்குத் தெரியும்! இருப்பினும் இந்த பூகம்பக் கொடுமையால் நமது உள்ளத்தில் பெருங்காயம் ஏற்பட்டுள்ளது என்பதை எடுத்துக் காட்டும் அடையாளக் காணிக்கை - அன்பின் அறிகுறி - கடமையுணர்வின் விளைவு!

அன்புள்ள,

மு. க.

02-10-1993

2053. திரும்பத் திரும்பக் கூறினால், பொய்யும் மெய்யாகிவிடுமா?

உடன்பிறப்பே,

ஒரு பொய்யைத் திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டேயிருந்தால், அது மெய் போலாகிவிடும் என ஒரு கணிப்பு! மெய் போலத்தான் தோன்றுமே தவிர, அது மெய்யாகவே ஆகிவிடாது என்பது மட்டும் திண்ணம்!

ஆனால், அன்புக்குரிய மார்க்சிஸ்ட் கட்சி நண்பர்கள் ஒருவர் மாற்றி ஒருவர் பழனி நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. என்பது பற்றி ஒரு நாளைக்கு ஒரு அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

பழனி நாடாளுமன்ற வாக்குகள் எண்ணிக் கொண்டிருந்த நாளன்று, மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலக் குழுவின் கருத்து என்ற பெயரால், மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான தோழர் நல்லசிவன் அவர்கள் பழனியிலும், ராணிப்பேட்டையிலும், தி.மு.க.வும், காங்கிரசும் ரகசிய உடன்பாடு செய்து கொண்டதாக உறுதி செய்து கொண்டு ஓர் அறிக்கை வெளியிட்டார்.

எந்த உடன்பாடு, எந்தக் கட்சியுடன் என்றாலும், அதனை வெளிப்படையாகக் கட்சியில் முடிவெடுத்து அறிவிப்போமே தவிர, ரகசிய உடன்பாடு என்று கூறி, தி.மு.க.வின் அரசியல் பண்பாட்டுக்கே களங்கம் கற்பிப்பதை ஏற்றுக் கொள்ள இயலாத நிலையில் நான் உடனடியாக மறுப்பு விளக்கம் அளிக்க நேர்ந்தது. எனது விளக்கத்தைப் பழனியில் கழகம் பெற்ற அபரிமிதமான வாக்குகள் மெய்ப்பித்துக் காட்டின.

அதற்குப்பிறகு சில நாட்கள் கழித்து சென்னையில் பேசிய மார்க்சிஸ்ட் தலைவர் தோழர் உமாநாத் அவர்கள், தோழர் நல்லசிவன் அவர்களின் கருத்தையே வலியுறுத்தியும் - அவர்களது

கட்சியின் மாநிலக்குழுவின் முடிவு என்றும் கூறியதுடன், தி.மு.க.வைக் கடுமையாகவும், கேலியாகவும் விமர்சித்திருக்கிறார். அவரது அந்தக் கூற்றுகள் ஒவ்வொன்றுக்கும் நான் அளித்திருந்த பதில்களை நீ படித்திருப்பாய்!

அதற்கு மேலும் இப்போது அந்தக் கட்சியின் தலைவர்களில் ஒருவரும், நிதானமாக எதையும் யோசிக்கக் கூடியவர் என்று நான் கருதியிருந்தவருமான தோழர் என். வரதராசன் அவர்கள் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில் அந்தக் கட்சித் தலைவர்கள், பழனி சட்டமன்றத் தொகுதியில் பொறுப்பேற்றுப் பணியாற்றிக் கொண்டிருந்த சி.டி. தண்டபாணி அவர்களையும், மாவட்டச் செயலாளர் ஐ.பெரியசாமி அவர்களையும் சந்தித்துப் பேசியதாகவும் பழனி சட்டமன்றத் தொகுதியில் பணியாற்ற ஐந்து கார்கள் மட்டுமே வைத்துக் கொண்டிருப்பது போதாது என மார்க்சிஸ்டு தலைவர்கள் அவர்களிடம் கூறியதாகவும், தலைமைக் கழகம் போதுமான அளவுக்குப் பணம் தரவில்லை, வேட்பாளரும் கொடிகளும் பானரும் கொடுக்கவில்லை என்று தண்டபாணியும், பெரியசாமியும் தோழர் வரதராசன் மற்றும் மார்க்சிஸ்டு தலைவர்களிடம் குறைபட்டுக் கொண்டதாகவும், வரதராசன் அவர்களின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இது உண்மையாகவே இருக்குமெனினும், தவறு என்ன?

நூற்றுக்கணக்கில்கூட அல்ல, ஆயிரக்கணக்கில் கட் அவுட்களையும், லட்சக்கணக்கில் சுவரொட்டிகளையும், சாலையில் உள்ள மரங்களில்கூட அரசு இலாக்கா பணியாளர்களைக் கொண்டு பெயின்ட் செய்து இரட்டை இலையை விளம்பரப்படுத்தி - அரசாங்கத்தின் பல்வேறு துறைகளின் வாகனங்களில் அரசு சின்னங்களை தற்காலிகமாக அழித்துவிட்டு அவற்றைத் தேர்தல் பணிக்குப் பயன்படுத்திக் கொண்ட அநியாயத்தையும் எதிர்த்து - அந்தச் செலவுகளுக்கு ஈடாக தி.மு.கழகத்தினால் பணம் செலவிடமுடியுமா? முடியாது! முடியும் என்றாலும் அத்தகைய ஆடம்பர ஆர்ப்பாட்ட விளம்பரங்களில் தி.மு.க. கடந்த காலத்தில்கூட எந்தத் தேர்தலிலும் ஈடுபட்டதில்லை. அதுமட்டுமல்ல, வழக்கு நிதிக்கும் - கழக வளர்ச்சி நிதிக்கும் - பொதுத்தேர்தல் நிதிக்கும் - உடன்பிறப்புகளை மாவட்டந்தோறும்

கசக்கிப் பிழிந்து திரட்டியுள்ள சிறுநிதியை முழுவதுமாக ஓர் இடைத்தேர்தலில் அள்ளி வீசிவிடவும் இயலாது!

என். வரதராசன் அவர்களின் மிக முக்கியமான குற்றச்சாட்டு - மத்திய காங்கிரஸ் அரசின் கொள்கைகளை கலைஞரின் பேச்சுகளில் விமர்சிக்காமல் இருப்பது, வாக்காளர்களிடம் குழப்பம் விளைவிக்க இடமளிக்கும் என எடுத்துக் கூறினோம். அவர் மத்திய அரசின் கொள்கைகளை விமர்சித்துப் பேசியுள்ளேன். நேற்று கூடப் பழனியில் பேசியுள்ளேன். நாளை முரசொலியில் பாருங்கள் வரும் என்றார். ஆனால், முரசொலியில் காங்கிரஸ் மீதான விமர்சனப் பேச்சுகள் வரவேயில்லை என்பதாகும்.

அவர் என்னை சந்தித்ததாகச் சொல்வது செப்டம்பர் 13-ந் தேதி! 14-ந் தேதி முரசொலியில் நான் 12-ந் தேதியில் பழனி பொதுக்கூட்டத்தில் பேசியது வெளி வந்துள்ளது.

அந்தப் பேச்சின் சில பகுதிகள் மட்டும் இதோ:-

* அண்மையில் பாராளுமன்றத்தில் எல்லா எதிர்க் கட்சிகளும் சேர்ந்து, கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானம் நரசிம்மராவின் சாமர்த்தியத்தால் ஒரு கட்சியிலிருந்து திடீரென காங்கிரசுக்குத் தாவி விட்டவர்களின் பெரும்பான்மையினால் தோற்கடிக்கப் பட்டு நரசிம்மராவ் ஆட்சி தப்பிப் பிழைத்திருக்கிறது.

* பாரதீய ஜனதா கட்சியின் செயல்பாடுகளுடன் ஒத்துப் போகிற நிலையில்தான் மத்தியில் ஆளுங்கட்சியாக இருக்கிற காங்கிரசும், இந்து மாநில ஆளுங்கட்சியான அ.தி.மு.க.வும் இருக்கின்றன.

* ஜனதா ஆட்சியில் மொராஜ்ஜி அமைத்த மண்டல் கமிஷன் அறிக்கையை, இந்திராகாந்தி பிரதமராக வந்ததும் அதை வாங்கிக் கிடப்பில் போட்டு விட்டார். ராஜீவ்காந்தி காலத்திலும் அது கிடப்பிலே போடப்பட்டுவிட்டது. எனக்கு முன் பேசிய தம்பி மாறன் கூறியது போல மண்டலை எதிர்ப்பவராகத்தான் ராஜீவ்காந்தி இருந்தார்.

* நேரு காலத்திலிருந்து நாடு முழுதும் செய்யப்படும் விளம்பரங்கள் Be India Buy India அதாவது,

இந்தியனாக இரு! இந்தியப் பொருள்களை வாங்கு! என எழுதப்பட்டிருக்கும். இன்றைக்கு என்ன ஆயிற்று? இந்தியனாக இரு! வெளிநாட்டு முதலாளிகளின் பொருள்களை வாங்கு இதுதான் இந்தியாவின் பொருளாதாரக் கொள்கையின் புதிய வடிவம். இந்தக் கொள்கையினால் வேலை வாய்ப்பும் இல்லாமல் போகும். வேலையில் இருப்போரும் நீடிக்க வழியில்லாமல் ஆகும். வேலையில்லா திண்டாட்டம் பெருகும். அந்நிய முதலாளிகளுக்கு இந்தியா சந்தைக் கடையாக மாறும்.

உடன்பிறப்பே, இவைகள் செப்டம்பர் 12-ந் தேதி பழனியில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் நான் ஆற்றிய நீண்ட உரையின் சில பகுதிகள். முழுப் பேச்சு 14.9.93 முரசொலியில் வெளிவந்ததை நண்பர் என். வரதராசன் என்ன காரணத்தாலோ பார்க்கத் தவறிவிட்டார்.

அதுமட்டுமல்ல, பழனி நாடாளுமன்றத் தொகுதியில் என் சுற்றுப்பயணம் செப்டம்பர் 10-ந் தேதி மாலையில் தொடக்கம் - வேடசெந்தூர் சட்டமன்ற தொகுதியில் பல கிராமங்களில் பேசிவிட்டு, கடைசியாக வேடசெந்தூர் பொதுக் கூட்டத்தில் பேசினேன்.

அந்தக் கூட்டத்திலும், அண்மையில் தி.மு.க. உள்ளிட்ட தேசிய முன்னணி இடது சாரிக்கட்சிகள் நாடு தழுவிய முழுஅடைப்பு நடத்தின! எதற்காக? இந்தியாவை அந்நியநாட்டு முதலாளிகளிடமிருந்து பாதுகாக்கவேண்டுமென்பதற்காக - மதவெறியர்களிடமிருந்து மக்களையும் நாட்டையும் காப்பாற்றி, மனிதநேயத்தைப் போற்றிட வேண்டுமென்பதற்காக; எனவேதான் இந்தச் சூழ்நிலையிலும், ஜனநாயகக் கடமையை நிறைவேற்ற பழனி நாடாளுமன்ற தொகுதியிலும், ராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதியிலும் நாம் களத்தில் நிற்கிறோம். இந்த இரு இடங்களிலும் நாம் வெற்றி பெற்றாக வேண்டும். என்றுதான் பேசியிருக்கிறேன். இதுவும் முரசொலியிலும் வந்துள்ளது. தினகரனிலும் வந்துள்ளது.

பேசியதாகச் சொன்னார். ஆனால் அவர் சொன்னபடி முரசொலியில் வெளிவரவே இல்லையென்று கூறுவது, மார்க்சிஸ்ட் கட்சியினர் ஆரம்பத்தில் மாநிலக் குழுவின் மூலம் நம் மீது சுமத்திய திட்டமிட்ட பொய்க்குற்றச்சாட்டை எப்படியாவது உண்மைபோல ஆக்க வேண்டும் என்பதற்காகத்தான் என்பது தெளிவாகிறது.

கட்சியின் அடித்தளமாக இருக்கிற செயல்வீரர்களை யார் யாரோ குழப்பிப் பார்த்து விட்டார்கள். இப்போது மீண்டுமொருமுறை இவர்கள் அந்த முயற்சியில் இறங்கியிருக்கிறார்கள்.

தி.மு.கழகம் திறந்த புத்தகம் என்பதையும் - அது எடுக்கும் அரசியல் ரீதியான கொள்கை முடிவுகள் எதுவாயினும் கட்சியிலே விவாதித்து வெளிப்படையாக அறிவிக்கப்படுமே தவிர, மறைமுகமாக - ரகசியமாக - ஒளியற்ற இடத்தில் - வெளியே தெரியாமல் - எந்த முடிவெடுத்தும் செயல்படாது என்பதை மார்க்சிஸ்டுகள் ஒப்புக் கொள்ள மறுக்கலாம் - ஆனால் தமிழ் மக்கள் மறுக்கமாட்டார்கள்! உன் போன்ற உடன்பிறப்புகளும் இது போன்ற பிரச்சாரங்களுக்கு ஏமாறமாட்டார்கள்!

அன்புள்ள,

மு. க.

04-10-1993

2054. கையில் காண்டீபம் இருந்தும் பயன் என்ன?

உடன்பிறப்பே,

இப்படி நான் அழைத்திடும் இந்தச் சொல்லில் தான் உனக்கு ஏற்படும் உணர்வு, உற்சாகம், உத்வேகம் எத்தனை எத்தனை - அதைவிட இந்தச் சொல்லை உச்சரிக்கும் என் இதயத்தில் பிரவாகமெடுக்கும் தேனாறு ஆயிரம் கங்கைகளையும், நூறாயிரம் காவிரிகளையும் ஒன்றாக இணைத்திடினும், அதனைவிடப் பெருகியோடும் பெரும் பேராறு அன்றோ! என் மணப்புண்ணுக்கு மருந்து - உன் காயத்துக்கு ஒத்தடம் - ஆம்! உடன்பிறப்பே எனும் அந்த வார்த்தை! நூற்றுக் கணக்கில் உனக்கு நான் எழுதிய கடிதங்களிலும் - ஆயிரக்கணக்கில் உரையாற்றிய கூட்டங்களிலும் இந்த ஒரு சொல்தானே இசை நிகழ்ச்சியின் தொடக்கத்தில் சுருதி கூட்டுவது போல அமைந்து, அதே நேரத்தில் களம்புகுவதற்கான அழைப்பு வரும்போது, அதிர்ந்திடும் அறிவிப்பு முரசமாகவும் எத்தனையோ ஆண்டுக்காலமாக இருந்து வருகிறது.

அதனால்தான், அந்தச் சொல்லெடுத்து இன்றைய கடிதத்தைத் தொடங்கும்போது ஏனோ தெரியவில்லை - என் நெஞ்சம், நான் அடக்கியும் கேட்காமல் விம்முகிறது! அண்ணாவை நினைத்துக் கொள்கிறேன்! அந்த அமைதியின் உருவம் புத்தர் சிந்திய புன்னகையைச் சிந்தவிட்டு, என்னையும் அமைதிப்படுத்துகிறது. மக்காவிலிருந்து மதினாவரையில், நபிகள் சந்தித்த கொடுமைகளை எண்ணிக் கொள்ளடா தம்பி, என்று அண்ணாவின் அகன்ற விழிகள் எனக்கு ஆறுதல் கூறுகின்றன! சுளீர் சுளீர் என்ற சவுக்கடிகளைத் தாங்கிக்கொண்டு, அவை ஏற்படுத்திய காயங்களில் இருந்து கசிந்து கொண்டிருந்த குருதித்துளிகளைத் தன் மீது தெளிக்கப்படும் பன்னீர்த் துளிகள் என்று கருதும் பொறுமையுடன், சிலுவை சுமந்து சென்ற

ஏசுபிரானை ஏனடா தம்பி மறந்தாய் என்று அண்ணா என் முதுகில் தட்டிக்கொடுப்பது போன்ற ஓர் நினைவு! நெகிழ்ச்சி!

நான் ஏசுவோ, புத்தரோ, நபிகள் நாயகமோ அல்ல! அப்படி ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டால் நான்தான் இந்த உலகத்தில் ஒப்பற்ற பைத்தியக்காரன்!

ஆனால், அவர்கள் புரிந்த தியாகம் - ஆற்றிய பணி - ஏற்றுக்கொண்ட இன்னல்கள் - அவற்றுக்கிடையே அவர்கள் காட்டிய கண்ணியமிக்க பொறுமை ஆகியவற்றில் ஓர் எள்முனை அளவாவது எனக்குக் கிட்டும் வாய்ப்பு ஏற்படும்போது, அடடா! அண்ணாவின் தம்பி என்பதற்குரிய தகுதி நமக்கும் கிடைத்து விட்டது என்று அக மிக மகிழ முடிகிறதல்லவா!

உடன்பிறப்பே, இந்த ஆண்டு முப்பெரும் விழாவுக்கு வா என்று கூட ஒரு வரிக் கடிதம் நான் உனக்கு எழுதவில்லை! இருப்பினும் ஏதோ ஒரு பற்றும், பாசமும் உன்னை விழாவுக்கு அழைத்து வந்துவிட்டதே! அண்ணா உருவாக்கியுள்ள இந்தக் கழகத்துக்கும், நமக்குமிடையே உள்ள அந்த அற்புதமான சக்தியை எவர்தான் சீர்குலைக்க இயலும்!

அந்தக் கூட்டத்தில் அண்ணாத்துரையும் பேசினார் என்று முப்பதாண்டுகளுக்கு முன்பு மூலையொன்றில் - அதுவும் இருட்டு மூலையில் செய்தி வெளியிட்ட ஏடுகள், இருட்டடிப்பு செய்தே நமது கழகத்தை நசுக்கி விடலாம் என்று நம்பிக் கிடந்தன. ஆனால் இன்றைக்கோ, பத்திரிகைகளின் பத்து பனிரெண்டு பக்கங்களிலும், கழகச் செய்திகளைத் திரித்து வெளியிட்டாவது கழகத்தைத் தீர்த்து கட்டிவிடலாமென ஒரு கூட்டம் கணக்கிட்டுக் கொண்டு நிற்கிறது! முடியவில்லை! முடியாது!

எந்தச் சோதனைகளையும் கடந்து, சொக்கத் தங்கமாக ஒளிர்ந்திடக் கூடியது கழகம்! புயல் அடிக்கும்போது, அந்தப் புயலின் காற்றாக இருக்கும் இந்தக் கழகம்! எரிமலை பொங்கிடும்போது, அந்த எரிமலையின் தீப்பிழம்பாக இருக்கும் இந்தக் கழகம்!

எனவே இடைவிடாது இந்தக் கழகத்தை அழிக்க, இடுப்பில் கச்சை கட்டிக் கொண்டு போரிடும் வகுப்புவாத சக்திகள், மதவெறி சக்திகள், ஆதிக்க சக்திகள், அனைத்தையும் எதிர்கொண்டு தலைநிமிர்ந்து நடைபோடும் திறம் தி.மு.கழகத்தின் உடைமை!

அந்த உடைமையாம் உடைவாள் கொண்டு, எல்லோரும் ஓர் அணியில் நின்று எதிர்ப்பு சக்திகளுக்கு அறைகூவல் விடுப்போம்! வெற்றிலைத் தாம்பூலம் சரியாக வாய் சிவக்கவில்லை என்பதற்காகத் திருமணத்தை ரத்து செய்வோர் உண்டோ? உப்பு போடவில்லை - அல்லது ஒரு கல் உப்பு அதிகமாகிவிட்டது என்பதற்காக விருந்து நிறுத்தப்பட்டதாக அறிவிப்பது சரியோ? காலணியில் சிறுகோளாறு என்பதற்காக வீரன் களத்திற்குள் போகாமல் வீட்டுக்குள் அடைந்து கிடப்பானோ?

விரலைப் பிடித்துக் கொண்டிருக்கும் பிள்ளையை மறந்துவிட்டு, விழாவில் விளைந்த சிறு சந்தடியில் மனத்தைப் பறிகொடுத்து விட்டால் - பின்னர், திருவிழாவில் காணமற் போன பிள்ளையைத் தேடி அலைய நேரிடுமல்லவா?

உடன்பிறப்பே, இதையெல்லாம் கவலையுடன் சிந்தித்துப் பார்த்ததின் விளைவாகத்தான், எதிரே குவிந்து கிடக்கும் கழகத்திற்கான ஏராளமான பிரச்சினைகளில் கவனம் செலுத்தாது விடின் தி.மு.க.வின் கொள்கை, கோட்பாடு, குறிக்கோள், செயல்முறைத் திட்டங்கள் அனைத்தும் நான் மேலே குறிப்பிட்டவாறு ரத்து செய்யப்பட்ட திருமணமாக - நிறுத்தப்பட்ட விருந்தாக - வீட்டுக்குள் அடைந்து கிடக்கும் வீரனாக - திருவிழாவில் காணமற்போன பிள்ளையாக ஆகிவிடும் என்ற முடிவுக்கு வந்து,

கூரியமுள் குத்திடினும், மலர் பறிக்கும் மங்கை போல - பாறைகள் இடிந்து மோதிடினும், தங்கம் எடுக்கச் சுரங்கம் இறங்கும் பாட்டாளி போல -

தி.மு.கழகம், தான் கொண்டுள்ள இலட்சியங்களுக்கு வெற்றி தேடத் தன்னை ஒப்படைத்துக் கொண்டு ஆக்கப்பணியாற்ற ஆயத்தமாகியுள்ளது.

அக்டோபர் 10-ஆம் நாள் அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் நான் ஆற்றிய உரையும் - நமது பேராசிரியர் ஆற்றிய உரையும் உடன்பிறப்பே! உன் போன்றவர்களால் செயல்வடிவம் பெற வேண்டும்.

அக்டோபர் 24 முதல் ஒருவார காலம் அப்பணியினை ஆற்றிட வேண்டுகிறேன்.

அதற்கான அறிக்கையில் விபரம் தந்துள்ளேன்.

அண்ணா அடிக்கடி சொல்லியுள்ளாரே! பாரதக் கதையில் அர்ச்சுனன் குறிபார்த்து வெற்றி பெற்ற நிகழ்ச்சி - அதைப் போல குறிக்கோள் ஒன்றின் மீதே கவனம் இருக்க வேண்டும்; அப்போதுதான் அவன் இலட்சியவாதி! அல்லாமல் இலை, தழை, கிளை, கொம்பு இவைகளின் மீது கண்ணும், கவனமும் சென்றால் கையில் காண்டீபம் இருந்தும் பயனில்லை - கழகத்தின் இலட்சியக் கனியைப் பறிக்க இயலாமற் போய்விடும்.

இதனை உணர்ந்து கழக நிர்வாகிகளும் - நமது பல்வேறு துணை அணி அமைப்புகளின் நிர்வாகிகளும் - முக்கியமாக சொற்பொழிவாளர்களும் - கடமையாற்றிட வேண்டுமென கட்டளையிட்டுப் பழக்கப்படாத காரணத்தால் கனிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

14-10-1993

2055. சோழமண்டிலத்தின் சுயமரியாதைச் சுடரொளி அணைந்து விட்டதே!

உடன்பிறப்பே,

மலையொன்று சாய்ந்தது என இடியொத்த செய்தியொன்று செவிப்பறை கிழித்து, சிந்தை அணு ஒவ்வொன்றையும் சிறிது நேரம் அசைய வொட்டாமல் நிறுத்தியது. அந்தோ! மன்னை மறைந்துவிட்டார் - சின்னஞ்சிறு பிராயத்தில் என்னைத் தன்மான இயக்கப்பணிக்கு தட்டிக்கொடுத்து உற்சாக மூட்டிய அந்தக் கம்பீர உருவம் சாய்ந்துவிட்டது. தஞ்சைத்தரணியில் அவருடன் சேர்ந்து பணியாற்றித் திராவிட இயக்கம் வளர்த்த தொண்டர்களில் நானும் ஒருவன். இன்று சோர்ந்து புலம்புகிறேன், சோழ மண்டிலத்தின் சுயமரியாதை இயக்கச் சுடரொளி அணைந்து விட்டதேயென்று!

இந்திய நாட்டு விடுதலைப் போராட்ட வரலாற்றின் புரட்சி அத்தியாயம் தீக்கனலாய்ப் பூத்தபோது, அதிலோர் தியாக இதழாய்த் திகழ்ந்தது மன்னார்குடி என்பதும், அதன் மணமாய்ப்பரவியவர் மாவீரர் மன்னை நாராயணசாமி என்பதும் அழிக்க முடியாத உண்மை! எதை மறப்பது - பெரியாரின் பெரும்படைத் தளபதிகளில் ஒருவராய் விளங்கி, இன்றைக்கும் தஞ்சைப் பெரியார் என அழைக்கப்படும் அளவுக்குப் பகுத்தறிவுச் சிங்கமாக நடை போட்டாரே - அதை மறக்க முடியுமா? அண்ணாவின் பாசத்திற்கும், நேசத்திற்கும் உரியவராய், திராவிட முன்னேற்றக் கழகத்தின் இரும்புத் தூணாக நின்றாரே - எதிர்ப்புகளைப் பொடியாக்கி, இன முழக்கத்தைப் புயலாக்கி, இளைய தலைமுறைக்கோர் எடுத்துக் காட்டாக உலவினாரே - அதை மறக்க முடியுமா?

தோள் கொடுக்கும் தோழனாக - தொகை தொகையாய் வந்த சோதனைகளுக்கெல்லாம் என்னுடன் இணைந்து நெஞ்சு நிமிர்த்தும் வீரனாக - அண்ணனாக, அன்னையாக, எனை அரவணைத்து மகிழ்வாரே! ஆனந்தக் கண்ணீர் வடிப்பாரே -

அதை மறக்க முடியுமா? நாளை மறுநாள் 19-ஆம் தேதி அவருக்கு 75வது பிறந்த நாள் - பத்து நாட்களுக்கு முன்பு தான் என்னுடன் மன்னையிலிருந்து தொலைபேசியில் பேசினார். நானெல்லாம் இருக்கும் போது நீங்கள் ஏன் இப்படி முடிவெடுத்தீர்கள்? என்று தழுதழுத்த குரலில் என்னைக் கடிந்து கொண்டார். ஆனால் இன்று அவர் இல்லையே, என் செய்வேன்!

செப்டம்பர் 5-ஆம் நாள் என்பேத்தி திருமணத்திற்கு, மூன்றுநாள் முன்கூட்டியே வந்திருந்து வாழ்த்திச் சென்றார். மீண்டும் செப்டம்பர் 10-ஆம் நாள் காலையில் தானே மன்னார் குடியில் அவருடன் அவரது துணைவியார் நாகம்மையார் நினைவு நாளில் கலந்து கொண்டேன். அதற்குள், இப்படியொரு செய்திவந்து என்னைத் துளைக்கும் என்று எண்ணிப்பார்க்கவே இல்லையே நான்! இரண்டு திங்களுக்கு முன்புகூட அந்தப் போர்க்குணம் கொண்ட சிங்கம், மாவட்டத் தலைநகராம் தஞ்சையில் பேச்சு சுதந்திரத்திற்காக உரிமைப் பிரகடனம் செய்து, கைதாகி விடுதலையான செய்தி குறித்து முரசொலியில் ஒரு கடிதம் கண்கலங்க எழுதியிருந்தேன்.

அதில், காலம் காலமாக எத்தனையோ காட்டாற்று வெள்ளங்களினால் கரைந்து போகாமல் இந்த இயக்கம் காப்பாற்றப்படுவதற்கு, மன்னை போன்ற மூத்த தலைவர்களின் வைர நெஞ்சங்களன்றோ காரணமாக இருந்து வருகின்றன. என்று குறிப்பிட்டிருந்தேன். ஆகஸ்டு 2-ஆம் நாள் எழுதிய இக்கடிதத்தைத் தொடர்ந்து ஆகஸ்டு 8 - ஆம் நாள் தஞ்சை நகரில் மன்னை அவர்களுடன் கலந்து கொண்ட பொதுக்கூட்டத்தில் தொடக்கத்திலேயே அவரைப் பற்றித்தான் பேசினேன்.

“மேடைக்குவந்து நான் அமர்ந்தது முதல், ஏறத்தாழ இதுவரையில் இந்தக் கூட்டத்தின் தலைவரும், கழகத்தின் மூத்த தலைவர்களில் ஒருவருமான முன்னாள் அமைச்சர் மன்னை என்னிடத்திலே வேறு எதுவும் பேசவில்லை. சென்னையிலிருந்து வந்தீர்களே ஊரில் எல்லோரும் நலமா? என்று கேட்கவில்லை. வீட்டார் நலமா? என்று வினவவில்லை. வேதாரண்யம் சென்று வந்தீர்களே, திருமணவிழா எப்படி என்று

கூடகேட்கவில்லை. எப்போதும் அவர் மன்னையை மறக்கமாட்டார். மன்னை வழியாகத்தானே வந்தீர்கள் என்று கேட்கக்கூட மறந்துவிட்டார். கொஞ்சகாலமாகவே அவர் தஞ்சாவூர்க்காரராக மாறிவிட்டார்.

எனவே இந்த மண்ணின் பற்று அதிகமாகி, இங்கு நான் வந்து அமர்ந்ததிலிருந்து, அதோ அந்த விளக்கைப் பார்த்தீர்களா? இந்த விளக்கைப் பார்த்தீர்களா? வருகிற வழியெல்லாம் நம்முடைய பிள்ளைகள் செய்திருக்கின்ற அலங்காரங்களையெல்லாம் பார்த்தீர்களா? மேடைக்கு இந்த வழியாக வந்தீர்களா? அந்த வழியாக வந்தீர்களா? அந்த வழியாக வந்திருந்தால் இன்னும் நிறைய வரவேற்பு வளைவுகளையெல்லாம் பார்த்திருக்கலாமே. இந்த வழியாக வந்துவிட்டீர்களே என்று என்னை துளைத்து எடுத்துவிட்டார். காரணம், எப்போதும் பெரியவர்கள் - வயதானவர்கள் வீட்டில் இப்படித்தான் ஒரு காரியம் நடைபெற்றால் தொணதொண என்று பேசிக் கொண்டிருப்பார்கள்.

ஆனால், அந்த தொணதொண என்கின்ற அந்த சொற்றொடரில் எவ்வளவு உணர்ச்சிப் பிரவாகம் இருக்கிறது. இந்த இயக்கத்தை தொடக்கக்காலம் முதல் கட்டிக் காத்து காப்பாற்றுவதற்காக எடுத்துக் கொண்ட பிரயாசையுடைய பிரதிபலிப்பு இருக்கிறது என்பதையெல்லாம், மன்னை அவர்களோடு ஏறத்தாழ ஐம்பதாண்டு காலத்திற்குமேல் நெருங்கிப் பழகியிருக்கின்ற என்னால்தான் புரிந்து கொள்ள முடியும்''

எனக்கூறிவிட்டு, அவர் தனது பணிகளைக் குறைத்துக் கொண்டு, தேவையான அளவுக்கு ஓய்வெடுத்துக் கொள்ளவேண்டுமென்றும் அந்த மேடையிலேயே வேண்டுகோள் விடுத்தேன். ஆனால் அவரோ, என்னை ஓய்வெடுத்துக் கொள்ளாதே என்று தொலைபேசி வாயிலாக ஆணையிட்டு விட்டு, இப்போது எனைவிடுத்து அவர் நிரந்தர ஓய்வெடுக்கச் சென்றுவிட்டார்.

ஓராண்டுக்குள் அன்பிலை பறிகொடுத்தேன். அதற்குள் மன்னையா? நான் யாருக்கு ஆறுதல் கூறுவது - எனக்கு ஆறுதல் தேடிக்கொள்ளவே என்னால் இயலவில்லையே? மறைவதற்கு இரண்டு நாளைக்கு முன் அவர் ஏடுகளுக்கு அனுப்பியுள்ள 75வது பிறந்தநாள் செய்தியில் கூட,

திராவிட இயக்கத்தினுடைய உயிரான கொள்கைகள் இன்று துரோகச் செயல்களால் அழிக்கப்படுகின்றன. மொழிப்பற்றும், சுயமரியாதை உணர்வும் இல்லாது வாழ்ந்து வருகின்ற தமிழனிடையே, தன்மான உணர்வை உண்டாக்க பல தியாகங்கள் செய்தாகிவிட்டது. எந்த மக்களுக்காக பாடுபடுகிறோமோ. அந்த மக்களே எதிரியாகி விடுகின்றனர் என்றே வேதனைப்பட்டிருக்கிறார்.

சோழமண்டிலத்தின் அந்தச் சுயமரியாதைச் சுடரொளி அணைந்துவிட்ட தென்றாலும், அந்தச் சுடர் ஏற்றிவைத்துள்ள அணையாத சுடர்கள், ஆயிரம், பதினாயிரமாய், இலட்சமாய் என்றென்றும் ஒளி உமிழ்ந்து கொண்டிருக்கும்.

அன்புள்ள,

மு. க.

18-10-1993

2056. அவர்களுக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலி!

உடன்பிறப்பே,

மதுரை முத்து முரட்டுப்பிள்ளை - அன்பில் தர்மலிங்கம் செல்லப்பிள்ளை - மன்னை நாராயணசாமி சவலப்பிள்ளை என்று அண்ணா அவர்கள் வேடிக்கையாகக் குறிப்பிடுவார் என்பதாக தினகரன் இதழில் ஒரு குறிப்பு படித்தேன் இன்று! அதைப் படித்தவுடன் நான் எழுதிய நெஞ்சுக்கு நீதி புத்தகத்தின் நினைவு வந்தது. அதன் இரண்டாம் பாகம், 79-வது பக்கத்தைப் புரட்டிப் படித்தேன் மீண்டும் ஒருமுறை! பழைய நினைவுகளால் நெஞ்சு கனத்தது. அந்தச் சுமையை என் உடன்பிறப்பாகிய நீயும் பகிர்ந்துகொள்வாய் என்ற நம்பிக்கையுடன் மன்னையுடனும், அன்பிலுடனும், மதுரை முத்துவுடனும் ஆரம்ப காலத்திலிருந்து எப்படி இணைந்து கழகம் வளர்த்தோம் என்பதை 31 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற ஒரு சம்பவத்தை நினைவுபடுத்துவதன் வாயிலாக, நமது இயக்கம் கடந்து வந்துள்ள காட்டாறுகள் எத்தனை என்பதையும் நீ உணர்வதற்காக இதோ, அந்தப் புத்தகத்தில் உள்ளபடி அப்படியே தருகிறேன்.

கேரள - தமிழக எல்லையில் வண்டிப் பெரியார் எனும் ஒரு ஊர்! கேரளப் பகுதி! கம்பம் பள்ளத்தாக்கைத் தாண்டிச் செல்லவேண்டும்! 1961 ஜனவரி நாலாம் தேதி - குளித்தலைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக நான் வெற்றி பெற்றிருந்த காலம்! வண்டிப் பெரியாரில் ஒரு சிறப்புக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தனர்! நான் சென்னையிலிருந்து திருச்சி சென்று, மதுரை வழியாக வண்டிப்பெரியார் போவதாகத் திட்டம்! மன்னை, அன்பில் என்னுடன் வந்தனர்! மாயூரம் காந்தி என்று ஒரு நண்பர்! என் வாழ்விலும், தாழ்விலும், என்றென்றும் என்னிடம் உயிரை வைத்திருந்த தோழர்! அண்மையில்தான் காலமானார்! அவரும் அப்போது எங்களுடன் வண்டிப்பெரியாருக்கு வந்தார்!

இலட்சிய நடிகர் என்று என்னால் அன்புடன் அழைக்கப்பட்ட எஸ்.எஸ். இராஜேந்திரனும், மறைந்த மாவீரன் ராஜாங்கமும் எங்களுடன் வந்தனர். மதுரை மாவட்டமானாலும் அல்லது அதனைக் கடந்து எங்கு சென்றாலும் என்னுடன் இணைந்து பயணம் செய்யக் கூடிய மதுரை முத்துவும் என் காரிலே வந்தார். மாலை ஏழு மணிக்கு, ஒரு மண்டபத்தில் வண்டிப்பெரியாரில் கூட்டம் தொடங்கியது.

ஏதோ கலவரத்தை எதிர்ப்பார்ப்பதைப் போல கேரளப் போலீசார் சூழ்ந்திருந்தனர். சில்வர்ஸ்டர் என்ற நண்பர் முதலில் எங்களை வரவேற்றுப் பேசினார். விறுவிறுப்பும் வேகமும் நிறைந்த பேச்சு! மலையாள மொழியில் கர்சித்தார்! அந்தக் கர்ச்சனையினூடே கேரளத்துப் போலீஸ் அமைச்சர் சாக்கோ என்பவரைத் கடுமையாகத் தாக்கிப் பேசிவிட்டார்! அவ்வளவுதான்! அடுத்த விநாடியே பாதுகாப்புக்கு இருந்த அனைத்துப் போலீசாரும் வெளியேறிவிட்டனர்! ஒரே கூச்சல்! மேடையை நோக்கிப் பாய்ச்சல்! மின் விளக்குகளின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுவிட்டன!

இருளில் திசை தெரியாமல் தடுமாறினோம்! நாற்காலிகள் பறக்கும் ஒலி கேட்கிறது! என்னை, அன்பில், மன்னை, மதுரை முத்து, மாயூரம் காந்தி ஆகியோர் சூழ்ந்துகொண்டு வெளியே கொண்டு வந்தனர். நண்பர்கள் எஸ்.எஸ்.ஆர்., ராஜாங்கம் இருவரும் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை. வெளியே வந்த எங்களைக் கலவரக் கும்பல் வளைத்துக்கொண்டு வெறிக் கூச்சல் போட்டது! அந்தக் கும்பலிலேயே நல்ல குணம் படைத்த ஓரிருவர் இருந்தனர்! அவர்கள் எங்களை, எங்களது காரிலே ஏற்றி தமிழ்நாட்டுக்குத் திரும்பிப் போங்கள்! என்று கூறினர்.

எங்கள் கார் அங்கிருந்து புறப்பட்டுச் சிறிது தொலைவு சென்றதும் - ராஜாங்கம், ராஜேந்திரன் இருவரும் வரவில்லையே! அவர்களை விட்டுவிட்டு நாம் மாத்திரம் எப்படிச் செல்வது என்று மீண்டும் காரை வண்டிப் பெரியாருக்குத் திருப்பச் சொன்னோம்.

போனவர்கள் ஏன் திரும்பி வந்தீர்கள்? என்று கலவரக்காரர்கள் எங்களைச் சூழ்ந்துகொண்டு காரைவிட்டு இறக்கினார்கள்! போலீசார் ஏன் என்றே கேட்கவில்லை! மன்னை, அன்பில், மதுரைமுத்து, மாயூரம் காந்தி உடலால் மட்டுமல்ல! உள்ளத்தாலும் உறுதி படைத்தவர்கள்! இருந்தாலும் ஐநூறு கலகக்காரர்களிடம்

என்ன செய்ய முடியும்? ஏதாவது முரட்டுத்தனமாக அவர்கள் பேசியிருந்தால்கூட, அந்த இடத்தில் சில தலைகள் உருண்டிருக்கும்! ரத்த வெள்ளம் பெருகியிருக்கும்.

எஸ்.எஸ்.ஆர்., ராஜாங்கம் இருவரையும் காணவில்லையே என்ற கவலை! பரபரப்பு! அத்துடன் என்னை அந்தச் சாலையில் இங்குமங்குமாக இழுத்துக்கொண்டு கலகக்காரர்கள் நடக்கிறார்கள்!

இரவு எட்டு அல்லது ஒன்பது மணியிலிருந்து இரவு இரண்டு மணி வரையில் நான் அந்த நீண்டசாலையில் இங்குமங்கும் இழுத்துச் செல்லப்படுகிறேன். என்னை பாதுகாக்க அன்பிலும், மதுரை முத்துவும், மன்னையும், மாயூரம் காந்தியும் என்னருகே வந்து கொண்டேயிருக்கிறார்கள். அவர்கள் கண்களில் நெருப்பு! அதேசமயம் நீர்த்திவலைகள்! கலகக்காரர்கள் என்னிரு கரங்களையும் பற்றி இழுத்தவாறு, இங்குமங்கும் ஓய்வின்றி அலைக்கழித்து நடந்து கொண்டேயிருக்கிறார்கள்.

எங்களுக்கு நடைபெறும் அந்தத் தண்டனை பவானி வண்டிப்பெரியார் போலீஸ் ஸ்டேஷன் வழியாகவும் அடிக்கடி போகிறது, வருகிறது! போலீசார் பார்த்து ரசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு கட்டத்தில் நண்பர் மதுரை முத்துவுக்குப் பொறுக்க முடியவில்லை! போலீஸ் ஸ்டேஷன் அருகே என்னைக் கலகக்காரர்கள் இழுத்துக் கொண்டு போனபோது, முத்து, அந்தப் போலீஸ்காரர்களைப் பார்த்து, அடப்பாவிகளே! இந்தக் கொடுமையை வேடிக்கை பார்க்கிறீர்களே! நியாயந்தானா? என்று கதறியே விட்டார்.

அன்பில், ஒரு குச்சியை எடுத்து வீசியே பத்து பேரை வீழ்த்துவார்! மன்னையும் சிலம்பம் தெரிந்தவர். அப்போது மலைபோல் உடல் படைத்தவர்! மாயூரம் காந்தியோ மதயானைக்கு ஒப்பானவர்! மதுரை முத்து உடலெங்கும் விழுப்புண் பெற்றவர்! அந்த நால்வரும் அங்கு சற்று நிதானம் காட்டிய காரணத்தால்தான், அந்த இடம் கொலைக்களம் ஆகாமல் இருந்தது! முத்துவின் முறையீட்டைப் போலீசார் காதில் போட்டுக்கொள்ளாமலே கேலியாகச் சிரித்தனர்! கலகக்காரக் கூட்டம், அடிக்கடி

மதுக்கடைகளுக்குள் நுழைந்து வயிற்றை நிரப்பிக் கொண்டு போதையில் தள்ளாடத் தொடங்கியது.

திடீரென்று ஆ! அய்யோ! என்ற அலறல்! கொலை! கொலை! என்ற கூச்சல்! போதை தலைக்கேறி கலகக்காரர்களே ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டனர்! வெட்டிக் கொண்டனர்! அந்தச் சமயத்தைப் பயன்படுத்திக்கொண்டு நாங்கள் காரில் ஏறிப் பறந்து விட்டோம்!

இவ்வாறு தோளோடு தோள் சேர்த்து உழைத்தோமே! அதற்கு உறுதுணையாக இருந்த மதுரையாரும், அன்பிலாரும், மன்னையாரும் இன்றில்லையே! என் செய்வது!

பெரியார், அண்ணா வழியில் அவர்கள் ஆற்றிய தொண்டினைத் தொடர்ந்து இந்த இயக்கத்தைக் கட்டிக் காப்பதுதானே அவர்களுக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.

அன்புள்ள,

மு. க.

20-10-1993

2057. நோய்நாடி - நோய்முதல் நாடி...!

உடன்பிறப்பே,

இரண்டு நாட்களுக்கு முன்பு கரிகாலன் பதில் வாயிலாகக் கருத்தறிவித்தபோது, காஷ்மீரில் அஸ்ரத்பால் மசூதி பிரச்சினையில் மத்திய அரசும், காஷ்மீர் மாநில ஆளுநர் அரசும் கடைப்பிடிக்கும், அணுகுமுறையைப் பொறுத்ததாக விளைவுகள் இருக்குமென்றும், நபிகள் நாயகப் பெருமனாரின் முடி வைக்கப்பட்டுள்ளதாகவும் எனவே அது, இஸ்லாமியரின் புனித இடமாகவும் கருதப்படுவதாகவும் - மத்திய அரசு ஏற்கெனவே பஞ்சாப்பில் பொற்கோவிலில் கையாண்ட அணுகுமுறையின் காரணமாக ஏற்பட்ட அவலங்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டும், அந்த அனுபவத்தைத் துணையாகக் கொண்டும் அஸ்ரத்பால் பிரச்சினையில் ஈடுபடவேண்டுமெனச் சுட்டிக்காட்டியிருந்தேன்.

23-ந் தேதியன்று பிரதமர் நரசிம்மராவ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவின் அவசரக் கூட்டத்தில், காஷ்மீரில் எழுந்துள்ள இந்தக் கடுமையான பிரச்சினை குறித்துக் கவலை தெரிவித்தது மட்டுமல்லாமல், நிலைமையைச் சமாளிக்க மத்திய மாநில நிர்வாகங்கள் இதுவரையில் காட்டி வந்துள்ள பொறுமையையும், நிதானத்தையும் பாராட்டியுள்ளது. அந்த மசூதியை எவ்விதச் சேதமுமின்றி எப்படிப் பாதுகாப்பது என்பதுதான் தற்போதுள்ள சிக்கலான கேள்வியாக இருக்கிறதென்றும், மிகமிகப் பொறுமையுடன் செயல்பட வேண்டிய நேரமென்றும் அந்தக்கூட்டத்தில் கலந்து கொண்ட கட்சிகளின் தலைவர்கள் கூறியிருக்கிறார்கள்.

தீவிரவாதிகள், வெளிநாடுகளில் உள்ள தங்களது எஜமானர்களின் வழிகாட்டுதல்களுக்கேற்ப, இந்திய நாட்டுக்குள் கண்களை மூடிக்கொண்டு வன்முறைச் செயல்களில் இறங்குகிறார்கள் என்று உள்துறை அமைச்சர் சவான் அவர்களும் குறிப்பிட்டுக் கூறியுள்ளார்.

இதை நான் எழுதும்போது காஷ்மீர் - ஸ்ரீநகரில் உள்ள நிலைமை என்ன? அஸ்ரத்பால் மசூதிக்குள் காஷ்மீர் தீவிரவாதிகள்! ஆயுதம் தாங்கியவர்களாகத் தங்கள் பாதுகாப்புக்காக அந்த மசூதிக்குள் தங்கியுள்ளனர் என்பது செய்தி! மசூதிக்குள் வழிபாட்டுக்காகச் சென்ற ஆடவர், பெண்டிர் இருபாலாரையும், சுமார் முன்னூறு பேர் வரையில், அந்தத்தீவிரவாதிகள் தங்கள் பிடியில் மசூதிக்குள் வைத்துள்ளனர்! மசூதியைச் சுற்றி இராணுவம்!

ஒரு தீப்பொறி பறந்தாலும் பேராபத்து! அப்படிப் பறக்கக்கூடாது என்பதற்காகத்தான் பதற்றமின்றிச் செயல்படவேண்டுமென எச்சரிக்கை! விரும்பத்தகாத விளைவு எது நேரினும், அது காஷ்மீர் எல்லையுடன் நிற்காமல் எங்கணும் பரவிட வாய்ப்பு நிறைய உண்டு!

இப்போது ஏற்பட்டுள்ள இந்த நிலைமை, பாகிஸ்தானின் சதி என்று மத்திய அரசு கூறியுள்ளது. இது ஒன்றும் இரகசியமல்ல. சிம்லா ஒப்பந்தத்தை மீறிக்கொண்டு, காஷ்மீர் பிரச்சினையில் பாகிஸ்தான் நெடுங்காலமாகக் கவனம் செலுத்தி, தீவிரவாதிகளுக்கு ஆயுதங்களையும் வழங்கி, நெருப்பு அணையாமல் ஊதிவிட்டு கொண்டிருப்பதை அறியாதார் இல்லை.

எனினும் இந்தப் பிரச்சினையில், எத்துணை ராஜதந்திரப் போக்குடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதை மத்திய அரசு ஒதுக்கித் தள்ளிவிட்டு - இராணுவ பலத்தைக் கொண்டே அடக்கிவிட முடியுமென்றும், காஷ்மீரில் தேர்தலேகூட நடத்துகிற அளவுக்கு நிலைமை சீர்பட்டுவிட்டதைப் போலவும் எண்ணிச் செயல்பட்டுக் கொண்டு இருந்ததை, நாம் கண்டிக்காமல் இருக்க முடியாது.

கடந்த ஓராண்டுக்கு முன்பு தேசிய முன்னணியும், இடதுசாரிக் கட்சிகளும், இ. காங்கிரஸ், காஷ்மீரின் தேசிய மாநாடு ஆகிய அனைத்துக்கட்சிகளும் கலந்துபேசி, சில யோசனைகளை பிரதமர் நரசிம்மராவ் அவர்களிடம் அளித்தன.

அவற்றில் முக்கியமாக, காஷ்மீரைப் பாகிஸ்தானுடன் இணைக்க வேண்டுமென்று போராடுகிற தீவிரவாதிகளை விட்டுவிட்டு, காஷ்மீர் மக்களின் தனித்தன்மை பாதுகாக்கப்பட வேண்டுமென்று குரல் எழுப்புகிற ஜே.கே.எல்.எப். குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் - அந்தப் பேச்சுவார்த்தை காஷ்மீருக்கு அதிகமான சுயாட்சி வழங்குதல் என்ற அடிப்படையில்

தொடங்கப்பட வேண்டும் - என்ற யோசனைகள் இடம் பெற்றிருந்தன.

ஏற்கெனவே, இந்தியாவில் வேறெந்த மாநிலத்துக்கும் வழங்கப்படாத சலுகையாக, அரசியல் சாசனத்தில் 370-ன் படி சில உரிமைகள் காஷ்மீர் மாநிலத்துக்கு வழங்கப் பெற்றுள்ளன. அந்த மக்களின் பொருளாதார, கலாச்சார வாழ்வுக்கு பாதுகாப்பு உத்திரவாதமும் முன்னரே அளிக்கப்பட்டுள்ளது.

ஷேக் அப்துல்லாவுக்குப் பிறகு, பருக் அப்துல்லா, காங்கிரசுக்கு எதிராக குமரிமுனை முதல் காஷ்மீர் முகடுவரையில் குரல் எழுப்பினார் என்பதற்காக - அவரது அமைச்சரவைக்குள் குழப்பம் உருவாக்கி, அவரது ஆட்சியைக் கலைத்து, அவரது உறவினரான ஷாவுக்கு ஆட்சிப் பொறுப்பை அளித்து - அதிலே விளைந்த குழப்பம் முற்றி, பின்னர் பருக் அப்துல்லாவே மத்திய காங்கிரஸ் ஆட்சியிடம் அடிபணிந்து போகும் நிலை உருவாகி - அதன் பிறகு தீவிரவாதிகள் கை ஓங்கக் கூடிய காலகட்டம் பிறந்ததை காஷ்மீர் வரலாற்றைக் கவனமுடன் நோக்குபவர்கள் மறந்துவிட முடியாது.

நடந்தவைகளைக் கூறி குற்றம் சாட்டுகிற அதே நேரத்தில், இனிநடப்பவை நல்லவைகளாக அமைவதற்கு வழிவகை காண வேண்டும் என்பதில் யாரும் அக்கறையற்று இருக்க முடியாது.

இந்திய நாட்டில் அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் தலைவிரித்தாடத் தொடங்கி விட்ட தீவிரவாதத்தை இராணுவ வலிமை கொண்டு மட்டும் அடக்கிவிடுவது என்பது, தற்காலிகத் தலைவலி நீக்கும் மருந்தாகத்தான் இருக்க முடியும் - தலைவலிக்குக் காரணமான காய்ச்சல் நோய்க்கு மூலமெது எனக் கண்டுபிடித்து, அதற்கேற்ற மருந்து அளித்து, அரசியல் தீர்வு கண்டு, அமைதியை நிலைநாட்டிட அரசினர் முன் வரவேண்டுமென்ற கருத்தை அலட்சியப் படுத்துவதோ, முடியுமா? எனப் பெருமூச்சு விடுவதோ நல்லதல்ல!

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்." குறள்

அன்புள்ள,

மு. க.

25-10-1993

2058. இருப்பது ஓர் உயிர்தான்; அது போவதும் ஒருமுறைதான்!

உடன்பிறப்பே,

இருப்பது ஒரே உயிர்! அது போகப் போவதும் ஒரே ஒரு முறை! அது இந்த நல்ல காரியத்துக்காகப் போகட்டுமே! இந்த வாசகம் நமது அண்ணாவின் மணிவாசகம். எப்போது உதிர்த்த வாசகம் என்று நினைவிருக்கிறதா? நோயின் தாக்குதலால் அண்ணா மிகவும் நலிவுற்று இருந்த நேரம்; இந்த மண்ணுக்குத் தமிழ்நாடு எனக்கழக அரசு பெயர் சூட்டியதைக் கொண்டாடுவதற்கான விழா, இன்றைய கலைவாணர் அரங்கம் அன்றைய பாலர் அரங்கில் நடைபெற்றபோது, நிகழ்ச்சிக்கு முதலமைச்சராக இருந்த அண்ணாவை அழைக்க நான் அவரது நுங்கம்பாக்கம் வீட்டுக்குச் சென்றிருந்தேன். அவரது உடல் நிலையில் நிகழ்ச்சிக்குச் செல்வது நல்லதல்ல என டாக்டர் ரத்னவேல் சுப்பிரமணியம் எச்சரித்தார். நான் தயங்கினேன். இராணி அண்ணியார் அண்ணாவைத் தடுத்ததுடன் என்னிடமும் அவரைச் சமாதானப்படுத்திடுமாறு பணித்தார். எங்கள் முறையீடுகளைக் காதில் போட்டுக் கொள்ளாமலே அண்ணா என்னையும் அழைத்துக் கொண்டு விழா மண்டபத்துக்கு விரைந்தார்.

அங்கே உரையாற்றும் போதுதான் சொன்னார் :-

நாம் பிறந்து வளர்ந்த இந்த மண்ணுக்குத் தமிழ் நாடு எனப்பெயர் சூட்டியுள்ளோமே அதனைக் கொண்டாடி மகிழும் விழாவுக்குச் செல்ல வேண்டாமென என் உடல்நிலை கருதி டாக்டர்கள் எச்சரித்தனர். ஆனால் நான் இந்த விழாவுக்கு வராமல் எந்த விழாவுக்கு வருவது? இருப்பது ஒரே உயிர்! அது போகப்போவதும் ஒரே ஒரு முறை! அது இந்த நல்ல காரியத்துக்காகப் போகட்டுமே; என்று வந்துவிட்டேன்.

அண்ணாவின் குரல் அவரது உடல் நலிவையும் மீறி கம்பீரமாக ஒலித்தபோது, அந்த மண்டபமே கண்ணீரில் மிதந்தது. மேடையில்

இருந்த என் போன்றோர் நெஞ்சு அடைத்துக் கொண்டது. விழா முடிந்து வீடு திரும்பியபோது விம்மி விம்மி அழுத எங்களைத் தட்டிக் கொடுத்து ஆறுதல் சொன்னார் அண்ணா!

அவரில்லை இப்போது! இருபத்தி நான்கு ஆண்டுகளுக்கு முன்பு அவர் முழங்கிய அந்த உருக்க மிகு வாசகம் - உறுதி நிறைந்த வாசகம் - உணர்ச்சி பொங்கும் அந்த வாசகம் - என் உள்ளத்தில் ஒலிக்காத நாளில்லை!

அதுவும் சமீப காலமாக அந்த வாசகம் என் இதயத்தில் எப்போதுமே ஒலி எழுப்பிக் கொண்டே இருக்கிறது!

ஏதோ மிரட்டல் - யாருக்காகவோ; யாராலோ என்று அரசு அறிவித்துள்ள மடல் வாயிலாக வந்துள்ள எச்சரிக்கை; எத்துணை பலமான பாதுகாப்புக்களையும் தகர்த்துத் தனது பணியை முடித்து, ஊர்ஜிதமாகாததை; ஊர்ஜிதமானதாகவே ஆக்கிவிடக்கூடும்.

அக்டோபர் 2-ல் அரசு அனுப்பிய தகவலைத் தொடர்ந்து நவம்பர் 2-ல் ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணை நடைபெறுகிற நீதிமன்றத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே சிவராசனும் சீனிவாசய்யாவும், சின்னசாந்தனும் சந்தித்துப் பேசியபோது கழகத்தின் தலைமை மாற்றம் குறித்து நடைபெற்ற விவாதம் வெளிச்சத்திற்கு வந்துள்ளதல்லவா; இவற்றையெல்லாம் படிக்கும் போது இப்படியொரு முறையைக் கடைப்பிடித்து தலைமையைத் தங்களுக்குச் சாதகமாக மாற்றிக் கொள்வார்களோ என்ற அய்யமோ அச்சமோ கூட என்னை அலைக்கழிக்க வில்லை. அப்படி நடந்தால் நான் அதற்காகக் கவலைப்படப் போவதுமில்லை. இச் செய்திகளைப் படித்து விட்டு என்னிடம் தொலை பேசியில் தொடர்பு கொண்டு நா தழுதழுக்கப் பேசிய என் அன்புத் தம்பியாம் என்னை ஆசானாக வரித்துக் கொண்ட கவிஞர் ஒருவரிடமும், என் அன்பு நண்பராம் வார இதழ் ஆசிரியர் ஒருவரிடமும் அந்த முடிவு எனக்கு ஏற்படின், நீங்கள் எழுதும் இரங்கல் கவிதையும், கட்டுரையும் என் வாயிலாகத் தமிழுக்குக் கிடைக்குமல்லவா! என்று தான் மகிழ்ச்சியுடன் கூறினேன்.

ஆனால் ஒரு வேதனை எனக்கு - தாய்ப்பாலே தமிழ்ப்பாலாகக் குடித்து, பச்சிளம் பருவத்திலேயே தமிழ்க்கொடி ஏந்திப் போர்க்களம் புகுந்து, இந்த எழுபது ஆண்டுகளில் ஐம்பத்தி ஐந்து ஆண்டுகள் தமிழ்ப் பெருங்குடும்பத்தில் அண்ணனாக, தம்பியாக,

பிள்ளையாக, பேரனாகப் பழகி உறவு கொண்டாடும் உரிமை பெற்று - பெரியார் கரம் பிடித்து வளர்ந்து, பேரறிஞர் அண்ணாவின் நிழலாகத் தொடர்ந்து, உன் போன்ற உடன்பிறப்புகளுடன் இணைந்து, உலகில் எங்கு வாழும் தமிழராயினும் அவர்தம் அல்லல் துடைக்க உரத்த குரல் எழுப்பிடும் என்னை; தமிழின உணர்வற்றவன் என்று என்னை குற்றம் சாட்டி, மாற்று ஏற்பாடு செய்திட என் மீது தூசு தூவப்படுகிறதே என்பதைத்தான் என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. உலகின் சில மூலைகளில் இருந்து தீவிரவாத முலாம்பூசிக் கொண்டு வெளி வரும் ஏடுகளில்; அவைகள் இஷ்டத்துக்கு திரிப்பு வேலைகள் நடத்தப்படுகின்றன! திராவிட நாடு பிரிவினைக் கொள்கையை அண்ணா காலத்திலேயே கைவிட்டதைக் கூட, கருணாநிதிதான் கை விட்டான் என்று என்மீது குற்றம் சாட்டி; என் தலைமையையோ தலையையோ அகற்றிட பீடிகை போட்டு தொடர்ந்து சேறு வாரி வீசப்படுகிறது! யார் மீது தெரிகிறதா?

ஈழத்தில் தமிழ் மக்களைக் கொன்று குவித்த இந்திய ராணுவத்தை வரவேற்க சென்னைத் துறைமுகம் செல்ல மாட்டேன் என்று மறுத்த இந்தக் கருணாநிதி மீது! இலட்சக்கணக்கில் வந்த ஈழத்தமிழ் அகதிகளை தமிழகத்தில் வசதியுடனும், அவர்களது தேவைகளைக் கவனித்தும் வாழ வைக்கும் வண்ணம் ஆட்சி நடத்திய என் மீது!

ஈழத்தமிழர் நலன்காக்கக்கோரி ஒரு கோடித் தமிழர்களின் கை எழுத்துக்களைப் பெற்று ஐ.நா. மன்றத்துக்கு அனுப்பி வைத்த என் மீது! ஈழத் தமிழர்களுக்காக ஒரு லட்சம் உடன்பிறப்புகளுடன் பலமுறை சிறை சென்ற என் மீது!

ஈழத்தமிழர் துயர் துடைக்க மத்திய மாநில அரசுகள் முன்வர வேண்டுமென வலியுறுத்திட பேராசிரியருடன் இணைந்து சட்டமன்ற உறுப்பினர் பதவியைத் தூக்கி எறிந்தேனே; அதை மறந்தவர்கள்தான் என்மீது சேறு வீசுகிறார்கள்; தமிழின உணர்வு அற்றவன் என்று!

எதை வேண்டுமாயினும் வீசட்டும்; எதையும் தாங்கும் இந்த இதயம் அதையும் தாங்காமலா போய்விடும்! இருப்பது ஒரே உயிர்! அதுபோகப் போவதும் ஒரேஒருமுறை! அது இந்த நல்ல காரியத்துக்காகப் போகட்டும்! என்ற அண்ணாவின் வாசகத்தை உச்சரித்தபடிதான் இந்த உயிர் அடங்கும்! அந்த


நல்ல காரியம்; என்னைவிட வீரமும் தீரமும் உள்ள தலைமை - யாருக்கோ கிடைக்கும் காரியமாக இருந்தால் - எனக்கு அதில் ஓர் ஆனந்தம்தானே!

உடன்பிறப்பே, உன் பாசம் பொழியும் விழிகளையும், நீ பேசும் இனிய மொழிகளையும் இன்னும் எத்தனை நாள் நான் செவியாரக் கேட்டு சிந்தையார மகிழ்வேனோ, தெரியாது! மாலையணிவிக்கப்பட்ட படமாக நான் எப்போது உன் வீட்டு சுவரில் தொங்குவேனோ, அதுவும் தெரியாது! ஆனால் ஒன்று மட்டும் தெரியும் உலகெங்கணுமுள்ள தமிழர்களுக்காக ஓடியாடி உழைத்துக் கொண்டும், அடக்குமுறைகளை ஏற்றுக்கொண்டும், அவர்களுக்காக ஆட்சிக் கட்டிலையே இழந்தும்வர அந்தத் தமிழர்களை மறவாத ஒரு தமிழ்த்தொண்டன் இங்கே ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார் என்று என் கல்லறையில் எழுதிவைக்கும் நன்றியுள்ள ஓர் உடன்பிறப்பாக நீ இருப்பாய் என்பது மட்டும் இப்போதே எனக்குத் தெரியும்!

அன்புள்ள,

மு. க.

04-11-1993



42231
894.8116
தமிழ-24

2059. நவம்பர் 9 -
நம்பிக்கையளிக்கும் தீர்மானம்!

உடன்பிறப்பே,

பழக்கிப் பயன்படுத்தி நாட்டுக்கேற்ற நற்செயல்கள் இயற்றுவதற்காக யானை பிடிக்கக் காட்டுக்குச் செல்லும் குழுவினர்; அங்கே காற்றசைவில் இலைகளால் உருவாக்கப்படும் சலசலப்பு சப்தத்தில் தங்கள் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருப்பாரோ? இருக்க மாட்டார்!

கழகத்தினர்; குறிப்பாகக் கழகச் சொற்பொழிவாளர்கள் அப்படிக் கவனம் செலுத்துகின்றனரே என்ற கவலை எனக்கு இப்போது! இதனை நான் கோவைப் பொதுக்கூட்டத்தில் தொடங்கி தொடர்ந்து எல்லா நிகழ்ச்சிகளிலும் கூறி வருகிறேன். எந்தப் பயணமாயினும்; வழியில் திசை திருப்பும் நிகழ்வுகள் வருவதும் போவதும் வாடிக்கை! அதற்காகப் பயணம் தடைப்படலாமா?

பாதத்தில் நெருஞ்சில் முள் தைத்திடக் கூடும். உடனே எடுத்துவைத்துக் கொண்டு என் காலிலா குத்தினாய்? என்ன திமிர் உனக்கு? உன்னைத் துண்டு துண்டாக வெட்டித் தூளாக்குகிறேன் பார்! என்று வீர உரை ஆற்றிக் கொண்டிருக்கவும் மாட்டார்கள். அல்லது, தொண்டையைக் கனைத்துக்கொண்டு சுருதி கூட்டி, சில்லென்று பூத்த சிறு நெருஞ்சிக் காட்டினிலே என்று பாடிக் கொண்டும் இருக்க மாட்டார்கள். தொடர்ந்து வருவோர் காலிலும் அது குத்தாமல் இருக்கட்டுமென்பதற்காக, தொலைவில் வீசிவிட்டுப் பயணத்தில் ஈடுபடுவார்கள்.

நமது பயணக் குறிக்கோளினை மறந்து விடலாமா? நாட்டில் எத்தனையோ பிரச்சினைகள்! நலிவுற்றோர் தேவைகளை உணர்ந்து பார்த்தோ - அல்லது அவர்களது உரிமைக் கோரிக்கைகளுக்குச் செவி சாய்த்தோ - ஆற்ற வேண்டிய

காரியங்களை ஆற்ற முன் வராத மத்திய - மாநில அரசுகளின் அலட்சியப் போக்கு களையப்பட நமது குரல் ஒலித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

நிர்வாகம், நிர்மூலம் தமிழகத்தில் எனும் நிலை மாற்றிட மக்களை அணிசேர்க்கும் பணியில் தடங்கலோ தயக்கமோ ஏற்படவிடக்கூடாது! புதிய பொருளாதாரக் கொள்கையால்; உழைப்போர் உரிமைகள் பறிபோகும் கொடுமையைத் தத்துவ ரீதியாக மத்திய அரசு செய்கிறதென்றால் - அந்த உரிமைக்குக் குரல் எழுப்பும் தொழிலாளர்களைப் பழி வாங்கியே தீர்வேன் என்று மாநில அரசு தடியெடுத்துக் கிளம்புகிறது!

அனைத்துப் பிரிவு மக்களும் அதிருப்தியின் வடிவினராய் அவதியுறும் சூழல் - அதை மாற்றிடவும்; இருள்போக்க நம்பிக்கை விளக்கு ஏற்றிடவும் கடமையாற்ற வேண்டிய பொறுப்பு நமது கழகத்திற்கு உண்டு என்பதை மறந்துவிட்டால்; பிறகு காலம் நம்மை சபிக்கும்!

இதோ, திராவிட இயக்கத்தின் தலையாய கொள்கைகளில் ஒன்று, இன்றைய தினம் ஓட்டைடப்படகாக ஆகிவிடக் கூடுமோ என்ற அச்சம் நம்மை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது.

ஆம்; நீதிக்கட்சி ஆட்சிக் காலத்தில் விதையிட்டு, முறையிட்ட வகுப்புவாரி உரிமை - அதனை நிலை நிறுத்த வகுக்கப் பெற்ற இடஒதுக்கீடு - பேராபத்துப் புயலில் சிக்கித் தத்தளிக்கிறது!

அதனைக் காப்பாற்றிக் கரை சேர்க்கும் முயற்சிக்காக இத்திங்கள் 9 - ஆம் நாள் தமிழக சட்டப் பேரவை கூடுகிறது என்ற செய்தி ஒரு தேன்துளி என்பதில் சந்தேகமில்லை. வரவேற்கத் தக்க முயற்சி.

வரவேற்றிடும்போது, வரலாற்றுக் குறிப்புகளை நினைவில் நிறுத்திக் கொள்வது அவசியமான ஒன்று!

நீதிக்கட்சி காலந்தொட்டு படிப்படியாக முன்னேறி, பிற்படுத்தப்பட்டோருக்கு கல்வி, வேலைவாய்ப்புகளில் கிடைத்து வந்த இட ஒதுக்கீட்டுக்கு 1950 ஆம் ஆண்டு வாக்கில் ஒரு சோதனை, உயர்சாதியினர் உச்சநீதி மன்றம் வரையில் சென்று

வெற்றி பெற்றனர்! உடனடியாக பெரியாரும், அண்ணாவும், ஏன்; காமராஜரும் அவரது தளகர்த்தர்களும் கூட சமூகநீதியைக் காத்திடத் தட்டிய போர் முரசம் டெல்லியில் பண்டித நேரு அவர்களின் கவனத்தை ஈர்த்து - தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இடஒதுக்கீடு அன்னியில்; பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு கல்வி அடிப்படையிலும், சமூக அடிப்படையிலும் இடஒதுக்கீடு - என அரசியல் சட்டம் 1951-ல் திருத்தப்பட்டது. அரசியல் சட்டம் முதன் முதலாகத் திருத்தப்பட்டதே இந்த உயிரனை பிரச்சினைக்காகத்தான்!

1969-ல் இடஒதுக்கீடு தமிழகத்தில்; ஆதித்திராவிடர்க்கு 16 சதவிகிதமென்றும் - பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 25 சதவிகித மென்றும் - எஞ்சியுள்ள 59 சதவிகிதம் பொதுப் பட்டியலில் வருபவர்க்கு என்றும் இருந்தது.

அதனை மாற்றியமைத்து, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 31 சதவிகிதமென்றும் - ஆதித் திராவிடர்க்கு 18 சதவிகிதமென்றும் - எஞ்சியுள்ள 51 சதவிகிதம் பொதுப்பட்டியல் என்றும் ஆணைபிறப்பிக்கப்பட்டது. பிற்படுத்தப்பட்டோருக்கான தனி இலாகா - தனி செயலர் - தனி அமைச்சர் - இவையனைத்தும் அப்போது தான்!

1979-ல் எம்.ஜி.ஆர். ஆட்சியில் ஒரு புது ஆணை - பூவுக்குள் நாகமெனப் புறப்பட்டது! அதுதான் பொருளாதார அடிப்படையில் இடஒதுக்கீடு என்ற மறைமுகத் திட்டம்! அந்தத் திட்டம் பெரியாரும், அண்ணாவும், காமராஜரும் ஆற்றிய பணிக்கு அதிர்வேட்டாகி விடும் என்றும், நீதிக்கட்சி காலத்தில் தோன்றிய சமூகநீதிக்கு சவக்குழி தோண்டிவிடு மென்றும் போர்ப்பிரகடனம் செய்து, தி.மு.கழகமும் - திராவிடர் கழகமும் - காங்கிரஸ் இயக்கத்தினரும் - இந்திய கம்யூனிஸ்டு நண்பர்களும் - முஸ்லிம்லீக் தலைவர்களும் - பார்வர்டு பிளாக் கட்சியினரும் ஓரணியில் நின்று முழக்கமிட்டனர். எம்.ஜி.ஆர். அரசு எளிதில் தனது ஆணையைத் திரும்பப் பெறவில்லை.

1980-ல் பாராளுமன்ற தேர்தலில் அ.தி.மு.க. படுதோல்வி அடைந்த பிறகு - தி.க., தி.மு.க., சார்பில் போராட்டங்கள்

அறிவிக்கப்பட்ட பிறகு - சமூகநீதிக்கு எதிரான எம்.ஜி.ஆர். அரசின் இந்த ஆணை திரும்பப்பெறப்பட்டது.

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீடு 31 சதவிகிதம் என உயர்த்தப் பட்டிருந்ததையும் எம்.ஜி.ஆர். அவர்கள் 50 சதவிகிதம் என உயர்த்தினார். பாராட்டினோம். மகிழ்ந்தோம். அதனால் இடஒதுக்கீடு, பிற்படுத்தப்பட்டோர்களுக்கு 50 சதவிகிதம் - ஆதி திராவிடர்களுக்கு 18 சதவிகிதம் - பொதுப்பட்டியல் 32 சதவிகிதம் என அமைந்தது.

மீண்டும் 1989-ல் கழக ஆட்சி அமைந்தது. மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கென தனி இடஒதுக்கீடு கோரி 1987 முதல் பெருங் கிளர்ச்சி நடத்தி அடக்குமுறைகளை ஏற்ற பாட்டாளி மக்கள் கட்சித்தலைவர் டாக்டர் இராமதாஸ் அவர்களை அன்றைய அமைச்சர் தம்பி வீரபாண்டி ஆறுமுகம் மூலமாக அழைத்துப்பேசி; அவருக்கு முழுமையான திருப்தி ஏற்படா விடினும் என்னால் முடிந்த அளவு இப்போது இதுதான் என என் நிலையை விளக்கி, அதனைத் தொடர்ந்து கழக அரசின் ஆணை பின்வருமாறு பிறப்பிக்கப்பட்டு நடைமுறைக்கு வந்தது. அதாவது:- பிற்படுத்தப்பட்டோர்க்கான இடஒதுக்கீடு 30 சதவிகிதம் - மிகவும் பிற்படுத்தப்பட்டோர் முக்கியமாக வன்னியர், சீர்மரபினர், உள்ளிட்ட வேறு சில பிரிவினர் இடஒதுக்கீடு 20 சதவிகிதம் - ஆதிதிராவிடர்க்கு 18 சதவிகிதம் - ஆதிவாசிகளுக்கு 1 சதவிகிதம் - எஞ்சிய 31 சதவிகிதம் பொதுப்பட்டியலுக்கு!

இந்த 69 சதவிகிதம் என்பதற்குத்தான் உச்சநீதிமன்றத்தின் வாயிலாக இப்போது ஒரு தடை! 50 சதவிகிதத்திற்கு மேல் இடஒதுக்கீடு இருத்தலாகாது என்கிறார்கள்!

புதிதாக எந்தப் பயனும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், இப்போது கிடைக்காவிட்டாலும்; ஏற்கெனவே அனுபவித்து வருகிற உரிமைப் பயனையும் பறித்துக்கொள்வதை எப்படிப் பொறுத்துக் கொள்ள முடியும்.

69 சதவிகிதம் என்பது 50 சதவிகிதம் என்று ஆகிவிடுமானால்; அது சமூக அநீதி என்பது மட்டுமல்ல - வாதத்திற்காக எடுத்துக் கொண்டால்; பிற்படுத்தப்பட்டோருக்கான 30 சதவிகிதத்தில்

எவ்வளவு குறைப்பது? எப்படிக் குறைப்பது? 20 சதவிகிதமே போதாது என்று குறைபட்டுக் கொண்டுள்ள மிகவும் பிற்பட்ட மக்களுக்கு இருக்கிற 20லும் எவ்வளவு குறைவது? எப்படிக் குறைப்பது? மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 சதவிகிதம் தனியாக இடஒதுக்கீடு என ஆணைபிறப்பித்த பிறகு அவர்கள் ஏற்கெனவே தொழிற் கல்வியில் பெற்று வந்த இடங்களைவிட ஐந்து மடங்கு ஆறு மடங்கு அதிக இடங்களைப்பெற முடிகிறதே; அதை இழப்பது என்பது அவர்களது கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்கான ஊற்றுக்கண்களை அடைப்பது போலத்தானே! கல்வி நீரோடையிலும், வாழ்க்கை வசதி வாய்ப்பு நீரோடையிலும் மீண்டும் ஆதிக்க முதலைகள் உலாவரத்தானே இந்த குறைப்புகள் வழிவகுக்கும்.

இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் மாநிலத்தில் நடைமுறையில் உள்ள 69 சதவிகித இடஒதுக்கீட்டை உறுதி செய்வதற்காக சட்டப்பேரவை கூடுகிறது என நம்புகின்றேன்.

கல்வி, சமூகம் எனும் அடிப்படையில் இடஒதுக்கீடு என்பதைவிட பொருளாதார அடிப்படைதான் சரியானது என்ற எண்ணமுள்ளவர் முதலமைச்சர் ஜெயலலிதா என்பதை; அவரே 1990ஆம் ஆண்டு வாக்கில் அளித்துள்ள பத்திரிகைப் பேட்டிகளில் உறுதி செய்துள்ளார். அது போலவே மண்டல் கமிஷன் பரிந்துரையை தேசிய முன்னணி அரசு நடைமுறைப்படுத்த முன்வந்த போதும் அதற்கு எதிர்மாறான கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

உள்ளார்ந்த கருத்து அவருக்கு வேறாயினும் - பிற்படுத்தப்பட்ட மக்களின், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின், தாழ்த்தப்பட்ட மக்களின் ஏகோபித்த எரிமலைக் குமுறலுக்கு எதிரே அவரது கருத்தில் பிடிவாதமாக இல்லாமல் - அரசியல் காரணத்துக்காகவாவது இட ஒதுக்கீடு - சமூக நீதி கோரிக்கையை ஆதரிக்கும் நிலை பெற்றிருக்கிறார் என்பது சற்று ஆறுதலான விஷயமே ஆகும்.

1951-ல் இடஒதுக்கீட்டுக்காக சமூகநீதி அடிப்படையில் அரசியல் சட்டம் திருத்தப்பட்டது போல - இப்போது உச்சநீதிமன்றத்தடையினைத் தகர்த்து; சமூகநீதியெனும்

ஒளியை ஒடுக்கப்பட்ட மக்கள்பெற்றிட, அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய அரசை வலியுறுத்தும் தீர்மானமாக இந்தப் பேரவைக் கூட்டத்தில் வடித்தெடுக்கவேண்டும்.

இன்னும் உரிமை வேண்டுமெனப் போரிடுகையில்
இருக்கும் உரிமையையும் இழக்க மாட்டோம்

என்ற எக்காளக்குரலுடன் எல்லா கட்சிகளும் ஓரணியில் நின்று அரசியல் சட்டத் திருத்தப்பட்டு சமூக நீதி நிலைக்கச் செய்திட - தமிழ் மாநிலத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் எதிர்காலம் வெளிச்சம் பெற்றுத்திகழ்ந்திட - போர் முரசு கொட்டும் வேளை நெருங்கி விட்டதாகவே கருத வேண்டும்.

அதற்கேற்ப நவம்பர் 9 சட்டப் பேரவைத் தீர்மானம் அமைதல் வேண்டும். அமைந்திடும் என்ற நம்பிக்கை கொள்வோம்.

அன்புள்ள,

மு. க.

07-11-1993

2060. ஒடுக்கப்பட்ட மக்களின் உயிர்ப் பிரச்சினை!

ஓரணியில் திரளுவோம் வாரீர்!

உடன்பிறப்பே,

இருக்கின்ற உரிமை போதாது. இனியும் உரிமைகள் அதிகரிக்கப்படவேண்டும் என ஒடுக்கப்பட்ட மக்கள் ஓங்கிக் குரல் கொடுத்து, போர்க் கொடியைக் கரங்களில் தாங்கிப் பிடித்துக் களம் புகுந்துள்ள இந்த நேரத்தில் - இந்திய நாடு முழுமையுள்ள பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மண்டல் கமிஷன் பரிந்துரைகளை இதய சுத்தியுடன் நடைமுறைப்படுத்த முன்வர வேண்டுமென வி.பி.சிங் அவர்களும், தமிழகத்தில் நாமும் நம்மைப் போன்ற உணர்வு படைத்த இயக்கங்களும் உறுதியுடன் கோரிக்கை எழுப்பி முரசு கொட்டிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் - இருக்கின்ற உரிமைக்கும் ஆபத்து என்பது போல் இட ஒதுக்கீட்டில் தமிழ் மாநிலத்து மக்களுக்குப் பயன்பட்டுக் கொண்டிருந்த 69 சதவிகிதம் 50 சதவிகிதம் என்று தேய்ந்து, சுருங்கி, எதிர்காலத்தில் அமாவாசை இருட்டாகவே மாறக்கூடிய சமூக அநீதியைக் களைந்திட - உடனடியாக அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்று எழுந்துள்ள வலிமையான முறையீட்டுக்கு, தமிழக சட்டப்பேரவையும் பக்கபலமாக இருக்கிற தென்பதற்கு அடையாளமாக கடந்த 9-ந் தேதி அதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதை; இந்தப் பிரச்சினையை உயிர்மூச்சாகக் கொண்ட தி.மு.கழகம், இதயமார வரவேற்றுள்ளது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் சுட்டிக் காட்டியிருப்பதுபோல இந்தப் பிரச்சினைக்காக, வரும் 16-ந் தேதி நடத்துவதாக அறிவிக்கப்பட்ட அடையாள பூர்வமான முழு அடைப்புப் போராட்டத்தை - அனைத்துக் கட்சித் தலைவர்களை அழைத்துக் கலந்து விவாதித்து அரசு அறிவித்திருக்க வேண்டுமெனினும்; அந்தப் பெருங்குறைபாட்டைக் கூடப்

பொருட்படுத்தாமல் எல்லாக் கட்சிகளுமே 16-ந் தேதி முழு அடைப்புக்கும் வேலை நிறுத்தத்திற்கும் ஒத்துழைப்பு தந்து, இணைந்து நடத்திட முன் வந்துள்ளது; கட்சிகளைக் கடந்து இப்பிரச்சினையில் தங்கள் தங்களுக்குள்ள உணர்வையும், உயரிய பெருந்தன்மையையும் வெளிபடுத்தக் கூடிய நிகழ்வாகும்.

சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது, நடைபெற்ற விவாதத்தில் சரித்திர உண்மைகளை மறைக்கக்கூடிய சில செய்திகள் இடம்பெற்றிருப்பதை சுட்டிக்காட்ட வேண்டியது மிகமிக அவசியம். இல்லாவிட்டால் எதிர்காலத்தில் தவறான தகவல்களின் தொகுப்பாக இந்த இடஒதுக்கீட்டு வரலாறு திசை திருப்பம் பெற்று விடக்கூடும். எனவே சில விளக்கங்களை அளிக்க வேண்டியுள்ளது.

இடஒதுக்கீட்டுப் பயன் முழுமையாகக் கிடைத்திட அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி சட்டப்பேரவைக் கழக உறுப்பினர் தம்பி. பரிதி இளம்வழுதி பேசும்போது சில குறுக்கீடுகள்; ஏடுகளில் நான் படித்தவற்றைத்தான் குறிப்பிடுகிறேன்.

மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கழக ஆட்சியில் தீர்மானம் நிறைவேற்றி, மத்தியில் இருந்த வி.பி.சிங் ஆட்சிக்கு அனுப்பினோம். மண்டல் கமிஷன் பரிந்துரையை நிறைவேற்றி நடைமுறைப்படுத்த வி.பி. சிங் அவர்கள் ஆணைபிறப்பித்தார்.

- என்று இளம்வழுதி சொன்னதுதான் தாமதம்; உடனே அமைச்சர் எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் குறுக்கிட்டு, தி.மு.க. அரசும் தேசிய முன்னணி அரசும்தான் மண்டல் கமிஷன் அறிக்கையை அமல்படுத்த முன்வந்ததாகக் கூறுவது தவறான கருத்து! மண்டல் கமிஷன் அறிக்கையை அஞ்சு சதவீதம்கூட வி.பி.சிங் அமல் செய்யவில்லை. ஆனால் வி.பி. சிங் செய்ததாக கருணாநிதி கூறுவது நாட்டு மக்களிடம் தவறான கருத்தைப் பரப்புவதாகும் என்று பதில் அளித்திருக்கிறார்.

உடன் பிறப்பே, மண்டல் கமிஷன் பரிந்துரை அறிக்கை 1980ஆம் ஆண்டிலேயே பிரதமர் இந்திராகாந்தியிடம் அளிக்கப்பட்டும்கூட; ராஜீவ் காலத்திலும் கிடப்பிலே போடப்பட்டிருந்த அந்த அறிக்கையை 1990 ஆம் ஆண்டு

நடைமுறைப்படுத்திட அறிவித்தவர் வி.பி.சிங் என்பதும், அதன் காரணமாக வடபுலத்தில் பெருங்கிளர்ச்சி தூண்டிவிடப்பட்டது என்பதும், அதன் தொடர்ச்சியாக வி.பி.சிங் அவர்களின் ஆட்சியைக் கவிழ்த்தனர் என்பதும், ஆட்சி இழந்த அவரை தமிழகத்தில் ஆட்சியிலிருந்த தி.மு.க. வரவேற்றுப் பாராட்டியது என்பதும் நாடறிந்த உண்மைகளாக இருக்கும்போது எப்படித்தான் எஸ்.டி.எஸ். அவர்கள் மறைக்கத் துணிந்தாரோ புரிந்து கொள்ள முடியவில்லை.

இந்த விவாதத்தில் தம்பி இளம் வழுதி பேசிய மற்றொரு கருத்தையும் நாவலர் அவர்களும், வேறு சில அமைச்சர்களும் மறுத்துப் பேசியுள்ளனர். இதுவும் எனக்கு வியப்பை அளிப்பதோடு, இவர்கள் விருப்பத்துக்கு ஏற்ப வரலாற்றை மாற்றுகிறார்களே என்ற வேதனையையும் அளிக்கிறது.

1978-ல் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கு எதிரான வகையில் இடஒதுக்கீட்டில் ஒன்பதாயிரம் ரூபாய் உச்சவரம்பு என ஆணைபிறப்பித்து, 1980-ல் பாராளுமன்றதேர்தலில் படுதோல்வி அடைந்து, பின்னர் பெருங்கிளர்ச்சிகளுக்கிடையே அந்த ஆணையைத் திரும்பப் பெற்றுக்கொண்டதை பரிதி இளம் வழுதி நினைவுபடுத்தியிருக்கிறார்.

ஆனால் அமைச்சர்களும் குறுக்கிட்டு பரிதியின் பேச்சை மறுத்தும், திசைதிருப்பும் முறையில் சமாளித்தும், ஏதோ கழக உறுப்பினர் உண்மைக்கு மாறான தகவலை அவையில் வெளியிட்டு விட்டதைப்போலவும் பேசியுள்ளனர்.

இதில் உண்மை வரலாறுதான் என்ன? 1977 ஆம் ஆண்டுத் தேர்தலில் வெற்றி பெற்று எம்.ஜி.ஆர். 78-ல் பிற்படுத்தப்பட்டோரின் இடஒதுக்கீட்டிற்கு 9 ஆயிரம் ரூபாய் வருமான வரம்பு விதித்து ஆணை பிறப்பித்ததின் மூலம் பெரும்கேடு விளைவித்தார்! அப்போது தி.மு.கழகம், திராவிடர் கழகம், இந்திரா காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்டு கட்சி, முஸ்லிம்லீக், பார்வார்டு பிளாக் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் 9 ஆயிரம் ரூபாய் வருமான வரம்பு ஆணையை எதிர்த்து கண்டன முழக்கமிட்டன! திராவிடர் கழகம் அந்த ஆணையின் நகலை எரித்து - கோட்டைக்கு மூட்டைமூட்டையாய் சாம்பலை

அனுப்பி வைத்தது. இன்று பரிதிக்கு மறுப்புத் தெரிவிக்கும் இதே நாவலர்தான் அன்று 9 ஆயிரம் ரூபாய் ஆணையை சிலாகித்துப் பேசினார்; எதிர்த்தவரை எள்ளி நகையாடினார்; கோட்டையில் உள்ள குரோட்டன்ஸ் செடிகளுக்கு தி.க.வினர் அனுப்பிய சாம்பல்களை எருவாகப்போடுவோம் என்று ஏளனமாகப் பேசினார்!

1980-ம் வருடம் ஜனவரி மாதம் 3, 6 தேதிகளில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. 8-ந் தேதியன்று பெரும்பாலான முடிவுகள் தெரிந்து விட்டன! அந்தத் தேர்தலில் எம்.ஜி.ஆர். கட்சி படுதோல்வி அடைந்தது; எம்.ஜி.ஆரின் கூட்டணியும் படுதோல்வியையே தழுவியது. புதுவை உள்ளிட்ட 40 நாடாளுமன்றத் தொகுதிகளில் சிவகாசி, கோபிச்செட்டிப் பாளையம் ஆகிய இரு தொகுதிகளில் மட்டுமே அ.தி.மு.க. வெற்றி பெற்றது. அதே சமயம் நடைபெற்ற புதுவை சட்டமன்றத் தேர்தலில் - ஒரு இடத்தில்கூட எம்.ஜி.ஆர். கட்சி வெற்றி பெறவில்லை!

தேர்தல் முடிவுகள் வெளிவந்த பின்னர் - 19.1.80 அன்று தி.மு.கழகத்தின் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோரின் நலன்களுக்கு எதிரான 9 ஆயிரம் ரூபாய் வருமான வரம்பு ஆணையை எம்.ஜி.ஆர். அரசு உடனடியாக வாபஸ் வாங்க வேண்டும்; இல்லாவிடில் தி.மு.கழகம் அதனை எதிர்த்து மும்முனைப் போராட்டம் நடத்தும்! பேரணிகள் நடத்தி அரசு அதிகாரிகளிடம் மனுக்கொடுத்தல்; முதலமைச்சருக்கு அவர் செல்லுமிடங்களில் எல்லாம் கறுப்புக்கொடி காட்டுதல் - அரசாங்க அலுவலகங்கள் முன்பு மறியல் அறப்போர் - என்பதாக இந்த மும்முனைப்போர் நடத்தப்படும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தி.மு.க. செயற்குழு நடந்த இரண்டாவது நாள் 21.1.80 அன்று எம்.ஜி.ஆர். இட ஒதுக்கீடு பற்றி ஆலோசிக்க அனைத்துக் கட்சியினரையும் அழைத்துக் கூட்டம் நடத்தினார். விரைவில் முடிவு அறிவிப்பேன் என்றார்.

மூன்று தினங்களுக்குப் பின்னர் - 24.1.80 அன்று 9 ஆயிரம் ரூபாய் ஆணை வாபஸ், பிற்பட்டோருக்கான இடஒதுக்கீடு இனி 50 சதவீதமாக இருக்கும் என்று அறிவித்தார்!

இந்தச் சரித்திர உண்மைகளை சர்க்கார் தரப்பிலிருந்து மறைப்பதால்; அவை மறைந்து விடுமா? காரிருள்தான் சூரியனை மறைப்பதுண்டோ? என்ற கவிஞர் பெருமானின் கவிதை வரிகளை நினைவுபடுத்திக் கொள்வோம்.

மற்றொன்று; அவையில் காங்கிரஸ் உறுப்பினர்கள் நமது கழகத்தின் மீது என்ன தான் காய்ந்து விழுந்தாலும் அவர்களுக்காகவும் நாம். தான் இது போன்ற உயிர்ப்பிரச்சினை எழும் நேரங்களில் வக்காலத்து வாங்க வேண்டியிருக்கிறது. ஆம்; உயிர்ப்பிரச்சினை என்பதால் தானே நீதிக்கட்சியின் ஆட்சிக் காலத்திலே இந்த சமூக நீதிக்கான வித்திடப்பட்டு, அது இன்று வளர்ந்தோங்கி ஒடுக்கப்பட்ட மக்களை ஓரணியில் திரட்டியிருக்கிறது.

காங்கிரசார்; தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தான் பிற்படுத்தப்பட்டோருக்கான 25 சதவிகிதம் என்ற இடஒதுக்கீடு 31 சதவிகிதமென்றும் ஆதிதிராவிடருக்கான 16 சதவிகித இடஒதுக்கீடு 18 சதவிகிதமென்றும் மாற்றப்பட்டதை - பின்னர் பிற்பட்டோருக்கு எம்.ஜி.ஆர். ஒதுக்கிய 50 சதவிகிதத்தில் 20 சதவிகிதம் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு கழக ஆட்சியே இடஒதுக்கீடு தந்ததையும் - ஆதிவாசிகளுக்கு ஒரு சதவீதம் அளித்ததையும் - மறந்தோ, மறைத்தோ, அறிக்கைகளோ - அவையில் விவாதங்களோ நடத்தியிருக்கலாம்.

ஆனால் காங்கிரசாரின் இந்த அரசியல் பண்பாட்டையும், மீண்டும் காங்கிரசுடன் கூட்டணிசேர முயற்சிக்கும் ஜெயலலிதா அவர்களும் இந்த வரலாற்றுச் செய்திகளை இருட்டடிப்பு செய்து பேசியுள்ளதையும் நான் பொருட்படுத்த விரும்பவில்லை!

இருந்தாலும் உண்மைகள் ஒளிக்கப்படும் போது மனம் கேட்கவில்லை. எனவே பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான குரல் எல்லாக் கட்சிகளிலும் ஒலித்திருக்கின்றன என்பதை நான் எடுத்துக் காட்டுவது; அந்த மக்களின் கோரிக்கைக்கு மேலும் வலிவளிக்கும் என்பதற்காகத்தான்!

எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் பேசும் போது; இட ஒதுக்கீடு கொள்கையில் நீதி கிடைக்கக் காமராசர் நேருவிடம் வாதாடினார் என்று கூறிட, உடனே அமைச்சர் எஸ்.டி.எஸ். அவர்கள் குறுக்கிட்டு - சட்டமன்றத்தில் காங்கிரஸ்

கட்சியினர் யாரும் ஆதரித்துப் பேசவில்லை. பேசியிருந்தால் காட்டுங்கள் பார்ப்போம் என்று அறைகூவல் விடுத்திருக்கிறார். அதற்கு காங்கிரஸ் தரப்பில் பதில் அளிக்கப்பட்டதாக ஏடுகளில் செய்தி இல்லை.

ஆனால் 1950 ஆம் ஆண்டு வாக்கில் இந்த இடஒதுக்கீட்டுக்கு உச்ச நீதி மன்றத்தில் தடை வந்தபோது, சட்டமன்றத்தில் அப்போதிருந்த காங்கிரஸ் ஆட்சியில் - சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்த ஆர்.வி. சாமிநாதன் அவர்களும் கே.டி. கோசல்ராம் அவர்களும் பிற்படுத்தப்பட்ட மக்களின் இடஒதுக்கீட்டுக்கு வந்துள்ள ஆபத்தை தடுக்க வேண்டுமென மிகக் கடுமையாகப் பேசியுள்ளனர். ஆதாரம் சட்டமன்ற நடவடிக்கை குறிப்பேடுகளில் உள்ளன.

அந்த உரைகளை நானே முரசொலியில் எழுதிய கடிதங்களிலும் - மேடைகளிலும் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன். திராவிடர் கழகமும் தி.மு.கழகமும்; எம்.ஜி.ஆரின் உச்சவரம்பு பொருளாதார இடஒதுக்கீட்டை எதிர்த்து ஓரணியில் போராடியபோது - அந்த மேடைகளில் திண்டிவனம் இராமமூர்த்தி, மணிவர்மா, ரமணி பாய் போன்ற காங்கிரஸ்காரர்களும் - ப. மாணிக்கம், தா. பாண்டியன் போன்ற இந்திய கம்யூனிஸ்டுகளும் - முஸ்லிம் லீக், பார்வார்டு பிளாக் கட்சியினரும் கலந்து கொண்டதை நாடு நன்கறியும்.

எனவே, இந்தப் பிரச்சினையில் தி.மு. கழகமோ - திராவிடர் கழகமோ அதிக முனைப்பு காட்டினாலும் கூட; இது எல்லாக் கட்சிகளுக்குமுரிய பொதுப் பிரச்சினை!

இந்த உணர்வுடன் வரும் 16 -ஆம் நாள் முழு அடைப்பையும் வேலை நிறுத்தத்தையும் வெற்றி பெறச் செய்து; அதன் மூலம் அரசியல் சட்டம் திருத்திட மத்திய அரசை முன்வரச் செய்திட வேண்டிய பொறுப்பையும் கடமையையும் மறவாமல் செயலாற்றிட வேண்டுகிறேன்.

அன்புள்ள,

மு. க.

12-11-1993

2061. சந்தேகப்படுவதில் தவறு என்ன?

உடன்பிறப்பே,

1983-84-களில் தி.மு.கழகம் தனித்தமிழ் ஈழத்தை ஆதரித்துக் குரல் கொடுத்தது என்பதை அவனி அறியும். அதேசமயம் தமிழ் ஈழ விடுதலைப் போராளிகள் அனைவரும்; அவர்கள் ஏந்தியுள்ள ஆயுதங்களை சிங்கள வெறியர்களுக்கு எதிராகவும், சிங்கள இராணுவத்திற்கு எதிராகவும் பயன்படுத்தியதோடு நில்லாமல் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்ளும் சகோதர யுத்தத்திற்கும் பயன்படுத்துவதை தவிர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் தொடர்ந்து வேண்டுகோள் விடுத்து வந்திருக்கிறோம்.

அந்த வேண்டுகோள் பயன்படாத காரணத்தினால்தான் டெலோ போராளி இயக்கத் தலைவர் சிறீ சபாரத்தினம், இ.பி.ஆர்.எல்.எப். போராளி இயக்கத் தலைவர் பத்மநாபா, ஈழத் தந்தை செல்வா அவர்களின் அன்புக்குரியவராகவும், தளபதியாகவும் விளங்கி, ஈழத் தமிழர் உரிமைக்கு வெளிநாடுகளில் குரல் எழுப்பிய நாவலர் அமிர்தலிங்கம், பிளாட் போராளி இயக்கத் தலைவர் முகுந்தன் இப்படிப் பலர் சகோதர யுத்தத்தில் பலியானார்கள்.

எஞ்சியிருந்து ஈழத்தில் போரிடும் களத்தில் நின்றவர்கள் விடுதலைப் புலிகள் எனும் எல்.டி.டி.இ. இயக்கத்தினர் மட்டுமே என்ற நிலையில்கூட; சகோதர யுத்தத்தால் விளைந்த வேதனைகளையும் விழுங்கிக்கொண்டு - தமிழ் ஈழ மக்களின் உரிமையும் அமைதியான வாழ்வும் முக்கியம் என்பதற்காக - விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள அரசுக்குமிடையே பேச்சுவார்த்தை மூலம் ஓர் அரசியல் தீர்வு காண வேண்டுமென்று தி.மு.கழகம் பெரிதும் விரும்பியது. அதற்கான முயற்சியும் மேற்கொண்டது. மத்தியில் ராஜீவ் பிரதமராகவும் - பின்னர் வி.பி. சிங் பிரதமராகவும் இருந்த காலத்தில் தமிழகத்தில் தி.மு.க. ஆட்சியில் முதல்வராக இருந்த நான் அதற்கென எடுத்த முயற்சிகள் அனைவரும் அறிந்ததே!

தமிழ் ஈழம் கிடைக்க வேண்டும் என்பது தி.மு.க.வின் விருப்பமாக இருந்தபோது தான் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள்; தனித்தமிழ் ஈழத்தில் ஜனநாயகம் இருக்காது என்றும் சர்வாதிகார நாடாக அது இருக்குமென்றும் வெளியிட்ட கருத்தொன்றை தி.மு.க. ஏற்பதற்கில்லையென்று Frontline பிரண்ட்லைன் இதழுக்கு நான் பேட்டியளித்தேன்.

அதன்பிறகு காலப்போக்கில் தி.மு.கழகம்; தனித்தமிழ் ஈழத்தை வலியுறுத்துவதைக் கைவிட்டு, ஈழத்தமிழ் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதில் முழுக் கவனத்தையும் செலுத்தியது.

தமிழ் ஈழமக்கள் அமைதிப்பூங்காவில் வாழ்ந்திடும் வண்ணம் அரசியல் தீர்வு காண வேண்டுமென தி.மு.கழகம்; புதிய நிலை எடுத்தபோது - செய்தியாளர்கள் பலதடவை என்னை மடக்கி மடக்கிக் கேட்ட கேள்வி என்ன தெரியுமா?

'அப்படியானால் தனித் தமிழ் ஈழத்தை நீங்கள் ஆதரிக்கவில்லையா?' என்பதுதான்! அதற்கு நான் அளித்த பதில் தெளிவானது!

தமிழ் ஈழ மக்களின் உரிமைக்கும் பாதுகாப்புக்கும் நல்வாழ்வுக்கும் குரல் கொடுக்கிறோம். அவர்களுக்கு தமிழ் ஈழம் கிடைக்குமானால் மகிழ்ச்சி அடைவோம்.

இதுதான் தி.மு.கழகத்தின் நிலையே தவிர; இதற்கு மாறாகச் சொல்லப்படும் எந்தக் கருத்தும் கழகத்திற்கு உடன்பாடானதல்ல!

1983 இலங்கை வெலிக்கடைச் சிறைச்சாலையில் தங்கதுரை, குட்டிமணி, ஜெகன் உள்ளிட்ட ஐம்பதுக்கும் மேற்பட்ட விடுதலைப் போராளிகள் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஈழத்தமிழ் மக்கள் உயர்த்திப் பிடித்த போர்க்கொடி; ஈழத்தில் மட்டுமல்ல - தமிழ் நாட்டிலும், உலகின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் தமிழர்கள் உள்ளத்திலும் புதியதோர் எழுச்சிப் புயலை உருவாக்கிற்று என்பதில் சந்தேகமே இல்லை.

தமிழகத் தமிழர்கள் - எல்லாக் கட்சிகளிலும் இருப்பவர்கள், அணி திரண்டனர். அவர்களில் ஒரு சிலர் - அரியலூர் ரயில் விபத்தில் அகப்பட்டவரையில் சுருட்டிய கயவர்கள் போல - ஈழத் தமிழ்ப் போராளிகளுக்கு உதவி என்ற பெயரால் தங்களின்

வாழ்வையும் வளமாக்கிக் கொண்டனர். அதே நேரத்தில் இதய சுத்தியுடன் ஈழத்தமிழ் மக்களின் உரிமைக்காக, தமிழகத்தில் போராடியோர் பலர் உண்டு. போராடிய இயக்கங்களும் உண்டு.

அந்த இயக்கங்களில் ஒன்றான திராவிட முன்னேற்றக் கழகம், ஈழத் தமிழர்களைக் காத்திட எண்ணற்ற முறை தமிழ்நாட்டு மக்களைத் திரட்டியிருக்கிறது.

ஆர்ப்பாட்டங்கள்

எழுச்சிப் பேரணிகள் –

தி.க.வுடன் இணைந்து நடத்திய

டெசோ மாநாடுகள் –

முழு அடைப்புகள்

ரயில் நிறுத்தங்கள்

ஐ.நா. மன்றத்துக்கு
ஒரு கோடித் தமிழர்களின் கையெழுத்து

மறியல்கள் – கைதுகள்

நாடு கடத்தப்பட்ட பாலசிங்கம் சந்திரகாசன்

இருவரையும் மீட்க நடத்திய போராட்டம்.

சட்டமன்ற உறுப்பினர் பதவியை
நானும் பேராசிரியரும் துறந்தது.

இவையனைத்துக்கும் உச்சகட்டமாக;
கழக ஆட்சியையே இழந்து நிற்கவுமான நிலைமை,

ஆட்சி கலைப்புக்குப் பிறகு நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது ராஜீவ் காந்தி கொலை! அந்தக் கொலைக்குப்பிறகு, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவுக் கொள்கை விலக்கிக் கொள்ளப்பட்டு – தமிழ் ஈழ மக்களின் உரிமை மற்றும் பாதுகாப்பு இவற்றையே கழகம் முக்கியமாகக் கருதத் தொடங்கியது.

ஆதரவு விலக்கிக் கொள்ளப்பட்டதே தவிர – விடுதலைப் புலிகளுக்கும் நமக்கும் எந்த விரோதமும் இல்லை. இதனை நான் அக்டோபர் மாதம் இரண்டாவது வாரம் செய்தியாளர்கள் கூட்டத்திலே கூட தெளிவாக்கியிருக்கிறேன்.

ஏற்கெனவே அளித்த ஆதரவு என்பதுகூட, இந்திரா காந்தி அம்மையார் பிரதமராகவும் - அருமை நண்பர் எம்.ஜி.ஆர். முதல்வராகவும் இருந்தபோது அளிக்கப்பட்ட ஆயுத உதவி, கோடிக் கணக்கில் பண உதவி, பயிற்சி முகாம்கள் அமைத்திட உதவி என்பன போன்றவை அல்ல! இருப்பினும் நம் மீது வீண்பழி சுமத்தப்பட்டுக் கழக ஆட்சியும் கலைக்கப்பட்டு - 1991 தேர்தலிலும் படுதோல்வி அடைந்தோம்!

தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை ஒரு முனைப்படுத்தக் கூடிய தி.மு.கழகம், இந்தத் தமிழ் நாட்டு மக்களையும் பாதுகாக்க வேண்டிய அரண் என்பதையும் மறவாமல் செயல்படும் போது; தமிழ் நாட்டில் தங்களைத் தீவிரவாதிகள் எனக்காட்டிக் கொள்வோர் சிலரும், வெளிநாடுகளில் ஈழப்போராளிகளின் ஆதரவாளர்களாக இருப்போர் சிலரும், அவர்கள் நடத்தும் ஏடுகளில் - விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக எழுதுவதிலும், காட்டுகிற அக்கறையை விட நமது கழகத்தையும், என்னையும் விமர்சிப்பதில் அதிகமாகவே அக்கறை காட்டி வருகின்றனர்.

15.10.93 அன்று கனடா நாட்டிலிருந்து வெளி வந்துள்ள விடுதலைப்புலிகளின் ஆதரவு ஏடான உலகத்தமிழர் எனும் ஏட்டில் பின் வருமாறு எழுதப்பட்டுள்ளது.

1. திராவிடப் பொன்னாட்டுக்கான போர் 1963ஆம் ஆண்டு கனவாய்ப் பழங்கதையாய் முடிந்தது. பிரதமர் நேரு அவர்களால் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்ட பிரிவினைத் தடைச்சட்டத்துக்கு முகம் கொடுக்க முடியாமல் அண்ணாவும், கலைஞரும் இரவோடு இரவாக திராவிட நாட்டுக்கோரிக்கையைக் குழிதோண்டி நீளப் புதைத்தனர்....

2. ஜெயலலிதாவின் மனம் சணபித்தம், கணவாதம் என்று தடுமாறுவது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. புலி வருது புலி வருது என்று அவர் பிதற்றுவதை எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் கலைஞர் ஏன் இப்படி அலறுகிறார்?....

3. துணைப் பொதுச்செயலாளர் பதவி மனோகரனுக்கு நான் போட்ட பிச்சை என்று கலைஞர் தரக்குறைவாகப் பேசினார்.

4. தமிழ் ஈழ தேசியத் தலைவர் பிரபாகரனைப் பின்பற்றியே வை. கோபால்சாமியும் தமிழகத்தில் தமிழ்த் தேசியத்தை முன்னெடுப்பதில் முன் நிற்கிறார்.

5. ஸ்டாலின் முடிசூடலுக்கு வை.கோபால்சாமி தடைக்கல்லாக இருப்பதாகக் கலைஞர் நினைக்கிறார்.

6. கலைஞரின் மருமகன் என்ற ஒரே தகுதியை மூலதனமாக வைத்து எந்த தியாகமும் செய்யாமல் மத்திய அமைச்சர் பதவிவரையில் உயர்ந்தவர் முரசொலி மாறன்.

உடன்பிறப்பே, இந்தப் பகுதிகள் 15.10.93 உலகத் தமிழர் எனும் போராளிகள் ஆதரவு இதழில் வெளிவந்தவை. இதற்கும் அடுத்து வந்த இதழிலும், இதே மாதிரிதான் அர்ச்சனை. அந்தத் தீவிரவாத ஏட்டில் எவ்வளவு தில்லுமுல்லுச் செய்திகள் பார்த்தாயா?

புலி வருது! புலி வருது! என்று எப்போது நான் அலறினேன்! இது போன்ற சூழ்நிலை போராளிகளின் வெளிநாட்டு ஆதரவாளர் வட்டாரத்தில் இருப்பதை அறிந்துதான் மத்திய அரசு, மாநில அரசுக்கு தெரிவித்து - மாநில அரசு எனக்கு தெரிவித்து - கழக முன்னணியினர் யோசனைப்படி; நான் போலீஸ் பாதுகாப்பை ஏற்றுக் கொண்டேன். இதை இந்த ஏடு ஏளனம் செய்து எழுதிட என்ன இருக்கிறது!

திராவிடநாடு கோரிக்கையைக் கழகப் பொதுக்குழு கூடித்தான் கைவிட்டதே தவிர, அண்ணாவும் நானுமா ஒரே இரவில் பேசி முடிவு செய்து கைவிட்டோம்! வரலாறு புரியாமல் வாய்க்கு வந்ததைப் பேசுவதும் எழுதுவதும் முறையா?

நாஞ்சிலாருக்கும் துணைப் பொதுச் செயலாளர் பதவியை பிச்சையாகப் போட்டேன் என்று நான் எப்போதும் எந்த நேரத்திலும் பேசியதில்லை. எழுதியதில்லை. ஆனால் உலகத் தமிழர் ஏடு இப்படி உண்மைக்கு மாறாக எழுதுவது ஏன்?

முரசொலிமாறன் ஓராண்டு காலம் மிசாக் கைதியாக சென்னைச் சிறையில் இருந்ததும் - 1965 இந்தி எதிர்ப்புப் போரின் போது முரசொலி கட்டுரைக்காக சிறையில் அடைக்கப்பட்டதும்

- இந்த கனடாத்தமிழர் ஏட்டுக்குத் தியாகமாகத் தெரியவில்லை போலும். என் செய்வது இங்கிருந்து செய்தி கொடுத்தவர்கள் அதனை மறைத்திருப்பார்கள்.

ஸ்டாலினுக்கு முடிசூட்டப் போகிறேனாம் - அதற்கு யாரோ தடையாம்! நான் மன்னன் அல்ல; மகனுக்கு முடிசூட்ட! மடாதிபதியும் அல்ல; வாரிசுகளை நியமிக்க - எந்த மண்டூகங்களோ இப்படி இங்கே திசை திருப்பி விடுகின்றன என்பதைக் கேட்டுக்கொண்டு உலகத் தமிழர் ஏடு; யாரையோ தூக்கி நிறுத்திட - தனது உள்நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள இப்படி எழுதியிருக்கிறது!

ஈழத்தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கக் குரல் கொடுக்க வேண்டிய உலகத் தமிழர் போன்ற போராளிகளின் ஆதரவு ஏடுகளாயினும்; உலகத் தமிழ் அமைப்பு என்ற பெயரால் அமெரிக்க நாட்டில் கரோலினாவில் யாரோ சிலர் கூடிக் கொண்டு விடுக்கின்ற அறிக்கைகளாயினும்; அவைகள் தங்கள் குறிக்கோளை நிறைவேற்ற முனைவதற்குப் பதிலாக - தமிழ் நாட்டில் உள்ள தி.மு.கழகத்தின் தலைமையை மாற்றுவதில் அதிக ஆர்வம் காட்டுவதின் பொருள் என்ன? அப்படி மாற்றுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள வழிதான் என்ன?

அடுக்கடுக்காக வரும் செய்திகளைப் பார்க்கும் போது; சந்தேகப்படுவதில் தவறு இருக்க முடியாதல்லவா?

அன்புள்ள,

மு. க.

17-11-1993

2062. மானம், நாம் கேட்ட தாலாட்டு!
மரணம், நாம் ஆடிடும் விளையாட்டு!

உடன்பிறப்பே,

என் கரத்தில் ஏந்திக் களம்புகும் போர் வாள் என எதைக் கருதியிருந்தேனோ; அதுவே என் நெஞ்சில் குத்தும் கூர்வாளாக - யாருடைய தேவைக்காகவோ மாற்றப்படுகிறது என்பதையும்; என்னைப்பற்றிக் கவலையில்லை, ஆனால் நமது கழகத்தினை அழித்திடும் முயற்சிக்கும் - நமது கழகத்தை யாருக்கோ அடகு வைக்கும் முயற்சிக்கும் - பயன்படுத்தப்படுகிறது என்பதையும் - திடீரெனப் புரிந்துகொள்ள இயலாவிடினும்; ஒருமாத காலம் நடைபெற்ற கூட்டங்களில் அவதூறு பேச்சுகள், ஏடுகளில் அறிக்கைகள், பேட்டிகள், நிகழ்ச்சிகள் இவையனைத்தையும் கண்டபிறகு தெளிவு பெற்றவர்கள் ஏன் இன்னும் தலைமை வேடிக்கை பார்க்கிறது? என்று வீராவேசமாகக் கேட்ட பிறகு வேறு வழியின்றி தலைமை முடிவெடுத்து அறிவித்ததை அறிவாய்!

அந்த முடிவு கேட்டவுடன் தமிழ்நாட்டில் பூகம்பம் வெடிக்கும் - எரிமலை குமுறி எழும் - புரட்சிக்கனல் பறக்கும் - நாடே அல்லோல கல்லோலமாகும் என்றெல்லாம் முழங்கியவர்கள் முடங்கிப் போனார்கள். எந்த ஊரிலும் ஏன் என்று கேட்க ஆளில்லை. பாவம்; நெல்லையிலே கூட மாவட்டச் செயலாளர்தான் என் கொடும்பாவி கொளுத்தும் ஊர்வலத்துக்குத் தலைமை தாங்க வேண்டியிருந்திருக்கிறது. நூறு பேர்கூட திரளாத ஊர்வலம். ஊர் ஊருக்கும் சென்று ஆள்பிடித்து, கார்பிடித்து எங்காவது ஓர் ஊரில் கூட்டம் காட்ட முடிகிறதே அல்லாமல் ஆங்காங்கு, தானே எழும் உணர்ச்சியோ, எழுச்சியோ மருந்துக்குக்கூட இல்லை. சில நகரங்களிலேகூட கழகத் தலைமையைக் கண்டிக்கும் ஊர்வலம் என விளம்பரங்கள் செய்து ஆள் சேராத காரணத்தால் அவை ரத்து செய்யப்பட்டுள்ளன.

நாற்பது பேர் ஊர்வலம் - உண்ணாவிரதம் என்றால் அதனை நானூறு பேர் என்று பூதக் கண்ணாடி போட்டுக்கொண்டு சில

பத்திரிகாசிரியர்கள் செய்தி வெளியிட்டுப் பார்க்கிறார்கள். ஆயினும் நடக்கவில்லை.

இப்போது குதிரைகள் விலைக்குக் கிடைக்குமா என்ற பெட்டிகளுடன் திரிகிறார்கள்! கொள்கை உறுதி படைத்த உடன்பிறப்புகள்; சிங்கங்களாக இருக்கும்போது, அவர்களை விலைபேசி அசிங்கப்படுத்திட முடியுமா? எனவே குதிரைகள்போல் இருப்பவைகள் சிலவற்றை வேண்டுமானால் வாங்கலாம் - அசல் பஞ்ச கல்யாணிக்குதிரைகள்; ஆம், இந்தக் கழகத் தேரில் பூட்டப்பட்டுள்ள ஆற்றல்மிகு குதிரைகள் - அறிவார்ந்த குதிரைகள் - அண்ணா சொன்ன கடமை, கண்ணியம், கட்டுப்பாடு வழி நடக்கும் குதிரைகள் - நிமிர்ந்த நோக்கும் நேர்கொண்ட பார்வையும் கொண்ட நமது நெடுந்தொலைவு இலட்சியப் பயணத்தைத் தொடர்ந்திடத்தான் துணை நிற்கின்றன! அந்த நிலைகுலையாக் குன்றங்கள் விலைபோகமாட்டா!

அநேகமாக எல்லாப் பத்திரிகைகளுமே - தமிழ் உணர்ச்சியை உண்மையாகப் பெற்றுள்ள ஒன்றிரண்டு பத்திரிகைகள் தவிர - மற்ற அனைத்துமே கழகக் கோட்டையின்மீது புழுதிக் காற்றாக வீசிக்கொண்டிருக்கின்றன. பொய்ச் செய்திகள்; கழகம், பொலபொலவென உதிர்ந்துவிட்டதுபோல!

நேற்றுகூட சென்னை வந்து என்னையும் பொதுச் செயலாளரையும் சந்தித்துப் பேசிய இருபதுக்கு மேற்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள்; அவர்கள் பொறுப்பில் உள்ள மாவட்டக் கழகங்களின் உறுதிப்பாட்டையும், ஒன்றிய - நகர - நகரிய - பேரூர் - மற்றும் கிளைக் கழகங்களில் விழுது கழுத்தறுப்போர்க்கு ஒரு சில ஏமாளிகள் மட்டுமே பலியாகியிருப் பதையும் தலைமைக் கழகம் உணர்ந்து மகிழத்தக்க வண்ணம் - பட்டியல் போட்டுக் காட்டியதோடு, இப்போது துரோகச் செயலால் ஏற்பட்டுள்ள நிலைமைகளை நேர் நின்று சமாளிப்போம் என்றும் சூளுரைத்துச் சென்றுள்ளனர்.

உதாரணத்திற்கு ஒன்று சொல்லுகிறேனே; ஏதோ - செங்கை அண்ணா தெற்கு மாவட்டம் முழுமையுமே கழகத்தலைமைக்கு விரோதமாகத் திரும்பிவிட்டது எனக் கதை விட்டனர்! கனவு கண்டனர்! ஆனால் உண்மை என்ன? செங்கை அண்ணா மாவட்டத்திலிருந்து மிகப் பெரும்பாலான ஒன்றியங்கள், நகரங்கள், பேரூர்கள், கிளைகளின் அமைப்புகளும் - ஏராளமான

கழக உடன்பிறப்புகளும் கழகத் தலைமைக்குக் கட்டுப்பட்டு அண்ணா வழியில் அயராது உழைப்பதற்காக சபதமேற்கொண்டு, அலை அலையாக அண்ணா அறிவாலயம் வந்து செல்கின்றனர். இந்த உண்மையை - அந்த மாவட்டத்திலிருந்து வரும் மிகப்பெருங் கூட்டத்தை - சில ஏடுகள் மறைக்கலாம்! ஆனால் காலப்போக்கில் உண்மை வெளி வராமலா இருக்கப் போகிறது! அந்த மாவட்டத்தினர் கூட்டம் கூட்டமாக வந்து எடுத்துக் கொண்ட புகைப்படங்கள் முரசொலியில் வந்துள்ளதே; நீ பார்த்திருப்பாயே!

நேற்றுகூட கரூர் மாவட்டக் கழகம் குறித்து ஏடுகள் சிலவற்றில் தவறான செய்தி! அந்தச் செய்தியை மாவட்டச் செயலாளர் பரமத்தி சண்முகம் மறுத்து அறிக்கை விடுத்துள்ளார்.

இப்படி பொய்கள், புனைசுருட்டுகள், திசை திருப்பல், தில்லுமுல்லு! போதாதற்கு சில இடங்களில் இந்த கோயபல்ஸ் வேலையை போலீசாரே மேற்கொண்டுள்ளனர் என்ற செய்தி! நான் இதுவரை இதனை நம்பவில்லை; இனி எப்படியோ தெரியாது! அதையும் சந்திக்கத் தானே வேண்டும்!

உடன்பிறப்பே, அவர்களுக்கு பரபரப்பான செய்திகள் எதுவும் கிடைத்திடவில்லை! பரபரப்பு என்பது மக்கள் மனதில் எழுந்தால்தானே! அதுதான் அவர்களுக்கு, எங்கும் எள் முனையளவு கூட இல்லையே! அதனால் எப்படியாவது பரபரப்பை உண்டு பண்ண முடியுமா என்று மிகப்பெரும் முயற்சி! அதில் நமது கழக உடன்பிறப்புகள் ஏமாறக் கூடாது - ஏமாற மாட்டார்கள் என்று எனக்குத் தெரியும்!

பூகம்பம் என்றனர்; அது மராட்டிய மண்டிலத்துடன் நின்று விட்டது! புயலும் வெள்ளமும் என்றனர்; வழக்கமாக நவம்பரில் பொழியும் மழையும் - அடிக்கும் காற்றும்தான்; நாம் காண முடிந்தது! ஏன்? எப்படி?

இரண்டு நாட்களுக்கு முன்பு, காஞ்சிபுரமிருந்து எங்களைக் காணவந்த உடன் பிறப்புகளில் ஒருவர் காஞ்சி நாகம்மையார் படிப்பகம் சார்பில் என்னிடம் பழைய புகைப்படம் ஒன்றும் நூல் ஒன்றும் கொடுத்தார். படம், நமக்கு அண்ணா கட்டளையை நினைவூட்டி - நூல், நமது உறுதியை நிலை நாட்டுவதாக இருந்தது. வழங்கியவர் வேறு யாருமல்ல; பழம்பெரும் நண்பர் சு. திருவேங்கடம்தான்! அவர் வழங்கிய நூலின் பெயர்

தக்கயாகப்பரணி என்பதாகும். ஒட்டக்கூத்தன் யாத்த நூலாகும் அது.

பார்வதி தேவி, தன் கணவன் சிவபெருமான் சொல்லையும் மீறி தட்சன் செருக்குடன் நடத்திய யாகத்திற்குச் சென்றதாகும். அவமானமுற்று அதன் தொடர்பான நிகழ்ச்சியை விவரிக்கும் புராணக் கதைதான் தக்கயாகப் பரணிக்கு அடிப்படை! நூலைப்புரட்டியதும் என் கண்ணில் பட்ட பாடல்; என் இதயம் கவர்ந்ததாக இருந்தது! உனக்குச் சொன்னால் உன் இதயமும் குளிருமே என்பதற்காகச் சொல்கிறேன்.

“படிஅடி எறிந்து கால்பொருது
பலகுல விலங்கன் மேருவொடு
குடிஅடி பறித்த நாளும் ஒரு
குழை சலன மின்றி நீடுவது”

கடின நடைப் பாடல்தான்; பொருள் விளக்கினால் கழிபேருவகை கொள்ளலாம்!

ஊழிக் காலத்துக் காற்றானது பூமியும் அதில் உள்ள மேரு முதலான மலைகளும் தலைகீழாக உருளும் படி வீசியபோதிலும் இந்த ஆலமரத்தின் ஒரு தளிர் கூட அசையாமல் மரம் நிலைத்து நிற்கும் இந்தப்பாடல், ஒட்டக்கூத்தன் குறிப்பிடும் ஆலமரத்தின் வலிமை பற்றிய தொடர்ச் செய்தியின் ஒரு பகுதியாகும்!

உடன்பிறப்பே, ஆலகால நஞ்சினை நெஞ்சிலே உடையார், கழகமெனும் ஆலமரத்தைப் பெயர்த்தெறிய எதிரிகளுடன் கூடிக்கொண்டு, ஊழிக்காற்றாக வீசிப் பூமியையும் மலைகளையும் உருட்டிப் பார்த்தாலும்; அப்போதும் உறுதியாக நிற்போம் என்ற நெஞ்சுரத்தை யல்லவா இந்தப் பாடல் நமக்கு மேலும் வலுப்படுத்துகிறது!

எனவே,
என்னுயிரினும் மேலான உடன்பிறப்பே,
துளைத்திடும் துரோகத்தைத் துரத்திடத்
தோள் உயர்த்தி நிற்போம்!
மானம் நாம் கேட்ட தாலாட்டு
மரணம் நாம் ஆடிடும் விளையாட்டு

எனப் பாடி; வெங்குருதி தனிற்
கமழ்ந்து வீரஞ்செய்கின்ற முச்சு
தமிழ் முச்சு என்றானே புரட்சிக்
கவிஞன்; அந்த முச்சுள்ள வரையில்
கழகம் காத்திடுவோம் -
தேவைப்படின்; நமது கை கால்கள் பச்சை ரத்தம்;
ஏன் உயிரையும்
கூடப் பரிமாறிடுவோம்; எந்த
தியாகத்துக்கும் தயாராக இருப்
போம் என சத்தியம் செய்து
அண்ணா தந்த கொடி ஆகாயத்தை
முட்டிடத் தூக்கிப் பிடிப்போம்!

அன்புள்ள,

மு. க.

19-11-1993

2063. செவியில் நுழையட்டும்!
சிந்தையில் பதியட்டும்!

உடன்பிறப்பே,

தமிழ்நாட்டில் தமிழ் மக்களுக்காக; ஆம் - பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சாமானிய மக்களுக்காக - நடுத்தர மக்களுக்காக; ஏழை எளிய மக்களுக் காக; ஆதிக்கக்காரர்களால் அடிமைகளாகத் தொழும்பர்களாக நடத்தப்படுகிற மக்களுக்காகப் பாடுபடும் நமது இயக்கத்தை; நீதிக்கட்சி காலத்தில் விதையூன்றப் பெற்று வளர்ந்து தழைத்துள்ள அந்த இலட்சிய இயக்கத்தை; பெரியாரின் அயராத் தொண்டினால் அவரது இடி முழக்கப் பேரூரையால் - தளராத ஊக்கத்தால், தடைபடாத செயல்திறனால் - பீடு நடை போடும் இந்தக் கொள்கைக் கூடாரத்தை, சிங்க நடையும், சிங்காரத் தென்றலும் நடையும், பொங்கு கடல் நடையும் - தன் தமிழ்ப்புது நடையிற் காட்டி; ஈட்டி முனைகளே! வாருங்கள்! என இளைஞர்களைத் தட்டியெழுப்பி அணி திரட்டிய அண்ணா கண்ட இந்தப் பாடி வீட்டை - செய்திகளை விஷமத்தனமாக வெளியிட்டே வீழ்த்திவிடலாம் எனச் சில ஏடுகள் கனவு கண்டு செயல்படுகின்றன.

அந்த ஏடுகளுக்கு வயிறு புடைக்கத் தீனி தருவதற்குக் கழகத்தைப் பிளந்திட நீண்ட நாட்களாகச் சதி நடத்தி வரும் ஒரு கூட்டம் தயாராக இருக்கிறது. அந்தக் கூட்டத்துடன் கூடிக் கொண்டு கும்மாளமடிக்கும் அந்தச் சில ஏடுகள்; ஆயிரங்காலத்துப் பயிரான கழகத்தை மிதித்துத் துவைக்கும் வேலிதாண்டிய விலங்குகளுக்கு ஆதரவு தருகிறோமே; இது எங்கே கொண்டுபோய்விடும் என்று எண்ணிப் பார்ப்பதில்லை.

சுடச்சுட விற்பனைக்கும் - சூத்திரக்கட்சியை சம்பூகவதை நடத்துவதற்கும் - இன்றைய செய்திகள் பயன்பட்டால் போதும் என

அன்றாடக் கணக்கை மட்டுமே பார்க்கின்றன. தொலைநோக்குக் கணக்கு பற்றி அவைகளுக்குக் கவலையுமில்லை.

அதனால்தான் யார் ஒருவர் இந்தக் கழகத்தின்மீதும், கழகத் தலைமையின் மீதும் ஆதாரமற்ற அடாத பொய்களை வாரி இறைத்தாலும்; குறிப்பிட்டுச் சொன்னால் வழக்கில் மாட்டிக்கொள்ள வேண்டுமே என்று; அந்த வாய்மையும் துணிவும் இல்லாத வஞ்சக நெஞ்சத்தினர், கையில் கிடைத்ததை எல்லாம் அள்ளி இறைத்திடினும் - அவை குறித்து சற்றும் யோசிக்காமலே இந்த இயக்கத்தின்மீது எப்போதுமே எரிச்சல் கொண்ட ஏடுகளும், இப்போது புதிதாகப் பிர்மாஸ்திரம் தொடுக்கிற ஏடுகளும், துரோகக்கேணியில் மொண்டு மொண்டு ஊற்றிடும் நச்சுச் செய்திகளுக்கு பிரதானப் பக்கங்களை ஒதுக்குகின்றன!

இதோ என் கையில் இந்தக் குடியரசு பத்திரிகையை யாரும் வாங்காவிட்டாலும், நானே ஒரு பத்திரிகையை அச்சிட்டு நானே உட்கார்ந்து படித்துக் கொள்வேன் என்று சூளுரைத்துச் சுயமரியாதைச் சங்கநாதம் எழுப்பிய பெரியார் - பத்திரிகைகளின் பக்க பலத்தால் வானுயர எழுந்து நிற்கவில்லை. அண்ணாதுரையும் கூட்டத்தில் பேசினார் என்று பெரிய ஏடுகள் செய்தி வெளியிட்ட காலத்திலிருந்து எழுந்த அண்ணாவின் முழக்கமும், பத்திரிகைகள் கைகொடுத்ததால் விண்ணிலும் மண்ணிலும் விரிந்து பரவிடவில்லை! ஆயிரக் கணக்கில் இலட்சக் கணக்கில் இயக்கத்துக் கண்மணிகள், ஈடு இணையற்ற உடன் பிறப்புகளாம் உன் போன்றோர்; இதயங்களை ஏடுகளாக்கிக்கொண்டு - செய்த பணிதான் இன்று நமது இயக்கத்தின் மகத்தான வடிவம்!

இந்த வடிவத்தை சீர்குலைத்தலாகாது என சில நல்லறிவாளர்களின் ஏடுகள், நல்லெண்ணமுடன் தமிழர்தம் கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கின்றன. எதிர்காலத் தமிழ்க் குலம் அந்த ஏடுகளுக்கு நன்றி செலுத்திடக் கடமையுடையதாகும்.

பெரியாரின் உணர்வுகளை, அண்ணாவின் இலட்சியங்களை அவற்றின் அடித்தளம் சிதிலமாகாதவாறு செயல்படுத்திட அரசியல் ரீதியாகவும் ஆக்கப் பணியாற்றிடும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஒரு சில புல்லுருவிகள் - அந்த புல்லுருவிகளைத் துணைக்கு வைத்துக் கொண்டு; இந்த இன எழுச்சி விளக்கினை அணைத்துவிடத் துடிக்கும் ஏடுகள் சிலவற்றைப் பார்க்கும்போது; எனக்கு, இருபது ஆண்டுகளுக்கு முன்பு தந்தை பெரியார்

கூறியதுதான் நினைவுக்கு வருகிறது. என்ன கூறினார்? இதோ - அது!

> “நம் நாட்டில்தான் இந்தப் படியான பத்திரிகைத் தொழிலில் மகா - மகா - மகா - மகா அயோக்கியர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு மான அவமானம் இல்லையென்றாலும், வேறு பத்திரிகைகள் இருக்கும்போது அதைவிட்டு இப்படிப்பட்ட பத்திரிகைகளைப் படிக்கும் மானங்கெட்ட மக்களும் ஏராளமாக இருக்கிறார்கள். பொது வாழ்வில் பொதுத் தொண்டில் நலனுக்காகப் படிக்க நேர்ந்தாலும் - பொது மக்கள், தங்கள் இனத்தின் கேட்டுக்காக நடத்தப்படுகிற பத்திரிகைகளைப் படிப்பது எவ்வளவு மானங்கெட்ட, ஈனத்தனம்; என்பதை நான் வலியுறுத்திக் காட்ட வேண்டியவனாக இருக்கிறேன்.”

உடன்பிறப்பே, 1972 ஆம் ஆண்டு தந்தை பெரியார் அவர்கள் சீறிச் சினந்து பாய்கிற அளவுக்கு; நமது இன நலம் கெடுக்க உலவிய அந்த ஏடுகள் இன்னமும் திருந்தியபாடில்லை! அவற்றைத் தீண்டுவதில்லை என மொத்த தமிழ்க்குலமும் முடிவெடுப்பதற்குத் தொடக்கமாக; நீயும் உன்போன்ற உடன்பிறப்புகளும்; உறுதி பூண்டிடுக!

இல்லையேல் பெரியார் கூறிய மானங்கெட்ட ஈனத்தனம் எனும் மாபெரும் பழிக்கு ஆளாக நேரிடும். எனவே பெரியாரின் இந்த முழக்கம் செவியில் நுழையட்டும் - சிந்தையில் பதியட்டும்!

அன்புள்ள,

மு. க.

20-11-1993

2064. உச்ச கட்டம்!
உள்ளம் கவரும் கட்டம்!

உடன்பிறப்பே,

தென்னிலங்கைப் பெருவேந்தன் - திசையெட்டும் புகழ் பரப்பிய திண்தோளன் - இராவணனாம் தமிழ் வீரனைக் காட்டிக் கொடுத்த அவன் தம்பி வீடணனை அவதாரபுருஷன் இராமன் ஆரத் தழுவிக் கொண்டானேயன்றி; வீடணா! நீ செய்வது துரோகம்! எனக்கூறி விரட்டிவிடவில்லை! இலங்காபுரி எனும் இன எழுச்சிக் காவலனின் கோட்டையைத் தகர்க்க கோடாரிக் காம்பு ஒன்று கிடைத்தது என தசரத ராஜகுமாரன் தாங்கொணாப் பேரானந்தம் அடைந்தான்.

அதே இராமாயண இதிகாசத்தில்தான் எப்பகையினாலும் வளைத்து வீழ்த்த முடியாத வாலி மன்னனை வஞ்சகமாய் மறைந்திருந்து கொன்றான் இராமன்! இராமனின் அந்தச் செயலை இராமாயண பக்தர்கள்கூட ஏற்றுக்கொள்ள இயலாமல் இன்னமும் திணறுகின்றனர். எப்படி முடிந்தது வாலி மன்னனை இராமன், சாய்த்திட! அங்கும் ஒரு துரோகி சுக்ரீவன் எனும் பெயருடையான் வாலி மன்னனுக்குத் தம்பி எனும் பெருமையுடையான்; சிக்கினான் இராமனிடம்! சிரித்து மகிழ்ந்தான் இராமன் - சே! சே! அண்ணனுக்குத் துரோகம் இழைத்தலாகாது என்று அறிவுரை கூறிட அந்த ரகுகுல நாயகன் தயாராக இல்லை!

காட்டிக்கொடுப்பதில் கைதேர்ந்த சரித்திரக் கதாநாயகர்களான மிர்ஜாபரோ - அல்லது பூர்ணய்யாவோ; பகைவர்களின் அன்புக்குப் பாத்திரமானார்களே தவிர - அந்த அன்னியப் பகைவர்களால் அடாத செயல் இது! எனக் கண்டிக்கப்பட்டு தூர நில் துரோகமே! என்று துரத்தப்படவில்லை!

மண்ணெல்லாம் வீரம் மணக்கின்ற பாஞ்சாலங்குறிச்சிக் காவலன் வீரபாண்டியக் கட்டபொம்மனை; அவனையொத்த ஒரு பாளையக்காரன் - எட்டப்பன் என்போன் காட்டிக் கொடுக்க முன்வந்தபோது; அவனைக் கட்டித் தழுவிப் பரவசமுற்றதுதான் பரங்கியர் துரைத்தனமே தவிர - பாவீ! இந்தப் படுபாதகச் செயல் கூடாது என்று பல்லைக் கடித்துக் கொல்லைப்புறமாக வெளியேறுக என்று சொல்லிவிடவில்லை.

துரோகிகளால் நமது பலம் பெருகிடும் என்பதைவிட, எதிரியின் பலம் குறைந்திடுமல்லவா என்று கணக்கிட்டுக் களித்திடத்தான் எப்போதுமே மாற்றார் கூடாரம் தயாராக இருக்கும்!

வரலாற்றில் மாவீரர்களாகச் சித்தரிக்கப்படும் பெருமக்களும், இலக்கியத்தில் இதிகாசத்தில் இணையற்ற தீரர்களாகவும் படைக்கப்பட்டுள்ள தள நாயகர்களும் - தங்களுக்குத் தெரியாமல் எப்படி இந்தத் துரோகங்களை வளரவிட்டார்கள் என்பதற்கு பதில் காண்பது கடினம்!

வெளுத்ததையெல்லாம் பால் எனக் கருதக் கூடிய களங்கமற்ற உள்ளங்கொண்ட பாண்டிய மன்னன் ஜீவகனையும், அவன் இனிய இயல்பைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு இறுதியில் அவனைச் சேர நாட்டுமன்னன் புருஷோத்தமனுக்குக் காட்டிக் கொடுக்கத் துணிந்த பாண்டியநாட்டு அமைச்சன் குடிலனையும் முக்கிய கதாபாத்திரங்களாகக் கொண்டது சுந்தரனாரின் மனோன்மணீயம் நாடகம்!

உற்றவனே! கொற்றவனே! இறைவனே! எமதய்யனே! உமக்காக உடல், பொருள், ஆவி மட்டுமல்ல; எம் உற்றார் உறவினரையும் இழப்பேன்! என்றுதான் குடிலன், பாண்டிய வேந்தனைப் பலாச்சுளை மொழிகளால் அர்ச்சித்தான். விசுவாசி எனையன்றி வேறு எவருமிலர்! என்று அரசனை ஏமாற்றி, அவன் நம்பிக்கைக்கு உரியவனானான்!

இராவணனுக்கு, வீடணன் - அவன் தம்பியாகவே பிறந்தான்! வாலி மன்னனுக்கு சுக்ரீவனும் - அவன் உடன்பிறப்பாகவே உதித்தான்! எட்டப்பனைப்போல், மிர்ஜாபரைப்போல், பூர்ணய்யாவைப்போல் - மனோன்மணீயம் படைப்பிலே குடிலன் உருவானான்!

அவனது சூழ்ச்சித் திறனால்தான் பாண்டிய நாட்டுக்கும் சேர நாட்டுக்கும் பகையே மூண்டது! அப்படிப் பகை மூட்டி; அந்தப் பகை மறைவில் தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள முனைந்த நெறி கெட்ட மனிதன்தான் குடிலன்!

எனவே; அவனும் வீடணனைப்போல - சுக்ரீவனைப்போல - எட்டப்பனைப்போல - ஏன்; அவன் வீட்டுச் சமையற்கார சாமிநாதனைப் போல - பகை நாட்டுக்காரனின் பாதங்களில் போய் விழுந்தான்!

அரசன் பாண்டியனின் அன்புக்குப் பாத்திரமானவனாக இருந்ததால்; அவனையே புகழ்ந்து கொண்டு, அவன் அருகிலேயே இருந்ததால் - பாண்டிய மன்னனை எப்படி வீழ்த்துவது என்பது எனக்குத் தெரியும்! எனவே என் துணையை ஏற்றுக்கொள்க! என வலுவில் சென்று உதவி வழங்கிடத் துணிந்தான்!

சேர மன்னன் புருஷோத்தமன்; அந்தத் துரோக வடிவத்தை - இராமன், வீடணனை ஏற்றுக் கொண்டதுபோலவோ, சுக்ரீவனை ஏற்றுக் கொண்டதுபோலவோ எட்டப்பனை, வெள்ளையர் ஏற்றுக்கொண்டது போலவோ, ஏற்றுக்கொண்டு, எதிரியை எளிதில் தோற்கடிக்க முடியும் என்ற எக்களிப்புக் கொண்டானா? இல்லை! இல்லை! என்கிறது மனோன்மணீயம்!

ஆமாம்; உடன்பிறப்பே - பகையை வீழ்த்திடப் பக்கத் துணையாக; ஒரு துரோக உருவம் கிடைத்ததே என்று புருஷோத்தமன் பூரிப்பு அடையவில்லை! அதற்குப் பதிலாகப் புருவத்தை நெரித்தான்! வீரர்களே! இந்த வீணன் கைகளில் பூட்டுக விலங்கை! என்றான்.

விலங்குடன் நின்ற விலங்காம் குடிலன் விழித்தான் - வியப்புற்றான் - விழிகள் நீர் பொழிய; வேந்தே! 'இது என்ன வேடிக்கை' என வினவினான்!

'குடிலா! உன் சுயநலத்துக்காக உன் மன்னனையே காட்டிக் கொடுக்க முன்வந்த நீ; எதிர்காலத்தில் என்னையும் காட்டிக் கொடுக்க மாட்டாய் என்று எப்படி நம்ப முடியும்! எனவே, உண்ட வீட்டுக்கு ரெண்டகம் நினைத்த உலுத்தனே - உனக்கு இதுதான் முடிவு!' என்றுரைத்து குடிலனைக் கொண்டுபோய், பகையரசன் ஜீவகனிடமே நிறுத்தினான் புருஷோத்தமன்!

உடன்பிறப்பே, துரோகிகளை இராமனும் மற்றவர்களும் அணுகிய முறைக்கும் - சேரமன்னன் புருஷோத்தமன் அணுகிய முறைக்கும் - எத்தனை வேறுபாடு கண்டாயா?

இந்தக் கட்டம்தான் மனோன்மணீயம் நாடகத்திலேயே உச்ச கட்டம்! உயர்ந்த கட்டம்! உள்ளம் கவரும் கட்டம்! உணர்வில் பதிய வேண்டிய கட்டம்!

அன்புள்ள,

மு. க.

22-11-1993

2065. அந்தப்பாதை, எந்தப்பாதையோ?

உடன்பிறப்பே,

* பஞ்சாயத்துத் தலைவராகக் கூட; தானே இருக்கவேண்டும்; இல்லையேல் தன் தம்பிதான் இருக்கவேண்டும் என்று அப்படியே அந்த கிராமத்திற்குத் தம்பிக்கு முடி சூட்டியவர்; ஆம் - தனக்குப்பிறகு அந்தப் பதவி, தம்பிக்கே போக வேண்டுமென்று தவம் கிடந்தவர் குடும்ப அரசியல் என்று மேடையில் கர்ச்சனை புரியும்போது உண்மை தெரிந்தவர்கள் நமட்டுச் சிரிப்பு சிரிக்கிறார்கள். பாவம்; பாஞ்சாலங்குறிச்சிப் பகுதியிலேயே இந்தப் பச்சை உண்மையை மறைக்கிறோமே என்று மனச்சாட்சி குத்தாமல் இருக்குமா? குத்தும்! அதனால் என்ன அதை எடுத்தெறிந்துதான் நீண்டகாலம் ஆகிறதே!

* பெண்களுக்கு 30 சதவிகிதம் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் இடம் ஒதுக்கப்பட்டு தேர்தல் அறிவிக்கப்பட்ட போது; தனது ஒன்றியத்தைப் பெண்கள் ஒன்றியம் ஆக்கிவிட்டதால், வேறு மகளிர் எவருமே இல்லையென்று தனது மனைவியையே வேட்பாளராக அறிவித்து மனுதாக்கல் செய்தவர்; குடும்ப அரசியலைப் பற்றி மேடையில் குதப்புகிறார் - இது கண்டு தேசிங்கு ராஜன் கோட்டையே வெடிச்சிரிப்பு சிரிக்கிறது! நல்லவேளை; உள்ளாட்சித் தேர்தலே அப்போது ஒத்தி போடப்பட்டுவிட்டது.

* சட்டமன்றத் தொகுதிக்கு வேட்பாளராக மனுப்போடும்போது; மாற்று வேட்பாளர் மனு எவனும் போடக்கூடாது - அதுவும் தன் மகன்தான் போட வேண்டுமென்று ஆகாயத்திற்கும் பூமிக்குமாகக் குதித்து அந்தச் சாதனையை நிறைவேற்றிக் கொண்டவர் -

அந்த மகனைக் கடத்தல் எனும் பயங்கர வழக்கிலிருந்து மீட்பதற்காகவே பாதை மாறியவர் - குடும்ப அரசியல் குறித்து மேடையில் முழங்கும்போது, துறைமுகப் பட்டினமே துண்டை வைத்து வாயை அடைத்துக் கொண்டு, அப்போதும் சிரிப்பை அடக்க முடியாமல் தவிக்கிறது!

* நகராட்சி மன்றத் தேர்தலா? என் வார்டுக்குத் தேர்தலா? நானேதான் நிற்பேன் - யாரையும் நம்பி மாற்று வேட்பாளராக மனுக்கொடுக்க ஒப்பமாட்டேன்; இதோ என் மனைவி இருக்கிறார், இவர்தான் மாற்று வேட்பாளர் எனக் குதியாய்க் குதித்த கொள்கை மாணிக்கம் - இப்போது குடும்ப அரசியல் என்று பேசும்போது கொங்குத் தலைநகரமே இவர் பேச்சு கேட்டுக் குமட்டிக் கொண்டே சிரிக்கிறது!

* யூனியன் சேர்மனாக நானே இருந்தேன் - இப்போது நான் மந்திரியாகிவிட்டேன் - அதனால் காலியாகும் அந்த இடத்தை கட்சிக்காரர்கள் தகுதியுள்ளவர்கள் பலர் கேட்டாலும் தரமுடியாது - என் தம்பியையே வேட்பாளராக்குவேன் என்று அறிவித்து, அவ்வண்ணமே செய்தவர் மேடையிலேறி, ஊர் ஊராக உலா வந்து குடும்ப அரசியல் பற்றி முழங்கும்போது; இந்த முழக்கம் கேட்டுக் கோவைப் புறநகர்ப் பகுதியே குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கிறது!

உடன்பிறப்பே, பட்டியல் இன்னமும் கூட நீளும் - பழகிய தோஷம்; இத்துடன் இப்போது நிறுத்துகிறேன்.

கழகத்தின் கட்டுப்பாட்டை மீறவும் - ஒழுங்கு முறையை சீர்குலைக்கவும் துணிந்து - ஓராண்டுக்கு மேலாகவே சதிவலை பின்னியவர்கள் - பின்னப்பட்ட அந்த வலையில் சிக்கியவர்கள்; அக்டோபர் மாதம் உருவான பிரச்சினை என்ன என்பதையே ஓரம் தள்ளி விட்டு - தி.மு.கழகத் தலைமைக்கு வாரிசு உருவாக்கப்படுவதாக ஒரு கடைந்தெடுத்த பொய்யை, வாய் கூசாமல் பரப்பி வருகிறார்கள்.

எதிர்க்கட்சியினர்கூட இதுவரை பயன்படுத்தாத இழி சொற்களை, கொடுஞ் சொற்களை, மேடைகளில் - எழுத்துக்களில்

- சுவரொட்டிகளில் பயன்படுத்துகிறார்கள். கருணாநிதி வீட்டுப் பெண்களுக்கு வெள்ளைச் சேலை என்றும் - இனி கருணாநிதிக்குக் கோடிதான் என்றும் - பேசியும், சுவரொட்டி போட்டும் திருப்தி அடையாமல் - என் படங்களையும் பேராசிரியர் படங்களையும் தெருவில் போட்டு உடைத்தும், எனக்குக் கொடும் பாவி கட்டி கொளுத்தியும் இந்த ஒரு மாத காலமாகத் தங்களைச் சிலர் அடையாளம் காட்டிக் கொண்டு வருகிறார்கள்.

அவர்களுக்கு எத்தனையோ பதவிகள் கொடுத்தோமே - அவர்களா இப்படி என்று நான் ஆச்சரியப் படவுமில்லை! ஆத்திரப்படவுமில்லை! இத்தனை நாளும் இவர்களை உடன்பிறப்புகளாகக் கொண்டு நேசித்து வந்தோமே - அவர்களா இப்படி என்றுதான் நினைத்துக் கொண்டேன் - ஆனால் அதற்காக வேதனை அடையவில்லை!

மதுரையில் மாவட்டத்தின் முக்கிய பொறுப்பில் இருந்த ஒரு நிர்வாகி, ஒரே கொடும் பாவியில் ஐந்து தலைகளை இணைத்து - மாறன், அழகிரி, ஸ்டாலின், தமிழரசன் ஆகிய நாலு பிள்ளைகள் தலை; நடுவே என் தலையை இணைத்து கொடும்பாவி உருவம் கட்டித் தெருவில் இழுத்துச் சென்றாராம். ஏடுகள் அந்த இன்பச் செய்தியை வெளியிட்டு மகிழ்ந்தன! பரவாயில்லை; நம்மை ஒரு காலத்தில் மதுரை நகர் வீதியிலே பவனி வரச் செய்து கொடியேந்திவர்தானே இன்று நமது கொடும்பாவி ஏந்துகிறார் என நான் எண்ணிக்கொண்டேன்.

இதிலிருந்து என்ன புரிகிறது; பிரச்சினை அக்டோபரில் ஆரம்பமாகவில்லை! நீண்ட காலமாக - அதாவது சுமார் ஓராண்டுக்கு மேலாக, என்னையும் கழகத்தையும் வெளியிலே புகழ்ந்தும், போற்றியும், சிறப்பித்தும், சீர் பல சொல்லியும், காண்போர் வியந்திடக் கால்களில் விழுந்தும் - கண்ணீர் மல்கிடப் பேசி நடித்தும் - அதே சமயம் மற்றோர் பக்கத்தில் - பகை கக்கும் செயல்கள் பலவற்றில் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள் என்பது தெளிவாகப் புரிகிறது!

அக்டோபர் 2-ந் தேதி மாநில அரசு அனுப்பிய கடிதம் - மறுநாள் செய்தியாளர்கள் கூட்டத்தில் வெளியிடப்பட்டது. அப்போதும் சரி; பிறகும் சரி - என் உயிருக்கு உலை வைக்க இருப்பதாக வந்த ஊர்ஜிதமாகாத செய்தி குறித்து நான் எந்த செய்தியாளரிடமும்

- அப்படியொரு செயலுக்கு யார் காரணம் என்றோ; யாருக்காக செய்யப்படக் கூடியது என்றோ சொன்னதில்லை. ஒரே ஒரு பத்திரிகையில் அப்படி வந்த ஒரு சூசகமான செய்தி பற்றியும் என்னிடம் சுட்டிக் காட்டப்பட்டபோது; அந்தச் செய்தியை நான் மறுத்தே கூறியிருக்கிறேன்.

அதற்குப் பிறகும் - தலைமையை எதிர்க்கும் போக்கும், தரக்குறைவாகப் பேசும் போக்கும் ஒரு மாத காலம் தொடர்ந்து நடந்த பிறகுதானே வேறுவழியின்றி, நடவடிக்கை எடுப்பது என்பது தவிர்க்க முடியாததாயிற்று! கழகத்தை ஒரு சிறிதும் சிந்தாமல் சிதறாமல் சிறு காயமும் படாமல் காப்பாற்ற வேண்டுமே என்ற காரணத்தினால்தானே தம்பி வீரபாண்டி ஆறுமுகம் மேற்கொண்ட சமரச முயற்சிகளுக்கெல்லாம் கழகத் தலைமை இணக்கம் தெரிவித்தது. வீரபாண்டி; அவர் முயற்சியில் வெற்றி பெறுவார் என்றுதானே நானும் பேராசிரியரும் ஒரு மாத காலத்திற்கு மேலாகப் பொறுமையாக இருந்தோம்.

இப்போது நடப்பவைகளை எல்லாம் பார்த்தால் என்ன தெரிகிறது! வெளி நாட்டிலிருந்து வரும் புலிகளின் ஆதரவு ஏடுகளில் தொடர்ந்து என்ன எழுதப்படுகின்றது! தலைமையில் மாற்றம் வேண்டுமென்றும் - தலைமைக்கு யார் தகுதியானவர் என்றும் அந்த ஏடுகள் கணித்துக் கூறக் காரணம் என்ன? அவைகளுக்கு ஏன்; தி.மு.கழகத்தில் தலையிட வேண்டுமென்ற அக்கறை? உள்நோக்கம் என்ன? உள்நோக்கமிருப்பின், உயிர் பறிக்கும் நோக்கமும் இருக்கக் கூடுமன்றோ! ஆம்; உடன்பிறப்பே - அக்டோபர் முதல் வாரத்தில் அரும்பிடாத இந்த ஐயப்பாடு இப்போது அரும்பிடத்தான் செய்கிறது. அதற்கு காரணம் இல்லாமல் இல்லை - கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் 11.11.93 அன்று ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு வெளியிட்ட விளக்கமான கடிதத்தில் ஒரு முக்கியமான பகுதி வருமாறு -

> “யாராயினும் திட்டமிட்டுப் பழி சுமத்த விரும்பினாலும் - இந்தச்செய்தி ஊர்ஜிதமாகாததால் அதை நான் நம்பவில்லை. அப்படி ஏதேனும் கலைஞருக்கு ஆபத்து விளைவிக்கும் திட்டம் இருக்குமெனில் - அது எனக்குச் செய்யும் கேடேயாகும். அப்படியொரு ஆபத்து -

கலைஞருக்கு ஏற்படுத்த முற்படுவர் எவரானாலும் அது தமிழர்களுக்குச் செய்யும் தீமையாதலால்; தமிழர்களின் கடும் கண்டனத்துக்குரியதாகும் என்னும் கருத்தமைந்த ஓர் அறிக்கையைத் தாங்கள் வெளியிடுவது தங்கள் மீது களங்கம் ஏற்படுத்த முடியாத பாதுகாப்பைத் தரும் என்று வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் மூலம் நான் சொல்லியனுப்பிய யோசனையைக் கூட தாங்கள் ஏற்காதது எதனால்?"

உடன்பிறப்பே, தம்பி வீரபாண்டி மூலம் பேராசிரியர் கூறி அனுப்பிய இந்த ஆலோசனை ஏற்கப்படாதது மட்டுமல்ல; முன்னிலும் பல மடங்கு அதிகமாகவும், ஆத்திரமாகவும், தரக்குறைவாகவும் தலைமையின் மீது கணைகள் பாய விடப்பட்டன. நான் இந்தக் கடிதத்தில் தொடக்கத்தில் சுட்டிக் காட்டியுள்ளது போல பயங்கரமானதும் ஆபத்தானதுமான இந்தப் பிரச்சினையின் பின்னணியை மறைத்திடும் முயற்சியாக - குடும்ப அரசியல் என்று திசை திருப்பத் தொடங்கி விட்டார்கள்.

இன்றல்ல; எப்போதோ நான் இந்த பிரச்சினைக்குத் திட்டவட்டமாகப் பதில் சொல்லியாயிற்று! குடும்ப அரசியல் என்று மாற்றுக் கட்சியினர் பேசி - வாரிசு முறை பற்றி வக்கணைகள் கூறியபோதே - ஆங்கில ஏடுகளின் நிருபர்கள், தமிழ் ஏடுகளின் நிருபர்கள் தனித்தனியாகவும் - செய்தியாளர்கள் கூட்டத்திலும் வினா தொடுத்த போது தி.மு.க. ஒரு ஜனநாயக இயக்கம் - இங்கே வாரிசு முறைக்கு இடமில்லை என உறுதி படப் பதில் அளித்திருக்கிறேன். அந்தப் பதில் எல்லா ஏடுகளிலும் வெளி வந்திருக்கிறது.

கோவை மாநில மாநாட்டில் கூட அறிவித்திருக்கிறேன். நான் மன்னன் அல்ல; மகனுக்குப் பட்டம் கட்ட! மடாதிபதியல்ல; வாரிசு நியமிக்க! என்று தெளிவாகக் கூறிய பிறகும் - அவசர அவசரமாகத் தலைமையைப் பிடிப்பதற்கும், அதன் மூலம் தமிழகத்தை வன்முறைக் களமாக்குவதற்கும், அவசரம் நிறைவேறுவதற்காக, ஆரூடங்கள் பார்த்து என் ஆயுள் ரேகையை கணித்தது மட்டுமல்லாமல் - அதற்குள்ளாகவும் அவசரத்திற்காக யார் ஆதரவையோ நாடிப் போயிருப்பது நாட்டுக்குப் புரியாமல் இல்லை.

நம்பிச் சென்று ஏமாந்து போகக் கூடிய நமது உடன்பிறப்புகள் சிலருக்கு இப்போது புது வேகத்தில் விளைவுகள் தெரியாது! உண்மைகள் புரியாது!

எப்படிப்பட்டவர்கள் இன்று கழகக் கட்டுப்பாட்டை மீறும் கூட்டத்தில் நட்சத்திரங்களாக ஜொலிக்கிறார்கள் பார்த்தாயா? தினமணி; நீ படிக்காவிட்டாலும் - விஷயங்களைப் புரிந்து கொண்டு உனக்கு எடுத்துக்கூற நான் படிக்க வேண்டியிருக்கிறதே - அதிலே ஒரு கட்டுரை - கட்டுப்பாடு மீறுவோர், கொள்கை மாறுவோர், கூடாரத்திலுள்ள ஒரு புதிய நட்சத்திரம் - எழுதியிருக்கிறார்! என்ன தெரியுமா?

ஜெயலலிதா, முதல்வராவதற்கு முன்பு இட ஒதுக்கீட்டுக்கு வருமான வரம்பை ஆதரித்து கருத்து வெளியிட்டார். என்ன காரணத்தாலோ அவரும் பின் வாங்கிவிட்டார்.

என்று வருத்தப்பட்டுள்ளார் அந்தக் கட்டுரையில்! மொத்தத்தில் அந்தக் கட்டுரை வருமான வரம்புக்கு ஆதரவாக - பொருளாதார அடிப்படையில் இடஒதுக்கீடு என்ற நிலைக்கு அனுசரணையாக - சமூக, கல்வி அடிப்படையில் இடஒதுக்கீடு என்ற பெரியார், அண்ணா கொள்கைக்கு எதிராக அமைந்துள்ளது!

முதல்வர் பொறுப்பை 1989-ல் நான் மீண்டும் ஏற்றபோது - சமூக, கல்வி அடிப்படையில் இட ஒதுக்கீடு என்பதில் திட்டவட்டமான தெளிவான நிலையில் இருந்து - அதே நேரம் ஒரு குடும்பத்தில் பட்டதாரிகளே இதுவரை இல்லாமல் அக்குடும்பத்தில் முதன் முதலாக மருத்துவக் கல்லூரி, தொழில் கல்லூரி போன்றவைகளுக்கு விண்ணப்பிக்கிற மாணவனுக்கு ஐந்து மதிப்பெண்கள் சலுகை அளிக்கப்பட்டு அதனால் முதல் ஆண்டு பலர் பயன் பெற்றனர். ஆட்சி கலைக்கப்பட்டவுடன்; அந்த சலுகை, நீதிமன்றத்தில் அடிபட்டுப் போயிற்று.

பெரியார் அண்ணா வழிவந்த நாம் எப்படிச் சிந்திக்கிறோம், செயல்படுகிறோம் என்பதற்கும்; எல்லா வகையிலும் கட்டுப்பாட்டையும் ஒழுங்குமுறைகளையும் மீறி, தலைமைக்கு வரத்துடிக்கும் கூட்டம் - கழகத்தைக் கைப்பற்ற வன்முறை மிரட்டல்களைச் செய்துவரும் கூட்டம் - எப்படி எதிர்காலத்தில் செயல்படும் என்பதற்கும்; தினமணியில் அவர்களில் ஒருவர்

எழுதியுள்ள இந்தக் கட்டுரை ஒன்றே; சான்று போதாதா? நான் இக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ள ஓரிரு எடுத்துக் காட்டுகள்; பாதை தவறி, யார் பின்னாலோ செல்ல முயலும் பாசமுள்ள சில உடன்பிறப்புகள் சிந்தித்துப் பார்க்க பயன்படாதா?

அதற்காகத்தான் இந்தக் கடிதம்.

அன்புள்ள,

மு. க.

24-11-1993

2066. அன்றே சிந்தினார்; அண்ணா, கண்ணீர்!

உடன்பிறப்பே,

நீயும் உன்னைப் போன்ற சில உடன்பிறப்புகளும் - பொது மக்களில் சிலரும் - பத்திரிகையாளர் சிலரும்; தமிழ்நாட்டு அரசியலில் பூகம்பம், புயல் இவையெல்லாம் அக்டோபர் 3-ந் தேதிக்குப் பிறகுதானே, திடீரெனப் புழக்கத்திற்கு வந்து மேடைகளில் பேசப்படும் வார்த்தைகள் என நினைத்துக் கொண்டிருந்தீர்கள்.

ஆனால் அக்டோபர் 2-ந் தேதி என் உயிருக்கு ஆபத்து என்ற செய்தி, மாநில அரசு மூலம் தரப்பட்டு அச்செய்தி 3-ந் தேதியன்று வெளியிடப்பட்டது என்றாலும்; அதன் பின்னணியும், அதற்கான ஜோடனைகளும், தயாரிப்புகளும் அக்டோபருக்கு முன்பே தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தன என்பதற்கு ஏற்கெனவே சில சான்றுகளைக் காட்டியிருந்தேன். கனடாவிலிருந்து உலகத் தமிழர் என்ற பெயரால் வெளிவரும் புலிகளின் ஆதரவு பத்திரிகையில் தி.மு.க.வுக்கு எதிராகவும் - தி.மு.க.வை விமர்சித்தும்; தி.மு.க.வுக்கு யாரைத் தலைவராக்க வேண்டுமென்று எழுதப்பட்டும் இருந்தவைகளை - வரிபிசகாமல் எடுத்துக் காட்டியிருந்தேன். அதைத் தொடர்ந்து உலகத் தமிழர் அமைப்பு என்ற ஒரு நிறுவனம் புலிகளுக்கு ஆதரவாகவும் - என்னைத் தாழ்த்தியும் - தலைமைக்கு தகுதியானவர் என அந்த அமைப்புக்குப் பிடித்தமானவரை உயர்த்தியும் விடுத்திருந்த சுற்றறிக்கையையும் சுட்டிக்காட்டியிருந்தேன்.

இவ்வளவுக்குப் பிறகும்கூட; இப்படியும் இருக்குமா? என்று என்னுள்ளே எழுந்த சந்தேகத்தை என்னால் அறவே போக்கிக்கொள்ள முடியாமல் இருந்தது.

ஆனால்... ஆனால்... இதே இன்னொரு முக்கியமான சான்று! தி.மு.கழகத்தில் பிரச்சினை அக்டோபர் 3-ந் தேதிக்குப் பிறகு தோன்றியதாக நினைப்பவர்கள், பேசுகிறவர்களின் வாயை அடைக்கிற அளவுக்கு உள்ள சான்று!

களத்தில் என்ற தலைப்பில் புலிகளின் வீரப் போராட்டம் குறித்துச் செய்திகளையும், கட்டுரைகளையும் உணர்ச்சிகரமாக வெளியிடும் புலிகளின் பத்திரிகை - அக்டோபருக்கு முன்பே செப்டம்பர் 24-ந் தேதி வெளிவந்த இதழில்;

தமிழ்நாட்டு அரசியலில் மீண்டும்
தமிழ்த் தேசிய வாதம்?

என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள கட்டுரையை அப்படியே எழுத்து மாறாமல் தந்துள்ளேன்.

தமிழ்நாட்டு அரசியல் களம் இப்போது, கொழும்பினதும் புதுடில்லியானதும் விசேட கவனத்தை ஈர்த்துள்ளது. இதற்குக் காரணம் ஐந்து கோடி மக்களைக் கொண்ட தமிழ்நாட்டில் மீண்டும் தமிழ்த் தேசிய எழுச்சி தலைதூக்கி வருகின்றதா என்ற ஐயம்தான்.

இந்த ஐயத்தை உறுதிப்படுத்தும் வகையில், அண்மைக்காலமாக நடந்து வரும் சில சம்பவங்கள் எதிர்காலத்தில் தமிழ்நாட்டில் அரசியல் பூகம்பத்தை ஏற்படுத்திவிடுமோ என்று, பல அரசியல் விமர்சகர்கள் அங்கலாய்க்கின்றார்கள்.

உறைந்து கிடக்கும் தமிழ்நாட்டின் தமிழ்த் தேசியவாதத்தை அவ்வப்போது கிளறிவிடும் காரணிகளாக இந்தி எதிர்ப்பு உணர்வும், காவிரி நீர்ப்பிரச்சினையும் இருப்பதுண்டு. ஆனால் தேவைப்படும்போது இவற்றைக் கையிலெடுத்து தமிழ்த் தேசிய உணர்வைக் கிளறி, அவற்றை வாக்கு வேட்டைக்குப் பயன்படுத்தியபின் கை விட்டுவிடும் வழக்கத்தைத்தான் திராவிடக் கட்சிகள் தங்கள் மரபாகக் கொண்டு வருகின்றன. ஆனால் இப்போது ஒரு புதிய தலைமை தமிழ்நாட்டின் தமிழ்த் தேசிய எழுச்சிக்குப் புத்துயிர் அளிக்க முயல்கின்றது என்ற செய்தி, தமிழ் இனத்துக்கு எதிரான சக்திகளை இந்தியா - இலங்கை உட்பட கலவரப்படுத்தியுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்குள்ளேயே ஒரு சக்திமிக்க தலைவனாக வளர்ந்து வரும் திரு. வை. கோபால்சாமியே, அத்தமிழ்த் தேசிய வாதத்திற்குத் தலைமை கொடுக்கின்றார் என்று கருதப்படுகின்றார்.

இந்திய ஆக்கிரமிப்புக் காலகட்டத்தில், தனது உயிரையும் பொருட்படுத்தாது தமிழீழம் வந்து மணலாற்றுக் காட்டுக்குள் சென்று தலைவர் பிரபாகரனைச் சந்தித்து, ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாகக் குரல் கொடுத்தவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டின் நவீன தமிழ்த் தேசியவாதத்திற்கு அரசியல் தலைமை கொடுத்து, அதன் உச்சக் கட்டமாக பிரிவினைக் கோரிக்கையை முன் வைத்து ஒரு காலக்கட்டத்தில் தமிழ்நாட்டு மக்களின் பேராதரவையும் தி.மு.க. பெற்றிருந்தது. ஆனாலும் இந்திய மத்திய அரசின் மிரட்டலுக்குப் பயந்தும், பதவி சுகங்களுக்கு ஆசைப்பட்டும் தி.மு.க.வின் தலைமையே தமிழ்த் தேசிய எழுச்சியை மழுங்கடித்தது. இருந்தபோதிலும் தி.மு.க.வின் இடைநிலைத் தலைவர்கள் மத்தியிலோ, அடிமட்டத் தொண்டர்கள் மத்தியிலோ தமிழ்த் தேசிய உணர்வு சீரழிந்ததாகச் சொல்ல முடியாது. ஏனெனில் தி.மு.க.வின் அத்திவாரமே தமிழ்த் தேசியவாதம்தான்.

இந்த நிலையில் கடந்த சில வாரங்களாக தமிழ் நாட்டில் நிகழ்ந்துவரும் சில சம்பவங்கள், தமிழ் நாட்டின் தமிழ்த் தேசியவாதத்திற்குப் புத்துயிர் ஊட்டி வருகின்றன. காவிரி நீர்ப்பிரச்சினை தொடர்பாக தமிழக முதலமைச்சர் செல்வி. ஜெயலலிதா அவர்கள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் ஒரு புறமும் தி.மு. கழகத்தினுள் நடக்கும் உட்கட்சிப் பிரச்சினைகள் - அவற்றின் பரிமாணங்கள் மறுபுறமுமாகத் தமிழ்நாட்டின் தேசிய அரசியல் சூடு பிடித்துள்ளது.

காவிரி நீர்ப் பிரச்சினை தொடர்பான ஜெயலலிதாவின் செயல்கள், குறுகிய அரசியல் நோக்கங்கள் கொண்டவை என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. ஆனால்

அந்தக் காவிரி நீர்ப்பிரச்சினை தமிழக மக்களின் தேசிய உணர்வுடன் சம்பந்தப்பட்டது என்ற வகையில், அது முக்கியமானதொன்றாகும்.

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படும் தஞ்சை மாவட்ட மக்களின் பொருளாதார வாழ்வு, இந்த ஆற்று நீரில்தான் தங்கியுள்ளது. இதேபோன்றுதான் இந்தி எதிர்ப்புப் பிரச்சாரமும் இப்போது தமிழகத்தில் சூடு பிடித்துக் கொண்டிருக்கின்றது.

காங்கிரஸ் - அ.தி.மு.க. உறவு முறிந்தபின்பு அ.தி.மு.க.வின் தமிழ்நாடு அரசு கலைக்கப்படலாம் என்ற அபிப்பிராயம் மேலோங்கியிருந்தது. இதனால் தி.மு.க. தலைமை மீண்டும் பதவிக்கு வருவதற்காக, இந்தி எதிர்ப்பு ஆயுதத்தைக் கையிலெடுத்தது.

ஆயினும் செல்வி. ஜெயலலிதாவினதும் அவரது மந்திரிகளினதும் கோமாளித் தனமான செயற்பாடுகளினாலும், பலவீனமான ஆட்சியினாலும் தமிழ்நாட்டில் ஜெயலலிதாவின் செல்வாக்கு சரியத் தொடங்கியது.

இந்த நிலையில் தமிழ்நாடு சட்டசபைக்கான தேர்தல் நடந்தால் தி.மு.க.தான் வெற்றி பெறும் என்ற கருத்தும் பலமடையத் தொடங்கியது. இந்தக் கருத்தில் நம்பிக்கை கொண்ட தலைமை வாக்கு வேட்டைக்காகத் தனது இறுதி முயற்சியான இந்தி எதிர்ப்பு ஆயுதத்தை உடனடியாகப் பயன்படுத்த வேண்டிய தேவை இல்லை என்பதை உணரத் தொடங்கியது. எனவே தனது இந்தி எதிர்ப்பு நடவடிக்கைகளைச் சத்தமின்றி கைவிட்டது. ஆனாலும் கட்சியின் ஒரு பிரிவினர் இளைஞர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட இடைநிலைத் தலைவர்கள், மற்றும் சில மூத்த தலைவர்களும் இந்தி எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் செயற்படுத்தி வருகின்றனர்.

இப்பிரிவினரின் நோக்கம் உண்மையில் இந்தி மேலாதிக்கத்தை முறியடிப்பதுதான்.

இந்தியா? இந்தியாவா? என்பதுதான் இவர்களின் பிரதானகோசம். தொடர்ந்தும் இந்தி திணிக்கப்பட்டால், இந்தியாவிற்குள் தமிழ்நாடு இருக்கமாட்டாது என்பதுதான் இதன் பொருள்.

இலட்சியப்பாதை எனும் ஒரு வார இதழில் திரு. வை. கோபாலசாமி இப்படி எழுதுகிறார். விரைவாக நடந்தேறி வரும் சம்பவங்கள் உலகிற்கு ஒரு விடயத்தைக் கூறுகின்றன. அதாவது 21-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியாவின் வரைபடம் புதிதாக வரையப்படும்....

பிரபல திரைப்பட நடிகர் சத்தியராஜ் தேவி வார இதழ் மூலம் இப்படிச் சொல்கிறார்.

தொடர்ச்சியாக இந்தி திணிக்கப்பட்டால் தமிழ்நாட்டு மக்கள், சேர சோழ பாண்டிய அரசர் காலத்தை நினைத்துப் பார்க்க வேண்டியிருக்கும்.

இந்த இந்தி எதிர்ப்புப் பிரச்சாரம் தமிழ்நாட்டின் தென்பகுதி மாவட்டங்களிலேயே தீவிரமாக நடைபெறுகின்றன. திரு. வை. கோபால்சாமியின் செல்வாக்கும் இந்தப் பகுதிகளிலேயே நிறைந்து காணப்படுகிறது.

காவிரி நீர்ப்பிரச்சினையாலும், இந்தி எதிர்ப்பு உணர்வாலும் தென் தமிழ்நாட்டுத் தமிழர்களிடையே தமிழ்த் தேசிய எழுச்சி புத்துயிர் பெற்று வருகின்றது.

இத்தமிழ் தேசிய எழுச்சிக்கு திறமையும், மக்கள் ஆதரவும் நிறைந்த திரு. வை. கோபால்சாமி தலைமை கொடுக்கின்றார் என்ற செய்தி பரவும் போதே, தமிழின விரோதிகள் கலவரமடைந்தனர்.

திரு. வை. கோபாலசாமி பேசும் கூட்டங்களுக்கு இளைஞர்கள் பெருமளவில் வருகின்றனர். அவரது அனல் பறக்கும் பேச்சுக்கள் தமிழ்த் தேசியத்திற்கு புத்துணர்ச்சி ஊட்டும் வகையிலேயே அமைந்திருக்கின்றன. அதேவேளை திரு. வை. கோபால்சாமி தமிழீழ தேசியத்தின் நண்பனாகவும் இருந்து வருகின்றார் என்ற செய்தியும், தமிழின விரோதிகளுக்கு அச்சமூட்டியுள்ளது. இதனால்

திரு. வை. கோபால்சாமியின் எழுச்சியை முறியடிக்க உள்ளேயும் வெளியேயும், சதியும் கழுத்தறுப்புகளும் நடைபெறுகின்றன.

இந்தச் சூழ்ச்சிகளை திரு. வை. கோபால்சாமி எப்படி எதிர்கொண்டு முறியடித்து வெற்றி பெறப் போகின்றார் என்பதே, உலகத் தமிழர்களின் எதிர் பார்ப்பாகும்.

- விடுதலைப்புலிகளின் ஏட்டில் வந்த கட்டுரையைத்தான் அப்படியே இணைத்துள்ளேன்.

மீண்டும் அந்தக் கட்டுரையை ஒருமுறை படித்தால்; ஆரம்பமே பூகம்பத்தில் ஆரம்பமாவது தெரியும்! இங்கும் அக்டோபர் முதல் ஒரே பூகம்பப் பேச்சாகத்தானே இருக்கிறது! தொடர்பு தெரிகிறதா?

தலைமையை மாற்றுவதற்கு எப்படிப் பீடிகை போடப்பட்டுள்ளது புரிகிறதா? தி.மு.க. இந்தி ஆதிக்க எதிர்ப்பையே கைவிட்டுவிட்டதாம் - அதையும் அவர்களின் அபிமானத் தலைவரே ஓங்கி ஒலிக்கிறாராம் - அந்தக் கட்டுரை அப்படித்தானே கதைக்கிறது!

தலைமை மாறவேண்டும் என்ற கருத்து - படிப்படியாக - ஆனால் வெளிப்படையாக! எப்படி மாற்றுவது? என்ன வழி? அதுதான் அக்டோபரில் வெடித்தது - இன்னுமா விளக்கம் தரவேண்டும்!

அப்படியென்றால் நடந்தால் - நடந்துவிட்ட பிறகு என்னை ஆளாக்கிய அண்ணா இருந்திருந்தால் என்ன செய்வார் எனப் பெருமிதமாகவும், உணர்ச்சி பூர்வமாக எண்ணியவாறு - மேஜைகளின் முன் இருந்த அண்ணாவின் கடிதங்கள் தொகுப்புப் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தேன்.

> நாடகமாடுவதை இயக்கத் தொண்டாகவும், தொழிலாகவும் கூடக் கொண்டு கருணாநிதி இருந்த நாட்களில், எதிரிகள் இழுத்துப் போட்டு அடித்து, பிணமானான் என்று கருதிப் பெருஞ்சிரிப்புச் சிரித்து விட்டுச் சென்றனர் என்பதைக் கேள்விப்பட்ட உடன், தம்பிக்கு வந்துற்ற ஆபத்தினைத் தடுத்திடும் ஆற்றலும் அற்ற நிலையிலே இருக்கிறேனே! என்போன்றோர்

மொழி கேட்டும், காட்டும் வழிநடந்தும் பணியாற்றிய, வாழ்க்கையைச் சுவைத்திடாப் பருவத்தினனை, மாபாவிகள், நொறுக்கினரே, அடிபட்டபோது, இரத்தம் கொட்டிய போது, கயவர் கத்தியைக் காட்டிய போது, என்னென்ன எண்ணினானோ! எனக்கு ஒரு அண்ணன் உண்டு! அவன் சொல்லில் எனக்குப் பற்று உண்டு! அவன் இருக்க நாம் அச்சமடையத் தேவை இல்லை என்றெண்ணி இருந்தேன், இதோ நான் கொல்லப்படுகிறேன், எங்கு இருக்கிறான் என் அண்ணன்? என்றெல்லாம் எண்ணித் திகைத்தானோ - இது போலெல்லாம் எண்ணிப், புதுவையிலிருந்து விழுப்புரம் வந்து சேரும் வரையில் விம்மிக் கிடந்தேன் - இடம் தேடி அரசியலை நாடியோருக்கு அந்த இதயத் துடிப்பு எப்படித் தெரிய முடியும்?

உடன்பிறப்பே, 2.10.1960-ல் அண்ணா தம்பிக்கு எழுதிய கடிதத்தில் இந்தப்பகுதி வருகிறது. ஆம், 1945-ல் இயக்கக் கொள்கைகளை பரப்ப நாகை திராவிட நடிகர் கழகம் கண்டு புதுவையில் நாடகம் நடத்திக் கொண்டிருந்தபோது - அங்கு நடந்த மாநாட்டில் புரட்சிக் கவிஞருடன் கலந்து கொண்ட என்னை மாற்றார் தாக்கி, மடிந்து விட்டான் எனச் சாக்கடையில் எறிந்துவிட்டுப் போயினரே; அதைப்பற்றித்தான் அண்ணா அவர்கள் 15 ஆண்டுகளுக்கு பிறகு தம்பிக்கு எழுதிய கடிதத்தில் திராவிடநாடு இதழில் குறிப்பிட்டிருந்தார்.

அன்று கொண்டிருந்த தமிழ் உணர்வு - தமிழ் இன உணர்வு - இந்தி ஆதிக்க எதிர்ப்பு உணர்வு - ஈழம் உள்ளிட்ட உலகத் தமிழர்களின் உரிமைகளைக் காத்திடும் உணர்வு - இவற்றில் எள் முனையளவும் குறையாமல்தான் உழைத்து வருகிறேன். உழைத்திடும் கழகத்துக்குத் தலைமை ஏற்றுள்ளேன்.

இல்லை! கூடாது! தலைமையை மாற்றித்தான் தீர வேண்டுமென யாரேனும் முடிவெடுத்தால் - அதற்கு அவர்கள் வகுத்துள்ள வழியைத் தேர்ந்தெடுத்து நிறைவேற்றினால் - அதற்கு, இப்போதே நான்; முன்னதாகவே என் அண்ணனின் கண்ணீரை அவர் எழுதிய கடித வாயிலாகப் பெற்றுக்கொள்ள முடிகிறதல்லவா? அதுபோதும் எனக்கு!

"புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து"

தன்னைக் காத்த தலைவனின் கண்களிலிருந்து நீர்பெருகுமாறு சாவு ஏற்படுமானால் அந்தச் சாவு, யாசித்தாவது பெற்றுக் கொள்ளத் தக்க சிறப்பு உடையதாகும்.

என்பதுதானே குறள்!

அன்புள்ள,

மு. க.

01-12-1993

2067. தலைநகர் எதிர்பார்க்கிறது; எழுக!
எழுகவே!!

உடன்பிறப்பே,

“எழுச்சியுற்ற இளைஞன்தான்;
ஏறுநடை சிங்கந்தான்!
வீழ்ச்சியுற்ற தமிழகத்தை;
வீறுகொள்ளச் செய்பவன்தான்!
கொழித்துவிட்ட உமிகள்தான்; இனிக்
குள்ளநரிக் கூட்டத்தார்!”

எப்போதோ நான் எழுதிய இந்த உணர்ச்சி வரிகளுக்கு வடிவம் கொடுக்கும் நாளாக - இளைஞர்கள் அணிவகுக்கும் அந்த நாள் இருக்குமென்று நம்புகிறேன். இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எந்தநாள் என்பாயோ? டிசம்பர் 19 ஆம் நாளைத்தான் குறிப்பிடுகிறேன்! அன்றுதான் சமூக நீதிக்காகக் கழகம் சென்னை தலைநகரில் பேரணி நடத்தும் நாள்! சமூக நீதிக்கும் - அதன் விளைவாக இன்றுள்ள இட ஒதுக்கீடு விகிதாசாரத்தைக் குறையாமல் பாதுகாக்கவும் குரல் கொடுப்பது யாருக்காக? இளைய தலைமுறைக்காகத்தானே - இளைஞர்களின் எதிர்காலத்தை இருள் மூடிவிடாமல் தடுப்பதற்காகத்தானே!

படித்தால் பாபம் - பகவானுக்கு அடுக்காது - வேதம் சாத்திரம் எதுவும் அனுமதிக்காது - மனு மறுக்கிறான் - என்றெல்லாம் மிரட்டி, மீறியவர்களை நாக்கில் சூடு போட்டுத் தண்டித்த காலம் ஒன்றிருந்தது. அந்தக் கொடிய காலத்தை மெல்லக் கடந்து வந்த போதிலும் - வேத காலத்தையும், தமக்கே ஆதாயம் தரும் காலமாக ஆக்கிக் கொண்டவர்களின் ஆதிக்கத்தை அகற்றுவது எளிதில் முடிந்துவிடவில்லை! இன்னும் முற்றாக முடிந்துவிடவில்லை!

அதற்கு சான்றுதான்; போராடிப் போராடி ஒடுக்கப்பட்ட மக்கள் பெற்றுள்ள - கல்வி, வேலை வாய்ப்புகளில் 69 சதவிகித இடஒதுக்கீட்டுக்கு எதிர்ப்புக் கிளம்பியதும், அவ்வாறு எதிர்த்தோர்; தமக்குச் சாதகமான தீர்ப்பைப் பெற்றிருப்பதுமாகும்.

பரட்டைத்தலை - அழுக்கேறிக் கிழிந்து நைந்த சட்டை - குழி விழுந்த கண்கள் - குமுறும் வயிறு - கொந்தளிக்கும் நெஞ்சம்! இவைதான் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் வீட்டுப் பிள்ளைகளுக்கு இந்தச் சமுதாய அமைப்பு சூட்டியுள்ள வைரக் கிரீடம், தங்கச் சரிகையிட்ட சொக்காய், சிம்மாசனம், சீர் சிறப்பு எல்லாமே!

இந்த நிலையைத் தலைகீழாக - முழுமையாக - சிறு பிசிறுகூட இல்லாமல் மாற்றுவதற்குக் காலமும் நேரமும் இடந்தரவில்லை எனினும்; திராவிட இயக்கம் எதிர் வரிசையில் இருந்தும் - ஆளும் நிலையில் இருந்தும் அவர்களுக்காக இதய சுத்தியுடன் பாடுபட்டதையும் பாடுபட்டு வருவதையும், அதற்கேற்ற பலன் கிடைத்ததையும், தொடர்ந்து கிடைத்து வருவதையும்; அந்தப் பயனை அனுபவிக்கும் ஒடுக்கப்பட்ட மக்கள் உணர்ந்தே உள்ளனர்.

அனுபவித்து வரும் உரிமைக்கும் ஆபத்து என வந்துவிட்ட பிறகு; அந்த ஆபத்தைப் போக்கிட அரசை வலியுறுத்தவும் - மத்திய அரசுக்கு அக்கறையுடன் எடுத்துக் கூறவும் - பிரச்சினையின் முக்கியத்துவம், இளைய தலைமுறையினர் எதிர்காலத்திற்கே உரியது என்பதை நிலைநாட்டவும் - தமிழகத்தில் மேற்கொள்ளப்படும் எல்லா முயற்சிகளுக்கும் தடந்தோள் கொடுப்போம் என்பதுடன்; கழகமும் தனது உயிர்மூச்சுக் கொள்கையான சமூக நீதி காப்பதில் எந்தவிதமான தியாகத்திற்கும் தயாராக இருக்கிறது என்பதை சமூகநீதிக்கு முட்டுக்கட்டையிடுவோர் அறிந்து திருந்திடும் வண்ணம் உணர்த்திடக் கடமைப்பட்டுள்ள காரணத்தினால்தான் இத்திங்கள் 19 - ஆம் நாளன்று மகத்தான பேரணியொன்றை நடத்துகிறோம்.

பேரணியில் ஆடவர், பெண்டிர், முதியோர், இளையோர், தொண்டர்கள், தொழிலாளர்கள், மாணவர், இளைஞர் என லட்சோப லட்சம் பேர் கலந்து கொள்வார்கள் எனினும், அவர்கள், தங்களுக்காக அல்ல; இளைய தலைமுறையினரின்

வருங்காலத்திற்காகத்தான் இக்கடமையாற்ற வருகின்றனர் என்பதை உணரும் இளைஞர் சமுதாயம்; தனக்காக - தன் ஒளிமயமான எதிர்காலத்திற்காக வகுக்கப்படும் பேரணியினை, கண்டோர் வியக்குமளவுக்குக் கடல்கள் பலவும் சேர்ந்ததுபோல் அமைத்துக் காட்ட வேண்டாமா?

சமூகநீதிப் பேரணி, சென்னையில் நடத்தப்படுமென சேலத்தில் கூடிய கழகச் செயற்குழு முடிவெடுத்தது. அந்த முடிவைத் திருச்சியில் கூடிய மாவட்டச் செயலாளர்களும், மாவட்டப் பொறுப்பாளர்களும், மாநில அமைப்பாளர்களும் எவ்வாறு செயல்படுத்துவதென விவாதித்துத் திட்டங்கள் தீட்டியுள்ளனர். தீட்டியுள்ள திட்டங்களை நிறைவேற்றி சென்னைப் பேரணியை மகத்தானதாக்கி, மத்தியில் இருப்போர் சிந்தனைக்கு வேலை கொடுத்து, தமிழகம் இதுநாள் வரையில் அனுபவித்து வரும் இடஒதுக்கீட்டு உரிமையில் எள்முனையளவும் இழப்புக்கு இடமின்றி, இந்த உரிமை தொடர்ந்து நீடித்திட பிற மாநிலத்தாரும் - பிற கட்சியினரும் கூட இணக்கம் தெரிவித்திட உதவும் வகையில் நமது பேரணி ஒப்பற்ற பேரணியாக விளங்குதல் அவசியம்!

அதற்கேற்ப உடனடிப் பணிகளில் மாவட்டச் செயலாளர்கள், பொறுப்பாளர்கள், மாநில அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, நகரியக் கழக, பேரூர்க்கழக, கிளைக் கழகச் செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் ஈடுபட வேண்டும்! இளைஞர் அணியினர் கூட எழுச்சி மயமான பேரணிக்குத் தயார்படுத்தும் பணிகளில் இறங்கிவிட்டனர்! மாணவ அணியினர், நாங்கள் என்ன மட்டமா என வினவி பேரணியை மகத்தானதாக்கக் கிளர்ந்தெழுவர்! அறிவேன்! தொண்டர் அணியினர் தொகை தொகையாய் வருவர் - பகையோடிப் போயிற்றென்று! தெரியும் எனக்கு! மகளிர் அணியினர், சமூக நீதிக்கான போர்க்குரல் ஒலிக்கும் புறநானூற்றுத் தாய்களின் பட்டாளமாக நடைபோடுவர்! உணர்வேன் நான்! இலக்கிய அணியினர், கலிங்கம் வென்ற காஞ்சிப் படையினர் போலக் களம்புகு காதை நடத்திடுவர்! கண் கொள்ளாக் காட்சியது!

தொழிலாளர் அணியினர்; தொடரட்டும் உரிய சமூகநீதி என்றுரைத்து, இதில் தொய்வு ஏற்பட ஒப்பிடோம் எனத் தோள் தட்டித் துந்துபி முழங்கிப் படைகூட்டி வந்திடுவர் - எதிர்பார்க்கிறேன்! விவசாயிகள் - நெசவாளர்கள் அணி

வகுத்திடுவர் - தங்கள் வழித் தோன்றல்கள் விவேகிகளாகவும், வித்தகர்களாகவும் ஆவதற்குத் தடை எதுவாயினும் அதனை உடைப்போம் எனக் கடல்மடை திறந்தாற் போல் கர்சித்துப் புறப்படுவர் - காணலாம் அந்தக் கம்பீரக் காட்சியை! கிழக்கு வானத்தைக் கறுப்பு பூசி மறைக்கும் முயற்சி எதுவாயினும் அதனை முறியடிப்போம் என முழங்கிட வழக்கறிஞர் அணி பேரணிக்கு ஓர் சிறப்பாக அமையும் - கண்டு மகிழலாம்! டிசம்பர் 19 ஆம் நாள் எல்லாச் சாலைகளிலும், சென்னைப் பேரணிக்கு வரும் வாகனங்கள் - அவற்றில் செயலாற்றும் நமது சேனை - அண்ணன் தந்த இருவண்ணக் கொடிகள் -

அரும்புகள், மலர்கள், முதிர்ந்த கனிகள் - அத்தனையும் கொண்ட எழுச்சிப் பேரணி! சமூகநீதிக்காக சர்வபரித்தியாகம் செய்யத் தயார் எனப் பெருமித நடைபோடும் உடன்பிறப்புகளைக் கொண்ட பேரணி! எனவே, எதிர்காலத்தில் உரிமை பெற்று பயன் பெறப்போகும் இளைஞர்கள் எழுக! அந்த இளைய தலைமுறைக்காக வாதாடிப் போராட வரிந்து கட்டிக்கொண்டு ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரும் உடனே எழுக!

தலைநகர் எதிர்பார்க்கிறது; தமிழினர் தலை நிமிர எழுக! எழுகவே!!

அன்புடன்,

மு. க.

06-12-1993

2068. பெரியார் தந்த துணிவு - அண்ணா தந்த கனிவு!

உடன்பிறப்பே,

“பரிசுத்தம் ஆகிறது கழகம்! இங்கே
பாவத்தை விதைத்தவர்கள் – லஞ்சம் வாங்கி
தற்கெட்டுப் போனவர்கள் எல்லாம்; ஓடி
தப்பிக்க முயலுகின்றனர்! தப்பிக்கட்டும்!
நரி எங்கே போனாலும் பரவாயில்லை
நன்றியுள்ள மனிதரெல்லாம் இருப்போம் இங்கே
எரிகின்ற விண்மீன்கள் எரிந்த பின்னை
எஞ்சி நிற்கும் விண்மீன்கள் இரவை மீட்கும்.

இந்தக் கவிதையை எங்கேயோ கேட்ட நினைவு - அல்லது படித்த நினைவு உனக்கு இருக்கும்! நிச்சயமாக இது நான் எழுதியதல்ல! 1977 ஆம் ஆண்டு முரசொலியில் நான் எழுதிய கடிதமொன்றில் இந்தக் கவிதை வரிகளை இணைத்திருந்தேன். எழுதியவர் யார் என்பதிலே காட்டுகிற ஆர்வத்தைவிட; இப்போது அவர் எங்கே என்று தேடுவதில் நீ காட்டுகிற ஆர்வத்தைவிட - மீண்டும் ஒரு முறைக்கு இருமுறை இந்தக் கவிதை வரிகளைப் படித்துப் பார்த்து - கவிஞனின் உள்ளம் படம் பிடித்துக் காட்டுகிற போலி மனிதர்களையும் உண்மையான இலட்சியவாதிகளையும் உணர்ந்து கொள்ளவும்; அவர்களை அலட்சியப்படுத்தி விட்டு உறுதிகுலையா நெஞ்சுடன் நீ நடைபோடவும் - எழுந்து நில்! ஏறுபோல் வலிவு கொள்! எதிர்ப்புகளைத் தூளாக்கு!

மூழ்கி முத்தெடுத்துக் கொடுத்தவன் முடமாகிப் போனான் என்று முத்தினைத் தூக்கித் தெருவில் பொத்தெனப் போடுவாருண்டோ? முடமானவனுக்கு அனுதாபம் - முத்து, நமது அணிமணிகளுக்கிடையே ஓர் அலங்காரம்! அப்படித்தான் இந்தக்

கவிதையும்! முடமானவன், முத்தைத் தூக்கி மீண்டும் சிப்பிக்குள் திணிக்க முடியாதல்லவா? அதுபோல இந்தக் கவிதை வரி காட்டும் உண்மையை; எழுதிய கவிஞன் விழுங்கி ஏப்பம் விட்டு விட இயலாது!

முட்டையை அடைகாக்கிறது கோழி! குஞ்சு வெளியேவருகிறது! வந்த குஞ்சை மீண்டும் முட்டைக்குள் அடைத்திட எந்தக் கோழியாலும் முடியாது; அதேபோலத்தான் அந்தக் கவிஞன், எழுபத்தி ஏழில் எழுதிய குமுறல் கவிதையை - கூடைக்குள் போட்டு மூடினாலும்; அதன் குரல் வெளியே கேட்டுத்தான் தீரும்!

கவிதை, சற்று நீளமானது - அதனால் ஒரு பகுதியை மட்டும்தான் கடிதத்தில் இன்று இணைத்துள்ளேன். இன்னும் கடுமையான சொற்பிரயோகங்கள்; கணைகளைப் போல உண்டு இந்தக் கவிதையில்!

“கடல்வற்றிக் கருவாடு உண்பதற்குக்
குடல் வற்றிக் கொண்டிருந்த கொக்கே!”

காலத்தால் மூத்த பழமொழிதான் எனினும்; கவிஞனின் எழுதுகோலில் எரி நெருப்பைக் கக்கிக் கொண்டல்லவா - புதுமைக் கோலம் கொண்டு புறப்பட்டிருக்கிறது!

கடல் வற்றிவிடும் - அதனால் கடலில் வாழும் மீன்கள் அனைத்தும் செத்துவிடும் - செத்த மீன்கள் கருவாடுகளாக மாறிவிடும் - அவற்றை உண்டு மகிழலாம் என்று கொக்கு காத்திருந்ததாம்! அந்தக் கொக்கினைப் போன்றோர் யார் - யார் என; விழிகளை அலையவிடாமலே விரைவினில் உணர முடிகிறதல்லவா உன்னால்!

அவர்கள், 77- ல் மட்டுமல்ல - 72லும் - 62லும் - 93லும் - காலதேச வர்த்தமானத்திற்கேற்ப; தங்கள் சுயவடிவத்தைப் புலப்படுத்திக் கொண்டிருப்பவர்கள்தான்! ஒருவன் நூறு அல்லது ஆயிரம் ரூபாய் வரையில் நாணயஸ்தன்! அதுவே லட்சம் என்றால்; நாணயம், கொஞ்சம் நெளியும்! கோடி என்றாலோ நாணயம், ஒளிந்தே விடும்! அப்படி நெளிந்து, ஒளிந்து கொண்ட நாணயஸ்தர்களைப் பற்றித்தான் கவிஞனின் பேனாமுனை கூரிய வாளாக மாறிக் குத்துகிறது -

"கூலிக்கு மாரடித்து வாழ்வதற்கா
குழைந்தீர்கள் நெளிந்தீர்கள்! நீங்கள் எல்லாம்
வளவமாக வாழ்வதற்கு பலபேர் இங்கே
வசந்தத்தைக் கிழமாக்கிச் செத்துப் போனார்!"

உடன்பிறப்பே, கண்ணீரில் நனைத்தெடுத்த சாட்டையடி; சந்தர்ப்பவாத சதிகாரர்கள் மீது எப்படிச் சுளீர் சுளீர் என விழுகிறது பார்த்தாயா!

துரோகிகளின் செயல் கண்டு நொந்து போன தொண்டன் நிலை எப்படி இருக்கிறதாம்! அந்தத் தொண்டன் சிந்திய கண்ணீரும் செந்நீரும் அவன் வடித்த வியர்வை யுமல்லவா; ஆயிரங்காலத்துப் பயிராம் இந்தக் கழகம் வளர்வதற்கு எரு, உரம், நீர் எல்லாமே! அவன் உழைப்பால் உயர்ந்தோர்; அதனை ஏணிப்படிகளாக்கிக் கொண்டோர் - இன்றும் அவனை ஏமாற்றிட முனைவோர்; எருக்கம் பூவைக் காட்டி, எழில் முல்லை மல்லிகை என எத்திப் பிழைக்க எண்ணிடுவோர் அவர்களுக்கு முன்னே தொண்டனின் கதி பற்றிய கவிதை வரிகள் துளைக்கிறது நெஞ்சத்தை!

"பதவியினால் உயர்ந்தீர்கள் உங்களுக்கு
பாடுபட்டு கிழிந்து போன கோணித்துண்டு
மதிலோரம் கிடக்கிறது!..."

இரங்கல் பெருமூச்சுடன் நிற்கவில்லை கவிதை!

வீதிகளில் விழா எடுக்கக் கழகத் தொண்டன்
தாலியினை அடகு வைத்தான்
வேலியோரம் சோரமன்றோ போகின்றீர்கள்!"

இப்படி இழித்துரைக்கும் இடிமின்னல் வரிகளுக்குச் சொந்தக்காரர்; இன்று எந்நிலையில் இருக்கின்றார் எனக்கேட்காதே? உடன்பிறப்பே!

"ஆழ்ந்து எடுத்த முத்தை மட்டும் பார்!
அடைகாத்து வெளிவந்த குஞ்சை மட்டும் கவனி!"

என்னே உருக்கம் - என்னே வேதனை - வீதிகளில் விழா எடுக்கக் கழகத் தொண்டன், தாலியினை அடகு வைத்தான் -

அவன் நிலையில் நானிருந்த காரணத்தால்; இக்கவிதை வரி காட்டும் கழகத் தொண்டனின் உணர்வை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது!

உன் சகோதரன் நான், ஜெனிக்கும்போதே தலைவனாக ஜெனித்தவனல்லவே; ஓர் உயர் குடிக்கோமான், விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதுபோல இழிவுபடுத்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்தவனல்லவா நான் - இன்று அந்தக் கோமான், அவர் கொட்டிய விஷத்தைச் சுற்றி வளைத்து திரையிட்டு மறைக்க முயலலாம் - ஆனால் ஏடுகளில் எழுத்துக்களாய் மின்னுவதை எவர்தான் மறைக்க இயலும் - மறுக்க இயலும் - எனவே அந்த உயர்குடி மகன் கருத்துப்படி இழிவுபடுத்தப்பட்ட சமுதாயத்தில் ஜெனித்தவன்; ஜெனிக்கும்போதே தலைவனாய் ஜெனிக்க முடியுமா என்ன?

தொண்டனாகத்தான் தெருக்களில் சுழன்றேன் - துண்டு அறிக்கை விநியோகித்தேன் சுவர்களில் விளம்பரத்தாள்களைப் பசை தடவி ஒட்டினேன் - மேடை போட்டுக் கூட்டம் நடத்தினேன் - கூட்டத்திற்கு அழைக்கப்பட்டோரை; ரயிலடியிலும் பஸ் நிலையத்திலும் நின்று வரவேற்றேன் - கூட்டச் செலவுகளுக்காக, நகை நட்டுகளை அடமானம் வைத்தேன் - அவற்றை மீட்க முடியாமல் விற்றுத் தொலைத்தேன் - இவை இன்று எழுதுவதல்ல; என்றைக்கோ நெஞ்சுக்கு நீதியில் இடம் பெற்ற நிகழ்ச்சிகள்தான்!

அதனால்தான் இந்தத்தொண்டு செய்து பழகிய உள்ளம் துடிக்கிறது - தாய்மனம் தவிப்பது போல் தவிக்கிறது - ஆசைநாயகி ஆணைப்படி, தாயின் இருதயத்தை அறுத்தெடுத்துக் கொண்டு ஓடிய மகன்; தடுக்கிக் கீழே விழுந்த போது - அந்த இதயம் திடுக்கிட்டுக் கேட்டதாமே, 'காயம் பலமா மகனே!' என்று - அந்தத் தாய்மனத்தின் உணர்வோடுதான்; தமிழினத்தின் காவல் அரணாம் இந்தக் கழகத்தைத் தணல் மூட்டித் தகர்த்திட முனைவோர் கண்டு தகிக்கின்றேன்!

தகிப்பையும் - தவிப்பையும் - தவிர்த்திட; தாயின் இதயம் பெயர்த்தெடுத்த தகாத மகனாக இல்லாமல், தாயின் இதயத்தோடு இதயமான தங்கமகன் போல - தமிழ்க் குலத்தின் சுடர் விளக்கே! தன்மானத் திருவிளக்கே! தம்பியுடையான் படைக்கஞ்சான் எனத் தலைவர் அண்ணா மொழிந்த வாசகத்தின் இலக்கணமே!

என் உயிரினும் மேலான உடன்பிறப்பே! நீ இருக்கிறாய்! - கவலையில்லை எனக்கு!

என் நெஞ்சில் நீயும் உன் நெஞ்சில் நானும் இருக்கும் போது - எளிய தொண்டனாகத் தோன்றி, இலட்சோப லட்சம் இனிய உடன்பிறப்புகளுக்குத் தலைமைத் தொண்டனாக ஊழியம் புரியும் எனக்கு, இந்த எழுபது வயதிலும் தளர்ச்சி வராமல் இருப்பதற்கு - ஏவுகணைகளாய் வரும் ஏசற்கணைகளைத் தாங்கிடும் பக்குவம் பெற்றிருப்பதற்கு, பெரியாரிடம் பெற்ற துணிவும், அண்ணாவிடம் கற்ற கனிவும்தான் காரணமெனினும் - நீயும், நீ பொழியும் பாசமும் மேலும் ஒரு காரணமன்றோ!

அன்புள்ள,

மு. க.

08-12-1993

2069. தொடரட்டும், துயர் துடைப்புப் பணி!

உடன்பிறப்பே,

கதிர்கள் கழுத்தளவுத் தண்ணீரில் மூழ்கி; நெல்மணிகள் வெள்ளத்தில் மிதந்து கொண்டிருக்கின்றன. வாழைத் தோட்டங்கள் அடியோடு அழிந்து போய்விட்டன. விளைவித்த பயிரை நம்பி வாழ்ந்து கொண்டிருந்த விவசாயிகள்; வீசிய புயலும், தாக்கிய வெள்ளமும் தங்கள் பிழைப்பையே தாக்கித் தகர்த்து விட்டதாகக் கண்ணீர் வடித்துக் கன்னத்தில் கை வைத்துக் கொண்டு சரிந்த நெற்கதிர்போல், சாய்ந்த வாழைபோல் தெருக்களில், திண்ணைகளில் திக்கற்ற நிலையில் கிடக்கின்றனர். ஆயிரக்கணக்கில் ஏழை எளியோர் வீடுகள், குடிசைகள் இருந்த அடையாளம் தெரியாமல் புயலின் கோரக் கரங்களில் சிக்கிச் சிதறிச் சீரழிந்து போய்விட்டன. இந்தப் பேரழிவின் காரணமாக ஏற்பட்டுள்ள இழப்பு பல கோடிக்கணக்கான ரூபாய் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பொருளிழப்பு மட்டுமின்றி; ஐம்பதுக்கு மேற்பட்ட உயிர் இழப்பு என்ற செய்தியும் செந்தீயாகச் சுடுகிறது உள்ளத்தை! கடலில் சென்ற மீனவர்களை அலைகள், பிணங்களாகக் கரை சேர்த்துள்ள தகவல் இன்றைக்குக்கூட வந்துள்ளது!

புகைவண்டிப் போக்குவரத்தே தமிழகத்தின் ஒரு பகுதிக்கு மூன்று நான்கு நாட்களாக இல்லை என்பதும்; பேருந்துகளேகூட அந்த வழிகளில் ஓட முடியாது என்பதும் - சாலைகளின் துண்டிப்பு எத்தகையது என்பதை விளக்குவதற்கு போதிய சான்றுகளாகும். மழையில்லையேல், வறட்சியினால் கொஞ்சம் கொஞ்சமாக பாதிக்கப்படும் மக்கள் - இது போன்றக் கடு மழையினாலும்; கொடும் வெள்ளத்தினாலும் ஒரே நாளில் பாதிக்கப்பட்டு விடுகிறார்கள்.

இத்தகைய இயற்கையின் தாக்குதல்களைப் பெருமளவு தடுத்து நிறுத்திட - இன்னமும் நமது நாட்டில் நிலையான திட்டங்கள் இல்லை! தொலை நோக்குத் திட்டங்கள் இல்லை! எனவே பாதிப்பு வருமுன் தற்காத்துக் கொள்ள இயலாமல்

ஊர்கள் சீர்குலையவும் - உயிர்கள் பலியாகவும் - பயிர்கள் பாழாகவுமான பரிதாபம் தொடர் கதையாகவே ஆகிவிட்டது! ஆம்; தொல்லை தரும் கதை - துன்பக்கதை! இது போன்ற இயற்கைச் சீற்றங்களுக்குப் பெரும்பாலும் ஆளாகி அவதிப்படுவோர், ஆவி துறப்போர் ஏழை எளியோர், விவசாயிகள், மீனவர் எனப்படுவோர்தானே!

ஆழப்படுத்தப்பட்டு, வலிவான கரைகள் வகைப்படுத்தப்பட்ட ஏரிகள், குளங்கள் - அவற்றின் கொள் அளவு அதிகமாவதின் காரணமாக வெள்ளப் பெருக்கைச் சமாளிக்க முடியும். ஆபத்தின் அளவு குறையும். இழப்பு எல்லை மீறாதிருக்கும். இது அடிக்கடி கவனம் செலுத்தித் தீரவேண்டிய அரசுத் துறையின் பணி. அவ்வாறே ஆறுகளின் இருமருங்கும் கரைகள் உயர்த்தப்பட்டுப் பலம் பொருந்தியதாகவும் - அவற்றில் இணையும், அல்லது அவற்றிலிருந்து பிரியும் வாய்க்கால்கள் ஒழுங்கு படுத்தப்பட வேண்டுமென்பதில் அவ்வப்போது அக்கறை கொண்டு பணி முடித்தால், புயல் வெள்ளங்களின் பாதிப்பைக் கட்டுப்படுத்திட முடியும். இந்த நற்பணிகளில் ஆர்வம் காட்டுவதாக இந்த அரசைப் பாராட்ட வழியில்லையே, என் செய்வது! வருமுன் காத்திட வழி வகைகளைச் சிந்தித்துச் செயல்படாவிடினும், வந்தபின் காத்திடும் பொறுப்பு உணர்வுடனாவது வரிந்து கட்டிக் கொண்டு காரியமாற்றிட வேண்டாமோ!

சில நாட்களுக்கு முன்புதான் நெல்லை, குமரி, மதுரை, முகவை ஆகிய மாவட்டங்களில் வெள்ளப் பாழ் - முதலமைச்சரின் விமானப் பார்வை - போர்க்கால நடவடிக்கைகள் போல துயர்துடைப்புப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன எனும் அறிக்கைகள் - எதிர்க்கட்சிகள் அனைத்துமே; வெள்ள நிவாரணப் பணிகளைக் கண்காணிக்க ஆங்காங்கு அனைத்துக் கட்சிக் குழுக்களை அமைத்திடக் கேட்டுக் கொண்டன. அந்தக் கோரிக்கை செவிடன் காது சங்காயிற்று!

இதோ, இப்போது புதுவை மாநிலத்துக் காரைக்கால் தொடங்கி, தஞ்சை, திருச்சி, பசும்பொன், புதுக்கோட்டை, தென்னார்க்காடு மாவட்டங்கள் - புயல் வெள்ளக் கொடுமைக்கு உள்ளாகியிருக்கின்றன! விமான மூலம் பார்வையிடுவதும், ஓரிரு இடங்களில் பாதிக்கப்பட்டோர்க்கு உணவு, உடை வழங்குவதும் ஒரு நாள் செய்திகளாக ஆகிவிடக் கூடாது!

தொடர்ந்து துயர்துடைப்புப் பணிகள் நிறைவேற்றப்படுகிறதா - நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்குச் சிறிது பொசிந்தாலும் பரவாயில்லை; முழுவதும் புல்லுக்கிறைத்த நீராகவே ஆகிவிடக் கூடாதே என்பதுதான் இப்போதுள்ள கவலை!

ஏனெனில் அப்படி ஆகிக் கொண்டிருப்பதாகப் பல பகுதிகளில் இருந்து செய்திகள் வந்த வண்ணமிருக்கின்றன! எக்கட்சியும் சார்ந்திராத பொதுமக்கள்; துயர் துடைப்புப் பணிகள் தங்களை எட்டிக் கூடப் பார்க்கவில்லையென்று பல இடங்களில் கிளர்ச்சிகளில் ஈடுபட்டுள்ளனர். மேலும் பல பகுதிகளிலோ; வந்த நிவாரணம் வழியிலேயே ஆளுங்கட்சிக்காரர்களின் அடாவடியால் அவர்களுக்குள்ளாகவே பங்கிட்டுக் கொள்ளப்பட்டு விட்டது எனும் செய்தி.

சாலையோரத்தில் வீழ்ந்து கிடக்கும் மரங்கள் அனைத்தும், ஆளுங்கட்சிக்காரர்களின் ஆதாயத்திற்காகவே வீழ்ந்து கிடப்பதாக ஒரு எண்ணம் - எனவே அவை அவர்கள் வீடு தேடிப் போகின்றன! சாலையோரத்தில் நின்று கொண்டிருக்கும் மரங்களையே காமராசர் மாவட்டம் போன்ற மாவட்டங்களில் ஒருகை பார்த்தவர்களாயிற்றே; விழுந்த மரங்களை விடுவார்களா?

மத்தியஅரசு தாராளமாக நிதி உதவி வழங்க வேண்டும் - மாநில அரசு அதனைச் செம்மையாக செலவு செய்யவேண்டும். இந்த இரண்டையும் வலியுறுத்திடக் கழகம் தயங்காது. செம்மையாக நடைபெறவும் - நடைபெறுகிறதா எனப் பார்க்கவும் - நடைபெறச் செய்யவும்தான் அனைத்துக் கட்சிக் குழுக்களை ஆங்காங்கு அமைத்திட வேண்டுமெனக் கூறுகிறோம். கூறிக்கொண்டே இருக்கிறோம். கழக உடன்பிறப்புகளைப் பொறுத்த வரையில்; பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் நம்மாலியன்ற துயர் துடைப்புப்பணிகளை மேற்கொண்டு சோர்வின்றி உழைத்திட வேண்டுகிறேன்.

நமது பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு - இந்தத் துயர் துடைப்பு பணிகளில் கழகத்தினர் ஈடுபடவேண்டுமென்பதற்காகவே சமூகநீதி இடஒதுக்கீடு உரிமைப் பேரணி இந்தத் திங்கள் 19-ஆம் நாள் என்றிருந்ததை; ஜனவரி திங்கள் 2-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. டிசம்பர் 14-ஆம் நாள் - வெள்ள நிவாரணப்பணி ஊழல்களையும், பஸ் கட்டண உயர்வு

போன்ற மக்கள் விரோதச் செயல்களையும் கண்டித்து வட்டத் தலைநகர்களில் நடக்க இருந்த ஆர்ப்பாட்டங்கள் டிசம்பர் 17 - ஆம் நாளுக்கு மாற்றப்பட்டுள்ளது. எனவே இந்த இடைக்காலத்தைப் பயன்படுத்திக் கொண்டு, தமிழகத்திலும் புதுவை மாநிலத்திலும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு ஆறுதலாகவும், அருந்துணை யாகவும் கழகக் கண்மணிகள் தொண்டாற்றுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அப்பகுதிகளுக்குச் சென்று நிலையை அறிந்திடவும் - விபரங்களைச் சேகரிக்கவும் - பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளவாறு தலைமைக் கழகச் செயலாளர் துரைமுருகன், தீர்மானக்குழுச் செயலாளர் ரகுமான்கான், விவசாய அணிச் செயலாளர் பொன்முடி, இணைச் செயலாளர் கே.பி. ராமலிங்கம் ஆகியோரைக் கொண்ட குழு, வர இருக்கிறது. மாவட்டக் கழகச் செயலாளர்களும், பொறுப்பாளர்களும் இக்குழுவினருடன் தொடர்பு கொண்டு, அவதியுறும் மக்களுக்கு அல்லல் போக்கிடும் வழிவகைகளைக் காண்பதில் அக்கறை செலுத்திடுவர் என நம்புகிறேன்.

அன்புள்ள,

மு. க.

09-12-1993

2070. காட்டுமன்னார் கோயில், காட்டும் படம்!

உடன்பிறப்பே,

உசேன்கான் எனும் ஓர் உடன்பிறப்பு; புயல் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட தென் ஆர்க்காடு வள்ளலார் மாவட்டத்தில் காட்டுமன்னார் கோயிலில் இருந்து எழுதியுள்ள கடிதத்தை, இன்றைய என் கடிதத்துடன் இணைத்துள்ளேன். வெள்ள நிவாரணப் பணிகள் விரைவாக நடைபெறவில்லை - நடைபெறுகிற சில பணிகளிலும் முறைகேடுகள் மலிந்துள்ளன என்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக எதிர்க்கட்சிகளின் சார்பில் கருத்துக்களைச் சொன்னால் கடுங்கோபம் வருகிறது அமைச்சர்களுக்கு!

எல்லாம் ஒழுங்காகத்தான் நடைபெறுகிறது. எங்களுக்கு யாரும் உபதேசம் செய்ய வேண்டாம் என்று ஆத்திரம் அலை மோத அறிக்கைகள் விடுத்திடும் ஆளுங்கட்சியினரும், அமைச்சர் பெருமக்களும் காட்டுமன்னார்கோயிலில் இருந்து வந்துள்ள கடிதம் தெரிவிக்கும் உண்மைகளை உணர்ந்து பார்க்கட்டும்!

நான் அவர்களிடம் தவறான வேண்டுகோளை வைக்கிறேன் என்று எண்ணுகிறேன்! ஏனெனில் ஊழலுக்குத் துணை போகிறவர்களிடமே உண்மைகளை உணர்ந்து பார்க்கச் சொல்வது எப்படி சரியான முகவரியில் முன் வைக்கப்படும் வேண்டுகோளாக இருக்க முடியும்!

காட்டுமன்னார்கோயில் துண்டிக்கப்பட்ட நிலையில் இருப்பதாக - அங்கிருந்து எந்தத் தொடர்பும் கொள்ள இயலாத சூழலில் - தாமதமாக என்னிடம் தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்ட மாவட்டச் செயலாளர் தம்பி பன்னீர்செல்வம், வள்ளலாளர் மாவட்டம் முழுவதுமே புயல், வெள்ளத்தால் பேரிழப்புக்கு உள்ளாகியிருப்பதை எடுத்துச் சொன்னார். அரசின் துயர்துடைப்புப்பணிகள் ஆமை வேகத்திலேகூட

நடைபெறவில்லை என்பதையும் வேதனைப்படும் மக்களின் சார்பாக என்னிடம் விளக்கினார்.

ஆனால் அமைச்சர்களோ, அரசியல் ஆதாயத்திற்காக தி.மு.கழகம் இந்த அரசைக் குறை கூறுகிறது என்று சினம் கொள்கிறார்கள். சீறிப்பாய்கிறார்கள்.

உசேன் கான் எழுதியுள்ள ஒரு கடிதம் போதும்; தமிழ்நாட்டில் வெள்ளம் பாதித்துள்ள பகுதிகளில் தக்க நிவாரணப்பணிகள் உரிய நேரத்தில் நடைபெறவில்லை என்பதை மெய்ப்பித்திட! இதோ; அந்தக் கடிதம்.-

> "மதிப்புக்குரிய தலைவர் அவர்களுக்கு
> காட்டுமன்னார்கோயில் உசேன்கான் எழுதுவது.
> சமீபத்தில் ஏற்பட்ட புயல் வெள்ள நாட்களில் நானும் இவ்வூர் மக்களும் அலையில் துரும்பு போலவும், நெருப்பில் புழுப்போலவும் துடித்துத் துன்புற்றோம். இந்த அரசாங்கம் எந்தவித முன் எச்சரிக்கை நடவடிக்கையும் எடுக்காததால் தவித்தோம். 3.12.93 சனிக்கிழமை இரவு ஊர் மக்கள், தாசில்தாரை அணுகி - வடவாறு உடையும் தருவாயில் உள்ளது, எனவே எங்களுடன் உங்கள் ஆட்களையும் வாகனங்களையும் அனுப்புங்கள் என்று கேட்டோம். அதற்கு அவர் அதெல்லாம் ஒன்றும் ஆகாது எல்லாம் காலையில் பார்த்துக் கொள்ளலாம் என்றும் பதில் கூறிவிட்டு படுக்கச் சென்றுவிட்டார். எவ்வளவோ கேட்டும் பயனில்லை. மறுத்துவிட்டார். ஊர்மக்கள் நினைத்த படியும் பயந்த படியும் மறுநாள் 4.12.93 அதிகாலை 3 மணிக்கெல்லாம் கரை உடைந்து விட்டது. மக்கள் தவித்தனர். முடிந்த அளவு தங்களைத் தாங்களே உயிர் காத்துக் கொண்ட போதிலும் எங்களின் உடைமைகளை பாழானதை மீட்க முடியவில்லை. உடைப்பெடுத்த வெள்ளம், அன்று மதியம் 2 மணிக்குள் எங்கள் பகுதியான சந்தத்தோப்பு, நெற்கிருப்பு, ராமக்கோட்டம், மற்றும் கொளக்குடி, கஸ்பா நகரத்தில் அண்ணா நகர், பேரரசி தெரு முதலிய பகுதிகளில் நுழைந்து எல்லாம் நீரில் முழ்கின. ஆனால் அன்று மாலை வரையில் அரசு அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இப்படி இரண்டு நாட்கள் சென்றன.

இரண்டு நாளும் மக்கள் உணவுக்கும், இருப்பிடத்துக்கும் தவித்தனர். முடிந்த அளவு உதவிகளை இந்தப் பகுதி வர்த்தகச் சங்கத்தினரும் வசதி படைத்தவர்களும் செய்தனர். அதன் பிறகே அரசின் உதவி வந்தது. அதுவும் மக்களுக்கு சரிவரச் சேரவில்லை. இந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினர் எந்த உதவியும் செய்ய முன் வரவில்லை. ஆனால் புயலில் விழுந்த புளியமரங்கள், வேப்ப மரங்களின் மீது மட்டும் தனிக் கவனம் செலுத்தினர்.

இன்று வரையில் இவ்வூர் இருளில்தான் மூழ்கியிருக்கிறது. இதைப் பயன்படுத்தி, பல திருட்டுகள் வேறு நடக்கின்றன. 8.12.93 அன்று வள்ளலார் மாவட்ட கலெக்டர் வருவதாகத் தெரிந்தவுடன், அதிகாரிகள் நிவாரண உதவிகளைச் செய்வதாகப் பரபரப்புக் காட்டினார்கள். கலெக்டருக்கு மின் விசிறி தேவை என்பதற்காகவோ என்னமோ அன்று மட்டும் மின் வசதி செய்யப்பட்டது. பிறகு அந்த வசதி அகற்றப்பட்டுவிட்டது. ஓரளவு மின்சார வசதிக்கும் இப்போது வர்த்தக சங்கத்தார்தான் முயற்சி எடுத்துள்ளார்கள்...தங்கள் மூலம் எங்கள் குறை தீர்க்கப்படும் என்று நம்புகிறோம்...”

இவ்வாறு நீளுகிறது அந்தக் கடிதம். கடிதத்தின் நகல், கழகத்தின் சார்பில் வெள்ளப் பகுதிகளைப் பார்வையிடச் சென்றுள்ள கழகக் குழுவினர்க்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இயற்கையின் கொடுஞ்சீற்றத்துக்கு இலக்கான பகுதிகள் அனைத்திலும்; இதுபோன்ற நிலையுள்ளது என்பதையும் - ஒரு மாதத்திற்கு முன்பு தென் மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புக்கே உரிய நிவாரணம் இதுவரை வழங்கப்படவில்லை என்பதையும் - எடுத்துக்காட்டி, கண்டனத்தைத் தெரிவித்து, அரசின் கவனத்தைத் திருப்புவதற்காகவும், முறைகேடுகள் நடைபெறாமல் தடுப்பதற்காகவும் வருகிற 17- ஆம் நாள் நடத்தப்படும் தி.மு.க. அறவழி ஆர்ப்பாட்டத்தில் இந்தப் பிரச்சினையும் முக்கியமான ஒன்றாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

இஃதன்னியில் பஸ் கட்டண உயர்வால் அல்லற்படும் ஏழை எளிய நடுத்தர மக்களின் கோரிக்கையை எதிரொலிக்கவும்,

வலியுறுத்தவும் அதே நாளில் ஆங்காங்கு நடைபெறும் ஆர்ப்பாட்டங்களில் கழகத்தினர் அணி வகுக்க இருக்கிறார்கள். இந்த ஆட்சி பொறுப்பேற்ற நாள் முதலாக - அரிசி விலையிலிருந்து அத்யாவசியப் பண்டங்கள் அனைத்தும் விலை உயர்வுதான்! அதுவும் எட்டவே முடியாத அளவுக்கு! வெந்த புண்ணில் வேலாக விவசாயிகளுக்கு உரவிலை உயர்வு! நிலவரி உயர்வு! நடுத்தர மக்களுக்கு வீட்டுவரி உயர்வு! ஏழை எளியோரின் மலிவான போக்குவரத்து சாதனமான பஸ்களுக்கும் கட்டண உயர்வு! அதுவும் கண்டபடி தாறுமாறாக!

இத்தகைய மக்கள் பிரச்சினைகளுக்காக, தொடர்ந்து போர்க்குரல் எழுப்பும் கழகம் - இப்போதும் 17-ந் தேதி மாநில முழுதும் மகத்தான ஆர்ப்பாட்டங்களை அறவழியில், அமைதியான முறையில் நடத்துகிறது! உடன்பிறப்பே; உனக்கு நான் தனியாகச் சொல்ல வேண்டுமா என்ன - நீயும் அந்த அணிவகுப்புகளில் ஒன்றில் இருப்பாய் என்பது எனக்கு நன்றாகவே தெரியும்.

அன்புள்ள,

மு. க.

14-12-1993

2071. ஊனில் உயிரில் கலந்த உணர்வு இது!

உடன்பிறப்பே,

இது பெரியாரும் அண்ணாவும் பக்குவப்படுத்தியுள்ள மண் - இந்த மண்ணில் மதவெறிச் சேட்டைகள் தலைகாட்ட முற்பட்டால்; அவற்றின் தலையிலடித்துத் துரத்தக்கூடிய சிந்தனைத் தெளிவை இந்த மண்ணின் மைந்தர்கள் பெற்றிருக்கிறார்கள் என்பதால்தான்; கடந்த ஆண்டு டெல்லியில் நடைபெற்ற இந்திய ஒருமைப்பாடு கூட்டத்தில் - பாரதீய ஜனதாவின் பக்கம் நின்று, அயோத்தியில் பிரச்சினைக்குரிய இடத்தில் அறிவிக்கப்பட்ட கரசேவை என்னும் காட்டு மிராண்டிச் செயலை அனுமதிக்க வேண்டும் என்று பரிந்துரைத்துப் பேசிய தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தமிழ்நாட்டு மக்களின் கடும் எதிர்ப்பையும் தீவிரக் கண்டனத்தையும் சமாளிக்க முடியாமல் திணறிப் போய், இராமர் கோயில்தான் கட்டச்சொன்னேன், பாபர் மசூதியை இடிக்கச்சொல்லவில்லை என்று கழுவிய மீனில் நழுவிய மீனாகக் கதை சொல்லித் தப்பிக்கப் பார்த்தார்.

ஆனால் அந்தக் கட்டுக்கதையை, மதவெறியை அனுமதிக்க மறுத்திடும் அறிவார்ந்த மக்களும் - சிறுபான்மைச் சமுதாயத்தினரும் ஒப்புக் கொள்ளாமல் ஒதுக்கித் தள்ளிவிட்டனர். காரணம்; தொடக்கத்தில் நான் குறிப்பிட்டுள்ளது போல இது தந்தை பெரியாரும் - பேரறிஞர் அண்ணாவும் தங்கள் பேச்சால், எழுத்தால், பெருந்தொண்டினால், பதப்படுத்தி வைத்துள்ள நிலமாகும். இந்த நிலத்தில் வெறியூட்டும் விஷக் கொடிகளோ - வன்முறைச் செடிகளோ, எந்தக் காலத்திலும் பயிர்களாக செழித்து வளர விடமாட்டோம். மனித நேயப் பண்பாட்டைப் பாழாக்க முனையும் அந்தச் செடி கொடிகளைக்களைகளைப் போல அகற்றி, அமைதிக் கதிரைத் தழைக்கச் செய்யும் ஆற்றல் உள்ளவர்களாம் நம்மிடம், ஆண்டவன் பெயராலோ - மதம், இதிகாச புராணங்கள்

இவற்றின் பெயராலோ துவேஷ உணர்வுகளை எவரும் பரப்பிட எருவிட்டு உதவிட மாட்டவே மாட்டோம்.

> “சாதி சாதி என்று பேசுகிறீரே - பாதிக்குதே பசியென்றுரைத்து வீதியிலே புரளும் வடக்குமலைப் பரதேசிக்கு உமது சாதி, சாதித்த நீதி என்ன? வேதியர்க்கு வெண்பட்டும் வெண்பொங்கலும் அளித்த சாதி, அவர்கள் வைத்த மீதியையாவது நாதியற்றவர்க்கு அளித்திட நினைத்ததா? பேதியும் பீதியும் ஏழைகளின் சேரிக்கு விடுத்தது உமது சாதியல்லவா? போதிமரத்துப் புத்தன் புலம்பியதும், ஆதிமகனாம் வள்ளுவன் அலறியதும் சாதி ஒழிய வேண்டுமென்றுதானே!”

என்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே தூக்குமேடை நாடகத்துக்கு உரையாடல் எழுதி நானே நடிகவேள் ராதா அவர்களுடன் நடித்துத் திராவிட இயக்கத்தின் கொள்கைகளைப் பரப்பும் பணியில் ஈடுபட்டேன் என்றால் - அது சினிமாவின் தாக்கமல்ல; சிந்தனைச் சிற்பி பெரியாரின் தாக்கம் - அறிவியக்கப் பேரறிஞர் அண்ணாவின் தாக்கம்!

பெரியார், அண்ணா, என் போன்றோர் தாக்கத்தினால் திரையுலகில் திருப்பம் ஏற்பட்டதும், அந்தத் திருப்பத்தால் திராவிட இயக்கம் ஓரளவு பிரச்சாரப்பயன் பெற்றதும்தான் உண்மையே தவிர - ஆடையாகப் பயன்படுவது இந்த இயக்கத்தின் அடிப்படைக் கொள்கை, அதில் அழகிய முந்தானையாக இருப்பதே கலைத்துறைப்பணி என்று அண்ணா அன்றே சொல்லியிருப்பதை ஒரு சிலர் மறந்துவிட்டு - முந்தானையே முழு ஆடை என எண்ணிச் செயல்பட்டதால்தான் இடையிடையே மூகாம்பிகைகள் வர நேரிட்டது என்பதை மறைக்க முடியாதல்லவா!

இன்று உத்திரபிரதேசத்தில் - ஆம்; ஒரு காலத்தில் இந்தியாவுக்குப் பிரதமர்களைப் பிரசவித்துக் கொடுக்கும் முழு உரிமையும் பெற்றிருந்த மாநிலத்தில் - இந்தியாவிலேயே பெரும் நிலப்பரப்பையும், அதிக மக்கள் தொகையையும், எல்லா மாநிலங்களையும் விடப் பெரும்பான்மை நாடாளுமன்றத் தொகுதிகளையும் கொண்ட மாநிலத்தில் - இராமர் படம் காட்டியவர்களைப் புறக்கணித்து, உயர்ஜாதி மாயை பேசியவர்களை அலட்சியப்படுத்தி, ஒடுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் ஒருங்கிணைந்த குரல் - முலாயம் சிங் யாதவ் அவர்களுக்கும்,

கன்ஷிராம் அவர்களுக்கும் ஆதரவாக எழுந்துள்ளது என்றால்; அதற்குக் காரணம் சில ஆண்டுகளுக்கு முன்பு பவளவிழா கொண்டாடி முடித்துள்ள நீதிக்கட்சியின் தோன்றல்களும், அவர்கள் ஓங்கிப் பிடித்த சமூகநீதிக் கொடியைக் கையில் ஏந்திப் படை நடத்திய பெரியாரும் அண்ணாவும் அவர்களைத் தொடர்ந்து பயணம் செய்யும் இந்தத் திராவிட இயக்கமும் அன்றோ! எனவே; இந்த மண்ணில் ஊன்றப்பட்ட விதை, முளைவிட்டு, கொடியாகிப் படர்ந்து - இன்றைக்கு இந்தியா முழுதும் உள்ள பிற்படுத்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகளின் கவனத்தைக் கவர்ந்துள்ளது என்பதுதானே உண்மை!

மிகுந்த எச்சரிக்கையாக நான் இந்தியா முழுதுமுள்ள பிற்படுத்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகளின் கவனத்தைக் கவர்ந்துள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறேன். பிரதிநிதிகள் மட்டுமல்லாது பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவருமே கவனிக்கத் தொடங்கி விட்டால் அப்போது பெரும் பிரளயமே வந்து விடும். வராமல் போகாது என்ற நம்பிக்கை எனக்கு உண்டு!

வானத்தில் பரவலாக மிதந்து கொண்டிருக்கிற முகில்கள் - அதைப் போலத்தான் இன்றைக்கு இந்தியா நாடு முழுதும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான உரிமைக்குரல்கள்!

ஆனால் அந்த முகில்கள் சூரிய வெப்பத்தால் மொண்டு சென்றுள்ள நீர் - இங்கிருந்து, அதாவது தமிழ்நாட்டிலிருந்து பெற்றதாயிற்றே - அதனால் இங்குள்ள திராவிட இயக்கத்தினர் பெருமிதம் கொள்வது இயல்புதானே -

இவ்வளவுக்கும் பிறகு கூட, இந்த நாட்டின் புகழ்மிக்க மேதையும் - உலக அரங்கில் விரல்விட்டு எண்ணக்கூடிய அறிஞர்களில் டாக்டர் அம்பேத்கருக்கு உரிய சிறப்பைத் தருவதற்கு, அவர் பிறந்த மராட்டிய மண்டிலமே தயங்கிக் கொண்டிருக்கிறது எனக் கேள்விப்படும்போது - எழுதப்பட்ட சமுதாய மக்களின் அடிப்படை சுதந்திரத்திற்காகப் போர் முழக்கம் செய்த அவரது நினைவைப் போற்றுவதின் மூலம் அந்த மக்களின் எழுச்சிக்குத் துணை நிற்க நமது திராவிட இயக்கம் எப்போதோ முந்திக்கொண்டு கடமையாற்றியிருக்கிறது என்பதை எண்ணிப் பெருமைப்பட முடிகிறதல்லவா!

அம்பேத்கரைப் பெற்றெடுத்த மராட்டிய மண்ணிலும் - அவரது புகழ்மணம் நெருங்கிப் பரவிய வடபுலத்து மாநிலங்களிலும் அவரை நினைவு கூர்ந்திடத் தவறிய அந்தக் காலத்திலேயே நமது தமிழகத்தில் அவரின் நினைவுச் சின்னங்கள் எங்கெங்கும் தோன்றின எனில்; அதுவும் இந்த இயக்கச் சாதனைப் பணிகளில் இடம் பெற்றவைதானே!

உடன்பிறப்பே, இதோ அவர் தோன்றிய மராட்டிய மாநிலத்தில் மராத்வாடா பல்கலைக் கழகத்துக்கு அம்பேத்கர் பெயரைச் சூட்ட வேண்டுமென்று பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே மராட்டிய சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தும்கூட, இதுவரையில் அந்தத் தீர்மானத்திற்கேற்ப அந்தப் பல்கலைக் கழகத்திற்கு அவர் பெயர் சூட்டப்படவே இல்லை. இந்தத் தயக்கத்தைக் கண்டித்து ஒரு அமைச்சரே கூட பதவி துறந்துள்ளார். 15 ஆண்டுகள் கிடப்பில் போடப்பட்ட அந்தத் தீர்மானத்தைப் பற்றி இப்போது மராட்டியக் காங்கிரஸ் அரசு பரிசீலனை செய்கிறதாம். சிவசேனை எதிர்க்கிறதாம்; அதனால், முடிவு எடுக்கவில்லையாம். பதினைந்து ஆண்டுகளுக்கு முன் நிறைவேற்றப்பட்ட சட்டமன்றத் தீர்மானத்தின் கதி இப்படியிருக்கிறது.

ஆனால்; உனக்கு நினைவிருக்கிறதா - இருபது ஆண்டுகளுக்கு முன்பே இங்கே கழக ஆட்சியில் எடுத்த முயற்சியின் காரணமாகவும் அம்மையார் சத்தியவாணிமுத்து அவர்கள் அமைச்சராக இருந்தபோது காட்டிய ஆர்வத்தின் காரணமாகவும் - மறைந்த என் நண்பர் ஏ.எல். சீனிவாசன் அவர்களது பேருதவி காரணமாகவும் - நானே முன்னின்று செயல்பட்டு நாட்டிலேயே முதன் முதலாக வடசென்னையில் அம்பேத்கர் அரசினர் கல்லூரி தொடங்கிய நிகழ்ச்சி!

15.8.1972-ல் பாதுகாப்பு அமைச்சர் பாபு ஜெகஜீவன்ராம் அவர்கள், என் தலைமையில் அடிக்கல் நாட்டி, அம்பேத்கர் பிறந்த நாளான 14.4.1974-ல் என்னால் திறந்து வைக்கப்பட்டது அந்தக் கல்லூரி; கல்வி அமைச்சர் நாவலர் தலைமையில்!

அதைத்தொடர்ந்து எத்தனையோ சிலைகளை அவர் நினைவு போற்றிடத் திறந்து வைத்த விழாக்கள்! சட்டக்கல்லூரிக்கு அம்பேத்கர் பெயர்!

இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலேதான் - 1989-ல் கழக ஆட்சி மீண்டும் மலர்ந்தபோது; அம்பேத்கர் பெயரால் வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம் என்ற புதிய மாவட்டமே உருவாக்கப்பட்டது.

இவற்றையெல்லாம் நினைவுபடுத்திக் கொண்டே இருக்க வேண்டியுள்ளது. இல்லையேல் திட்டமிட்டு வரலாற்றுச் செய்திகளை மறைப்போர் கையில் உண்மைகள் சிக்கி உருக்குலைந்து போய் விடக்கூடும்.

சாதி மத பேதம் அகற்றும் சமுதாயப் புரட்சிக்கு நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொருவர் குரல் கொடுத்தனர் என்றாலும் கூட - அந்தப் புரட்சிக்கு வடிவம் கொடுத்து, வகைப்படுத்தி, பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர் - விழிப்பு உணர்ச்சிக்காகவும் உரிமைக்காகவும் பெரும் இயக்கமே நடத்தியவர் பெரியார் அவர்களே என்பதும் - அந்தப் பேரியக்கத்தை அரசியல் ரீதியாகவும் வளர்த்தவர் அண்ணா என்பதும் - அழிக்க முடியாத வரலாற்றுச் செய்திகளாகும்.

அந்த இயக்கத்தைக் கட்டுக்கோப்புடன் நடத்திச் செல்லும் கடமை உணர்வு நமது ஊனில், உயிரில், இரண்டறக் கலந்த ஒன்றாகும் என்பதை மறவாமல் பயணம் தொடர்வோமாக!

அன்புடன்,

மு. க.

15-12-1993

2072. கட்டுப்பாடும் - ஜனநாயகமும்!

உடன்பிறப்பே,

ஓர் ஆட்சிக்கோ அல்லது ஓர் இயக்கத்துக்கோ - அது இயங்குவதற்கான முறைகள் பல இருந்தாலும்; எல்லா முறைகளையும் சீர்தூக்கிப் பார்த்து இறுதியாக - குறைந்த அளவு குறைபாடுடைய முறை ஜனநாயக முறைதான் என்று தெளிந்ததால் அந்த முறையே இன்று ஏற்றுக் கொள்ளப்பட்ட முறையாக இருக்கிறது.

இந்த உண்மையை நான் மறந்துவிடாமல் இந்தக் கடிதத்தில் இரண்டு கட்டுரைகளை இணைத்திருக்கிறேன்.

ஒரு கட்டுரை 1953 ஆம் ஆண்டு கல்லக்குடி போராட்டத்தில் ஆறுமாதக் கடுங்காவல் தண்டனை பெற்று திருச்சி சிறையில் நான் இருந்தபோது எழுதியது. ஆறுமாதக் கடுங்காவல் என்ற நூலில் இடம் பெற்றுள்ள கட்டுரை!

மற்றொன்று தந்தை பெரியார் அவர்கள்; ஜனநாயக முறையைப் பயன்படுத்திக் கொண்டு தி.மு.கழகத்தில் சிலர் பூசல்களை உருவாக்கிய 1972 ஆம் ஆண்டு - கால கட்டத்தில் உண்மை என்ற இதழில் மிகுந்த கோபத்துடன் எழுதிய கட்டுரை!

இரண்டையும் உன் போன்ற உடன்பிறப்புகள் படித்துப் பார்த்து நிலை உணர வேண்டுமென்பதற்காக இதோ தருகிறேன்.

முதலில் நான் எழுதிய ஆறுமாதக் கடுங்காவல் நூலில் உள்ள கட்டுரை :-

> ஒருநாள் ஜனநாயகம் என்பது பற்றி சிறைச்சாலையில் அருமையாக கழக நண்பர்கள் பேசினார்கள். பேசுவது மட்டுமன்றி ஜனநாயகத்தின் உண்மை உருவத்தையும் - ஜனநாயகம் என்ற பெயரால் நாட்டிலே திரியும் போலித் தலைவர்களின் தன்மையையும் - ஆராய வேண்டியது இன்றைய சூழ்நிலையிலே மிக மிக அவசியமான காரியம்.

எந்தச் சொல்லிலும், அதனதன் பெயரிலே மயங்கி விடாமல் அது புரியும் செயலை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். உதாரணமாக - கும்பாபிஷேகம் - கொள்ளையடித்தல் - என்ற இரு வார்த்தைகளை எடுத்துக் கொள்வோம்.

பழைய கால மன்னர்கள் கட்டும் கோயில்களில் மூல விக்கிரகம் அமைக்கும்போது அதன் அடியில் விலை உயர்ந்த நவரத்தினங்களை அளவின்றிக் கொட்டி - அதன் மீது விக்கிரகத்தை அமைப்பார்கள். இந்த ரகசியத்தை சில பெரிய மனிதர்கள் உணர்ந்திருப்பார்கள். அந்தப் பழைய காலத்து ஆலயத்தைப் புதுப்பித்து, ஜீரணோத்தாரண மகா கும்பாபிஷேகம் நடத்தப் போகிறேன் என்று பெரிய வள்ளலைப் போல கிளம்புவார்கள். அவர்களுடைய குறியெல்லாம் மூல விக்கிரகத்தின் அடியிலே அந்தநாள் மன்னர் கொட்டியிருக்கும் நவரத்தினங்களின் மீதுதான். கோயில் பழுது பார்க்கும் வேலை நடைபெறும். அந்தப் போர்வையினுள்ளே மூல விக்கிரகத்தின் அடிப்பாகம் தோண்டப்பட்டு நவரத்தினங்கள், வள்ளல்களின் வீடு போய்ச் சேர்ந்துவிடும். கிடைத்த லாபத்திலே கால் பங்கு செலவிலே - கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெறும். கொடை வள்ளலே! குணக்குன்றே! எனப் பக்தர்கள் பாராட்டுவார்கள். கும்பாபிஷேகம் என்ற குளிர்ச்சியான சொல்லிலே திரைமறைவுக் கொள்ளை சுமுகமாக நடைபெற்று விடுகிறது. ஒரு சில கொள்ளைக்காரர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்களுக்கு கொள்ளையடிப்பதே தொழில், கொள்ளைக்காரர் என்ற பகிரங்கப் பட்டமும் பெற்றவர்கள். அவர்கள் கொள்ளையடித்த பொருள்களை எல்லாம் ஏழைகளுக்கே பங்கிட்டுக் கொடுத்து அதில் ஓர் தனி இன்பம் கண்டிருக்கிறார்கள்.

இரண்டு வார்த்தைகள் - கும்பாபிஷேகம் - கொள்ளையடித்தல்! கும்பாபிஷேகத்தின் பெயரால் கொள்ளை - கொள்ளையின் பெயரால், கும்பாபிஷேகத்தைவிட சிறப்பான செயல்!

இப்போது - ஜனநாயகம் என்ற சொல்லைப்பற்றி யோசிப்போம்! ஜனநாயகம் - சர்வாதிகாரம் - கும்பாபிஷேகம் - கொள்ளையடித்தல் இந்த வார்த்தைகளையும் பொருத்திப் பார்ப்போம்.

ஜனநாயகத்தின் பெயரால் சர்வாதிகாரம் தலைவிரித்தாடும் நாடுகள் எத்தனையோ உண்டு! வெகுதூரம் போவானேன்; இந்தியாவிலேயே எத்தனை ஆதாரம் வேண்டும் அதற்கு! சட்டசபையிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு மதிப்பு கொடுப்பது தன்னிஷ்டத்தைப் பொறுத்தது என சென்னை மந்திரியார் ஆச்சாரியார் கூறவில்லையா?

மக்களால் தோற்கடிக்கப்பட்டவர்களும், மக்கள் முன்பு தேர்தலின்போது நிற்காதவர்களும், கொல்லைப்புற வழியாக மந்திரி நாற்காலிகளைப் பிடித்துக் கொள்ளவில்லையா? திருவாங்கூர் கொச்சியிலே ஜனநாயகச் சிசு, துடிக்கத் துடிக்க கொல்லப்படவில்லையா?

ஜனநாயகம் - இன்பமான சொல்! அதிலே நஞ்சு கலப்போரும், அந்தச் சொல்லை வைத்துக்கொண்டு காணப்படுகிறார்கள்.

இங்கிலாந்தில் சார்லசின் தலையை வெட்டி எறிந்து - கிராம்வெல் நடத்திய பார்லிமெண்டு ஆட்சி சிறிதுகாலம் நடைபெற்று - மீண்டும் அரசுரிமைக்கு இடம் ஏற்பட்டு - அரசனின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தி பார்லிமெண்டு நாட்டையாளத் தொடங்குகிறது. ஆனால் அந்தப் பார்லிமெண்டு மக்களின் பிரதிநிதித்துவம் பெற்றதாகவா இருந்தது. கேட்கும் போது சுவையாகத்தானிருக்கிறது - அரசனின் அதிகாரத்தை பார்லிமெண்டு கட்டுப்படுத்தி விட்டது என்ற செய்தியை! ஆனால் அதனுள் மறைந்து கிடக்கும் உண்மை மகாபயங்கரமான தாயிருக்கிறதே! 1793ஆம் ஆண்டு இங்கிலாந்திலேயிருந்த காமன்ஸ் சபையில் 306 உறுப்பினர்கள் இருந்தார்களாம்.

அவ்வளவுபேரும் மொத்தம் 160 வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்களாம். 306 பேர் 106 பேரால்

தேர்ந்தெடுக்கப்படுவது எவ்வளவு ஆச்சரியம் என்கிறீர்களா? அதாவது 17- ஆம் நூற்றாண்டில் நடந்த ஆச்சரியம் - இதோ 20ஆம் நூற்றாண்டில் யாராலுமே தேர்ந்தெடுக்கப்படாதவர்கள் மந்திரிகளாக வருகிறார்களே - ஜனநாயக ஆட்சியின் பெயரால் இந்தியாவில்! இது எத்துணை மகத்தான ஆச்சரியம்! கும்பாபிஷேகம் செய்து கொள்ளையடிப்பதைவிட பெரிய ஆச்சரியமல்லவா இது!

கும்பாபிஷேகத்தையும் ஜனநாயகத்தையும் ஒன்றாக ஒப்பிட்டு விட்டேனேயென்று கருதுகிறீர்களா? கும்பாபிஷேகம் நல்ல எண்ணத்தோடு செய்யப்படுவதும் - பக்தர்களால் பாராட்டப்படுவதும்கூட உண்டு! நாம் ஆராயப் புகுந்தது கும்பாபிஷேகத்தின் தன்மையை அல்ல! அதை நடத்துவோரின் குறிக்கோளைத்தான். பக்தர்களுக்கு இனிப்பான வார்த்தை; நாசகாரர்களின் நாடகத்திற்கு பயன்படுகிறது. மக்களுக்கு இனிப்பான ஜனநாயகம் என்ற வார்த்தை மகோன்மத்தர்களால் பாழ்படுத்தவும் படுகிறது. அழகான மலர்மாலையைப் பிய்த்தெறியும் மந்தியும் உண்டு. காதலியின் கழுத்திலே அணிந்து களிப்படையும் காதலனும் உண்டு. மாலையின் நிலையிலே ஜனநாயகமும், மந்தியின் நிலையிலே ஆட்சியாளரும் இருந்துவிட்டால் அந்த ஜனநாயகம் யாருக்குப் பயன்பட முடியும்!

ஜனநாயகத்தின் பெயரால் கொடுமைகள் நடந்து விடுகின்றன. உதாரணம் சுலபமான உதாரணம் - உள்ளங்கை நெல்லிக்கனி போன்ற உதாரணம் - இந்தியா!

சர்வாதிகாரத்தின் பெயரால் நன்மைகள் மலர்வதும் உண்டு! கொள்ளைக்காரன் ஏழைகளுக்கே உதவுகிறான் என்று பார்த்தோமே - அதுபோல!

உதாரணம்-தற்காலிகமாக எகிப்தையே எடுத்துக் கொள்வோம்! ஸ்டாலினின் ரஷ்யாவையும் காண்போம்!

தோட்டத்து மலர்கள் அத்தனையும் ஒருவனே பறிப்பது - பறிக்க உரிமை கொண்டாடுவதும் - பறித்த மலர்களை

இப்படித்தான் கசக்கி எறிவேன் என்பது - சர்வாதிகாரம் என்றால், பறித்த மலர்களை பாங்கான மாலையாக்கி, மக்கள் மன்றம் என்ற எழிலோவியத்திற்கு அணிவிப்பது சர்வாதிகாரத்துடன் ஒட்டியிருக்கும், நல்லெண்ணம் நிறைந்த ஜனநாயக உணர்ச்சி என்றுதான் கூற வேண்டும்.

இந்த சர்வாதிகாரம் என்ற வார்த்தையை கொள்ளையடித்தல் என்ற வார்த்தையோடு கூட ஒப்பிடுவது தவறுதான்! விளக்கம் தெளிவாக இருக்கவேண்டும் என்ற அந்த உதாரணத்தைக் கையாள நேரிட்டது.

மக்கள்தான் ஜனநாயகத்தை தோற்றுவிக்கிறார்கள். சில சமயங்களில் அவர்களும் அதை அழித்து விடுகிறார்கள். நாங்கள் வெட்டிய கிணறுதானே! ஆளுக்கொரு கல்போட்டு தூர்த்து விடுகிறோம் என்று கூறுகிற அறியாமை ஒத்ததாகும் இது. நாம் வெட்டிய கிணறுதான் ஆளுக்கு ஒரு குடம் தண்ணீர் எடுக்கத்தான் உரிமை இருக்கிறது - கல்போட எண்ணுவது தவறு - அதற்கு உரிமையளிக்கவும் கூடாது என்ற அறிவுரையுடன் கற்களைத் தடுப்பதற்காக கிணற்றின் மீது இரும்பு வலை போடுவதும் உண்டு. அந்தத் தற்காப்பு வலை சில நேரங்களில் சர்வாதிகாரம் போன்று தோன்றினாலும் அது ஜனநாயகக் கிணற்றைக் காப்பாற்ற பெரிதும் பயன்படுகிறது. ஜனநாயகத்தைக் காப்பாற்றும் இந்த முறையைத்தான் வருங்காலத்தில் ஜனநாயக ரீதியில் நாடாளப் போகிற திராவிட முன்னேற்றக் கழகம் அதன் பொதுச் செயலாளர் மூலம் கடைப்பிடித்து நிற்கிறது. இந்தியாவின் ஆட்சியாளரும் ஜனநாயகக் கிணற்றைப் பாதுகாக்கிறார்கள். கிணற்றின் உள்ளே கல் விழாமல் இரும்பு வலை போட்டல்ல! பெரிய இரும்புத்தகடே போட்டு மூடியிருக்கிறார்கள்; கிணற்று நீரை யாரும் மொண்டு விடாமலும் - கிணற்றுக்குள்ளே சூரிய ஒளியும் - காற்றும் சென்று விடாமலும் பார்த்துக் கொள்வதற்காக!

பாவம் - ஜனநாயகம் மூச்சுவிட முடியாமல் நாங்கள் அடைப்பட்டிருந்த அரியலூர் சப் ஜெயில்

கூண்டுக்குள்ளே அகப்பட்ட கைதிபோலத் தத்தளிக்கிறது இந்த அகிம்சா ஆட்சியாளரின் கையில் சிக்கிக்கொண்டு.

கல்விழாமல் தடுக்கின்ற இரும்பு வலை போன்ற சர்வாதிகாரமும் - தோண்டியவர்களுக்குத் தண்ணீர் வழங்குகின்ற கிணறு போன்ற ஜனநாயகமும் ஒன்றோடொன்று இணைவதில் தவறில்லை யென்பதுதான் நாம் தேர்ந்தெடுக்கும் முடிவாயிருக்கிறது. ஜனநாயகத்தைப் பாதுகாக்கிற சர்வாதிகாரம் - பூந்தோட்டத்திற்கு வேலி போல!

ஆனால் வேலியே பயிரை மேய்வது என்ற பழமொழி பலித்து விடாமல் கண்ணுங் கருத்துமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஆறுமாத கடுங்காவல்

-1953

அடுத்து;

உண்மை இதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதிய கட்டுரை :-

அரசியலில், ஒரு கட்சித் தலைவர்களிடம், பல்லைக்காட்டிக் கெஞ்சி, சிபார்சு பிடித்து, தனக்கு ஒரு இடம் கொடுக்கும்படி கெஞ்சி, தன்னை ஏற்றுக் கொள்ளச் செய்து, தேர்தலில் தனக்காக ஆயிரம், பத்தாயிரம், இருபதினாயிரம் போன்ற கணக்கில், கட்சிப் பணம் செலவில், பதவிக்கு வந்து; பொது மக்களிடம் பணம் வாங்கிக் கொண்டு சர்க்காருக்கு பல சிபார்சுகள் செய்து பணம் சேர்த்துக்கொண்டு, கட்சி பெயரால் பதவிப் பெயரால், பல சலுகைகளும் பெற்று, அவற்றாலும் பணம், சொத்து, தகுதிக்கு மேற்பட்ட அந்தஸ்தும் வருவாய்க்கு வழியும் சம்பாதித்துக் கொண்டதைத் தவிர, வேறு காரியத்திற்குப் பயன்படாத அனாமதேயங்கள், சுயநலத்துக்கு என்றே கட்சியைக் காட்டிக் கொடுக்க, விலை பேசி வாங்கி - தான் ஆளான கட்சியைக் குறை கூறுவதும், அக்கட்சியை ஒழிக்கப்

பாடுபடுவதும், அதற்குத் தன் பெயரைக் கொடுப்பதுமான காரியத்தில் ஈடுபடுவதைத்தான் நான் அயோக்கியம் - அயோக்கியத்தன்மை என்றும், அயோக்கியர் என்றும் மேலும் அப்படிப்பட்டவர் மகா அயோக்கியர் என்றும், பொது நன்மையை உத்தேசித்துக் கூறுகிறேன்.

ஏன் என்றால், இம்மாதிரி கண்டிக்காவிட்டால், இப்படிப்பட்டவர்களை மக்கள் வெறுக்கும்படி செய்யாவிட்டால், நாளா வட்டத்தில் யோக்கியமான பலருக்கும், நாக்கில் தண்ணீர் வடிய ஆரம்பித்து விடுமே என்ற காரணத்தாலும் வேறு வகை இல்லாமையாலு மேயாகும்.

காலித்தனத்துக்குப் பிறப்பிடம் அரசியல் வாழ்வு அயோக்கியத்தனம் - என்று பல ஆண்டுகளுக்கு முன்பே பல அறிஞர்கள் சொல்லியிருந்தாலும் ஜனநாயகம் என்பது நம் நாட்டுக்குக் கடைந்தெடுத்த அயோக்கியத் தனத்துக்கும் காலித்தனத்துக்கும் பிறப்பிடமாகும் - என்று நம் நாட்டைப் பற்றி இது பிரஸ்தாபிக்கப்பட்ட காலத்திலேயே நானும் பல அறிஞர்களும் சொல்லியிருந்தாலும், அவை நேரிடும் போது சொல்லிக்காட்டிப் பரிகாரம் தேடாமல் இருக்க முடியுமா?

உதாரணமாக அமாவாசையில் பிறந்த பிள்ளை திருடும் - என்று ஜோசியத்தில் நம்பிக்கையுள்ளவன் கருதினாலும், அவன் வீட்டில், அமாவாசையில் பிறந்த ஒருவன் திருடியிருந்தால் அவன் வெளியில் சொல்லாமல் போலீசில், பிராது செய்யாமல் இருப்பானா? அதேபோல் தான் நான் இன்று, இது சுபாவம் என்றாலும், மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

இந்த மாதிரி நம்பிக்கைத்துரோகம் செய்யும் அயோக்கியர்களுக்கு இடம் கொடுத்துக் கொண்டே வந்தால் பொது நலம், பொது வாழ்க்கை என்ன கதி ஆவது? நாட்டில் இப்படிப்பட்ட அயோக்கியர்களைக் காப்பாற்ற, மூடி மறைக்க பல பத்திரிகைக்காரர்களில் மகா மகா மகா அயோக்கியர்கள் பலர்; பிறவி அயோக்கியர் பலர் இருக்கிறார்கள்.

நம் நாட்டில்தான் இந்தப்படி பத்திரிகைத் தொழில் மகா மகா மகா மகா இமயமலை அயோக்கியர் பலர் இருக்கிறார்கள். இவர்களுக்கு மானாவமானம் இல்லை என்றாலும், வேறு பத்திரிகைகள் ஏதாவது இருக்கும் போது இப்படிப்பட்ட பத்திரிகைகளைப் படிக்கும் மானங்கெட்ட மக்களும் ஏராளமாக இருக்கிறார்கள். பொது வாழ்வில், பொதுத் தொண்டில் ஈடுபட்ட சிலர் தொண்டின் நலனுக்காக படிக்க நேர்ந்தாலும்; பொதுமக்கள் தங்கள் இனத்தின் கேட்டுக்கு ஆக நடத்தப்படுகிற பத்திரிகைகளைப் படிப்பது எவ்வளவு மானங்கெட்ட ஈனத்தனம் என்பதை நான் வலியுறுத்திக் காட்ட வேண்டியவனாக இருக்கிறேன்.

யோக்கியமான காரணம் மேற்கண்டபடி காட்டாமல், பதவியை ராஜினாமா செய்யாமல் கட்சியை குறை சொல்பவர்கள் அயோக்கியர்கள் என்று சுவரில் எழுதுங்கள்; துண்டு பிரசுரம் போடுங்கள், கல்லில் செதுக்கி முச்சந்தியில் நடுங்கள் என்று கேட்டுக் கொண்டு இப்போதைக்கு முடிக்கிறேன்.

அதை ஆங்காங்குள்ள தோழர்கள் அச்சிட்டு வழங்கலாம்.

மனவேதனைப்பட்ட
வேதனையாளன்
ஒ-ம் ஈ.வே. ராமசாமி

-நன்றி : உண்மை 14.11.72

இக்கட்டுரை வெளிவந்த உண்மை இதழை எனக்கு அனுப்பியவர் - திருவாரூர் தம்பி திருவிடமாவார்

உடன்பிறப்பே; ஜனநாயகத்தைப் பற்றி தந்தை பெரியார் அவர்கள் கடுமையான கருத்துக் கொண்டவர் எனினும்; ஜனநாயக முறையில் செயல்படும் அரசியல் கட்சிகளின் நிலைப்பாடு குறித்தும் - அந்த முறையை; கட்டுப்பாடு குலைப்பதின் மூலம் சீரழிக்கும் சிறுமதியாளர் - சுயநலவாதிகள் குறித்தும் எவ்வளவு கடுமையாகக் குறைபட்டுக் கொண்டு வேதனைப்பட்டுள்ளார்கள் என்பதை சிந்தித்திடுக!

இந்திராகாந்தி எமர்ஜென்சி பிரகடனப்படுத்தியபோது கட்டுப்படுத்தப்பட்ட ஜனநாயகம் Disciplined Democracy என்று

குரல் கொடுத்தார் - அதை நாம் ஏற்க முடியாது எனக்கூறி; கோவையில் 1975 கடைசியில் நடைபெற்ற மாநில மாநாட்டில் கட்டுப்பாடும் - ஜனநாயகமும் தேவை Disciplined and Democracy என்று குறிப்பிட்டதை மறந்திருக்கமாட்டாய்!

அதே கொள்கை கோட்பாடுதான் அன்றும் - இன்றும் - என்றும்; நமது கழகத்துக்கு!

அனபுள்ள,

மு. க.

16-12-1993

2073. நான் பலியானாலும் பரவாயில்லை!

உடன்பிறப்பே,

கழகத்தின் கட்டுப்பாடு - ஒழுங்குமுறை இவற்றைச் சீர்குலைப்பதென்று கங்கணம் கட்டிக் கொண்டு இரண்டு மூன்றாண்டுகளாகவே செயல்பட்டு; நிர்வாகக்குழு செயற் குழுக்களில் மூன்று நான்கு முறைகள் மன்னிப்புக்கேட்டவர்கள், மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்தவர்கள் இப்போது இறுதியாக வேறு வழி எதுவுமின்றித் தலைமைக் கழகத்தினரால் ஒழுங்கு நடவடிக்கைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் எனினும்; இந்த நடவடிக்கை கூட உடனடியாக எடுக்கப்பட வேண்டியிருந்தும் - எடுக்கப்பட வேண்டுமெனப் பெரும்பான்மையோர் வலியுறுத்தியும் - நாற்பது நாட்களுக்கு மேலாகப் பொறுமையுடன் இருந்து அதன் பிறகே எடுக்கப்பட்டது என்பதை அறிவாய்!

நடவடிக்கை எடுப்பதற்கு முன்பு அந்த இடைக்காலமான நாற்பது நாட்களில் அவர்கள் பேசியதும், எழுதியதும், கேட்போர் காது கூசக் கூடியவை! காண்போர் கண் கூசக் கூடியவை! நினைப்போர் பதைக்கக் கூடியவை! ஆனாலும் அனைத்தையும் நானும் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களும் பொறுத்துக் கொண்டு தேவைப்படும்போது விளக்கங்களை மட்டுமே அளித்து வந்தோம்.

* கருணாநிதியை ஏ.கே. 47 மூலம்தான் சந்திக்க வேண்டும் என்று ஒருவர் எழுதிய கடிதத்தை பத்திரிகைக்கும் கொடுத்து பெரிய அளவில் கட்டம் கட்டிப் போடச் செய்தார்கள்.

* வேலூர் கூட்டத்தில் கருணாநிதி வீட்டுப் பெண்களுக்கு வெள்ளைச்சேலை கட்ட வேண்டி வரும் என்று வீராவேசமாக முழங்கினார்கள்.

* கருணாநிதி, தலைவராக இருக்கக்கூடிய தார்மீக உரிமையை இழந்துவிட்டார் என்றார்கள்.

* கொடும்பாவி கட்டி இழுத்து எரித்து மகிழ்ந்தார்கள்.

* பொதுச் செயலாளர் பேராசிரியரை ரப்பர் ஸ்டாம்ப் என்று கேலி பேசினார்கள்.

* பேராசிரியர் வகித்த அமைச்சர் பொறுப்பைக் குறித்து அபாண்டமான அவதூறுகளைக் கூறினார்கள்.

* பழனி, ராணிப்பேட்டை தொகுதிகளில் காங்கிரசுடன் கழகம் ரகசிய உறவு வைத்திருந்ததாகக் கதை கட்டினார்கள்.

இவற்றுக்கெல்லாம் பொறுமையாக இருந்த பின்னர் - ஒழுங்கு நடவடிக்கை எடுத்த பிறகு, மேலும் உச்ச கட்டத்திற்குச் சென்று - என்னை இழிவுபடுத்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்தவன் என்று அறிக்கை வெளியிட்டார்கள் - எனக்கு அரிச்சுவடியே தெரியாது என்றனர் - தமிழ் தடுமாறுகிறது எனக்கிண்டல் செய்தனர் - மிகமிக விஷமத்தனமான போக்கில்; இவர்களைப் பற்றி நான் சொல்லாததை சொன்னதாகச் சொல்லிக் கொண்டு - ஏடுகளுக்கு பேட்டிகள் அளித்தனர்! மேடைகளில் பேசினர்! ஏன்; இன்னமும் அதே பொய் வழியில் தான் போய்க் கொண்டிருக்கின்றனர்.

இவர்களுடன் வந்து இணைபவர்களோ; இவர்கள் தேர்தல் பணி செயலாளராக இருந்த காலத்தில் அறிவிக்கப்பட்ட கழக வேட்பாளர்களை எதிர்த்துப் போட்டியிட்டவர்கள், எதிர்த்து வேலை செய்தவர்கள், அந்தக் கட்டுப்பாடற்ற செயலுக்கு ஒரு வருத்தம்கூட தெரிவிக்காமல் - அன்று தாங்கள் வீம்பாகச் செய்ததை வீரமென்று நிலைநாட்டிக் கொள்வது போல - இனம் இனத்துடன் சேரும் என்ற பழமொழிக்கொப்ப, கட்டுப்பாடு குலைத்தவர்கள் என்ற சீனியாரிட்டியுடன் வந்து இணைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சிலர்தான் எனினும் சீலர்கள் கழக ஒழுங்கு முறையைச் சீரழிப்பதில்!

சில நாட்களுக்கு முன்பு தம்பி வீரபாண்டி ஆறுமுகம் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையைப் படித்திருப்பாய். அதில்

முக்கியமான ஒரு பகுதியை மீண்டும் படித்துப் பார்த்தால்; வீரபாண்டி விளக்கியுள்ள உண்மைச் செய்திகளும் - அவர் வைத்துள்ள கேள்வியும் நடுநிலையில் இருப்பவர்களை நிச்சயம் சிந்தித்திட வைக்கும். தெளிவும் தரும். இருண்ட மனங்களில் ஒளியும் பிறக்கும்.

"தலைவர் கலைஞர் அவர்களும், பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களும், அரசு அனுப்பிய கடிதத்தில் உள்ளவாறு கோபால்சாமிக்கு தொடர்பு இருக்குமென்று நாங்கள் நம்பவில்லை. இந்த கடிதத்தை காரணம் காட்டி கோபால்சாமி மீது நடவடிக்கை எடுக்கும் எண்ணம் இல்லை என்று திட்டவட்டமாக அறிவித்ததோடு, நேரில் பேச அழைப்புவிட்டதையும் ஏற்க மறுத்தவர் கோபால்சாமியும் அவரோடு இருப்பவர்களும் அல்லவா? தலைவர் அவர்களோடு நேரில் பேச கோபால்சாமியும் அவர்களையும், மற்றவர்களையும் தடுத்தவர்கள் யார் என்பது எனக்குத் தெரியும். காலம் பதில் சொல்லும்.

இந்நிலையில் சகோதரர் கோபால்சாமி ஆத்திரமும், வீரமும் யாரை நோக்கி இருக்க வேண்டும்? மத்திய அரசு, உளவுத் துறை உறுதி செய்யப்படாத தகவலை கொண்டு என் மீது அபாண்டமான பழியை சுமத்தியது ஏன்? மத்திய அரசும் உளவுத்துறையும் எனக்கு சரியான விளக்கம் அளிக்காவிட்டால், என் முழு சக்தியையும் பயன்படுத்தி நாடாளுமன்ற மாநிலங்களவையில் நீதிக்காக குரல் கொடுப்பேன். உண்மை தெரியும்வரை நாடாளுமன்ற மாநிலங்களவை செயல்பட விடமாட்டேன் என தனது வீர பராக்கிரமத்தை காட்டி, கோபால்சாமி குரல் கொடுப்பார் என நினைத்தேன்.

ஏன் பேசவில்லை? என்ன தயக்கம்? உறுதி செய்யப்படாத கடிதத்தை மாநில அரசு என் தலைவருக்கு அனுப்பி வைத்து என்னை களங்கப்படுத்த நினைத்தது ஏன்? இதற்கு மாநில அரசு உரிய விளக்கம் தராவிட்டால் சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையை முற்றுகையிடுவேன்; முதலமைச்சர்

ஜெயலலிதாவை வெளியில் நடமாட விடமாட்டேன் என, பாஞ்சாலங்குறிச்சி சிங்கக் குரல் கர்ச்சனை செய்ய வில்லையே ஏன்?

நீதி கேட்க வேண்டிய இடம் மத்திய - மாநில அரசுகளை நோக்கி இல்லாமல், தலைவர் கலைஞர் அவர்கள் மீது கோபம் கொண்டு பேசுவது முறையற்றதாகும். கற்பனையாக தன் மீது பழி சுமத்திவிட்டார் கலைஞர் என்று பேசுவது, ஒருவன் தன்னை பத்து மாதம் சுமந்து பெற்ற தாயின் வயிற்றை கிழித்து கர்ப்பப்பையை காணத்துடிக்கும் விபரீத எண்ணத்துக்குச் சமமாகும்.

ஆனால் உடன்பிறப்பே, வீரபாண்டியின் இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் வராது - வராததற்குக் காரணம்; பதில் கிடையாது!"

அதனால்தான் திசை திருப்பும் காரியத்தில் ஈடுபடுகிறார்கள். இப்போது அண்ணா அறிவாலயம் பற்றிய போர்ப் பிரகடனம் - அண்ணா அறிவாலயம், தி.மு.க. அறக் கட்டளைக்குச் சொந்தம் என்று கல்கி இதழில் பேட்டி கொடுத்து விட்டோனாம் - எனவே அந்த அறிவாலயத்துக்குப் படையெடுத்து அதனைக் கைப்பற்ற ஒரு லட்சம் பேர் வரப்போகிறார்கள்.

அண்ணா அறிவாலயம் என்ற கட்டிடம் மட்டுமல்ல; அதையொட்டியிருக்கிற திருமண மண்டபம் - இலவச கண் மருத்துவமனை - இவையெல்லாமே இருக்கிற அந்த நிலப்பரப்பு 1972 ஆம் ஆண்டு தி.மு.க. அறக்கட்டளையென்ற பெயரால் தான் வாங்கப்பட்டிருக்கிறது. தி.மு.க. அறக்கட்டளை 1972-ல் தொடங்கப்பட்ட போது அதில் நான், நாவலர், நண்பர் எம்.ஜி.ஆர். ஆகிய மூன்று பேர் மட்டுமே அறங்காவலர்கள். பிறகு அந்த எண்ணிக்கை இரண்டாயிற்று. பின்னர் தி.மு.க. அறக்கட்டளையில் என்னையும் நாவலரையும் அன்னியில் மேலும் மூன்று பேர் - என்.வி. நடராசன், மன்னை நாராயணசாமி, நீலநாராயணன் ஆகியோர் அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டனர்.

முதலில் மூன்று அறங்காவலர்களுடன் தொடங்கப்பட்ட தி.மு.க. அறக்கட்டளைக்குச் சொந்தமான நிலமும் அதில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களும்; அவற்றின் மூலம் கிடைக்கின்ற

வருவாயும் - அந்த நிலத்தின் முகப்பில் முன்பு இருந்த பெட்ரோல் பங்க் வாடகையும் - ஏனைய வாடகை வருவாயும், அறக்கட்டளையின் பொதுநலக்குறிக்கோள்களை நிறைவேற்றவே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. இப்போதும் பயன்பட்டு வருகின்றன.

மூன்று பேராக இருந்த அறங்காவலர் குழு இப்போது ஏழு பேராக - அதாவது, நான் - பேராசிரியர் - சாதிக் - நீலநாராயணன் - கோ.சி. மணி - வீரபாண்டி ஆறுமுகம் - கோவை. இராமநாதன் என விரிவுபடுத்தப்பட்டுள்ளது. **தி.மு.கழகத்தின் செயற்குழு உறுப்பினராக இருப்பவர் மட்டுமே தி.மு.க. அறக்கட்டளையின் அறங்காவலராக நியமிக்கப்பட முடியும்.**

1972 முதல் தி.மு.க. அறக்கட்டளைக்குச் சொந்தமாக இருந்துவரும் இடத்தை; இப்போது தான் திடீரென்று தி.மு.க. அறக்கட்டளைக்குச் சொந்தமாக்கி விட்டதாகச் சொல்வது போல - 21 ஆண்டுகளாக போடாத கூப்பாட்டை, இப்போது போடுகிறார்களே ஏன்?

உடன்பிறப்பே - 1972 முதல் தி.மு.க. அறக்கட்டளையில் பொறுப்பு வகித்த அறங்காவலர்களிலோ - அல்லது இப்போது பொறுப்பு வகிக்கும் அறங்காவலர்களிலோ - அறக்கட்டளையின் நிறுவனர் என்ற நிலையில் என்னைத்தவிர என் குடும்பத்தார் யார் இருந்தனர்? அல்லது யார் இருக்கின்றனர்? அப்போது நான் ஆட்சியில் இருந்தபோது கூட குடும்பத்தார் யாரையும் நியமிக்கவில்லையே! நியமித்திருந்தால் ஆட்சியிருக்கும்போது இந்த நண்பர்கள் வாயைத் திறந்திருக்கவே மாட்டார்களே!

வீணாகக் - குடும்ப அரசியல் என்று ஒரு புலம்பல்!

ஒரு பஞ்சாயத்துத் தலைவர் பதவிக்குக் கூடத் தன் தம்பிதான் வர வேண்டுமென்று பாடுபட்டவர்கள், தானில்லாவிட்டால் தன் மனைவிதான் வேட்பாளர் என்று பிடிவாதம் பிடித்து நிற்க வைத்தவர்கள், மாற்று வேட்பாளராகக்கூடக் கட்சித் தோழன் யாரும் கூடாது; தனது மனைவி அல்லது மகன்தான் என்று அடம் பிடித்து அப்படியே வேட்பு மனு கொடுத்தவர்கள் - பஞ்சாயத்து யூனியன் பெண் தொகுதி என்றால்; தனது துணைவியே வேட்பாளர் என அறிவித்தவர்கள் - அண்ணா அறிவாலயத்தைக்

கருணாநிதி தன் பிள்ளைகளுக்கு உரிமையாக்கப் போகிறார் என்று ஊளையிட்டு ஊரைக் கூட்டப் பார்க்கிறார்கள்.

பாவம்; அறக்கட்டளைக்கான சட்டவிதிகள் கூட தெரியாமல் தவிக்கிறார்கள்.

ஒருவேளை; இவையனைத்தும் தெரிந்தும் தெரியாதவர் போல - திசைதிருப்பும் நோக்கத்தில் எடை எடுப்பு, ஆக்ரமிப்பு, என்றெல்லாம் பயமுறுத்துவார்களேயானால்; ஏற்கெனவே தலைமையை மாற்றிட என்னையே தீர்த்துக் கட்டத் திட்டம் தீட்டியிருப்போருடன் இணைந்து நடத்தும் அந்தப் படையெடுப்பில்; நான் பலியானாலும் பரவாயில்லை என்று அதையும் சந்திக்கத்தானே வேண்டும்!

அன்புள்ள,

மு. க.

17-12-1993

2074. கழகத்தின் வலிவுமிக்க படைக்கலன்!

உடன்பிறப்பே,

நேற்று 17.12.93 மாலை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்திற்கு நெல்லை மாவட்டம் ஒட்டப்பிடாரம் பகுதியிலிருந்து ஒருவர் வந்தார். வந்தவர், கழகத்தின் செய்திகள் தென் மாவட்டத்திலிருந்து வரும் சில ஏடுகளில் - குறிப்பாக ஒரு ஏட்டில் எவ்வாறு மறைத்தும் திரித்தும் வெளியிடப்படுகின்றன என்பது குறித்து அவராலேயே கட்டுப்படுத்திக் கொள்ள முடியாத உணர்ச்சி மேலீட்டால் அந்த ஏட்டின்மீது அக்கினிக் கணைகளை அடுக்கடுக்காகப்பொழிந்து தள்ளினார். அத்துடன் நிறுத்தவில்லை அவர். நிறுத்தினால் வெறும் வாய்ப்பேச்சு வீரர் என ஆகியிருப்பாரே!

சட்டைப் பையிலிருந்து ஒரு தாளை உருவி என் முகத்துக்கு நேராக வேகமாக நீட்டி; 'இதோ பாருங்கள் முரசொலிக்கு இப்போதுதான் ஆயிரத்து ஐநூறு ரூபாய் கட்டிவிட்டு ரசீது வாங்கி வந்திருக்கிறேன்' என்றார்; மிடுக்குடன்!

'எதற்காக ஆயிரத்து ஐநூறு ரூபாய் கட்டினீர்கள்?' இது நான்!

'எதற்காகவா? எங்கள் ஊருக்கு முரசொலி ஏஜண்டு எடுத்து குறைந்தபட்சம் 15 பத்திரிகையாவது விற்பனை செய்ய முடிவு செய்து ஆளுக்கு நூறு ரூபாய் என்று 15 பேர் பணம் போட்டு 1500 ரூபாய் முன் பணம் கட்டிவிட்டு வருகிறேன்' என்றார்.

புல்லரித்துப் போய்விட்டது எனக்கு - விற்பனையாளர்கள் முரசொலிக்கு அமையாத இடங்களில் கழக உடன்பிறப்புக்களே, அந்தப் பணியினை ஏற்று கழகச் செய்திகளும் கொள்கைகளும் கழகத்தின் செயல்முறைத் திட்டங்களும் மக்களிடம் பரவுவதற்கு முயற்சிகளை வழிகாட்டுவதுபோல கம்பீரமாக நின்று கொண்டிருந்த அவரை நான் கண்குளிரப் பார்த்துக்கொண்டே இருந்தேன். 'என் பெயர் பன்னீர் செல்வங்க! என் அப்பா, சர்.ஏ.டி. பன்னீர் செல்வத்திடம் எழுத்தராக வேலை பார்த்தவர். அதனால் அவர் பேரை எனக்கு வைத்தாராக்கும்.'

இதைச் சொல்லும்போதுதான் அவர் முகத்தில் எவ்வளவு பெருமிதம்! வயது அறுபதை எட்டியிருக்கும்; ஆனால் கொள்கைப்பற்றில் - இயக்கம் வளர்க்க வேண்டுமென்ற ஆர்வத்தில் இன்னும் இளைஞனாகவே அவர் இருப்பதை என்னால் உணர முடிந்தது. உவகையால் உள்ளம் நிறைந்தது.

ஒட்டப்பிடாரம் பகுதியில் 15 முரசொலி ஏடுகளை விற்று; அதில் வியாபார ரீதியாக லாபம் காணுவதற்காகவா, நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்திலேயிருந்து இவ்வளவு தொலைவு வந்துள்ளார்! இல்லை - இல்லவே இல்லை!

முரசொலி, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு துண்டு அறிக்கையாகவே வெளியிடப்பட்டபோது; அதன் மூலம் படித்த அளவு கொள்கை பரவட்டும் என்றுதானே அந்தப் பணியில் நான் ஈடுபட்டேன். அந்த எண்ணம் வீணாகவில்லை - சேரன் செங்குட்டுவன் தீட்டும் சிலப்பதிகாரம் என்று அறிஞர் அண்ணா அவர்களே முரசொலியைப் பாராட்டுகிற அளவுக்கு - அதன் பயணத்தில் கண்ட களங்கள்! தாங்கிய கணைகள்! சந்தித்த காராக் கிரகங்கள்! ஏராளம் - ஏராளம்!

அன்று எப்படி; ஐம்பதாண்டுகளுக்கு முன்பு - அந்தத் துண்டு வெளியீடு முரசொலியைத் திருவாரூரிலிருந்து வரவழைத்துப் பெற்று அதனை ஊராரிடம் வழங்கி இலட்சியப்பணி ஆற்றினார்களோ - அதேபோல கழகக் குறிக்கோள் நிறைவேறவும், கழகம் வலிவு பெறவும் இப்போது லாபநோக்கமில்லாது முரசொலி இதழுக்கு முகவர்களாகத் தங்களை ஆக்கிக் கொண்டு முனைந்து தொண்டாற்றக் கிளம்பியுள்ளார்கள் என்பதை நினைக்கும்போது - அம்மவோ; அவர்கள் இந்த இயக்கத்துடன் எவ்வளவு ஒன்றிப் போயிருக்கிறார்கள் என்பது தெளிவாகிறதல்லவா!

இத்தனைக்கும் இப்படிப்பட்டவர்கள் இந்த இயக்கத்தில் எந்தப் பதவி சுகத்தையும் அனுபவித்தவர்கள் அல்லர்!

அமைச்சர்களாக இருந்தவர்களா? எம்.பி.க்களாக, எம்.எல்.ஏ.க்களாக இருந்தார்களா? அல்லது இப்போதுதான் இருக்கிறார்களா? நகரசபைத்தலைவராகவோ, யூனியன் தலைவ ராகவோ, வாரியத் தலைவராகவோகூட இல்லாதவர்கள்; இருக்க விரும்பியவர்களைத் தோள் கொடுத்துத் தூக்கி அந்த இருக்கையில் உட்கார வைத்தவர்கள்தானே தவிர, தாமே அவற்றில் உட்கார

வேண்டுமென எண்ணியவர்கள் அல்லர்! அவர்கள்தான் இந்தக் கழகத்தின் அடித்தளம் - கட்டுமானம் எல்லாமே!

இருட்டடிப்பு செய்தல் - இல்லாதது பொல்லாததை வெளியிடுதல் - இருந்த வயிற்றில் ஈட்டி பாய்ச்சுதல் - இக்குணம் கொண்ட இதழ்கள் ஒன்றிரண்டுக்கிடையே; ஒளிவிடும் கதிராக - ஒலி முழக்கும் முரசாக முரசொலி இருப்பது என்பது; நம் கையிலிருக்கும் வாளுக்கும் கேடயத்துக்கும் சமம் என்று கழக உடன்பிறப்புகளாம் உன் போன்ற கண்மணிகள் கருதுவது நியாயம்தானே!

1975 - 76 எமர்ஜென்சி எனும் நெருக்கடி காலத்தில் எந்த ஏடு நமக்கு இருந்தது; முரசொலியைத் தவிர!

அந்த நேரத்து முரசொலியும் ஒவ்வொரு நாளும் - ஒவ்வொரு செய்திக்கும் நான் எழுதும் ஒவ்வொரு எழுத்துக்கும் தணிக்கை அதிகாரி அலுவலகம் சென்று; அவரிடம் அனுமதி பெற்றாக வேண்டும். எட்டு பக்கம் எழுதி அனுப்பினால்; தணிக்கை அதிகாரி வெட்டியது ஐந்து பக்கம் போக எஞ்சிய மூன்று பக்கம்தான் முரசொலியில் வெளிவரமுடியும். மிசா கைதிகளாக சிறைப்பட்டவர்களின் பெயர்களை வெளியிடத்தடை! அதனால் பிப்ரவரி 3 ஆம் நாள் அண்ணா நினைவிடத்திற்கு வர இயலாதவர்கள் என்று தலைப்பிட்டு இரண்டொரு நாள் செய்தி வெளியிட்டது முரசொலி! பின்னர் அதையும் தணிக்கை தடுத்து விட்டது!

எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கு இலக்கியங்கள் கைகொடுத்தன -

ஒருநாள் முரசொலியில் முதல்பக்கத்தில் வெளியிடுவதற்கென்று திரும்பத்திரும்ப எழுதி அனுப்பிய அரசியல் செய்திகள் ஒவ்வொன்றும் தணிக்கையில் அனுமதி மறுக்கப்பட்டன. அதில் ஏற்பட்ட ஆத்திரத்தில் - முதல்பக்கம் எட்டு கலம் கொட்டை எழுத்துச் செய்தியாக;

"வெண்டைக்காய் உடலுக்கு நல்லது -
ரஷ்யாவிலிருந்து திரும்பிய ஆதிலட்சுமி ஆராய்ச்சி!"

என்று வெளியிட்டோம் - உண்மை என்னவென்றால், ஆதிலட்சுமி அம்மாளும் இல்லை - அவர் ரஷ்யாவுக்கு போகவுமில்லை.

"என் அன்னையை விட அதிகமாக என்னிடம்
பரிவு காட்டினார் அண்ணா"

என்று என் பிறந்த நாள் செய்தியில் குறிப்பிட்டதைக் கூட தணிக்கை வெட்டிவிட்டது. அதை எதிர்த்து அண்ணா சாலையில் அண்ணா சிலை முன் போராட்டம் நடத்திய தமிழ்ச்சுடர் இளமுருகு பொற்செல்வி மற்றும் சிலருடன் நான் கைதாக வேண்டியிருந்தது மிசாவில் பலரும் சிறையிலிருந்த அந்த சமயத்தில்!

தணிக்கைக்கு தப்பிய செய்திகள், கட்டுரைகள், இலக்கியத் திறனாய்வுகள் என்ற வகையில் மட்டுமே எழுத்துக்களை தாங்கி வந்தபோதே முரசொலியின் விற்பனை ஒரு லட்சம் பிரதிகளை எட்டுவதாக இருந்தது என்றால்; அதற்குக் காரணம் கழக உடன்பிறப்புகளின் உணர்ச்சிக் கொந்தளிப்பை எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது என்பதுதான்!

அதே நிலைதான் இன்றும் - கழகத்தை வீழ்த்திட எத்தனையோ சதிகள், சூதுகள், சூழ்ச்சிகள், பற்பல வடிவங்களில்!

அந்த வஞ்சக வடிவங்களை அடையாளம் காட்டும் கருவியாக முரசொலி அனைவரின் கரங்களிலும் இருக்க வேண்டும் -

சில நாட்களுக்கு முன்பு நான் மதுரை சென்றிருந்த போது; மதுரைக்கு முரசொலி வேண்டும் என்ற கோரிக்கை சுவரொட்டிகளைப் பல இடங்களில் பார்த்தேன்.

தென் மாவட்டங்களுக்கு விரைவில் கிடைப்பதற்கும் - அந்தப் பகுதிச் செய்திகள் முக்கிய இடம் பெறுவதற்கும் மதுரையிலிருந்து முரசொலி ஒரு பதிப்பு வெளியிடுவது பற்றி முரசொலி அறக்கட்டளை நிர்வாகம் சிந்தித்துக் கொண்டிருக்கிறது.

எல்லாம், உன் போன்ற கழக உடன்பிறப்புகள் வழங்கிடும் ஊக்கத்தை நம்பித்தான்!

எங்கே பார்க்கலாம்; இனி ஒவ்வொரு கழக உடன்பிறப்பின் கையிலும் கழகத்தின் வலிவுமிக்க படைக்கலனாம் முரசொலியை நான் கண்டு களிக்க முடியுமா என்று!

அன்புள்ள,

மு. க.

19-12-1993

2075. தஞ்சை அழைக்கிறது; வந்திடுக!

உடன்பிறப்பே,

தங்களுக்காக நீண்ட நெடுங்காலமாக நெருப்பாற்றில் நீந்திடவும் தயங்காமல்... எதிர்ப்புச் சூறாவளிகளைச் சந்திக்கவும் அஞ்சிடாமல்... தியாக வேள்வியில் புடம்போட்டு எடுக்கப்பட்டுள்ள பத்தரை மாற்றுப் பசும் பொன்னாகத் திகழும்... இந்த இயக்கம்; என்றைக்குமே சோலைவனப் பயணம் நடத்தும் போது கிடைத்திடாத பேராதரவையும், பெரும் அன்பையும்; பாலைவனப் பயணங்களை நடத்திட வேண்டிய நேரத்தில்தான் பெற்றுப் பெருமிதம் கொண்டிருக்கிறது.

அடடா; நமக்காகத் தியாகத் தழும்புகளேற்ற இயக்கத்திற்காக; அந்தத் தழும்புகளின் மீதே இத்தனை கணைகள் தைத்திடும் கொடுமை; என்று இந்த இயக்கத்தைத் தமது வழிகாட்டியாகக் கொண்ட மக்கள் மற்றும் உன்போன்ற உடன்பிறப்புகள்; வருந்தி, வாடி, வேதனையால் புழுங்கித் தமது வலுவினத்தையும் சேர்த்து இந்த இயக்கம் கீழ்நோக்கிச் சற்றும் தாழாது ஏந்தி நிற்கின்றனர் என்றால் இது ஒவ்வொரு முறையும் வந்த சோதனையின்போது நாடு கண்ட வரலாற்று நிகழ்ச்சி.

அந்த நிகழ்ச்சி இப்போதும் நிகழ்வதைக் காண முடிகிறது. பிறந்தது முதல் போராட்டத்திலேயே தனது சரித்திரத்தைத் தொடங்கி, என்றும் இந்தத் தமிழர் சாதிக்கு சலியாது உழைக்கச் சத்தியம் செய்து சபதமேற்றுள்ள கழகத்தைச் சிதைத்திட மாற்றார் முனைந்திடும் போது - ஆதிக்கபுரியினர் அதற்கான ஆயுதம் தாங்கி வந்திடும்போது - நெஞ்சு நிமிர்த்தி எதிர்த்து நிற்கும் உரம் கொண்டோர்தான் நாம் எனினும்; நம்மவரிலேயே சிலர், அல்லது நம்மவர் என்று நம்பியிருந்த சிலர், கழகக் கோட்டையின் கட்டுக்கோப்பு குலைவதற்குக் கையில் கடப்பாரை ஏந்தியுள்ளனரே என எண்ணும் போது, இமைகளை முட்டித் தள்ளிவிட்டல்லவா கண்ணீர்த் துளிகள் பெருமழைத் துளிகள் போல் கொட்டுகின்றன!

கண்ணீருக்கிடையிலேயும் கடமையைச் செய் என்ற கட்டளை; கடற்கரையில் தூங்காமல் தூங்குகின்ற தூயவர் நமது அண்ணன் இடும் கட்டளையாகவன்றோ இருக்கிறது!

கரம்பிடித்து வளர்ந்தோர் - தம்பிகளாகப் பாராட்டப் பெற்றோர் - அன்றொரு நாள் அண்ணனை எதிர்த்துச் சென்றபோது எதையும் தாங்கும் அந்த இதயமும் கலங்கிற்று! எனினும் கலக்கத்தைக் கடமைக்காக ஒதுக்கி வைத்துவிட்டுக் காரியமாற்றக் கிளம்பிற்று அந்த இதயம்!

அவசர முடிவெடுத்து விட்டோமோ; அண்ணாவைத் தலைமேல் வைத்துக் கொண்டாடிக் குதூகலித்தோர்; அவரைத் தரைப்புழுதியாய்க் கருதித் தாக்குவதற்குக் காரணம் புரியாமல் போகாத இடத்திற்குப் போய்விட்டோமே; இனி அங்கிருந்து எவ்வாறு மீண்டும் வந்து அண்ணாவிடம் இணைவது என்று ஏங்கிக் கிடந்தோர்; அப்படி நீண்ட நாள் வதங்கிவிட விடாமல் அவர்களை வாடாத மலர்களாக வாரியெடுத்து அண்ணன் கண்களில் ஒற்றிக் கொண்டார். கருத்தில் பதிய வைத்துக் கொண்டார்.

திருவிழாவில் காணாமற்போன பிள்ளைகள் என்றார் - திரும்பவும் தி.மு.க. வளர்த்திட வந்துள்ள தேன்மழை எனத் திருவாய் மலர்ந்தார்!

அந்த அண்ணனின் தகுதியும் திறமையும் எனக்கில்லை எனினும்; அவரின் இதயம் அடியேனுக்கு உண்டு - இல்லையேல் ஊசி குத்த இடமில்லாமல் ரணமாகியிருக்கும் இந்த இருதயத்தில் இன்னும் எத்தனை ஈட்டிகள் வேண்டுமானாலும் குத்தட்டும் என்று இருப்பேனா?

அதனால்தான் உள்ளூர என்மீதும் கழகத் தலைமையின் மீது கோபமில்லாமல் - உள்ளூர்க் கோபதாபங்களால் இங்கிருந்து இடம் பெயர்ந்துள்ள இனியவர் சிலருக்கு நான் விடுக்கும் வேண்டுகோள்; பலவீனத்தால் அல்ல - பழகிய பாசத்தால் - வருக! முன்போல் கழகம் காத்திடுக! என்பதுதான்.

இதோ வரும் 29 புதனன்று; தஞ்சையில் கழகப் பொதுக்குழு கூடுகிறது.

அக்குழுவில் விவாதித்து முடிவெடுக்கப்படவேண்டிய முக்கிய பொருள்கள் குறித்து நமது பொதுச் செயலாளர் இனமானப் பேராசிரியர் அவர்கள் அறிவித்துள்ளார்.

இந்த இயக்கத்தின் உயிர் மூச்சாக உள்ள ஒடுக்கப்பட்ட மக்களுக்கான சமூக நீதியை நிலைப்படுத்த நாம் நடத்தும் தொடர் போராட்டத்திலே ஒரு கட்டமாக; ஜனவரி 23 சென்னையில் இடஒதுக்கீடு உரிமைப் பேரணி நடத்துவது குறித்து விவாதிக்க இருக்கிறோம்.

இந்தியாவின் சுவாசப்பைகளை க்ஷயரோகக் கிருமிகளால் அடைக்க நடக்கும் முயற்சியான டங்கல் திட்டத்திற்கு நமது கடும் கண்டனத்தை எப்படிக் காட்டுவது என சிந்திக்க இருக்கிறோம்.

தமிழகத்தில் இந்தி ஆதிக்க எதிர்ப்பு சிப்பாயாகத் திகழும் தி.மு. கழகம்; இப்பொழுது தொலைக்காட்சி மூலமாக டெல்லி தர்பார் நடத்தும் இந்திப் பிரச்சாரத்தை தடுத்து நிறுத்துவது குறித்து முடிவெடுக்க வேண்டியுள்ளது.

மற்றும் வெள்ள நிவாரணம், விலைவாசி உயர்வு, வீட்டு வரி, நிலவரி உயர்வு, பஸ் கட்டண உயர்வு, சட்டம் ஒழுங்கு பிரச்சினை போன்ற மக்களின் பிரச்சினைகள் - கழக ஆக்கப் பணிகள் - அண்ணா வழியில் அயராது உழைத்திட நாம் மேற்கொள்ளும் திடமான தீர்மானங்கள் -

இப்படி; என்றென்றும் தமிழ்ப் பெருங்குடிமக்களுடனேயே இருந்திடும் - இருந்து தீர வேண்டிய - இந்தக் கழகத்திற்கு எள் முனையளவு இன்னலும் விளைந்திடாது காத்திடும் பொறுப்பை ஏற்றிட வேண்டிய கடமை அண்ணாவின் தம்பிகளான நம் அனைவர்க்கும் உண்டென்பதை உணர்ந்து செயல்படத் தஞ்சை அழைக்கிறது! வந்திடுக!!

அழைக்கும் இந்த உள்ளம் தஞ்சைக் கோபுரம் போல் புகழ் வாய்ந்த உள்ளம் அல்ல எனினும்; குள்ள உள்ளமல்ல; என்பதை மட்டும் கூறி அழைக்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

22-12-1993

2076. பொதுக்குழு கூட்டம் - ஒரு விளக்கம்!

உடன்பிறப்பே,

இம்மாதம் 20-ந் தேதியன்று அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் - மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் - மாநில அமைப்பாளர்கள் - தலைமைக் கழகச் செயலாளர்கள் கலந்துகொண்ட கூட்டத்தின் முடிவில் பத்திரிகை யாளர்களை நான் சந்தித்தபோது, செய்தியாளர் ஒருவர் 'தி.மு.க. பொதுக்குழுவை இப்போது கூட்ட என்ன அவசியம் வந்தது?' என்று கேட்டார்.

அவரது கேள்விக்கு பதிலளித்த நான்,

'மாவட்டச் செயலாளர்கள், மாவட்டப் பொறுப்பாளர்கள் அனைவரும், தலைமைக் கழகச்செயலாளர்களும் பொதுக்குழுவை கூட்டலாம் என்ற கருத்தை வெளியிட்டார்கள். அவர்களுடைய கருத்து ஏற்கப்பட்டு பொதுக்குழு கூட்டப்படுகிறது.

தி.மு.க. தலைமை எடுக்கும் முடிவுகளுக்கு பொதுக்குழுவில் பெரும்பான்மையான ஆதரவு இல்லையென்று ஒரு தவறான பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது.

அந்தப் பிரச்சாரம் உண்மைக்கு மாறானது என்பதை எடுத்துக்காட்ட கழகப் பொதுக் குழுவைக் கூட்ட வேண்டுமென்று இன்றைய கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டு கருத்து ஏற்கப்பட்டு டிசம்பர் 29 அன்று தஞ்சையில் பொதுக் குழுவைக் கூட்ட முடிவெடுக்கப்பட்டுள்ளது.'

என்று குறிப்பிட்டேன்.

இது தொடர்பாக,

கழக பொதுக்குழுவின் அமைப்பு - பொதுக் குழு சம்பந்தமாக - அவ்வப்போது அமைக்கப்பட்ட சட்ட திட்டக் குழுக்கள் ஏற்படுத்திய மாறுதல்கள் - ஆகியவை பற்றிய தகவல்களை உனக்கு விளக்கிட விரும்புகிறேன்:-

திராவிட முன்னேற்றக் கழகம் 17.9.1942-ல் துவங்கியபோது அண்ணாவின் வழிகாட்டுதலின்படி நிறுவப்பட்ட சட்ட திட்டக் குழு தயாரித்த நகல் சட்ட திட்டம் - முறைப்படி பொதுக்குழுவில் ஏற்கப்பட்டு, 1951 டிசம்பரில் சென்னையில் நடைபெற்ற முதல் மாநில மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்தச் சட்டதிட்டக் குழுவிற்கு கே.ஏ. மதியழகன் செயலாளராக இருந்தார். அடுத்து 6.6.1958-ல் சென்னையில் கூடிய தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் நியமிக்கப்பட்ட சட்டதிட்டத் திருத்தக்குழு கொண்டு வந்த திருத்தங்கள் - 1959 ஜூலையில் முறைப்படி செயற்குழுவிலும் பொதுக்குழுவிலும் நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்கு வந்தன. இந்தக் குழுவின் செயலாளராக மறைந்த என்.வி. நடராசன் அவர்கள் இருந்தார்கள்.

அடுத்து, 26.5.62 அன்று திருச்சி மாவட்டம் குளித்தலையில் நடந்த பொதுக் குழுவால் நியமிக்கப்பட்ட சட்டதிட்டத் திருத்தக் குழுவினர் கொண்டுவந்த திருத்தங்கள், 1967 அக்டோபர் 14, 15 நாட்கள் சென்னையில் நடைபெற்ற செயற்குழு - பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்கு வந்தன. இந்தக் குழுவிற்கும் மறைந்த என்.வி.என். அவர்களே செயலாளராக இருந்தார்.

அதற்கடுத்து 14.6.72-ல் சென்னையில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுவால் நியமிக்கப்பட்ட சட்டதிட்டத் திருத்தக் குழுவினர் ஆய்வு செய்து, கொண்டு வந்த திருத்தங்கள் 1973 ஜனவரி 6, 7 நாட்களில் புதுக்கோட்டையில் நடைபெற்ற செயற்குழு - பொதுக்குழுக் கூட்டங்களில் நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்கு வந்தன. இந்தக் குழுவிற்கும் மறைந்த என்.வி.என். அவர்களே அமைப்பாளராக அமர்ந்து செயல்பட்டார்.

அதற்கடுத்து 1.7.77 அன்று சென்னையில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுவில், நீலநாராயணன் குழுத் தலைவர், ந. கணபதி குழுச் செயலாளர், கோவை மு. இராமநாதன், மதுராந்தகம் சி. ஆறுமுகம், பெங்களூர் தி. திராவிடமணி, பரமக்குடி சுப. தங்கவேலன் ஆகியோரைக் கொண்ட கழகச் சட்டதிட்டத் திருத்தக்குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவினர் செய்த சட்ட திட்டத் திருத்தப் பரிந்துரைகள், 1977 செப்டம்பர் 9, 10 ஆகிய நாட்களில் பரங்கிப் பேட்டையில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுவிலும், சிதம்பரத்தில் நடைபெற்ற பொதுக்குழுவிலும் வைக்கப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

இதனையடுத்து, கழகம் பெற்றுள்ள வளர்ச்சிக்கு ஏற்பவும் கழகத்தை நடத்திச் செல்வதில் ஏற்பட்டுள்ள அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டும், 1980 ஆகஸ்டு 2, 3 ஆகிய நாட்களில் திருச்சியிலும் நடைபெற்ற பொதுக் குழுவில் சட்ட திட்டத்தின் சில விதிகள் திருத்தம் செய்யப்பட்டன.

அதனையடுத்து, மேலும் சட்ட திட்டத்தில் திருத்தங்கள் தேவையென முறைப்படி தெரிவிக்கப்பட்டதையொட்டி, நீலநாராயணன் அமைப்பாளர், எஸ்.எஸ். தென்னரசு, கோ.சி. மணி, கா.மு. கதிரவன், என்.வி.என். சோமு ஆகியோரை உறுப்பினர்களாக கொண்ட கழகச் சட்டதிட்டத் திருத்த ஆலோசனைக் குழு, தலைமைக் கழகத்தால் அமைக்கப்பட்டது. அந்தக் குழுவினரின் சட்டதிட்டத் திருத்தப் பரிந்துரைகள் 1981 மே திங்கள் 16, 17 ஆகிய நாட்களில் புதுச்சேரியில் நடைபெற்ற பொதுக் குழுவில் வைக்கப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

அதனை அடுத்து 1981 டிசம்பர் 12, 13 ஆகிய நாட்களின் வ.ஆ. மாவட்டம் திருப்பத்தூரில் நடைபெற்ற பொதுக்குழுவில் சில சட்ட திட்டத் திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டன.

கழக அமைப்புகளின் நிர்வாக நடைமுறைகள் மேலும் செம்மையாக அமையும் வகையிலும், நடைபெற்றிருக்கும் கழகப் பொதுத் தேர்தல்களில் ஏற்பட்ட அனுபவத்தின் அடிப்படையிலும், கழக சட்ட திட்டத்தைத் திருத்துவதற்கு 1985 மார்ச் 23, 24 தேதிகளில் சென்னை பெரியார் திடலில் நடைபெற்ற கழகப் பொதுக்குழுவில் எல். கணேசன் அவர்கள் அமைப்பாளராகவும், முரசொலி மாறன் எம்.பி., சி.டி. தண்டபாணி, புலவர் பழனிசாமி, ஏ.எல். சுப்ரமணியம், ஏ.வி. கிருஷ்ணமூர்த்தி, முகமது சகி, டி.எஸ். கல்யாணசுந்தரம், பரமத்தி சண்முகம் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட சட்டதிட்டத் திருத்தக்குழு அமைக்கப்பட்டது.

இந்தக் குழுவினரின் சட்டத் திட்ட திருத்தப் பரிந்துரைகள் 1985 ஜூலை 27, 28 ஆகிய தேதிகளில் சென்னையில் நடைபெற்ற கழகப் பொதுக்குழுவின் ஆய்வுக்கு வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட சட்டதிட்டத் திருத்தங்களுடனும், 1988 பிப்ரவரி 2-ம் நாள் சென்னையில் நடைபெற்ற கழகப் பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட புதிய சட்ட திட்டத்

திருத்தங்களுடன் அமைந்துள்ள வடிவத்தில் கழகக் கொள்கைக் குறிக்கோள் சட்ட திட்டங்களுக்கு ஏற்ப நமது கழகம் இயங்கி வருகிறது.

கழகத்தின் பொதுக்குழு என்பது கழகத்தின் முழு அதிகாரம் கொண்ட தலைமை அமைப்பாகும் என்று கழகச் சட்டதிட்டம் விதி 18 பிரிவு 1 திட்டவட்டமாகக் கூறுகிறது. இந்தப் பொதுக்குழுவில் யார் யார் உறுப்பினர்கள் என்பன விதி 18 பிரிவு 2 தெளிவுபடுத்தியுள்ளது.

* மாநில அமைப்புக் கழகங்களாலும், மாவட்டக் கழகங்களாலும் தேர்ந்தெடுக்கப்படும் பொதுக்குழு உறுப்பினர்ககள்.
* தலைமைச் செயற்குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள்.
* தலைமைக் கழக நிர்வாகக் குழுவில் உறுப்பினர்களாக இருப்பவர்கள்.
* மாவட்டக் கழக நிர்வாகிகள்.
* மாநகரக் கழக நிர்வாகிகள்.
* ஒன்றிய, நகர, நகரியக் கழகச் செயலாளர்கள்.
* பகுதிக் கழகச் செயலாளர்கள்.
* பொதுச்செயலாளர் தேர்வுக்குப் பிறகு பொதுச் செயலாளரால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள்.

இத்தகைய உறுப்பினர்களைக் கொண்டதே பொதுக்குழுவாகும் என்றுள்ள சட்டதிட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிற ஒன்றாகும்.

1992 ஆம் ஆண்டு தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் தேர்தலுக்குப் பிறகு - தணிக்கைக் குழுத் தேர்தலில் வென்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள் நியமனம் - சொத்துப் பாதுகாப்புக்குழு, தீர்மானக் குழு, சட்டதிட்டத் திருத்தக்குழு போன்ற குழுக்கள் நியமனம் - மாநில, மாவட்டங்களில் செயலாளர் அன்னியில் மற்ற நிர்வாகிகளையும் பொதுக் குழுவில் இணைத்துக்கொள்ள வேண்டும் என்ற சட்ட திட்டத்தைக் கடைப்பிடித்தது போன்றவை; ஏற்கப்பட்டு

பொதுக்குழு உறுப்பினர்கள் எண்ணிக்கை ஆயிரத்து நூறைத் தாண்டியுள்ளது.

அந்த ஆயிரத்து நூறைத் தாண்டியுள்ள எண்ணிக்கையைக்கொண்ட பொதுக் குழுக்கள் 2.6.1992-ல் நடைபெற்ற பொதுக் குழுவுக்குப் பிறகு இரண்டு முறை கூட்டப்பட்டுள்ளன.

இரண்டாவது முறையாக சென்னை 2.2.1993-லும் மூன்றாவது முறையாக கோவையில் 26.3.1993-லும் இந்த ஆயிரத்து நூறைத் தாண்டியுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை கொண்ட பொதுக்குழுக்கள்தான் நடைபெற்றிருக்கின்றன.

அந்த இரண்டு பொதுக் குழுக்களிலும் 2.2.93 -26.3.93 மாநில, மாவட்டக் கழகங்களின் நிர்வாகிகள் உள்ளிட்ட பொதுக்குழு உறுப்பினர் என்ற தகுதி வாய்ந்தோர் அனைவரும் கலந்து கொண்டு நடவடிக்கை ஏட்டில் தங்கள் கையெழுத்துக்களை இட்டுள்ளனர்.

அந்த நடவடிக்கை ஏடுகளை நான் 20.12.93 அன்று செய்தியாளர்களிடம்கூட காட்டியிருக்கிறேன்.

கழகக் கட்டுப்பாட்டை மீறியதற்காக இப்போது விலக்கி வைக்கப்பட்டுள்ள சில நண்பர்கள், அப்போது அந்தப் பொதுக்குழுக்களில்; தாங்கள் மாவட்டக் கழக அவைத் தலைவர், அல்லது பொருளாளர், அல்லது துணைச் செயலாளர்கள் என்ற நிலையில்; 1063-வது இடத்திலும் 1064-வது இடத்திலும், 1077-வது இடத்திலும் கையெழுத்துக்கள் இட்டுப் பொதுக் குழுவில் பொதுக்குழு உறுப்பினர்களாகக் கலந்துகொண்டிருப்பதையும் சென்னை செய்தியாளர்கள் கூட்டத்தில் ஆதாரமாகக் காட்டியுள்ளேன்.

இவ்வளவுக்கும் பிறகும்கூட; தலைமையின் விருப்பம்போல் பொதுக்குழுவுக்கு திடீரென இப்போது உறுப்பினர்களை நியமித்துவிட்டார்கள் என்ற வாதம்; எவ்வாறு எடுபட முடியும்?

கழக சட்டதிட்டம் விதி 18 பிரிவு 4-ன் படி, பொதுக்குழுக் கூட்டம் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற வேண்டும். பிரிவு 5-ன் படி பொதுக் குழுக் கூட்டத்தை கழகப் பொதுச் செயலாளர் கூட்டவேண்டும் என்று இருக்கிறது.

பிரிவு 7 என்ன சொல்கிறது? பொதுக்குழுவின் தனிக்கூட்டம் கூட்டப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்தால்; பொதுக்குழு உறுப்பினர்கள் மூன்றில் ஒரு பகுதி எண்ணிக்கையினர் கையெழுத்திட்டுக் கேட்டுக் கொண்டால் ஒரு திங்களுக்குள் பொதுச் செயலாளர் பொதுக்குழுவைக் கூட்ட வேண்டும் என்று சொல்கிறது!

அப்படியானால் சென்னையில் 2.2.93லும் கோவையில் 26.3.93லும் பொதுக்குழு உறுப்பினர்களாக அந்தக் குழுக்கூட்டங்களில் கலந்து கொண்டவர்கள் எண்ணிக்கையின்படி; மூன்றில் ஒரு பகுதி உறுப்பினர்கள் அதாவது ஏறத்தாழ 370 உறுப்பினர்கள் கையெழுத்திட்டல்லவா பொதுக்குழு கூட்டச்சொல்லி கேட்டிருக்கவேண்டும். அப்படி எந்த கோரிக்கையும் முறைப்படி - ஆம்; கழக சட்டதிட்டப்படி வரவில்லையே!

பொன் முத்துராமலிங்கம் அவர்கள் மட்டுமே; எனது மாவட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட 45 பொதுக்குழு உறுப்பினர்களில் 36 பேர் பொதுக்குழுவைக் கூட்டச் சொல்லி கையெழுத்திட்டுள்ளோம் என்று ஒரு கடிதத்தை தலைமைக்கு அனுப்பினார்.

அதைத் தொடர்ந்து எந்தக் கோரிக்கையும் - தலைமைக் கழகத்துக்கு முறைப்படியோ, கழக சட்டதிட்டப்படியோ, மூன்றில் ஒரு பகுதி பொதுக்குழு உறுப்பினர் கையெழுத்திட்டுத் தரப்படவில்லை.

தலைமைக்கழகம் எடுக்கும் சில முடிவுகளுக்கு செயற்குழுவின் ஒப்புதலே போதுமானது என்பது நமது கழக சட்டதிட்டமாக இருந்திட்டாலும் கூட; பொதுக்குழு உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதி உறுப்பினர்கள் கையெழுத்திட்டுப் பொதுக்குழுவைக் கூட்டுமாறு கேட்டிருந்தால்; கூட்டித்தானிருப்போம்.

ஆனால் அப்படியொரு முறையான கோரிக்கை வைக்காதது மட்டுமல்ல; கட்டுப்பாடு ஒழுங்கு முறைகளை மீறியவர்கள் மீது தலைமைக் கழகம் நடவடிக்கை எடுக்க நாற்பது நாட்கள் தாமதித்திருந்த போதுங்கூட - அந்த இடைக்காலத்தில் ஏடுகள் வாயிலாகவும், மேடைகள் வாயிலாகவும் கழகத்தலைமையை மிகக் கடுமையான அளவுக்குத் தாக்கினர். தரக்குறைவாகத்

தலைமையை விமர்சித்தனர். கழகத்தின் முன்னணியினரை மட்டுமல்லாமல் - கழகத் தலைவரையும் பொதுச் செயலாளரையும் தூற்றித் திரிந்தனர்.

தவிர்க்க முடியாத சூழ்நிலையில் - கழக சட்ட திட்டங்கள் செயல்படுத்தும் கடமையை நிறைவேற்றுவதிலிருந்து தவறக்கூடாது என்ற முடிவுடன் ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதாயின.

அத்தகைய நடவடிக்கைகளுக்கு ஆளானோர் போக; பழைய பொதுக்குழுவில் அதாவது 2.2.93 - 26.3.93 நடைபெற்ற பொதுக்குழுக்களில் இடம் பெற்றிருந்த பொதுக்குழு உறுப்பினர்கள் சுமார் 85 சதவிகிதத்தினர், இப்போதும் கழகத்தின் கட்டுப்பாடு காத்திடவும் ஒழுங்கு முறை பேணிப் பாதுகாக்கவும் தங்களை ஒப்படைத்துக் கொண்டவர்களாக உள்ளனர்.

இவர்களையன்னியில் கழக சட்டதிட்டப்படி உரிமை பெற்ற பொறுப்பாளர்களும் கலந்து கொண்டு நாட்டுக்கும் - மக்களுக்கும் - நமது இனத்துக்கும் - மொழிக்கும் - தேவையான தீர்மானங்களை வடித்தெடுக்க இருக்கும் பொதுக்குழுதான் தஞ்சையில் இத்திங்கள் 29-ஆம் நாள் புதன் கிழமை காலையில் தொடங்க இருக்கிறது.

பொதுக்குழு எடுத்திடும் முடிவுகள் பற்றிய விளக்கமளிக்கும் கூட்டம் - தஞ்சைத் திருநகரில் அன்று மாலையில் நடைபெற இருக்கிறது.

காலையில் பொதுக்குழு உறுப்பினர்களாம் உடன்பிறப்புகளையும் - மாலையில் திசையெட்டுமிருந்து வருகின்ற திண்தோள் வீரர்களாம்; உன் போன்ற உடன்பிறப்புகளையும் சந்திக்கப்போகிறோம் என்ற நினைவு; நெஞ்செல்லாம் தஞ்சை தஞ்சை என்றே கீதமிசைத்துக் கொண்டிருக்கிறது.

அன்புள்ள,

மு. க.

23-12-1993

2077. யாரை அழைக்கின்றேன் நான்?

உடன்பிறப்பே,

பச்சைக்கொடியெனக் கருதிப் பச்சைப் பாம்பின் பக்கம் நெருங்கியவர்க்கும் - கண்ணாடியில் காட்டப்பட்ட கதிரவன் பிம்பம் இருக்கும் திசைதான் கிழக்கு திசையென நம்பி ஏமாந்திடுவோர்க்கும் - அமைதி வழியெனக் கூறியதை ஏற்று வன்முறை விளைக்கும் அமளி வழியில் தம்மையறியாமல் அடியெடுத்து வைத்திருப்போர்க்கும் - நான் விடுத்த அழைப்பை; சிலர், தமக்கு விடுத்த அழைப்பு என எண்ணிக் கொண்டு; பாவம்; அனிடசும் மெலிடசும், சாக்ரடீசாகக் தங்களைக் கருதிக்கொண்டது போல - ஜூடாஸ் தன்னை ஏசுநாதராகக் கற்பனை செய்துகொண்டதுபோல - கோட்சே, தன்னைக் காந்தியடிகளாக உருவகப்படுத்திக் கொண்டதுபோல - அவர்களும் தங்களைப் பாவித்துக்கொண்டு, உன் அழைப்பை ஏற்க மாட்டேன் என்று உரத்த குரலெடுத்துச் சீறுகிறார்கள். நான் அந்தப் பெரியவர்களை எப்போது அழைத்தேன்? அந்தத் தகுதி எனக்கு ஏது? தமிழே தடுமாறுகிற எனக்கு அந்தத் தகுதி வர முடியுமா? நான் அழைத்தது எத்தகையவர்களை? நானும் அறிவேன் - அழைக்கப்பட்டோரும் அறிவர்!

இந்த இயக்கத்தைச் சீர்குலைக்கவும் தமிழகத்தை வன்முறைக் களமாக்கவும் இடம் தராத இன்றுள்ள தலைமையை மாற்றி அமைத்திட - இரண்டொரு ஆண்டுகளாகத் திட்டம் போட்டு; கடைசி ஆயுதத்தையும் கையில் எடுத்துள்ளவர்களைக் கவலையுடன் நான் கையேந்தி அழைத்திடவில்லை! இனி அழைக்கவும் மாட்டேன்!

பிறகு யாரை அழைக்கிறேன்? அவர்களது பொய் மலிந்த சாகசப் பேச்சினைப் பொன் மொழியெனப் போற்றி; வழிமாறிச் சென்றுள்ள ஒருசில உடன்பிறப்புகளைத்தான் அழைத்தேன் - அழைத்துக் கொண்டிருக்கிறேன் - இனியும் அழைப்பேன்.

தன் குழந்தை தடம் மாறிச் செல்கையில்; அதனைத் தடுத்திடாமல் பிள்ளை பிடிப்பவன் கையில் எந்தத் தாய்தான் அள்ளிக் கொடுத்திடுவாள்?

இதோ, தஞ்சையில் பொதுக்குழுவும் - மாலையில் பொதுக்குழு விளக்கக் கூட்டமும் என்று அறிவித்தவுடன் எழுந்துவிட்டனரே, என் இளம் உடன்பிறப்புகள்!

தஞ்சைத் தலைநகரைச் சுற்றியுள்ள சிற்றூர், பேரூர், நகரங்களில் இருந்தெல்லாம் பொதுக் கூட்டமேடையில் என் கரத்தில் அளிப்பதற்கு அண்ணா சுடர் ஏந்தி வரும் செயல்வீரர்கள், இளைஞர் அணியினர், பட்டியல் வந்துகொண்டே இருக்கிறதே; அந்தப் பட்டாளத்துச் சிப்பாய்களில் சிலர், திக்குத் தவறிப் போயிருந்தால் அவர்களைத்தான் அழைத்தேன்! அழைக்கின்றேன்!

1984 ஆம் ஆண்டு என நினைவு - கரூர் கழக மாநாட்டுக்குச் சென்று கொண்டிருக்கிறேன்; என்னுடன் காரில் ஆர்க்காடு வீராசாமியும், தம்பி துரைமுருகனும்!

வழியில் சாலையில் ஒரு இளைஞரணித் தம்பி கரூர் நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறான்!

அவன் கையில் கொழுந்து விட்டெரியும் ஒரு தீச்சுடர்!

நெருப்பு, நிமிர்ந்துதானே எரியும், உண்மையான சுயமரியாதைக்காரனைப்போல!

அண்ணா சுடர் - அதன் பெயர்! அந்த இளைஞனின் பனியனில் அப்படி எழுதியிருந்தது!

அந்த இளைஞனும், அதனைத் தொடர்ந்து வரும் இளைஞர்களும் - தொடர் ஓட்டமாகத் தொண்டர் அணியினருடன், அண்ணா சுடர் ஏந்திக் கரூர் நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறார்கள்! என்றனர், எம்மிடம்; வழியில் நின்று எம்மை வரவேற்றார்!

யார் அந்த இளைஞன்?

யார் அந்தத் தொண்டன்?

யார் அந்தச் செயல்வீரன்?

யார் அந்தச் சிங்கக் குட்டி?

அவன்தான் கட்சியின் உயிர்! கட்சியின் ரத்தநாளம்! கட்சியின் இதயத் துடிப்பு! கட்சியின் மூச்சு! ஏன்; கட்சியே அவன்தான்!

என்ன கண்டான் அவன்? சிறை கண்டான் - சித்ரவதை கண்டான் - சிங்கிள் டீக்கும் வழியில்லாமற் போன நேரத்திலும் செயலாற்றும் மன வலிமை கொண்டான்!

ஊராட்சித்தலைவர் ஆனானா? ஊராட்சி ஒன்றியத் தலைவனாக வந்தானா? நகராட்சித் தலைவராக, உறுப்பினராக இருந்தவனா? எம்.எல்.ஏ. ஆனவனா? எம்.பி. பதவி அனுபவித்தவனா? அமைச்சராகத் திகழ்ந்தவனா? இந்தப்பதவிகளில் ஏதேனும் ஒன்று வேண்டுமென ஏங்கித் தவித்தவனா?

இரவெல்லாம் பனியில் குளித்துக் கொண்டே தோரணம் கட்டியிருப்பான் - தெருவெல்லாம் கொடிக்கம்புகளை நட்டிருப்பான் - அதோ அந்த வரவேற்பு வளைவுகள், அவனது உறக்கமின்மையின் படைப்புகள்! அவற்றில் தன் பெயரைப் பொறித்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக அவன் அந்தப் பாடுபடவில்லையே!

அவனது தன்னலமற்ற தூய உள்ளத்தைப் புரிந்துகொண்டால் அவனுக்குத் துரோகம் செய்ய யாருக்காவது மனம் வருமா?

அப்படி மனம் வந்து சிலபேர், துரோகத்தின் சுய உருவத்தைப் புரிந்து கொள்ளாமல் - நன்றி உணர்வு எனும் நாணத்தைத் தொலைத்து விட்டிருந்தால்; தங்களின் கவனமின்மைக்கு மனம் வருந்தி; கழகம் வளர்த்திட வந்திடுவீர் என்றுதான் அழைத்தேன்! அழைத்துக் கொண்டிருப்பேன்!

உடன்பிறப்பே,

இந்த அழைப்பிதழை நீ படித்துக் கொண்டிருக்கும்போதே; தஞ்சை மாநகரம் பொதுக்குழு ஏற்பாடுகளுக்காகவும் - பொதுக்குழு விளக்கப் பொதுக்கூட்ட ஏற்பாடுகளுக்காகவும் மிகச் சுறுசுறுப்பாகத் தயாராகிக் கொண்டிருக்கிற செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

மேலத்தஞ்சை மாவட்டச் செயலாளர் தம்பி கோ.சி. மணியும் தஞ்சைத் தரணியின் கழக முன்னோடிகளும் - தஞ்சை நகரக் கழகச் செயலாளர் தம்பி உபயதுல்லாவும் நகரக் கழக உடன்பிறப்புகளும்

- கழகப் பணியெனிலோ; கண்ணின் மணியெனக் கருதிக் கடையாற்றக் கூடியவர்கள்!

தஞ்சைத் தரணி தன்மான இயக்கத்தின் கோட்டம் - தடந்தோள் வீரர்கள் உலவிடும் பூமி! அந்த பூமிக்குத்தான் - அந்த மண்ணில் பிறந்து தவழ்ந்தவர்கள் நானும் பேராசிரியரும் என்ற மகிழ்ச்சியுடன்; என் உயிரே! ஊனே! கண்ணே! மணியே! என அன்பு கனியக்கனிய அழைக்கின்றேன்; உன்னை!

அன்புள்ள,

மு. க.

24-12-1993

2078. அய்யா, அண்ணா வழியில் அறப்போர் தொடர்ந்திட!

உடன்பிறப்பே,

இன்று தந்தை பெரியார் அவர்களின் நினைவு நாளையொட்டி, பெரியார் திடலுக்குச் சென்று அவர் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து வணங்கினேன். என்னுடன் கழக முன்னணியினர் வந்தனர். வழக்கம்போல் தளபதி வீரமணி அவர்களும் திராவிடர் கழக முன்னோடிகளும் இருந்து வரவேற்றனர்.

பெரியார் அருங்காட்சியகத்தில் சிறிது நேரம் உரையாடினோம்! எதைப்பற்றி? வேறு எதைப்பற்றி இருக்க முடியும்.

> மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நிறைவேற்றுவதாக மத்திய அரசு கூறி; மூன்று மாதங்களாகியும் நடைமுறையில் ஓர் அங்குலம்கூட முன்னேறவில்லை என்பது பற்றியும் - அதன் விளைவாக, புதுடெல்லி நாடாளுமன்ற அவையில் உறுப்பினர்களின் எதிர்ப்புக் குரல் எழுந்துள்ளது பற்றியும்தான் அந்தச் சிறிது நேர உரையாடலும் இருந்தது.

எந்தச் சமூகநீதிக்காகச் சிம்மக்குரல் ஒலித்து, காஞ்சிபுரம் காங்கிரஸ் மாநாட்டில் தமிழ்த் தென்றலின் தலைமையைக்கூட எதிர்த்துப் புயலாக வெளியேறினாரோ; 1925 ஆம் ஆண்டு - அன்று முதல் அந்த வெண்தாடி வேந்தர், ஒடுக்கப்பட்ட மக்களின் புண் ஆற்றும் மருத்துவராகச் செயல்பட்டு; இறுதி மூச்சு அடங்கும் வரையில் அந்த நீதியை நிலைநாட்டவே போர்க்கொடி தூக்கிப் படை நடத்தினார்.

அந்தக் கொடி இன்று தென்னகம் கடந்து, வடபுலம் வரையில் சென்று; ஆதிக்கபுரியினரின் கோட்டைகளைத் தவிடு பொடியாக்கி அவர்களின் கொத்தளங்களிலேயே பறந்து கொண்டிருப்பதைக் காண முடிகிறது.

1973 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14-ஆம் நாள் உத்திரபிரதேசத்தில் - அலகாபாத் நகரில் நடைபெற்ற பிற்படுத்தப்பட்டோர் மாநாட்டுக்கு - திரு. ராஜ்நாராயணன் அவர்களின் அழைப்பின் பேரில் நான் கலந்துகொண்டு உரையாற்றியபோதுதான் தந்தை பெரியார் அவர்களும் அண்ணா அவர்களும் திராவிட இயக்கமும் பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் போராடிப் பெற்றுத் தந்த சமூக நீதி குறித்தும் - அதைக் கழக ஆட்சியில் சுட்டிக்காட்டி விரிவுபடுத்தியது குறித்தும் எடுத்துக்காட்டிவிட்டு; மாநில அரசு கடைப்பிடிக்கும் இட ஒதுக்கீடு முறை மத்திய அரசு அலுவலகங்களிலும், நிறுவனங்களிலும் வேலை வாய்ப்புகளில் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தினேன்.

அதன்பிறகு நாலைந்து ஆண்டுகள் கழித்து ஜனதா ஆட்சியில் மொரார்ஜி தேசாய் அறிவித்து அமைத்த மண்டல் கமிஷன் நியமனத்துக்கு - என் வேண்டுகோளும் ஒரு தூண்டுகோல் என மகிழும் உரிமை, எனக்கும் உனக்கும் இருக்கிறதல்லவா?

அந்த மாநாட்டின்போது, இராமன் பெயரைச் சொல்லிக் கலவரம் விளைத்து என் பேச்சைத் தடுத்திட முனைந்தவர்கள்தான்; அந்த இராமன் பெயரைச் சொல்லியே கட்சி வளர்த்து கடந்த ஆண்டு இந்த இராமன் கோயிலுக்காக என்று பாபர் மசூதியை இடித்துத் தகர்த்தனர்.

தகவிலார் அப்படித் தகர்த்தபோது இடிந்து விழுந்த ஒவ்வொரு கல்லும்; தரையில் விழவில்லை - மதவெறியின் தலையில் விழுந்தது! மதச்சார்பற்ற கொள்கையின் பகைவர்கள் யாரோ; அவர்கள் மண்டைகளைப் பிளந்தது!

இந்தியாவின் தென்கோடியில் கிளம்பிய பெரியாரின் கர்ச்சனை; வடபகுதியில் அயோத்தியில் கிளம்பிய வக்கிரங்களின் செவிகளைச் செவிடுபடச் செய்தன!

கும்மிருட்டு உலகில் கிடந்த குருடர்களை; ஈரோட்டின் ஞானஒளி, விழிப்படையச் செய்து; வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தது! ஊமைகளாக உழன்றோர் பேசத் தொடங்கினர்; பெரியார் தேவைதான் என்ற உணர்வுடன்!

ஆனால் அவர்கள் தேவைக்கேற்பப் பெரியார் மீண்டும் பிறக்க முடியாது! மறுபிறவி என்போரை மகோன்மத்தர் என்பவர் அவர்!

எனினும்; அவர் மீண்டும் பிறக்கத் தேவையில்லாமலே - அவர் ஊட்டின உணர்வின் வடிவத்திலே உறுதிமிக்க உள்ளங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்! அந்த உறுதி சிதையாது என்பதை நிலை நாட்டும் வண்ணம்; செயல்பட வேண்டும் நாம்!

மண்டல் பரிந்துரை நடைமுறைக்காக வாதாடி, வி.பி. சிங் ஆட்சிக் காலத்திலே விடிவெள்ளி தோன்றி; பின்னர் அவரும் நாமும் சேர்ந்து போராடி - இப்போது இன்றுள்ள காங்கிரஸ் ஆட்சியில் அறிவிக்கப்பட்ட பிறகும் முடமான பிள்ளையாகக் கிடக்கிறதே என்ற குமுறல் நாடு முழுதும்; நலிவுற்ற பிரிவு மக்களிடத்தில்!

அதற்கிடையே அரும்பாடுபட்டு - பெரும்போர் நிகழ்த்தி - தமிழகத்தில் நிலைநாட்டப் பெற்றிருந்த 69 சதவிகித இட ஒதுக்கீட்டுக்கும் ஆபத்து எனில்; அய்யாவின் நினைவு போற்றிடும் இந்நாளில், அந்தச் சதியை சகித்துக்கொள்ள இயலுமா?

திராவிட உணர்வு கொண்ட இயக்கங்கள் அனைத்தும் - அவற்றுக்கு உரிய முறையில் தமது குமுறலை வெளிப்படுத்துகின்றன. நாமும் நமது குமுறலை; அறவழியில் வெளிப்படுத்திடத்தான் ஜனவரி 23 அன்று சென்னையில் மகத்தான பேரணி - சமூக நீதி இடஒதுக்கீடு உரிமைப் பேரணி நடத்த இருக்கிறோம்.

அதுபற்றித் தஞ்சைப் பொதுக்குழுவில் விவாதிக்கிறோம் - முடிவு எடுக்க இருக்கிறோம் - எடுத்திடும் முடிவை; அன்று மாலை தஞ்சை நகர்ப் பொதுக்கூட்டத்தில் அறிவிக்க இருக்கிறோம்.

"அங்கு சந்திக்கலாம் - வா!
அய்யாவும் அண்ணாவும்
இணைந்து நடத்திய சமூக நீதிக்கான
யுத்தத்தைத் தொடருவோம் வா!"

அன்புள்ள,

மு. க.

25-12-1993

2079. அறிந்திட ஆவலாக உள்ளது நாடு!

உடன்பிறப்பே,

ஓர் இரவுநேர விருந்தின்போது; அதாவது ஏறத்தாழ எட்டு திங்களுக்கு முன்பு தினமணியின் எழுத்தாளர் ஒருவர்; தன்னைச்சுற்றி அமர்ந்திருந்த கலையுலக நண்பர்களைப் பார்த்து மிக விரைவில் தி.மு.க.வை உடைத்துக் காட்டுகிறேன் பாருங்கள் என்று கோபாவேசமாக ஒரு சபதமேற்றார் என்ற செய்தி என் காதுக்கு வந்தது.

அதுமுதல் தினமணி கூடாரத்திலும் - அதைத் தொடர்ந்து அவருக்குப் பரிச்சயமுள்ள ஏடுகளின் பாசறைகளிலும் - அந்த உடைப்பு வேலைக்கான ஆயத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு; கழகத்திற்குள் யாரை, எவரை, தூக்கி வைத்து எழுதிப் பேசி அவர்கள் காதில் பூச்சுற்றி விடலாம் என்று ஆராய்ந்து, அவர்களையும் பிடித்து;

-- அதற்கு முன்பே தயார்படுத்தப்பட்டுத் தங்களின் மேற்பார்வையில் வைக்கப்பட்டிருந்த கதாநாயகனையும் பயன்படுத்திக்கொண்டு; இதற்கு பக்க பலமாக பாரீஸ், கனடா, இலங்கை போன்ற வெளிநாடுகளில் இருந்து வெளிவருகிற விடுதலைப்புலிகளின் ஏடுகளையும், இவர்கள் இங்கிருந்து வரும் செய்திகளின் அடிப்படையில் தி.மு.க. தலைமைக்கு எதிராக ஒரு மாற்றுத் தலைமையை உருவாக்கிட; அதன் மாட்சிமைகளைப் பக்கம் பக்கமாக எழுதச் செய்து - இத்தனைக்கும் பிறகு, நினைத்தப்படி கழகத்தை உடைக்க முடியாமல்; ஒரு சாதாரண சரிவை மட்டும் உண்டாக்கியுள்ள சூழலில் தினமணி இன்றைக்கு மிகுந்த அக்கறையுடன் தலையங்கம் தீட்டியுள்ளது தி.மு.க.வில் தலைமைப் போட்டி என்று!

இதே தலையங்கம் எக்ஸ்பிரஸ் ஏட்டிலும் வெளிவந்துள்ளது! தலையங்கத்தின் முதல் பகுதியே; ஓட்டைக் குடத்தில்

தண்ணீர் மொண்டிடும் மௌடீக வாதம்தான்! தனக்குப் பின் கட்சித் தலைமைப் பதவிக்கு தனது மகனையும் தனது குடும்ப உறுப்பினர்களையும் கொண்டுவர கருணாநிதி முயலுகிறார் என்ற அண்டப்புளுகு சிகாமணிகளின் ஆராய்ச்சியின் அடிப்படையில் தினமணியார் தலையங்கத்தைத் தொடங்குகிறார். 1992-ல் ஜூன் திங்களில் கழகத் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் தேர்தல்கள் நடந்து முடிந்துள்ளன. கட்சிக் கிளைகளின் மட்டத்திலிருந்து தலைமை நிர்வாகிகள் வரையில் ஜனநாயக முறையில்தான் பொறுப்புக்கு வருகிறார்கள்.

இது மன்னராட்சியுமல்ல; மடாதிபதி விவகாரமும் அல்ல; மகனையோ - வாரிசையோ, அடுத்த பீடாதிபதியாக்குவதற்கு! இது ஜனநாயக இயக்கம் - இதில் என் மகனையோ அல்லது குடும்பத்தில் யாரையோ அடுத்த தலைவர் என்று அறிவிப்பதாக இருந்தால் நான் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதே அறிவித்திருக்கலாம். இப்போது அவதூறு பேசுகிறவர்களில் பலர் அப்போது அமைச்சர்களாகவோ, சட்டமன்ற உறுப்பினர்களாகவோ, இருந்தவர்கள் வாயைக் கூடத் திறந்திருக்க மாட்டார்கள். அந்த நேரத்திலேயே மகனுக்கு மகுடாபிஷேகம் நடத்த வேண்டுமென நினைத்திடாத நான்; இப்போது சில கோயபல்ஸ்கள் கூறுவதுபோல், ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் வேலையில் என்றைக்காவது ஈடுபட நினைப்பேனா?

இப்படி ஒரு பொய்யைத் திரும்பத் திரும்பச் சொல்லிப் புலம்புகிறார்கள் யார்? அவர்களது தம்பிகளின் செயலால் கழகத்துக்கே கஷ்டம், நஷ்டம் விளைவித்தவர்கள்! தேர்தலில் தாங்கள் நிற்க வேண்டும்; அல்லது தனது மனைவியோ மகனோ நிற்க வேண்டுமென அடம்பிடித்து இடம் வாங்கியவர்கள்! தங்களுக்கு தேர்தலில் மாற்று வேட்பாளர்காளகக் கூட கழகத்தில் உள்ள மற்றவர்கள் கூடாது; தனது மனைவியோ மகனோதான் இருக்க வேண்டுமெனத் தலைகீழாக நின்றவர்கள்! இப்போதும் பக்கத்திலே தம்பி - அந்தத் தம்பியளவுக்கு நெருக்கமுள்ள சொந்தக்காரருடன்தான்; தனது கட்சி என்று எல்லை வகுத்துக் கொண்டிருப்பவர்கள் - இவர்கள் தான் கருணாநிதி, மகனுக்கு முடிசூட்டப் போகிறார் - நாள் நட்சத்திரமெல்லாம் பார்த்தாகி விட்டது என நடுங்கா நாக்கழகர்களாக மாறிக் கொண்டு, நரகல் நடையழகர்களாகவும் திரிகிறார்கள்.

இந்த உண்மை தெரிந்தும் தினமணியார்; அன்றொரு நாள் விருந்திலே விடுத்த சபதத்தை முற்றாக நிறைவேற்ற முடியவில்லையே என்ற ஆதங்கத்தில் - எடுத்த வாந்தியையே எடுத்து வாயில் போட்டிக்கொண்டு, திரும்பத் திரும்பக் குமட்டிக் கொண்டிருக்கிறார்.

தினமணி தலையங்கம்; மற்றொரு பகுதியில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> "கருணாநிதி தலைமையிலான தி.மு.க.வோ அல்லது கோபாலசாமி மற்றும் அவரது ஆதரவாளர்களோ, கட்சியின் உள் விவகாரங்களில் விடுதலைப்புலிகளின் உண்மையான பங்கு என்ன என்பதை பொதுமக்களுக்கு விளக்குவதுபற்றி அக்கறைப்படவில்லை."

இந்தக் கருத்தை, தினமணி எந்த நோக்கத்துடன் எழுதியுள்ளது என்பது பற்றிக் கவலையில்லை. ஆனால் தி.மு.க.வின் உள்கட்சி விவகாரங்களில் விடுதலைப்புலிகளின் உண்மையான பங்கு என்பது, இந்தக் கால கட்டத்திலும் - இதற்கு சில மாதங்களுக்கு முன்பே இந்தக் கால கட்டத்தை உருவாக்குவதற்கான சூழலை விடுதலைப்புலிகள் உருவாக்கியபோதும் - அவர்களின் ஏடுகளிலும், அவர்களது ஆதரவு ஏடுகளிலும் தி.மு.க. தலைமை கோழைத்தனமானது என்றும் - உண்மையான தமிழ்த் தேசியத் தலைமை கோபால்சாமியின் தலைமைதான் என்றும் - பட்டவர்த்தனமாக எழுதத் தலைப்பட்டு விட்டார்களே; அதுதான்!

> "தமிழ் ஈழத்தை நானோ தி.மு.க.வோ என்றைக்குமே ஆதரித்தது கிடையாது என்று கருணாநிதி நாலாந்தர அரசியல்வாதி போல் நடந்துகொண்டு சொல்கிறார் எனும் கருத்தை 15.12.93 உலகத் தமிழர் என்ற விடுதலைப்புலி ஆதரவு ஏடு எழுதியிருக்கிறது."

தமிழ் ஈழத்தை என்றுமே, தானோ அல்லது தி.மு.க.வோ ஆதரித்தது கிடையாது என்று முழு பூசணிக்காயை சோற்றில் மறைக்கப் பார்க்கிறார்; தமிழினத்தின் காவலர் என்று நாங்கள் எல்லாம் நம்பி இருந்த தலைவர், ஒரு நாலாந்தர அரசியல்வாதியைப்போல் நடந்து

கொள்வதைப் பார்க்க உண்மையிலேயே பரிதாபமாக இருக்கிறது. ஏன்? வெட்கமாகவும் இருக்கிறது.

உலகத்தமிழர் ஏடு 15.12.93

இதைப்போலப் பொய்களை இட்டுக்கட்டி, தரக்குறைவாக, தமிழ்நாட்டில் உள்ள ஒரு கட்சியின் உள் விவகாரத்தில் புலிகள் தலையிட்டு கருத்துக்கள் கூறுவது முறையல்ல; என்று நான் சொல்லியிருப்பது போல - தினமணி போன்ற ஏடுகள் என்றைக்காவது சொன்னது உண்டா? என்றைக்குமே தமிழ் ஈழத்தை தி.மு.க. ஆதரித்தது கிடையாது என்று நான் எப்போது, எங்கே கூறியிருக்கிறேன்.

1983-ல் தனித்தமிழ் ஈழத்துக்காகக் குரல் கொடுத்தோம் - ராஜீவ் காந்தி கொலைக்குப் பிறகும், இந்தியாவில் விடுதலைப்புலி இயக்கம் தடை செய்யப்பட்ட பிறகும் - தனித் தமிழ் ஈழத்துக்காக நாங்கள் குரல் கொடுக்காவிடினும் - தனித்தமிழ் ஈழம் கிடைத்தால் மகிழ்ச்சி அடைவோம் என்றுதானே பலமுறை செய்தியாளர்களிடம் சொல்லியிருக்கிறேன். இதனை மறைத்தும் திரித்தும் விடுதலைப்புலிகளின் வெளிநாட்டு ஏடுகள், என்னைத் தரக் குறைவாகத் தாக்குவதும் - அந்த ஏடுகள் தமிழ்நாட்டில் தாராளமாகப் புழங்குவதும் எந்த உள்நோக்கத்துடன் என்றுதான் புரியவில்லை.

அவர்கள் ஒருவரை துரோகி என்று கூறிவிட்டால் அடுத்து என்ன செய்வார்கள் என்பது நானும், நாடும் நன்றாகவே அறிந்த ஒன்றாகும். அதற்காக நான் அஞ்சி நடுங்கிக் கொண்டிருக்கவுமில்லை.

உடன்பிறப்பே, அதே 15.12.93 உலகத் தமிழர் ஏடு வீரத்தின் இலக்கணத்திற்கு ஒருவரைச் சுட்டிக்காட்டியுள்ளது - அது இதோ; வரி பிசகாமல்!

> ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்டபோது, தமிழ் தேசியக் கட்சியின் தலைவர் பழ. நெடுமாறனை பத்திரிகை நிருபர்கள் கேட்டார்கள் ராஜீவ்காந்தியை ஒரு தமிழச்சி கொன்று விட்டாளே அதைப்பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று. அதற்கு அவர் சொன்னார். தனது கணவனை கொன்றொழித்ததற்காக பழிவாங்க கண்ணகி

முழு மதுரை நகரத்தையும் தீக்கிரையாக்கினாளே; ஈழத்தில் ஆயிரமாயிரம் மக்களை, இந்தியப் படைகள் கொன்றொழித்தார்களே - கற்பழித்தார்களே அதற்குப் பழி வாங்க தான், ஒரு ராஜீவ்காந்தியைத்தானே பழி வாங்கியிருக்கிறாள் என்று!

நண்பர் பழ. நெடுமாறன் இப்படிப் பதில் சொன்னாரோ என்னவோ எனக்குத் தெரியாது. சொல்லியிருக்க மாட்டார் என்றே நம்புகிறேன். ஆனால் அந்தப் பத்திரிகை அவர் அப்படிச் சொன்னதாகக் கட்டுரை தீட்டியுள்ளது. ராஜீவ் கொலையைப் பற்றி இப்படிப் பதில் சொன்னால்தான் அது தமிழ் வீரம் என்றால்; அந்த ஏடு - இன்று, தி.மு.க.வை மீட்பேன் என்று சபதமேற்றுத்திரிகிற - அந்த ஏட்டின் விசுவாசக் கதாநாயகரையும்; நெடுமாறன் சொன்னதாக எழுதப்பட்டுள்ள பதிலையே, இப்போது சொல்லுமாறு பணிக்கலாமே!

தினமணியார் கூற்றுக்கு நான் அளிக்கிற பதில் வருமாறு :-

தி.மு.க.வின் உட்கட்சி விவகாரத்தில் விடுதலைப்புலிகளின் உண்மையான பங்கு என்ன என்பதையும், நான் தொடர்ந்து வெளியிட்டு வருகிறேன், பொது மக்கள் மத்தியில் வைத்து வருகிறேன். அவை ஏடுகளில் வெளிவந்துள்ளன.

ஆனால் தினமணியோ; தினமணியால் கதாநாயகர்களாக ஆக்கப்பட்டுள்ளவர்களோ; இவை குறித்து அறிவிக்கும் வெளிப்படையான கருத்து என்ன? அறிந்து கொள்ள நாடு ஆவலாக உள்ளது!

அன்புள்ள,

மு. க.

29-12-1993

2080. நடித்துக் காட்டியதும் - நடத்திக் காட்டியதும்!

உடன்பிறப்பே,

பொங்கல் வருகிறது - அந்தத் தமிழர் திருநாளையடுத்து சமூகநீதி கோரிப் பொங்கி யெழும் நமது பேரணியைத் தலைநகர் சென்னை காண இருக்கிறது - பொங்கலுக்கு முரசொலி மலர் படைக்கிறது; அந்த மலர் வழக்கம்போல் அழகு மலராக, அறிவு மலராக, அண்ணாவின் தம்பிகளும், ஏனைய அறிஞர் பெருமக்களும் கவிஞர் பெருமக்களும் எழுத்தாரம் தொடுத்திடும் மலராக மணம் பரப்பிட இருக்கிறது.

என்ன; உடன்பிறப்பே ஒரு மாதிரியாகப் பார்க்கிறாய்! தஞ்சைப் பொதுக்குழுவுக்குப் பிறகு உனக்கு நான் கடிதம் எழுதவில்லையென்ற கோபம்தானே - தெரியும் எனக்கு, உன் நெஞ்சின் ஆழத்திலிருந்து உரிமையுடன் எழும் அந்த முணுமுணுப்பின் பொருள்!

மன்னித்துக் கொள்; கடித வாயிலாகச் சொல்ல வேண்டியவைகளைத்தான் மேடைப் பேச்சுக்களின் மூலமாகத் தெரிவித்திருக்கிறேனே; உனக்கும் நாட்டுக்கும்!

தஞ்சையில் 29.12.93 அன்றைய தினம் நடைபெற்றதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழு என்பதையும், அரசியலைப் பற்றி முற்றும் உணர்ந்தோர் மட்டுமின்றி - அரசியல் குறித்து அணுவளவு ஞானம் உடையவர்களும்கூட ஒப்புக்கொண்டு, தங்களைத் தெளிவுபடுத்திக்கொண்டுவிட்டனர்.

இந்திய நாடு முழுதுமிருந்து வந்திருந்த ஆங்கில - தமிழ் பத்திரிகைக்காரர்கள், பொதுக்குழு நடைபெற்ற குருதயாள் சர்மா மண்டபத்தின் மேல் மாடத்தில் அமர்ந்தே கூர்மையாக கவனித்து உண்மையை உணர்ந்து கொண்டனர்.

பொதுக்குழுவில் கலந்துகொண்ட தகுதி பெற்ற பொதுக்குழு உறுப்பினர்கள் 908 பேர்களின் கையொப்பங்களும் செராக்ஸ் காப்பிகளாகப் படி எடுக்கப்பட்டு அந்த பத்திரிகைக்காரர்களிடம் அன்றைக்கே வழங்கப்பட்டிருக்கின்றன.

தஞ்சைப் பொதுக்குழுவுக்கு முன்பு சென்னையிலும், கோவையிலும் நடைபெற்ற பொதுக்குழு நடவடிக்கைப் புத்தகங்கள் மினிட் புக் அப்போது கலந்து கொண்டு கையெழுத்திட்ட பொதுக்குழு உறுப்பினர்களின் விபரங்களுடன், பத்திரிகையாளர் கூட்டத்தில் காணப்பட்டது.

அந்த மினிட் புத்தகங்களையும் - தஞ்சைப் பொதுக்குழு மினிட் புத்தகத்தையும் ஒப்பிட்டுக் காட்டி பத்திரிகையாளர்களின் ஐயப்பாட்டை அறவே நீக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆதாரங்களை அடுக்கிக் காட்டும் வகையில் பொதுக்குழு நடைபெற்ற மண்டபத்து மேடையிலேயே பத்திரிகையாளர்களின் பார்வையிலேயே - மாவட்ட வாரியாகப் பொதுக்குழு உறுப்பினர்கள் அணிவகுத்து புகைப்படங்களும் எடுக்கப்பட்டுள்ளன.

அஃதன்னியில் வீடியோ மூலம் பொதுக்குழு உறுப்பினர்கள் வருகை - பொதுக் குழுக்கூட்ட நிகழ்ச்சி - என்ற அளவில் ஒன்றுவிடாமல் படமாக்கப்பட்டுள்ளன.

வடமாநில ஏடுகள், தமிழ்நாட்டு ஏடுகள் அனைத்துமே; கழகத்தின் கட்டுப்பாடு மீறியதற்காக விலக்கப்பட்டோர் திருச்சியில் நடித்துக் காட்டிய போலிக் குழுவுக்கும் - தஞ்சையில் கழகம் நடத்திக் காட்டிய பொதுக்குழுவுக்குமுள்ள வேறுபாட்டை வெளியிடத் தவறவில்லை. இத்தனைக்கும் பிறகும் - கழகத்திலிருந்து விலக்கப்பட்டோர்; மோதுதல் அரசியலையே நடத்துவதென முடிவெடுத்துக்கொண்டு செயல்படுகின்றனர்.

இதோ; ராணி ஏடு எழுதுகிறது - அந்த ஏடு அரசியல் செய்திகளையோ விமர்சனங்களையோ முழுவதுமாகத் தாங்கி வருகிற ஏடல்ல! குடும்ப பத்திரிகை என்ற தலைப்புடன் வெளிவரும் ஏடு! எனினும்; தமிழ், தமிழர், என்ற உணர்வுகளுக்கு அதன் ஆசிரியர் அ.மா. சாமி அவர்கள் என்றைக்குமே முதலிடம் தருபவர். அந்த ஏட்டில் நடுநிலைக் கண்ணோட்டத்துடன்

வந்துள்ள கட்டுரையில் சில பகுதிகளை நீயும் படித்து, மற்றவர்க்கும் சொல்ல வேண்டும்.

> “கருணாநிதிக்குப் பிறகு யார்? என்ற தலைமைப் போட்டியால் வெளியேற்றப்பட்டவர், தானே ஒரு பொதுக்குழுவைக் கூட்டி - நானே தலைவர் என்று அறிவித்திருக்கிறார். எப்படியோ அவரது ஆசை நிறைவேறிவிட்டது”.

உடன்பிறப்பே; ராணி ஏடு எழுதியுள்ள இந்தப் பகுதி பற்றி ஒரு சிறு குறிப்பு - கருணாநிதிக்குப் பிறகு யார்? என்ற கேள்வி இப்போதே ஏன் எழுந்தது? இந்த இயக்கத்தில் பெரியாருக்குப் பிறகு யார் என்று பெரியார் இருக்கும்போதே பிரச்சினை எழவில்லை. அதேபோல அண்ணா மரணப்படுக்கையில் இருந்தபோதுகூட அண்ணாவுக்குப் பிறகு யார் என்ற பிரச்சினை எழுவில்லை. ஆனால் இப்போது மட்டும் கருணாநிதிக்குப் பிறகு யார்? என்ற பிரச்சினை இவ்வளவு அவசரமாக எழுவானேன்! நான் நலமாகத்தானே இருக்கிறேன் -

ஒரு வேளை எனக்குப் பின் என்ற ஒரு நிலையை உடனடியாக உருவாக்க வேண்டுமென்ற திட்டம் ஏதாவது உண்டா? அதனால்தான் கருணாநிதி தலைமையினால் தி.மு.க. தமிழ்த் தேசிய உணர்வைப் பெற முடியாது - அந்தத் தலைமையை இன்னார்தான் ஏற்க வேண்டும் என்ற கருத்தை விடுதலைப்புலிகளுக்கான வெளிநாட்டு ஏடுகள் அவசர அவசரமாக தொடர்ந்து எழுதிக்கொண்டு வருகின்றனவோ? தெளிவான விடை கிடைக்க வில்லையே; ஏன்? பரவாயில்லை; தெளிவு பெற வேண்டியவர்கள் தெளிவு பெற்றால் சரிதான்!

> “நானே தலைவர் என்று அறிவித்துக் கொண்டவர் தனது கொள்கைகளை அறிவித்திருக்கிறார். தி.மு.க.வின் அதே கொள்கைகள்தான். வேறுபாடு, மாறுபாடு எதுவுமில்லை. தலைமைப் பதவிக்குத்தான் சண்டை. ஒரே ஒரு கொள்கையை வைத்திருக்கிறார்; அது, தி.மு.கழகத்தைக் கைப்பற்றுவது என்பது!”

என எழுதுகிறது ராணி!

உண்மைதான்; அப்படித்தான் அவர்களுக்கு ஆணையிடப் பட்டிருக்கிறது. அதற்குத்தான் ஆசை காட்டப்பட்டிருக்கிறது. அதற்காகவே அள்ளி வழங்கப்பட்டிருக்கிறது.

கோட்டைக்குள் எங்காவது ஒரு ஓட்டையைப் போட்டுக்கொடு - அதன் வழியாக உள்ளே நுழைந்து கொத்தளத்தில் எங்கள் கொடியை நாட்டி விடுகிறோம், அந்தச் சேவைக்குத் தேவை எதுவோ அதனைப் பெற்றுக்கொள்!

கட்டளையைக் கால்தொட்டு வணங்கிப் பெற்றுக் கொண்டவர்கள்; கழகத்துடன் மோதுதல் அரசியல் நடத்தினால்தானே பேசிய பேரத்தைப் பேசியவாறு பெற முடியும் -

உடன்பிறப்பே, ராணி இதழ் மேலும் கூறுகிறது:-

> கருணாநிதியின் செல்வாக்கு அப்படியே இருக்கிறது, என்பதை சமீபத்திய கணக்கெடுப்பு ஒன்று காட்டுகிறது
>
> எனச் சுட்டிக் காட்டிவிட்டு
>
> அறிஞர் அண்ணாவுக்குப் பிறகு கழகத் தலைவராகக் கருணாநிதி இருந்து வருகிறார். பல ஆண்டுகள் முதல்வராகவும் இருந்தார். அப்போது சிலருக்கு சில செய்திருப்பார். சிலருக்கு செய்திருக்கமாட்டார். இதனால் கோபதாபமுள்ள அந்தச் சிலர் இவரை எதிர்த்து, அவரை ஆதரிக்கிறார்கள்.

என்ற கருத்து விளக்கமும் தந்திருக்கிறது - இங்கே ராணி ஆசிரியருக்கு என் வேண்டுகோள் ஒன்று; தயவு செய்து இப்போது என்னையும் கழகத்தையும் எதிர்ப்போரின் அந்தப் பட்டியலில் இருப்போரைப் பாருங்கள்! அவர்கள் கட்சியினால், ஆட்சியினால் பதவிப் பொறுப்புகள் பெற்றவர்களா? பெறாதவர்களா? இன்னும் சொல்லப்போனால் அப்போது பெற்ற பதவிப் பொறுப்புகளில் இன்னமும் இருப்பவர்கள்! அவர்களால் கரியமிலவாயு என்றும், வெள்ளைச் சேலை என்றும், ரப்பர் ஸ்டாம்பு என்றும், தமிழ் தெரியாதவன் என்றும் ஏசி பேசப்படுகிற நானும் பொதுச்செயலாளர் பேராசிரியரும்தான் அவர்களுக்கு அந்தப் பதவிப் பொறுப்புக்களையே வழங்கிடக் காரணமாக இருந்தவர்கள்.

உடன்பிறப்பே; நான் தந்துள்ள இந்த விளக்கத்துடன் - மோதுதல் அரசியல் நடத்துவோரின் நோக்கம் என்ன என்பதை ராணி இதழ்க் கட்டுரை மூலம் தெளிவாகப் புரிந்து கொள்வாய் என நம்புகிறேன்.

அந்தத் தெளிவின் காரணமாக ஏற்பட்ட நம்பிக்கையை ஏற்கெனவே சேலம் செயற்குழுவிலும், தஞ்சை பொதுக்குழுவிலும் நிலை நாட்டிவிட்ட உன் காலடிகளில் என் நன்றியைக் குவிக்கிறேன்.

அடுத்து, தொடர்ந்து நமது இயக்கத்தின் கடமை ஆற்றிட - ஜனவரி 23-ஆம் நாள் சென்னை சமூக நீதிப்பேரணியில் சங்கமிப்போம் வா!

அன்புள்ள,

மு. க.

07-01-1994

2081. வேறு என்ன வெங்காயக் காரணம்?

உடன்பிறப்பே,

முதலமைச்சர் ஜெயலலிதா, தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழகங்கள் அனைத்துக்கும்; இனிமேல் கவர்னர் வேந்தல்ல - தானே வேந்தர் என்று, தன் தலையில் தானே முடியைத் தூக்கி வைத்துக்கொண்டு விட்டாராம் - அந்தக் காட்சியைப் பெரும் புரட்சி என்றும் சுயாட்சிப் பிரளயம் என்றும் முற்போக்கு சக்திகள் எனக் கருதப்படும் திக்குத் திசைகளில் இருந்தெல்லாம் வாழ்த்து முழக்கங்கள் ஒலித்துக்கொண்டிருக்கின்றன.

இப்போது முதலமைச்சர் செய்திருப்பது ஒன்றும் கொள்கை முடிவல்ல; அவருக்கும் கவர்னர் சென்னாரெட்டிக்கும் ஏற்பட்டுள்ள மோதுதல் காரணமாக எழுந்த கோபத்தின் விளைவு என்று நான் கூறியதைக்கூட சிலரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

இந்த அரசின் மீதுள்ள துவேஷத்தினால் நான் அப்படிக் கூறுகிறேன் - என்கிறார்கள் - பரவாயில்லை; எனக்கு துவேஷமும் - அதைச் சுட்டிக்காட்டிச் சலுகை பெறுகிற அளவுக்கு அவர்களுக்கு விசுவாசமும் இருப்பதை அவர்கள் வெளிப்படையாகக் காட்டிக் கொள்வதைத் தடுப்பதற்கு நான் யார்? தாராளமாக அவர்கள் புதிய வேந்தர் ஜெயலலிதாவை பூஜிக்கட்டும் - அதற்காக நம்மீது புழுதி வாரித்தூற்றி, அரசியல் காழ்ப்பு காரணமாகத்தான் நாம்; கவர்னர் வேந்தர் பதவியிலிருந்து அகற்றிய மசோதாவை எதிர்ப்பதாக ஜாடை பேசுவதும், எழுதுவதும் தேவைதானா?

கவர்னர் பதவியே கூடாது என்பதுதான் தி.மு.க.வின் திட்டவட்டமான நிலை! இந்த நிலைப்பாட்டையும் உள்ளடக்கிய மாநில சுயாட்சி தீர்மானத்தை இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழ்நாடு சட்டப்பேரவையில் கொண்டு வந்து நிறைவேற்றிய ஆட்சி 1974 ஆம் ஆண்டு கழக ஆட்சிதான்!

அந்தத் தீர்மானம் நிறைவேறும்போது இன்றைய ஆளுங்கட்சியினரான அ.தி.மு.க. வினர் சட்டப்பேரவையை விட்டு வெளிநடப்பே செய்துவிட்டனர்.

பிறகு நீண்ட காலம் வரையில் மாநில சுயாட்சி கூடாது என்று ஒரு புரியாத கோஷத்தை, அ.தி.மு.க.வினர் நாட்டில் அறிமுகப்படுத்தினர். பின்னர்; அவர்கள் மெல்ல மெல்லத் தங்களைத் திருத்திக்கொண்டு - அன்றைக்கும் நிதி அமைச்சராக எம்.ஜி.ஆர். ஆட்சியில் இருந்த நாவலர் அவர்கள் அவையில் படித்த நிதிநிலை அறிக்கையில் மாநில சுயாட்சி என்ற கோரிக்கை இடம் பெற்றது. அதை நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து பாராட்டிப் பேசும்போது நாவலர் அங்கு போனதால் - எம்.ஜி.ஆர். இப்போது மாநில சுயாட்சியை ஏற்றுக்கொண்டிருக்கிறார் எனக் குறிப்பிட்டேன். அதற்கு பதில் அளித்த நாவலர், மாநில சுயாட்சி என்பது பிரிவினைக் கோரிக்கை என எம்.ஜி.ஆர். எண்ணியிருந்ததாகவும், அவருக்கு விளக்கமளித்த பிறகு இப்போது மாநில சுயாட்சி என்பதை அவர் ஏற்றுக் கொண்டார் என்றும் குறிப்பிட்டது இன்னமும் என் நெஞ்சை விட்டு அகலவில்லை.

அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது சென்னையில் நடைபெற்ற ஒரு மாநில சுயாட்சி மாநாட்டில் - 1968 ஆம் ஆண்டு; வித்தாக ஊன்றிய மாநில சுயாட்சிக் கோரிக்கையை வெறும் முழக்கமாக மட்டும் கொண்டிராமல் 1970-ல் ராஜமன்னார், லட்சுமணசாமி முதலியார், சந்திராரெட்டி ஆகிய மூவரைக் கொண்ட குழுவினை அமைத்து அரியதோர் அறிக்கை பெற்று - மாறன், செழியன் குழுவினரின் ஆய்வுக்குப்பிறகு வடிவமைத்து - கழக அமைச்சரவை விவாதித்து, அதைத் தொடர்ந்து சட்டப்பேரவையில் தீர்மான உருவில் நிறைவேற்றியிருக்கிறோம்.

அந்தக் கோரிக்கையை வலியுறுத்தித் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வருகிற நாம் கவர்னரிடமிருந்து வேந்தர் பதவி பறிக்கப்படுவதற்காக கவலை கொண்டு கண்ணீர் வடிக்கவில்லை.

ஆனால் ஓர் அரசு ஒரு முடிவு எடுப்பதற்கு முன்பு; அதனை ஆர அமரச் சிந்தித்து அந்த முடிவை மேற்கொள்ள வேண்டாமா என்பதே நமது கேள்வி!

நாட்டில் இன்று எத்தனையோ பிரச்சினைகள் - ஊழல், ஊதாரிச் செலவு, ஒவ்வொரு நாளும் தினசரி இதழ்களில்

பக்கத்திற்குப் பக்கம் கொட்டை எழுத்துக்களில் கொலை, கொள்ளைச் செய்திகள், புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோர் உரிய நிவாரணம் பெறாத வேதனை - அரசு நிர்வாகத்திலோ ஆயிரம் ஓட்டைகள் - இவை பற்றி எந்த அக்கறையும் எடுத்துக் கொள்ளாமல் கிடப்பதெல்லாம் கிடக்கட்டும், கிழவியைத் தூக்கி மனையிலே வை என்பது போல - திடீரென ஒரு மசோதாவைக் கொண்டு வந்து, அதற்காக ஒரு நாலு நாள் அவையைக் கூட்டி - நாள்தோறும் வெளியேற்றப் படலங்கள் நடைபெற்று; இனி நானே வேந்தர் என அறிவித்துவிட்டதைத் தமது நலம் கருதாமல் தமிழகத்தின் நலம் கருதுகிற யார்தான் பாராட்ட முடியும்!

ஆட்சியாளருக்கு விருப்பமான ஒருவரைத் துணைவேந்தர் ஆக்குவதில் தகராறு கவர்னருக்கும் முதலமைச்சருக்கும்! துணைவேந்தர் நியமனங்களில் கருத்து வேறுபாடு ஏற்படுவது என்பது; கடந்த காலங்களிலும் இருந்ததுண்டு!

அந்த வேறுபாடுகளை முதல்வரும் கவர்னரும் கலந்து விவாதித்து இறுதியாக ஏற்ற முடிவெடுப்பதே மரபாக இருந்து வந்துள்ளது.

இப்போது நமது கேள்வி இதுதான் - கவர்னர் பதவி என ஒன்றை ஏற்றுக் கொண்டிருக்கும் நிலையில்; அந்தப் பதவியில் உள்ளவரின் மரியாதையைக் குலைக்கும் வகையில் அந்த மரபு மீறப்படுவானேன் என்பதுதான்!

கவர்னருக்கும் ஜெயலலிதாவுக்கும் இடையே ஏற்பட்டுள்ள மோதுதலைத் தவிர; இதற்கு வேறு என்ன காரணம் - பெரியார் மொழியிலே கேட்க வேண்டுமானால் வெங்காயக் காரணம்?

பெரிய கொள்கை முடிவா எடுத்து விட்டார்கள்; இல்லையே!

திடீர் என தீமிதித் திருவிழாவை இப்போது நடத்தியுள்ளதால் - எத்தனையோ ஐயப்பாடுகள்!

பல்கலைக் கழக மானியக்குழு இந்தப் புதிய மாற்றத்தை ஏற்றுக் கொள்ளவில்லையெனச் செய்தி வந்துள்ளது.

அப்படியென்றால் அந்த மானியக் குழுவின் மூலம் பல்கலைக் கழகங்களுக்கு மானியமாகக் கிடைக்கக்கூடிய பல கோடி ரூபாய் கிடைப்பதற்கு வழியில்லாமல் போய் விடாதா?

வேந்தராக ஆளுநர் இருக்கும்போது இட ஒதுக்கீடு விகிதாசாரப்படி பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்டவர்களுக்கு உரிமைகள் கிடைக்க முடியாமல் போயிருக்குமேயானால்; அதற்கு ஆளுநர் காரணமா? அரசின் ஊக்கமுற்ற நிலைமை காரணமா?

இடஒதுக்கீடு கொள்கையில், இப்போதுள்ள முதலமைச்சருக்கு இருதய சுத்தியான நம்பிக்கையோ - ஆர்வமோ - எள்முனையளவாவது உண்டா?

உண்டு என்றால்; 69 சதவிகிதத்திற்கான சட்ட முன்வடிவு விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டபோது - அவையில் இருந்திட வேண்டுமென்ற உணர்வு முதல்வருக்கு ஏற்படாமற் போன காரணம் என்ன?

இடஒதுக்கீடு மசோதாவை முன்மொழிந்து படித்துவிட்டு, பிறகு அவையின் பக்கமே தலை காட்டாதவரிடம் உண்மையான சமூக நீதியைக் காண முடியுமா?

சமூக நீதியின் காவலராம் தந்தை பெரியாரின் சிலையை வைக்கத்தில் திறந்து வைக்கக்கூட - நாவலருக்கு இடஒதுக்கீடு செய்துவிட்டு, தந்திரமாக ஒதுங்கிக் கொண்ட இந்த முதலமைச்சர், இனி வேந்தராகி - நடுநிலையுடன் செயல்பட்டு - சமூக நீதியையும் காத்தளிப்பார் என்பது கனவு காணுகிற விஷயமே ஆகும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை!

எனவே உடன்பிறப்பே; முதல்வரை வேந்தராக்க முனையும் இந்தச் சட்டம், ஒரு திசை திருப்பும் வேலையே தவிர வேறல்ல!

பேரவை விவாதத்தில் தம்பி பரிதி இளம்வழுதி கேட்டதைப்போல கவர்னர் பதவியையே அகற்றும் மசோதாவை இவர்கள் கொண்டு வந்து நிறைவேற்றட்டுமே; நாமும் ஆதரிக்கத் தயாராக இருக்கிறோம். காரணம் மாநில சுயாட்சித் தீர்மானத்தை நிறைவேற்றியவர்கள் நாம்!

அன்புள்ள,

மு. க.

08-01-1994

2082. கோபத்தில் அரும்பி - தாபத்தில் மலர்ந்து ...

உடன்பிறப்பே,

கொள்கை அடிப்படையில் கொண்டு வரப்படுகிற சட்டங்களுக்கும் கோபதாபங்களின் அடிப்படையில் கொண்டு வரப்படுகிற சட்டங்களுக்கும் - எடுத்துக்காட்டுகள் தேவையென்றால்; பெண்களுக்கும் ஆண்களைப்போல சொத்துரிமையில் சமபங்கு என்று 1989 ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சிக்கு வந்த நமது கழக அரசு கொண்டு வந்த சட்டத்தை - கொண்டு வந்து நிறைவேற்றியதை - கொள்கை அடிப்படையிலானதுஎன்றும்;இப்போதுமுதலமைச்சர்ஜெயலலிதா கொண்டுவந்துநிறைவேற்றியுள்ள;முதலமைச்சர்தான்பல்கலைக் கழகவேந்தர்என்கிறசட்டத்தை,கோபதாபத்தின்அடிப்படையில் கொண்டுவந்தது என்றும் கொஞ்சமும் தயக்கமின்றிக் கூறிவிடலாம்.

ஒரு மாநிலத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற முதலமைச்சருக்குள்ள உரிமைகள்; மத்திய அரசின் ஏஜண்டாக நியமிக்கப்படும் கவர்னரால் பறிக்கப்படக்கூடாது என்பதில் தி.மு.கழகத்துக்கு உள்ள திட்டவட்டமான கருத்தும் - குறிப்பிட்ட அத்தியாவசியமான சில அதிகாரங்களைத் தவிர ஏனைய அனைத்து அதிகாரங்களும் மாநிலங்களும் வழங்கப்படும் வகையில் மாநில சுயாட்சி தேவையென்ற அழுத்தமான கொள்கையும் - நீண்ட காலமாக நம்மால் வலியுறுத்தப்பட்டு வருபவைகளாகும்.

அதன் அடிப்படையில்தான் 1974 ஆம் ஆண்டு சட்டப்பேரவையில் கழக ஆட்சி மாநில சுயாட்சி தீர்மானத்தை நிறைவேற்றியது என்பதை நேற்றைய கடிதத்தில்கூட குறிப்பிட்டிருக்கிறேன். அப்போது அத்தீர்மானத்தை ஆதரிக்காமல் வெளிநடப்புச் செய்தவர்கள் அ.தி.மு.க. வினர் என்பதை மறந்துவிட முடியாது.

அதுமட்டுமல்ல; ஜனதா ஆட்சி மத்தியில் நடைபெற்றபோது மாநில அரசுகளைக் கலைக்க வகை செய்யும் அரசியல் சட்டத்தின் 356-வது பிரிவை அகற்ற வேண்டுமென்று தி.மு.க. சார்பில் தம்பி முரசொலி மாறன் தனி நபர் மசோதா ஒன்றை மாநிலங்கள் அவையில் கொண்டுவந்தபோதும்; அந்த மசோதாவுக்கு ஆதரவே தராதவர்கள்தான் மாநிலங்களவையின் அ.தி.மு.க. உறுப்பினர்கள். தி.மு.க.வுக்கு எதிராக அ.தி.மு.க. என்று புதுக்கட்சி தொடங்கிய பிறகு, இவைகள் அந்தக் கட்சியினர், சட்டப் பேரவையிலும் மாநிலங்களவையிலும் எடுத்த நிலைகளாகும்.

எனவேதான் இப்போது அக்கட்சியின் சார்பில் ஆட்சியில் இருப்போர், இட ஒதுக்கீடு 69 சதவிகிதம் என்பது சமூக அடிப்படையில் நீடித்திட வேண்டும் என்று கொண்டுவந்த சட்டம்; தோற்றத்திற்குக் கொள்கை அடிப்படை போலக் காணப்படினும், அவர்களது இதயபூர்வமாக ஏற்றுக்கொண்ட ஒன்றாக நம்மால் நம்ப முடியவில்லை.

காரணம்; இன்றைய முதல்வர் அவர்கள், ஆட்சிக்கு வருவதற்கு சில மாதங்களுக்கு முன்பு இந்து, எக்ஸ்பிரஸ் ஏடுகளுக்கு அளித்த விரிவான பேட்டிகளில் இட ஒதுக்கீடு பொருளாதார அடிப்படையில் அமைய வேண்டும் என்றே வலியுறுத்தியிருக்கிறார். அதுமட்டுமல்ல; மண்டல் கமிஷனுக்கும் ஆதரவு காட்டாமல் அன்றைய பிரதமர் வி.பி. சிங் அவர்கள்மீது புழுதி வாரித் தூற்றியுமிருக்கிறார்.

ஆனால் இப்போது பெரியார், அண்ணா கொள்கைகளை - பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் கரங்களில் படைக்கலன்களாக ஏந்திக் கொண்டு நாடு முழுவதுமே அணிவகுப்பதை உணர்ந்தவுடன் - வாக்குகளை முன்னிட்டு வரிந்து கட்டிக்கொண்டு 69 சதவீத சட்டம் நிறைவேற்ற முன் வந்தாரே தவிர - நெஞ்சத் துடிப்போ, இலட்சிய முனைப்போ காரணமல்ல என்பதை, திராவிட இயக்கத்தினர் அறிந்தே இருக்கின்றனர்.

அதேபோலத்தான் மாநில சுயாட்சிக் கொடியை உயர்த்த - கோட்டை முகப்புகள் நுழைந்துவிட்டது போன்ற ஒருமாயத் தோற்றமாக கவர்னரிடமிருந்த வேந்தர் பதவியை முதல்வருக்கென ஆக்கிடும் சட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்.

இதற்கு மூல முழுக்காரணமே என்ன? - சதாநேரமும் முதல்வரின் மண்டையைக் குடைந்து கொண்டிருந்த மாநில சுயாட்சிச் சிந்தனையா? இல்லை, இல்லவே இல்லை! மதுரைப் பல்கலைக்கழகத்தில் இருக்கும் துணைவேந்தரை சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக்க ஒரு திட்டம்! அதில் கவர்னருடன் ஏற்பட்ட கருத்து மாறுபாடு!

மதுரையில் இருக்கும் காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு; அந்தப் பதவிக்காலம் இன்னமும் ஒன்றரை ஆண்டுக்காலம் இருக்கிறது. அதற்குள் அவரை சென்னைப் பல்கலைக் கழகத்துக்கு மாற்றுவதின் மூலம், இங்கு அவர் மூன்றாண்டு காலம் பதவியில் இருக்கலாம். எனவே அதற்கேற்பத்திட்டம் தீட்டப் பெற்று பட்டியல் தயாரிக்கப்பட்டு கவர்னருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

மதுரைப் பல்கலைக் கழக துணைவேந்தர் - வயதோ அறுபத்தி ஐந்து - அது மட்டுமல்ல; இன்னும் ஒன்றரை ஆண்டு மதுரைப் பல்கலைக் கழகத்திலேயே பதவியில் இருக்கலாம் - இங்கே சென்னைப் பல்கலைக் கழகக் துணைவேந்தராக இருந்தவரோ சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்தவர், பிற்படுத்தப்பட்ட பட்டியல் பிரிவிலே உள்ளவர் - அவருக்கு மேலும் பதவி நீட்டிப்பு வழங்க முயற்சி எடுத்திருக்கலாம் - அப்படிப் பதவி நீட்டிப்பு தருவது ஒன்றும் புதிதல்ல; நமது கழக ஆட்சியில் என்.டி. சுந்தரவடிவேலு அவர்களுக்கு மேலும் ஒருமுறை பதவி நீட்டிப்பு தரப்பட்டிருக்கிறது! மு. வரதராசனாருக்கு பதவி நீட்டிப்பு மதுரைப் பல்கலைக் கழகத்தில் வழங்கப்பட்டிருக்கிறது! ஆம்; துணைவேந்தர்களாகத்தான்! ஏன்; இப்போது இந்த ஆட்சியில்கூட அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தர் அனந்த கிருஷ்ணன் அவர்களுக்கும் பதவி நீட்டிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

அதுபோல சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்த சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்தவரும் பிற்படுத்தப் பட்டியலில் உள்ளவருமான சாதிக் அவர்களுக்கும் பதவி நீட்டிப்பு தரலாமா என்பதை எண்ணிடக்கூட நேரமின்றி; மதுரையில் துணைவேந்தராக இருப்பவரை, இங்கே மாற்றிக் கொண்டு வர வீரசபதம் மேற்கொள்வானேன்? அதன் விளைவாக ஏற்பட்ட மோதுதலினால் தானே - அவசரக் கோலம் அள்ளித்தெளி என்பதுபோல ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அவசரக் கோலம் என்பதற்கு இதோ ஓர் உதாரணம் - வேந்தராகப் பதவி வகிக்கும் முதல்வரின் ஆட்சி கலைக்கப்படுமேயானால்; பல்கலைக்கழகங்களுக்கு வேந்தரும் இணை வேந்தர்களும் இல்லாமற்போய்விடுவர் - காரணம் அவர்கள், முதலமைச்சர் அமைச்சர்களும்தானே; அதனால்!

அவ்வாறு வேந்தரான முதலமைச்சரும் இணைவேந்தர்களான அமைச்சர்களும் ஆட்சிக் கலைப்பினால் இல்லாத நிலையில் - அதற்கு மாற்று ஏற்பாடு எதுவும் இந்தப் புதிய சட்டத்தில் இல்லை!

ஒருவேளை குடியரசுத் தலைவர் ஆட்சியில்; முதலமைச்சரின் இலாக்காக்களை நிர்வகிக்கும் கவர்னரின் ஆலோசகர் அவர்கள் அந்த வேந்தர் பொறுப்பை ஏற்பாரோ? அதற்கும் புதிய சட்டத்தில் வகை செய்யப்பட்டதாகத் தெரியவில்லையே! இந்த அவசரக் கோலத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்த வரையில் பெண்ணுரிமை படாதபாடுபட்டிருக்கிறது.

இந்தப் புதிய சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி அண்ணாமலை செட்டியார் அவர்களின் வழித்தோன்றல்கள்; வேந்தரால் இணைவேந்தராக நியமிக்கப்படுபவர்கள்; ஆண்களாக இருக்க வேண்டும் - ஒருவேளை பெண்கள் இணைவேந்தராக நியமிக்கப்பட்டாலும். ஆண் ஒருவருக்குத் தக்க வயது வரும் வரையில்தான் அந்தப் பெண்மணி, இணைவேந்தராக இருக்க முடியும்.

ஆண் பெண் சமத்துவமென முழங்கப்படுகிற இந்தக் காலத்தில் பாரதி கண்ட புதுமைப் பெண் என்று பாராட்டப்படுகிற ஒரு பெண்ணின் ஆட்சியில்தான் இப்படி ஒரு சட்டம்! இந்தச் சட்டத்திற்குத்தான் ஏகப்பட்ட சபாஷ் சர்டிபிகேட்டுகள்!

துணைவேந்தர்களை கட்டுப்படுத்திட, பல்கலைக்கழகம் தவறு செய்யாமல் இருந்திட மேற்பார்வை விதியின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ள தற்போதுள்ள சட்டத்திலேயே போதிய அதிகாரங்கள் உள்ளன.

ஆனால் இந்த சட்டத்தில் துணைவேந்தரை நீக்குதல் என்ற பிரிவை இணைத்து, துணைவேந்தரின் உரிமையும் பல்கலைக் கழக சுயாட்சித் தன்மையும் பறிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள சட்டப்படி கல்வி வல்லுனர்கள் கொண்ட குழுவினர்தான் பல்கலைக் கழகப் பேராசிரியர்களையும், துணைப்

பேராசிரியர்களையும் தேர்ந்தெடுக்கிறார்கள். ஆனால் இந்தப் புதிய சட்டப்படி தேர்வுக் குழுவில் அரசின் இரண்டு அதிகாரிகள் அவர்களில் ஒருவர் வேந்தர் எனப்படும் முதலமைச்சரால் நியமிக்கப்படுபவர் இடம் பெறுவார்கள்.

மற்றும் பல்வேறு துறைகளுக்கான தலைவர் பதவிக்கு தற்போதுள்ள சட்டப்படி துறையின் மூத்த பேராசிரியர்கள் ஓய்வு பெறும் வயது வரையில் தலைவராக நியமிக்கப்படுகிறார். புதிய சட்டப்படி அந்தத் துறைத் தலைவர் மூன்றாண்டுக்குப் பிறகு தொடர்ந்து பணியாற்றுவது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

இந்தப் புதிய விதிகள் பல்கலைக்கழகங்களின் சுயாட்சித் தன்மைக்கு எதிரான மிரட்டல்களாகவும் - அரசின் தரப்பினர் ஆதாயங்களுக்காகவும் பயன்படக் கூடியவைகள் என்பதில் எந்த ஐயப்பாடும் இல்லை.

அதனால்தான்; கோபத்தில் அரும்பி - தாமே எப்போதும் நிரந்தர முதலமைச்சர் என்ற நம்பிக்கையில் எழுந்த தாபத்தில் மலர்ந்துள்ளதே; இந்த வேந்தர் சட்டமெனும் சரியாக வேகாத சட்டமாகும்!

அன்புள்ள,

மு. க.

09-01-1994

2083. வேரில் வெந்நீர் ஊற்றுவதைத் தடுத்திட; வா!

உடன்பிறப்பே,

தமிழகத்திலும் சரி; தமிழகம் உள்ளிட்ட இந்தியத் திருநாட்டிலும் சரி - எத்தனையோ பிரச்சினைகள், இன்றைக்கு அரசியல் ரீதியாக, சமுதாய ரீதியாக, பொருளாதார ரீதியாக தீர்வு காணப்பட முடியாமல் கிடக்கின்றன. அந்தப் பிரச்சினைகளுக்கான கோரிக்கைக் குரல்கள், போராட்டங்கள், கிளர்ச்சிகள், ஆர்ப்பாட்டங்கள், பிரச்சாரங்கள் எனப் பல வகையான எழுச்சிகளை நாள்தோறும் நாம் கண்டு வருகிறோம். ஏன்; நாமும் அவற்றில் ஓர் அங்கமாகத் திகழ்ந்து நமது பங்கிற்கான பணியினை எத்தனையோ தியாகங்களுக்கும், அடக்குமுறைகளுக்கும், ஏச்சுக்கும், பேச்சுக்கும், எரிச்சல்மிகு ஏகடியங்களுக்குமிடையே செய்து வருகிறோம். எந்தவொரு பிரச்சினையிலும் முழு வெற்றியைக் காண முடியாமைக்கு மிக முக்கியமான காரணம் ஒன்றுண்டு. முதலில் அந்தப் பிரச்சினை பற்றிய புரிந்துகொள்ளும் சக்தியை நமது மக்களில் பெரும்பாலோர் பெற்றிருக்கவில்லை என்பதுதான் அந்தக் காரணம்!

உதாரணமாக; மத்திய அரசின் புதிய பொருளாதாரக் கொள்கை - உலக வங்கி - பன்னாட்டு நிறுவனம் - டங்கல் திட்டம் - இவற்றால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் பற்றி நாட்டு மக்களில் எல்லாப் பிரிவினரும் உணர்ந்து கொண்டுள்ளனரா எனில், இல்லையென்றே பதில் கிடைக்கிறது. அந்த பாதிப்புகள் வடிவம் பெற்று, எதிர்காலத்திலே அந்த மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினையில் ஆபத்துக்களாக விசுவரூபம் எடுக்கும்போதுகூட, அந்தத் துன்பத்தை அனுபவித்துத் துடிப்பார்களே தவிர - அத்துன்பம் மூண்டதற்கான காரியங்களை விளங்கிக் கொள்ளும் தெளிவு பெற்றவர்களாக இருக்க மாட்டார்கள். ஏன்? எதனால் அப்படி? இதற்கு ஒரே விடை, அந்த மக்கள் படிப்பறிவு இல்லாத

பாமரராய் இருப்பதுதான்! இன்னும் சொல்லப்போனால் படிக்கத் தேவையில்லை - அப்பன் பாட்டன் பட்ட பாட்டைப்போல் நாமும் பாடுபட்டு வயிறு கழுவினால் போதும் என்ற ஓர் அலுப்பான நினைப்பு, இன்னமும் பெரும்பாலான அடித்தட்டு மக்களிடத்திலே இந்தக் காலத்திலும் காணக்கூடிய ஒன்றாகவே இருக்கிறது.

எனவேதான் பல்வேறு பிரச்சினைகளில் நாட்டம் செலுத்திட வேண்டிய கட்டாயம் நமக்கு இருந்தபோதிலும் - ஒடுக்கப்பட்டுள்ள மக்கள் உயர்கல்வி பெறுவதற்கான ஆர்வம் பெற்றிடவும், அந்த ஆர்வத்தை நிறைவேற்ற - தடைகளைத் தவிர்த்து உரிமைகளை அவர்கள் அனுபவித்திடவும் திராவிட இயக்கம், கல்வி நீரோடை முதலைகளை அகற்றி சமூகநீதி அடிப்படையில் அந்த மக்கள் அறிவார்ந்த சமுதாயத்தினராக ஆவதற்குத் தொடர்ந்து பாடுபட்டு வருகிறது.

ஆதிக்க வர்க்கத்தினர்; அதுவும் ஆண்டவன் பெயரால், மதம், சாதி, இதிகாச புராணங்களின் பெயரால் ஆதிக்கம் செலுத்திய - செலுத்துகிற வர்க்கத்தினர் உலகில் அவ்வப்போது தொடர்ச்சியாக வளர்ந்து வரும் விஞ்ஞான அறிவியலுடன் தாங்கள் மட்டும் சேர்ந்து வளர வழி வகுத்துக்கொண்டு வாழும் வசதியைத் தங்களுக்கென்று ஒதுக்கிக் கொண்டு - வாழ முடியாத சதியைப் பெரும்பாலான ஒடுக்கப்பட்ட சமுதாயத்தினர்மீது நடத்தி வென்று காட்டினர்! இன்னமும்கூட அதே நிலைதான்! சம்பூகன் என்ற சூத்திரன் தவம் செய்தல் பாபம் என்று அவன் தலையை வெட்டியெறிந்த நியாயத்தை ? கூறும் இராமாயணக் காலமல்ல இது! - ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட சூத்திர குலத்தினர் படித்தால் அவர்கள் நாக்கில் பழுக்கக் காய்ச்சிய இரும்பினால் சூடு போடவேண்டும் என்ற மனு தர்மக் காலமுமல்ல இது! - ஆனால்! ஆனால்!

அந்தக் கொடுமைகளின் நிழல்அறவே நீங்கிய பாடில்லை - நீங்காத காரணத்தினால்தான்; நீக்கப்பட வேண்டுமென்று எழுபத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே நீதிக்கட்சியின் தலைவர்கள் எடுத்த முயற்சிக்கு ஆதிக்கபுரியினர், ஆயிரம் தடைக்கற்களை குறுக்கே போட்டும்கூட அவற்றையெல்லாம் கடந்து மிகவும் சோதனையான பயணத்தைத் திராவிட இயக்கம் நடத்திக்கொண்டிருக்கிறது. குறிப்பிட்ட சில உயர்சாதி மக்கள் ஒளியை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் போது, கும்மிருட்டில் குருடர்கள்போல நூற்றுக்கு தொண்ணூறுக்கு மேற்பட்ட சதவிகித

மக்கள் உழன்று கொண்டிருப்பதுதான் சர்வவல்லமை கொண்ட சர்வேஸ்வரன் எழுதிய விதி எனில்; அந்த விதிக்கே ஒரு விதி செய்து அதனை வீழ்த்திடும் வலியுள்ளதான சமூக நீதி காண்பதே நமது குறிக்கோள் என நாம் திராவிட இயக்கத்தின் சார்பாக எடுத்த சபதம், படிப்படியான வெற்றிகளைக் கண்டு வந்துள்ளதாயினும் பரிபூரண வெற்றியைக் கண்டிடவில்லை.

சில வாரங்களுக்கு முன்பு சென்னையில் நடைபெற்ற சமூக நீதி இடஒதுக்கீடு மாநாடொன்றில் நான் குறிப்பிட்டதைப்போல, தென்னாப்பிரிக்காவில் உள்ள கறுப்பர்களின் உரிமைகள் பல வழிகளிலும் பறிக்கப்பட்டதைப் போலத்தான்; இங்கே சுதந்திர இந்தியாவில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. கறுப்பர்கள் அங்கே, தங்கள் உரிமைகளை மீட்பதற்காக நடத்திய, நடத்துகிற போராட்டத்தைப்போல இங்கே ஒடுக்கப்பட்ட சமுதாய மக்களும் போராடித்தான் தீரவேண்டும் என்ற நிலையிருக்கிறது.

அங்கே உரிமைகளை மீட்க; ஒரு மண்டேலா - இங்கே மண்டல் கமிஷன் என்று கூட அந்த மாநாட்டில் சுட்டிக்காட்டினேன்.

நாடு முழுமையும் நலிந்த மக்களின் நல்வாய்ப்புக்கான மண்டல் இன்னமும் நடைமுறைக்கு வராதது மட்டுமல்ல; தமிழ் நாட்டிலும் திராவிட இயக்கம்; அரும்பாடுபட்டு, அயராது போராடி, ஒடுக்கப்பட்ட மக்களுக்கென கொண்டு வந்து நிறுத்திய 69 சதவீதம் என்ற உரிமைப் பட்டயத்தையுமல்லவா உடைத்து நொறுக்கி விட்டார்கள். அடிமரம், கிளைகள், தழைகள், பூக்கள் என்று பிரச்சினைகள் பலவற்றைக் கவனிக்க வேண்டுமெனினும் - முக்கியமாகவும் மூலாதாரமாகவும் முன்னுரிமை தந்து கவனிக்க வேண்டியது; வேரில் வெந்நீர் ஊற்றப்படும் பொல்லாத செயலைத் தடுத்து நிறுத்த வேண்டியதே ஆகும் என்பதை சொல்லாமலே நீ புரிந்து கொள்வாய்! ஆமாம் உடன்பிறப்பே; இந்த மிக பெரும் சமுதாயம், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட பிரிவுக்காக இருக்கின்ற சமுதாயம் - சமூக அடிப்படையெனும் வேரில் ஊற்றப்படுகிற வெந்நீரைத் தடுத்து நிறுத்தாவிடில் வருங்காலத்தில் எல்லையற்ற தொல்லைகளைத் தாங்கித் தவிக்க வேண்டியிருக்கும்.

சாதாரண, சாமானிய, ஏழை, எளிய, நடுத்தர மக்களுக்கான; சமத்துவ சமதர்ம இயக்கமான தி.மு.கழகம்; தன்னைத் தந்தை பெரியார் பாதையிலும் - அறிஞர் அண்ணா வழியிலும் சமுதாயத்தைக் காத்து நிற்கும் காவல் அரணாக; இன்று நேற்றல்ல - என்றைக்கோ இந்த உலகத்திற்கு உணர்த்திக் காட்டியிருக்கிறது! அந்தக் கழகத்தின் சார்பில்தான்; அதன் தலைவன் என்ற முறையிலும் - உன் உடன்பிறப்பு என்ற நிலையிலும்; தமிழகத் தலைநகராம் சென்னையில் ஜனவரி 23-ஆம் நாள் நடைபெற இருக்கும் சமூகநீதிப் பேரணிக்கும் - பேரணியைத் தொடர்ந்து கடற்கரையில் நடைபெற இருக்கும் பொதுக் கூட்டத்திற்கும் வந்திடுக என அழைக்கிறேன். சென்னை குலுங்கிட நாம் எழுப்பும் குரல், டெல்லியின் செவிப்பறைகளில் மோதி, நமது கோரிக்கைக்கு வெற்றிகளைக் குவிக்க வேண்டும். அதுவரையில் நமது போர் முரசு ஒலித்துக் கொண்டேயிருக்கட்டும்!

முரசு கொட்டிட வா! வா! நமது உரிமை முழக்கம் மத்திய அரசுக்கு எட்டிட; வா! வா! வா! என்றுமே என் அழைப்பைத் தட்டி அறியாத என்னுயிரினும் மேலான அன்பு உடன்பிறப்பே, வா! வா! வா! வா!

அன்புள்ள,

மு. க.

10-01-1994

2084. அழைக்கின்றேன் உன்னை; தலைநகர் சென்னை!

உடன்பிறப்பே,

வேரில் வெந்நீர் ஊற்றுவதைத் தடுக்க வா! என்று அழைப்பு விடுத்து, உனக்குக் கடிதம் எழுதிவிட்டால் மட்டும் போதுமா; அதைத் தடுப்பதற்கு நீயும், நம்மைத் தன்னகத்தே கொண்டுள்ள நமது இயக்கமும் என்ன செய்திருக்கிறோம் என்பதையும், இனியும் என்ன செய்ய இருக்கிறோம் என்பதையும் நாட்டுக்கு அறிவித்து, அந்த விளக்கங்களுடன் நில்லாமல் விரைந்தெடுக்கும் முடிவுகளைச் செயல்படுத்த முனைந்திட வேண்டாமா?

அதற்குத்தான் தலைநகரில் சமூகநீதிப் பேரணி - உரிமையுடையவர்கள் நடத்திடும் பேரணி - நமது உறவு முறையினராம் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் எனும் ஒடுக்கப்பட்டோரின் எதிர்கால ஒளிமிகுவாழ்வுக்கென நம் உதிரத்துடன் உயிர் மூச்சுடன் கலந்த உணர்வுகளை வெளிப்படுத்திப் போர் முரசு கொட்டும் பேரணி - ஜனவரி 23-ல் நடைபெறுகிறது - எழுச்சி முழக்கம், சென்னை நகர் வீதிகளில்! அதற்கென நாம் ஏற்றப் போகும் அறப்போர்க்கொடிக்கான விளக்க முழக்கம், கடற்கரைப் பெருங்கூட்டத்தில் உரிமையுடையவர்கள் நடத்தும் பேரணி என்று குறிப்பிட்டிருக்கிறேனே - அதற்குப் பொருள் புரியாமலா போய்விடும் உனக்கு!

சமூகநீதிப் போருக்கான ஆயுதபாணிகளாக வடபுலத்து மாநில மக்களும் - ஏன்; தமிழ் நாட்டிலும்கூட நலிந்த பிரிவு மக்களின் குரலை எதிரொலிக்கிற எல்லாக்கட்சிகளிலுமுள்ள தலைவர்களும் - இன்று அணி வகுத்திடுகின்றனர் என்றால் அவர்கள் ஏந்திச் சென்றிடும் அறப்போர்ப் படைக்கலன்களை உருவாக்கித் தந்ததும் தந்து கொண்டிருப்பதும் திராவிட இயக்கமெனும் இந்த

உலைக்களம் அல்லவா? அதனால்தான் உரிமையுடையவர்கள் நடத்தும் பேரணி என்கிறேன்.

நடேசனார், தியாகராயர், நாயர் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் விதைத்த உணர்வு - திராவிட சங்கமாக - நீதிக்கட்சியாக அரும்பி, போதாகி, இந்த நூற்றாண்டின் இறுதியில் மலரும் காட்சியை நாம் காணுகிறோம். மலர்ந்து மணம் வீசிடு முன்னர்; வேரில் வெந்நீர் ஊற்றிடும் வேதனை மிகு செயலைத் தடுத்திக தக்க நேரம் இதுதான் என்பதற்காகவே சென்னைப் பேரணிக்கு உன்னை அழைக்கிறேன்.

அமைச்சர் முத்தையா முதலியார் அவர்களால் முன் மொழியப்பெற்றது இடஒதுக்கீட்டுக்கான அரசின் முதல் ஆணை என்பதற்காகவே - வகுப்புவாரி உரிமையை நிலை நாட்டிடக் காங்கிரசிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு, திராவிட இயக்கத்திற்கு தோள் கொடுக்க வந்து - பிற்போக்கு சக்திகளாம் ஆதிக்க புரியினரின் கொட்டமடக்கிட வாள் எடுத்துப்போர் நடத்திய தந்தை பெரியார் அவர்கள், அப்போது பிறந்த குழந்தைகளுக்கெல்லாம் முத்தையா என்று பெயர் வைத்தார் - பெயர் வைக்கும்படியும் சொன்னார். சமூகநீதியில் பெரியாருக்கு அத்துணை அக்கறை - ஆர்வம்!

நீதிக்கட்சி ஆட்சியிலே நிலைத்துவிட்ட சமூகநீதிக் கொள்கை, படிப்படியாக; உறுதியாக வளர்ந்தோங்கி - ஒடுக்கப்பட்ட மக்களை அடையாளம் கண்டு கைதூக்கிவிடும் அளவுக்கு வலிமை பெற்றது.

ஆனால், அரசியல் சட்டம் இயற்றப்பட்டவுடன்; சுதந்திர இந்தியாவில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஓரளவு கிடைத்திருந்த சுதந்திரத்தைச் சுரண்டுவதற்கான சூதுவலை பின்னப்பட்டது. சட்டத்தின் சந்து பொந்துகளில் புகுந்து கொண்டு, இட ஒதுக்கீட்டு உரிமையை இடுகாட்டுக்கு அனுப்பிட ஆதிக்க வர்க்கம், தனது மலைப்பாம்பு வாயைத் திறந்தது!

அந்த வாய்க்குள் சென்று, வஞ்சக வயிற்றுக்குள் ஜீரணமாகி விடாமல் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களை வெளியே பிடித்திழுத்துக் காப்பாற்றப் பெரியாரும் அண்ணாவும் பட்ட பாடும், கொட்டிய முரசும், தமிழகத்தை எரிமலைத் தணல் வழியும் நிலமாக்கும் வண்ணம் அணிவகுத்து நடத்திய புரட்சியும் - பிரதமர் பண்டித நேருவின் கவனத்தை ஈர்த்தது 1951-ல் அரசியல்

சட்டத்தில் முதல் திருத்தத்தைச் செய்திடக் காரணமாயின. இட ஒதுக்கீடு உரிமை; சமூக அடிப்படையில் - கல்வி அடிப்படையில் Socially and Educationaly என்ற கொள்கை, காப்பாற்றப்பட்டது. உடன் பிறப்பே; உனக்கு நினைவிருக்கும் - இல்லையேல் அன்றைக்கே இந்த இயக்கக் காவலர்களாக இருந்தவர்களைக் கேட்டால் கூறுவார்கள்; நமது பேராசிரியர் அவர்கள் அந்தக் கால கட்டத்தில் எழுதிய வகுப்புரிமைப் போராட்டம் என்ற நூல், சமூக நீதிக்காக போராடிய அனைவரது கரங்களிலும் கேடயமாக விளங்கிய காட்சியை! அன்று பிறவாதவர்கள், மழலைகளாக இருந்தோர், மாணவப் பருவத்தினராயிருந்த இளைஞர்கள், இன்றும் அந்த நூலைப் படித்து நமது சமூக நீதிச் சரித்திரத்தைத் திருப்பிப் பார்த்து, புதிய தெம்பு பெறலாம் - யாரை நமது பொதுச்செயலாளராகப் பெற்றிருக்கிறோம் என்ற பெருமிதமும் கொள்ளலாம்.

பெரியார், அண்ணா இருவரின் அடிப்படைக் கொள்கை மாறாத நிலையை சமூக நீதியில் கொண்டுள்ள நாம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த போதும் - அந்த நீதியை நிலை நாட்ட அரும்பாடு பட்டோம்! எதிர் வரிசையில் இருக்கும் போதும் கடும் பயணம் மேற்கொள்கிறோம்! அதுதான் உச்ச நீதிமன்றத்தில் நாமும் இணைந்து நடத்தும் வழக்கும் - அதற்கிடையே இந்த மகத்தான பேரணியும்.

ஆட்சிப் பொறுப்பில் இருந்த கழகம்; இந்த நமது ஒடுக்கப்பட்ட மக்களுக்காக இயன்ற அளவு சாதனைகள் எத்தனை செய்தது என எண்ணிப் பார்க்கிறேன் - இதயம் பூரிப்பால் விம்முகிறது - அதன் காரணமாகத்தானே ஆட்சிக்கே எதிர்ப்பு ஆதிக்கபுரியினரிடமிருந்து கிளம்பியது என்பதை நினைத்துப் பெருமைப்படுகிறேன்!

குரூப் 1. சர்வீஸ் எனப்படும் பணியில் டிப்டி கலெக்டர்களாக, டி.எஸ்.பி.களாக, சப்ரிஸ்ட்ரார்களாக, நூற்றுக்கு தொண்ணூறுக்கு மேற்பட்டோர் ஒடுக்கப்பட்ட மக்களே இந்த ஆட்சியில் தேர்வு செய்யப்பட்டுள்ளனர் என்று சட்டப்பேரவையில் நான் பட்டியல் படித்தவுடனேயே; அதனைத் தமது செவியில் விழுந்த நாராசமாகவன்றோ ஆதிக்கபுரி கருதியது!

ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்காக என் உயிரையே பணயம் வைத்துப் பாடுபடுவேன் என்று நான் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்டதும் பேரவையில் வெளியிட்ட பிரகடனம் இமாலய எதிர்ப்பைத்

தோற்றுவித்தபோதும்; ஈரோடு காஞ்சி எனும் இரு பெயர்களையும் மந்திரமாக உச்சரித்துக் கொண்டுதானே அந்தப் பெரு மலையைப் புறங்காணப் புறப்பட்டோம்!

எத்துணை எதிர்ப்பு வந்தால் என்ன; நாக்கூசாமல் வசைமாரி பொழிந்தால் என்ன; நமது அரசை மூன்றாம்தர அரசு என்று ஒரு உயர்சாதி உறுப்பினர் எதிர் வரிசையில் நின்று கூறிய போது; இல்லை இல்லை - இது நாலாந்தர அரசு - ஆம்; சூத்திரர்களால் நடத்தப்படுகிற அரசு! என நான் பதில் அளித்ததைக் கேட்டு - தந்தை பெரியார் அவர்கள் தளபதி வீரமணி மூலம் தனது மகிழ்ச்சியை தொலைபேசியில் தெரிவித்தாரே - எனக்கும் ஆட்சிக்கும் கட்சிக்கும் பகைவர் ஏற்படுத்திய ரணத்திற்கு அது மாமருந்தாக அன்றோ பயன்பட்டது அப்போதெல்லாம்! அதன் பின்னர் 1989-ல் கூட சூத்திரர் ஆட்சியைக் காப்போம் என்று பெரியார் திடலில் என் முன்னால் எழுந்த முழக்கம், இன்னும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது!

பாம்புடன் சண்டை போட்டு வென்றிட்ட கீரி, தன் மீது பரவியுள்ள பாம்பின் விஷத்தைப் போக்கிக்கொள்ள மூலிகையொன்றைத் தேடிச் சென்று, அந்த விஷத்தைப் போக்கிக் கொள்ளுமாம் - அப்படித்தான் நான் பெரியார் திடலுக்குப் பெரியாரைக்காண அடிக்கடி வருகிறேன் என்று கூறியபோது; அந்தத் தள்ளாத வயதில் குலுங்கிக் குலுங்கிச் சிரித்து ஆனந்தக் கண்ணீர் பொழிந்த அய்யா அவர்கள் நம் இதயத்தில் இருக்கிறார் - அவரைத் தலைவராக ஏற்று; நம்மைத் தம்பி என்று அரவணைத்துக் கொண்ட அண்ணன் நம் மூச்சில் இருக்கிறார் - நானிருக்க பயமேன்? என்று அவர்கள் ஒவ்வொருவரும் நம்மை நோக்கிச் சொல்கிறார்கள்!

நாமிருக்க பயமேன் நலிந்த பிரிவு மக்களுக்கு - சமூக நீதி உரிமைப் பாதுகாப்புக்கு - என்ற நம்பிக்கையை வழங்கி, அறப்போர் முரசு கொட்டிடத்தான் அழைக்கிறேன் உன்னை, தலைநகர் சென்னை! இன்னும் தொடர்ந்து வரும் அழைப்பு மடல்கள்!

அன்புள்ள,

மு. க.

11-01-1994

2085. அறப்போர்வாள் தூக்கிட, அன்பே! வா!

உடன்பிறப்பே,

தமிழகத்தை 25 ஆண்டுகாலமாக ஆண்டு வரும் திராவிடக்கட்சிகள் பாமரமக்களின் வாக்குகளைக் கவரும் நோக்கத்துடன் ஒன்றோடு ஒன்று போட்டி போட்டுக் கொண்டு இட ஒதுக்கீடு அளவை நாளடைவில் அதிகரித்துக் கொண்டு வந்ததின் விளைவுதான் இன்று நடைமுறையில் உள்ள 69 சதவிகிதத்திற்கான இட ஒதுக்கீடே ஒழிய, இதற்கு எந்த நீதிமன்றத்தின் அங்கீகாரமோ அல்லது தீர்ப்போ கிடையாது. இப்பிரச்சினையில் தேசியக் கட்சிகள் என்று பிரகடனப்படுத்திக் கொண்டுள்ள காங்கிரஸ், பாரதீய ஜனதா, கம்யூனிஸ்டு போன்றக் கட்சிகள், இங்கு பிராந்தியக் கட்சிகளுடன் சேர்ந்து கொண்டு அந்த உணர்வில் தமிழக அரசின் நிலைக்கு வெட்கமில்லாமல் ஆதரவு தெரிவித்துள்ளன. பிற மாநிலங்களில் உள்ள இக்கட்சியினர், இந்தப் போக்கினை எப்படித்தான் ஜீரணிக்கிறார்களோ? என்ன கொள்கையோ, என்ன தேசியமோ, ஆண்டவனுக்கே வெளிச்சம்!

ஆங்காரத்துடன் வெளியிடப்பட்டுள்ள இந்தக் கருத்து, ஆண்டவனை அழைத்துக் கூப்பாடு போடுகிற இந்த ஆதங்கம் - தமிழ்நாடு பிராமணர் சங்கம் சார்பில் நடத்தப்படுகிற பத்திரிகையில் எழுதப்பட்டுள்ள பகுதிகளில் இருந்து எடுத்ததாகும்.

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களுக்கு இப்போதுள்ள 69 சதவிகித இடஒதுக்கீடே போதுமானதல்ல என்று போராடிக்கொண்டிருக்கும் போது, உச்சநீதிமன்றத்தீர்ப்பு ஒன்று அண்மையில் வழங்கப்பட்டதின்

காரணமாக - இருந்ததும் போயிற்றே என ஏங்கிடும் நிலையில்; 50 சதவிகித இடஒதுக்கீடாக இப்போது அது ஆக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 69 சதவிகிதம் என்ற நிலை எப்படி வந்தது? எப்போது வந்தது? விளக்கத் தேவையில்லை - சுருக்கமாகவே கூறுகிறேன்.

சமூக நீதிக்கு 1950 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட மிகப்பெரும் சோதனையைப் பெரியார், அண்ணா தலைமையில் அணிவகுத்த திராவிடஇயக்கம் எதிர்கொண்டு வென்றதின் காரணமாக அரசியல் சட்டம் திருத்தப்பட்டதை நேற்றைய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளேன்.

அந்த வெற்றியைத் தொடர்ந்து - பிற்படுத்தப்பட்டோருக்கு கல்வி வேலை வாய்ப்புக்களில் சமூக அடிப்படையில் 25 சதவிகிதம் என்றும் ஆதிதிராவிடர்க்கு 16 சதவிகிதம் என்றும் இருந்ததை - கழக ஆட்சியில் நான் முதல்வர் பொறுப்பை ஏற்றதும் அமைக்கப்பட்ட சட்டநாதன் தலைமையிலான பிற்படுத்தப்பட்டோர் நலக்குழுவின் மக்களுக்கு 31 சதவிகித மென்றும் ஆதிதிராவிடர்களுக்கு 18 சதவிகிதமென்றும் அரசின் சார்பில் இடஒதுக்கீட்டு அளவு உயர்த்தி அறிவிக்கப்பட்டது.

பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு அளவு உயர்த்தப் பட்டதைப் பயன்படுத்தி; நீண்ட காலக் கோரிக்கையாக இருந்த கொங்குவேளாளர் சமுதாய மக்களையும் பிற்படுத்தப்பட்டவர் களாக அறிவிக்கவேண்டும் என்பதை - என் தலைமையிலிருந்த கழக அரசு ஏற்று அறிவித்தது. அத்துடன் உருது பேசுகிற முஸ்லிம்களின் பல்லாண்டுகாலக் கோரிக்கையும் ஏற்கப்பட்டு அவர்களையும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைக்கப்பட்டது.

1976-ல் கழக ஆட்சி கலைக்கப்பட்டு - பின்னர் 1977-ல் பொறுப்புக்கு வந்த எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சியில் இந்த இடஒதுக்கீட்டு முறையின் அடிப்படையே தகர்ந்து போகக் கூடிய அளவுக்கு - வருமான உச்சவரம்பு எனும் பொருளாதார அளவுகோல் பிரகடனப்படுத்தப்பட்டு - அதற்கு பேரெதிர்ப்பு, தமிழகத்தில் எழுந்து; எம்.ஜி.ஆர். அவர்கள் அவர் பிறப்பித்த ஆணையைத் திரும்ப பெற்றதுமல்லாமல் - பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 50 சதவிகிதமென்றும் - ஆதிதிராவிடர்க்கு ஏற்கெனவே

கழக ஆட்சியில் உள்ள 18 சதவிகித மென்றும் - மொத்தம் 68 சதவிகித இடஒதுக்கீட்டை அறிவித்தார்.

1989-ல் கழக ஆட்சி மீண்டும் என் தலைமையில் அமைந்தபோதுதான்; பிற்படுத்தப்பட்ட மக்களிலேயே வன்னியர், சீர்மரபினர், மற்றும் சில பிரிவினர் நீண்டகாலமாக கல்விச் சலுகை பெறுவதற்கு மட்டுமே மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெற்றிருந்தோர் - தங்களுக்கெனத் தனி இடஒதுக்கீடு உரிமை வேண்டுமென்று நீண்டகாலமாகப் போராடி வருவதைக் கருத்தில் கொண்டு - பிற்படுத்தப்பட்டோருக்கென இருந்த 50 சதவிகிதத்தில் 20 சதவிகிதம் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கென்றும் - ஆதிதிராவிடர்க்கான 18 சதவிகிதத்தில் பழங்குடி மக்களுக்கும் பங்கு இருந்ததை மாற்றி, பழங்குடி மக்களுக்கு தனியாக ஒரு சதவிகிதம் அளித்தும் - மொத்தத்தில் இடஒதுக்கீடு 69 சதவிகிதமாகவும் - பொதுப்பட்டியலில் 31 சதவிகிதமாகவும் ஆக்கப்பட்டது.

இந்த 69- ஐத்தான் 50 சதவிகிதமாகக் குறைக்க வேண்டு மென்று இப்போது உச்சநீதி மன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

எனவே 1951 ஆம் ஆண்டு அரசியல் சட்டம் இதற்கெனத் திருத்தப்பட்டதுபோல மீண்டும் இப்போது திருத்தப்பட வேண்டும் - அல்லது இங்கே மாநில அரசு 69 சதவிகித இடஒதுக்கீட்டை வலியுறுத்தி நிறைவேற்றியுள்ள சட்டத்தையாவது நடைமுறைக்குக் கொண்டுவர மத்திய அரசு உடனடியாக முன்வர வேண்டும். அதற்கான தீவிர முயற்சியில் மாநில அரசும் ஈடுபட வேண்டும்.

உச்சநீதிமன்றத் தீர்ப்பினால் ஏற்பட்டுள்ள விளைவு என்ன? தமிழக அரசு இப்போது இடஒதுக்கீடு எவ்வாறு செய்துள்ளது?

பிற்படுத்தப்பட்டோருக்கு 30 சதவிகிதம் என்று நமது ஆட்சியில் இருந்த நிலைமாறி, 18.6 சதவிகிதம் என்றாகியுள்ளது இன்று!

மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 சதவிகிதம் என்றிருந்த நிலைமாறி, 12.4 சதவிகிதம் என்றாகிவிட்டது இன்று!

இந்த வீழ்ச்சியைத் தமிழகத்தில் உள்ள ஒடுக்கப்பட்ட மக்கள் தாங்கிக்கொள்ள மாட்டார்கள் என்பதை எடுத்துக்காட்டி எச்சரிக்கிற கடமையைத் திராவிட இயக்கம் நிறைவேற்றுவதைப்

பொறுத்துக்கொள்ள முடியாமல்தான்; தமிழ்நாடு பிராமண சங்கத்தினர் வெகுண்டெழுந்து தமது ஏட்டில் தலையங்கம் தீட்டியுள்ளனர்.

தமிழ்நாட்டு அளவிலாவது 69 சதவிகித இடஒதுக்கீட்டை ஆதரிக்க முன்வந்துள்ள தேசிய அளவிலான கட்சிகளையும் சாடுகின்றனர்.

அவர்களின் கோபத்திற்கு முகாந்திரம் இருக்கிறது - கல்வி வேலைவாய்ப்புகளில் அவர்கள் பெற்றிருந்த ஆதிக்கம்; முழுமையாக முடிவுக்கு வரவில்லையெனினும் - சரியத் தொடங்கியதற்கு திராவிட இயக்கத்தின் போராட்டங்கள்தான் காரணம் என்ன என்பதை அறியாதவர்களா என்ன?

திராவிட இயக்கம், உயர்சாதியினரின் உரிமைகளை அறவே பறித்துவிட என்றைக்கும் எண்ணியதில்லை. காலம் காலமாக சகதியிலே, சேற்றிலே உழலும் ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களைக் கைதூக்கிவிடத்தானே முனைந்தது - முனைகிறது!

இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலேயே சமூகநீதி கோரிப் புரட்சிப்பூ பூத்திட வேண்டிய அவசியமும் அவசரமும் ஏற்பட்டதை நமது பேராசிரியர் அன்பழகனார் அவர்கள் எழுதி, 1951-ல் வெளியிடப்பட்ட வகுப்புரிமைப் போராட்டம் என்ற நூல் எப்படி விவரிக்கிறது என்பதைப் பார்ப்போமா!

இதோ பேராசிரியர் எழுதுகிறார்; ஆம்; 1951 வகுப்புரிமைப் போராட்டத்தின்போது!

1915-ம் ஆண்டில் சென்னை மாநிலத்தில் பார்ப்பனர் ஆதிக்கம் இருந்த நிலையை அறிந்தவர்கள்தான், பார்ப்பனரல்லாதாரின் சமூக நீதி இயக்கம் தோன்றிய காரணத்தையும் அவசியத்தையும் நன்குணர முடியும்.

1915-ல் கல்வி இலாக்காவில் இருந்த மொத்த உத்தியோகங்கள் 518. அந்த 518 இடங்களில் அமர்ந்திருந்த, பார்ப்பனர் 399 பேர், கிறிஸ்தவர்களும் ஆங்கிலோ இந்தியர்களும் 73 பேர். முஸ்லிம்கள் 28 பேர், பார்ப்பனரல்லாத இந்துக்கள் 18 பேர் ஆதிதிராவிடர் உட்பட.

ஆம்! அவ்வளவு உத்தியோகங்களிலும் - நாட்டுக்குரிய திராவிட மக்களுக்கு 18 உத்தியோகங்கள்தான். மக்கள்

தொகையில் 100க்கு 3 பேராக உள்ள பார்ப்பனருக்கு 399 உத்தியோகங்கள் கிடைத்திருக்கையில், 100க்கு 84 பேர்களாக உள்ள - பார்ப்பனரல்லாத இந்துக்களுக்கு 18 உத்தியோகங்கள்தான் கிடைத்திருந்தன. பார்ப்பனர்களுக்கு 399 உத்தியோகங்கள்; அவர்களைப்போல் 30 மடங்கு மக்கள் தொகை கொண்ட சமூகத்தாருக்கு 18 உத்தியோகங்கள்தான். இதற்குப் பெயர்தான் அரசாங்கக் கல்வி இலாக்கா அக்கால நீதிப்படி.

1915-ல் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் 100க்கு 7, அல்லது 8 - பேரே ஆவர். அதில் 3 சதவீதம் உள்ள பார்ப்பனரோ தங்களில் 100க்கு 75 சதவிகிதத்துக்குக் குறையாமல் படித்திருந்தனர். மற்ற மக்கள் எல்லோருமே 100க்கு 5 சதவிகிதத்தினரே படித்திருந்தனர்- பார்ப்பனரல்லாத இந்துக்களோ - 100க்கு 3 சதவிகிதத்தினர்தான் படித்திருந்தனர்.

1914-ம் ஆண்டு, சென்னைப் பல்கலைக்கழகம் நடத்திய தேர்வுகளில் கலந்து கொண்ட மாணவர் எண்ணிக்கை விவரம், அன்றைய நிலையைத் தெளிவாக்குவதாகும்.

உத்தியோகத்தில் மட்டுமின்றி, உத்தியோகம் பெற வாயிலாகும் உயர்தரக் கல்வி பெறுவதிலும் கூட, 100க்கு 3 பேராக உள்ள பார்ப்பனர், 100க்கு 84 பேர்களாக உள்ளவர்களை விட, மூன்று மடங்கு முதல் பத்து மடங்கு வரை இடம் பெற்றிருந்தனர் என்பதை இது காண்பிக்கவில்லையா.

1916-ஆம் ஆண்டில் - மாகாண சிவில் சர்வீஸ் என்ற உயர்தர பதவியில் இருந்த பார்ப்பனர் நூறு 100 பேர். பார்ப்பனரல்லாதாரோ 29 பேர்தான். மக்கள் தொகைப்படி கணக்கிட்டால் அந்த 129 பதவிகளில் 124 பார்ப்பனரல்லாதாருக்கும், 5 மட்டுமே பார்ப்பனருக்கும் உரியதாகி இருக்க வேண்டும்.

அதே ஆண்டில் நீதி இலாக்காவில், 190 பார்ப்பனர்களும் 35 பார்ப்பனரல்லாதாருந்தான் பதவி பெற்றிருந்தனர். இந்த இலாக்காக்களை போலத்தான் மற்ற அரசாங்க இலாக்காக்களும் இருந்தன.

மக்கள் எண்ணிக்கை விகிதப்படி பார்த்தால் பார்ப்பனர்களைப் போல், பார்ப்பனரல்லாத இந்துக்கள் 31 மடங்கு இடம் பெற்றிருக்க வேண்டும் எத்துறையிலும். ஆனால் நேர்மாறாகப் பார்ப்பனர்கள், மற்றவர்களைப்போல், உத்தியோகத்தில் 20 மடங்கும், கல்வித் துறையில் 10 மடங்கும் இடம் பெற்றிருந்தனர். இதைவிட, வெட்கமும் துக்கமும் தரக்கூடிய நிலை வேறென்ன வேண்டும் பார்ப்பனரல்லாதாருக்கு?

இந்நிலையில், 1920-ம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் - நீதிக்கட்சியினர் - சட்டசபையில் பெரும்பான்மையினராக வந்தனர். அதன் பயனாக பனகல் அரசரின் மந்திரி சபையும் அமைந்தது. நீதிக்கட்சியின் சார்பில், டாக்டர் நாயர் தமது இறுதி மூச்சு இருந்தவரை வற்புறுத்தி வந்த வகுப்பு விகிதாசார உரிமைக் கொள்கை, வெள்ளுடை வேந்தர் தியாகராயரின் தளராத முயற்சியாலும், பனகல் அரசரின் அறிவு நுட்பத்தினாலும், 1921-ம் ஆண்டில் சென்னை மேல்சபையில் Legislative council தீர்மானமாகக் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

1921-ம் ஆண்டிலேயே சமூக நீதிக்காக, எல்லா வகுப்பார்கட்கும் அரசாங்க உத்தியோகம் கிடைக்கும்படி நியமனங்கள் செய்யவேண்டும் என சர்க்காரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தும் 1928 வரையில் ஏழாண்டு கழித்த பின்பும் - பிற்படுத்தப்பட்ட வகுப்பாருக்குக் காட்டப்பட வேண்டிய சலுகை காட்டப்படாததால் - பொது மக்கள் எந்த விதத்தும் முன்னேற வாய்ப்பின்றி வெறுப்பும், கொதிப்புமடைந்து குமுறலானார்கள்.

அக்காலகட்டத்தில் அமைச்சராக இருந்த முத்தையா முதலியார் அவர்கள், பலப்பல வகுப்பாரின் நிலைகளையும், எண்ணங்களையும் பல மாதங்கள் வரை, ஆழ்ந்தும் சூழ்ந்தும் சிந்தித்து ஒரு முடிவிற்கு வந்தார். அம்முடிவை உறுப்பினர்களிலேயே சிலர், Executive council Members அறியாமையாலும், அகம்பாவத்தாலும் எதிர்த்தபோதிலும், இன்றளவும், பிற்படுத்தப்பட்ட மக்கள் எல்லோருடைய முன்னேற்றத்திற்கும், ஒரே

வாயிலாகவும் அரணாகவும் அமைந்துள்ள கம்யூனல் ஜி ஓவினை 1928-ல் அமைச்சர் முத்தையா அவர்கள் அரசாங்கத்தின் ஆணையாக்கினார்கள்.

உடன்பிறப்பே,

அந்த ஆணையின்படி மொத்தம் 12 உத்தியோகங்கள் உள்ளன என்றால்;

இந்து பார்ப்பனரல்லாதாருக்கு	5
பார்ப்பனருக்கு	2
முகமதியருக்கு	2
கிறித்துவருக்கு ஆங்கிலோ இந்தியர் உட்பட	2
மற்றவர்க்கு ஆதி திராவிடர் உட்பட	1

என்ற வகையில் பங்கிடப்பட வேண்டும்.

எனவே, அன்று போட்ட விதைதான்; இன்றைக்கு வளர்ந்து பெருந்தருவாகி - பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிழல் தருகிறது என்பதை சகித்துக்கொள்ள முடியாத நிலையில் ஆதிக்க புரியினர் இருக்கிறார்கள் என்பதற்கு - நான் இக்கடிதத்தின் தொடக்கத்தில் காட்டியுள்ள அவர்களது ஏட்டின் தலையங்கப் பகுதியே சான்று பகருகிறது அல்லவா?

நம்மை அறவே ஒழித்துக்கட்டும் முயற்சியில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ, வீடணர்களை உசுப்பிவிட்டோ ஆதிக்கபுரியினர் ஈடுபடுவதற்கு காரணம் இப்போது புரிகிறது அல்லவா?

எனவேதான் இதுபோன்ற எதிர்ப்புகளைத் தூள்தூளாக்க அறப்போர்வாள் தூக்கிட அன்பே வா!

உன்னை அழைக்கிறேன் சென்னைக்கு, சமூகநீதிப் போரணிக்கு!

அன்புள்ள,

மு. க.

12-01-1994

2086. நினைக்கும்போதே நெஞ்சு இனிக்கிறது!

உடன்பிறப்பே,

1985-86 ஆம் ஆண்டுக்கான தமிழக அரசின் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை கொள்கை விளக்கக் குறிப்பு ஏடு; சட்டப்பேரவையில் வைக்கப்பட்டதில் - பின்வரும் செய்தி காணப்படுகிறது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் மேம்பாட்டுக்காக மேற்கொள்ளப்பட்ட திட்டங்களை எடுத்துக் கூறுவதற்காக, பிற்படுத்தப்பட்டோர் நலம் குறித்த தனி மானியக் கோரிக்கை 1971 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டது. 1967-68 ஆம் ஆண்டுகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலனுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் ஒரு கோடியே அறுபத்தியொரு லட்சத்து நாற்பதாயிரம் 1,61,40,000 என்றிருந்தது படிப்படியாக அதிகரித்து 1985-86 ஆம் ஆண்டில் பதினோரு கோடியே ஐம்பத்தி நாலு லட்சமாக உயர்ந்துள்ளது. பிற்படுத்தப்பட்ட மக்களின் நிலையை உயர்த்துவதற்கான திட்டங்களைச் செயல்படுத்துவதில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அடைந்துள்ள துரித முன்னேற்றத்தை இவ்வுயர்வு எடுத்துக்காட்டுகிறது.

இது, எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் சட்டப் பேரவையில் வைக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்பு. இதிலிருந்து என்ன புரிந்து கொள்ள முடிகிறது உன்னால்!

1971 ஆம் ஆண்டில் என் தலைமையில் கழக ஆட்சி இருந்தபோதுதான் பிற்படுத்தப்பட்டோர் நலத்துக்கான தனிமானியக் கோரிக்கையே சட்டப்பேரவையில் விவாதிப்பதற்கான தொடக்கமே நடந்திருக்கிறது. அதற்கு முன்பு ஆதி திராவிடர் நல இலாக்காவும் பிற்படுத்தப்பட்டோர் பிரச்சினையும் ஒன்றாக இணைக்கப் பெற்று ஆதி திராவிட நலத்துறை அமைச்சரால் நிர்வகிக்கப்பட்டு வந்தது.

நான் அதுகுறித்துக் கழக அமைச்சரவையினருடன் விவாதித்து, ஆதி திராவிடர் நல இலாக்காவும் பிற்படுத்தப்பட்டோர் நல இலாக்காவும் ஒன்றாக இருப்பதால் இரு பிரிவு மக்களின் நலன்களும் சரியாகக் கவனிக்கப்பட முடியாமல் இருக்கிறதென்பதை விளக்கி - ஆதி திராவிடர் நலத்துறையைத் தனியாகவும், அதேபோலப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையைத் தனியாகவும் அமைக்கப்பட்டது.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்குத் தனி அமைச்சகம், தனி அமைச்சர் என்றெல்லாம் நியமிக்கப்பட்டது.

67-68-ல் ஒன்றரைக் கோடி ரூபாய் அளவுக்கு பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை - 85-86 ஆம் ஆண்டில் பதினோரு கோடி ரூபாயைத் தாண்டி வளர்ந்து - 1989-ல் மீண்டும் தி.மு.க. ஆட்சிக்கு வந்த காலத்தில் அந்தத் தொகை, பத்தொன்பதே முக்கால் கோடியாக 19.75 கோடி ரூபாய் நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டு, பின்னர் 1990-91 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் நலனுக்கென ரூபாய் முப்பது கோடிக்கு மேலாக 30.70 கோடி உயர்த்தப்பட்டதைப் பெருமிதத்துடன் இப்போதும் எண்ணிப் பார்க்கிறேன்.

பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் எனும் வார்த்தைகளை நினைவுபடுத்திக் கொள்ளும் போது, அந்தப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலுக்குள் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியல் ஒன்று இருப்பதையும் - அந்தப் பட்டியலில் சீர் மரபினரை அன்னியில் வன்னியர் எனும் பெரும் சமுதாயப் பிரிவும், வேறு சில மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகப்பிரிவுகளும் இருப்பதைச் சுட்டிக்காட்டித்தான் அவர்களுக்கு இடஒதுக்கீட்டில் தனியாகக் குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்கப்பட வேண்டுமென்று கிளர்ச்சி நடைபெற்றது அ.தி.மு.க. ஆட்சியில்! இந்தக் கிளர்ச்சியில் அடக்கு முறை, பலர் உயிர் இழப்பு - இத்தனைக்கும் பிறகு மீண்டும் 1989-ல் கழக ஆட்சி மலர்ந்தவுடன் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, கல்வி வேலை வாய்ப்புகளில் இருபது சதவிகிதம் 20% என அறிவிக்கப்பட்டு, அந்த ஆணை நடைமுறைக்கும் உடனடியாக வந்தது.

அதனால் ஏற்பட்ட பலன் எத்தகையது என்பதை 1990 - 91 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை நான்

சட்டப்பேரவையில் படித்தபோது கோடிட்டுக் காட்டியிருக்கிறேன். இதோ அந்த வாசகத்தை அப்படியே உனக்கும், உன் போன்ற உடன்பிறப்புகளுக்கும் ஞாபகப்படுத்துகிறேன்.

> மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் சீர்மரபினருக்கும் கல்வி, வேலை வாய்ப்புகள் இட ஒதுக்கீடாக 20 விழுக்காடு இவ்வரசு அளித்துள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவார்கள். இப்புதிய கொள்கை, அவர்களுக்கு கணிசமான அளவுக்குப் பயன் தந்துள்ளது என்பதை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன், 1989ஆம் ஆண்டில் மருத்துவக் கல்லூரியில் சேர்க்கப்பட்ட மாணவர்களில் 187 பேர் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் ஆவர். ஆனால் அதற்கு முந்தைய ஆண்டில் இவ்விரு வகுப்பினரில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை 68 மட்டுமேயாகும். இதேபோல பொறியியல் கல்லூரியில் 1989-ல் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர்களின் எண்ணிக்கை 685 பேர் - ஆனால் அதற்கு முந்தைய ஆண்டில் இவ்விரு வகுப்பைச் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை 354 மட்டுமே ஆகும். இவ்விரு வகுப்பினரின் முன்னேற்றத்திற்காக தனி இயக்குநர் அலுவலகமும் இந்த ஆண்டு முதல் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இவ்வாறு ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கான அமைச்சகங்களும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினருக்காக இயக்குநர் அலுவலகமும் தனித்தனியே தொடங்கப்பட்டதால் - கழக ஆட்சியில் அந்த மக்களின் நலிவு போக்கி - அவர்களின் வாழ்வில் நலம் சேர்க்க ஒல்லும் வகையெல்லாம் உணர்வுபூர்வமாக நம்மால் உழைத்திட முடிந்தது.

இந்தியத் திருநாட்டிலேயே ஆதிதிராவிடர்களுக்கு இலவசமாக வீடுகள் இலட்சக் கணக்கில் கட்டித்தரும் திட்டத்தை முதன் முதலாக அறிமுகப்படுத்தி, அதை நடைமுறைக்குக் கொண்டு வந்ததும் - அதே போன்றதொரு திட்டத்தை பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் கிராமப் பகுதிகளில் படிப்படியாக நிறைவேற்றிடக் கால்கோள் விழா நடத்தியதும் கழக ஆட்சி என்கிற போது, அந்தக் கழகத்தின் அங்கமாக இருக்கிற நமக்கு; அத்தகைய ஒடுக்கப்பட்ட

மக்களின் உரிமைகளை மேலும் பெற்றிடவும் - இருக்கும் உரிமைகளை இழக்காமல் இருக்கவும் போர்க் குரல் எழுப்பும் உரிமையும் உணர்வும் உண்டல்லவா!

நலிந்து, நசுங்கிக் கிடக்கும் அந்த சமுதாயத்தையும் மனித சமுதாயமாகக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் - ஒரு பெரிய மைதானத்தில் ஆடு மாடுகளால் மிதிபடும் புல்லாக அவர்கள் முளைத்துக் கிடக்கவும், பத்திரமாகக் கூண்டுகளில் அடைபட்டு பளபளப்பு காட்டிக் கொண்டு குரோட்டன்ஸ் செடிகளாக ஒரு சில ஆதிக்கபுரியினர் அழகு காட்டி ஆடிக் கொண்டிருக்கவுமான வித்தியாசமானதும், விசித்திரமானதும், வேதனையானதுமான நிலையை நிர்மூலப்படுத்துவதே திராவிட இயக்கத்தின் மூத்தோர், இளைஞர் அனைவரின் குறிக்கோளாக இருந்து தீரவேண்டும்.

உடன்பிறப்பே, சென்னையில் நாம் நடத்த இருக்கும் சமூக நீதிப் பேரணி குறித்து நான் தொடர்ந்து எழுதியுள்ள இந்த நான்கு கடிதங்களும் உன் நெஞ்சில் பதிய வைப்பது என்ன? தமிழ்நாட்டில் இருக்கும் இடஒதுக்கீடு உரிமையைக் காத்திடவும் - இந்தியா முழுமைக்கும் மண்டல் கமிஷன் பரிந்துரையை அமலாக்குவதற்கும்; களம் கண்டிட நாம் திடீரென்று குதித்தவர்கள் அல்லர்!

நம் குருதியுடன் கலந்த உணர்வு இது!

அதனால்தான் இருபது ஆண்டுகளுக்கு முன்பே, 1973 ஆம் ஆண்டு; 14.10.1973 அலகாபாத்தில் நடைபெற்ற உத்திரபிரதேச அரிஜன, பிற்பட்டோர் மாநாட்டில் நான் கலந்து கொண்டு பேசியபோதே;

> மத்திய அரசு வேலை வாய்ப்புகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட இடம், ஒழுங்காக - முழுமையாக - பூர்த்தி செய்யப்பட வேண்டும். அது போலவே இனிமேல் மத்திய அரசின் வேலை வாய்ப்புகளில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு இடஒதுக்கீடு நிர்ணயிக்கப்பட வேண்டும். அதனை மத்திய அரசு உடனடியாகச் செய்ய வேண்டும்.

என்று வலியுறுத்தினேன்.

அந்த மாநாடு நடைபெற்று நாலாண்டுகளுக்குப் பிறகு - அந்த மாநாட்டை முன்னின்று நடத்திய ராஜ் நாராயண் போன்றவர்களின் முயற்சியால், 1977-ல் ஜனதா ஆட்சியில் அமைக்கப்பட்டதுதான் மண்டல் கமிஷன்!

அந்த அறிக்கையை 1980-ல் பெற்றுக் கொண்ட இந்திராகாந்தி அரசு அதைக் கிடப்பிலே போட்டது - பிறகு வந்த ராஜீவ்காந்தியும் அதை ஏறெடுத்துப் பார்க்கவில்லை.

தமிழகத்தில் தி.மு.கழகமும், திராவிடர் கழகமும் - வடமாநிலங்களில் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளும் தொடர்ந்து கோரிக்கை எழுப்பியும் பயனில்லை!

1989-ல் நமது கழகம் தமிழகத்தில் ஆட்சிக்கு வந்தது - 1990-ல் திரு. வி.பி. சிங் அவர்கள் தலைமையில் தேசிய முன்னணி அரசு அமைந்து - தமிழக சட்டமன்றத்தில் மத்திய அரசு மண்டல் கமிஷன் பரிந்துரையை நடைமுறைப்படுத்த வேண்டுமெனக் கேட்டு தீர்மானங்கள் நிறைவேற்றி - சமூக நீதிக் காவலரான வி.பி. சிங் அவர்கள் மண்டல் பரிந்துரை நடைமுறைக்கு வருமென அறிவித்து, அதனால் அவர் ஆட்சியை இழந்து - அவரைத் தொடர்ந்து நாமும் ஆட்சியை இழந்து.

இன்று நாம் கொண்ட கொள்கையே ஆட்சியைவிடப் பெரிது எனும் எண்ணத்தை தொடர்ந்து வளர்த்துக் கொண்டுள்ள நிலையில் - என்றைக்கும் வளையாத உறுதியுடன் - சமூக நீதிக்கான கொடியை உயர்த்தி நிற்கிறோம்!

அந்த திடமனத்தை வெளிப்படுத்தித் தடந்தோள் உயர்த்தி அணிவகுக்கும் நாள்தான் ஜனவரி 23 என்பதை நினைக்கும்போதே நெஞ்சு இனிக்கிறது! அந்தப் பேரணியில் உன்னைக் காண்பேன் எனும் எதிர்பார்ப்பில்தான் என் இதயத்துக்கு எவ்வளவு சுகம்!

பொங்கல் கொண்டாடி மகிழ்ந்து - பொங்கி எழுந்து உரிமைப்போர் விளைத்திட - பொலிவு நிறைமுகத்துடனும், வலிவுமிகு கொள்கை உறுதியுடனும் - வஞ்சகத்தைப் பொடியாக்கும் வாளாக, வேலாக, வருவாய் என் உடன்பிறப்பே!

அன்புள்ள,

மு. க.

13-01-1994

2087. அந்தோ; செட்டி நாட்டுக் கட்டித் தங்கமே!

அந்தோ; செட்டி நாட்டுக் கட்டித்தங்கம் மறைந்ததே!

இன்று 16-1-94 காலைப்பொழுது; பனித்துளிகளுடன் போட்டிபோட்டுக் கொண்டு பொழிந்திடும் என் கண்ணீர்த் துளிகளுடனன்றோ விடிந்துள்ளது!

காரைக்குடி நகரின் கழகத்தூண் - செட்டிநாட்டுச் சீமையின் சிங்கம் - ஆடாமல் அசையாமல் பாறைபோல் நின்று, பயங்கர அடக்குமுறைகளைச் சந்தித்த மாவீரன் - நெருக்கடி காலக் கொடுமையில் மிசா கைதியாக இம்மியளவும் கலங்காத இதயத்துடன்; மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை, எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை என்ற புரட்சிக் கவிஞனின் எழுச்சிக் கவிதைக்கு இலக்கணமாகத் திகழ்ந்த இலட்சியவாதி - செட்டிநாட்டுப் பகுதியில் சுயமரியாதைச் சுடர் விளக்கு ஏந்தி; பம்பரமாய்ச் சுழன்று பணியாற்றிய அண்ணன் இராம. சுப்பையா அவர்கள் கட்டி முடித்த தன்மான இயக்கக் கோட்டையின் தனிப்பெருங்காவலனாகத் திகழ்ந்த என் இனிய உடன்பிறப்பு - சித. சிதம்பரம் நேற்றிருந்தார் இன்றில்லை எனும் இந்த உலகின் பெருமைகூறும் திருக்குறளுக்கு எடுத்துக்காட்டாகிவிட்ட துயரம்; என்னைத் துளைத்தெடுக்கிறது.

வாகான உருவம் - பகைவர்க்கு வளையாத நெஞ்சம் - கொள்கைக் குன்றம் - குணத்திலோ தமிழ் மணக்கும் மன்றம் - வாழை இலை போல் குனிந்து வரவேற்கும் அழகும்; வாஞ்சையுடன் விருந்தோம்பல் தவறாமல் நடத்தும் பண்பும்; கழகத்தைக் கண்போல் காத்திடும் பாங்கும்; களம்புகுந்திடத் தலைமை கட்டளையிட்ட போதெல்லாம், தட்டாது நிறைவேற்றிய கடமையுணர்வும் - காரைக்குடியில் சித. சிதம்பரத்தின் வடிவில் அல்லவோ விளங்கிக் கொண்டிருக்கின்றன.

அந்த வடிவு, சாவின் இரக்கமற்ற கரத்தினால் சிதைக்கப்பட்டு விட்டது கேட்டு; என் செவிப்புலன் மீதே எனக்கு சந்தேகம் வந்து விட்டது. சிந்தையோ கலங்கித் தெளிய நெடுநேரமானது.

என் செய்வது; அடக்கத்தால் - அழகான புன்முறுவலால் - என்னைத் தன் அன்புக்கு அடிமையாக்கிய அருமை உடன்பிறப்பு சித. சிதம்பரம் உடலால் மறைந்திடினும், உணர்வுகளால், உறுதிகுலையாத கொள்கைப் பிடிப்பால் என்றும் நம்மோடு தானிருக்கிறார் என ஆறுதல் கொள்வோம்.

அன்புள்ள,

மு. க.

17-01-1994

2088. தடந்தோள் தாங்கும் கொடி நிழலில்!

உடன்பிறப்பே,

ஒடுக்கப்பட்ட மக்கள்; தமக்குக் கிடைத்த ஓரளவு உரிமையையும் இழந்து சமூகநீதி கோரி, போர் முரசு கொட்டப் புறப்பட்டு விட்டனர் என்பதை அறிவிக்கும் சங்கநாதம் - சிங்க முழக்கம் - சென்னை நகர் வீதிகளில், கடற்கரைப் பெருவெளியில் ஜனவரி 23 ஆம் நாள் எதிரொலிக்க; இன்னும் சில நாட்களே இடையில் உள்ளன.

நீயும் உன்போன்ற உடன்பிறப்புக்களும் சமூக நீதிப்பேரணியில் கலந்து கொள்ளப் பயணம் தயாராகப் படுத்திக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை, ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும், ஒன்றிய, நகரங்களில் இருந்தும் வருகின்ற செய்திகள் உறுதிப்படுத்திக்கொண்டிருக்கின்றன.

சென்னைப் பேரணி குறித்த விளம்பரங்கள், நெடிதுயர்ந்தும் - நீண்டும் கிடக்கின்ற சுவர்களின் நெற்றியில் எல்லாம் உன் கைத்தூரிகை கொண்டு வண்ண வண்ணமாய் பட்டி தொட்டி முதல், பட்டினங்கள் வரையில் எழுதப்பட்டுள்ளதை, இங்கு வந்து குவியும் புகைப்படங்கள் மூலம் கண்டு கழிபேருவகை கொள்ளுகின்றேன்.

திராவிட முன்னேற்றக் கழகமெனும் இந்த ஒப்பற்ற ஓவியத்தையே தீட்டி; இதனைக் காலத்தாலும் காத்து நிற்கும் என் கண்மணி ஆயிற்றே நீ! உனக்கா சொல்ல வேண்டும்; இந்த உரிமைப் போரின் அவசியம் என்னவென்று? இத்தருணம் விட்டால்; பின்னர் தலைமுறை தலைமுறைக்கும் ஒடுக்கப்பட்ட சமுதாயம் தலைதூக்க முடியாமலே போய்விடும் என்பதை உணர முடியாதவர்களா என் உடன்பிறப்புகள்?

இந்த இயக்கத்தின் உயிர்மூச்சான குறிக்கோளாம் வகுப்புரிமையை நிலைநாட்டுவதில்; இயக்கத்தில் உள்ள

ஒடுக்கப்பட்ட சமுதாயத்தினர் மட்டுமல்ல - முன்னேறிய சமுதாயத்தைச் சேர்ந்தோராயினும் இந்த மூலக் கொள்கையில் முரண்பட்டதில்லை என்பதற்கே எடுத்துக்காட்டுதான் மூதறிஞர் முத்தையா முதலியார் அவர்களே, இந்த சமூக நீதிக்கான ஆணையை 1928-லேயே பிறப்பித்த நிகழ்ச்சியாகும்.

1950-51 களில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் செல்லாது என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தபோது; அதே முத்தையாதான பெரியாருடனும், அண்ணாவுடனும் சேர்ந்து யுத்த பேரிகை கொட்டியவர்!

தகுதி, திறமை என்றெல்லாம் சொல்வது அர்த்தமற்ற, ஆதாரமற்ற, சுயநலக் கூச்சல் - ஏமாற்றுக் கூச்சல் என்று அதே முத்தையா முதலியார்தான், நமது பேராசிரியர் எழுதிய வகுப்புரிமைப் போராட்டம் என்ற நூலுக்கு முன்னுரையும் எழுதியவர்.

இவற்றை ஏன் எடுத்துக்காட்டுகிறேன் என்றால்; வெள்ளத்திலும் புயலிலும் சிக்கி வெகுபாடுபட்டுக் கரை ஏறியவன், நீந்த முடியாமல் நீரில் மூழ்கிக் கொண்டிருப்பவனையும் கைகொடுத்துக் காப்பாற்ற வேண்டும் என்ற கடமை உணர்வு கொண்ட உடன்பிறப்புகளின் பாசறைதான் கழகம் என்பதை, அழுத்தப்பட்ட சமூகமக்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகவே!

இன்றுபோல் அன்று - ஆம்; நாற்பத்தி மூன்று ஆண்டுகளுக்கு முன்பு - சமூக நீதிக்கான போர் தொடங்கப்பட்டபோது திராவிட நாடு வார இதழில் அண்ணா அவர்கள் தீட்டிய தலையங்கத்தைப் பலமுறை உனக்கு நினைவூட்டியிருக்கிறேன். இதோ, இன்னொரு முறையும் படித்துப் பார்!

ஏமாந்த காலத்தில் ஏற்றங் கொண்டோரால் சமூகநீதி, சாக்கடையில் தள்ளப்பட்டு விட்டது - சட்டம் என்ற கோல் கொண்டு!

சுப்ரீம் கோர்ட் இந்திய அரசியல் சட்டத்தைக் காட்டி வகுப்புரிமை செல்லுபடியாகாது என்று தீர்ப்பு தந்து விட்டது.

சட்டம் என்ற கூண்டு! உள்ளே சமூகநீதி! தேன் தேடி அலைபவனைத் தேள் கொட்டியதுபோல, சமூகநீதி

மூலம்; தன் ஒடிந்து போன வாழ்வைச் சீர்படுத்திக் கொள்ளத் தொடங்கிய பார்ப்பனரல்லாதாரின் முன்னேற்றப் பாதையில் விழுந்த பேரிடியாகும் இச்சம்பவம்.

திகைத்துத் திண்டாடும் திராவிட சமுதாயம்; இரத்தம் கொதிக்க, எண்ணங்கள் கிளர்ச்சி முரசு கொட்ட, எங்கள் முதுகெலும்பு உடைக்கப்பட்டதா? இருதயத்தையா எத்தர்கள் எடுத்துவிட்டனர், என ஒளியிழந்த கண்களிலே நீர் ததும்ப, ஒலியிழந்த குரல்களிலே வேதனை தொனிக்க, தனது தலைவர்களைச் சோகத்தோடு பார்க்கிறது.

தங்கள் வாழ்வு-சாவுப் பிரச்சினையாக இங்குள்ள சர்க்கார், சமூக நீதிப் பிரச்சினையைக் கருதுவார்களென எதிர்பார்க்கிறோம். மக்களின் இதயவேகம் அறிந்தவர்கள் இவர்கள் என்றே நம்புகிறோம். உண்மை உள்ளத்தோடு, துணிவைத் துணை கொண்டு பாடுபட்டால் - எப்படியும் வெற்றி நிச்சயம். அந்த ப்பாதை நடப்பார்களா? அல்லது அழியாத அவமானச் சின்னங்கள் ஆவார்களா?

மந்திரிப் பதவிகள், மக்கள் புயல்முன் சிறுதூசு! இதை அவர்களுக்குக் கவனமூட்டிக் கடமைப்பாதையைக் காட்டுகிறோம். பெருவெள்ளம் மோதிக்கொண்டி ருக்கிறது - ஆபத்தை அணைத்துக் கொள்ளாதீர்!

உடன்பிறப்பே, வகுப்புரிமையே முற்றாகப் பறிபோனபோது அய்யாவும் அண்ணாவும் திராவிடர்கழகப் போர்ப்படையுடனும் - திராவிட முன்னேற்றக் கழகப் போர்ப்படையுடனும் ஆதிக்கபுரிக்கோட்டையை இருமுனைகளில் மோதித் தகர்த்தபோது, வேறு வழியின்றி சமூக நீதிக்கான வகையில் அரசியல் சட்டம் திருத்தப்பட்டது.

ஆனால் இன்றோ; அந்த அடித்தளத்தில் கட்டப்பட்ட கோபுரத்தையே இடித்துவிட்டு, வெறும் மொட்டை மண்டபமாக ஆக்கப்படும் விபரீத வேலை நடந்து விட்டது.

கிடைத்து, அனுபவித்த உரிமையைப் பறிகொடுத்துவிட்டு - ஒடுக்கப்பட்ட மக்கள் ஒப்பாரி வைக்கும் கொடுமை, சட்டத்தின் சந்து பொந்துகளில் தொத்திக் கொண்டு குதித்து விட்டது.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் - கல்வி, வேலைவாய்ப்புகளில் 69 சதவிகிதம் பெற உரிமையுடையவர்கள் என்ற நிலை மாற்றப்பட்டு, 50 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டு விட்டதால்; அதற்கு இங்குள்ள அரசும் நீதிமன்றத்தில் தலையாட்டிவிட்டதால், வந்துற்ற கேடு - தும்பைவிட்டு வாலைப் பிடிப்பதுபோல இங்கே சட்டமியற்ற வேண்டிய அவசியமும், இதனை மத்திய அரசினர் ஏற்கவேண்டும் அல்லது அவர்களே; இங்குள்ளோர் இருக்கும் உரிமையை இழக்காதிருக்க அரசியல் சட்டத்தைத் திருத்திட வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டுள்ளது.

இந்தக் கட்டாயத்தைத் தக்க நேரத்தில் உணர்த்தவே கழகம், தன் கடமையை ஆற்றுகிறது! தமிழக மக்கள் - அதிலும் ஆண்டாண்டு காலமாக அனலிடைப் புழுவெனத் துடித்து, அடிமைகளாய் உழன்றோர், அது ஆண்டவன் கட்டளை எனச் சொன்னதை நம்பி ஏமாந்து சுருண்டு கிடந்தோர் - இன்று, தணலில் தங்கமாம் தி.மு. கழகத்தின் தடந்தோள் தாங்கிடும் கொடி நிழலில் அணி வகுத்து, ஆர்ப்பரித்து, அரிமாக்கள் என - புலிப்போத்துகள் என எழுகின்றனர் என்பதை உணர்த்தவே சென்னைப் பேரணி ஜனவரி 23-ல்!

பேரணிக்கான பணிகளில் தலைமைக் கழகத்தினரும்; தலைமைக் கழகத்தின் எல்லா செயலாளர்களுமே முழு மூச்சுடன் பாடுபடுகின்றனர்.

சென்னை மாவட்டத்தின் இரு பகுதிச் செயலாளர்களான தம்பிகள் சைதை கிட்டு, பலராமன் ஆகியோர், மற்றும் பகுதிக் கழக வட்டக்கழகச் செயல்வீரர்கள் - பல்வேறு அணிகளில் பொறுப்பு வகிப்போர் ஓய்வின்றி உழைத்திடுகின்றனர்.

அங்கிங்கெனாதபடி எங்கெங்குமுள்ள கழக அமைப்புகளின் நிர்வாகிகள் அனைவருமே, சென்னைப் பேரணி சிறப்புற, எழுச்சி பெற - ஓடியாடிப் பணி புரிகின்றனர்.

வரப் போகும் வாகனங்களில் கணக்கும் - சமூக நீதிச் சுடர் ஏந்தி வரும் இளைஞர் அணிக்குழுக்களின் விபரங்களும் - நாள்தோறும் தலைமைக் கழகத்திற்குத் தெரிவிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன!

அழைக்கின்றேன்; தட்டாமல் வர இருக்கும் தம்பிகளே! தங்கைகளே! அண்ணன்களே! தந்தையையும் தாயையும் போன்ற பெரியோரே! பேரன்பு கொண்டோரே!

வாகனங்களில் வருவோர் வழி நெடுக எச்சரிக்கையுடன் வாரீர் - நள்ளிரவுப் பயணங்களைத் தவிர்த்திடுவீர் - வேகம், நமது கொள்கைப் பயணத்தில் தேவையே தவிர, குண்டும் குழியும் நிறைந்த சாலைகளில் வேண்டாம்! நலமுடன் வந்து, நலமுடன் திரும்பி ஊர் சேர்ந்தாய் என்பதுதானே என் நெஞ்சுக்குத் தெம்பு!

நலமாய் நீ இருந்தால்தானே பலமாய் இருக்கும் கழகம்!

இந்தக் கழகத்தின் கட்டளையைத்தான் உடன்பிறப்பே, நான் இக்கடித வாயிலாக உனக்குத் தமுக்கடித்துச் சொல்லுகிறேன் உன்னைப் போல ஒரு தொண்டனாக!

அன்புள்ள,

மு. க.

18-01-1994

2089. அழைக்கின்றார், அழைக்கின்றார் அண்ணா!

உடன்பிறப்பே,

காதில் விழுகிறதா? இப்போதே சென்னை கடற்கரை காந்தி சிலை அருகிலிருந்து அந்த எழுச்சிக்குரல் கேட்பது போன்ற உணர்வு, உன் செவியில் நுழைந்து சிந்தை அணு ஒவ்வொன்றையும் சிலிர்க்க வைத்துக்கொண்டிருக்குமே!

அழைக்கின்றார், அழைக்கின்றார் அண்ணா!

அந்த முரசின் முழக்கத்தைத்தான் குறிப்பிடுகிறேன் - ஆம்; இசை முரசின் முழக்கத்தைத்தான் குறிப்பிடுகிறேன் - நமது நாகூர் முரசின் முழக்கம் - நாமறிந்த நாள் முதலாய் நமது மேடைகளில் முழங்கத் தவறாத முரசம்! நாகூர் அனிபா என்ற அந்தக் கொள்கை முரசம்!

அவர் பெயர் உச்சரிக்கப்பட்டாலே; உனக்கும் எனக்கும் உள்ளத்திலிருந்து முதலில் எதிரொலிப்பது, அந்த எழுச்சிப்பண்தானே!

அழைக்கின்றார், அழைக்கின்றார் அண்ணா!

அலைகடல் தாளமிடவேண்டும் அந்தப் பாட்டுக்கு - இடிமுழக்கம் பேரிகையாக இருந்திடல் வேண்டும் - அப்படியொரு பாடல், சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு நமது கழக ஏடு நம்நாடு தாங்கி வந்ததை; நான்தான் அப்படியே எடுத்து அனிபா அவர்களிடம் தந்து - தக்க மெட்டு அமைத்துப் பாடுமாறு கேட்டுக்கொண்டேன்.

அன்று, தமிழகத்தில் ஒலிக்கத் தொடங்கிய அந்த கீதம் - தமிழர்கள், இந்தப் பூமிப்பந்தில் எங்கெல்லாம் வாழுகிறார்களோ, அங்கெல்லாம் இன்னமும் ஒலித்துக் கொண்டிருக்கிறது!

சிங்க நடையும், சிங்காரத் தென்றல் நடையும், பொங்கு கடல் நடையும், புரட்சித் தமிழ் நடையும், தன் புது நடையில் கண்ட அண்ணா; அழைக்கின்றார் என்றால் - அய்யா பெரியாரின் அடிப்படைக் கொள்கைகள் சிந்தாமல், சிதறாமல், சிறிதளவு சேதாரத்திற்கும் உள்ளாகாமல் கட்டிக் காப்பாற்றப்பட வேண்டுமென்பதற்காகத்தானே அழைப்பார்!

சிந்துபாடும் அருவியாக விளங்கி, செந்தமிழர் வரலாற்றை நினைவூட்டியும் - முந்தைய தமிழ் வீரர்தம் ஆற்றலை நெஞ்சில் பதியவைத்து, இன்றைய தமிழரும் ஈட்டியின் பாய்ச்சல் கண்டு இமை கொட்டுவதும் கோழைத்தனமென்று கூறி அவர்தம் தலையை நிமிர வைத்தும் - தமிழால் நம்மை ஆண்ட தளநாயகன், அந்தத் தமிழினம் தாழ்ந்து போகாமல் தடுத்திடத்தானே நம்மை அழைப்பார்!

அந்த அழைப்பு, உழைக்கும் வர்க்கத்திற்கு! உழைப்போரை எத்திப் பிழைக்கும் இனத்தாருக்கு அல்ல! உழைத்து, உழைத்து ஓடாகத் தேய்ந்தும் - உரிமைகள் பெறத் தகுதியற்றோர் என ஓரங்கட்டப்பட்ட சமுதாயத்தினரை உயர்த்தும் பணிக்கான அழைப்பு!

அண்ணா, அன்று விடுத்த அழைப்புத்தான் இன்றும் தொடருகிறது! என்றும் தொடரும்! இடையிடையே நஞ்சு நிறை நெஞ்சினர் புரியும் வஞ்சகத்தைப் பொடிப் பொடியாக்கும் அழைப்பன்றோ, வெஞ்சமருக்கு வா என்று ஆணையிடும் அந்த அழைப்பு!

அழைப்பை இசை முரசாக ஆர்த்திடுபவரோ, இந்த இயக்கத்துடனேயே சேர்ந்து வளர்ந்த - படர்ந்து பிணைந்த - உனக்கும் எனக்கும் எத்தனையோ ஆண்டுக்காலமாக உடன்பிறப்பாவார்! இன்றைய இளைய தலைமுறைக்கு, இலட்சியப் பிடிப்பும் கட்டுப்பாடும் ஓர் இயக்கத்தில் இணைந்திருப்போருக்கு எப்படி அமைந்திடல் வேண்டும் என்பதற்கு இலக்கணமாகத் திகழ்பவர்!

அவர், ஜனவரி 23 சென்னை சமூகநீதிப் பேரணியில் கலந்துகொண்டு, கடற்கரைக் கூட்டத்திலும் இசை நிகழ்ச்சி நடத்துகிறார் என்ற செய்தியை, நீ இதழ்களில் கண்டதுமே; அந்த முதல் பாட்டு - முரசப்பாட்டு - முத்தாய்ப்பான பாட்டு -

அழைக்கின்றார், அழைக்கின்றார் அண்ணா!

என்பதுதானே; உன் போன்றோர் குமரி முனையில் இருந்தாலும் செவிப்பறையில் வந்து மோதும்! அந்தப் பாட்டை இசைத்தட்டுகளில் பல நாட்கள் கேட்டிருக்கிறோம் - ஒலி நாடாக்களில் கேட்கும் வாய்ப்பும் உண்டு! இருந்தாலும் கடற்கரையில் மக்கள் வெள்ளத்துக்கிடையே அந்தக் கம்பீரக் குரலுக்குச் சொந்தக்காரரே மேடையில் அமர்ந்து;

'அழைக்கின்றார் அழைக்கின்றார்...' என்று தொடங்கியவுடனேயே 'அண்ணா! அண்ணா!!' என்று நம் ஒவ்வொருவர் நெஞ்சமும் இசைத்து மகிழுமே - நெகிழுமே - துள்ளுமே - இன்பம் அள்ளுமே - வெறும் பாட்டா அது?

அந்த அழைப்பு எதற்காக? ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகத் திட்டமிட்டுத் தீர்த்துக் கட்டப்பட்ட ஒரு பெரும் சமுதாயத்தின் உரிமைகளை மீண்டும் பெற்றிடவும், வெற்றிக் கொடி நாட்டிடவும் தரப்படுகிற அழைப்பு!

உடன்பிறப்பே,

நான் அழைத்தாலும், நமது பேராசிரியர் அழைத்தாலும் - ஆங்காங்கு மாவட்டக் கழகங்களின் தளகர்த்தர்கள் அழைத்தாலும் - எல்லா அழைப்புகளுமே - அண்ணாவின் அழைப்புக்குள் அமைந்துள்ள அழைப்புகள்தானே!

ஆளுங்கட்சியாகவோ அல்லது எதிர்க்கட்சியாகவோ - எப்படி இருப்பினும் இந்தக் கழகத்தின் பணி இன்னும் ஐம்பது ஆண்டு காலத்திற்குத் தேவைப்படும் பணியாகும் என அண்ணா பிரகடனப்படுத்தி, இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகின்றது.

அந்தப் பிரகடனத்திற்குப் பிறகோ; நடுநடுவோ புகுந்த சதிவேலைகள் நமது பயணத்திற்குத் தடையாக எதிர்வந்து நின்றதால் - அண்ணா குறித்த அந்தத் தேவைப்படும் பணிக்கான ஆண்டுகள் இன்னும் பல வேண்டியிருக்கின்றன என்பதை நீ உணர்வாய்! இந்த இனத்தின் முன்னேற்றத்தைச் சீர்குலைக்கும் நிகழ்வாகத்தான்; திராவிட இயக்கம் அரும்பாடுபட்டுப் பெற்றளித்த சமூக நீதிக்கு இன்று சோதனை ஏற்பட்டுள்ளது!

சோதனையை வென்றிட - சாதனை நிகழ்த்திட -

அழைக்கின்றார், அழைக்கின்றார் அண்ணா என அவரின் தம்பி நான் - என் உயிரனைய உடன் பிறப்புக்களை அழைக்கின்றேன்!

நெடுந்தொலைவு - கடும் பயணம் - நேர் கொண்ட பார்வையால், நிமிர்ந்த நடையால், நெஞ்சுறுதியால் - வென்றெடுப்போம் வா! சினவேங்கைக் கூட்டமே வா! சிலிர்த்தெழுந்து சிம்ம நடை போட்டு வா! வெங்குருதி தனிற்கமழ்ந்து வீரஞ் செய்கின்ற மூச்சு; எம் தமிழ் மூச்சு எனப் புரட்சிக் கவிஞரின் புறநானூற்றுப் பண்பாடி - போர் முழக்க உரைகள் கேட்டிட வா!

போர்வீரனாக வா! இப்படைதோற்கின் எப்படை வெல்லும்? என்பாரே அண்ணன்; அந்தப் படை முகத்துப் பெரு வீரனாக வா! அண்ணா அழைக்கின்றார் வா!

அன்புள்ள,

மு. க.

20-01-1994

2090. தேள் கொட்டித் துடிக்கும் தாயும்; அவள் பெற்றெடுத்த தேன்மலரும்!

உடன்பிறப்பே,

அன்னை தந்தையுடன், அக்காள் தங்கையுடன், அன்புமனையாள் அருமைச் செல்வங்களுடன் சென்னைப் பேரணிக்கு குடும்பம் குடும்பமாக - உற்றார் உறவினர், உயிரனைய நண்பர் புடைசூழப் புறப்படுவதற்கு நீயும், உன் போன்ற உடன்பிறப்புக்களும் தயாராகிக் கொண்டிருக்கும் வேளையில்; இடையே இப்போதுமான ஒரு கடிதம் எழுதிவிட்டாய் என்று நீ அலுத்துக் கொள்ள மாட்டாய் என்று எனக்குத் தெரியும். அந்தத் துணிவில்தான் இதை எழுதுகிறேன். தொடர்ந்து எழுதிக் கொண்டிருந்துவிட்டு இடையே சில நாட்கள் கடிதம் எழுதாவிட்டால் தானே உனக்குக் கடுங்கோபம் வரும். அந்தக் கடந்த கால நினைவுகள் பட்டுப் போகவில்லையே! பசுமையாகத்தானே இன்னமும் இருக்கிறது - எப்போதுமே இருக்கும். எவ்வளவு தொலை தூரத்தில் இருந்தெல்லாம் ஆணையிட்டு மடல்தீட்டி அனுப்புவாய் உடனே கடிதம் எழுது என்று! அந்த ஆவல் தோய்ந்த கேள்வியில் பொங்கி வழியும் அந்தப் பாசம் தானே; என்னை எத்தனையோ சோதனைகளுக்கு நடுவிலேயும் சோர்ந்துவிடாமல் தோள் கொடுத்துத் தூக்கி நிறுத்திக் கொண்டிருக்கிறது!

எனக்கோ; என்னை நீ ஏற்றி உட்கார வைத்திருக்கிறாயே தலைவனாக - அந்தக் கழகத்துக்கோ; இன்னல்கள், இடையூறுகள், ஏற்பட்ட போதெல்லாம் - அவற்றை நினைத்துச் சுருண்டு கிடக்காமல்; தேள் கொட்டித் துடிக்கும் தாயொருத்தி, அவள் பெற்ற தேன் மலரைத் தீண்டுவதற்கு அரவமொன்று படமெடுத்துச் சீறிப்பாய்வதைத் தடுத்திடத்தானே தாவி எழுவாள் - அதுபோல இந்தச் சமுதாயத்திற்கு வந்துள்ள கேட்டினைக் களைந்திடவே

கச்சை கட்டிக் களம் புகுவது கழகத்தின் வரலாறு! ஒன்றிரண்டு கேடுகள் அல்ல; இந்தச் சமுதாயத்தைச் சூழ்ந்துள்ளவை! ஆயிரம் ஆயிரம் கேடுகள்! இந்திய நாடு முழுமையும் பரவியுள்ள கேடுகளின் தாக்கம் தமிழகத்தை மட்டும் தனியாக விட்டுவிடுமா என்ன? அந்தக் கேடுபாடுகள் அன்னியில், இங்குள்ள அரசினர் அன்றாடம் அடுக்கி அடுக்கி வைக்கும் கேடுகள்! அனைத்தையும் பட்டியலிட்டுப் படிக்கவே பல நாட்கள் ஆகுமெனில்; ஒரு கடிதத்தில் அடக்கிவிட இயலுமா என்ன!

பாமரராய், ஊமையராய் மக்கள் இருக்கும் வரை எதுவும் செய்யலாம் என எத்தர்களும் - அவர்களை நாடி ஓடும் பதவி பித்தர்களும் - பணமே கடவுள் எனும் பக்தர்களும் - எண்ணுவதும் எண்ணியவாறு இயங்குவதும் இன்றைய நாட்டு நடப்பு ஆகிவிட்டதைத் தலைகீழாக மாற்றி அமைத்தாலின்றி; நல்வழி காணமுடியும் என முயற்சிப்பது முயற்கொம்புதானே!

மத்திய அரசின் புதிய பொருளாதாரக் கொள்கை எனும்; ஏழை எளிய நடுத்தர மக்களை விழுங்கும் பூதமும் - அதற்கு வாலாக முளைத்துள்ள டங்கல் திட்டமும் - நமது கழகத்தின் கண்டனத்திற்கு உரியவை என்று தொடக்கத்திலிருந்தே கூறி வருகிறோம். தொடர்ந்து எதிர்ப்பைக் காட்டி வருகிறோம். மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு அவசியமான பண்டங்களின் விலைகள்கூட உச்சிக்கு ஏறிவிட்ட கொடுமை; அவர்களைச் சல்லடைக் கண்களாகத் துளைத்து வருவதைக் கண்டித்தோம் - எச்சரித்தோம் - ஏன்; களமும் கண்டோம்!

எத்தனையோ மக்கள் பிரச்சினைகள் எச்சில் இலைகளைப் போலத் தூக்கி வீசிவிட்டு; இந்தித் திணிப்புக்கு தலைவாழை இலை போட்டு, நடை பாவாடை விரித்துக் கொண்டிருக்கும் நாசகாரியத்தை நாம் என்றைக்குமே அனுமதித்ததில்லை; இன்றைக்கும் அனுமதிக்கப் போவதில்லை! ஏனெனில்; ஐம்பத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்க்கொடி தூக்கித் தழும்பேறிய கரங்கள், நம் கரங்கள்! மின்விளக்கு அலங்கார பொம்மைரதத்தில் பூட்டிய குதிரைகள் ஓடுவதுபோலத் தெரியும் - ஆனால் ரதமோ குதிரைகளோ அவை நின்ற இடத்திலேதான் நிற்கும் - அதே போலத் தமிழக நிர்வாகம் ஆகிவிட்டதை நித்த நித்தம் எடுத்துச் சொல்கிறோம் - ஊழல் பெருவெள்ளம் இங்கு ஊழிப் பெருவெள்ளமாகி மாநிலத்தையே உருக்குலைத்து விட்டதை

ஊரறிய, உலகறிய உரக்கக் கூறுகிறோம்! இப்படிப் பல முனைகளில் நமது பணியுள்ளது எனினும்; உடனடியாக செய்து முடிக்க வேண்டிய பணியாக; இழந்து விட்ட உரிமைகளை ஒடுக்கப்பட்ட மக்களுக்குத் திரும்பப் பெற்றுத்தரும் சமூக நீதிக்கான திருப்பணி அமைந்துள்ளதை மறந்துவிட முடியுமா?

கல்வி வேலை வாய்ப்புகளில் தமிழ் நாட்டில் பிற்படுத்தப்பட்டோருக்கு 30 சதவிகிதமும் - மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினருக்கு 20 சதவிகிதமும் என்று நமது கழக ஆட்சியில் உருவாக்கப்பட்ட நிலை இன்று மாற்றப்பட்டு பிற்படுத்தப்பட்டோருக்கு 18.6 சதவிகிதம் - மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 12.4 சதவிகிதம் என்று சுருங்கி விட்டதால் ஏற்படப்போகும் பாதிப்பு; இன்றைக்குத் தெரியாமல் இருக்கலாம். இன்னும் பல ஆண்டுகளுக்குப் பிறகு இதன் மொத்த பாதிப்பை ஒடுக்கப்பட்ட சமுதாயம் சந்தித்தே ஆக வேண்டும். அப்போது நாம் இருக்கவா போகிறோம், விட்டுத்தள்ளு! என்று கூறிவிட முடியுமா? அப்போது இருக்கப் போகிறவர்கள் நம் கல்லறைக்கு முன் நின்று நம்மைச் சபிக்காமல் இருக்க வேண்டுமல்லவா?

உடனடி பாதிப்பு; அதுவும் தனிப்பட்ட ஒவ்வொருவரையும் தாக்கிடும் பாதிப்பு - இன்று கண்ணுக்குத் தெரியாது! ஆம்; வெட்டுக்கிளிகள் கூட்டமாகப் பறந்து வருவது தொலைவிலிருந்து காணும்பொழுது மேகக்கூட்டம் போலத்தான் தெரியும் - ஆனால் எத்தனை எத்தனை தானியம் விளையும் கழனிகளை, அந்த வெட்டுக்கிளிக் கூட்டம் தரைமட்டமாக்கி விடும் என்பதை நினைவிற்கொள்ள வேண்டும்.

இன்று நமக்கு இடஒதுக்கீட்டில் கிடைத்துள்ள இந்த வெட்டு; அந்த வெட்டுக்கிளிப் படையெடுப்பு போன்றதுதான்! இப்படிப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இந்த சமுதாயம், பச்சைப்பாம்பைப் பச்சைக் கொடியென நம்பிய காரணத்தினால்தான் - அன்று உடலில் பரவிய விஷம் இன்னமும் இறங்காத மயக்க நிலையில் கிடக்கிறது! அந்த மயக்கம் போக்கிட மருந்து வழங்கிக் கொண்டிருக்கும் வேளையில்; மற்றொரு கட்டுவிரியன் பாம்பு மண்டையிலேயே கடித்ததுபோல - அளிக்கப்பட்ட உரிமையும் பறிபோகிறது எனில் எப்படிச் சகிப்பது? அதற்கான எதிர்ப்பை அறிவிக்கத்தான் -

எரிமலையாக்காதீர் தமிழகத்தை என்று எச்சரிக்கை செய்யத்தான் - எடுக்கின்றோம் பேரணி! தடுக்கின்றோம் பேராபத்தை!

பேரணியில் வர இருக்கும் அலங்கார வண்டிகள் பற்றிச் சென்னை மாவட்ட இரு பகுதிச் செயலாளர்கள் தம்பிகள் கிட்டுவும் பலராமனும் குறிப்பிட்டுள்ளனர் - அவை வெறும் அலங்கார வண்டிகள் அல்ல - 1913 முதல் சமூகநீதிக்கான போராட்டம் தொடங்கி விட்டதைச் சித்திரங்கள் வாயிலாகத் தெரிவிக்கும் வரலாற்றுத் தொடர்கள்!

ஒவ்வொரு அணியினரும் நடைபோட இருக்கும் வரிசை - மாவட்டங்கள், மாநிலங்கள் வர இருக்கும் வரிசை - இவற்றுடன் பேரணியில் எழுப்பப்பட வேண்டிய முழக்கங்கள் எல்லாம் அறிவிக்கப்பட்டுள்ளன. முழக்கமிடுவோரின் கவனத்திற்கு; மிக முக்கியமான ஒரு வேண்டுகோள்! யாரையும், எவரையும், தனிப்பட்ட முறையில் எதிர்த்து எழுப்பும் முழக்கங்கள் வேண்டவே வேண்டாம்! உடுப்பு அணியாத பட்டாளத்துச் சிப்பாய்கள் என்பாரே அண்ணா - அந்தக் கட்டுப்பாடு நமது பேரணியில் கண்போல் காக்கப்பட வேண்டும்! காத்திடுவாய் என்ற நம்பிக்கையுடன் - கரங்கூப்பி, வழிமேல் விழிவைத்து நானும் காத்திருக்கிறேன் உனக்காக!

அன்புள்ள,

மு. க.

21-01-1994

2091. என் கால்கள் பரபரக்கின்றன!

உடன்பிறப்பே,

சென்னைப் பேரணிக்கான ஒரு விளம்பரத்தில் கலைஞரின் ஆணை கேட்க அணிவகுப்போம் வாரீர்! என்ற ஒரு வாசகம் கண்டு திடுக்கிட்டேன். என்றைக்கு நான் ஆணையிட்டுப் பழகிக் கொண்டிருக்கிறேன்? எப்போதுமே இல்லையே - ஆணையிடும் ஆதிக்க வர்க்கத்தில் பிறந்தவனுமில்லையே; உன்போன்ற உடன்பிறப்புக்களின் அன்புக் கட்டளையைச் சிரமேல் பருவத்திலேயே பொது வாழ்வில் அடியெடுத்து வைத்த நாள் முதல் இந்த ஐம்பத்தி ஐந்து ஆண்டுக் காலமாக இந்தச் சாமானியன் கடைப்பிடித்து வரும் கொள்கை!

என் அன்பு வேண்டுகோள்களை ஆணைகள் என நீயோ, உடன்பிறப்புக்களான மற்றவர்களோ கருதிக் கொண்டிருப்பீர்களேயானால்; அது இந்தக் கழகத்தின் மீது கொண்டுள்ள பற்றுக்காக! வைத்துள்ள மதிப்புக்காக! அவ்வாறின்றி எனக்காக என எண்ணிக் கொள்ள நான் என்ன பைத்தியக்காரனா?

தொண்டு செய்தே பழக்கப்பட்டவன் - தொண்டனாகவே என்றும் இருந்திடவே விரும்பியவன் - விரும்புகிறவன் - அந்த விருப்பத்தை முழுமையாக நான் நடைமுறைப்படுத்த விடாமல் என்னைத் தலைமைத் தொண்டனாக ஆக்கிவிட்டாய்!

1959 ஆம் ஆண்டு திருவாரூரில் தஞ்சை மாவட்டக் கழக மாநாடு - அப்போது மாவட்டச் செயலாளர் நண்பர் இளங்கோ, மாவட்டத் துணைச் செயலாளர் மன்னை - அவர்களுடனிருந்து பணியாற்ற நானும் திருவாரூரில் ஒரு மாதம் முகாமிட்டிருந்தேன். ஒவ்வொரு நாளும் மாவட்ட முழுதும் மாநாட்டுக்காகப் பிரச்சாரக் கூட்டம், நிதி திரட்டும் கூட்டம்! ஒவ்வொரு கூட்டத்திலும் நூறு இருநூறு ரூபாய் எனத் தொகையைப் பொற்கிழியாக வழங்குவார்கள். கூட்டங்கள் முடிந்து இரவு ஒரு மணி அளவில்

திருவாரூர் திரும்புவோம்; என்னுடன் தென்னன், விசயராகவன், வெங்கிடங்கால் சந்தானம், வாழக்கரை இராசகோபால், காரோட்டிட ராசமாணிக்கம்!

அந்த நேரத்திலும் நேராக வீட்டுக்குப் போகமாட்டோம் - மாநாடு நடைபெறும் தைக்கால் திடல் எனும் மைதானத்திற்குச் செல்வோம். பந்தலில், வேலை செய்து அலுத்துப் போன தொண்டர்கள் ஓய்வுக்கொண்டு உறங்கிக் கிடப்பார்கள் -

மாநாடு இரண்டொரு நாட்களே இருக்கும் நிலையில் இப்படி ஓய்வெடுப்பது சரியா? என்று இரக்கமின்றிக் கேட்கத் தோன்றும். ஆனால் கேட்பதில்லை.

நானே வேட்டியை வரிந்துகட்டி, தலையில் முண்டாசுடன் அங்குள்ள கயிறுகளை எடுத்து நீளவாக்கில் கட்டி; தோரணக் கொடிகளை அந்தக் கயிறுகளில் ஒட்டி - ஏணியைக் கம்பங்களில் சாய்த்துவைத்து அந்தத் தோரணங்களை பந்தலில் கட்டத் தொடங்குவேன். என்னுடன் மற்ற நண்பர்களும் இணைவர். நாங்கள் நடமாடும் ஒலி கேட்டு விழித்துக் கொண்ட தொண்டர்கள், அலறிக் குதித்து ஓடோடி வந்து உறக்கத்தை உதறி, ஓய்வுக்கு ஓய்வளித்து விட்டு - அவர்களும் என்னுடன் கொடிகட்டும் பணியிலும், வரவேற்பு வளைவுகள், மேடை அலங்காரங்கள் எனப்படும் பல்வேறு பணிகளிலும் இணைந்துகொள்வர். அந்த மாநாட்டில்தான் முதன்முதலாக செலவு போக மிச்சத்தொகை இருபதாயிரத்தை நான் வழங்க; அதனை இருபது லட்சமெனக் கருதிக்கொண்டவராக அவரும் பெற்றுக் கொண்டு வாழ்த்திய நிகழ்ச்சியும் நடந்தது.

'தம்பி! உன் கரம்பட்டு லட்சம் லட்சமாக சம்பாதித்தோர்; சம்பாதிப்போர் பலர் உண்டு - எனினும் இந்தத் தொகையை நீ திரட்டி அளித்ததில் எனக்குள்ள திருப்தி; ஓடியாடி உழைக்கும் வர்க்கத்திடம் பெற்றளித்த நிதி இது என்பதுதான்! இப்படிப்பட்ட நிதிகள் இக்கழகத்திற்கு தொடர்ந்து கிடைக்கும் உன்னால் என்பதால் உன்னை வாழ்த்துகிறேன்.

இது அந்த மாநாட்டில் - 1959-ல் அண்ணன் பேசியது - அதேவிதமாகத் தொண்டு செய்ய வேண்டுமெனத் துடிக்கும் இளமையான உள்ளம் இன்றைக்கும் இருக்கிறது. அதனால்தான் உன்னை நான் துளைத்தெடுக்கிறேன்.

எனக்காக அல்ல; நாட்டுக்காக - நமது சமுதாயத்திற்காக - இனத்துக்காக, மொழிக்காக - அண்ணா ஏற்றி வைத்துள்ள விளக்கை அணையாமல் காப்பதற்காக - எனும் உண்மையை உணர்வதினால் நீயும் சோர்வின்றி சுழலுகிறாய் பம்பரமாக!

நம் தொண்டு வீணாவதில்லை - தமிழ்ச் சமுதாயத்தின் பாதுகாப்பு அரணாம் இந்தக் கழகத்தைக் காத்து நிற்பதே; நமது நாடி நரம்புகளில் பாய்ந்தோடும் குருதியில் கலந்துள்ள உறுதிமிக்க உணர்வு - எனும் பெருமிதத்துடன் தானே சென்னையில் சமூக நீதிப் பேரணி நடத்துகிறோம்.

அந்தப் பேரணியை எப்படி நடத்த வேண்டுமென - எவ்வாறு கட்டுப்பாடும் அமைதியும் ஒழுங்குமுறையும் பேரணியில் கட்டிக் காக்கப்பட வேண்டுமென - பேரணியினூடே நடந்து வந்து ஆங்காங்கு கண்காணித்துச் சீர் செய்ய வேண்டுமெனக் கால்கள் பரபரக்கின்றன! ஆனால் அதற்கு அனுமதி தராமல்தான்; பார்வையாளர் மேடைபோட்டு அதில் நிற்கவைத்துவிடப் போகிறாயே!

நானும் பேராசிரியரும் எத்தகைய கட்டுப்பாடும் - கண்ணியமும் - கழகப் பேரணியில் போற்றப்பட வேண்டுமெனக் கருதுகிறோமோ - அதனை ஆடியோடிச் செய்து முடிக்க எண்ணற்ற வியர்வைத்துளிகள் இருக்கின்றார்கள் எனும் ஒரே நம்பிக்கையோடும், அவர்களின் வேண்டுகோளுக்குக் கட்டுப்பட்டுப் பேரணியில் கலந்து கொள்வோர் நடந்திடுவர் என்ற உறுதியோடும் இருக்கின்றோம்.

எந்தெந்த அணிகள் எந்த எந்தச் சாலைகளில் நிறுத்தப்பட்டு, எந்த வழியில் வரவேண்டுமெனவும், அலங்கார வண்டிகள் எப்படி அணிவகுத்திட வேண்டுமெனவும் - சீராகவும் செம்மையாகவும் குறுக்கும் நெடுக்குமாகச் செல்லாமலும்; பேரணி சிறப்புறவும், எழுச்சியுறவும் உதவிட வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டிருப்பதை படம் போட்டுக் காட்டியிருப்பதை ஒருக்கணமும் மறந்துவிடக் கூடாது.

வரும் வாகனங்களில் ஒரு வாகனம்; எதிரிலோ - அல்லது குறுக்கு வழியிலோ - பேரணிக்குள் நுழைய எத்தனித்தால் - பேரணியின் பொலிவு குலைந்துவிடும்.

நேற்றைய கடிதத்திலும் குறிப்பிட்டுள்ளேன் - இன்றும் நினைவூட்டுகிறேன் பேரணிக்கென வெளியிடப்பட்டுள்ள முழக்கங்களைத் தவிர; வேறு எவரையும் தனிப்பட்ட முறையில் தாக்கி எழுப்பும் முழக்கங்கள் பேரணியில் அனுமதிக்கப்பட மாட்டாது! கூடாது!

ஏற்கெனவே; இங்கு வங்கக் கடல் - ஜனவரி 23 அன்று மக்கள் கடலும் சேருகிறது! தங்குவதற்கு இடம் போதாமலிருக்கலாம்; வெளியூர் உடன்பிறப்புகளுக்கு!

இடஒதுக்கீடுப் பேரணியில்; எமக்கு இடஒதுக்கீடு இல்லையா எனச் சினந்திடல் வேண்டாம் - கிடைத்த வசதிகளைக் கிடைத்தற்கரிய வசதிகள் என நினைத்து மகிழ்ந்து;

ஆற்றவேண்டிய கடமையை;

கட்டுப்பாட்டுடனும்

கண்ணியத்துடனும் ஆற்றிடுவோம்!

அன்புள்ள,

மு. க.

22-01-1994

2092. உன் காலடிகளுக்கு என் காணிக்கை!

உடன்பிறப்பே,

சமூகநீதிப் பேரணி, சென்னையில் சமுத்திரங்களின் சங்கமமாக இருக்க வேண்டும் - சரித்திரம் புதிதாகப் படைப்போம் வா; அதனைச் சாதிக்க உன்னால்தான் முடியுமென்று நம்பி, உன்னை அழைத்தேன்! என் நம்பிக்கை எள் முனையளவுகூடப் பொய்க்கவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாக;

“எழுஞாயிறாக...
ஏறுநடை சிங்கமாக...
புறநானூறு படைக்கும் புலிப்போத்தாக...
உரிமை மறுப்போரை ஊதித்தள்ளும் ஊழிப் புயலாக...
பிற்போக்கு சக்திகளைத் துடைத்துப்போடும்
பிரளயத்துப் பெருவெள்ளமாக...
நெஞ்சிலே வஞ்சனை நிறைந்தோர் அஞ்சி நடுங்கிடவும்,
அயர்ந்து ஒடுங்கிடவும்...

அணி வகுத்தாய், அணி வகுத்தாய், என் அன்பே; நீ அணிவகுத்தாய்! தமிழனின் நலம் பாடவும், அவன் மொழி வாழவும், அவன் இனம் தலைதூக்கவும், நீ அணிவகுத்தாய்! சனாதனிகள் ஒரு காலத்தில் திட்டமிட்டு வகுத்த சாத்திர புராண இதிகாசங்கள் விளைத்த சதியால்; இந்தச் சமுதாயத்தில் முக்காலே மூணுவீசம் பேர் முடக்கப்பட்டு, அடக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டு, பிற்படுத்தப்பட்டு - பலர் வாடவும் சிலர் வாழவுமான சமூக அநீதிக்கான துவரஜாரோகணம் செய்யப்பட்டு - கல்விக்கண் இல்லாத குருடர்களாய் தடுமாறிக் கொண்டிருந்த கொடுமை கண்டு கொதித்தெழுந்த நமது முன்னோடிகள் - மூத்த தலைவர்கள் - இன்றில்லாவிடினும் - அவர்கள் நமது உணர்வில் வாழ்கிறார்கள் என்பதை மெய்ப்பித்திட அணி வகுத்தாய்!

ஐந்தாறு கடிதங்கள்தான் எழுதினேன் - என்னையே வியப்பிலாழ்த்தும் அளவுக்கு நீ எடுத்துள்ள விசுவரூபம் இருக்கிறதே; அது வீணர்களையும் வீடணர்களையும் விழிபிதுங்க வைத்துவிட்டதே - வீழ்ந்துவிட்டோம் என்றல்லவா வெறிகொண்டு சிரித்தார்கள்! வீழ்த்தி விட்டோம் கழகத்தை என்றல்லவா வீராப்பு பேசினார்கள்! ஏ, அப்பா! எத்தனை எத்தனை ஏடுகள்; என்னென்ன அஸ்திரங்களையெல்லாம் அடுக்கடுக்காகப் பொழிந்து பார்த்தன! இன்னமும்கூட அந்தப் பேய் மழை பெய்த தூறல் நிற்கவில்லையே!

அத்தனைக்கும் ஈடுகொடுத்திட எனக்கும் பொதுச் செயலாளர் பேராசிரியருக்கும் ஆற்றலும், வலிமையும் அளித்ததும் அளிப்பதும் உன் போன்ற உடன்பிறப்புகள்தான் என்பதை அந்த ஒருநாள் ஜனவரி 23 ஆம் நாள் மாநகர் சென்னையில் மாவீரர் வழித்தோன்றலே! நீ நிரூபித்துவிட்டாய்!

சில ஏடுகளில் அலுவலகங்களில் அறைக்கதவுகளைச் சாத்தித் தாளிட்டுக் கொண்டு ஆசிரியர் குழுவினரும், அவர்களின் மேலாளர்களும், உரிமையாளர்களும் ஒருவரை ஒருவர் ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டு - என்னய்யா இது? ஒரே மாயமா இருக்கு! நமது கலகவேலை கைகூடி விட்டது எனக் களித்திருந்தோம் - தி.மு.க. தீர்ந்து போய்விட்டது, தீய்ந்து சாம்பலாகிவிட்டது என்ற திருப்தியில் தித்திப்புகூடப் பரிமாறிக்கொண்டோம் - திடுதிப்பென்று வரிசையாக அவள் இரண்டு குண்டுகளைத் தூக்கிப்போட்டு நமது மூளையையே சிதற அடிச்சுட்டாளே! தஞ்சையிலே பொதுக்குழு! கட்சியின் வலிவைக் காட்டினா அங்கே! சென்னையில் பேரணி; கழகக் கோபுரத்தின் கட்டுமானமும் அடித்தளமும் அப்படியேதான் இருக்கிறதுன்னு காட்டினது மாத்திரமில்லே - பொதுமக்களே பெரும்பகுதி அவாள் பக்கம் தான்னு கடற்கரைக் கூட்டத்திலே காட்டிட்டா! என்று முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு உரையாடிக் கொண்டிருந்த தகவலை ஒரு தம்பி என் காதிலே போட்டபோது; அத்தனை பெருமையும் உடன்பிறப்பே; உனக்குத்தான் சொந்தம் என எண்ணிப் பூரித்துப் போனேன்.

வானவில் நெடுஞ்சாலையில் வீழ்ந்து நீண்டு நகர்ந்து வருகிறதோ என ஐயுறும் வண்ணம் அணிவகுத்து வந்த மகளிர் அணிச் சகோதரிகள் ஆர்வத்தை என்னென்று சொல்வேன்!

வான் முழுதும் நீலவண்ணம் மறைத்துப் பரவிக்கிடந்த வெண்முகில்கள் அனைத்தும் இளைஞர்களாக வடிவெடுத்து சென்னை நகர் வீதிகளில் ஒலிமுழக்கி வந்த - இளைஞர் அணி கண்டபோது மூத்தோர்தம் இதயமெல்லாம் இன்பமழை!

மானமும் வீரமும் மாண்பும் பழுதுபடாத மரபடா தமிழ் மரபு எனும் வரலாற்றை நினைவூட்டும் மறவர் அணியாக நடைபோட்ட மாணவர் அணியினைக் கண்ட மகிழ்ச்சிக்கு எல்லையேது!

தொல்லைகள் தொடர்கதையாயினும், எமது பயணம் இலட்சியப்பயணமே எனச் செயலால் விளக்கி, தொண்டர் அணியினர், பட்டாளத்துச் சிப்பாய் நடைபோட்டதை மறக்கவும் முடியுமோ!

தொகை தொகையாய் வருகின்றோம் பார்; ஆதிக்க சக்திகளின் பகை முடிக்க வருகின்றோம் பார், என்று துந்துபி முழங்கியவாறு தொழிலாளர் அணியினர் வந்த காட்சி பேரணிக்கோர் மாட்சி!

மற்றும் இலக்கிய அணியினர், விவசாய அணியினர், நெசவாளர் அணியினர், வழக்கறிஞர் அணியினர், இணையற்ற அந்தப் பேரணிக்கு எழுச்சி கூட்டினர்! எழில் சேர்த்தனர்!

சமூகநீதிக்கான விதையூன்றப் பெற்ற நடேசனார் காலந்தொட்டு - சரித்திரத்தில் எதையும் மறைக்காத பெருந்தன்மையுடன் - நீதிக்கட்சி, திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் எனும் திராவிடப் பேரியக்கத்தின் தலைவர்கள், தளபதிகள் சமூகநீதிக்காகப் போராடிய நிகழ்ச்சிகளையும், நிகழ்த்திய சாதனைகளையும் - அழகிய சித்திரங்களாக மட்டுமின்றி ஒப்பனை செய்யப்பட்ட பாத்திரங்களின் உருவிலும் தாங்கி வந்த கொள்கை முழக்க வாகனங்கள் சென்னைப் பகுதிக் கழகச் செயல்வீரர்களின் கைவண்ணங்களாக - கருத்துக் கருவூலங்களாகப் பேரணிக்குப் பெருஞ் சிறப்பு வழங்கின!

மாவட்டங்களில் கழக தளகர்த்தர்களான மாவட்டச் செயலாளர்கள், பொறுப்பாளர்கள் - ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளைக்கழக, வட்டக்கழக, பகுதிக்கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் - பம்பாய், அந்தமான், புதுவை, ஆந்திரம், கர்நாடகம், கேரளம் ஆகிய மாநில செயல்வீரர்கள் - பொறுப்பில் எதிலுமில்லாதிருப்பினும் சமூகநீதி காத்திடவும், அதனைக்

காத்திடும் கழகம் காக்கவும் எமக்குப் பொறுப்பு உண்டு எனப் பொங்குமாங்கடலாய் ஆர்ப்பரித்து அணி வகுத்தனரே; அந்தக்காட்சி, கண் கொள்ளாக் காட்சியன்றோ!

கப்பல்களும், தோணிகளும், கட்டுமரங்களும் போகும் கடலுக்கு மேலே உயரத்தில் எழும்பும் ஆயத்தமுடன் அழகுற அமைக்கப்பட்டிருந்த ஆகாய விமான மேடையை ஆக்கித்தந்தவர் ஜே.பி. கிருஷ்ணா என்றாலும்; அந்தக் கருத்தை வழங்கி, மேடை மட்டுமல்ல - கடற்கரைப் பெருவெளி மட்டுமல்ல - மாநகரமே கொடிக் காடாகும் வண்ணம் மாற்றிக் காட்டிப் பல நாட்கள் ஓய்வு உறக்கமின்றி உழைத்தோர் பெயர்களைச் சொல்லவேண்டு மெனினும் - நானும் சென்னை மாநகரில் கழக உறுப்பினர் என்பதால்; சென்னை மாவட்டத்தின் தென்பகுதி, வடபகுதிச் செயலாளர்களான தம்பிகள் சைதை கிட்டு - பலராமன் இருவரின் பெயர்களைச் சொன்னாலே போதும்; அதில் அயராது பணியாற்றியோர் அனைவரும் அடங்குவர்! அந்த இருவரும் இரு கண்ணின் மணிகளாய் திகழ்ந்து சமூகநீதிப் பேரணி மற்றும் பொதுக்கூட்ட மாநாட்டு வெற்றியில் பங்கு பெறுகின்றனர்! நமது பாராட்டைடப் பெறுகின்றனர்!

இத்துணை மகிழ்ச்சியினூடே எனக்கோர் வேதனை; அது வாடிக்கை என் வாழ்க்கையில்! பேரணிக்கென வந்த என்னரும் உடன்பிறப்பு ஈரோடு மஸ்தான் விபத்தில் இறந்துவிட்டதும், ஈரோடு உடன்பிறப்பு பால்ராஜ் நெஞ்சு வலியால் மறைந்து விட்டதுமாகும்!

விபத்து ஏதும் ஏற்படாமலும் - அதனால் உன் போன்ற உடன்பிறப்புகள் ஒருதுளி துயரத்திற்கும் ஆளாகக்கூடாது என்பதற்காகத்தான் - எழுதிய கடிதங்களில் எல்லாம்; பத்திரமாக வந்து பத்திரமாக ஊர்ப் போய்ச்சேரவேண்டுமெனப் பலமுறையும் எச்சரித்திருந்தேன்.

ஆனால்; ஆனந்தக் கண்ணீர் மட்டும் போதாது; துன்பக் கண்ணீரும் அத்துடன் இணையட்டும் என இந்த நிகழ்ச்சிகள்!

நமது இயக்கத்தின் வரலாறே - அவ்வப்பொழுது, துன்ப துயரங்களை - சோதனைகளை சந்திப்பதுதானே!

சோதனைகளை, சாதனைகளாக்கிக் காட்டும் - உன் தூய உள்ளமும், துடிக்கும் தோளும், மங்காத கொள்கைப் பற்றும், மாறாத உறுதியும் தானே; கண்ணீரைத் துடைத்துக் கொண்டு - செந்நீர் சிந்திடவும் நாம் தயார் எனும் தியாக உணர்வுடன் - களம்பல காணவைத்து, தமிழர் சமுதாயம் நலம்பல காண இந்தக் கழகத்தைக் கட்டிக்காத்து வருகின்றன!

அந்தச் சமுதாய நலன்காண, சமூகநீதி பெற, சமுத்திரங்களின் சங்கமத்தை சென்னையில் ஒரு சரித்திரமாகப் படைத்த உடன்பிறப்பே! என்றும் போல் உன் காலடிகளுக்கு என் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

அன்புள்ள,

மு. க.

26-01-1994

2093. இந்தி எழுத்து, தார் பூசிக்கொள்ளட்டும்!

உடன்பிறப்பே,

1939 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 3-ஆம் நாள் தொடங்கி ஐம்பத்தி ஐந்து ஆண்டுக் காலமாக நடைபெற்று வருகிற இந்தி மொழி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டம் இடையிடையே சில களங்களில் வெற்றியினைப் பெற்றுள்ளது என்றாலும் - இன்னமும் முடியாமலே தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு கட்டத்திலும் இந்த மொழிப் போராட்டத்தைக் கண்டித்தவர்கள், கேலி பேசியவர்கள், இழித்துக் கூறியவர்கள் சிலர் உண்டு எனினும்; பின்னர் அவர்களே நம் வழிக்குத் திரும்பி, களம் காணக் கடும் வேகம் காட்டிய வரலாறுகளும் உண்டு!

எடுத்துக்காட்டு - 1938-ல் இந்தி எதிர்ப்பாளர்கள் மீது எரிந்து விழுந்த ராஜாஜி அவர்கள் 1965 மொழிப் புரட்சியின் போது முழுக்க முழுக்க இந்தி ஆதிக்கத்தின் பகைவராகவே காட்சி அளித்தார்.

தாளமுத்து - நடராசன் எனும் தமிழ்க் குலச் சிங்கங்கள் இருவரின் தியாகத்தில் தொடங்கி எண்ணற்றோர் தமது இன்னுயிரை ஈந்தனர், அன்னைத் தமிழ் காத்திடுவதற்காக; எனும் தீரமிகு யுத்தத்தின் முடிவு எப்போது என்பது பற்றிக் கவலை கொள்ளாமல், இந்தி ஆதிக்க எதிர்ப்புக் களத்தில் உண்மைத் தமிழர்கள் உறுதியுடன் அணி வகுத்து நிற்கிறார்கள்.

இந்திய நிலப்பரப்பில் எல்லாப் பகுதிகளிலும் தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்தி விட்டாலும் கூட; தமிழகத்தில் அது எளிதான காரியமல்ல என்பதைப் புரிந்து கொண்டிருக்கிற இந்தி ஆதிக்க வெறியர்கள், வாள் தூக்கி நிமிர்ந்து நேரான வழியில் வராமல்; வளைந்தும் நெளிந்தும் - வசீகரம் காட்டி மயக்கியும் - வாய்ப்பு, வசதி எனப் பகட்டு மொழியுரைத்தும் - தமிழர்களை இரண்டாம் தரக் குடிமக்களாக்கிட ஏராளமான தந்திரங்களில் ஈடுபடுகின்றனர்.

இந்தி பேசாத மாநில மக்கள் விரும்பும் வரையில் ஆங்கிலமும் நீடிக்கும் என்பதை நேருவின் வாக்குறுதியாகப் பெறுவதற்கும் தமிழன் தொடுத்த போர்தான் காரணம்.

இனித் தமிழ் நாட்டுப் பள்ளிக்கூடங்களில் இந்திக்கு இடமில்லை; தமிழ் ஆங்கிலம் எனும் இருமொழித் திட்டமே செயல்படும் என்ற நிலையை முதலமைச்சர் பொறுப்பிலிருந்து அண்ணா அவர்கள் அறிவித்ததும்; தமிழன் அன்று தொடுத்த போரின் பிறிதொரு கட்டம்தான்!

ஆகாஷ்வாணி, வானொலி ஆயிற்று! தூர்தர்ஷன், தொலைக்காட்சி ஆயிற்று! அதற்காக ஆகாஷ்வாணிகளும், தூர்தர்ஷன்களும் அறவே அகன்று போய்விடவில்லை! பெயர் மாற்றங்கள் மட்டுமே தமிழே தவிர - பெரும்பாலான நேரம், இந்தி நிகழ்ச்சிகளுக்கே!

மேலும் ஒரு கொடுமை; சில நேரங்களில் இந்திப் படங்களைத் தமிழ் பேச வைப்பது! அதாவது தமிழைக் குதிரையாக்கி அதன் மீதமர்ந்து இந்திக் கலாச்சாரம் படையெடுப்பு! தமிழருக்கெனப் பல்லாண்டு காலமாக இருக்கின்ற பண்பட்ட கலாச்சாரத்தைப் பாழ்படுத்தவும் - வேற்றுமையில் ஒற்றுமை என்ற நிலைக்கு மாறாக - அனைத்தையும் உருக்கி ஒன்றாக்கி ஒரு மொழிக்காரர்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்து அந்த அடிமைப்படும் கூட்டத்தில், தமிழர் கூட்டத்தையும் இரண்டாம் தர, மூன்றாம் தரக் குடிமக்கள் நிலைக்குத் தாழ்த்தவும் - திட்டமிட்டு நடத்தப்படும் சதிகளை எவ்வளவு நாளைக்குப் பொறுமையுடன் பார்த்துக் கொண்டிருக்க முடியும்!

நேருவின் உறுதி மொழி என்ன? இந்தி பேசாத மாநிலங்கள் விரும்பும் வரையில் என்றுதானே இருக்கிறது! அந்த மாநிலங்களும் விரும்பித் தீரவேண்டிய கட்டாயத்தை உருவாக்கி விடுகிறோம்; பிறகு இந்தியை மட்டும்தானே பொது மொழியாக - ஆட்சி மொழியாக ஏற்றுத் தீரவேண்டும் என்று ஒரு கணிப்பு! அந்தக் கணக்கில்தான் குறுக்கு வழிகளில் தமிழ்க் கழனியில் மேய வருகிறது இந்தி! அந்த வழிகளில்தான் வானொலி, தொலைக்காட்சி, மத்திய அரசு நிறுவனங்கள், அலுவலகங்கள், நவோதயா பள்ளிகள் இன்னபிற!

மிட்டாய் காட்டி, குழந்தையை அருகழைத்துக் கழுத்துச் சங்கிலியைப் பறித்துக் கொள்வது போல் - வேலை வாய்ப்பு கிடைக்க இந்தி படிக்க வேண்டாமா? என்றும்; இந்திக் கார்களுடன் போட்டிபோடத் தமிழர்களும் தயாராக வேண்டாமா; அதற்கு இந்தியில் ஆற்றல் பெற வேண்டாமா? என்றும் கிலுகிலுப்பை ஆட்டுகிறவர்கள் இருக்கிறார்கள்.

முதலில் அவர்கள், இப்போது இந்திய நாடு முழுதும் படித்துவிட்டு வேலையில்லாதிருப்போர் எண்ணிக்கையை எடுத்துப் பார்க்கட்டும் - அவர்களில் இந்தி படித்தோர்தான் பெரும்பான்மையோர் இருப்பர் என்பதைப் புரிந்து கொள்வர்!

"தமிழ் மொழியின் நலம் கெடும் -
தமிழர் உரிமை பறி போகும் -
தமிழ் மக்கள் இரண்டாம் தரக்
குடிமக்கள் ஆக்கப் படுவர் -"

55 ஆண்டுக்கால இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்திற்கான இந்தக் காரணங்களை மேலெழுந்தவாரியாக யாரேனும் மறுத்துரைக்க முடியுமே தவிர; ஆழமாக எண்ணிப் பார்ப்போர் எவரும் புறக்கணிக்க முடியாது!

எனவே; மத்தியிலிருப்போர் தங்களை மெத்தவும் தந்திர வித்தை கற்றோர் என நினைத்துக் கொண்டு - தமிழன், சற்று அயர்ந்த நேரத்தில் நுழைந்து விடலாம் எனத் திட்டமிட்டு - மறைமுகமாக இந்தி ஆதிக்கத்தை இங்கே புகுத்தும் முயற்சியை; எப்போதுமே நாம் விழித்திருந்து விரட்டி அடித்துக் கொண்டே இருக்க வேண்டும்!

இந்தியை மறைமுகமாகத் திணிக்கும் சூழ்ச்சியைத் தமிழகம் திட்டவட்டமாக எதிர்க்கிறது, திடமாக எதிர்க்கிறது என்பதை எடுத்துக் காட்டத்தான் கோவையில் நடைபெற்ற நமது கழக மாநில மாநாட்டில்; எங்கெங்குக் காணினும் இந்தி எழுத்தை அழித்திடுக! எனக் கேட்டுக் கொள்ளப்பட்டது!

அங்கிங்கெனாதபடி எல்லா இடங்களிலும் இந்தி எழுத்துக்கள், தார்பூசிக் கொண்டன!

அவற்றில் மிஞ்சியவை இருப்பின்; புதுக்கோலம் பூண்டவை இருப்பின்; கழக உடன்பிறப்புக்களின் கைவண்ணத்தை அங்கெங்கெல்லாம் காண வேண்டும் என்பதற்காகத் தான், சமுத்திரங்களின் சங்கமமான சமூகநீதிப் பேரணியில் மீண்டும் ஓர் அறிவிப்பு!

அந்த அறிவிப்பைச் செயல்படுத்துவதற்கு; உடன்பிறப்பே, நீ உடனடியாகக் கிளம்பி விட்டாயா? - இல்லையேல்; உதவாதினி ஒரு தாமதம், உடனே எழுக!

அன்புள்ள,

மு. க.

28-01-1994

2094. முதலமைச்சர் - கவர்னர்; மோதல்!

உடன்பிறப்பே,

கவர்னர் முதலமைச்சர் இருவருக்குமிடையே கருத்து வேறுபாடு புகையாகக் கிளம்பி இப்போது பகையாகவே மாறிவிட்டிருக்கிறது. புகைமூட்டம் எழுந்தபோது அதுபற்றி என் கருத்தைப் பத்திரிகையாளர்கள் கேட்ட நேரத்தில் ஜனநாயகத்தின் இதுபோன்ற நிலை ஆரோக்கியமான நிர்வாகத்திற்கு நல்லதல்ல - கேடு பயப்பதாகும் எனக் கூறியிருந்தேன்.

உச்சகட்டமாகவே அந்த மோதல் உருவாகி; அ.தி.மு.க. அமைச்சர்கள்; பொது மேடைகளில் கவர்னரை விமர்சித்துக் கண்டனக் கணைகளையும் - தாக்குதல் பாணங்களையும் சரமாரியாகப் பொழிந்தபோதும்; கவர்னர் தஞ்சையில் எம்.ஜி.ஆர். பிறந்தநாள் விழா நிகழ்ச்சிக்கு ஒப்புதல் அளித்து, பின்னர் அந்த நிகழ்ச்சிக்குச் செல்வரைத ரத்து செய்த போதும் - நிருபர்களின் கேள்விக்கு நான் அளித்த பதில் எல்லாவற்றையும் பொறுமையுடன் பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்பதுதான்!

இரண்டொரு நாட்களுக்கு முன்பு; குடியரசு விழாவையொட்டிய பரபரப்பான செய்திகள் வந்தபோது நிருபர்கள், மீண்டும் கேட்டனர் - 'நீங்கள் முதலமைச்சராக இருந்து கவர்னருக்கும் உங்களுக்குமிடையே இதுபோல ஒரு மோதல் ஏற்பட்டால் என்ன செய்வீர்கள்?' என்பதுதான் நிருபர்களின் கேள்வி!

அதற்கு நான் அளித்த பதில் என்ன தெரியுமா?

'நான் என்ன செய்வேன் என்பது பிறகு இருக்கட்டும். பத்திரிகைக்காரர்களாகிய நீங்கள் என்ன செய்திருப்பீர்கள் என்பதை எண்ணிப் பாருங்கள். என்னையல்லவா கடுமையாக விமர்சித்து எழுதி ஆட்சியைவிட்டே இறக்கியிருப்பீர்கள்.'

இதுதான் நான் அளித்த பதில்! உண்மையும் அதுதானே - இப்போது பத்திரிகைகள் ஒன்றிரண்டைத் தவிர, மற்றவை என்ன

செய்கின்றன. ஒன்று கவர்னரைக் குறை கூறுகின்றன - அல்லது கவர்னரும் முதல்வரும் சமரசத்துக்கு வரவேண்டுமென்று துடியாய்த் துடிக்கின்றன!

இருவரும் நிர்வாக விவகாரங்களில் தோழமையுடன் செயல்பட வேண்டுமென்பதிலோ; செயல்படுவதிலோ நமக்கு எந்தக் கருத்து மாறுபாடுமில்லை. அதனை வரவேற்கும் மனப்பக்குவமும் - மாநில நலனில் அக்கறையும் எப்போதுமே கழகத்திற்கு உண்டு.

கவர்னர் என்ற பதவியே வேண்டாம் என்பது கழகத்தின் கருத்து! மாநில சுயாட்சித் தீர்மானத்தைக் கழக அரசு 1974 ஆம் ஆண்டு சட்டப் பேரவையில் நிறைவேற்றியபோதும்; இந்தக் கருத்து திட்டவட்டமாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது அந்தத் தீர்மானத்தில்!

ஆனால் அந்தப் பதவியிருக்கும் வரையில்; ஆளும் பொறுப்பில் உள்ள கட்சி; அந்தப் பதவியில் இருப்பவருடன் ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருப்பினும் - அவருக்குத் தரவேண்டிய மதிப்பையும் மரியாதையையும் அந்தப் பதவிக்கு தருவதாக எண்ணித் தந்திடத்தான் வேண்டும்.

தி.மு.க. எதிர்க்கட்சியாக இருந்தபோது கவர்னர் உரையை எதிர்த்து வெளிநடப்பு செய்திருக்கிறது. ஆனால் 1967-ல் தி.மு.க. ஆட்சி, அண்ணா அவர்கள் தலைமையில் அமைந்த போது - கவர்னர் பதவிக்கு வழங்க வேண்டிய மரியாதையைத் தொடர்ந்து வழங்கியே வந்திருக்கிறது.

சில நிகழ்ச்சிகளை நினைவுபடுத்த விரும்புகிறேன்..

1967-ல் கழகம் பெரும்பாலான இடங்களில் வெற்றி பெற்று அண்ணா அவர்கள் சட்டசபைக் கட்சி தலைவராகத் தேர்ந்தெடுக் கப்படுகிறார். தன்னைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தகவலை முறைப்படி கவர்னருக்குத் தெரிவிக்க அண்ணா அவர்கள் கவர்னர் மாளிகைக்குப் புறப்படுகிறார். அவருடன் நான், நாவலர், மதி மற்றும் அண்ணாவின் நண்பர் சி.வி. இராசகோபால் ஆகியோர்!

போகும் வழியில் மறைமலை அடிகள் பாலத்துக்கருகே சென்றபோதுதான் திடீரென நினைவு வந்தது; அடடா! கவர்னரை சந்திக்கும்போது ஒரு மரியாதை நிமித்தம் கொடுப்பதற்கு ஒரு எலுமிச்சம்பழம்கூட இல்லையே! என்பது! உடனே அண்ணா, காரை பாலத்தருகே நிறுத்தச் சொல்லி, இராசகோபாலை அழைத்து

பக்கத்தில் கடைகளில் எங்காவது இருந்து ஒரு எலுமிச்சம் பழம் வாங்கி வா! என்றார்.

போனவர் விரைவில் திரும்பவில்லை. பொதுக் கூட்டங்களுக்குக் குறித்த நேரத்தில் போவதைப் பழக்கமாகக் கொண்டிராத அண்ணா அவர்கள்; கவர்னரைச் சந்திக்க குறித்த நேரத்தில் செல்லாவிடில் குறையாகிவிடுமே என்று கவலைப்பட்டார். நல்லவேளை; இராசகோபால் ஒரு காய்ந்து போன எலுமிச்சம்பழத்துடன் வந்து சேர்ந்து விட்டார். அதைக் கொடுக்காவிட்டால் கவர்னர் ஒன்றும் கோபித்துக் கொள்ளப் போவதில்லை; இருந்தாலும் மரியாதை மரபுகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்ற கண்ணியத்தின் காவலரல்லவா அண்ணா; அதனால் அதில் அக்கறையுடன் இருந்தார்.

அப்போது கவர்னராக இருந்தவர் உஜ்ஜல்சிங் - அண்ணாவின் இரண்டு ஆண்டுக்கால ஆட்சிக் காலத்தில் இருந்த அதே நல்லுறவு அண்ணாவின் மறைவுக்குப் பிறகு நான் பொறுப்பேற்ற பின்னரும் அவருக்கும் கழக ஆட்சிக்கும் தொடர்ந்து இருந்தது. எனக்கும் கவர்னர் உஜ்ஜல்சிங் அவர்களுக்குமிடையே கருத்து வேறுபாடுகள் வரவில்லை என்று கூறமுடியாது. அவற்றை நான் அவருடன் அடிக்கடி சந்தித்துப் பேசித் தீர்த்துக் கொண்டிருக்கிறேன்.

தலைமைச் செயலாளர் நியமனம் குறித்த ஒரு கோப்பு, கவர்னர் உஜ்ஜல்சிங் அவர்களுக்கு அனுப்பப்பட்டபோது; ஐந்தாறு பேரைத் தாண்டி திரு. ராயப்பா அவர்களை தலைமைச் செயலாளர் பதவிக்கு உயர்த்துவது குறித்து கவர்னர் மிகுந்த தயக்கம் காட்டினார். அவரது தயக்கத்தைக் கேள்வியுற்றதும், நானே நேரில் சென்று ஒரு மணி நேரத்துக்கு மேலாக விவாதித்து, விளக்கமளித்து, இறுதியாக ராயப்பாவை அரசின் தலைமைச் செயலாளராக நியமிக்கும் எனது கருத்துக்கு அவரிடம் ஒப்புதல் பெற்றேன்.

அதன் விளைவை சில ஆண்டுகளுக்கு பிறகு நான் அனுபவித்த போதுதான் கவர்னர், தயக்கம் காட்டியதில் அவருக்கு இருந்த அரசியல் முதிர்ச்சி எனக்குப் புரிந்தது.

கவர்னர் உஜ்ஜல்சிங்கிற்கும், ஆட்சியிலிருந்த எனக்கும் அமைச்சர்களுக்குமிடையே இருந்த இனிய நட்புறவு; அவர் ஓய்வு பெற்று விடைபெற்றுக் கொண்டபோது அவர் கண்களிலும் எமது கண்களிலும் நீரை அருவியாகப் பெருக்கெடுத்து ஓடச் செய்தது!

அவருக்கு பிறகு கே.கே. ஷா அவர்கள் கவர்னராக வந்தார். முதலமைச்சரின் கருத்தையும் கேட்டு, கவர்னர்களை நியமிப்பது என்ற மரபு சரியாகக் கடைபிடிக்கப்பட்டு; பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் அவரைத் தமிழக கவர்னராக நியமித்தார்.

1976ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் இறுதி வரையில் கவர்னர் கே.கே. ஷா அவர்களுக்கும், முதலமைச்சராக இருந்த எனக்கும் - சில நேரங்களில் சிற்சில பிரச்சினைகளில் வேறுபாடான கருத்து இருந்தாலும்; அனைத்துமே நேருக்கு நேர் பேசிச் சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளப்பட்டன என்பதை எவரும் மறுத்திடார்.

ஆட்சி கலைக்கப்பட்டது மாலை நேரம் என்றால்; அன்று காலையில் கூட காந்தீய வழியில் நடைபெறும் ஆட்சி கருணாநிதியின் ஆட்சி! என்று கூறியவர்தான் கே.கே. ஷா! மறுநாள் அவரை ஒரு திருமண நிகழ்ச்சியில் நான் சந்தித்தபோது கூட, அவர் கையைப்பிடித்து நான் குலுக்கியும் - அவர் கண் கலங்கவுமான ஒரு நிகழ்ச்சி!

1989-ல் கழக ஆட்சியில் அலெக்சாண்டர் அவர்கள் கவர்னராக இருந்தார். அவருக்கும் நமக்கும் ஒத்துவராது என்றே பலரும் எண்ணினர், பேசினர்! ஆனால் அவருடன் கழக ஆட்சியில் நான் எந்த அளவுக்கு நல்லுறவுடன் இருந்தேன் என்பதும்; அவரும் எப்படி நல்லுறவுடன் இருந்தார் என்பதும் - அனைவரும் அறிந்த உண்மையே ஆகும்!

தொடக்கத்தில் ஒரு புகார் என் காதுக்கு வந்தது! நேரடியாக அல்ல! சில அதிகாரிகள் மூலமாக! மாநிலப் போலீஸ் ஒற்றர் ஒருவர் ராஜ்பவனுக்குள் நடமாடியதாகவும் அது குறித்து கவர்னர் அலெக்சாண்டர் அவர்கள் வருத்தப்பட்டதாகவும் அந்தப் புகார்! உடனடியாக நான், அதற்கான நடவடிக்கை மேற்கொண்டது மட்டுமல்ல; அப்படியொரு தவறு நடந்துவிட்டதற்காக கவர்னர் அலெக்சாண்டர் அவர்களிடமே, நேரில் வருத்தமும் தெரிவித்துக் கொண்டேன். முக்கியமான பிரச்சினைகளில் எல்லாம் அவரைக் கலந்து ஆலோசிக்கத் தவறியதே இல்லை. அந்தச் சுமுக உறவு இருந்ததினால்தான் - அவர் கவர்னர் பதவியிலிருந்து விலகியபோதும், விடைபெற்றுச் சென்றபோதும், அந்தப் பிரிவு மிக உருக்கமான நிகழ்ச்சியாகவே அமைந்தது.

அவருக்குப் பிறகு பர்னாலா அவர்கள் கவர்னராகப் பொறுப்பேற்றார். கழக ஆட்சியின் மீது விடுதலைப்புலிகள்

தொடர்பாக நாள்தோறும் எதிர்க்கட்சியினர் புகார்களைக் கூறிக் கொண்டேயிருந்தனர். தி.மு.க. என்றாலே பிறவி எதிரியாகக் கருதிக்கொண்டுள்ள ஏடுகளும் விடுதலைப்புலிகள் பற்றிய செய்திகளை ஒவ்வொரு நாளும் பக்கம் பக்கமாக வெளியிட்டு; அவற்றுக்கு அரசின் சார்பாக சொல்லப்பட்ட மறுப்புகளையெல்லாம் மறைத்தும் திரித்தும் வெளியிட்டுக் கொண்டிருந்தன.

அந்தச் செய்திகள் குறித்து கவர்னர் பர்னாலா அவர்கள், அரசின் தலைமைச் செயலாளரை அழைத்துப் பேசியிருக்கிறார். உள்துறை செயலாளரை அழைத்துப் பேசியிருக்கிறார். காவல்துறை அதிகாரிகளை அழைத்து விவாதித்திருக்கிறார். அவை பற்றியெல்லாம் நான் எந்த மாறுபாடான நிலையும் எடுக்கவில்லையென்பதோடு, நானே கவர்னர் மாளிகைக்குச் சென்று கவர்னர் பர்னாலாவுக்கு விடுதலைப்புலிகள் நடவடிக்கைகள், அரசின் நடவடிக்கைகள் அனைத்தையும் விளக்கியிருக்கிறேன்.

இவ்வளவுக்கும் பிறகு, கவர்னர் பர்னாலா அவர்களே, தமிழகக் கடலோரப் பகுதிகளில் சுற்றுப் பயண திட்டம் வகுத்து அங்கெல்லாம் சென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமும், காவல்துறை அதிகாரிகளிடமும் விடுதலைப்புலிகள் பற்றிய தகவல்களைக் கேட்டறிந்து தெளிவு பெற்றிருக்கிறார். இப்படியெல்லாம் ஒரு கவர்னர் செய்யலாமா என்று ஒரு சிறு முணுமுணுப்பும் கழக அரசிடமிருந்து வெளிப்பட்டதில்லை.

கவர்னருக்கு அடங்கி, ஆமை போல் நடக்க வேண்டுமென்பதற்காகச் சுட்டிக்காட்டப்படும் எடுத்துக்காட்டுகள் அல்ல இவைகள்! கவர்னர் எனும் பதவி; கழகத்தின் கருத்துப்படி நீக்கப்படாமல் இருக்கும் வரையில் - அதற்கேற்ப மாநில சுயாட்சிக் கோரிக்கை வெற்றிபெற்று அதன் நல்விளைவுகள் உருவாகும் வரையில்; இருக்கின்ற பதவிக்கும் - அந்தப் பதவியில் இருப்பவருக்கும் மரியாதை தருவதால் ஆளும் கட்சிக்கு எந்தக் குறைவும் வந்துவிடப் போவதில்லை.

கவர்னர் எடுத்த நிலையொன்று; முதலமைச்சருக்கு உகந்ததாகத் தெரியவில்லை என்றால்; உடனே ராஜ்பவனுக்குச் சென்று கவர்னரிடம் விவாதித்து முடிவு காண்பது சிரமம் இல்லையே!

சென்னைப் பல்கலைக் கழகத்துக்குத் துணைவேந்தர் நியமனத்திற்கு மூன்று பேர் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டன - மூவருமே தகுதியில்லையென்பது கவர்னரின் கணிப்பு! அந்தக் கணிப்பை ஆராய்ந்து பார்த்தால் தவறு ஒன்றும் காண இயலாது.

ஒருவர் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் இப்போதும் துணைவேந்தராக இருக்கிறார். அங்கேயே அவருக்கு இன்னும் ஒன்றரை ஆண்டுக்காலம் பதவிப் பணி பாக்கி இருக்கிறது. அவரை இங்கே சென்னைக்கு மாற்ற வேண்டிய அவசியமில்லை என்று கவர்னர் நினைத்ததில் நியாயம் இருக்கவே செய்கிறது. மற்ற இருவர் மீது கூறப்படும் தகுதியின்மைக்கும் சரியான மறுப்புரைக்க அரசினால் இயலவில்லை. இத்தனைக்கும் மேலாக சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக மதனகோபால் என்ற மிகவும் பிற்படுத்தப்பட்ட ஒரு பேராசிரியரை, கவர்னர் மனத்தில் நினைத்தார் என்ற வதந்தி உண்மையாக இருக்கும் பட்சத்தில்; அந்த நினைப்பு வரவேற்கத்தக்க ஒன்றாகத்தானே இருக்க முடியும்!

பல்கலைக் கழகத் துணை வேந்தர் நியமனத்தில்; இப்போது கவர்னர் சென்னா ரெட்டியார் காலத்தில் மட்டுமல்ல; பீஷ்மநாராயணசிங் காலத்திலும் - குரானா காலத்திலும்கூட கருத்து மாறுபாடுகள் ஏற்பட்டு அவை தீர்க்கப்பட்டுள்ளன.

குறை எப்பக்கமிருப்பினும் - அல்லது யார் கொண்டுள்ள கருத்து சரியாக இருப்பினும் - மாநிலத்தில் பெரும் பொறுப்பில் உள்ள இருவர் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டிய ஒரு பிரச்சினையில்; அமைச்சர்கள் மூலைக்கு மூலை, மேடைக்கு மேடை, அதிலும் ஆட்சிப் பொறுப்பில் பல ஆண்டுக்கால அனுபவமுடைய நாவலர் போன்றவர்கள் உட்பட அ.தி.மு.க.வினர் குழாயடிச் சண்டைபோல இதனை ஆக்கிவிட்டது எந்த வகையிலும் ஏற்கத் தக்கதல்ல! அமைச்சர்களுடன் நிற்காமல்; சபாநாயகர் அவர்களே; அவையிலும் - மக்கள் மன்றத்திலும் கவர்னரைக் கடுமையாக ஒரு பிடிபிடித்தார் என்பது தமிழக சட்டமன்ற வரலாற்றில் இல்லாத புதுமையாகும்.

உடன்பிறப்பே, ஒன்றை நினைவூட்டுகிறேன் - கவர்னர்கள் ராஜ்பவனில் ஆடம்பரமாகத் தங்க வேண்டாம். அந்த பரந்த நிலப்பரப்பு பலபொதுக் காரியங்களுக்குப் பயன்படுத்தப்படலாம்; எனவே கவர்னர் ஒரு சிறிய மாளிகைக்குக் குடியேற

வேண்டும் என்று நான் அறிவித்து, அதன் தொடர்பாக பிரதமர் இந்திராகாந்திக்குக் கடிதம் எழுதினேன்.

வெளிநாட்டு முக்கிய பிரமுகர்கள் வரும் போது, அவர்களை வரவேற்பது போன்ற நிகழ்ச்சிகளுக்கு கவர்னர் மாளிகைகள் பெரிதாக இருக்க வேண்டியுள்ளது; அதனால் உன் கருத்தை வலியுறுத்த வேண்டாம் என்று பிரதமரும், கவர்னரும் கேட்டுக்கொண்டதின் பேரில் அந்த எண்ணத்தைக் கைவிட்டுவிட்டேன். அதில் பிடிவாதம் காட்டவில்லை.

சுதந்திர நாள் ஆகஸ்டு 15 கொடியேற்று விழா கோட்டையில் முதலமைச்சரால் நடத்தப்பட வேண்டும் - கவர்னர், குடியரசு நாள் பேரணி மேடையில் கொடியேற்றட்டும் என்று கருத்தறிவித்து பிரதமர் இந்திராவுக்குக் கடிதம் எழுதி - பிரதமருடனும் கவர்னருடனும் நேரிலும் எடுத்துச்சொல்லி; ஆகஸ்டு 15-ல் கோட்டை முகப்பில் கொடியேற்றும் உரிமையை முதலமைச்சர்களுக்குப் பெற்றுத்தந்தேன்; தகராறு எதுவும் செய்யாமலேயே!

இப்போதுகூட, அமைச்சர்கள், மாவட்டத் தலைநகர்களில் கொடியேற்றலாம் என அறிவிக்கப்பட்டு அவ்வாறே நடந்தது. ஆனால் அதை இப்படி ஒரு மோதல் நிலையிலா அறிவித்திருக்க வேண்டும் என நடுநிலையாளர்கள் எண்ணிப்பார்த்திடத்தான் செய்வர்.

என்ன செய்திருக்கலாம் - சுதந்திர நாளான ஆகஸ்டு 15-ல் முதல்வர் கோட்டையிலும், அமைச்சர்கள் மாவட்டத் தலைநகர்களிலும் தேசியக் கொடியேற்றுவது என்றும் - ஜனவரி 26 குடியரசு நாளன்று கவர்னர், குடியரசுப் பேரணி மேடையிலும், மாவட்டத் தலைநகர்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தேசியக்கொடி ஏற்றுவதென்றும் அறிவித்திருக்கலாம்.

கொள்கை அறிவிப்பாக இருந்தால், அப்படித்தான் திட்டமிட்டு செய்யப்படும்.

இது கோப அறிவிப்பு - அதனால் திடுதிப்பென அறிவிப்பாக அல்லாமல், ஆணையாகக் குதித்துவிட்டது!

அதேபோல பல்கலைக்கழக வேந்தராக முதல்வர்தான் இருக்க வேண்டும் என்ற நிலையை ஒரு முதலமைச்சர்கள் மாநாட்டிலே

எடுத்துரைத்து அதனை நடைமுறைக்கு கொண்டு வருவதில் - நமக்கொன்றும் கொள்கை ரீதியாக மறுப்பு இல்லவே இல்லை!

மத்தியில் குவிந்திருக்கும் அதிகாரங்கள் பரவலாக்கப்படவேண்டும் - என்பதுதானே நமது மாநில சுயாட்சி தத்துவத்தின் அடிப்படை அம்சம்!

ஆனால்; இங்கே மேதகு சென்னாரெட்டி மீதுள்ள சினத்தின் காரணமாக அவரிடமுள்ள பல்கலைக்கழக வேந்தர் பதவியைப் பறிக்க வேண்டும் என்பதையே குறிக்கோளாகக் கொண்டு - இப்படியொரு சட்டம்; அதுவும் பல்வேறு குறைபாடுகளையுடைய சட்டம் - பல்கலைக் கழகங்களுக்குப் பெருமளவு மான்யங்களை இழக்கிற அளவுக்கும் - பல்கலைக்கழகங்களின் சுயாட்சியைப் பறிக்கும் அளவுக்கும் - கொண்டு வரப்பட்டிருப்பது ஆத்திரத்தில் அள்ளித் தெளித்த அவசரக் கோலம் என்பதை; இந்த சட்டத்தை வரவேற்றுள்ள கட்சிகள்கூட சுட்டிக்காட்டியிருப்பதை அலட்சியப்படுத்திவிட முடியுமா?

இந்தச் சண்டை எந்த அளவுக்கு சிறுபிள்ளைத்தனமாகப் போயுள்ளது என்பதற்கு சான்றாக; சட்டமன்ற அலுவலகம் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தந்திடும் நாட்குறிப்பு டைரிகளில் இருந்த கவர்னர் படத்தையே கிழித்து அகற்றிவிடும் அளவுக்கல்லவா போயிருக்கிறது!

இத்தனைக்கும் பிறகு; பெரும்பாலான ஏடுகள், முதலமைச்சருக்கு துணையாக நின்று, கவர்னர் மீது கணையாகப் பாய்கின்றன!

உடன்பிறப்பே; இதேபோன்ற ஒரு சூழ்நிலை நமது கழக ஆட்சி இப்போது நடந்து - உருவாகியிருக்குமேயானால்; எத்தனை திசைகளில் இருந்து ஈட்டிகளும், வேல்களும் நம்மீது பாய்ந்திருக்கும்; எண்ணிப்பார்!

அது ஏன்? இது ஏன்?

ஆழ்ந்து சிந்தித்துப் பார்!

அன்புள்ள,

மு. க.

29-01-1994

2095. விளக்கமளிப்போம்; வேதனை, களைவோம்!

உடன்பிறப்பே,

ஓரிரு வாரங்களுக்கு முன்புதான் சமையல் எரிவாயு விலை 15 ரூபாய் அதிகமாக உயர்த்தப்பட்டு; பிறகு அந்த உயர்வு பத்து ரூபாய் அளவுடன் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. அந்த 10 ரூபாய் உயர்வையே தாங்கிக்கொள்ள முடியாத நடுத்தர மக்கள்; திடீரென சர்க்கரை விலை கிலோவுக்கு 75 காசு உயர்த்தப்பட்டுள்ளதால் இனிமேல் கிலோ ரூ. 8.30க்கு வாங்கியதற்கு மாறாக ஒன்பது ரூபாய் ஐந்து காசு கொடுத்து வாங்க வேண்டும்.

நிதிநிலை அறிக்கை வருவதற்கு முன்பாக விதிக்க வேண்டிய வரிகள், உயர்த்த வேண்டிய விலைகள் - அனைத்தையும் ஒரு வழியாக முடித்துவிட்டால்; நிதிநிலை அறிக்கையில் கடுமையான வரி விதிப்போ, கட்டணம் மற்றும் விலை உயர்வுகளோ இல்லை யென்று பொது மக்கள் சிலரைப் பிடித்து வானொலி, தொலைக்காட்சிகளின் மைக்குகளை அவர்களின் வாயருகே நீட்டி; இது அருமையான பட்ஜெட் என்ற நற்சான்றுகளை நாடு முழுதும் பரப்பிடலாமல்லவா?

1991 - ஆம் ஆண்டு தேர்தல் நேரத்தில் விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவோம்; அதுவும் நூறே நாட்களில் என்று மேடைக்கு மேடை பேசி வாக்குகளைப் பெற்றவர்கள்தான் இன்று மத்தியிலும் நமது மாநிலத்திலும் ஆட்சி நடத்திக் கொண்டிருப்பவர்கள். அவர்கள் தந்த அந்த வாக்குறுதி என்ன ஆயிற்று?

ஒரே மேடையில் காங்கிரசாரும் - அ.தி.மு.க.வினரும் கைகோத்து நின்று; கூடை கூடையாகக் கொட்டிய வாக்குறுதிகளில் விலைவாசியைக் கட்டுப்படுத்துவதும் ஒன்றல்லவா?

1991ல் கிலோ ஆறு ரூபாய் அளவுக்கு இருந்த சர்க்கரை விலை; இன்றைக்கு மூன்றே ஆண்டுகள் இடைவெளியில் ஒன்பது ரூபாய் அளவுக்கு உயர்ந்துவிட்டது. இது மட்டுமா?

1991-ல் மஞ்சள் விலை கிலோ ரூ 13.25 என்று இருந்தது. இப்போது ரூபாய் 40.50 என்று ஆகிவிட்டது.

துவரம் பருப்பு கிலோ விலை 1991-ல் ரூபாய் 14 - இன்றைக்கு ரூபாய் 22.50 என்று விற்கப்படுகிறது. 1991-ல் கிலோ ரூபாய் 8.50-க்கு விற்ற கடலைப் பருப்பு, இன்றைக்கு ரூபாய் 23.75 என உயர்ந்துள்ளது.

1991-ல் ரூபாய் 5.25-க்கு இரண்டாவது ரகம் புளி கிடைத்தது! இன்று ரூபாய் 18 என்றாகியிருக்கிறது!

தேங்காய் எண்ணெய் 1991-ல் நாற்பது ரூபாய்க்கு ஒரு கிலோ வாங்கியது மாறி; இன்றைக்கு அறுபது ரூபாய் என உயர்ந்து நிற்கிறது!

பொன்னிப் புழுங்கல் அரிசி 1991-ஆம் ஆண்டு - ரூபாய் ஐந்தும் ஐம்பது காசும் கொடுத்தால் ஒரு கிலோ கிடைத்தது. ஆனால் இன்றைக்கு பதினான்கு ரூபாய்க்கே கிடைப்பது அரிதாக உள்ளது.

இந்த விலைவாசி உயர்வு ஏழை மக்களையும், நடுத்தர மக்களையும் எந்த அளவு பாதிக்கிறது என்பது பற்றியே கவலைப்படாத ஆட்சிகள், மத்தியிலும், மாநிலத்திலும்!

அரசு அலுவலர் மற்றும் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு பெறுகிறார்களே; அவர்கள் இந்த விலைவாசி உயர்வுகளைச் சமாளிக்கலாம் அல்லவா என்பது சமாதானமாகி விடாது!

ஊதியம் பெறுகிறவர்கள் ஊதிய உயர்வு பெறுகிறவர்கள் - ஆனால் ஊதியமே இல்லாதவர்கள் என்ன கதிக்கு ஆளாவார்கள் என்பதை; கண்ணை மூடிக் கொண்டு கட்டணங்களை உயர்த்துகிற - விலைவாசிகள் உயரக் காரணமாயிருக்கிற - அரசுகள் இரக்கமுள்ள மனத்துடன் சிந்திக்க வேண்டாமா?

ஊதியம் பெற்று உழைக்கிற அலுவலர்கள், தொழிலாளர்கள் கூட; அவர்கள் பெறும் ஊதியத்தினால் வாழ்க்கையை நிம்மதியாக நடத்த முடியாத நெருக்கடியில் தானிருக்கிறார்கள்.

அவர்களும் சரி; அவர்களைவிட எந்த வேலையுமின்றி வேதனையில் உழலும் சாதாரண ஏழை எளிய மக்களும் சரி; இன்றுள்ள அரசுகள் போடும் திட்டங்களால், வகுக்கும் கொள்கைகளால் அடுத்த தலைமுறையினர் நன்றாக வாழ்வார்கள் என்று நம்பி மகிழ்ந்து; தற்காலிகமாகச் செத்துச்சுண்ணாம்பாக வேண்டுவதுதான் அவர்களின் தலைஎழுத்து என ஆகிவிட வேண்டுமா?

அப்படியாவது இன்றைக்கு வகுக்கப்படும் பொருளாதாரக் கொள்கைகள் எதிர்காலத்திற்கு ஒளியூட்டக் கூடியவைகளா?

மேலும் கருக்கிருட்டை உருவாக்கக் கூடியவை என்பதற்கான அறிகுறிகள் இப்போதே தோன்ற ஆரம்பித்துவிட்டனவே!

ரயில் கட்டணத்தை உயர்த்தி - நாலு வரிகளை மக்கள் தலையில் மத்திய அரசு சுமத்தினால்; உடனே நமது மாநில அரசு என் பங்கு என்ன சொத்தையா? எனக்கேட்டு, பஸ் கட்டணத்தை உயர்த்துவதும் - வீட்டுவரி, தொழில் வரி, நில வரி எனப் பல முனைகளில் வரிகளை உயர்த்தி மக்களை வாட்டுவதும் - போட்டாபோட்டியாகி நடுவில் சிக்கிக் கொண்டு சாதாரண மக்கள் தான் நசுங்கி, நலிந்து போகிறார்கள்.

உடன்பிறப்பே, இன்றைய அரசியல் மேடைகளில் எடுத்து விளக்க வேண்டிய எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன - இனம் காக்க, மொழி காக்க, சமூகநீதி காக்க, கழகம் காக்க, உறுதியெடுத்துக் கொண்டு ஓய்வின்றி உழைக்கின்ற உன்போன்ற உடன்பிறப்புகள்; மக்களைக் கசக்கிப் பிழியும் வரிக் கொடுமை, விலைவாசி உயர்வு - இவற்றுக்குக் காரணமான மத்திய மாநில அரசுகளையும் அடையாளம் காட்டிடத் தவறக்கூடாது என்பதற்காகவே இந்தக் கடிதம்! விளக்கமளிக்கவும், வேதனை களையவும் விரைந்திடுக!

அன்புள்ள,

மு. க.

31-01-1994

2096. வைக்கம் விழாவுக்கு வாழ்த்துக் கூறுவோம்!

உடன்பிறப்பே,

இன்று 31.1.94 கேரள மாநிலம் வைக்கத்தில் தந்தை பெரியார் நினைவகமும் பெரியாரின் சிலையும் திறக்கப்படும் விழா நிகழ்ச்சியென அறியும்போது; எவ்வளவு பூரிப்பு பொங்குகிறது தெரியுமா? திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் தளபதி வீரமணி தலைமை தாங்கிடவும் - திறப்புவிழாவினை தமிழக நிதி அமைச்சர் நாவலர் நடத்தி வைக்கவும் - கேரள மாநில, தமிழ் மாநில அமைச்சர்கள் கலந்து கொள்ளவுமான இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க விழா, ஏற்கெனவே ஒருமுறை அறிவிக்கப்பட்டு அந்த விழாவில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவும், கேரள முதலமைச்சர் கருணாகரனும் கலந்து கொள்வதாக விளம்பரம் செய்யப்பட்டு, என்ன காரணத்தாலோ நிறுத்தப்பட்டு விட்டது.

எனினும் இப்போது நடைபெறுவது, பெரிதும் மனமகிழ்ச்சி தருகிறது.

அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் பெரியார் அவர்களின் சிலையொன்றை சென்னையில் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் திறந்து வைத்த நிகழ்ச்சி யொன்றைத் தவிர, அவரே கூட மாவட்டத் தலைநகரங்களில் பெரியார் நினைவுத் தூண்கள் திறப்புவிழா நிகழ்ச்சிகள் பலவற்றுக்கும் அவர் போகாமல் தவிர்த்துக் கொண்டு நாவலர் அவர்களைத்தான் அந்த நிகழ்ச்சிகளுக்கு அனுப்பி வைத்துக் கொண்டிருந்தார். இப்போது வைக்கம் சிலை திறப்பு விழாவுக்கும் இன்றைய முதலமைச்சர் பங்கேற்காமல்; நாவலரை அனுப்பி வைத்துள்ளார் கெட்டிக்காரத்தனமாக!

அ.இ.அ.தி.மு.க. அமைச்சரவையிலேயே தன்னைப் பொறுத்தவரையில் பெரியார் ஊட்டிய பகுத்தறிவுக் கொள்கையில் உறுதியாக இருக்கும் ஒரே ஒருவரான நாவலர் திறப்பு விழா

நடத்துவது இயற்கையாகவே பொருத்தமாக அமைந்துவிட்டது என்ற மனநிறைவு எனக்கு!

தமிழக முதல்வர் கலந்துகொண்டிருந்தால் கேரள முதல்வரும் கலந்து கொண்டிருக்கக் கூடும்!

வரலாற்றுப் புகழ்மிக்கதும் - வைக்கம் வீரர் என்ற விருதினை நமது தந்தை பெரியாருக்கு வழங்கியதுமான அந்த மனித உரிமைப் போராட்டத்தை நினைவு கூர்ந்திடும் இந்நாளில்; நானும் தந்தை பெரியார் பற்றிப் பல கவியரங்குகளில் பாடிய வரிகளை நினைவு கூர்வது என் நெஞ்சுக்கோர் இனிய சுகம் தருவதல்லவா!

“வங்கத்துத் தாகூர் போல தாடியுண்டு
பொங்குற்ற வேங்கை போல்
நிமிர்கின்ற பார்வை உண்டு
செங்குன்றத் தோற்றம் உடலில் உண்டு -
வெண்சங்கொத்த கண்களிலே
விழியிரண்டும் கருவண்டு - அதில்
சாகும்வரை ஒளி உண்டு!
பம்பரமும் ஓய்வுபெறும் சுற்றியபின் - இவரோ
படுகிழமாய்ப் போன பின்னும்
பம்பரமாய்ச் சுற்றி வந்தார்.
எரிமலையாய்ச் சுடுதழலாய் இயற்கைக் கூத்தாய்
எதிர்ப்புகளை நடுங்கவைக்கும் இடி ஒலியாய்
இனஉணர்வுத் தீப்பந்தப் பேரொளியாய்
இழிவுகளைத் தீர்த்துக்கட்டும்; கொடுவாளாய்
இறைவனுக்கே மறுப்புச் சொன்ன இங்கர்சாலாய்
எப்போதும் பேசுகின்ற ஏதென்சு நகர் சாக்ரடீசாய்
ஏன் என்று கேட்பதிலே வைரநெஞ்சு வால்டேராய்
எம் தந்தை பெரியாரும் வந்திட்டார்.

இந்த வரிகளை நான் என் கவிதைப் புத்தகத்தைப் புரட்டி அடிக்கடி படித்துச் சுவைப்பது உண்டு!

பெரியாரின் போராட்ட வாழ்க்கையில்; வைக்கம் களம் குறித்து என் நண்பர் மறைந்த கவிஞர் கருணானந்தம் அவர்கள் தந்தை பெரியார் என்ற தலைப்பில் அவர் எழுதியுள்ள பெரிய நூலில் படம்

பிடித்துக்காட்டியுள்ளதை; இந்தக் கடிதத்தில் எழுத்து மாறாமல் அப்படியே தந்துள்ளேன்.

கவிஞர் கருணானந்தம் எழுதுவதாவது :-

காந்தியடிகளின் உயிர்மூச்சாய் விளங்கிய தீண்டாமை ஒழிப்பின் ஒரு கட்டமாக, தாழ்த்தப்பட்டோர் ஆலயப் பிரவேசம் எனும் திட்டம் தீட்டப்பட்டிருந்தது. தீண்டாமை ஒழிப்பிலும் தாமே ஆழ்ந்து மூழ்கி, எதிர் நீச்சலிட்டு, எதிர்த்துப் போராடி, முதல் வெற்றி காணும் முழு வாய்ப்பும் ஈ.வெ. ராமசாமிக்கே கிட்டிற்று. யதேச்சையாக இந்த வாய்ப்பு இவரை நாடி வந்தது; இவர் தேடிப் போகவில்லை.

1924-ஆம் ஆண்டு ஈ.வெ.ரா. குளித்தலையில் ஒரு காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டு, அங்கிருந்தவாறே, மதுரை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளப் போய்விட்டார்.

அங்கே வயிற்று நோய் அதிகம் துன்புறுத்தவே, இடையே தடைபட்டு, ஈரோட்டுக்கு மீண்டார். இங்கு வந்து படுக்கையில் ஓய்வாக இருந்தபோதே, அவருக்கு ஓர் இரகசியக் கடிதம் வந்தது. அதைக் கண்டதும், நாகம்மையாரிடம் தமக்கு உடல் நலிவு குணமடைந்து விட்டதாகப் பொய்யுரைத்து, அதாவது புரை தீர்ந்த நன்மை பயக்குமானால் பொய்யும் மெய்யோடு சேர்த்துக் கொள்ளப்படும் என்ற குறள் மொழிப்படித் தமது பெட்டி படுக்கை துணிமணி சகிதம் புறப்பட்டுப் போய்விட்டார்.

என்ன அந்த மர்மக் கடிதம்? எங்கே போனார்? கேரள ராஜ்யத்திலுள்ள திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் வைக்கம் என்று ஒரு பேரூர். அங்கே கோவிலுக்கு அருகிலுள்ள தெரு ஒன்றில் தாழ்த்தப்பட்டோர் நடக்கக் கூடாது என நீண்ட நாளாகத் தடையிருந்து வந்தது. அதாவது ஆதிய சமாஜத் தீயர்களையும், மதம் மாறிய கிறிஸ்துவப் புலையர்களையும், தெருவில் நடக்க விடவில்லை! மக்களின் மான உணர்ச்சிக்கு விடப்பட்ட இந்த அறைகூவலை எதிர்த்துப் போராடக் கேரளக் காங்கிரஸ் தலைவர்கள் முடிவெடுத்தனர்.

வைக்கம் நகரில் தடை மீறும் போராட்டம் துவங்கியது. நாளுக்கு ஒருவராய்த் தலைவர்கள் அரசினரால் கைது செய்யப்பட்டு வந்தனர். 19-ஆம் நாள் ஆனதும் மேலும் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வரத் தலைவர்கள் இல்லை. சிறையிலிருந்த ஜார்ஜ் ஜோசஃப், கேசவமேனன் ஆகிய தலைவர்கள் ஆழ்ந்து யோசித்து, இனி இந்தக் கிளர்ச்சியைத் தொடர்ந்து நடத்தி வெற்றி தேடித்தரத்தக்க தலைவர் ஈரோட்டு இராமசாமி ஒருவர்தாம் எனத் தேர்ந்து, அன்னாருக்குச் சிறையிலிருந்தவாறே, அபாயம் என்ற அபயக் கடிதம் ஒன்றினை அனுப்பி அழைத்தனர். கேரளத்தாரின் மானம் தங்கள் கையில்தான் உள்ளது என அகமுருக எழுதியிருந்தனர். இது போதாதா ஈ.வெ. ராமசாமிக்கு?

மணவிழா மடல் கிடைக்கப் பெற்றாற் போல் மகிழ்வு பூண்டவராய் மறுநாளே படகில் ஏறி, வைக்கத்தில் வந்து குதித்தார். கிளர்ச்சியில் ஈ.வெ. ராமசாமி ஈடுபடப் போகிறார் என்ற செய்தி திருவாங்கூர் மன்னரின் செவிகளை எட்டியதும், தமது உயர் அதிகாரிகளை அனுப்பி மன்னர் சில ஆணைகளை நிறைவேற்றச் சொன்னார். என்ன அவை? மன்னர் டெல்லிக்குச் செல்லும்போதெல்லாம் வழியில் தமது பரிவாரங்களுடன் ஈரோட்டில் இறங்குவார். அரச வாழ்வு நடத்தி வந்த இராமசாமியாரின் ரயில்வே ஸ்டேஷன் பங்களாவில் அரசரும், அடுத்துள்ள நாயக்கர் சத்திரத்தில் ஆள் அம்புகளும் தங்குவர்; அறுசுவை விருந்து அருந்துவர்; அன்பான உபச்சாரத்தை ஏற்பர். இது அநேகமுறை நடந்து வந்த வாடிக்கை. இதற்கெல்லாம் பதிலாகத் தாம் எப்போதும் இராமசாமியார்க்கு உபசரிப்புகள் செய்ய முடியுமோ என ஏங்கியிருந்தார் மன்னர். வந்திருப்பது கிளர்ச்சிக்குத் தலைமை ஏற்கத்தான் என்றாலும் தமது அரச மரியாதைகளையும் ஏற்கத்தான் வேண்டும் எனத் திருவாங்கூர் மன்னர் வேண்டியிருந்தார். வேண்டாமென மறுத்து மன்னிப்பு வேண்டினார் ஈ.வெ.ரா. அரசப் பிரதி நிதிகள் எவ்வளவோ எடுத்து மொழிந்தும் ஈ.வெ. ரா. இணங்கவில்லை. வணங்கி வாழ்த்தித் திருப்பி

அனுப்பி விட்டார். கேரளத்து வைக்கம் வாழ் மக்களுக்கு இராமசாமியாரின் மகத்துவம் புரிய வந்தது.

ஈ.வெ.ரா. தலைமையில் மீண்டும் புத்துயிர் பெற்றது தீண்டாமை ஒழிப்புப்போர். பல்லாயிரக்கணக்கில் மக்கள் திரண்டு வேடிக்கை பார்த்தனர், வைக்கம் நகரத்திலே. போராட்டத்தில் குதிக்கவும் அனுமதி கேட்டனர். ஈ.வெ. ராமசாமி தம் வழக்கம்போல் - மறக்குலப் பண்டைத் தமிழ் மன்னர் மரபுபோல் - தாமே தலைமை பூண்டு, முதல் தளபதியாய்க் களத்தில் இறங்கிக் கைதாயினார். அடுத்து, கோவை அய்யாமுத்து, மாயூரம் இராமநாதன், அன்னை நாகம்மையார், தங்கை கண்ணம்மாள் தலைமை தொடர்ந்தது. ஒரு மாதத் தண்டனை பெற்று விடுதலையான ஈ.வெ. ராமசாமிக்குத் திருவாங்கூரிலிருந்து நாடு கடத்தல் உத்தரவு வழங்கப்பட்டது. அதையும்மீறி, ஆறுமாதக் கடுங்காவல் தண்டனை ஏற்றார். திருவனந்தபுரம், அருவிக்குத்தி என்ற தீவுச் சிறையில் அடைக்கப்பட்டார். அருவிக்குத்தி தீவுக்குப் படகில் செல்லும்போது புயலால் படகு வேறு பக்கம் ஒதுங்கியது. ஈ.வெ.ரா. தாமே முனைந்து, படகில் வந்த காவலர்க்கும் பாதுகாப்புத் தந்து, உதவி பெற்றுத் தாமே சிறைக்குள்ளும் சேர்ந்தார். அன்னை நாகம்மையார் முன்னிலும் மேலோங்கிய உணர்வுடன்; மும்முரமாய்த் திருவாங்கூர் முற்றிலும் சுற்றுப் பயணம் செய்து, நாடு தழுவிய கிளர்ச்சியை உருவாக்கினார். காந்தியடிகளே நேரில் வந்து பெரியாரைச் சந்தித்துத் திருவாங்கூர் ராணியின் நல்ல முடிவு பற்றிக் கூறி அவரை இசையச் செய்தார். அதன் பிறகுதான் அரசு இறுதியாகப் பணிந்தது! தாழ்த்தப்பட்ட மக்கள், தெருவில் நடக்கும் உரிமை பெற்றனர். 1925 நவம்பர் 29-ல் வெற்றி விழாக்கூட்டத்தில் ஈ.வெ.ரா. கலந்து கொண்டார். வைக்கம் வீரர் என்ற சிறப்புப்பட்டம் சூட்டி இராமசாமியை இந்திய மக்கள் கொண்டாடினர். வைக்கம் வெற்றியை அடுத்துத்தான் சுசீந்திரத்தில் அரிசனங்கள் ஆலயப் பிரவேசக்கிளர்ச்சி என ஒன்று உருவாக்கப்பட்டு, அதன் பின்விளைவாய் ஆலயங்கள் அனைவர்க்கும் திறந்து

விடப்பட்ட சூழ்நிலை பிறந்தது 1926-ல். சுசீந்திரம் சத்தியாக்கிரகத்தை ஆதரித்துக் குடி அரசு இதழில் 31.1.26-ல் ஈ.வெ.ரா. தலையங்கம் எழுதினார்.

உடன்பிறப்பே; வைக்கம் போராட்டத்தையொட்டி சுசீந்திரம் சத்தியாக்கிரகத்தை ஆதரித்த குடி அரசு இதழில் பெரியார் தலையங்கம் எழுதிய நாளும் - ஜனவரி 31 - வைக்கத்தில் அந்தத் தீண்டாமை ஒழிப்பு நாயகரின் நினைவகமும், சிலையும் திறக்கப்படும் நாளும் ஜனவரி 31 - என்னே பொருத்தமாக அமைந்துள்ளது!

அதுமட்டுமா; இதிலே எனக்கோர் சுயநலம்? நான் பிறந்த 1924 ஆம் ஆண்டுதான்; பெரியாரும் வைக்கம் போராட்டத்திற்குப் புறப்பட்டிருக்கிறார்! அல்ல! அல்ல! பெரியார் வைக்கம் போரில் குதித்த 1924 ஆம் ஆண்டுதான்; அவரின் தொண்டனாகும் பேறு பெறுவதற்காகவே, நான் பிறந்திருக்கிறேன்! வைக்கம் வீரர் பெரியார் வாழ்க! அவர் ஊட்டிய இனமான உணர்வு வாழ்க! அவர் உணர்த்திய தன்மானக் கொள்கை உயர்க! என முழங்கி; வைக்கம் விழாவுக்கு வாழ்த்துக் கூறுவோம்!

அன்புள்ள,

மு. க.

01-02-1994

2097. நிதிசால சுகமா? சந்நிதி சேவ சுகமா?

உடன்பிறப்பே,

அய்யாறு என்றும் திருஅய்யாறு என்றும் திருவையாறு என்றும் அழைக்கப்படும் திருத்தலமொன்று தஞ்சைத் தரணியில் உண்டு. காவேரி, கொள்ளிடம், வெட்டாறு, வெண்ணாறு, குடமுருட்டி எனும் ஐந்து ஆறுகளுக்கு, நடுவே அமைந்துள்ள இடமென்பதால் அய்யாறு எனப் பெயர் தொடங்கி, திருவையாறு என்றாயிற்று என்பார்கள். அவ்வூரைச் சுற்றியுள்ள ஏழு ஆலயங்களில் ஆண்டுதோறும் தொகுப்பாக ஒரு திருவிழா நடைபெறும்; சப்தஸ்தானம் திருவிழா என்று அதற்குப் பெயர். உற்சவ மூர்த்திகளை பல்லக்குகளில் வைத்து ஊர் ஊராக ஊர்வலம் விடுவர். இரவு முழுதும் ஆற்றின் வெண் மணல் பரப்பில் பெரியோர், இளையோர், மகளிர், மழலையர் கூட்டமாய்க் கூடி மகிழ்ச்சியுடன் பொழுது போக்குவர். இருளைப் பகலாக்கும் அளவுக்கு; அதுவும் வண்ண வண்ணப் பகலாக ஆக்கும் அளவுக்கு வாணவேடிக்கைகள் நடைபெறும் காட்சி கண்ணைக் கவரும் காட்சியாக இருக்கும்.

சின்னஞ்சிறு பிள்ளையாக நான் இருந்த காலத்தில் என் தந்தையின் கையைப் பிடித்துக் கொண்டு, அந்தத் திருவிழாவுக்குச் சென்ற நினைவும் - ஆற்றின் மணல்வெளியில் விழாக் கண்ட நினைவும் - ஆகாயத்தில் நடைபெற்ற வாணவேடிக்கைகளைப் பார்த்த நினைவும் இன்னும் என் நெஞ்சை விட்டகலவில்லை.

1949-ல் அண்ணா அவர்கள் தி.மு. கழகம் தொடங்கிய சில மாதங்களுக்குள்; அப்போது கவர்னர் ஜெனரலாக இருந்த ராஜாஜிக்கு; அவர் திருவையாறு செல்லும் வழியில் கறுப்புக் கொடி பிடிக்க முடிவு செய்தபோது குடந்தைப் பெரியவர் கே.கே. நீலமேகம் - தன்மானச் சுடர் நண்பர் மன்னை - கரந்தை நண்பர் சண்முக வடிவேலு - என்.எஸ். இளங்கோ - ஆகியோர் முன்னிலையில்

அந்தப் போராட்டம்; அதை வெற்றிகரமாக நடத்திட தஞ்சைத் தரணியில் முப்பது நாட்கள் விடிய விடியப் பிரச்சாரக் கூட்டங்களில் கலந்து கொண்டேன். இறுதியாக திருவையாறு செல்லும் ராஜாஜிக்குக் கறுப்புக் கொடி காட்ட தஞ்சைக்கு வரும்போது போலீசாரால் சூழப்பட்டேன்.

தந்திரமாக அவர்களிடமிருந்து விடுபட்டு; இரவு முழுவதும் கரந்தை சண்முக வடிவேலு இல்லத்தில் ஒளிந்திருந்து - மறுநாள் காடுமேடுகள் கடந்து நடந்து; கறுப்புக் கொடி காட்டும் இடத்திற்கு வந்து சேர்ந்தேன். எனவே திருவையாறு என்ற அந்த ஊரின் பெயர் - என் பொது வாழ்வில் ஒரு களம் கண்ட ஊரின் பெயராகும்; என் உள்ளத்தில் நிலைத்து விட்டதாகும்.

என் பள்ளித் தோழனாக இருந்த திருவாரூர் நமசிவாயம் - அறிஞர் அண்ணாவின் ஆருயிர் நண்பரும், புரட்சிக் கவிஞருக்கு பொற்கிழி வழங்கிய பெருவிழாவை முன்னின்று நடத்தியவரும், குயில் இதழின் பொறுப்பாளரும், அண்ணாவை ஆசிரியராகக் கொண்டு வெளி வந்த மாலைமணி நாள் இதழ் தொடங்கிட நண்பர் டி.எம். பார்த்தசாரதியுடன் இணைந்து பணியாற்றியவரும், திருவாரூரில் என் போன்றோரை ஆளாக்கியவர்களில் ஒருவருமான டி.என். இராமன் அவர்களின் மருமகன் - அந்த நமசிவாயத்தின் இசைப் புலமையைப் புகழாதார் இல்லை!

1969-ல் கழகம் ஆட்சியில் இருந்தபோது; நமசிவாயத்தைத் திருவையாறு இசைக் கல்லூரி இயக்குநராக இருக்குமாறு கேட்டுக் கொண்டேன். திறம்படப் பணியாற்றினார். திடீரென ஒரு நாள் அவர் மாரடைப்பால் காலமானார். இன்றைக்கும் அந்த இசைவாணனின் கல்லறை திருவையாற்றில் இருக்கிறது.

திருவையாறு குறித்து இன்னொரு செய்தியைச் சொல்லியாக வேண்டும். 1944-45 களில் ஈரோடு குடியரசு அலுவலகத்தில் பெரியாரின் தொண்டனாகவும், குடியரசு துணையாசிரியராகவும் நான் பணியாற்றியபோது திருவையாற்றில் ஒரு நிகழ்ச்சி - தியாகய்யர் உற்சவத்தில் பாடிய இசையரசு தண்டபாணி தேசிகர் தமிழில் பாடிவிட்டார் என்பதற்காக; அடுத்துப் பாட வந்த ஒரு இசைவாணர் அக்ரகாரவாசி - தமிழ் பாடியதால் மேடை தீட்டாகி விட்டதென்று கூறி; மேடையைக் கழுவச் செய்து - பின்னர் அதில் அமர்ந்து பாடினார் என்பதுதான் அந்தச் செய்தி!

ஒவ்வொரு நாளும் ஈரோட்டில் அதிகாலை நேரத்தில் நானும், தவமணிராசனும், கருணானந்தமும், ஏ.பி. சனார்த்தனமும் பெரியார் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்து அவர் அறிவுரை கேட்டு - அவரிடும் பணிகளை மேற்கொள்வது வாடிக்கை! அப்போது பெரியார், திருவையாறு செய்தியை எடுத்துக்காட்டி - என்னிடம் சொன்னார்; இதைப்பற்றி குடியரசில் ஒரு துணைத் தலையங்கம் எழுது என்று!

அய்யா சொன்னதை ஏற்று; அந்த வாரக் குடியரசில் தீட்டாயிடுத்து எனத் தலைப்பிட்டு திருவையாற்றில் தமிழுக்கு நேர்ந்த அவமானத்தைக் கண்டித்துத் துணைத் தலையங்கம் எழுதினேன். அதைப் படித்துப் பார்த்துப் பெரியார் பெரிதும் மகிழ்ந்து பாராட்டித் தட்டிக் கொடுத்தார்.

என்ன இது; திருவையாறு என்று தொடங்கி ஏதேதோ எழுதிக்கொண்டு போகிறாய் எனக் கேட்கிறாயா, உடன்பிறப்பே!

ஒன்றுமில்லை, ஒரு சின்ன விஷயம்தான் சொல்ல வந்தேன் - பாழாய்ப்போன நினைவாற்றல்; ஸ்தலபுராணம், சுயபுராணம் என்றெல்லாம் சுழல ஆரம்பித்துவிட்டது. அந்தத் திருவையாற்றில் இப்போது ஆண்டுதோறும் தியாகய்யர் உற்சவம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தெலுங்கு கீர்த்தனைகளை சங்கீத ஞானம் பெருக்கெடுத்திடவும் - பக்திப் பெரு வெள்ளம் உடைப்பெடுத்திடவும் - இயற்றி, இசைத்துப் புகழ்மணக்க வாழ்ந்தவர் தியாகய்யர்.

முத்துத்தாண்டவர், அருணாசலக்கவிராயர், மாயூரம் வேதநாயகம் போன்ற தமிழிசை தந்த சங்கீத விற்பன்னர்களை மறந்துவிட்ட தமிழகத்தை நினைந்து நாம் உருகினாலும் கூட; அதற்காக தியாகய்யரின் இசைப்புலமையை மறுப்போரல்லர்! அவரை இசைவாணராக மட்டும் படம் பிடித்துக்காட்டாமல்; தெய்வீக சக்திவாய்ந்த மகானாகவும் சித்தரித்து - ஆண்டுதோறும் இசைவிழா நடைபெறும் அந்த இடத்தையே ஒரு புனிதமான இடமாகவும் மக்கள் மனத்தில் பதிய விட்டிருக்கிறார்கள்.

இசைவாணர்கள் பலரும் வலியச் சென்று பாடும் இடம் - பக்திப் பிரவாகம் செறிந்த இடம் - எல்லாம் சரி; அந்த இடத்தில் அதன் புனிதம் கெட ஒரு காரணம் இப்போது நடந்து விட்டதாம். என்ன அது? தியாகய்யர் ஆராதனை விழாவில் இசைவாணர்களுக்கு

மத்தியில் அமர்ந்து கலைத்துறையின் கலைச்செல்வி ஒருவர் பாடுவது போல படங்கள், ஏடுகளில் வெளி வந்தன. அந்த நடிகை தனது பிரார்த்தனை செலுத்த அங்கு சென்றிருக்கிறார் என்றே அனைவரும் எண்ணிடுவர். ஆனால் அந்த நடிகையின் மேல் எந்தக் குற்றமும் இல்லை. அவருக்கே அந்த இடத்தின் மகிமை பற்றி தெரிவிக்காமல், அங்கே படப்பிடிப்பு நடத்துவது தவறில்லை என்று கூறி; அவரை வைத்து திரைப்படமொன்றின் படப்பிடிப்பை முடித்துவிட்டார்கள்.

பக்திப்பரவசத்தில் கண்களை மூடிக்கொண்டு தியாகய்யர்வாளின் தெய்வீகக் கீர்த்தனைகளைப் பாடிக்கொண்டிருந்த யாருக்கும்; இப்படியொரு படிப்பிடிப்பு ஷூட்டிங் அங்கே நடப்பது தெரியாமலே போய்விட்டது! உடன்பிறப்பே, இன்றைக்கு பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது திருவையாறு குறித்து! இதோ அந்தச் செய்தி :-

> திருவையாற்றில் நடந்த தியாகராஜர் ஆராதனை விழாவில் திரைப்பட நடிகையொருவர் கலந்து கொண்டு அவர் சம்பந்தப்பட்ட படிப்பிடிப்பு முன் அனுமதியின்றி நடத்தப்பட்டுள்ளதைக் கண்டு தியாகப்பிரம்ம மகோத்சவ சபையின் பொதுக்குழு வருத்தம் தெரிவிக்கிறது.
>
> அதையொட்டி, அந்தப் படத்தின் தயாரிப்பாளரும் தியாகப்பிரம்ம மகோத்சவ சபையின் செயலாளருமான குன்னக்குடி வைத்தியநாதன்; இனி இப்படி நடைபெறாது எனக் கூறி வருத்தம் தெரிவித்து; திரைப்படத்தின் லாபத்தில் 20 சதவீதம் சபைக்கு அளிப்பதாக உறுதி கூறினார்.

இதுவே அந்தச் செய்தி! சபையின் செயலாளரே, படத்தின் தயாரிப்பாளர் - அவரே, அனுமதியின்றி படப்பிடிப்பு நடத்தினார். வலுவில் வந்து தியாகப்பிரம்ம விழாவில் பாடியோர் அனைவரும் படப்பிடிப்புக்குத் துணை நடிகர்களாக ஆனார்கள்; அவர்களை அறியாமலே!

மகோத்சவ சபையின் பொதுக்குழு அச்செயலைக் கண்டித்தது - புனிதம் கெட்டு விட்டது என வருத்தம் தெரிவித்தது!

இருபது சதவீதம்; படத்தில் வரும் லாபத்தில் பங்கு தருகிறேன் என்றவுடன் மகோத்சவ சபை - புனிதத்தைத் தூக்கி உடைப்பிலே

போட்டு விட்டு; அனுமதியின்றி அங்கே ஷூட்டிங் நடத்தியவர் அந்தச்சபையின் செயலாளர் என்பதால் அவாளுக்குள் அட்ஜஸ்ட் செய்துகொண்டு விட்டார்கள்!

எடுத்த காட்சிகளை வெளியிடாமல் வெட்டி எறிந்து விடுகிறேன் என்று கூறாமல்; குன்னக்குடியார், கொட்டித் தருகிறேன் லாபத்தில் பங்கு என்றதும் புனிதம் எல்லாம் புஸ்வாணம் ஆகிவிட்டது பார்த்தாயா!

பாவம்; தியாகய்யர்வாள்; நிதி சால சுகமா ராமு நி-சந்நிதி சேவ சுகமா என்ற கீர்த்தனை அவரது சிலையின் மீது ஒலித்துக்கொண்டிருக்கும் - அதையும் படாமாக்கிக் காட்டலாம் - அதற்கும் ஒரு இருபது பர்சண்ட்!

அன்புள்ள,

மு. க.

05-02-1994

பின்குறிப்பு :- ஏராளமாக செல்வம் சேர்ப்பது சுகமா? அல்லது உன் சந்நிதியில் சேவை செய்வது சுகமா? - என்று தியாகய்யர் - நிதிசால சுகமா - என்ற இந்தப் பாடலின் மூலம் இறைவனிடம் கேட்கிறார்.

2098. பறவைகளாய் - பாய்ந்தோடும் மான் கூட்டமாய்!

உடன்பிறப்பே,

செயற்குழுத் தீர்மானங்கள் உன் கைக்குக் கிடைத்திருக்கும். கடமையாற்றக் காத்திருக்கும் கழகக் கண்மணி ஆயிற்றே நீ; அதனால் இத்திங்கள் 17 ஆம் நாள் ஆற்றிட வேண்டிய பணிக்கும் இத்திங்கள் 28 ஆம் நாள் ஈடுபட வேண்டிய அறப்போராட்டத்திற்கும் தயாராகிடத் தொடங்கியிருப்பாய் இந்நேரம் என்பதை நானறியாதவனா என்ன!

ஏழை எளியோரும் நடுத்தர மக்களும் இளித்தவாயர்கள் - ஏன், எதற்காக என்று கேட்க முடியாத வகையில் ஊமைகள் - எனவே அவர்களை வாட்டி வதைத்து, கசக்கிப் பிழிந்து; ஏற்கெனவே கொழுத்துக் கொண்டிருக்கும் கோமான்களுக்கும் சீமான்களுக்கும் சந்தனம் பூசி விடலாம் என்று கருதிச் செயல்படும் அரசுகள் - ஆம், மத்தியிலும் மாநிலத்திலும் ஆளும் பொறுப்பை ஆயிரம் பொய்யுரைகளை வாக்குறுதிகளாக வழங்கி மக்களை ஏமாற்றிய அரசுகள் - இன்று அவர்கள் தலை நொறுங்க, முதுகெலும்பு முறிய விலைகளை உயர்த்தியும் - கட்டணங்களை ஏற்றியும் தள்ளாடித் தடுமாறித் தலைகுப்புற விழச்செய்திருக்கின்ற கொடுமையைக் களையத்தான் கொடியேந்திப் புறப்படுகிறது நமது கழகப் பட்டாளம் பிப்ரவரி 17 ஆம் நாளன்று!

செயற்குழு தீர்மானத்தின்படி சிற்றூர், பேரூர், பட்டி தொட்டிகள் முதல் பட்டினங்கள் வரையிலே - ஊருக்கு ஊர் - வட்டத்துக்கு வட்டம் - பகுதிக்குப் பகுதி - ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் சைக்கிள் பயணங்களும் பயணங்களையொட்டி ஆங்காங்கு விலைவாசி உயர்வு,

கட்டண உயர்வு, வரி உயர்வுகளைக் கண்டித்துப் பிரச்சாரங்களும் நடைபெற வேண்டும். நூறு பேர் மட்டுமே உள்ள ஊரானாலும் பகுதியானாலும் அங்கெல்லாம் கழகக் கொடி பறக்க, கையில் விலைவாசி உயர்வு - வரி உயர்வு பற்றிய விளக்கமளிக்கும் துண்டறிக்கைகளுடன் ஒலி பெருக்கிகளுடன் கழகத்தின் பல் துறையைச் சார்ந்த எல்லா அணியினரும் சென்றிட வேண்டும். அந்தந்த அணிகளின் தலைமைக் கழகச் செயலாளர்கள் அதற்கான அறிக்கைகளை வெளியிட்டும் - அந்தந்த அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கழகத்தின் மாவட்டச் செயலாளர்கள் மற்றும் மாவட்டப் பொறுப்பாளர்களுடன் கலந்து பேசிப் பணிகளை முறைப்படுத்திக் கொண்டும் - கட்டுப்பாடு குலையாமல் கடமையாற்றிட வேண்டும்.

மகளிர் அணியின் தலைமைக் கழகச் செயலாளர் திருமதி சற்குணம்; மகளிர் அணியினர் தனியாக ஒருநாள் இந்த விலைவாசிக் கொடுமையைக் கண்டித்து உண்ணா நோன்பு மேற்கொள்ளவேண்டுமெனத் தலைமைக் கழகத்திடம் ஒப்புதல் பெற்றுள்ளார். எந்த நாளில், எந்தெந்த இடங்களில் மகளிர் உண்ணாநோன்பு அடையாள அறப்போர் நடத்துவது என்பது குறித்துத் திருமதி சற்குணம் அவர்கள் தெரிவிப்பார். அதற்கேற்ப ஒவ்வொரு மாவட்ட மகளிர் அணி அமைப்புகளும் அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் அல்லது மாவட்டப் பொறுப்பாளர்களுடன் கலந்து பேசி; மாவட்டக் கழகம் மற்றும் ஒன்றிய நகரக் கழக அமைப்புகளின் ஒத்துழைப்புடன் விலைவாசி உயர்வுக்காக; மத்திய மாநில அரசுகளைக் கண்டிக்கும் உண்ணாநோன்பு அறப்போரினை வெற்றிகரமாக நடத்திட வேண்டுகிறேன்.

உடன்பிறப்பே; மகளிர் அணியினர், தமது கடமையைச் செய்யட்டும் - நீயும் உன் போன்ற உடன்பிறப்புகளும் 17-ந் தேதியன்று சிற்றூர் முதல் தலைநகர் சென்னை வரையிலே; காணுமிடமெங்கும் கழகக்கொடி பறக்கும் சைக்கிள்களுடன் பேரணிப்பயணம் - ஊர்வலப் பிரச்சாரம் - ஊருக்கு ஊர் தெருமுனைகளில் விலைவாசி மற்றும் வரிக்கொடுமை விளக்கம்; என்ற வகையில் பம்பரமெனச் சுழன்று கொண்டிருக்க வேண்டும்

- மன்னிக்கவும், பம்பரம் ஒரே இடத்தில் தானே சுழலும்! நீ பறவையாய் வட்டமடிக்க வேண்டும் - பாய்ந்தோடும் மான்களின் கூட்டமாய் - திக்கு திசையனைத்தும் சென்றிட வேண்டும்!

அன்று நீ நடத்தும் ஆர்ப்பாட்ட அறப்போருக்குப் பிறகு மாவட்டக் கழகச் செயலாளர்களைக் கலந்து கொண்டு - மறியல் அறப்போருக்கான தேதி குறிக்கப்படுமென அறிவித்துள்ளேன் தலைமைக் கழகத்தின் சார்பாக!

அதற்கும் நாம் தயாராகிக் கொள்ள வேண்டும் - அந்நாள் எந்நாள் என ஆவலுடன் துடித்து நிற்கும் என் உடன்பிறப்புகளின் ஆர்வத்தையும், அறப்போர்க்குணத்தையும் நானறிவேன்!

இத்திங்கள் 28-ஆம் நாள் காலை முதல் மாலை வரையில் இரயில் நிறுத்தப்போர்! எதற்காக? இந்தி ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும், அதற்காக! 55 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழன் தொடுத்த போர் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தந்தை பெரியாரை, பேரறிஞர் அண்ணாவை, தமிழ்ப் புலவர் பெருமக்களை, இந்தி ஆதிக்க வெறியர்களுக்குப் பாயிரம் பாடும் அரசுகள் ஏவிய அடக்குமுறைகள் அசைத்து விடவில்லை! அவர்கள் வழிநின்று அறப்போர்வாள் ஏந்திப் படை நடத்தும் நாமும் இந்தி ஆதிக்க தர்பாருக்குப் பணிந்தோமில்லை! என்றும் பணியப் போவதுமில்லை!

வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும் என்று தியாகநெருப்பில் நம்மைக் கருக்கிக் கொள்ளவும் தயாராக இருப்பவர்கள்.

“எப்பக்கம் வந்து புகுந்து விடும் - இந்தி
எத்தனை பட்டாளம் கூட்டிவரும்?”

என்று தோள் தட்டிக் கேட்ட அந்த நிலைக்கு மாறாக; இப்போது எல்லாப் பக்கமும் வந்து புகுவேன் என்று இந்தி ஆதிக்கம் மிரட்டிக் கொண்டுள்ள நிலை காண்கிறோம் -

உயிர், தித்திப்பை எண்ணிடப்போவதில்லை எனும் புரட்சிக் கவிஞன் தந்த வீரமொழியை உச்சரித்தவாறு, கடைசித் தமிழன்

மிச்சமிருக்கும் வரையில் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிடவே செய்வான் - என்பதை இந்த அவனிக்கு அறிவிக்க; இதோ மற்றொரு வாய்ப்பு!

அதுதான் பிப்ரவரி 28-ஆம் நாள் ரயில் நிறுத்த அறப்போர்!

அறவழியில் - அமைதி வழியில் - அண்ணா வழியில் இந்தப் போராட்டங்கள் வெற்றிபெற, கழகத்தின் செயல்வீரர்கள் இன்றே ஆக்கப்பணிகளில் விரைந்து ஈடுபட வேண்டுகிறேன்.

செயற்குழு எடுத்துள்ள முடிவுகளை; செயல்படுத்திட எழுக - என் உடன்பிறப்பே!

அன்புள்ள,

மு. க.

10-02-1994

2099. மக்களின் போராட்டமாக்குவோம்!

உடன்பிறப்பே,

முன்பெல்லாம் நிதிநிலை அறிக்கைகள் வருகின்றன என்றால்; என்னென்ன திட்டங்கள் வரும் என்பதே முக்கியமான எதிர்பார்ப்பாக இருக்கும். ஆனால் இன்றோ என்னென்ன கஷ்டங்கள் வருமோ எனக் கன்னத்தில் கை வைத்தவாறு; கவலையுடன் ஏழை எளிய நடுத்தர மக்கள் குலைநடுங்கிப்போய்க் கிடக்கிறார்கள்.

நாளும் ஒரு வாள், மக்கள் மீது பாய்கிறது என்ற நிலையில் - அன்றாடம் அபாய அறிவிப்புகள் அடுக்கடுக்காகத் தொடர்ந்த வண்ணமுள்ளன.

சமையல்வாயு விலைஉயர்ந்தது என்ற சங்கடத்திலிருந்து விடுபடுவதற்கு முன்பே; சர்க்கரை விலை உயர்ந்தது! இன்னும்கூட உயரப் போகிறது என்ற எச்சரிக்கை வேறு! அதனால் ஏற்பட்ட பெருமூச்சு அடங்குவதற்குள் டீசல், பெட்ரோல் விலை உயர்வு! மாநில அரசுகளுக்கு மத்திய அரசு தரும் அரிசியின் விலையும் இப்போது உயர்வு! இதோ மற்றொரு பயமுறுத்தல் - செய்தி நிறுவனங்கள் உறுதிப்படுத்தி அறிவித்துள்ளன!

1500 கோடி ரூபாய்க்கு ரயில் கட்டணமும் உயருகிறதாம் - விரைவில் அந்த அறிவிப்பும் வரப்போகிறதாம்!

மத்திய அரசுதான் இப்படியென்றால்; இங்குள்ள மாநில அரசோ உனக்கு நான் சளைத்திடப் போவதில்லை எனச் சவால் விட்டு நிலவரி, நீர்வரி, வீட்டுவரி, தொழில் வரியென அனைத்தையும் உயர்த்தி, பஸ் கட்டணத்தையும் பல மடங்கு ஏற்றி, அத்துடன் நில்லாமல் அரிசி விலையையும் நியாயவிலைக் கடைகளில் நாலேமுக்கால் ரூபாய்க்கு ஒரு கிலோ என உயர்த்தியுள்ளது.

நியாய விலைக் கடைகளில் கழக ஆட்சிக் காலத்தில் அரிசி கிலோ இரண்டரை ரூபாய் என்றிருந்ததையே அநியாயம் அக்ரமம்

என்று பேசியவர்கள், ஏசியவர்கள் மக்களை ஏமாற்றி வாக்குப் பெற்று மகுடம் புனைந்து கொண்ட உடனேயே அரிசி கிலோ மூன்றரை ரூபாய் என ஆக்கினார்கள். இப்போது நாலேமுக்கால் ரூபாய் என்று ஆக்கி விட்டு; நாங்கள் என்ன செய்வோம், மத்திய சர்க்கார் செய்த வேலை என்று அங்கே கையைக் காட்டுகிறார்கள்.

அதாவது மக்களை இன்னமும் ஏமாற்றவே பார்க்கிறார்கள். மத்திய சர்க்கார் மீது கண்டனக் கணை பொழிகிறார்கள். மத்தியில் உள்ள காங்கிரஸ் அரசு தனது பங்கிற்கு மக்களைப் பாதிக்கக்கூடிய; அவர்களைத் துடிக்க விடக்கூடிய காரியங்களைச் செய்துள்ளது; கட்டணங்களை, விலைகளை உயர்த்தியுள்ளது என்றாலும் - அரிசியைப் பொறுத்தவரையில் அதன் விலையை நிர்ணயித்து நியாயவிலைக்கடைகளில் வழங்கும் அதிகாரம் மாநில அரசிடம்தானே இருக்கிறது. பிறகேன் மாநில அரசு அரிசி விலையை உயர்த்த வேண்டும்?

ஒருவரையொருவர் குற்றம்சாட்டிக் கொள்கிற காங்கிரஸ் ஆட்சியாளர்களும் அ.தி.மு.க. ஆட்சியாளர்களும் மூன்றாண்டுகளுக்கு முன்பு தேர்தல் நேரத்திலே மக்களிடம் என்ன சொன்னார்கள்? நூறே நாட்களில் விலைவாசியைக் கட்டுப்படுத்துவோம் என வாக்குறுதி அளித்தது உண்டா, இல்லையா?

அப்படி வாக்குறுதியும் வழங்கிவிட்டு - புதிய பொருளாதாரக் கொள்கை என்ற ஒரு பூதத்தையும் நடமாடவிட்டபோதே; அதன் விளைவுகள் ஆபத்தானவைகளாக இருக்குமென, முற்போக்கு இயக்கங்கள் உணர்த்தியும்கூட அதனை உணர மறுத்தவர்கள் மட்டுமல்ல; இன்னமும் கூடக் கீழே விழுந்தவர் மீசையில் மண் ஒட்டவில்லையெனத் தோளைக் குலுக்கிக் கொள்வதைப்போல அந்தக் கொள்கை சரியானதே என்று கோஷ்டிகானம் பாடிக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமா; உயிர் காக்கும் மருந்துகளின் விலைகள்கூட மலையின் உச்சியில் ஏறப்போகிறது, ஏழை எளியோர் அவற்றை எட்டிப்பிடிக்க முடியாமலே ஏங்கித் தவிக்கப் போகிறார்கள்! இப்போதே தமிழ்நாட்டு அரசு மருத்துவமனைகளில் மருந்து இல்லை - காயத்திற்குக் கட்டுப் போட காட்டன் துணிகூட இல்லை - ஒருவேளை மருந்து கிடைத்தாலோ; அவை போலியா உண்மையா என்று தெரியாமல் விழிக்கும் நிலை!

என் செய்வது; அந்தத் துறையின் பொறுப்புள்ள அதிகாரியே இந்த மருந்து விஷயத்தில் மக்களின் உயிரோடு விளையாட ஆரம்பித்து விட்டாரே - அது இந்த ஆட்சியில் ஒரு குற்றமாகவே கருதப்படவில்லையே!

இப்படிப் பொறுப்பற்ற நிர்வாகத்தினாலும் - பொழுது தோறும் புதுப்புது வரிகளாலும் - கட்டண உயர்வுகளாலும் - மக்களின் கழுத்திலே மிதிக்கும் கொடுமையை எத்தனை நாள் சகித்துக் கொண்டிருக்க முடியும்? கையாலாகாத ஆட்சிகளை வீட்டுக்கு அனுப்பி வைத்திட மக்கள் இப்போதே தயாராகிக் கொள்ள வேண்டாமா?

தேர்தல் நேரத்தில் இருபதோ முப்பதோ கொடுத்து வாக்குகளைப் பெற்றுக் கொண்டு மீண்டும் ஆட்சிக்கு வந்து ஊழலில் திளைக்கலாம் - ஊர் மக்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளலாம் என்ற அலட்சியத்தில் இருக்கும் ஆட்சியாளர்களிடம்; இனியும் மக்கள் ஏமாறுவதற்கு இடம் தரலாமா?

தேர்தல் நேரத்தில் தரப்படும் பணத்திற்கும் - ஐந்தாண்டு காலத்தில் புதுவரிகள், விலைவாசி மற்றும் கட்டண உயர்வுகளால் மக்கள் செலவழிக்கும் பணத்திற்கும்; ஒரு கணக்கு போட்டுப்பார்த்தால் பிறகு எவர் ஒருவரும் வாக்களிக்கப் பணம் வாங்கி; தங்களைத் தாங்களே விற்றுக்கொள்ள முன்வர மாட்டார்கள். காரணம்; ஓட்டுக்குத் தரப்படும் பணத்தைவிட; இவர்களின் ஆட்சியில் ஏற்பட்ட பலமுறை வரிஉயர்வுகளாலும் கட்டண உயர்வுகளாலும் விலை உயர்வுகளாலும் - தனியொரு நபரின் கையை விட்டுப்போகும் பணம் அதிகம்!

இவற்றையெல்லாம் எடுத்து விளக்கிடத்தான் வருகிற 17-ஆம் நாளன்று பட்டிதொட்டி முதல் பட்டினக்கரைகள் வரையில் நமது கழகத்தின் சார்பில் அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் சைக்கிள் ஊர்வலங்கள் - தெருமுனைப் பிரச்சாரங்கள்! அந்தப் பிரச்சாரங்கள் கலை நிகழ்ச்சியாக, இசை நிகழ்ச்சியாக, ஏன் ஓர் இருவர் மட்டுமே நடிக்கும் ஓரங்க நாடகங்களாகக் கூட அமையலாம்!

மாலை 4 மணி அளவில் மத்திய மாநில அரசு அலுவலகங்களின் முன்னாள் அறப்போர் ஆர்ப்பாட்டங்கள்!

மாணவர், இளைஞர், மகளிர், தொழிலாளர், விவசாயிகள் மற்றும் வேறு பல அணியினரும்; ஆங்காங்குள்ள மாவட்ட, ஒன்றியக் கழக அமைப்புகளுடன் கலந்து பேசி-

பிப்ரவரி 17

இரு வண்ணக்கொடி பறக்காத இடமே இல்லை - கழக உடன்பிறப்பின் குரல் கேட்காத பகுதியே இல்லை எனுமளவுக்கு ஆர்த்தெழுந்திடுக! அணிவகுத்திடுக! மக்கள் துயர் துடைத்திட - அவர்தம் கஷ்ட நஷ்டங்களை நம் கையில் எடுத்துக்கொண்டு என்றும்போல் இன்றும் போராடுவோம் என்பதை அவர்கட்கு உத்திரவாதம் செய்திடுக!

அன்புள்ள,

மு. க.

12-02-1994

2100. வேலியற்றதாகிறது நெய்வேலி!

உடன்பிறப்பே,

நெய்வேலி இரண்டாவது அனல் மின்நிலையத்தில் 210 மெகவாட் திறன் கொண்ட 7-வது மின் உற்பத்திப் பிரிவு, நாட்டுக்கு ஒப்படைக்கப்படும் நிகழ்ச்சி பிப்ரவரி 11 ஆம் நாள் மத்திய அமைச்சர் பாஞ்சா முன்னிலையில் நடைபெற்றிருக்கிறது.

நெய்வேலி அனல் மின்நிலையம் 1961 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது என்பதையும், சோவியத்யூனியன் ஒத்துழைப்புடன் பொதுத்துறை நிறுவனமாக நடை பெற்று வரும் அந்த அனல்மின் நிலையத்தின் இரண்டாவது நிலையம் 1978 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, இதுவரை ஒவ்வொன்றும் சுமார் 210 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட ஏழு மின் உற்பத்திப் பிரிவுகள் ஹங்கேரியின் உதவியுடன் பொதுத் துறையின் பிரிவுகளாகவே செயல்பட்டு வருகின்றன என்பதையும், கடந்த 15 ஆண்டுகளில் நெய்வேலி அனல் மின் நிலையத்தில் 900 கோடி ரூபாய் இலாபம் கிட்டியுள்ளது என்பதையும் 1989-ல் தி.மு.க. ஆட்சி மீண்டும் அமைந்த போது இந்தியப் பிரதமராக இருந்த வி.பி. சிங் அவர்களிடம் வாதாடி அந்த மின்நிலைய நிறுவனத்திடமிருந்து 40 கோடி ரூபாய் தமிழக அரசுக்கு பெறப்பட்டது என்பதையும் கடந்த 6-ந் தேதி நடைபெற்ற ஐ.சி.எப். தொழிலாளர்கள் மாநாட்டில் விளக்கியிருக்கிறேன். படித்திருப்பாய்.

இப்போது எட்டாவது யூனிட் மின் உற்பத்திப் பிரிவு குறித்துத்தான் பெரிய சர்ச்சையே எழுந்துள்ளது. புராணக் கதையில் கம்சனிடமிருந்து எட்டாவது குழந்தையைக் காப்பாற்ற தேவகியும் வசுதேவரும் படாதபாடுபட்டபோதுபோல; இப்போது **எஸ்.டி. பவர் சிஸ்டம்ஸ்** என்ற அமெரிக்கத் தனியார் நிறுவனத்திடமிருந்து இந்த எட்டாவது பொதுத்துறைப் பிரிவைக் காப்பாற்ற கட்சிகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் அனைவருமே - பல்லாயிரக்கணக்கான

தொழிலாளர்கள் உட்பட அணிவகுத்துப் போர்க்குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவையும், மற்றுமுள்ள தொழிற் சங்கங்களும் தங்களின் எதிர்ப்பையும் கண்டனத்தையும் ஜனநாயகத்திற்குட்பட்ட எல்லா முறைகளிலும் தெரிவித்துள்ளன. இலாபகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற மிகப்பெரிய பொதுத்துறை நிறுவனத்தில் - திடீரென ஒரு தனியார்துறைப் பிரிவை நுழைப்பதின் மூலம்; தீமை விளைய வித்திடாதீர்கள் என தி.மு. கழகமும் எச்சரித்துள்ளது.

அதுமட்டுமல்ல; 1991 ஆம் ஆண்டு ஜனவரி 12 ஆம் நாள்தானே இந்த எட்டாவது பிரிவு; பொதுத்துறையில் இயங்குமென அறிவிக்கப்பட்டு, அன்று கல்நாட்டு விழாவும் நடைபெற்றிருக்கிறது - இப்போது அதனைத் தனியார்துறைக்குத் தாரை வார்த்து மீண்டும் ஒரு கல்நாட்டு விழாவுக்கு முதலமைச்சர் போவது முறையல்ல என்றும் ஐ.சி.எப். தொழிலாளர் மாநாட்டில் அறிவுறுத்திப் பேசியிருக்கிறேன்.

அவ்வளவு ஏன்; அந்நிய முதலீடுகள் அதிகரிக்க வேண்டும் என்ற மத்திய அரசின் கொள்கைகளைப் பெரிதும் வரவேற்கிறேன் என்று அறிவித்துள்ள அந்தத் தொகுதியைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வள்ளல் பெருமான் அவர்கள், இந்த எட்டாவது யூனிட்டைத் தனியாருக்குத் தருவதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். தனியார் துறைக்குத் தருவதை நியாயப்படுத்தி மத்திய அரசும், அதோடு இணைந்த மாநில அரசும் உயர்நீதிமன்றத்துக்கு விளக்கம் அளித்துள்ளன.

வழக்கை விசாரித்த நீதிபதி, விசாரணையை ஏப்ரல் 4-ந் தேதிக்கு ஒத்திவைத்துவிட்டு - பிப்ரவரி 12-ந் தேதி விழாவுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு விட்டதால், முதலமைச்சர் சென்று நடத்தும் அடிக்கல் நாட்டு விழாவுக்குத் தடைவிதிக்க இயலாது எனக் கூறிவிட்டார். அந்த உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு ஏ.ஆர். லட்சுமணன் என்பதும் இந்த நேரத்தில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். எனவே 1991-ல் நாட்டப்பட்ட பொதுத்துறைக்கான அடிக்கல்லைத் தூக்கிக் கடாசிவிட்டு இப்போது புதிய அடிக்கல் நாட்டப்பட்டாகிவிட்டது, தனியார் துறைக்காக! அண்ணா வாழ்க!

உடன்பிறப்பே, தனியார்துறை என்பது அறவே கூடாது என்று நான் வாதிட வில்லை. தனியார் துறை நிறுவனங்களை அனுமதிக்கக் கூடாது என்றோ; அவற்றை அழித்து விட வேண்டுமென்றோ கழகம் கருதிடவுமில்லை.

அதே நேரத்தில் அனைத்தையும் பொதுத் துறையாக்குவது என்ற கொள்கையை நோக்கி முன்னேற வேண்டியதற்குப் பதிலாக - பொதுத் துறையையே அதுவும் லாபகரமான நிலையில் இருக்கும்போது தனியாருக்கு எடுத்துத் தருவதைக் கழகம் என்றைக்கும் ஏற்றுக் கொண்டதில்லை. இதற்குக் கழக ஆட்சியில் எத்தனையோ எடுத்துக்காட்டுக்களைக் கூற முடியும்.

மத்திய மாநில அரசுகள், நெய்வேலியில் இந்த எட்டாவது யூனிட்டை பொதுத் துறையிலிருந்து பிய்த்து எடுத்து தனியாரிடம் கொடுத்துவிட்டார்கள். எந்தத் தனியாரிடம்? யார் அந்தத் தனியார் இத்துணை எதிர்ப்புக்கிடையே இவ்வளவு பெரிய விழா நடத்தி, பிடிவாதமாக அந்தத் தனியாருக்குத் தருவதிலே ஒளிந்து கிடக்கிற திரைமறைவு ரகசியம்தான் என்ன?

இதோ நண்பர் வள்ளல் பெருமான் எம்.பி. அவர்கள் உயர்நீதிமன்றத்தில் புதியதோர் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில் அவர் குறிப்பிட்டுள்ளவற்றை அப்படியே ஏடுகளில் வந்தவாறு தந்துள்ளேன்.

நீயும் படித்து, மற்றவர்களுக்கும் படித்துக் காட்டினால் இது போன்ற விஷயங்களில் மத்திய அரசும் - மாநில அரசும் எப்படிக் கை கோத்துக் கொண்டு செயல்படுகின்றன என்ற உண்மை ஊருக்குத் தெரியும். இதோ; வள்ளல் பெருமான், நீதிமன்றத்தில் அளித்துள்ள புதிய மனுவின் விபரங்கள் :-

எஸ்.டி. பவர் சிஸ்டம்ஸ் என்ற அமெரிக்க நிறுவனத்தின் தலைவர் சரத் டாக் என்பவர் அவரது நிறுவனத்தின் பெரும்பாலான பங்குகளை விற்றுவிட்டார். மேலும் 1991-ம் ஆண்டு ஜனவரி 3-ம் தேதி அமெரிக்க தனி நீதிமன்றத்தில் பெடரல் சட்டத்தின் கீழ் ஒரு மனுதாக்கல் செய்து, தான் திவாலாகிவிட்டதாகவும் கூறியுள்ளார். இது குறித்து முன்பே மத்திய அரசின் செயலாளர் கேள்வி எழுப்பியபோது, சரத் டாக் சார்பில் அளிக்கப்பட்ட பதில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

மேலும் அமெரிக்காவில் செக்கோயா பெடரல் பாங்கில் சரத்டாக் கொடுத்த செக்குகள் அனைத்தும் கணக்கில் பணமில்லாமல் திருப்பி அனுப்பப்பட்டிருக்கின்றன என்று தெரிகிறது. இதுபோன்று சரத்டாக் நிறுவனம் நிதி நிலைமையில் மோசமாக இருந்த போதிலும், இந்நிறுவனத்திற்கு புதிய அனல் மின் நிலையத்திட்டம் அளிக்கப்படுவதில் ஏதோ சில காரணங்களினால் தமிழக அரசும் அக்கறை காட்டுகிறது.

தமிழக மின்சார வாரியத்தின் தலைவராகப் பணியாற்றிய அரிபாஸ்கர் 1993-ம் ஆண்டு அக்டோபர் 4-ம் தேதி முதல் 8-ம் தேதி வரை அமெரிக்காவில் சரத் டாக் வீட்டில் தங்கியிருக்கிறார். அங்கு ஆடம்பரமாக செலவழித்துள்ளார். இதே போல், மற்ற அதிகாரிகளும் கவனிக்கப்பட்டு உள்ளனர்.

அதேபோன்று, சரத்டாக் நிறுவனத்தின் நிநிலைமை மோசமாக இருக்கும்போது, நெய்வேலி மின் நிறுவன நிர்வாகமும், மத்திய அரசும் ஏன் இத்திட்டத்தை அந்த நிறுவனத்திடம் ஒப்படைக்கின்றனர் எனத் தெரியவில்லை.

என்.எல்.சி. நிதி நிலைமை சரியில்லாததால்தான், புதிய அனல் மின் நிலையத் திட்டம் தனியாருக்கு அளிக்கப்படுவதாக மத்திய அரசும், என்.எல்.சி. நிர்வாகமும் பதில் மனுக்களில் கூறியிருக்கின்றன. ஆனால் இதே திட்டத்திற்கு 1991-ம் ஆண்டு ஜனவரி 12-ம் தேதி ஒரு முறை அடிக்கல் நாட்டப்பட்டபோது, என்.எல்.சி. நிர்வாகமே திட்டத்தை செயல்படுத்துவதாகத் தான் இருந்தது. அந்த அடிக்கல் நாட்டு விழாவில் பேசிய அதிகாரிகள் இத் திட்டத்தை செயல்படுத்த நிதி ஒரு பிரச்சினை இல்லை என்றுதான் குறிப்பிட்டனர். மேலும் உலக வங்கி உள்பட பல சர்வதேச நிதி நிறுவனங்கள் நிதியுதவி செய்ய முன் வந்திருக்கின்றன. எனவே நான் வழக்கில் எழுப்பிய கேள்விகளுக்கு மத்திய அரசு பதில் மனுக்களில் சரியான விளக்கம் தரப்படவில்லை.

அந்நிய முதலீடுகள் அதிகரிக்க என்ற மத்திய அரசின் கொள்கைகளை பெரிதும் வரவேற்கிறேன். எனினும்,

ஏதோ சில காரணங்களினால் என்.எல்.சி. மற்றும் தமிழக அரசு, மத்திய அரசு கொள்கையை தவறாக பயன்படுத்துவதை அனுமதிக்க முடியாது. எனவே, இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். சரத்டாக் நிறுவனம் திட்டத்தை துவங்கும் முன் அந்த நிறுவனத்தின் நிதி நிலைமை குறித்து முழுமையாக விசாரிக்க வேண்டும்.

மத்திய காங்கிரஸ் அரசின் மீதும், மாநில அ.தி.மு.க. அரசின் மீதும் ஒரு காங்கிரஸ் எம்.பி. உயர்நீதிமன்றத்திற்கு அளித்துள்ள மனுவில் கூறியுள்ள இந்தப் புகார்களுக்குப் பின்னால் புதைந்து கிடக்கும் மர்மங்கள் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள, நாடு மிகுந்த ஆவலுடன் காத்திருக்கிறது!

என் செய்வது; நெய்வேலியும், வேலியற்றதாகி விட்டது! இனித் தனியார், நெய்யை மொண்டு மொண்டு குடிப்பர்; தரவேண்டியதைத் தர வேண்டியவர்களுக்குத் தந்துவிட்டு!

அன்புள்ள,

மு. க.

13-02-1994

பின்குறிப்பு :-

இந்தக் கடிதம் அச்சுக்குப் போகும் நேரத்தில் நெய்வேலி அடிக்கல் நாட்டு விழாவுக்கு முதலமைச்சர் போகவில்லை என்ற செய்தி வந்திருக்கிறது. மகிழ்ச்சி. எனினும் தமிழக அரசு சார்பில் பொதுப்பணித் துறை அமைச்சர் கலந்து கொள்ளப்போவதாகவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டிருக்கிறது.

2101. கழகத்தின் ஜோதி - களங்கமற்ற ஜோதி!

உடன்பிறப்பே,

மக்களைக் கசக்கிப் பிழியும் விலைவாசி உயர்வு, போக்குவரத்துக் கட்டண உயர்வு, வரி உயர்வு போன்ற கொடுமைகளைக் கண்டித்து - மத்திய மாநில அரசுகளின் அலுவலகங்களின் முன்னால் ஆர்ப்பாட்டங்களையும் - மாநில முழுதும் பட்டிதொட்டிகள் முதல் பட்டினங்களின் பகுதிகளில் வரையில் இருபது லட்சத்திற்கு மேற்பட்டோர் கலந்து கொண்ட சைக்கிள் பிரச்சாரப் பேரணிகளையும் எழுச்சியுடன் நடத்தியுள்ள உனக்கு என் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் வாரி வாரி வழங்குகிறேன். பிறகென்ன வழங்க முடியும் நான்! நீதான் அன்று முதல் இன்று வரை என்னிடம் இந்த அன்புப் பிணைப்பையும் பாசப்பரிமாற்றத்தையும் தவிர வேறென்ன எதிர்பார்த்திருக்கிறாய்!

உன்னைப் பற்றி என் நெஞ்சில் நினைவு அலைகள் புரளும்போதெல்லாம் 1984 ஆம் ஆண்டு கரூர் மாநாடு நடந்தபோது நான் எழுதிய கடிதத்தின் வரிகள்தான் என் செவிகளில் எதிரொலித்து, என் சிந்தையில் தேனருவியின் துளிகளாகத் தெறிக்கின்றன!

அம்மாவோ; இதோ ஓடிக் கொண்டிருக்கிறானே - இவன் கையில் உள்ள அண்ணா சுடர் இவனது தலைவனின் கரங்களில் கரூர் மாநாட்டு மேடையில் இவனால் தரப்பட வேண்டுமாம்!

அதற்காக இப்படி ஓடுகிறான்! இவனது தலைவனும் ஒரு தொண்டன்தான் என்பதை இவன் ஏன் அறியவில்லை? ஒருவேளை அந்த உண்மையை அறிந்து கொண்டிருப்பதால்தான் இப்படித் தலைதெறிக்க ஓடுகிறானா?

இவனது தூய உள்ளத்தைப் புரிந்து கொண்டால் இவனுக்குத் துரோகம் செய்ய மனம் வருமா? எத்தனை பேரைத் தூக்கி விடும் ஏணியாக இருந்திருக்கிறான் - இவன் தோளில் கால் வைத்துப் பதவிப் பொறுப்புகளில் அமர்ந்தவர்கள் எத்தனை பேர்! அவற்றையெல்லாம் இவன் சிந்தித்துப் பார்த்து கைம்மாறு கேட்கிறானா?

உனக்காக ரத்தம் சிந்துகிறேன்! வியர்வை வடிக்கிறேன்! உயிரைத் தரவும் முன் வருகிறேன்! ஏன்? எதற்காக? பட்டாளத்துச் சிப்பாயாக நானும்; படைத்தளபதியாக நீயும் இருந்து, நமது கொள்கைக் கோட்டையைப் பாதுகாத்து எதிரியின் கொட்டத்தை அடக்குவதற்காக! இப்படி அந்த தொண்டனின் இதயத்து உதடுகள் உச்சரிக்கின்றன!

அவன் விடும் மூச்சுத்தான் புயலாக மாறி, பகைவனின் கப்பற்படையையே கடலில் கவிழ்த்து விடுகிறது!

அவன் கந்தலாடையில் கசங்கி, கைவிரல்களில் நசுங்கி, அழுக்கேறிய நிலையில் நிதியெனும் பெயர் பெற்று தரப்படுகிற ஒவ்வொரு ஒரு ரூபாய்க் கரன்சியும்தான் கழகத்தின் அரண்மனைப் பொக்கிஷம்!

அந்தக் கருவூலத்தின் ஒவ்வொரு காசையும் நியாயமாகச் செலவிடும் நேர்மையான நிர்வாகியைத்தான் அவன் நெஞ்சில் வைத்துப் போற்றுவான்! இல்லையேல் அவர்களை நஞ்சில் தோய்த்த பண்டமாகக் கருதி வீசி எறிவான்!

ஏனெனில் அவன் பீடி சுற்றியோ - மூட்டை தூக்கியோ - ரிக்ஷா ஓட்டியோ - வாய்க்கால் தோண்டியோ - வரப்பு வெட்டியோ - தறி நெய்தோ சம்பாதித்த காசு! வயிற்றைக் கட்டி, வாயைக் கட்டி, வாழையடி வாழையாக வாழ வேண்டிய தனது கட்சிக்காக அவன் செலுத்தும் காணிக்கை! அதில் சேதாரம் ஏற்பட்டால் சிந்தை குலையும் அவனுக்கு!

அவனது உழைப்பை உறிஞ்சியதால் உயர்ந்தோர், அவனை உதைத்தால்கூட அவன் கவலைப்படமாட்டான்;

அவன் கட்டிக் காக்கும் கட்சிக்குத் துரோகம் செய்துவிட்டு பதவிக்காக - பவிஷுக்காக - பணத்திற்காக வேலி தாண்டுபவர்களை அவனால் சகித்துக் கொள்ள முடியாது! குமுறிக் குமுறி அழுவான்! பலிக்குமோ, பலிக்காதோ அதுபற்றிக் கூடக் கவலைப்படாமல் சபிப்பான்! சாபம் கொடுப்பான்!

அந்த உத்தம உடன்பிறப்பு ஓட்டத்தை நிறுத்தாமல் கரூர் மாநாட்டு மேடையில் அண்ணா சுடரை என் கையில் அளித்தான்! கரத்தை குலுக்கினான்!

ஆனால் இப்பொழுதும் நினைத்துப் பார்க்கிறேன்; தீபச்சுடருடன் அந்தத் தியாகசீலன் சாலையில் ஓடிக் கொண்டிருப்பதாகவே தெரிகிறது!

ஓர் இளைஞன்! ஒரு நூறு இளைஞர்கள்! ஓராயிரம் இளைஞர்கள்! ஒரு லட்சம் இளைஞர்கள்! ஒரு கோடி இளைஞர்கள்!

அனைவரின் கரங்களிலும் அண்ணா சுடர்! அணையாத அந்த தீபச்சுடர்! கழகத்தின் ஜோதி! களங்கமற்ற ஜோதி!

எங்கும் ஒளிவெள்ளம்! பொல்லா இருள் போக்கும் புத்தொளியின் வீச்சு! இனிக் கவலையில்லை; இவர்களைப் போல் இதய சுத்தியும் - இலட்சிய உறுதியும் - தன்னல மறுப்பும் - தன்மான உணர்வும் கொண்டோர் இருந்திடும் போது, நிச்சயமாகச் சொல்லுகிறேன்; இனிக் கவலையே இல்லை!

இப்படி 1984 ஆம் ஆண்டில் எழுதிக் களித்து ஏறத்தாழப் பத்தாண்டு ஆகி விட்டது. இப்போதும் அதே கரூருக்குச் சென்று திரும்பித்தான் இந்தக் கடிதம் எழுதுகிறேன்.

அது என்ன; கடந்த சில கிழமைகளாக எத்தனையோ ஊருக்குச் சென்று வந்தாய் - அந்த ஊர்களைப் பற்றியெல்லாம் எழுதாமல், கரூர் பற்றி மட்டும் திடீரெனக் கடிதம் எனக் கேட்கமாட்டாய் என நம்புகிறேன். ஏனெனில் கரூரில் கழகமே இல்லை - கழகம் இருந்த இடத்தில் கள்ளி முளைத்துவிட்டது - பாவம்; ஒரே ஒரு பரமத்தி சண்முகம் தான் இருந்து கொண்டு பரிதவித்துக் கொண்டிருக்கிறார் - அவரை அந்த ஊரில் ஏறெடுத்துப் பார்ப்பார் இல்லை! முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் போய்விட்டார்கள் -

நகராட்சித் தலைவர்கள், துணைத்தலைவர்கள் என இருந்தவர்கள் போய்விட்டார்கள் - மாடமாளிகை, கூட கோபுரமாய் இருந்த கழகம்; இன்றைக்கு மண்குடிசையாகிவிட்டது; அங்கு எதற்கு இந்த வீண்வேலை? கழகக் கூட்டமென்றால் ஆட்களா வருவார்கள் - மக்களா கூடப்போகிறார்கள் - கருணாநிதி நன்றாக ஏமாந்து வரப்போகிறார் பாருங்கள் எனக் கேலி, கிண்டல், ஏகடியம் பேசப்பட்ட நேரத்தில் கரூர் கூட்டம் நடைபெற்றது!

நானும்கூட ஏதோ சுமாராக இருக்கும் என்றுதான் எண்ணிச்சென்றேன். ஆனால் உடன்பிறப்பே, திருச்சியைக் கடந்ததும் அந்த நல்லூரில் ஆரம்பித்த மக்கள் வெள்ளம் - அந்த வெள்ளத்துடன் போட்டிபோட்டு வழியெங்கும் நிறைந்திருந்த வண்ணவண்ண விளக்குகளின் ஒளி வெள்ளம் - வரவேற்புத் தோரண வாயில்கள் - அடர்ந்திருந்த கொடிக்காடுகள் - அடடா; கரூர் வரையில் நாங்கள் கண்ட காட்சி - கரூர் தந்த மாட்சி - இப்படியல்லவா கோவையில் மாநில மாநாட்டை நடத்தியிருக்கவேண்டும் என்ற கற்பனையில் எங்களை மிதக்கவைத்தது! சீமான்களின் கரம்பட்டு அந்த விழாவுக்குச் சிறப்பு வரவில்லை - கோமான்களின் துணையுடன் அந்த எழுச்சிக்கோலம் பூண்டிடவில்லை கரூர் நகரம்!

இதோ பாரேன் பட்டியலை; இந்தச் சாதாரண சாமானியவர்களின் சாதனை தான் 14 ஆம் தேதி நடைபெற்ற கரூர்ப்பேரணி! ஆம்; பேரணி என்கிறேன் - பொருத்தம்தான்! சென்னைப் பேரணி தாய் பேரணி என்றால், கரூரில் சேய்ப்பேரணி!

கரூரை வென்றிடும் விதத்தில் கழக நிகழ்ச்சிகள் பல ஊர்களில் நடந்ததும் உண்டு - நடக்கப் போவதும் உண்டு - ஆனால் கரூரை மட்டும் நான் சிலாகித்துக் கூறக் காரணம்;

“ஒன்றுமே இல்லை என்ற நகரில்
குன்றென நிமிர்ந்து நிற்கிறதே கழகம்”

என்ற களிப்பு மிகுதி எனக்கு ஏற்பட்டதுதான்! பரமத்தி சண்முகத்துடன் இணைந்து பணியாற்றியோர் அனைவரும் இளைஞர்கள்; ஓரிருவர் தவிர - என் உடன்பிறப்புகள் சுப. ராசகோபால், சந்திரசேகரன், இரா. மாரிமுத்து, சிங்காரம், வை. ரத்தினவேலு, நன்னியூர் ராஜேந்திரன், புருடோத்தமன், நடராசன், கனகராஜ், காலனி சுப்ரமணி, வி. ரவி, வாசுகி முருகேசன், கந்தசாமி,

கே. இராதா, கா. கிருஷ்ணன், பழ.அப்பாசாமி ஆகியோர் அயராது ஆற்றிய பணியின் வெற்றி விளைவே கரூர்ப் பேரணி!

ஒன்றியங்கள், நகரங்கள், கிளைகள், ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொறுப்பை ஏற்றுக் கொண்டு தந்த ஒத்துழைப்பை, நிலைநாட்டிய ஒற்றுமையை, ஒரே இடத்தில் வைரமணிக் குவியலாகக் காணுகின்ற பேறு கிடைத்ததென்றால்; அதற்கோர் சான்று கரூர்ப் பெருவிழா! தீரர்கள் நடத்திய திருவிழா! தியாகச்சுடர்கள் நிகழ்த்திய கழக விழா!

எனவே மீண்டும் மீண்டும் என் நெஞ்சு நிறையச் சொல்லிச் சொல்லிப் பார்த்துக் கொள்கிறேன்; சுவைக்கிறது! எழுதி எழுதி மகிழ்கிறேன்; இனித்துக் கொண்டே இருக்கிறது!

"ஓர் இளைஞன்! ஒரு நூறு இளைஞர்கள்!
ஓராயிரம் இளைஞர்கள்! ஒருலட்சம் இளைஞர்கள்!
ஒருகோடி இளைஞர்கள்!"

அனைவரின் கரங்களிலும் அண்ணா சுடர்! அணையாத அந்த தீபச்சுடர்; கழகத்தின் ஜோதி - களங்கமற்ற ஜோதி!

அன்புள்ள,

மு. க.

18-02-1994

2102. இதிலும் கூடப் பினாமிகளா?

உடன்பிறப்பே,

அவர் ஆணையிட்டால் இவர் தலையை வெட்டிக் கொண்டு வருவேன் என்று பேசி; அது பற்றிய வழக்கை விசாரித்தவர், அவர் இப்படி ஆணையிட மாட்டார். அதனால் அப்படிப் பேசியவரை விட்டுவிடலாம் என்றுரைக்கப்பட்டு தலைவெட்டி எனும் அடைமொழியுடன் அழைக்கப்படுபவர் அந்தக் கணியூர்க்காரர்!

தமிழ்நாட்டில் எத்தனையோ சட்ட அமைச்சர்கள் இருந்திருக்கிறார்கள். எந்த ஒரு ஆட்சியிலும் எவரும் இன்றுள்ளவரைப் போன்ற பொத்தல்கலமாக இருந்ததில்லை. சட்டப் பிரச்சினைகளில் போதிய அளவு ஞானமுள்ளவர்களாகவே விளங்கியிருக்கிறார்கள்.

இப்போது வாய்த்திருப்பவரோ; வாய்புளித்ததோ மாங்காய் புளித்ததோ எனும் தோரணையில் ஏதாவது அறிக்கைகள், அரைவேக்காட்டுப் பதில்களை அள்ளி இறைப்பதில் முதல் பரிசைத் தட்டிச் செல்லக்கூடிய மூளை படைத்தவர்.

அரசாங்கம், ஒரு குரங்கைப் பிடித்து இதுதான் பிள்ளையார் என்று சொன்னாலோ - அல்லது கறுப்பைக் காட்டி வெள்ளை என்று சாதித்தாலோ - அதனை உடனே ஏற்றுக் கொண்டு ஆமாம்! ஆமாம்! என்று நீதிபதிகள் உடுக்கு அடிக்கா விட்டால் கஞ்சா வழக்கில் அவர்களின் உற்றார் உறவினரைக் கைது செய்வோம் என மிரட்டுவது; ஜனநாயகத்தின் குரல்வளையை மிதித்து, நீதித்துறை என்கின்ற இருதயத்தையே நசுக்குகிற காரியம் என்பதை எல்லாக் கட்சியினரும் சுட்டிக் காட்டிக் கண்டித்திருக்கும்போது, சட்ட அமைச்சருக்கும் மட்டும் அதைச் சிந்தித்துப் பார்க்க நேரம் பஞ்சமாகி, வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் செயல்களுக்கு ஊக்கமளிக்கக் களத்தில் குதித்து விட்டார்.

வெளியில் நடக்கும் செயல்களைச் சுட்டிக்காட்டி; அதைக்கூட நாகரிகமாக, நளினமாக எடுத்துரைத்து அரசுச் சார்புடைய நிறுவனமொன்றுடன் சம்பந்தப்பட்ட வழக்கை விசாரிப்பதிலேயிருந்து ஒதுங்கிக் கொண்டார் உயர்நீதிமன்ற நீதிபதி லட்சுமணன் அவர்கள்!

அதன் எதிரொலி எங்கணும் பரவியது - கண்டனங்கள் அரசின் மீது கணைகளாகப் பாய்ந்தன! தீப்பட்ட புண்ணை மருந்திட்டு ஆற்ற வேண்டுமே தவிர, மீண்டும் அதனைத் தீயினால் சுடுவது போல சட்ட அமைச்சர், சண்டமாருதமானார். சட்டையைக் கழற்றிக்கொண்டு தொடங்கிவிட்டார் மல்யுத்தம்.

முதல் பாய்ச்சலே என் மீதுதான் - அன்றொரு நாள் என் தலைக்கே குறிவைத்தவர் அல்லவா! ஏன் வைக்கமாட்டார் - ஏன் பேசமாட்டார் - 1971 ஆம் ஆண்டு கோவை மாவட்டம் பொள்ளாச்சி நாடாளுமன்ற இடைத்தேர்தலில் வேட்பாளராக நிற்க வேண்டுமென்று பிடிவாதம் பிடித்து, இவருக்கு வெற்றி வாய்ப்பில்லை என்பதால், அதனை ஏற்க இயலாமல் வேறொரு வேட்பாளரை நிற்கவைத்து விட்டு, பலத்த எதிர்ப்புக்கிடையே இவருக்கு ராஜ்யசபா உறுப்பினர் பதவி தருவதாக மினிட் புத்தகத்திலேயே எழுதி உத்திரவாதமளித்து அந்த உறுதிமொழியைக் காப்பாற்ற முன் நின்றவனல்லவா; அதனால் ஏக வசனத்தில் - ஏகடியம் கலந்த தொனியில் - வசைபாடி மகிழ்கிறார் - அல்ல; அல்ல; அவர் மகிழ அல்ல! யாரையோ மகிழ்விக்க! யாரும் மகிழ்ந்திட மாட்டார்கள் என நம்புகிறேன் - ஏனெனில் இவர், அவர்களையும் வம்பிலே அல்லவா மாட்டி விடுகிறார்! வாழ்க அவர் இன்னும்பல வளம் பெற்று என்றுதான் இப்போதும் வாழ்த்துகிறேன். இது போல் வாழ்த்துக்குரியவர் சிலர் உண்டு. அது போகட்டும்!

"இந்தப் பிரச்சினையில் கருணாநிதி கண்டனம் தெரிவித்திருப்பது வேடிக்கையாக உள்ளது. கருணாநிதியின் ஆட்சிக் காலத்தில்தான் நீதித்துறைக்குத் தலைக்குனிவே ஏற்பட்டது. கறுப்புக் கொடி காட்டியதற்காக 1974-ல் அ.தி.மு.க.வைச் சேர்ந்த துரைராஜ் மீது வழக்குப் போட்ட கருணாநிதியின் போலீசை நீதிமன்றம் கண்டித்திருக்கிறது."

இது இன்றைய சட்ட அமைச்சர் சிந்தியுள்ள வாசகம் - சரி; அவர் சொன்ன செய்தியை நான் மறுக்கவில்லை. அப்படியே ஒத்துக் கொள்கிறேன். இதில் இந்த சட்ட அமைச்சரின் கூற்றுப்படி நீதித் துறைக்கு என்ன தலை குனிவு ஏற்பட்டது?

நீதித்துறை, அச்சம் ஏதுமின்றி - அன்றைக்குப் போலீசாரைக் கண்டித்துள்ளதை அமைச்சரே சொல்கிறார். பிறகு எப்படி நீதித்துறைக்குத் தலை குனிவு விளைந்தது?

ஆகா, என் போலீசை நீதிபதி கண்டித்து விட்டார் - விடாதே; அவர் மகன், மருமகன் யார் மீதாவது கஞ்சாவை வைத்து வழக்குப் போடு என்று அப்போது நான் சொல்லியிருந்தால் - அப்படி நடந்திருந்தால் - அது அரசுக்கும் தலை குனிவு! நீதித்துறைக்கும் தலை குனிவு!

சட்ட அமைச்சர் கூற்றுப்படி நீதிபதி, தலைநிமிர்ந்து போலீசைக் கண்டித்துத் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்; பிறகெப்படி நீதித்துறைக்குத் தலை குனிவு ஏற்பட்டது?

அப்படி தீர்ப்பளித்த நீதிபதி எம்.ஜி.ஆர். ரசிகர் என்பது தெரிந்தும் - அந்த ஒரு தீர்ப்புக்காகவே அவர் எம்.ஜி.ஆர். ஆட்சியில் பல பதவிகளைப் பெற்றார் என்பது வரலாறு அன்றைய தி.மு.க. ஆட்சியில் அந்த நீதிபதிக்கு எந்தத் தொல்லையும் தரவில்லையே!

இன்று நீதிபதிக்கு மட்டுமா? அவருக்காகப் பரிந்து வாதாடும் வழக்கறிஞர் சங்கத்தினருக்குமல்லவா அடி, உதை - அவர்கள் கூட்டம் நடத்திய இடத்திலேயே அல்லோல கல்லோலம்!

நீதிபதிகளைக் கேவலப்படுத்தி மாநகரம் முழுவதும் சுவரொட்டிகள்! உயர்நீதிமன்ற சுவர்கள் எல்லாம்கூட தலைகுனிந்து நிற்கின்றன அந்த சுவரொட்டிகளைத் தாங்கிக் கொண்டு!

இரண்டு மாதங்களாக மூடிக்கிடக்கும் அச்சகத்தில் அச்சியற்றப்பட்ட சுவரொட்டி என்கிறார்கள். மூடிய அச்சகத்தில் எப்படி முடிந்ததாம் அது?

அரசு வழக்கறிஞர் சுவரொட்டிக்குச் சொந்தக்காரர்களைக் கண்டுபிடிக்க அவகாசம் கேட்கிறார் -

ஒருவேளை அமைச்சர் குழாமிலேயே உள்ள ஒருவராக இருந்தால் அவரால் கண்டு பிடித்து விட முடியுமா? கண்டு பிடித்தாலும் உண்மையை ஊருக்கு அறிவித்திட முடியுமா?

கோர்ட்டில் குற்றத்தை ஒப்புக் கொள்கிறவர்கள்தான் உண்மையான குற்றவாளிகளா?

அல்லது இதிலும்கூடப் பினாமிகளா?

என்ன தீர்ப்பு வரப் போகிறதோ; வரட்டும்! ஆனால் இந்தத் தீய சேட்டைகளுக்கும், திமிர்வாதப் பேச்சுக்களுக்கும் பொறுப்பேற்று சட்ட அமைச்சர் பதவி துறக்க வேண்டும். இல்லையேல் பதவியிலிருந்து இறக்கப்பட வேண்டும்.

அன்புள்ள,

மு. க.

19-02-1994

2103. அர்ஜுனர் தொடுக்கும் அம்பு!

உடன்பிறப்பே,

பாரதத்தில் அர்ச்சுனன் விட்ட அம்பு குறி தவறியதில்லை. நான் மகாபாரதக் கதையைக் குறிப்பிடுகிறேன். பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் ஆசானான துரோணர், தனது மாணவர்களின் திறனை சோதிப்பதற்காக மரக்கிளையில் அமர்ந்திருந்த ஒரு பறவையைக் காட்டி, தன் மாணவர்களிடம் குறி பார்த்து அதனை வீழ்த்துமாறு ஆணையிட்டார். அவர்கள் வில்லை வளைத்துக் கணைகளைப் பூட்டி குறி பார்த்து நின்றபோது ஒவ்வொரு மாணவனையும் கேட்டார்; குறி வைத்துள்ள உன் கண்ணுக்கு என்ன தெரிகிறது? என்று! அவர்கள் ஆளுக்கு ஒன்றைச் சொன்னார்கள். மரக்கிளை தெரிகிறது - கிளையில் பறவை அமர்ந்திருப்பது தெரிகிறது - என்றொருவன்! அடர்ந்த தழைகள் தெரிகின்றன, அவற்றுக்கிடையே பறவை தெரிகிறது என இன்னொருவன்! இப்படிச் சொல்லிக் கொண்டே இருந்தபோது துரோணர் எதிர்பார்த்த விடை கிடைக்காததால்; அர்ச்சுனன் முதுகைத் தட்டி, உனக்கு என்ன தெரிகிறது? எனக் கேட்டார். அப்போது அர்ச்சுனன் சொன்னான்; குருவே! வில்லில் நான் பூட்டியுள்ள அம்பின் நுனியும் - அதோ அந்தப் பறவையின் கழுத்தும் மட்டுமே தெரிகிறது! என்று!

சபாஷ் அர்ச்சுனா! என்று துரோணர் மகிழ்ந்தார். அவன் திறனை வியந்தார். அவனும் அந்தப் பறவையை வீழ்த்திக் காட்டினான்.

குறிக்கோள் ஒன்றிலேயே கவனம் கூர்மையாக இருந்ததால், மரமோ, கிளையோ, கொப்போ, தழையோ எதுவும் அர்ச்சுனனுக்குத் தெரியவில்லை. பறவையின் கழுத்துக்கு வைத்த குறி மட்டுமே தெரிந்தது.

எதற்கு இந்தக் கதை இப்போது; பலமுறை கேட்டுக் கேட்டுச் சலித்துப்போன கதை ஆயிற்றே - என நினைப்பாய் நீ!

இப்போது பாரதத்தில் ஒரு அர்ச்சுனன் புறப்பட்டிருக்கிறார் - அர்ஜுன்சிங்கைத்தான் குறிப்பிடுகிறேன். அர்ச்சுனனுக்கு எவ்வாறு மரம், கிளை, கொப்பு, தழைகள் எல்லாம் தெரியாமல் பறவையின் கழுத்து மட்டும் தெரிந்ததோ; அதுபோல இந்த அர்ஜுனுக்கு நாட்டில் உள்ள வறுமை, வேலையின்மை, வன்முறை, விலைவாசிக் கொடுமை, மதவெறிச் சேட்டை போன்ற எந்தப் பிரச்சினையும் கண்ணுக்குத் தெரியவுமில்லை. கவனத்துக்கு வரவுமில்லை. அர்ச்சுனனுக்கு பறவையின் கழுத்து மட்டும் தெரிந்தது போல, இந்த அர்ச்சுனருக்கு இந்தி ஆதிக்கம் என்ற அம்பின் நுனியும் - தமிழர் உரிமை என்ற பறவையின் கழுத்தும்தான் தெரிகிறது. எனவே இந்தி ஆதிக்கம் கொண்டு தமிழர்களை இரண்டாம் தரக் குடிமக்களாக்கும் செயலை மேலும் கூர்மைப்படுத்திட வேண்டும் - விரைவு படுத்திட வேண்டும் - என்று தமிழ் நிலத்துக்கே வந்து தமிழர்களின் தோளில் கால் ஊன்றிக் கொண்டு கர்சிப்பது போல, எவ்வளவு நாளைக்கு இன்னமும் ஆங்கிலமும் தொடர்பு மொழியாக நீடிப்பது? இந்தி தொடர்பு மொழியாக தமிழர் உள்ளிட்ட அனைவராலும் ஏற்கப்பட வேண்டும் என்று இந்தி ஆதிக்க வெறியின் உச்சத்துக்கே போயிருக்கிறார்.

ஆம்; மகாபாரதத்து அர்ச்சுனன், தான் வைத்த குறி தவறாமல் இருக்க வேண்டு மென்பதிலே அக்கறையுடனும், உறுதியுடனும் இருந்ததுபோல இந்தி வெறியர்களின் சார்பாக அவர்களின் பிரதிநிதியாக நின்று மத்திய அமைச்சர் அர்ஜுன்சிங் அவர்கள் இந்தி மொழிதான் இந்தியாவின் இணைப்பு மொழி - மத்திய அரசின் ஆட்சி மொழி - என்றெல்லாம் முரசு தட்டி விட்டுப் போயிருக்கிறார். இந்த அர்ஜுனரின் அம்பு வில்லை விட்டுக் கிளம்பாமல் தடுப்பதே, கிளம்பினாலும் கிளர்ந்தெழுந்து ஒடிப்பதே நம் கடமை! இந்தி மொழி ஆதிக்கப் படையெடுப்பு கடந்த ஐம்பத்தி ஆறு ஆண்டுகளுக்கு மேலாகத் திட்டமிட்டுத் தமிழ்நாட்டின் மீது அவ்வப்போது நடைபெற்றுக் கொண்டுதானிருக்கிறது.

1938 முதல் பல கட்டங்களில் இந்தி ஆதிக்க எதிர்ப்புப்போர் நடைபெற்று, பெரியார், அண்ணா மற்றும் திராவிட இயக்க

முன்னோடிகள், தமிழ்ச் சான்றோர், புலவர் பெருமக்கள், மகளிர், மாணவர் எனக் தமிழ்க்குலமே அணிவகுத்து நின்று; தாளமுத்து நடராசனைப் பலிகொடுத்து, அதன் உச்சகட்டப் போராட்டமாக - அல்ல, அல்ல - மொழிப்புரட்சியாக 1965 ஆம் ஆண்டு உருவெடுத்துத் தமிழ்நாடே குமுறும் எரிமலையாயிற்று! கொந்தளிக்கும் கடலாயிற்று! அந்த பூகம்ப உலுக்கலில் மாநிலக் காங்கிரஸ் அரசு திணறியது - மத்திய காங்கிரஸ் அரசும் செய்வதறியாது திகைத்தது. அண்ணாமலைப் பல்கலைக்கழக ராஜேந்திரனைப் போன்ற மாணவச் செல்வங்கள், தங்கள் மார்புகளில் துப்பாக்கி ரவைகளை மலர்ச் செண்டுகளாக ஏந்திக் கொண்டு மண்ணை முத்தமிட்டவாறு மடிந்தனர். தேக்குமரத் தேகங்களை தீக்கிரையாக்கிக் கொண்ட தியாகிகளின் வரிசை கீழப்பழுவூரிலிருந்து தொடங்கிற்று! லட்சக்கணக்கானோர் சிறையில்! ஆயிரத்தை எட்டும் எண்ணிக்கை எனும் அளவுக்குத் தமிழர் பிணங்கள் வீழ்ந்தன!

அந்த மொழிப் போரை விமர்சித்தும், கேலி செய்தும், கண்டித்தும், எதிர்பாராத இடங்களில் இருந்தெல்லாம் அக்கினிக் கணைகள் பாய்ந்த போதும்; ஆர்த்தெழுந்த தமிழ் இனம் அடங்கி ஒடுங்கிடவில்லை.

அப்போதுதான் அண்ணா சொன்னார்; இது மொழிப்பிரச்சினையே அல்ல! அரசியல் ஆதிக்கப் பிரச்சினை என்று! பத்து பிணங்களை இந்தி ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக இந்திக்காரர்கள் நடுப்பாதையிலே போடுவார்களேயானால் தமிழனுடைய பிணம் பத்துக்குப்பத்து நூறு பிணங்கள் தமிழ் நாட்டில் தமிழுக்காக விழும் என எடுத்துக் காட்டுவோம் என உருக்கமிகு முழக்கத்தை அண்ணன் செய்ததும் அப்போதுதான்!

தனியொரு ஆட்சி மொழியாக இந்தியைத் திணிப்பதை தி.மு.க. பணிந்து ஏற்காது. மாறாக தேசிய மொழிகள் அனைத்துக்கும் ஒத்த தகுதி வேண்டுமென்ற தனது குறிக்கோளை அடையும் வரை தி.மு.க. அதை வற்புறுத்தியே தீரும்; போராடியே தீரும்! இது, தி.மு.கழகத்தின் பிரகடனம்!

இவ்வாறு அண்ணா அன்று திட்டவட்டமாகவும் தெளிவாகவும் தெரிவித்தவாறு; தேசிய மொழிகளில் ஒன்றான

தமிழும் மத்திய ஆட்சி மொழியாகும்வரை, தமிழன் தூக்கியுள்ள மொழிப்போர்க்கொடி தாழப்போவதில்லை! அந்நிலையை எய்தும் வரையில், இந்தி ஆதிக்கப் பெருவெள்ளத்தில் மூழ்கி மூச்சுத்திணறி இந்திய நாட்டின் இரண்டாம் தரக்குடிமகன் என்ற அடிமைப் பிணமாகத் தமிழன் ஆகாதிருக்கத்தான் ஆங்கிலம் அதுவரை நீடிக்க வேண்டுமென்ற அரணை அகற்றக் கூடாது என வற்புறுத்துகின்றோம்.

ஆனால் இச்சகம் பேசிக்கொண்டே, கிடுக்கிப் பிடியில் தமிழ்மக்களின் எதிர்காலத்தை நசுக்கிப் புடைப்பதற்குத் திட்டமிட்டுச் செயல்படும் மத்திய அரசு; நேருவின் உறுதிமொழி காக்கப்படும் எனக்கூறிக் கொண்டே இடையே அர்ஜுன்சிங்குகளை அனுப்பி, நம்மை ஆழம் பார்த்திடத் தவறுவதில்லை. அதுதான் இப்போது நடந்துள்ள அர்ஜுன்சிங் அவர்களின் விஜயம்!

அர்ஜுன் சிங்குகளின் ஆர்வம்; அவர்களின் குறி தவறாமல் பறவை வீழ்த்தப்பட வேண்டு மென்பதில் இருப்பதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. ஆனால் ஒன்று; நான் மலையமான் திருமுடிக்காரி ஆண்டிருந்த திருக்கோயிலூர் கூட்டத்தில் கடந்த 20 ஆம் தேதி சுட்டிக் காட்டிய அனுபவமிக்க தலைவர்கள், அறிஞர் பெருமக்கள் கூறிய கருத்துக்களை அவர்கள் மறப்பதோ அல்லது அலட்சியப்படுத்துவதோ நாட்டுக்குத் தீங்காக வந்து சேரும் என்பதை மறுக்க இயலாது.

> ஆங்கிலத்திற்கு மாற்றான அனைத்திந்தியப் பொது மொழி வேறு எதுவுமில்லை. ஆங்கிலம் அகற்றப்பட்டால், வடக்கும் தெற்கும் தனித்தனியாகப் பிரிந்து விடும்

என எச்சரித்தவர் யார் தெரியுமா? என்றோ ஒருநாள் பிரிவினை கேட்டவர் அல்ல! விடுதலைப் போராட்ட தளகர்த்தர்களில் ஒருவரான மௌலானா அபுல்கலாம் ஆசாத் அவர்கள்.

> அரசமைப்பு 17வது பிரிவை அகற்றிவிட்டு மத்திய அரசு, ஆங்கிலத்தை நடைமுறைப்படுத்துவதே இந்திய ஒற்றுமையைக் காக்கும் ஒரே வழி! இந்தியை மட்டும் ஆட்சி மொழியாக தொடர்ந்து அமல் செய்தால் இந்திய துணைக் கண்டம் 15 துண்டுகளாகப் பிரிந்து போய்விடும்
>
> இப்படிச் சொன்னவர் மூதறிஞர் இராஜாஜி அவர்கள்.

1948 ஆம் ஆண்டு அரசமைப்புச் சபையிலேயே டி.டி. கிருஷ்ணமாச்சாரியார் ஓங்கி ஒலித்தது என்ன?

உத்தரபிரதேசத்தைச் சேர்ந்த எனது நண்பர்கள், இந்தி ஆதிக்கத்தைத் திணிக்க முயற்சிக்கும் நிலைமை, எந்த வழியிலும் நமக்கு உதவி புரியப்போவதில்லை. முழு இந்தியா வேண்டுமா? அல்லது இந்தி இந்தியா மட்டும் அவர்களுக்கு வேண்டுமா? என்பதை அவர்களே முடிவு செய்யட்டும்.

இப்படி எச்சரித்தவர்தான் டி.டி.கே. அவர்கள் - ஆனால் யார் அறிவுரையையும் செவி மடுக்காமல், அவ்வப்போது மெல்லக்கொல்லும் விஷமாக இந்தித் திணிப்பை நடத்திக் கொண்டுதான் வருகிறார்கள். அந்தத் திரை மறைவுத் திட்டத்தை அவர்களால் மறைக்க முடியவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டுத்தான் சென்னைக்கு வந்த மத்திய அமைச்சர் அர்ஜுன் சிங் அவர்களின் பேச்சாகும்.

இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து இத்திங்கள் 21-ந் தேதி திராவிடர் கழகம் மறியல் நடத்தி முடித்திருக்கிறது. 28-ந் தேதி திராவிட முன்னேற்றக் கழகம் இரயில் நிறுத்த அறப்போரை நடத்த இருக்கிறது. அந்த நேரத்தில் வந்து அர்ஜுன் இதோ வில்லில் அம்பு - அதே பறவை! அடித்து வீழ்த்துவேன் என்கிறார் எனில்;

இந்தி எதிர்ப்புச் சிப்பாயாக விளங்கும் தி.மு.க. வாயை மூடிக்கொண்டு கிடக்குமா? அதன் எதிரொலி நாடாளுமன்ற மாநிலங்களவையில் கிளம்பியிருக்கிறது. தி.மு.க. உறுப்பினர்கள் அர்ஜுன் சிங் பேச்சுக்குத் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். தொலைக்காட்சியில் தொடரும் இந்தித் திணிப்பை சுட்டிக் காட்டியுள்ளனர். கழகச் சார்பில் திண்டிவனம் வெங்கட்ராமன் பேசியதற்கு தமிழக இ. காங்கிரஸ், அ.தி.மு.க. தரப்பிலிருந்து மாநிலங்களவையில் ஆதரவு காட்டப்பட்டிருக்கிறது. கழக உறுப்பினர்கள் தமது கண்டனத்தை அறிவித்திட அடையாளமாக வெளிநடப்பும் செய்துள்ளனர்.

அடுத்து என்ன? இத்திங்கள் 28 ஆம் நாள் இரயில் நிறுத்த அடையாள அறப்போர்!

தார்பூசி இந்தி எழுத்துக்களைக் கழகத்தின் தடந்தோள் வீரர்கள், வீராங்கனைகள் தமிழகமெங்கும் அழித்திடும் போர்

தொடர்கிறது. இந்த அறப்போரும் சரி; 28 ஆம் நாளன்று நடத்த இருக்கிற அறப்போரும் சரி; ஒரு மொழியின் மீது வெறுப்புக் கொண்டிடும் குறுகிய நோக்கத்தின் வெளிப்பாடு அல்ல; தாய்ப் பாலோடு சேர்த்து நாம் பருகிய தாய்மொழியாம் தமிழுக்கும், இந்திய நாட்டு ஆட்சி மொழியாகும் உரிமை அளிக்கப்படுவதே நியாயம் என்பதை நிலை நாட்டுவதற்காக - அஃதே போல் படிப்படியாக தேசிய மொழிகள் அனைத்தும் மதிப்பு பெறவேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காக - நடைபெறுவதாகும்.

உடன்பிறப்பே, பிப்ரவரி 28; அந்த ஒரு நாள் இரயில் நிறுத்தப்படும்பொழுது தமிழ்ப் பெருங்குடி மக்கள், தங்களின் ஒரு நாள் பயணத்தைத் தவிர்த்துக் கொண்டு, தமிழர்களின் ஒட்டு மொத்தமான எதிர்கால நற்பயனுக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்வதும் - அறவழியில் அமைதி வழியில் நம்மை நாமே ஒப்படைத்துக் கொண்டு போராட்டம் வெற்றி பெறக் கட்டுப்பாடு குலையாமல் அணிவகுப்பதும், கடமையாகக் கொண்டு - களம் கண்டிட வருக எனக் கழகத்து மாமணியே! உன்னை அழைக்கின்றேன்!

அன்புள்ள,

மு. க.

24-02-1994

2104. மணியோசை வந்தது பின்னே! யானை வந்தது முன்னே!

உடன்பிறப்பே,

மத்தியஅரசின் நிதிநிலை அறிக்கையை மன்மோகன்சிங் நாடாளுமன்ற அவையின் முன் வைத்துவிட்டார். புதிய பொருளாதாரக் கொள்கையினால் ஏற்பட்டுள்ள ஏழை எளிய நடுத்தரப் பொது மக்களின் புலம்பலைப் பின்னணியாகக் கொண்டும், வெளிநாட்டு ஆதிபத்தியம், தனது காயகல்பமாகக் கருதுகிற டங்கல் திட்டத்தை ஒளிவுமறைவின்றி காட்சியாக்கிக் காட்டியும் - வெளியிடப்பட்டுள்ளதே இந்த நிதிநிலை அறிக்கையாகும்.

இதனை வெளிநாட்டுப் பிரமுகர்கள், அதிபர்கள் பெரிதும் வரவேற்றுப் பாராட்டியிருக்கிறார்கள். இது ஒன்றே போதும்; இந்த வரவு செலவுத் திட்டம் யாருடைய கடைக்கண் பார்வைக்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதற்குச் சாட்சியம் கூற!

சான்றாக; வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் பொருள்களுக்கு பெருமளவு தீர்வை குறைக்கப்படுகிறது. இது உள்நாட்டு வாணிபத்துக்கும் உற்பத்திக்கும் பெருங்கேடு பயப்பதாகும்.

வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள்; NRI தொழில் முதலீடு செய்வதற்கு விதிக்கப்படும் வரிகளை விட - நேரடியாக வெளிநாட்டுக்காரர்களுக்கு வரிகளைக் குறைத்து, சலுகைகளைக் கூட வெளிநாட்டில் வாழும் இந்தியர்களைவிட வெளிநாட்டுக்காரர்களுக்கு அதிகமாக்கியும் வரவு செலவுத்திட்டம் வரையப்பட்டுள்ளதின் நோக்கமே வெளிநாட்டுக்காரர்களுக்கு ஆதாயம் வழங்குவதற்காகவே என்பது தெளிவாகிறது.

குறைந்த செலவில் இறக்குமதியாகும் பொருள்கள் உள்நாட்டுக்குள் வருவதால், உள்ளூர்ப் பொருள்களை

உபயோகிப்போர், வெளிநாட்டுப் பொருள்களை உபயோகிக்கத் தலைப்படுவர். குறிப்பாக விவசாயத்துறையில் உள்ள பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து குறைந்த விலையில் கிடைக்கும் உணவுப் பொருள்களுக்கு ஒப்பாக - உள்ளூர் விளை பொருள்கள்; சந்தைகளில் போட்டியிட வேண்டும். அந்தப் போட்டியினால் உற்பத்தி விலைக்கும், உபயோகிப்போரிடமிருந்து பெறும் விலைக்கும் இடையில் ஏற்படும் வித்தியாசத்தை ஈடுகட்டி விவசாயிகளுக்கு உதவிட அரசு முன் வரவேண்டுமே; அதற்குரிய நிலைமையில் அரசு இருக்கிறது என்பதையெல்லாம் சிந்திக்க வேண்டும்.

எனவே, இறக்குமதியாகும் அத்தியாவசியப் பொருளான உணவுப்பொருள் பிரச்சினையில்; தொலைநோக்கில் எண்ணும் போது இந்திய நாட்டு விவசாயிகளின் நிலையும் - உபயோகிப்போர் நிலையும் பின்னுக்குத் தள்ளப்பட்டு; ஏழை, எளிய, நடுத்தர மக்களே பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்பது திண்ணம்.

ஆறாயிரம் கோடி துண்டு விழும் திட்டம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தப் பற்றாக்குறை மேலும் அதிகமாகுமென்பதற்கு கடந்த ஆண்டு வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டையும் - திருத்த மதிப்பீட்டையும் கூர்ந்து கவனித்தாலே போதுமானது.

கடந்த ஆண்டு பற்றாக்குறை மதிப்பீடு சுமார் 4300 கோடி ரூபாய்! கடந்த ஆண்டு பற்றாக்குறை திருத்திய மதிப்பீடு சுமார் 9000 கோடி ரூபாய்! அதாவது எதிர்பார்த்ததற்கு மேலாக ஏற்பட்ட பற்றாக்குறை சுமார் 5000 கோடி ரூபாய்! நாலாயிரம் கோடிக்கே திருத்திய மதிப்பீடு ஒன்பதாயிரம் கோடி என்றால்; இப்போது 6000 கோடி என அறிவிக்கப்பட்டுள்ள பற்றாக்குறை, திருத்திய மதிப்பீட்டில் எவ்வளவு உயருமோ?

அந்தப் பற்றாக்குறை உயர்வு; வரிகளின் மூலமும் கட்டணங்களைக் கூட்டுதல் மூலமும்தான் சரிக்கட்டப்பட வேண்டிய சூழல், பெரும்பாலும் இருக்குமென்கிறபோது; ஏற்கெனவே பெட்ரோல், டீசல், சமையல் வாயு, சர்க்கரை, அரிசி, கோதுமை, மின்கட்டணம், ரயில் கட்டணம், பஸ் கட்டணம் போன்ற உயர்வுகளால் கழுத்தையும் முதுகையும் முறித்துக்கொண்டு கிடக்கிற சாதாரண மற்றும் நடுத்தர மக்கள் - சந்தியில் நின்றது மாறி, சாக்கடையில் விழ வேண்டியது தான்!

மக்களைத் திணற அடிக்கிற அளவுக்கு வரிகளையும், கட்டணங்களையும் உயர்த்தியும் கூட; கடந்த ஆண்டு சுமார் 63000 கோடி ரூபாய் வரி மூலம் வருவாய் எதிர்பார்த்து, சுமார் 55000 கோடி ரூபாய்தான் கிட்டியுள்ளது. இந்த ஆண்டும் 63000 கோடி எதிர்பார்க்கப்படுவதாக நிதிநிலை அறிக்கை தெரிவிக்கிறது. இதிலும் கடந்த ஆண்டைப் போல எட்டாயிரம் கோடி ரூபாய், திருத்திய மதிப்பீட்டில் குறையாது என்பதற்கு என்ன உத்திரவாதம்!

எனவே, மற்றொரு கோணத்தில் பார்த்தால், பொருளாதார நிலையில் ஏற்பட்டுள்ள இந்தக் குழப்பத்தைப் போக்கிட என்ன வழி காணப் போகிறார்கள்?

வழக்கம் போல் பெரும் பணத்திமிங்கலங்கள் நடந்து வர, மலர்ப்பாதையும் - ஏழை எளியோர், நடுத்தர மக்கள், பாட்டாளி மக்கள், கிடந்து புரள முட்களால் ஆன பாயும் தானா?

இந்த பட்ஜெட்டைப் பார்க்கும்போது அப்படித்தானே பதில் கிடைக்கிறது!

புது வருவாய்க்கான வாய்ப்பு கூறுகள், இந்த நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்றிருந்தாலும் கூட; அவற்றில் மாநிலங்களுக்கு ஏதாவது பகிர்ந்து கொடுக்கப்படுமா - என்ற பேச்சுக்கே இடமில்லாதிருப்பது இன்னமும் மாநிலங்களை மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன்தான் கருதுகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே! என்பது பழமொழி!

ஆனால்; மணியோசைக்கு முன்னே இங்கு யானை வந்தாகி விட்டது! அதுவும் மதயானை!

ஆம்; கட்டண உயர்வுகள், விலைவாசி உயர்வுகள், வரி உயர்வுகள் - போன்ற இந்த யானைகள், பட்ஜெட்டுக்கு முன்பே வந்து விட்டனவே!

அன்புள்ள,

மு. க.

02-03-1994

2105. ஆளுநருக்கும் - முதல்வருக்கும் நன்றி மடல்!

உடன்பிறப்பே,

எந்தக் கட்சியின் ஆட்சியாக இருந்தாலும், அது எப்படி எப்படி மாறி மாறி அமைந்தாலும் - நிர்வாகம் என்பது நிலையானது. அதன் நிலைத்த தன்மைக்கும், இயங்கும் திறனுக்கும் - ஆட்சிப் பொறுப்பில் உள்ளோர் ஒரு காரணமாயிருப்பினும்; நிர்வாகம் விரைந்து செயல்படுவதற்கு; அந்த இயந்திரத்தைச் சுழற்றுபவர்களே ஆர்வத்துடனும் அக்கறையுடனும் பணிபுரிந்திட வேண்டும்.

இது ஆட்சிகளின் நிர்வாகத்திற்கு மட்டுமல்ல; கட்சிகளின் செம்மையான நிர்வாகத்திற்கும் தேவை! ஏனெனில், கட்சிகளேதான் ஒரு காலகட்டத்தில் ஆட்சிப் பொறுப்புக்களை ஏற்பதால் எப்போதும் சீரான நிர்வாகம் நடத்திடக் கற்றிருப்பது நலமன்றோ! அப்படியொரு நிர்வாக வேகமும் - அலட்சியப்படுத்திடாத அக்கறையும் கொண்டு ஓர் அரசு செயல்பட்டுள்ளதற்கு உதாரணமொன்றை உனக்குக் கூற விரும்புகிறேன்.

மராட்டிய மாநிலத்தில் அம்பேத்கர் பெயரை ஒரு பல்கலைக் கழகத்திற்குச் சூட்டுவதற்கு ஒருசார் எதிர்ப்பு தெரிவித்து; அதனைப் பெரும் பிரச்சினையாக்கியது நாடறிந்த உண்மை!

அவர் பிறந்த மாநிலத்திலேயே அவர் பெயர் வைக்க அவ்வளவு பிரச்சினை! ஆனால் இங்கே தமிழ்நாட்டில் இருபது ஆண்டுகளுக்கு முன்பே கழக ஆட்சியில் 1974-ல் டாக்டர் அம்பேத்கர் பெயரில் அரசினர் கல்லூரி - அது மட்டுமல்ல; சட்டக் கல்லூரிக்கு அம்பேத்கர் பெயர் - மாநில முழுதும் பல்வேறு இடங்களில் அண்ணல் அம்பேத்கரின் சிலை திறப்பு விழாக்கள் - 1989 ஆம் ஆண்டு மீண்டும் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றபோது;

இந்தியாவிலேயே எங்குமில்லாத அளவுக்கு டாக்டர் அம்பேத்கர் பெயரால் வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம் அமைக்கப்பட்டது.

இவ்வாறு அம்பேத்கர் அவர்கள், கரத்தில் ஏந்திய புரட்சி தீபத்துக்கு; அது மேலும் நின்றோங்கி ஒளிவிட - திராவிட இயக்கம், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகம், திரியாய் - நெய்யாய் பயன்பட்டு வருகிறது.

எனவேதான், மராட்டியத்து மரத்வாடா பல்கலைக் கழகத்துக்கு டாக்டர் அம்பேத்கர் பெயர் சூட்டுவதை எதிர்த்துக் கிளம்பிய கூச்சலைக் கழகம் கடுமையாகக் கண்டித்தது. கழகச் சார்பில் நான் அறிக்கை வெளியிட்டது மட்டுமல்ல; முரசொலியில் கடிதமும் எழுதினேன்.

தொடர்ந்து தஞ்சாவூரில் கடந்த டிசம்பர் திங்கள் 29.12.1993 நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுவில் மரத்வாடா பல்கலைக் கழகத்திற்கு அம்பேத்கர் பெயர் சூட்டப்படவேண்டுமென்பதை வலியுறுத்தி ஒரு தீர்மானம் விரிவான அளவில் நிறைவேற்றப் பட்டது. அந்தத் தீர்மானத்தை ஆங்கில மொழிபெயர்ப்பு செய்து; மராட்டிய கவர்னர் பல்கலைக்கழக வேந்தர் என்ற முறையில் மேதகு அலெக்சாண்டர் அவர்களுக்கும் - மராட்டிய முதல்வர் மாண்புமிகு சரத்பவார் அவர்களுக்கும் தலைமைக் கழகச் சார்பில் அனுப்பி வைக்கப் பட்டது. அனுப்பி வைக்கப்பட்ட தீர்மானத்தின் ஒரு பகுதி:-

The D.M.K. General Council which met at Thanjavur on 29.12.1993 under the presidentship of Dr. M. Kalaignar Karunanidhi and passed 15 resolutions. The resolution No. 6, insists that the Government of Maharashtra should take immediate steps to rename the Marathwada University as Dr. Ambedkar University.

மேலும் தஞ்சைப் பொதுக்குழு எடுத்த முடிவின்படி, மராட்டிய அரசுக்கு இலட்சக்கணக்கான தந்திகள் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டன. தஞ்சைப் பொதுக்குழு தீர்மானத்துடன் நான், மராட்டிய முதல்வருக்கும் - ஆளுநருக்கும் கடிதம் எழுதினேன்.

ஆளுநர் அலெக்சாண்டர் அவர்கள் என் கடிதம் கிடைத்த தகவலை ஜனவரி 5-ஆம் நாள் எனக்கு எழுதியதுடன்

உரிய நடவடிக்கை மேற்கொள்ள, அக்கடிதம் முதல்வருக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

அதன் பிறகு ஜனவரி 14-ஆம் நாள் மராட்டிய முதல்வர் சரத்பவார் அவர்கள் எனக்கு தஞ்சைப் பொதுக்குழு தீர்மானம் கிடைத்தது பற்றி கடிதம் எழுதினார். அத்துடன் மராட்டிய மாநில அரசின் ஒரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இதோ அந்தக் கடிதத்தை அப்படியே இணைத்துள்ளேன்.

To,

Sr. M. Karunanidhi,

Dravida Munettra Kazhagam,

Gopalapuram,

Madras - 600 086.

Subject :- Resolution passed by the D.M.K. General Council regarding renaming of the Marathwada University as Dr. Ambedkar University.

Sir,

I am desired to refer to your letter dated the 31st December, 1993, addressed to the Honourable Governor of Maharashtra on the subject mentioned aove and to state that the Hon'ble Governor has already promulgated an Ordinance No. 1 of 1994 dated the 14th January 1994 renaming Marathwada University, Aurangabad after Dr. Babasahed Ambedkar. A copy of the said Ordinances is enclosed for your information.

Yours faitfully.

N. K. LAKHANPAL

SECRETARY TO GOVERNMENT

அதாவது உடன்பிறப்பே, தஞ்சைப் பொதுக்குழு தீர்மானமும் அத்துடன் என் கடிதங்களும், மேலும் அம்பேத்கர் பெயரை பல்கலைக் கழகத்திற்கு சூட்ட வேண்டுமென்ற லட்சக்கணக்கான தந்திகளும் வீண்போகவில்லை. அதனை மராட்டிய அரசு மதிக்கத் தவறவில்லை. அதனால்தான் ஆளுநர் பிறப்பித்த அவசரச் சட்டத்தின் நகல் ஒன்று நமக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த அவசர சட்டத்தின் முக்கிய பகுதிகளையும் இக்கடிதத்தில் இணைத்துள்ளேன்.

HIGHER AND TECHNICAL EDUCATION DEPARTMENT

Mantralaya, Bombay 400 032, dated the 14th January 1994.

MAHARASHTRA ORDINANCE No. I OF 1994

AN ORDINANCE

further to amend the Marathwada University Act, 1974.

1. Sort title and commencement. - 1 This Ordinance may be called the Marathwada University Amendment Ordinanace, 1994.

2 It shall come into force at once.

2. Amendment of Mah. XXV of 1974. - Throughout the Marathwada University Act, 1974 including in the long title and the preamble, except in sections 81 and 90, unless the context otherwise requires, for the words "Marathwada Uversity", wherever they occur, the letters and words "Dr. babasaheb Ambedkar Marathwada University" shall be substituted.

அம்பேத்கரின் அவர்களின் நினைவு போற்றுவதையும் - அவர் கொண்டிருந்த கொள்கைக்கு மரியாதை அளிப்பதையும் - அதனை நிறைவேற்றுவதையும்; கடமைகளில் ஒன்றாகக் கொண்ட கழகம் எடுத்த முயற்சிக்கு வெற்றி கிட்டியதற்காக மட்டுமல்ல; கழகத்தின் வேண்டுகோளுக்கு மராட்டிய அரசு அளித்துள்ள மதிப்புக்கும், கழகம் பெருமிதம் கொள்வதோடு; மராட்டிய ஆளுநர் மேதகு அலெக்சாண்டர் அவர்கட்கும் முதல்வர் சரத்பவார் அவர்கட்கும் - இலட்சக்கணக்கில் தந்திகள் அனுப்பிய உன்போன்ற உடன்பிறப்புகளுக்கும் என் இதய நன்றியைக் கழகச் சார்பில் காணிக்கையாக்குகிறேன்.

அன்புள்ள,

மு. க.

2106. தென்றலாய் - தாமிரபரணியாய்...

உடன்பிறப்பே,

கழகத்தின் முதல் மாநில மாநாடு 1952 சென்னையில் எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் நமது அண்ணன் தலைமையில் நடந்தபோதுதானே - மூன்றெழுத்துச் சொற்களை முப்பதுக்கு மேல் அடுக்கி இறுதியாகவும் முத்தாய்ப்பாகவும் அண்ணா மூன்றெழுத்து என உரைத்து, அவரை மாநாட்டுக்குத் தலைமையேற்க வழிமொழிந்தேன். அதற்கு பிறகு பல ஆண்டு கழிந்தல்லவா மூன்றெழுத்தில் மூச்சிருக்கும் என்ற பாடல்கள் எல்லாம் பிறந்தன.

என்ன திடீரென மூன்றெழுத்து புராணம்? கேட்கிறாய்; புரிகிறது!

முத்தமிழ், மூவேந்தர், மும்முரசு, முக்கனி, முச்சங்கம் - இவையெல்லாம் இனிக்கும் சொற்றொடர்கள் அல்லவா, தமிழர்களுக்கு!

இப்போதும் மூன்றின் நினைவு, நெஞ்சில் முகிலாய் உலவி, இன்ப மழையாய்ப் பொழிகிறது!

ஆம்; சிதம்பரனார், குமரி, நெல்லை கட்டபொம்மன் - இந்த மூன்று மாவட்டங்களில் கழக நிகழ்ச்சிகள்! நமது துணைப் பொதுச்செயலாளர் ஆர்க்காடு வீராசாமி, தலைமைக் கழகச் செயலாளர் தம்பி துரைமுருகன், இலக்கிய அணித்தலைவர் முனைவர் தமிழ்க் குடிமகனார் என்னுடன் வந்தனர்.

நால்வகை நிலத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம் என்று மூன்றும்போக; திரிந்த நிலமே பாலை எனப்படுமன்றோ! அப்படிக் கழகத்தின் இன்றைய பாலை நிலப்பகுதிகள்தான் அந்த மூன்று மாவட்டங்களும் என்று சொல்லப்பட்டதே; எழுதப்பட்டதே; எப்படித்தானிருக்கிறது என்று பார்ப்போமே என்றுதான் பயணத்தைத் தொடங்கினேன்.

விளம்பரமேதுமின்றி மதுரை ரயிலடியில் இறங்கியபோதிலும், செய்தி கேள்வியுற்ற கழக உடன்பிறப்புகள் ஆயிரத்துக்குமேல் குழுமி விட்டனர். மதுரை புறநகர் மாவட்ட அக்கினிராஜ், மதுரை மாநகர் மாவட்ட காவேரி, பசும்பொன் கிருட்டிணன் எம்.பி., திண்டுக்கல் அய. பெரியசாமி ஆகிய செயலாளர்கள் தலைமையில் திரண்டோரின் வரவேற்புக்குப் பிறகு ஒரு மணி நேர ஓய்வு மதுரையில் - அதற்கிடையே செய்தியாளர்கள் சந்திப்பு! தொடர்ந்து பயணம் நெல்லை நோக்கி! சாலையில் இருமருங்கிலும் எழுச்சிமிக்க இளைஞர், பெரியோர், பெண்டிர், பொதுவாகச் சொன்னால் உழைக்கும் வர்க்கமாம்; தமிழ்ப் பெருங்குடி மக்கள்!

நீண்ட நேரமாயிற்று நெல்லை சங்கர் நகர் தங்கும் விடுதியைச் சென்றடைய! வழியில் எதிரிலேயே சிதம்பரனார் மாவட்ட செயலாளர் பெரியசாமியும், நெல்லை கட்டபொம்மன் மாவட்ட பொறுப்பாளர் ஆவுடையப்பனும், குமரி மாவட்டம் டாக்டர் ஆல்பனும் வரவேற்று மகிழ்ந்தார்கள். அவர்கள் தலைமையில் வந்த உடன்பிறப்புகளின் உற்சாகம் கரைபுரண்டது! ஏதோ ஒரு இனம் தெரியாத உணர்வு அவர்தம் இதயங்களில் எரிமலைக் கனலாய் இருந்ததைக் கண்ட மாத்திரத்தில் புரிந்து கொள்ள முடிந்தது.

சங்கர் நகர் விடுதிக்குள் எத்தனையோ முறை நுழைந்திருக்கிறேன். ஆனால் அன்று? கொந்தளிக்கும் கடலைக் கிழித்துக் கொண்டு கப்பலொன்று செல்வது போலத்தான் என் கார் சென்றது!

மாலையில் தூத்துக்குடியில் பொதுக் கூட்டம் - தூத்துக்குடி என்றதும் எனக்கு எப்போதுமே 1949 ஆம் ஆண்டு அக்டோபர் 17 ஆம் நாள் அந்த நகரில் தி.மு.கழகத்தைத் தொடங்கி வைத்தேனே; அந்த நிகழ்ச்சிதானே நெஞ்சில் ஊஞ்சலாடும்! அடுத்த நினைவு மாவீரன் தளபதி கே.வி.கே. சாமியைப் பற்றியது! செல்லும் வழியெங்கும் எமை வெல்லும் படையுண்டோ? எனத் தோள் தட்டிக் கேட்பதுபோல இளைய வீரர்களின் கூட்டம்! பல இடங்களில் வரவேற்புகள், கொடியேற்றும் நிகழ்ச்சிகள் - பின்னர் தூத்துக்குடியில் கே.வி.கே. சாமியின் நினைவு போற்றும் வகையில் அவரது சிலைக்கு மாலை அணிவித்த நிகழ்ச்சி!

அதன்பிறகு தம்பி பெரியசாமி எங்களைக் காரில் அமர்த்தி, பொதுக் கூட்ட மேடைக்கு அழைத்துச் சென்றபோது வழியெல்லாம்

விண்மீன்கள் ஒருசேர உதிர்ந்ததுபோல் நிறைந்து கிடந்த மின்விளக்கு அலங்காரங்களை விழியெல்லாம் அகலத்திறந்து, வியப்புடன் கண்டு களித்தோம்.

மாவட்ட செயலாளர் பெரியசாமியும், நகரக் கழகச் செயலாளர் ஜெயபாண்டியனும் தங்களின் பேராற்றலை வெளிப்படுத்திக் காட்டினால், தூத்துக்குடியில் கழகம் எத்துணை வலிவும் பொலிவும் பெறும் என்பதை மாநாடு போன்ற அந்த மகத்தான கூட்டம் தெளிவுபடுத்தியது. என் மீதும் கழகத்தின் மீதும் முரட்டுப் பக்தி செலுத்துபவர்தான் தூத்துக்குடி பெரியசாமி!

நெல்லை வரும் வழியிலேயே கோயில்பட்டியில் கொடுமதியாளர்களால் கொலையுண்ட தம்பி ஜெயச்சந்திரன் இல்லம் சென்று குடும்பத்தாரின் கண்ணீருடன் என் கண்ணீரையும் கலந்து, அந்த மாவீரன் உருவப்படத்துக்கு அஞ்சலி செலுத்தினேன் - அவர் மகன்கள் பொற்செழியனும் உதயசூரியனும் தூத்துக்குடி கூட்டத்திற்கு வந்திருந்தனர். ஜெயச்சந்திரன் குடும்ப நிதியாக ஒரு லட்ச ரூபாய், மாவட்டக் கழகத்தின் சார்பாக வழங்கப்பட்டது. அந்த மாபெரும் கூட்டத்தில் என் பேச்சு, பெரும் பகுதி இன்றைய நாட்டு நிலை குறித்தே அமைந்தது! நெல்லையிலும் குமரியிலும்தான் கழகத்தில் எழுந்த பிரச்சினைகள் குறித்து நீண்ட விளக்கமளிக்க வேண்டியிருந்தது. ஏற்கெனவே விழித்துக்கொண்டவர்கள் மேலும் ஆதாரபூர்வமான விளக்கங்களைப் பெற்றனர்.

தூத்துக்குடி மேடையில் ஒரு குறிப்பிடத்தக்க சிறப்பு என்னவென்றால்; எங்களுக்கு மாலை அணிவிப்போர், கைத்தறி ஆடை அணிவிப்போர் - ஒரே நேரத்தில் மேடையை ஆக்ரமிக்கவில்லை. உள்ளூர் பேச்சாளர்கள் உரையாற்றி முடித்தவுடன்; மாலை, கைத்தறி ஆடை அணிவிப்போர் வரிசையில் நின்று, ஒவ்வொருவராக மேடைக்கு வந்து மறுபுறம் இறங்கிச் சென்றனர். அதனால் முக்கிய பேச்சாளர்களும் நானும்; மாலை மரியாதை சடங்குகள் இடையில் குறுக்கிடாமல் பேச முடிந்தது!

இதில் தூத்துக்குடியை இனிமேல் கூட்டம் ஏற்பாடு செய்கிற அமைப்புகள் பின்பற்றினால்; மிக மிக நலமாக இருக்கும்.

அடுத்த நாள் மார்ச் 5-ஆம் தேதி குமரி மாவட்டம் நாகர்கோயில் கூட்டம்! மாவட்ட பொறுப்புக்குழு செயலாளர் டாக்டர் ஆல்பனும், பொறுப்புக்குழு உறுப்பினர்களும் நகரக் கழக செயலாளர் தம்பி

ராஜனும் - நாங்கள் எங்கும் கண்டிராத கழகத்தின் எழுச்சிக்கோலம் - எழிற்கோலத்தை நாகர்கோயிலில் எமக்குக் காட்டி மகிழ்வித்தனர்.

ஒருவேளை நாகர்கோயில் நம் பக்கமில்லை என்ற வதந்தியை நம்பிப்போனதால்; அந்த எழுச்சியும் ஆர்வமும் அவ்வளவு பெரிதாகத் தெரிந்ததோ என்னவோ!

நாகர்கோயில் போவதற்கு முன்பே நமது துணைப் பொதுசெயலாளர் நாஞ்சிலார் என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு; தவறான பாதைக்குச் சென்று விட்ட தர்மராஜ் மீண்டும் - தமிழினம் காக்கும் நமது கழகத்திற்கு வருகிறார் என்ற செய்தியைச் சொல்லியிருந்தார். அதேபோல நாகர்கோயில் நகராட்சியின் முன்னாள் தலைவர் தர்மராஜ், அன்று கழக மேடையிலேறி நமது கழக உடன்பிறப்புகளின் அங்கீகாரத்தைப் பெற்றார். அவர்தான் சொன்னார்; துரோக சக்திகளுடன் இந்து முன்னணி வாலிபர்களும் - அ.தி.மு.க. தொண்டர்களும் அணி வகுப்பதாக!

அந்த விபரத்தை சங்கரலிங்கம் அவர்கள் பொதுக்கூட்டத்திலும் வெளியிட்டார். அவர் சொன்னது சரிதான் என்பதை மெய்ப்பிக்க, அந்த வட்டாரங்களில் சில செய்திகள் - சில ஏடுகளில் படங்களும் - சாட்சி கூறின!

மூன்றில் சிறந்ததாக மூன்றாவதான நெல்லை நிகழ்ச்சி அமைந்தது என்பதை; நான் சொல்லவில்லை - குமரி ஆல்பனும், தூத்துக்குடி பெரியசாமியுமே மேடையில் பேசும்போது வியந்து போற்றினர் - புகழ்ந்தனர்.

உடன்பிறப்பே, எப்படி வர்ணிப்பேன் நெல்லை நிகழ்ச்சியை!

குற்றாலம் வற்றிக் கிடக்கிறது எனக் கேள்வியுற்று; உண்மைதானா எனத் தெரிந்து கொள்ளப்போகும்போது - ஐந்தருவி, தேனருவி, என அனைத்து அருவிகளிலும்; தண்ணீர், இசை முரசு கொட்டிக்கொண்டு பொழிவது கண்டால், எப்படியிருக்கும் - பொய்க் கதை கட்டியோர் மீது கோபம் வரவில்லை; பொங்கி வழியும் அருவி கண்டு பூரித்துப் போவோம்! அவ்வாறுதான் இருந்தது நெல்லைப் பெருவிழா! ஆமாம்; அது திராவிடர் திருவிழா!

மாவட்டப் பொறுப்புக்குழு செயலாளர் கீர்த்தி பெற்ற வழக்கறிஞர் ஆவுடையப்பனும் மற்றும் பொறுப்புக்குழு

உறுப்பினர்களும் நகரப் பொறுப்பாளர் ஆழ்வாரும் இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, தொழிலாளர் அணி, தொண்டர் அணி, உடன்பிறப்புகளும் நெல்லையில் கழகத்து நிகழ்ச்சியை ஓர் இலக்கியமாகவே, ஈடற்ற எழில் ஓவியமாகவே தீட்டிக் காட்டி விட்டனர். கூட்டமா அது? இல்லை; இல்லை! நெல்லையை வெல்லும் கூட்டம் எங்கே எப்போது என்று தேடிக் கொண்டிருக்கிறேன்!

அந்தக் கூட்டத்தைப் பார்த்து முன்னாள் எம்.பி. சிவப்பிரகாசம் முப்பது வயதுக்குக் குறைந்தவர்கள் கையை உயர்த்து என்றார். எண்பது சதவிகித இளைஞர்கள் அக் கூட்டத்தில் கை உயர்த்தி முழக்கமிட்டனர். பத்திரிகைக்காரர்களே! பார்த்துக்கொள்ளுங்கள் எனக் கூறி அவர் பேச்சை முடித்துக் கொண்டார்.

மாவட்டப் பொறுப்பாளர்கள், பொறுப்புக் குழுவினர், ஒன்றிய, நகர கிளைகளின் செயலாளர்கள், இளைஞர் அணி, தொண்டர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, இலக்கிய அணியினர் அனைவரும் ஒருங்கிணைந்து, இந்தத் தென் மாவட்டங்கள் மூன்றிலும் தெவிட்டாத பலாச்சுளைச் சுவையை எனக்கு அளித்திட்டார்கள், அந்த ஆற்றல் மிகு செயல்வீரர்களாம், உடன்பிறப்புகளின் பெயர்களையெல்லாம் அந்தந்த மேடைகளில் குறிப்பிட்டு விட்டேன். அதனால் மடலில் குறிப்பிடவில்லை! ஒன்றிரண்டு பெயர்கள் மறந்து விட்டால்; நான் கொண்டுள்ள மகிழ்ச்சிக்குக் குறை வந்து சேருமல்லவா? அதனால்தான் குறிப்பிடவில்லை. மன்னித்திடுக; என் நெஞ்சில் நிறைநாதமாக இருக்கிறார்கள்.

பொதிகை மலை விட்டெழுந்து தென்றலும் அங்கிருந்து தாமிரபரணியும் முறையே உடல் வளம் ஊர்வளம் பெருக்கிட வருகின்றன - இப்போது அந்தப் பகுதியின் கழக மாவீரர்கள் எனக்குத் தென்றலாய் - என்றும் கொள்கை உறுதி வற்றாத தாமிரபரணியாய் தெரிகிறார்கள்!

வாழ்க, வளர்க - மேலும் கழகம் வலிவு பெறுக; என வாழ்த்தி அவர்தம் கரங்களை எடுத்து என் கண்களில் ஒற்றிக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

10-03-1994

2107. அரசியும் - ஆண்டிப் பரதேசியும்!

உடன்பிறப்பே,

பார்வையாளர்களின் முதல் வரிசையிலும், அதைத் தொடர்ந்து இடையிடையே இருந்த வரிசைகளிலும் பெரும்பாலும் ஆடவர்களோ வீற்றிருக்க; ஏதோ சாஸ்திரத்துக்கு என்பார்களே அதுபோல ஒன்றிரண்டு மகளிரும் அரிதாகத் தென்பட, சென்னை கலைவாணர் அரங்கில் சர்வதேசப் பெண்கள் விழா, மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டுள்ளது. அரங்கத்தின் உட்புறத்து சுவர்களில் கூட முதலமைச்சர் ஜெயலலிதாவின் வண்ணவண்ணக் கட் அவுட்கள் எண்ணிக்கையில் சுமார் இருபதுக்கு மேல் வைக்கப்பட்டிருந்தன. அந்தக் கட்அவுட்களுக்கு இடையே அ.தி.மு.க.வின் இரட்டை இலை சின்னங்களும் இடம் பெறத் தவறவில்லை. கட்சிச் சார்பற்ற முறையில் மக்கள் பணியாற்றும் அன்னை தெரசாவும் கலந்து கொண்ட அந்த அரசாங்க விழாவில்தான்; இப்படியொரு கட்சிப் பிரச்சாரம்!

அன்னை தெரசாவை அழைத்து வந்த வீதிகள், சாலைகள், குறுக்குவேலிகள் அனைத்திலும் ஜெயா அன்னையின் கட் அவுட்களே நீக்கமற நிறைந்திருந்தன! அவைபோக மிச்சத்தை கலைவாணர் அரங்கிற்குள்ளும் வைத்து அலங்கரித்து விட்டார்கள்.

நாவலர் பாவம்; முன் வரிசையில் உட்கார்ந்து கொண்டு, உள்ளம் முணுமுணுப்பதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் - இப்படியும் ஒரு காலம் வந்ததே; உம்! இது நாமாக ஏற்படுத்திக் கொண்டதுதானே! என்று தன் மனத்தோடு போராடிக் கொண்டிருப்பதை அவர் முகத்தைப் பார்த்தே நீ தெரிந்து கொள்வாயே! அது போகட்டும்; அந்த விழாவில் சர்வதேசப் பெண்கள் தினத்தையொட்டி முதலமைச்சர் ஜெயலலிதா என்ன பேசியிருக்கிறார் என்பதுதான் முக்கியம்!

இந்து வாரிசு உரிமைச் சட்டத்தை திருத்தி பெண்களுக்கு சம உரிமை எனத் திருத்தச் சட்டம் கொண்டு வந்தது 1989-ல் தி.மு.க. ஆட்சி என்பதை அவர் மட்டுமல்ல; பத்திரிகா தர்மம் பேசுகிற ஏடுகள் எல்லாம்கூட சாமர்த்தியமாக மறைத்துவிட்டாலும்கூட; ஏதோ அதையும் அ.தி.மு.க. ஆட்சியாளரே சாதித்ததுபோல ஜெயலலிதா அவர்கள் அந்த விழாவிலும், அன்னை தெரசாவின் முன்னிலையில் பேசியிருப்பது இன்று வளர்ந்து வரும் அரசியல் பண்பாட்டுக்கு? ஏற்ற ஒன்றுதானே!

முதலமைச்சர் அந்த விழாவில் இன்னொரு அறிவிப்பையும் செய்துள்ளார். அதாவது பெண்களுக்கு எல்லாவற்றிலும் சரிபாதி பிரதிநிதித்துவம் தரப்படவேண்டும் என்றும் கூறியதோடு, அதற்காவன இந்த அரசு செய்யும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கெனவே தி.மு.க. ஆட்சியில் பெண்களுக்கு முப்பது சதவிகித பிரதிநிதித்துவம் எல்லா பொறுப்புகளிலும் இருக்க வேண்டுமென்ற திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளதே; அத்திட்டம் இப்போது செம்மையாகச் செயல்படுகிறதா என்பதைப் பற்றியே அக்கறை கொள்ளாதவர்கள் அம்மணிக்கு ஐஸ் வைத்து குளிர்விக்க முயல்கிறார்களேயன்றி - அந்த முப்பது சதவிகித பிரதிநிதித்துவத்தைப் பெண்கள் பெற்றிட ஆற்றிய கடமை என்ன?

உள்ளாட்சிமன்றத் தேர்தல்களில் எல்லா மட்டங்களிலும் பெண்களுக்கும் முப்பது சதவிகித இடஒதுக்கீடு என தி.மு.கழக அரசு அறிவித்து; மாநாகராட்சி முதல் ஊராட்சி மன்றங்கள் வரையில் தேர்தல் நடத்த தேதி குறிப்பிடும் அந்தக் காலகட்டத்தில்தான்; ஜெயலலிதா, ராஜீவுக்கு சொல்ல - ராஜீவ், சந்திரசேகருக்குச் சொல்ல - அவர், ஜனாதிபதி வெங்கட்ராமன் அவர்களுக்குச் சொல்ல - மிக எளிதாகக் கழக ஆட்சிக் கலைப்பை நடத்தி முடித்தார்கள். வாழ்க அவர்களின் ஜனநாயகத் திருத்தொண்டு!

அப்போது நடைபெறுவதாக இருந்த உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெற்றிருந்தால் - 30 சதவிகிதம் பெண்கள் உள்ளாட்சி மன்றங்களில் பொறுப்பு வகித்திடும் நிலையை, பூரிப்புடன் கண்டிருக்க முடியும்!

ஜெயலலிதா சொல்கிறபடி எல்லா மட்டங்களிலும் 50 சதவீதம் பெண்கள் இடம் பெறுவது கூட பிறகு இருக்கட்டும் - கழக ஆட்சி அறிவித்த 30 சதவீதம் இடங்களில் பெண்கள் பிரதிநிதித்துவம்

பெற்றிட; உள்ளாட்சி மன்றத் தேர்தல்களையும் மாநகராட்சித் தேர்தல்களையும் இந்நேரம் நடத்தி முடித்திருக்க வேண்டாமா? ஏ, அப்பா; பார்த்தாயா உடன்பிறப்பே - அம்மையாருக்கு எத்தனை எத்தனை பட்டங்கள்! எத்தனை எத்தனை வீர விருதுகள்! எவ்வளவு பாராட்டு விழாக்கள்! அடடா; பெண்கள் குலத்தை உய்விக்க வந்த வானதேவதையாகவே உருவகப்படுத்தி வர்ணிக்கிறார்கள்!

கழக ஆட்சியில் பெண்களுக்கு சொத்தில் சம உரிமை -

வேலை வாய்ப்புகளில் முப்பது சதவிகிதம் -

ஏழையர் இல்லங்களில் எட்டாவது வரையில் படித்த பெண்கள் திருமணமாகாமல் இருந்தால் மணவிழா நிதியாக ஐயாயிர ரூபாய் -

கர்ப்பவதிகளுக்கு பிரசவ காலத்தில் இருநூறு ரூபாய் அன்பளிப்பு -

முதன்முதலாக மகளிர் காவல்துறை அமைப்பு -

தொடக்கப் பள்ளிகளில் முதல் இரண்டு வகுப்புகளுக்கு ஆசிரியர்களாகப் பெண்கள் நியமனம் - படிப்படியாக ஐந்தாம் வகுப்பு வரை பெண்களே ஆசிரியர்களாக நியமிக்கப்படுவர் என்ற அறிவிப்பு -

கதர் கிராமத் தொழில் வாரியத்தில் மூன்றரை லட்சம் பெண்களுக்கு வேலை வாய்ப்பு பெண்களுக்கு ஆட்டோ ரிக்ஷாக்கள் வாங்க அரசின் நிதி ஒதுக்கீடு -

ஏழை நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு இளங்கலைப் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி -

விதவைத் திருமண திட்டம் -

கலப்புத் திருமணத் திட்டம் - இன்னும் பல உண்டு!

மகளிர்க்கென இத்தனை திட்டங்களை என் தலைமையில் இருந்த கழக ஆட்சி வகுத்தளித்து வகைப்படுத்தி செயல்படுத்தியபோது எந்தப் பத்திரிகையும் அவற்றைக் கண்டு கொள்ளவே இல்லை!

ஆனால் இன்று பாரேன்; தமிழகம் என்பது திராவிட இயக்கத்தின் தாக்கம் நிறைந்த பூமி என்பது உண்மைதானா என்று

சந்தேகம் எழுகிற அளவுக்கு அம்மணியின் பாதாதி கேசம் வரையில் பாராட்டு மழையல்லவா பொழிவிக்கப்படுகிறது!

என் செய்வது; அரசு நடத்திடும் தமிழரசு என்ற ஏடு - அது கூட கழக ஆட்சியில் தொடங்கப்பட்டதுதான்; அந்த ஏட்டில், முதலமைச்சர் என்ற முறையில் என் படம் ஒன்றிரண்டு வெளியிடப்பட்டது என்பதற்காக அன்றைய சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ஹண்டே அவர்கள் அவையில் அந்த தமிழரசு ஏட்டை எடுத்துத் தூக்கிப் பிடித்துக் காட்டி ஆவேசமாக முழங்கினார் இது Personality Cult பர்சனாலிடி கல்ட் - பூஜா மனோபாவம் - என்று! ஆம் கோபமாகக் கேலி செய்தார்!

ஆனால் இப்போது நடக்கிற ஆட்சியைக் கேலி செய்ய பர்சனாலிடி கல்ட் என்று பல்லை நறநறவென்று கடிக்க எத்தனை ஹண்டேக்கு வேண்டும்; எண்ணிப் பார்த்தாயா என்னரும் உடன்பிறப்பே!

ஒரு கதை தெரியும் உனக்கு! அரசி யொருத்தி ஆரஞ்சுப் பழச்சுளையைத் தின்று விட்டு தோலைத் தெருவில் வீசி எறிந்தாள். அதை ஒரு ஆண்டிப் பரதேசி எடுத்து சுவைத்து விட்டான். கோபம் கொண்ட அரசி அவனை இழுத்து வந்து ஆயிரம் சவுக்கடி கொடுக்கச் சொன்னாள். அடிபட்டுக் கொண்டிருந்த ஆண்டி சிரித்தான் - சிரித்துக் கொண்டே இருந்தான்! அரசி, ஆச்சரியத்துடன் ஆண்டியைப் பார்த்து ஏன் சிரிக்கிறாய்? அடி வலிக்கவில்லையா? என்று கேட்டாள். ஆண்டி பதில் சொன்னான்;

அம்மணீ! பழத்தின் தோலைத் தின்ற எனக்கு இத்தனை கொடுமையான தண்டனையென்றால், பழத்தையே விழுங்கிய. உனக்கு என்ன தண்டனையோ! என நினைத்து சிரித்தேன்.

உடன்பிறப்பே; அரசியென்றால் கண்டிக்கக் கூடிய யாரும் இல்லை - ஆண்டியென்றால் தண்டிப்பதே மிகக் கடுமையான முறையில்! அரசியும் ஆண்டிப் பரதேசியும் கதைதான் இப்போது அரசியலில் நடக்கிறது; இங்கு மட்டுமல்ல - இமயம் முதல் குமரி வரையில்!

அன்புள்ள,

மு. க.

11-03-1994

2108. அங்கும் இங்கும் சிந்திக்கத்தக்கது!

உடன்பிறப்பே,

தினகரன் இதழில் தளபதி மாத்தையா உயிரோடு இருக்கிறார் என்ற தலைப்புச் செய்தியைப் பார்த்து மகிழ்ந்து போனேன்.

இப்போது அவர், விடுதலைப்புலிகள் இயக்கத்தில் தளபதியாக இல்லை என்றாலும்; உயிரோடு இருக்கிறார் என்பதிலே ஓர் ஆறுதல்.

அரசியலில் ஆதாயத்துக்காகவோ - கருத்து வேறுபாடுகளுக்காகவோ - கட்டுப்பாடு குலைத்தமைக்காகவோ கொன்று விடுவது என்ற கொடிய தண்டனையை மனித நேய உணர்வுடையோர் யாரும் ஏற்றுக் கொள்ள முடியாது.

அதற்காகக் கட்டுப்பாடு காத்திடும் பொறுப்புள்ள ஓர் இயக்கத்தின் தலைமை; அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்காமல் இருந்து இயக்கத்தின் சீர்குலைவுக்கு இடம் தந்திடவும் முடியாது! கூடாது!

மாத்தையா, விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தளபதியாகத் திகழ்ந்தவர். அந்த இயக்கத் தலைவர் பிரபாகரனின் தோளோடு தோள் நின்று பணியாற்றியவர். இருவரும் ஒருசேர இணைந்து நின்று வெளி வந்த புகைப்படங்கள் எல்லாம் இன்றும் இருக்கத்தான் செய்கின்றன. அப்படி நகமும் சதையுமாக நட்புணர்வுடன் - புலிகள் இயக்கத்தின் குறிக்கோளை நிறைவேற்றும் முனைப்புடன் களத்தில் நின்ற பிரபாகரனுக்கும், மாத்தையாவுக்கும் இடையே எழுந்த பிரச்சினை என்ன? எதற்காக மாத்தையா இயக்கத்திலிருந்து விலக்கப்பட்டு; தினகரனில் வந்துள்ள செய்தியின்படி ஒரு கல்லூரியில் உடற்பயிற்சி ஆசிரியராக பணியாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது?

தினகரனில் குறிப்பிடப்படும் ஒரு வாரப் பத்திரிகை நக்கீரன் நிருபரின் தகவலின்படி; மாத்தையாவிடம் கேட்கப்பட்ட கேள்வியும் பதிலும் வருமாறு :-

கேள்வி :-

பிரபாகரனிடம் சென்று நீங்கள் உண்மையைச் சொல்லியிருக்கலாமே?

பதில் :-

நான் ஏன் போய்ச் சொல்ல வேண்டும்? என்னைக் கூப்பிட்டுக் கேட்கக் கூடாதா?

உடன்பிறப்பே; மாத்தையாவை, பிரபாகரன் கூப்பிட்டிருந்தால் சென்று விளக்கம் அளித்திருப்பார். பல முறை கூப்பிட்டும் சந்திக்க வருமாறு முக்கிய பிரமுகர்கள் மூலம் அழைத்தும் வர முடியாது எனத் தட்டிக் கழித்து விட்டாரென்ற நிலைமை மாத்தையாவைப் பொறுத்தவரையில் உருவாகவில்லை. எனினும் அவரை விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து ஒதுக்கி, ஒரு கல்லூரியில் உடற்பயிற்சி ஆசிரியர் வேலை பார்க்க அனுப்பி விட்டார்கள்.

அப்படியென்ன மாத்தையா மீது குற்றச்சாட்டு?

மாத்தையாவின் முன்னாள் நெருங்கிய நண்பர் ஒருவர் - அவர் பெயர் என்ஜினீயர்! விடுதலைப்புலி இயக்கத்தின் முக்கிய பிரமுகர்களில் ஒருவர்! அவர்தான் தளபதி கிட்டு, கப்பலில் புறப்பட்டு வருவது பற்றி இந்திய உளவுத்துறை அமைப்பான ரா அமைப்புக்கு தகவல் கொடுத்து விட்டார். அதனால் கிட்டுவின் கப்பல் மடக்கப்பட்டு, கிட்டுவும் அவருடன் சென்றவர்களும் மரணமுற்றார்கள். இவ்வாறு துரோகம் செய்த அந்த என்ஜினியர், மரண தண்டனை விதிக்கப்பட்டு முடிவெய்தினார். அவர் செய்த துரோகத்தை மேலிடத்துக்கு மாத்தையா தெரிவிக்காமல் இருந்தது தப்பு என்பதால் இயக்கத்திலிருந்து விலக்கப்பட்டார் -

இந்த விபரங்கள், மாத்தையாவையும் அவர் நண்பர்களையும் சந்தித்த நிருபர் வாயிலாக வெளிவந்துள்ளவைகளாகும்.

இந்தக் குற்றச்சாட்டு உண்மையாக இருக்குமானால் - தளபதிகளில் ஒருவரான கிட்டுவை இழக்கக்கூடிய அளவுக்கு நடைபெற்ற துரோகத்திற்கு - விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைமை நடவடிக்கை எடுக்காமல் இருந்திட இயலாதுதான்!

தலைமை மற்றும் அரசியல் ஆதாயத்துக்காக நடைபெற்ற ஒரு நாசச்செயலுக்கு, நண்பராக இருந்தவர் காரணம் எனத் தெரிந்தும் கூட; அதனைத் தனக்கு மிக நெருக்கமான தலைமையிடம் தெரிவிக்காமலே மறைத்து விட்டது என்பதும் - கட்டுப்பாட்டை மீறிய செயல்தான்! அல்லது கட்டுப்பாட்டை மீறிக் காட்டிக் கொடுப்போருக்குத் துணை போன செயல்தான்!

இதில் தனக்கு சம்பந்தமில்லை என்று வெளியிலிருந்து அறிக்கை விட்டுக் கொண்டிராமல் - தலைமை, அழைத்துக் கேட்டிருந்தால், விளக்கியிருப்பேன்; என்னை ஏன் அழைத்துக் கேட்கவில்லை - என்று ஆதங்கப்படும் மாத்தையா; இயக்கம் எடுத்துள்ள நடவடிக்கைக்குக் கட்டுப்பட்டு இயங்குகிறார் என்பதும் - அவர் உயிருடன் இருக்கிறார் என்பதும் - ஆறுதல் அளிக்கும் செய்திகளாகும்.

அங்ஙனமின்றி; இலங்கையில் எத்தனையோ போராளி இயக்கங்கள் இருக்கின்றன - இப்போது நடந்த தேர்தலில் அந்த இயக்கங்கள் போட்டியும் இட்டுள்ளன - அவற்றைப் பின்பற்றி மாத்தையாவும் ஒரு இயக்கம் தொடங்கியிருக்கலாம்; அல்லது நானே விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவன் என்று அறைகூவல் விட்டுக்கொண்டிருக்கலாம். அது அங்குள்ள சிங்கள அரசுக்கும் குளிர்விட்டது போல இருக்கும்.

ஆனால் அப்படியெல்லாம் செய்யாமல்; தன்னை அழைத்து விசாரிக்காமலேகூட - தன்னை அழைத்து வரச்சொல்லி யாரையும் அனுப்பாமலே கூட - தலைமையையே முன்வந்து; எடுத்துவிட்ட நடவடிக்கைக்கு கட்டுப்பட்டு, கல்லூரியொன்றில் உடற்பயிற்சி ஆசிரியராக; பழைய இராணுவ உடை அணிந்திடும் உரிமையின்றி, சாதாரண உடையில் கடமை ஆற்றி வருகிறார் என்பது சிந்திக்கத்தக்கது! ஆம்; அங்கும் இங்கும் சிந்திக்கத்தக்கது!!

அன்புள்ள,

மு. க.

12-03-1994

2109. நியாயம் நிலைநாட்டப்பட்டுவிட்டது!

உடன்பிறப்பே,

பாரதீய ஜனதா ஆட்சியில் இருந்த மூன்று மாநிலங்களில் பாபர் மசூதி பிரச்சினையை ஒட்டி மத்திய அரசு மேற்கொண்ட கலைப்பு நடவடிக்கை சரியானதே என்று தீர்ப்பு வழங்கியுள்ள உச்ச நீதிமன்றம் - கர்நாடகம், நாகலாந்து, மேகாலயா ஆகிய மூன்று மாநில அரசுகளையும் மத்திய அரசு அரசியல் சட்டத்தின் 356-வது பிரிவைப் பயன்படுத்திக் கலைத்ததை அரசியல் சட்டத்துக்கு விரோதமான செயல் என்றும் தீர்ப்பளித்துள்ளது.

மாநில அரசுகளைக் கலைப்பதற்கான முடிவு மேற்கொள்வதற்கு முன்பு, நாடாளுமன்றத்தில் அதுகுறித்து விவாதித்து மன்றத்தின் ஒப்புதல் பெற்ற பிறகே அச்செயலில் ஈடுபடவேண்டும் என்றும் தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளது.

ஒரு மாநில அரசு கலைக்கப்பட்டது சரியல்ல என்று உச்சநீதிமன்றம் முடிவு செய்யுமேயானால்; கலைக்கப்பட்ட அந்த அரசை, மீண்டும் அமைத்திடுமாறு கட்டளையிடவும் அதிகாரம் உண்டு என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

மதச்சார்பற்ற நிலையைக் காப்பாற்றுவதற்காக ஒரு தீர்ப்பு, பா.ஜ.க. மாநில அரசுகளைப் பொருத்து வழங்கப்பட்டுள்ள அதே வேளையில்; நாடாளுமன்ற ஜனநாயகத்தையும், மாநில சுயாட்சித் தன்மையையும் கட்டிக்காக்கும் வகையில் மற்றொரு தீர்ப்பு - கர்நாடகம், நாகலாந்து, மேகாலயா அரசுகளைப் பொருத்து வழங்கப்பட்டுள்ளது என்பது; தி.மு.க. போன்ற மாநில சுயாட்சிக் கோரிக்கையை வலியுறுத்தும் இயக்கங்களின் முழக்கத்தை அலட்சியப்படுத்தாமல் மக்கள், தமது கூர்மையான கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டியவையாகும்.

356-வது பிரிவு - அதாவது மாநில அரசுகளின்மீது தொங்கவிடப்பட்டிருக்கும் கலைப்பு எனும் கத்தியிருக்கும்

வரையில் அதனை எப்படிப் பயன்படுத்தவேண்டும் - மூர்க்கத்தனமாகவோ, முறையற்றோ, தடாலடியாகவோ பயன்படுத்தித் தனக்குப் பிடிக்காத ஆட்சிகளைக் கலைத்துவிடக் கூடாது என்பதைத்தான், உச்சநீதிமன்றத்தில் மாண்புமிகு நீதிபதி எஸ். இரத்தினவேல் பாண்டியன் அவர்கள் தலைமையில் அமைந்த நீதிபதிக் குழுவினர் ஜனநாயக அணுகுமுறையுடன் தீர்ப்பாக வழங்கியுள்ளனர்.

இப்படியொரு கலைப்பு நிலைமை, கட்டாரி போலத் தலைக்கு மேலே தொங்கிக் கொண்டிருந்தால், எந்த மாநிலத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர்கள், நாற்காலியில் உட்காராமல் நின்றுகொண்டேதான் இருக்க வேண்டும்; எப்போது கலைப்பு உத்திரவு வருமென எதிர்பார்த்து என்பதாக; மாண்புமிகு நீதிபதி பாண்டியன் அவர்கள் குறிப்பிட்டிருப்பது, வேடிக்கையான விமர்சனமல்ல! ஜனநாயகத்தின் கழுத்தில் 356 என்ற தூக்குக்கயிறு எப்போது வீசப்படுமோ என்ற அச்சத்தைப் போக்கும் வழிவகை காணவேண்டுமென்பதற்கான அறிவுரையாகும்.

இப்போது சட்டத்தில் இருக்கும் 356க்கு - தவறாகப் பயன்படுத்தப்படும் 356க்கு - உச்சநீதிமன்றம் அது பயன்படுத்தப்பட்ட விதம் கண்டு, தீர்ப்பு வழங்க முடியும்.

எனவே தான் அந்த 356வது பிரிவே, அரசியல் சட்டத்திலிருந்து நீக்கப்படவேண்டு மென்று 1974 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மாநில சுயாட்சித் தீர்மானத்திலே திட்டவட்டமாகச் சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

மக்கள் விரோத ஆட்சிகளுக்கு - மக்களை மதிக்காத ஆட்சிகளுக்கு - ஊழல் ஆட்சிகளுக்கு - ஊதாரித்தனம் மிகுந்த ஆட்சிகளுக்கு; அந்த ஆட்சிகளைத் தேர்வு செய்த மக்களேதான் அடுத்து வரும் தேர்தலில் தமது வாக்குச்சீட்டை 356வது பிரிவாக உபயோகிக்க வேண்டுமே தவிர, அரசியல் சட்ட 356வது பிரிவை; குரங்கு கைப் பூமாலையாக ஆக்கிவிடக்கூடாது!

மொரார்ஜி தலைமையில் ஜனதா ஆட்சி நடைபெற்றபோது மாநிலங்களவையில் கழகக் குழுத் தலைவர் முரசொலிமாறன், 356வது பிரிவு நீக்கப்படவேண்டுமென்று தனி நபர் தீர்மானத்தை முன்மொழிந்து - அது, விவாதிக்கப்பட்டபோது, அதனைக் காங்கிரசார், ஜனதா கட்சியினர், அ.தி.மு.க.வினர் ஆதரிக்காமலே

இருந்து விட்டனர் என்பது கடந்த கால வரலாறு! உச்சநீதிமன்றம் குறிப்பிட்டுள்ளவாறு கர்நாடக அரசு ஏன் கலைக்கப்பட்டது? அந்த அரசின் முதலமைச்சர் காங்கிரஸ்காரரல்ல!

ஜனதாதளத்தைச் சேர்ந்தவர்; அதனால்தான் ஜனதாதளத்துக்கு சட்டப்பேரவையில் போதிய பெரும்பான்மை இருந்த நிலையிலும், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசின் பெரும் பான்மையை - சட்டப்பேரவையைக் கூட்டி - வாக்கெடுப்பின் மூலம் நிர்ணயிக்க வேண்டும் - என்கிற விதி முறையைக் காற்றில் பறக்க விட்டுவிட்டு - மத்திய காங்கிரஸ் அரசின் விருப்பப்படி - ஆளுநர் அந்த அரசைக் கலைத்துவிட பரிந்துரை செய்ய - ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் அந்த அரசைக் கலைத்து விட்டார்.

இந்த முறைகேடு பற்றி - உச்சநீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கிய 9 பேர் கொண்ட நீதிபதிகள் குழுவைச் சார்ந்த திரு. குல்தீப்சிங் - திரு. பி.பி. சாவந்த் ஆகியோர் தனிப்பட அளித்த தீர்ப்பில் கீழ்க்கண்டவாறு கூறி இருக்கிறார்கள் :-

1989ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 17-ந் தேதி ஜனதாதள உறுப்பினர் ஒருவர் - ஆளுநரைச் சந்தித்து இந்த அரசுக்கு நான் தந்து வந்த ஆதரவை வாபஸ் வாங்கிக் கொண்டேன் என்று ஒரு கடிதம் கொடுத்தான். மறுநாள் அதே உறுப்பினர் மறுபடியும் ஆளுநரைச் சந்தித்து 17 ஜனதாதள உறுப்பினர்கள், ஒரு சுயேச்சை உறுப்பினர்; ஒரு பாரதீய ஜனதா உறுப்பினர் ஆகிய 19 சட்டமன்ற உறுப்பினர்கள் ஜனதாதள அரசுக்கு அளித்துவந்த ஆதரவை விலக்கிக்கொண்டு விட்டதாக - 19 கடிதங்களைக் கொடுத்தார். இவைகளையோ ஆதாரமாகக் கொண்டு - ஜனதாதள அரசை டிஸ்மிஸ் செய்து - சட்டசபையையும் கலைத்து விட ஆளுநர் ஜனாதிபதிக்குப் பரிந்துரை செய்துவிட்டார்.

மறுநாள் அந்த 19 சட்டமன்ற உறுப்பினர்களும் நாங்கள் தொடர்ந்து ஜனதாதள அரசுக்கு ஆதரவு அளிக்கிறோம்; என்று ஆளுநருக்கு எழுதினார்கள். அன்றே மாநில அமைச்சரவை கூடியது. சட்டசபையில் ஆளும்கட்சிக்கு உள்ள பெரும்பான்மையை நிரூபித்துக் காட்டுவதற்காக விரைவில் சட்டமன்றத்தைக் கூட்ட அது முடிவு செய்தது. தேவைப்பட்டால் இன்னும் விரைவில் சட்டசபையைக் கூட்டவும் தயார் என்று முதலமைச்சர் ஆளுநருக்குக் கடிதம் எழுதினார். சட்டசபையைக் கூட்டி

பெரும்பான்மையை நிரூபிக்கத் தயார் என்று - ஜனாதிபதிக்கும் அவர் கடிதம் எழுதினார்.

எனினும் இவைகளையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் விதிமுறைகளைக் காற்றில் பறக்கவிட்டு - அரசைக் கலைக்க ஜனாதிபதிக்கு சிபாரிசு செய்துவிட்டார் ஆளுநர் வெங்கடசுப்பையா! இதில் அவர் காட்டிய வேகம் தேவையற்றது; அவரது நடவடிக்கை உள்நோக்கம் கொண்டது - என்பதாக இரு நீதிபதிகளும் கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. பொம்மை அவர்கள்தான் அப்போது முதலமைச்சர் - தேசிய முன்னணியில் அங்கம் வகித்தார்; 1989-ல் தமிழகத்தில் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றபோது நம்மை வாழ்த்த வந்திருந்தார். வேண்டுகோள் வைத்தவுடன் காவிரியில் ஐந்து டி.எம்.சி. தண்ணீர் திறந்துவிட ஒப்புக் கொண்டார். காவிரிப் பிரச்சினையைத் தீர்த்திட பெங்களூரில் பேச்சுவார்த்தைக்கு என்னை அழைத்திருந்தார். பிரச்சினை சுமுகமாகத் தீருமென நம்பியிருந்தபோது - பேச்சு வார்த்தைக்காகக் குறிப்பிடப்பட்ட தேதிக்கு முன்பே அவரது ஆட்சி கலைக்கப்பட்டுவிட்டது!

பிறகு, இங்கே 1991 தொடக்கத்திலேயே 356 என்ற கட்டாரி நமது ஆட்சியின் மீது பாய்ந்தது! கவர்னர் பர்னாலாவை அழைத்து கழக ஆட்சி குறித்து, குற்றச் சாட்டு கூறி அறிக்கை கேட்டனர்! பிரதமர் சந்திரசேகரே கேட்டார்! பாவம்; அவர் என்ன செய்வார்? சந்திரசேகர், ராஜீவின் கட்டளைக்கு அடங்கி நடக்க வேண்டியிருந்தது! ராஜீவ்தான் என்ன செய்வார்? இங்குள்ள ஜெயலலிதாவின் வற்புறுத்தலினால்; 356 என்கிற பாணத்தை கழக ஆட்சியின் மீது தொடுத்திட ஜனாதிபதி ஆர்.வி.க்குக் கடைக்கண் காட்டினார்! அவரும் ஆளுநர் அறிக்கையில்லையே என்று கவலைப்படவில்லை! எடுத்தார் பேனாவை; கலைத்தார் கழக ஆட்சியை!

அப்போது நாமும் ஒரு வழக்கு தொடர்ந்திருந்தால், இப்போது கர்நாடகாவுக்குக் கிடைத்துள்ள தீர்ப்பு கிடைத்திருக்கும் - அந்தத் தீர்ப்புப் பெற்று, திரும்ப ஆட்சிப் பொறுப்பு ஏற்க வேண்டுமென்பது கூட அல்ல; பெரிய பெரிய மனிதர்கள் எப்படி ஜனநாயகத்தின் கழுத்தை அறுத்தார்கள் என்ற உண்மை நிலையாவது; தாமதமாகவாவது; சட்டரீதியாக இந்தத் தரணிக்கு உணர்த்தப்பட்டிருக்குமல்லவா?

வேறு மாநிலங்களிலாவது கவர்னர் அறிக்கை பெற்று கலைத்தார்கள் - இங்கே அறிக்கை தர கவர்னர் மறுத்தும் கலைத்தார்களே; எனவே அந்த மாநில வழக்குகளை விட நமது வழக்கு மேலும் கெட்டியானதல்லவா?

எப்படியோ; உச்சநீதிமன்றம் அளித்துள்ள இந்தத் தீர்ப்பின் மூலம்; அரசியல் சட்டத்தின் 356வது பிரிவு, நீக்கப்பட வேண்டியன என்ற நமது நீண்டகாலக் கோரிக்கையின் நியாயம் நிலை நாட்டப்பட்டுள்ளது!

அன்புள்ள,

மு. க.

13-03-1994

2110. உங்கள் நண்பன் என்பது உண்மையாகிட.....

உடன்பிறப்பே,

சர்வதேச மகளிர் ஆண்டுக்கான விழாக்கள் தமிழகத்தில் கோலாகலமாக நடந்து முடிந்துள்ளன. ஆனால் மகளிர் வாழ்க்கையில்; அவர்களுக்குப் பாதுகாப்பாக இருந்திட வேண்டிய அரசும் அந்த அரசின் காவல்துறையும்; முறையே அலட்சியப் போக்குடனும் அத்துமீறிடும் நிலையிலும் எத்துணை கொடுமைகளுக்குக் காரணமாக இருந்துள்ளன என்பதை சுட்டிக்காட்டிக் கொண்டே இருப்பினும்; காவல்துறையில் இன்னமும் சில காட்டு மிருகங்கள், தங்களின் முரட்டுப் பற்களுக்கும் நகங்களுக்கும் வீட்டு விளக்குகளை இரையாக்கிக் கொண்டுதானிருக்கின்றன.

இந்த ஆட்சியில் இத்தகைய நிகழ்வுகளின் எண்ணிக்கை அதிகமெனினும்; இதற்கு முன்பிருந்த ஆட்சிகளில் ஒன்றிரண்டு நடைபெறாமல் இல்லை - ஆனால் அதற்குரிய நடவடிக்கைகள் அந்த ஆட்சிகளில் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதற்கு மாறாக, இந்த ஆட்சியில் பூனை, தன் குட்டியைக் கௌவுவதுபோல், குற்றவாளிகள்மீது நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

சில போலீசார் எந்த அளவுக்குத் தவறான தகவல்களின் பேரில் கொலைப் பழிகளைக் கூட வேண்டாதவர்கள் மீது சுமத்தவும் - அல்லது தங்கள் கடமையைச் சரியாகச் செய்வது போலக் காட்டிக் கொள்ளவும் - எத்தகைய தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் என்பதற்கு இந்த ஆட்சியில் பழைய பாண்டியம்மாள் வழக்கு ஒன்றே போதும் உதாரணத்திற்கு!

உயிரோடு இருக்கும்போதே பாண்டியம்மாளை, அவரது கணவன் வேலுச்சாமி கொன்றுவிட்டதாகக் குற்றம்

சாட்டி, பாண்டியம்மாள் மீதும் கள்ளக்காதல் களங்கப் பழி சுமத்தி, வேலுச்சாமியை நீதிமன்றத்தில் நிறுத்தியபோது, கொலையுண்டதாகக் கூறப்பட்ட பாண்டியம்மாள் நேராக நீதிமன்றத்துக்கே வந்து விட்டார். அதன் விளைவாக; இப்போது அரசாங்கம், பாண்டியம்மாள் கணவருக்கு ஒன்றரை லட்ச ரூபாய் நிவாரணத் தொகையாகத் தர வேண்டுமென்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சில பகுதிகளில் உள்ள காவல்துறையினர் ஆளுங்கட்சிக் காரர்களின் ஆணைக்கு உட்பட்டு, எதிர்க்கட்சியினரை சித்திரவதைக்கு ஆளாக்கவும் முற்படுகிறார்கள்.

தர்மபுரி மாவட்டத்தில் காவல்துறை அதிகாரிகளால் நடத்தப்படும் அராஜக வெறியாட்டங்களையும், அதற்குத் தூபம் போடும் ஆளுங்கட்சிப் பிரமுகர்களின் போக்கையும் விளக்கி, அந்த மாவட்டக் கழக செயலாளர் முல்லைவேந்தன் விடுத்துள்ள அறிக்கையைப் படித்தாலே - இது நாடுதானா? அல்லது கொடும் விலங்கு வாழும் காடா? என்ற கேள்வி எழாமல் போகாது!

மகளிர்க்கும் இழைக்கப்படும் அக்கிரமங்களோ; வாசாத்தி, ஓசூர், சிதம்பரம் அண்ணாமலை நகர் என இப்போது ஓரத்தநாடு வரையில் ஓங்கி வளர்ந்துள்ளது!

ஓரத்த நாட்டில் ரங்கம்மாள் என்பவர் போலீஸ் வெறியரால் கற்பழிக்கப்பட்ட சம்பவம், அவர் கணவன் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பற்றி, அந்த மாவட்ட மகளிர் காங்கிரஸ் தலைவி சுலோசனா அவர்கள் அளித்துள்ள பேட்டியை ஜூனியர் விகடன் வெளியிட்டுள்ளது.

அந்தப் பேட்டி வருமாறு :-

இதுக்கு முன்னாடியே உள்ளூர் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் உள்ள பல பெண்களை, ராத்திரி நேரத்தில் பொய் வழக்கு... விசாரணை அப்படின்னு சொல்லி ஸ்டேஷனுக்கு அழைச்சுக்கிட்டுப் போய் போலீஸ்காரங்க கற்பழிச்சிருக்காங்க! ஆனா, அந்தச் சம்பவங்களில் பல வெளியில தெரியாம லேசான சலசலப்போட அமுங்கிப் போயிடுச்சு! நிஜமாவே சாராயம் காய்ச்சறவனைக்கூட வேணும்னே விட்டுவிட்டு, அவன் வீட்டுப் பொம்பளைங்களைத்தான் விசாரணைக்குன்னு

அழைச்சுக்கிட்டுப் போவாங்க! அதுவும் ராத்திரி நேரத்துலதான்...

இந்த மாதிரி போலீஸ்காரங்க ஒரத்தநாடு ஏரியாவுல பண்ற லூட்டியெல்லாம் பத்தி நான் கொடுத்த பேட்டி 27.2.94 ஆனந்த விகடன்ல வந்திருக்கு! எங்க யோக்கியதை அவ்வளவு தான்னு காட்டற மாதிரி, அந்தப் பேட்டி வெளியான நேரத்துல இப்படியொரு சம்பவம் போலீஸ்காரங்க செஞ்சிருக்காங்க!

இந்தப் பேட்டியை வெளியிட்டதுடன்; ஜூனியர் விகடன், தனது கட்டுரையின் முடிவாக;

அரசியல் கட்சிகளும் வரிந்து கட்டிக் கொண்டு களத்தில் இறங்கிவிட்டன! கண்டனக் கூட்டங்களும் ஆர்ப்பாட்டமும் பேரணிகளும் நடக்கத் தொடங்கி விட்டன.

திருவோணம் தொகுதியின் எம்.எல்.ஏ.வும் தஞ்சை மாவட்டச் அ.தி.மு.க. செயலாளருமான கு. தங்கமுத்து, பிரச்சினை தெரிஞ்சவுடனேயே எங்க கட்சிக்காரங்களும் இதுல ரொம்ப ஆர்வம் காட்டிப் போராட ஆரம்பிச்சுட்டாங்க! அதோட இல்லாம, அது என் தொகுதி... குறிப்பா, அந்த ஊர் மக்களை எனக்கு நல்லா தெரியும். பாதிக்கப்பட்டவங்களுக்கு நியாயமும் நிவாரணமும் கிடைக்க நான் எல்லா வகையிலும் பாடுபடுவேன்! என்றவர், மேற்கொண்டு இந்தச் சம்பவத்தைப் பற்றி ஆளுங்கட்சிக்காரனாகிய நான் எதுவும் சொல்றது அவ்வளவு நல்லாயிருக்காது! என்றார்.

கடந்த 28-ந் தேதி திருச்சி டி.ஐ.ஜி.யான சுப்பையாவின் உத்தரவுக்குப் பிறகு, அவசர அவசரமாக ஆர்.டி.ஓ.வான சுரேஷ் முன்னிலையில் அடையாள அணிவகுப்பு நடத்தி, போலீசாரை ரங்கம்மாள் அடையாளம் காட்ட ஏற்பாடு செய்தார்கள். ரங்கம்மாளும் அடையாளம் காட்டியிருக்கிறார்!

தற்போது ஒரத்தநாடு போலீஸ் ஸ்டேஷனின் கான்ஸ்டபிள்கள் வேலு, நடராஜன், வில்லியம்ஸ் ஆகிய மூவரும் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர்!

ஸ்டேஷன் சப்-இன்ஸ்பெக்டரும், இன்ஸ்பெக்டரும் தஞ்சைக்கு டிரான்ஸ்ஃபர் செய்யப்பட்டுள்ளனர்.

தமிழக போலீசாரை உயர்த்திக் காட்டும் விதமாகத் திரைப்படங்களை எடுங்கள்... என்று திரைப்படத்துறையினருக்கு முதல்வர் ஒருபக்கம் வேண்டுகோள் விடுத்துக்கொண்டிருக்க...

மறுபக்கம் - தங்களது இப்படிப்பட்ட திறமைகளைத்தான் அபலைப் பெண்ணிடம் காட்டிக் கொண்டிருக்கிறார்கள் போலீசார்!

என்று எழுதியிருக்கிறது! அரசு, நடவடிக்கை எடுத்துள்ளது எனினும்; நடத்தப்பட்டுள்ள நாசச் செயலுக்குப் போதுமான நடவடிக்கை எடுக்கவில்லை என்பது அந்த வட்டாரத்துப் பொது மக்களின் கருத்தாகும்.

அரசியல் கோபதாபங்களைத் தீர்த்துக் கொள்ளவும் அபலைகளைக் கெடுத்தோரை அபாயங்க கொடுத்துக் காப்பாற்றவும் ஓர் அரசின் மிகப் பொறுப்பு வாய்ந்த அரண் போன்ற காவல்துறை பயன்படுத்தப்படுமேயானால்; சட்டத்தின் ஆட்சிக்கு சமாதி கட்டப்பட்டு - நீதி நியாயங்களுக்கு கொள்ளி வைக்கப்பட்டுவிடக்கூடிய பெரும் சரிவை இந்த மாநிலம் எதிர் கொள்ள வேண்டியிருக்கும்.

உங்கள் நண்பன் என்று பல ஆண்டுகளுக்கு முன்பு காவல் துறையினர் ஒரு திரைப்படம் எடுத்து மக்களுக்குக் காட்டினர். அந்த உங்கள் நண்பன் என்ற தலைப்பு உண்மையாக வேண்டுமானால்; காவல்துறை இதனைக் கவனமுடன் சிந்திக்க வேண்டும்!

அன்புள்ள,

மு. க.

15-03-1994

2111. பால் அருந்தவும் ஒரு பக்குவம் தேவை!

உடன்பிறப்பே,

சென்னையைவிட்டு இன்று புறப்படுகிறேன்; வெளியூரில் ஒளி உமிழும் விழிகளுடன் காத்திருக்கும் உன்னைக் காண! இந்தச் சுற்றுப்பயண நிகழ்ச்சி ஒரு வார காலம்!

சில நாட்களுக்கு முன்புதான் தென்பாண்டி மண்டிலத்தில்; நெல்லை கட்டபொம்மன், சிதம்பரனார், குமரி மாவட்டங்களில் லட்சக்கணக்கான தமிழ்ப்பெருங்குடி மக்களையும், லட்சியத்தின் வற்றாத ஜீவநதியான உன் போன்ற உடன்பிறப்புகளையும் சந்திக்கவும், அளவளாவிடவுமான வாய்ப்பினைப் பெற்று வந்தேன்.

இப்போது தஞ்சை மண்ணில், இந்தச் செடிக்கு உரமிட்டுப் பாதுகாத்த அன்னை போன்ற மன்னை வீட்டில் அவர் பேத்தி திருமணத்தை நடத்தி வைத்துவிட்டு - பசும்பொன் மாவட்டத்தில் காரைக்குடியிலும், முகவை மாவட்டத்தில் பல நிகழ்ச்சிகளிலும், காமராசர் மாவட்டம் சிவகாசியிலும் - மதுரை வைகை மாவட்டத்துத் தேனியிலும் என்னருந்தமிழ் மக்களையும், என்னுயிரினும் மேலான உன் போன்றோரையும் காண வருகிறேன். கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள வருகிறேன்.

கள்ளி, காளான் முளைத்த பாழ் நிலமாகி விட்டது கழகமெனக் கதைத்தோரின் முகத்திலிருப்பவை கண்தானோ அன்றி வள்ளுவன் வாய் மொழிக்கேற்ப அவை புண்தானோ எனக் கேட்க மனமில்லாவிடினும்; கழகம் என் செயல்வீரர் வழங்கிடும் அயராப்பணியினால் கழனி குலுங்கிடத் தழைத்து நிறைந்து மணிக்கதிர்க் கொண்டையை இளங்காற்றில் அசைப்பது போன்ற எழிலார்ந்த நோத்தியுடனும் - எழுச்சியுடனும் இயங்குதல் கண்டு கேட்டு, காது கைப்பக் கதைத்தோர் சொல்லை கணப்பொழுதில் மறந்து விடுகிறேன்.

என் கண்மணி நீ அருகிருக்க, உன் கரம் பட்டு வளர்ந்துள்ள கழகம் அரணாயிருந்து தமிழர்தம் உரிமைகளைப் பாதுகாக்க, நித்தநித்தம் உழைத்தாலும் - நித்திரையின்றி உழைத்தாலும் - புத்தம் புது வலிவு கழகத்திற்குக் கிடைத்துக் கொண்டேயிருக்கிறது என்கிறபோது - வாரம் ஒன்றல்ல; மாதமே ஒன்றாயினும்; ஏன் வருடமே ஒன்றாயினும் வறண்ட கோடை காலமும் எனக்கும் உனக்கும் வசந்த காலந்தானே; வாழ வேண்டும் நம் மொழியும் இனமும் என்கிற ஆவல், சிந்தையில் சேவலாய்க் கூவிடும்போது!

எப்போதும்தான் உன்னைப் பார்த்திட - உரை நிகழ்த்திட - உன்னுடன் உரையாற்றிட - கதிர் முளைக்கும் நேரத்திலிருந்து, மறுநாள் விடியல் விழித்துப் பார்க்கும் வேளை வரையில் அல்லும் பகலும் அலைந்து திரிந்து கொண்டிருந்திருக்கிறேன் - அப்போது என்னிடம் காட்டிய உன் அன்பும், பரிவும், பற்றும், பாசமும் - இப்போது மட்டும், ஆயிரம், லட்சம், கோடி மடங்காகக் கூடிவிட்டதே ஏன்?

எனக்குப் புரிகிறது உடன்பிறப்பே! உன் கண்ணில் நீர் வழிந்தால் என் கண்ணில் உதிரம் கொட்டுதடி! என்ற பாரதியின் பாட்டுக்கு இலக்கணமாகத் திகழ்கிறது என் தம்பி தங்கையர் கூட்டமும் - தமையன் தமக்கையர் கூட்டமும் - தாய் தந்தையர் கூட்டமும் - ஆம்; தமிழ் உணர்வு கொண்ட மொத்தக் கூட்டமும்!

பச்சைக் கொடியென்று பார்த்துப் பார்த்து மகிழ்ந்தானே; இச்சைக்குரியதென்று இதயத்தில் வைத்துப் புகழ்ந்தானே; அது கொடியல்ல; கொடிய அரவமென, வளர்த்தவன் மீது பாய்ந்து தீண்டி விட்டதாமே - அதன்பிறகும் உயிர் பிழைத்து - அந்த உயிரினும் மேலானவர்களைக் காண வருகிறானே; அப்போதும் அவன் நெஞ்சின் ரணம் ஆற்றிட மருந்தாவோம் - அவன் கண்ணுக்கு விருந்தாவோம் - என்ற நினைப்புடன் அல்லவா என்னைச் சூழ்ந்து கொள்கிறீர்கள்!

அதனால்தானே; கொடியேற்று நிகழ்ச்சி எனினும், வரவேற்பு நிகழ்ச்சி எனினும், அவை முடிந்து மேடையில் நடைபெறும் விழா எனினும் - கரை உயர்த்தப்பட்ட பெருநதியின் அமைதிப் பெருக்காக இல்லாமல் - கரையுடைத்துக் கொண்ட காட்டாற்று வெள்ளமாகக் ககனத்தில் மேயும் முகில்களைத் தொடுமளவுக்குப் பொங்கி எழுந்து குதிக்கிறார்கள் என் உடன்பிறப்புகள்!

இடைவிடா நெருக்கடியால் விளையும் இடர்ப்பாடுகளையும் - என் இடது கையில் தசை புரண்டதால் இன்னமும் தொடரும் வலியையும் - நான் எடுத்துச் சொல்லியும் கூட, கூட்ட அமைப்பாளர்கள், நிகழ்ச்சி அமைப்பாளர்களால் - கட்டுப்படுத்தும் பணியில் வெற்றி பெற இயலவில்லை!

எனவே உன்போன்ற உடன்பிறப்புகள்தான் அந்தக் கட்டுப்பாட்டை ஒருவருக்கொருவர் முன்வந்து உருவாக்கிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இல்லையேல் - வீட்டு விளக்கிற்காக ஊற்றப்படும் எண்ணெய்; காட்டுத் தீக்குப் பயன்பட்ட நிலை வந்து சேரும்!

கழகம் காத்திடச் சிங்கமென - சிறுத்தையென - வேழமென - வேங்கையென - செம்மாந்து நடைபோடும் உன் போன்றோர்க்கு இந்தக் கழகத்தின் மூல மந்திரங்களில் ஒன்றான கட்டுப்பாடு காப்பது மட்டும் மறந்தும் - மறந்து போகலாமா?

என் செய்வது; உனைக் கண்டதும் எமை மறந்து விடுகிறோமே! என்கிறாய்!

என் நிலையும் அதுதான் தங்கமே!

இருப்பினும், ஆடிக்கொண்டே கிண்ணத்துப் பாலை அருந்துவதற்கும் - அமர்ந்து அமைதியாகப் பால் கிண்ணத்தை பக்குவமாக உதட்டில் வைத்துப் பருகுவதற்கும் உள்ள வேறுபாட்டை உணர்ந்து கொள்ள வேண்டாமா?

பால், பயன்பட வேண்டுமா? கீழே சிந்திப் பாழாக வேண்டுமா?

பாழாகக் கூடாது எனில்; கட்டுப்பாடு எனும் பண்பாடு முக்கியம்; கடலலையாய் நீ உணர்ச்சி பெற்று எழுந்திடும்போது!

என் மனதுக்கினிய உடன்பிறப்பே; மற்றவை நேரில்! வாரம் ஒன்று இருக்கிறது; உன்னுடன் இணைந்து ஊரெல்லாம் சென்றிட; உடன் இருந்தே பாய்ந்த துரோகத்தை வென்றிட; நம் உழைப்பை இணைத்து தந்திட!

அன்புள்ள,

மு. க.

16-03-1994

2112. என்ன தேசமடா இது?

கலைஞர் கவிதை

என்ன தேசமடா இது? இங்கு,
எத்தனுக்கே வாழ்வு தரும் மோசமடா!

நீரும் எண்ணெயும் போல் பற்று பாசமடா! அட;
நீலிக் கண்ணீர் வடித்தே கழுத்தறுக்கும் நேசமடா!

கூளமெல்லாம் கூர்வாளாய் நினைத்துக்கொண்டு;
மேளங்கொட்டி முரசுதட்டி மெலுக்காக ஆடுதடா!

ஆளவந்தார் அடிக்கின்றார் கொள்ளையென்றால்;
தாளம் போடும் தாசர் கூட்டம் பெருத்ததடா!

கைநீட்டிக் காசுபணம் பதவிகளைப் பெறுவதற்குக்
கடைக் கோடிப் பல்லிளிசை காட்டியே நிற்குதடா!

பைநிறைய லஞ்சத்தொகை பலலட்சம் கொட்டித்தந்து
வை தலையைக் காலில் என்றால் தட்டாமல் வைப்பாரடா!

என்ன தேசமடா இது? இங்கு
எத்தனுக்கே வாழ்வு தரும் மோசமடா!

வானுக்கோர் எல்லையில்லையடா வையகத்தில்;
வறுமைக்கோர் எல்லையில்லையடா இந்தியத்தில்!

வருஷத்தில் பத்து ஊழல் வந்து வந்து போகுதடா;
அர்ஷத்து மேத்தா ஊழல் அவமானச் சின்னமடா!

கொள்கை உறுதியென்பார்; ஒழுக்கமென்பார்;
கொடி, சின்னம் எனக்கேயென்பார்!

கொடுத்திட்ட பணத்துக்கு கூலிக்கு மாரடிப்பார்;
கொடுக்கறுக்கும் நாள் வரையில் குதிக்கின்ற தேள்களடா!

ஆதிக்கவர்க்கத்தார் ஆட்சியிலே வந்துவிட்டார்;
பாதிப்பு பலவகினும் பத்திரிகை பாராட்டுதடா!

என்ன தேசமடா இது? இங்கு
எத்தனுக்கே வாழ்வு தரும் மோசமடா
பெரியார் அண்ணா வழித் தோன்றல் நானே என்பார்
நரியார் தன்னைச் சிங்கமென நம்பச் சொன்னால்;
நாடாள்வதால் நாமும் வாழ்க என நவில்கின்றார்!

நலம் பெற்றோம் அவராலே நாமார்க்கும்
குடியாவோம் என்கின்றார்
குன்றிமணி மானம் சிந்திடினும் உயிர் வாழார்
முன்பெல்லாம் –
குன்றளவு மானம் போனால்தான் என்னவென இன்று
குன்றனையார் சிறிதும் குன்றாமல் குனிகின்றார்!

குன்றம் தாழ்ந்து கோடு உயர்ந்த கதை தொடர்கதையா?
நன்றியெனும் முன்றெழுத்தை மலமாக்கித் தின்னும்
பன்றிகளும் புரளுகின்ற சாக்கடையாய்ப் போனதடா!

என்ன தேசமடா இது? இங்கு
எத்தனுக்கே வாழ்வு தரும் மோசமடா!

முந்தித் தவமிருந்து முந்நூறு நாள் சுமந்த தாயின்
தொந்தி சரியக் குத்தீட்டி வீசும் பிள்ளையடா!

அந்திப்பொழுதை விரட்டி அழகாய்ப் பூத்த நிலா
தி.மு.க.; அது,
மந்தி கைக்கு எட்டாததால் சந்தி சிரிக்க அலறுதடா!

இந்திதனை எதிர்ப்பதற்கும் இனம் மொழியைக் காப்பதற்கும்
இருக்கின்ற அரண் இதனை அழிப்பதற்குத் திட்டமடா!

பந்திக்கு நான் என்று படையென்றால் நீ என்றும்,
சிந்தித்துச் செப்பியோடும் சில்லறைகள் ஓசையடா!

குந்திக்குக் குழந்தை எனக்கேட்டு - வயிற்றில்
குத்திக்கொண்ட காந்தாரிகள் ஆசையடா!

என்ன தேசமடா இது? இங்கு
எத்தனுக்கே வாழ்வு தரும் மோசமடா!

தலைவியின் பிறந்த நாள் என்றால் தவறாமல்
போடட்டும் மாலை!
தலங்கள் தோறும் மந்திரிகள் காவடி எடுப்பதுவா
பகுத்தறிவு வேலை?

தலைமொட்டை அடிக்கின்றார், தத்தோமெனக்
குதிக்கின்றார்
தழையுடுத்தி உருளுகின்றார் தையலர்கள் தீயும்
மிதிக்கின்றார்!

தன்மான இயக்கமென்றும் இனமான முழக்கமென்றும்
தமிழகத்தில் விளைத்து வைத்த அறிவுக்கதிர்
அனைத்துமே
தாசர் புத்தி தலைக்கேறி தடுமாறிச் சாய்ந்ததடா! இனித்
தமிழ் மண்ணில் புது எழுச்சி எப்போதடா?
தயங்காமல் புறப்படடா; தமிழா! உன்
தடந்தோள் தட்டிக் கிளம்பிடடா!

அன்புள்ள,

மு.க.

17-03-1994

2113. வந்தேன்! உவந்தேன்! உணர்ந்தேன்!

உடன்பிறப்பே,

சென்றேன் - வென்றேன் என்ற செருக்குடன் கூறும் இயல்புபடைத்தவனல்ல; என்பதால் - மன்னை முதல் மதுரை வரை தேனி வரையில் மேற்கொண்ட ஒருவாரகாலப் பயணத்தை முடித்து சென்னை வந்தவுடன்; வந்தேன்! உவந்தேன்! உணர்ந்தேன்! என்றுதான் எண்ணிட முடிகிறது! மூன்று சொற்களுமே, தேன் என்றே முடிகிறது பார்த்தாயா பார்த்தேன் என நீயும் ஒரு தேன் தருகிறாயா?

மன்னைக்கு வந்தேன் - மன்னையார் பேத்தியின் திருமணத்தை நடத்தி வைத்தேன். வழிநெடுக, விழியால் மொழியால் வாழ்த்துரைத்த என் தமிழ் மக்களின் வரிசை கண்டு மகிழ்ந்தேன். அன்றே, திருத்துறைப்பூண்டியில் வழக்கறிஞரும் கழகத் தூண்களில் ஒருவருமான குப்புசாமி இல்லத் திருமண விழாவிலும் உன் போன்ற உடன்பிறப்புக்களையும், உற்றாராய், உறவுகளாய், உணர்ச்சிப் பிழம்புகளாய்க் காட்சியளித்த பெருமக்களையும் கண்டுகளித்தேன். மாலை கொரடாச்சேரி கூட்டம் - தஞ்சைத் தரணியின் புகழ்மிக்க தளபதியாகத் தோன்றிய கருணாகரத் தொண்டைமானின் சொந்த ஊரான வண்டுவாஞ்சேரிக்கு அருகில் உள்ள ஊரே கொரடாச்சேரியாகும். கலிங்க நாட்டான் எதிர்க்கிறான் காஞ்சியை என்றதும் காஞ்சிக்கு வெற்றிதேட கச்சையணிந்து கட்கமேந்திக் களம் புகுந்த அந்தக் கருணாகரன் பெற்ற போரின் வெற்றி குறித்துச் செயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப்பரணி; களம்புகு காதைக்கோர் காவியமாயிற்றே!

அந்தக் காவியத்தில் வரும் வீரர்தம் எழுச்சியை நினைவூட்டும் வண்ணம், திருவாரூர் என்றும், காட்டூர் என்றும், கொரடாச்சேரி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, காரைக்குடி, புளியால், திருவாடானை, ஆர்.எஸ். மங்கலம், இராமநாதபுரம், மதுரை, திருமங்கலம், விருதுநகர், திருத்தங்கல், சிவகாசி, செக்கானூரணி, செல்லம்பட்டி, உசிலம்பட்டி, ஆண்டிபட்டி, தேனி என்றும் ஏராளமான

நிகழ்ச்சிகளில் உன் போன்ற உடன்பிறப்புக்களைச் சந்தித்தேன். ஆம்; சந்தித்தேன்! கண்டனையா இதுவும் தேன் என்றே இனிக்கிறது! அந்தச் சந்திப்பே இனிய சுவை மிகுந்த சந்திப்புதானே! எனினும்; அடடா! அந்த எழுச்சியையும், உணர்ச்சிப் பெருக்கினையும் - உவமை காட்டிச் சொல்ல இயலாமல் தவிக்கிறேன்.

அதற்குக்கூட கலிங்கத்துப் பரணியின் துணையைத்தான் நாடுகிறேன். கலிங்கத்தை வீழ்த்தி வென்றிட சோழனின் தளபதி கருணாகரன் நடத்திய போர் குறித்து புலவர் பெருமகன் செயங்கொண்டாரே என்ன கூறுகிறார்!

"ஒருவர்க்கு ஒருவாய் கொண்டு உரைக்க ஒண்ணாது"

ஒருவர், ஒரு வாயினால் சொல்ல இயலாது எனச் செயங்கொண்டாரே பின் வாங்கினார் என்கிற போது; நான் குறிப்பிட்டுள்ள இத்தனை ஊர்களிலும், இந்த ஊர்களுக்குச் செல்லும்போது பாதைகளிலும் - அணிவகுத்த செயல்வீரர்கள், பணி முடித்திட கோ.சி. மணிகளாய், குப்புசாமி, அம்பலவாணன், தங்கையன்களாய் புதுக்கோட்டை பெரியண்ணன்களாய், பசும்பொன் கிருட்டிணன்களாய், காவேரி மணியன்களாய், பரமக்குடி தங்கவேலன்களாய், தங்கபாண்டியன்களாய், திருச்சி நேருக்களாய், திண்டுக்கல் பெரியசாமிகளாய், வைகையின் மூக்கையாக்களாய் - மாவட்டங்களில் தளநாயகப் பொறுப்பேற்றுள்ளவர்கள்; அம்மவோ - அந்தப் பட்டாளத்து நடைபோட்டுச் சிரிப்புக் கூட்டணி முத்துக்களையும் உதிர்த்த போதும், அடடா; இந்தக் கழகத்தின்மீதா மோதுதல்? எங்கள் மான உணர்வுக்கா அறைகூவல்? தாயை இகழ்ந்தவனைத் தாய் தடுத்தாலும் விடுவாரோ; அஃதேபோல் தாய்க்கு ஒப்பான கழகத்தைச் சீர்குலைப்போரை; ஆம்; பெரும் பணத்துக்கு விலைபோன சில்லறைகளை, அவர்தம் சேட்டைகளைப் பொறுத்துக் கொண்டு சோம்பிக் கிடப்பாரோ, சுயமரியாதையுள்ள தமிழர்! எனும் கடுஞ்சினத்தைக் கண்ணால் எழுதிக் காட்டியதைக் கண்டபோதும்; உடன்பிறப்பே! உருகிப் போனேன் நான்! அந்த உருக்கம் நீர்த் துளிகளாய்த் தலைகாட்டியபோது, இமைகள் எனக்கு உதவி செய்து அவற்றை மூடி மறைத்து விட்டன!

கொரடாச்சேரியில் கூட்டம் நடத்துவதற்குத் தோதான மைதானம் கிடைக்காமல், நல்லோர் உழவர் பெருமகனார் ஒருவர் உதவிட முன்வந்து - சுமார் பதின்மூன்று ஏக்கர் பரப்பளவுள்ள

வயல்களைச் செம்மைப்படுத்தி, சீர்செய்து, வழங்கியுள்ளார் என்று கேள்வியுற்றேன். என்னே வியப்பு; அந்த வயல்கள் அனைத்தும் வெள்ளத்தால் மூழ்கிக் கிடந்த காட்சி; அதாவது மக்கள் வெள்ளத்தால் மூழ்கிக் கிடந்த காட்சி - வர்ணனைக்கு எட்டுவதா?

"ஒருவர்க்கு ஒருவாய் கொண்டு உரைக்க ஒண்ணாது
அதே பாடலிடம்தான் அடைக்கலம் புக நேரிடுகிறது."

கொரடாச்சேரியுடன் முடியவில்லையே; அங்கிருந்து குன்றங்களும், கோடுகளும் நிறைந்து நிமிர்ந்து நிற்கும் பகுதி வரை சென்று - குனிந்து கிடக்கும் கம்பம் பள்ளத்தாக்குப் பிரதேசங்களையும் கண்டு - இடையே; பாலையாய்த் திரிந்து கிடக்கும் நிலங்கள், பசுமைக் கூத்து பயிலுவது எப்போது என ஏக்கமிகக் கொண்டு - நடத்திய அந்தப் பயணத்தில் என்னுடன் தொடர்ந்து வந்தனர்; துணை பொதுச் செயலாளர் ஆர்க்காடு, தலைமைக் கழகச் செயலாளர் தம்பி துரைமுருகன், இலக்கிய அணித்தலைவர் தமிழ்க் குடிமகனார் - எனினும் அவர்களுடன் ஆங்காங்கு சில கூட்டங்களில் கழகத்தின் முன்னணியினர்களும் கலந்து கொண்டு போர் முரசு கொட்டினர்; அது கழகம் பெற்றிடும் வெற்றிக்கான போர் முரசாக இருப்பினும்;

அதிர்ந்தன நாலு திசைகள் அடங்கின ஏழு கடல்கள் பிதிர்ந்த மூரி மலைகள்

என்று; கலிங்கத்தை வென்றிட அன்று எழுந்த முரசங்களாகவே முழங்கின!

அடேயப்பா; வழிநெடுக அந்தக் கூட்டம்! என்னதான் வர்ணித்துக் கொண்டேயிருந்தாலும் அந்த எழுச்சியின் முழு வடிவத்தைச் சொல்லி முடித்த மனநிறைவு யாருக்கும் ஏற்படாது!

பார் சிறுத்தலின் படை பெருத்ததோ? படை பெருத்தலின் பார் சிறுத்ததோ?

பலமுறை உவமைக்காக எடுத்தாளப்பட்ட செயங்கொண்டாரின் பாடல்தான் இது! ஆனால் இந்தச் சுற்றுப் பயணத்தில் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் இந்தப் பாடல்தான் நினைவுக்கு வந்து நிலைத்துவிட்டது!

கருணாகரன் கலிங்கத்தின்மீது படை நடத்தியபோது; அவன் பின்னால் அணிவகுத்த வீரர்கள்,

* வெற்றிச் சின்னங்கள் அணிந்தவர்கள்

* போரில் புறங்கொடாதவர்கள்
* மார்பிலும் முகத்திலும் போர்க்களத்து விழுப்புண்களைத் தாங்கியவர்கள்
* முன் வைத்த காலைப் பின் வைக்காதவர்கள்
* உயிரை அர்ப்பணித்தாவது மானமும் புகழும் நிலைபெற முன்நிற்பவர்கள்
* ஒருவருக்கொருவர் இளைத்தோர் அல்லர்.

என்று புலவர் செயங்கொண்டாரால் போற்றப்படுகிறார்களே; அப்படித்தான் கடந்த சில மாதங்களாக நான் மேற்கொண்டுள்ள கழக நிகழ்ச்சிகளில் என் கண்ணின் பாவையொத்த உடன்பிறப்புக்களை ஒப்பிட்டுப் பார்த்து உண்மை - உண்மை - என்று உற்சாக ஒலியெழுப்பும் உள்ளத்தினனாக உலா வருகின்றேன்.

“என் உலா தொடர்ந்தால் மட்டும் போதாது!
உடன்பிறப்பே, உன் உலா - ஊருக்கு ஊர் தொடரட்டும்!
பட்டி தொட்டியெங்கும் உன்பவனி தொடரட்டும்!
தமிழ் மக்களின் முன்னேற்றத்தில் இடையில் ஏற்பட்ட
தடங்கலுக்கு வருந்துகிறோம் என்று
தங்களையுமறியாமல்
தடங்கலுக்குக் காரணமாகிவிட்டோர் -
இந்த என் முடங்கல் கண்டு திரும்பிப் பார்க்கட்டும்;
தி.மு.கழகத்தின் தீரர்களாய்த் திகழ்ந்து திசை
மாறியோர்க்கு மட்டுமே இந்த அழைப்பு!
திட்டமிட்டுத் துரோகம் இழைத்தோர்க்கு அல்ல!”

கழகத்தை உடன்பிறப்புகள் காத்து நிற்கிறார்கள் - அத்துடன் தமிழ் மக்களும் கழகத்தைத் தங்கள் கரங்களில் ஏந்திக்கொண்டு விட்டார்கள் என்ற சரியான நிலையை விளக்க; மூன்று திங்கள்களாக நான் மேற்கொண்டுள்ள சுற்றுப்பயணமே சான்றாக விளங்குகிறது!

“இந்தச் சாதனை புரிந்த உன்போன்ற என்
உயிரினுமேலான உடன்பிறப்புக்களுக்கு

நன்றி சொல்ல; வார்த்தைகளைத்
தேடுகிறேன், தேடுகிறேன்,
தேடிக்கொண்டேயிருக்கிறேன்".

அதுவரை இடைக்காலமாக இப்போது இந்த நன்றியை, உன் போன்றோர் காலடிகளுக்கு காணிக்கையாக்குகிறேன்.

அன்புள்ள,

மு. க.

23-03-1994

2114. நாவலரும் - நமது காவலரும்!

உடன்பிறப்பே,

நிதியமைச்சர் நாவலர் அவர்கள் தந்துள்ள நிதிநிலை அறிக்கையில் காவல் துறையைப் பற்றிய குறிப்பு மிக முக்கியமாகக் கவலையுடன் கவனிக்க வேண்டியதாகும். சட்டம், ஒழுங்கு சரியான முறையில் பேணிக் காக்கப்படுகிறது என ஒருமுறைக்கு இருமுறை - ஏன்; பலமுறை பறைசாற்றிக் கொண்டிருக்கிற இந்த அரசில் காவல் துறையைப் பற்றி விமர்சனம் செய்வது; அந்தத் துறையில் இருப்போரின் மீது காழ்ப்பு கொண்டோ, கடும் கோபம் கொண்டோ, தனிப்பட்ட முறையில் வெறுப்புகொண்டோ அல்ல என்பதை உணர்ந்து, குறைகளைத் தவிர்த்துக் கொள்ளப் பயன்பட வேண்டுமென்ற நோக்கத்துடன்தான்!

மாநிலக் காவல்படை, பொதுமக்களுக்கு மனிதாபிமானத்துடனும், செயல் திறத்துடனும், பணிபுரியச் செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா அவர்கள் மேற்கொண்ட சிறப்பான முயற்சி குறித்து இம்மன்றத்தின் உறுப்பினர்கள் ஒரே குரலில் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவிப்பர்.

நிதிநிலை அறிக்கையில் நாவலர் அவர்கள் படித்துள்ள வாசகம் இது!

மாநிலக் காவல்துறைக்கு செயல்திறன் வேண்டும் - மனிதாபிமானம் வேண்டும் - இதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை! ஆனால், நந்தவனத்து மலர்ச்செடிகளுக்கிடையேநச்சரவம் ஊர்ந்திடுவதுபோல சிலகாவலர்கள், காவல்துறை அதிகாரிகள் இருந்திடுகின்றனரே; அவர்தம் தீச்செயல்களைத் தடுப்பதோ, தண்டிப்பதோ இந்த இரண்டிலும் இன்றுள்ள அரசு, தயக்கம் காட்டுவது ஏன் என்றுதானே தெரியவில்லை.

நிதிநிலை அறிக்கையின் விபரங்களை வெளியிடும் ஏடுகளில்; அதேநாளில் வந்துள்ள செய்திகள் காவல்துறை குறித்தும் - அதனை ஒழுங்குபடுத்திட முதலமைச்சர் எடுத்த முயற்சிகள் குறித்தும் - நாவலர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ள வாசகத்திற்கு முற்றிலும் முரண்பாடாகவன்றோ இருக்கின்றன.

சென்னை இராயபுரம் காவல்நிலையத்தில் லோகநாதன் என்பவரை; அடித்துக் கொன்று விட்டனர் காவல்துறையினர் என்ற செய்தி, காட்டுத் தீ போல பரவியிருக்கிறது. அதை மறைத்து, வேறு புதுக்கதை கூறிடக் காவல்துறையினர் பெரு முயற்சி செய்தும் கூட; மக்கள் நம்பத்தயாராக இல்லை!

ஒருவர் எத்தகைய குற்றங்களைச் செய்திருந்தாலும்; ஏன், கொலைக் குற்றத்துக்கே உரியவராக இருந்தாலும் - முறைப்படி விசாரித்துத் தீர்ப்பு கூறவோ, தண்டனை வழங்கவோ நீதி மன்றங்கள் இருக்கும்போது - குற்றவாளியென்று யார் கைது செய்யப்படுகிறாரோ அவருக்கு; காவல்நிலையத்திலேயே மரண தண்டனை எனத் தீர்ப்பு வழங்கி, அந்தத் தண்டனையையும் காவல்நிலையத்திற்குள்ளேயே நிறைவேற்றுவது என்ன நியாயம்? கொடுமையினும் கொடுமையல்லவா? பிறகு எதற்காக நீதிமன்றங்கள்!

எந்தவொரு நபர்; குற்றஞ்சாட்டப்பட்டுக் காவல்நிலையக் கொட்டடியில் அடைக்கப்பட்டாலும் - அந்த நபர் பல கொலை கொள்ளை வழக்குகளில் தப்பி இருந்தாலும் - இதோ இந்த வழக்கில் மாட்டிக் கொண்டார் என்பதற்காகப் போலீசார், தமது வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ள அந்த நபரை அடித்து, மிதித்து, துவைத்து அவரது ஆயுளை முடித்து விடுவது என்ற நிலை; நீதிமன்றங்களே நாட்டுக்குத் தேவையில்லை என்ற அபாயகரமான அறிவிப்பாகும் என்பதை மனிதாபிமானத்திலும், நடுநிலை தவறாத நீதியிலும் நம்பிக்கை கொண்டோர் புறக்கணித்துவிட முடியாது!

ராயபுரம் காவல்நிலைய நிகழ்ச்சியைத் தொடர்ந்து, வள்ளலார் மாவட்டம் முத்தாண்டி குப்பத்தில் இன்னொரு நிகழ்ச்சி!

ஆம்; அண்ணாமலை நகர் பத்மினியை அடுத்து ஓரத்தநாடு ரெங்கம்மாள், அதனையடுத்து முத்தாண்டி குப்பத்தில் வசந்தா

எனப் பட்டியல் நீண்டு; படங்களுடனான செய்தி பத்திரிகைகளில் வந்துள்ளது.

நடேசனின் மனைவி வசந்தா, சீனுவாசன் என்பவருடன் கள்ளக் காதல் கொண்டு இருவரும் ஊரைவிட்டு ஓடிவிட்டனர். போலீசில் புகார் செய்யப்பட்டு அந்தக் கள்ளக்காதல் ஜோடியைப் போலீசார் கண்டு பிடித்து, முத்தாண்டிகுப்பம் காவல் நிலையத்தில் அடைத்து வைத்தனர். மறுநாள் காலை அந்த வசந்தா தூக்கு மாட்டித் தற்கொலை செய்து கொண்டதாக ஒரு செய்தியும் - காவலர்கள் அவளைக் கற்பழித்துக் கொன்று விட்டார்கள் என மற்றொரு செய்தியும் வெளிவந்துள்ளன.

வசந்தா என்ற பெண்; ஏற்கெனவே நடேசனின் மனைவி! இரண்டு குழந்தைகளுக்குத் தாய்! சீனிவாசனிடம் கள்ளக் காதல் - இருவரும் ஊரை விட்டே ஓட்டம் - அப்படிப்பட்ட ஒரு பெண், கற்பிழந்தார் என்பது எப்படிப் பொருத்தமுடையதாக இருக்க முடியும் என்பது தார்மீக வாதமாக இருக்கலாம்!

ஆயினும் ஒரு பெண்; கண்ணகியாகவே இல்லை என்பதற்காக; அவள் இஷ்டத்துக்கு விரோதமாக ஒரு ஆணின் வற்புறுத்தலுக்கு இணங்க வேண்டுமென்று விதி இல்லையே! ஒரு விலை மாதுவைக்கூட அவள் விருப்பமின்றி பலாத்காரமாகக் கூடுவது சட்டவிரோதம்தான் என்றும், ஒரு குடும்பத்தில் கணவன் தனது மனைவியை வற்புறுத்தி உடலுறவு கொள்வது கூட; வழக்கு என வந்தால் சட்டரீதியாக அந்தப் பெண்ணின் பக்கம் நியாயம் கிடைத்துள்ளது என்றும்; உலகின் பல பகுதிகளில் இருந்து வரும் செய்திகளைப் படிக்கிறோம் நாம்!

கணவனை விடுத்து, கள்ளக் காதலனுடன் ஓடிப்போய் - பிடிபட்டவள்; அவ்வளவு துணிச்சலான செயலுக்குப் பிறகு; அவமானத்தால் குன்றி போய்த் தூக்கு மாட்டிக் கொண்டு காவல்நிலையக் கொட்டடிக்குள் இறந்துவிட்டாள் என்பது நம்பத் தகுந்ததாக இல்லை.

காவல்நிலையத்திற்குள் காமவெறிச் சேட்டைகள் கேளிக்கைகளாவதும் - காட்டு மிருகங்களாகக் காவலர் சிலர் உருமாறிக் கொலைப் பழிக்கும் அஞ்சாமல் தமது வேட்கையைத் தணித்துக் கொள்வதும் - வெறி தணிந்தவுடன், தமது கொடுஞ்செயலை மறைக்க; பிணங்களைத் தூக்கு மாட்டிவிட்டுத்

தாங்கள் பிழைத்துக் கொள்ளப் பார்ப்பதும்; அன்றாட நிகழ்ச்சிகளாக ஆகிவிட்டிருக்கும் போது - மாநிலக் காவல்படை, மனிதாபிமானத்துடனும், செயல்திறனுடனும் பணிபுரிகிறது என்ற நாவலரின் நிதிநிலை அறிக்கை வாசகத்தைப் படிக்கும்போது; உடன்பிறப்பே, எனக்கு ஆவிகளில் நம்பிக்கையில்லை - எனினும் ஆவிகள் என இருந்தால் காவல் நிலையங்களில் அடி உதைபட்டு சித்ரவதைக்கு ஆளான அந்த ஆண், பெண் ஆவிகள் சிரிக்கவும் செய்யும்! கண்ணீர் சிந்தவும் செய்யும்!

மாலை ஆறு மணிக்கு மேல் பெண் கைதிகளை போலீஸ் லாக் அப்புகளில் வைக்கக் கூடாது என்று - ஏற்கெனவே அரசின் ஆணையிருக்கும்போது; முத்தாண்டிக் குப்பத்துக்கும் - ஓரத்தநாட்டுக்கும் - அண்ணாமலை நகருக்கும் மட்டும் விதிவிலக்கு கிடைத்தது எப்படி?

காவல்துறையை வானளாவப் புகழ்ந்து - அந்தப் புகழுக்கு காரணம் புரட்சித் தலைவி தான் என்று நாவலர் - நிதிநிலை அறிக்கை வழங்கியுள்ள நாளில்; முத்தாண்டிக் குப்பம், ராயபுரம் செய்திகள்; காவல்துறைக்குப் புகழ் முடி சூட்டுவதாக இல்லை! இல்லை! இல்லவே இல்லை!

அன்புள்ள,

மு. க.

25-03-1994

2115. வேங்கையின் வாய்க்கு வெள்ளாட்டுத் தீனி!

உடன்பிறப்பே,

துவாரகைக்குக் கண்ணனைச் சந்திக்கக் குசேலர் அவல் கொண்டு சென்றதாகப் புராணம் உண்டு. அவலை அள்ளிக் கண்ணன்; ஒருவாய் போட்டுக்கொண்டதும் குசேலருக்கு; கூட கோபுரங்கள், மாட மாளிகைகள், பெரும் செல்வ வளம் பெருகியதாகவும் அந்தக் கற்பனைக் கதை நீளும்.

துவாரகையைக் கண்ணன் ஆண்டான் என்பதற்கு ஒரு விசித்திரப் பின்னணியும் இருப்பதாகக் கூறுவார்கள். உண்மையில் கண்ணன் பிறந்தது உத்திரபிரதேசத்திலுள்ள பழைய மதுராபுரியில்தான்! ஆயர் குலத்தில் பிறந்த அந்த பிற்படுத்தப்பட்ட சமுதாயத்துக் கண்ணனை - விடுவதற்கு அனுமதிக்காத சூழலில் - அவன் குஜராத் மாநிலத்துத் துவதாரகைக்கு இடம் பெயர நேரிட்டது.

இப்படிப் புராண நிகழ்ச்சியையும் - சமுதாய வரலாற்று உண்மையையும் - தன்னகத்தே கொண்ட துவாரகைக்கு நமது பிரதமர் நரசிம்மராவ் இப்போது சென்று திரும்பியிருக்கிறார். ஆனால் அங்கு குசேலருக்குக் கிடைத்த பரிசு இவருக்குக் கிடைக்கா விடினும்; கிடைத்த பதிலும் பெரும் ஏமாற்றம் அளிக்கக்கூடியதாக அமைந்துள்ளது.

துவாரகா பீட சங்கராச்சாரியார் ஜெகத்குரு ஸ்வரூபானந்த சுவாமிகளை, பிரதமர் நரசிம்மராவ் சந்தித்து ஒருமணி நேரம் உரையாடியிருக்கிறார். அந்த உரையாடலில் முக்கிய இடம் பெற்ற பிரச்சினை; அயோத்தி இராமர் கோயில்தான்!

அயோத்தியில் இராமர் கோயில் எழுப்புவது பற்றிய பிரச்சினையில், உச்சநீதிமன்ற தீர்ப்பு வரும் வரையில் பொறுத்திருக்குமாறு துவாரகா சங்கராச்சாரியரை பிரதமர் கேட்டுக் கொண்டிருக்கிறார். பேச்சுவார்த்தையின் பலன் என்ன?

பிரதமர் அங்கிருந்து திரும்பியவுடன் துவாரகா சங்கராச்சாரியார் பத்திரிகை நிருபர்களைச் சந்தித்து, பிரதமரின் கோரிக்கை மறுக்கப்பட்டு விட்டது எனக் கூறியிருக்கிறார்.

அயோத்தியில் இராமர் கோயில் இருந்ததற்கான ஆதாரம் இருப்பதாகவும் அந்த சங்கராச்சாரியார் சொல்லியிருக்கிறார்.

இராமர் கோயிலை விரைவில் கட்டும்படி வற்புறுத்தும் வண்ணம்; தசரதர் - கௌசல்யா பெயர்களால் ரதயாத்திரை நடத்தப்படுமென்றும் துவாரகா பீடாதிபதி அறிவித்திருக்கிறார்.

அயோத்தி இராமர் கோயில் கட்டும் பணியை விரைவுபடுத்த பொதுமக்களிடம் சாது சமாஜம் விழிப்புணர்வுமிக்க எழுச்சியை ஏற்படுத்தும் என்றும் எச்சரித்துள்ளார்.

இனியும் இராமர் கோயில் கட்டுவது தாமதப்படுத்தப்பட்டால், குழப்பமும் வன்முறையும்தான் ஏற்படுமென்று அபாய அறிவிப்பு செய்யவும் துவாரகாச்சாரியார் தயங்கவில்லை.

இராமர்கோயில் கட்டப்பட வேண்டுமென்று எழுந்துள்ள கோரிக்கையை இதிகாச புராணங்களில் நம்பிக்கையில் லாதவர்கள்கூட எதிர்த்திடவில்லை. ஆனால் கட்டப்போவதாகச் சொல்லப்படும் இடம்தானே பிரச்சினைக்குரியதாக இருக்கிறது.

நாடு முழுதுமுள்ள நல்லோர் எடுத்துச் சொல்லியும்கூட; மத்திய அரசு தடுத்து நிறுத்த முன்வராமல்; இடித்து நொறுக்கப்பட்டது பாபர் மசூதி!

அப்படி இடிக்கப்பட்டு மண்மேடாகி விட்ட அந்த இடத்தில் இராமர்கோயில் என்றால்; அது வல்லடி வழக்குதானே!

பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது பார்த்துக் கொண்டிருந்து விட்டோம்; அதற்குப் பரிதாபகரமாக இடிக்கப்பட்ட இடத்திலேயே மீண்டும் பாபர் மசூதி எழும் என்றளித்த உறுதிமொழிக்கெதிராக, இராமர்கோயில் எழுமெனில்; அதையும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது என்று திட்டவட்டமாகத் தெரிவிக்க வேண்டிய கடப்பாடு கொண்ட பிரதமர்; எதற்காகத் துவாரகைக்கு ஓட வேண்டும்?

இவரிடம் கோரிக்கை வைக்க கியூ வரிசையிலே பிரமுகர்களும், மக்கள் பிரதிநிதிகளும் நின்று கொண்டிருக்கும்போது - இவர் ஏன் துவாரகா சங்கரர் மடத்தை நாடி ஓட வேண்டும்; கோரிக்கை வைத்திட!

சாதுக்கள், சமாஜங்கள் என்ற பெயரால் ஈட்டியும், சூலமும், கோடாரியும், கடப்பாரையும் தூக்கிக் கொண்டு வரலாற்றுச் சின்னமாம் பாபர் மசூதியைத் தவிடு பொடியாக்கியவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்துவிட்டு - தும்பை விட்டு வாலைப்பிடித்த கதை நடத்தி விட்டு - இப்போது துவாரகை சென்று ஆச்சாரியாரைத் தொழுது வணங்கி; தொடங்காதீர் இராமர்கோயில் திருப்பணி என்று கேட்டால்; இரங்குவாரோ இந்துத்துவ வெறி கொண்டோர்!

உதவாதினி ஒரு தாமதம்; உடனே ராமன் கோயில் கட்ட எழுவீர்; என்று அழைத்திட தசரத ரதம் - கௌசல்யா ரதம் - தயார்படுத்தப்பட்டு விட்டன.

"பிரதமரோ, பீடாதிபதியை நோக்கி ஓடுகிறார்!
எந்தப் பிரதமர்?
எண்பது கோடி மக்களின்
பாதுகாவலர் எனப் பறை
சாற்றிக் கொள்ளும்
பிரதமர்!
முப்படைகளும் கொண்ட
நாட்டின் பிரதமர்!

மதச்சார்பற்ற நிலைக்கு மாறான நிலையெடுப்போர் மீது உரிய நடவடிக்கை எடுக்கத் தயங்கி; மீண்டும் மீண்டும் வேண்டுகோள் என்றே மடங்களையும் சாது சந்தியாசிகளையும் நாடி மண்டியிட்டுக் கொண்டே இருந்தால்;

இந்திய நாட்டின் சிறுபான்மை சமுதாயங்கள் வேங்கையின் வாய்க்கு வெள்ளாட்டுத் தீனிகளாக ஆவதை அனுமதிக்கிறோம் என்றுதான் அர்த்தம்!

பிரதமர் இதனை உணருவாரா? உணர்ந்து உரிய நடவடிக்கை மேற்கொள்வாரா? நாடு எதிர்பார்க்கிறது; என்ன பதில்?

அன்புள்ள,

மு. க.

26-03-1994

2116. உதடு ஒன்று சொல்ல; உள்ளம் ஒன்று நினைக்க!

உடன்பிறப்பே,

எந்த ஒரு செயலிலும் ஈடுபடும்போது அதில் மனம் ஒன்றியிருந்தால்தான் அந்தச் செயல் முழுமையாக நிறைவேறும். அதேபோல உதடு ஒன்று சொல்ல; உள்ளம் ஒன்று நினைத்திட ஊர் உலகத்திற்காகச் செய்யப்படும் காரியங்கள் வெறும் கண்துடைப்பாகவே கருதப்படும். இரக்கத்துடன் கலந்த உணர்வு, இதயத் துடிப்புடன் இணைந்த கொள்கை; இவைகளைச் செயல் படுத்தும்போதும் அல்லது இவற்றுக்காகப் போராடும்போதும் ஏற்படுகிற இயல்பான தன்மை; ஒப்புக்குக் கூத்தடிக்கும்போது நிச்சயமாக இருக்காது! இருக்க முடியாது!

பணம் கொடுத்து பஸ்களிலும் லாரிகளிலும் ஏற்றி வந்து பட்டணம் காட்டுகிறேன் - என்று அழைத்து வரப்படும் கூட்டத்தில் எப்படி எழுச்சியும் உணர்ச்சியும் வரண்டுபோய்க் கிடக்குமோ; ஒருவேளை அதுவும் நாடகமாக நடிக்கப்பட்டாலும் எப்படி அது வெறும் வேஷம் என்பது வெட்ட வெளிச்சமாகுமோ; அதுபோலத்தான் சமூக நீதியிலோ சமத்துவ சமதர்மக் கொள்கைகையிலோ கிஞ்சிற்றும் ஈடுபாடு இல்லாதவர்கள் - அந்தக் கொள்கைகளுக்காகவே வாழ்பவர்கள்போலத் தோற்றம் காட்டுவதும் தோலுரித்துக் காட்டப்பட்டு விடும்.

அ.தி.மு.க. ஆரம்பிக்கப்பட்டபோதே அதன் நிறுவனத் தலைவர் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் மாநில சுயாட்சியில் தனக்கு நம்பிக்கையில்லையென்றும்; மாநில சுயாட்சி என்பது பிரிவினைவாதம் என்றும் கூறி - அண்ணா அவர்களின் மாநில சுயாட்சிக் கொள்கைக்கே முற்றிலும் மாறுபட்ட நிலையை மேற்கொண்டார்.

1974ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் மாநில சுயாட்சித் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது; அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தார்கள் என்பது வரலாறு! மாநில சுயாட்சிக் கொள்கையை அண்ணா கூறவே இல்லை என்றுகூட அ.தி.மு.க. உறுப்பினர்கள் பேரவையில் வாதிட்டார்கள். அண்ணா அவர்கள் மாநில சுயாட்சியை வலியுறுத்திப் பேசியவைகளை ஆதாரங்களாக அவையில் எடுத்து வைக்க வேண்டிய அவசியம் கூட அப்போது எனக்கு ஏற்பட்டதுண்டு.

பின்னர், எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வந்து ஆறு, ஏழு ஆண்டுகளுக்குப் பிறகே; நாவலர் அவர்கள் நிதியமைச்சராகப் பொறுப்பேற்ற நிலையில் நிதிநிலை அறிக்கையில் மாநில சுயாட்சிக் கொள்கை மெல்ல மெல்ல நுழைந்தது. அதனை அப்போது எதிர்க்கட்சி வரிசையிலிருந்து நான் பாராட்டியிருக்கிறேன். நாவலர் நம்மை விட்டு அ.தி.மு.க.வுக்கு சென்றதால் இந்த லாபமாவது கிடைத்தது என்றுகூடப் பேசினேன். அதற்கு விளக்கமளித்த நாவலர் அவர்கள் அவையிலேயே; மாநில சுயாட்சி என்பது பிரிவினை வாதமல்ல என்பதை எம்.ஜி.ஆர். அவர்களுக்கு விளங்க வைத்த பிறகு அவரும் அதனை ஏற்றுக் கொண்டதாக எடுத்துச் சொன்னது இன்னமும் என் நினைவில் இருக்கிறது.

எப்படி மாநில சுயாட்சித் தத்துவம் எம்.ஜி.ஆர். அவர்களைத் தொடக்க முதல்; உணர்வோடு கலந்த ஒன்றாகப் பற்றிக்கொள்ள வில்லையோ; அதேபோலத்தான் சமூகநீதிக்கான இடஒதுக்கீட்டுக் கொள்கையின் தாத்பரியமும் அவரை பற்றிக்கொண்டிருக்கவில்லை. அதனால்தான் அவர் ஆட்சிக்கு வந்தவுடன் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இடஒதுக்கீட்டில் பொருளாதார உச்சவரம்பு ஒன்றைக் கொண்டு வந்து; ஒன்பதாயிரம் ரூபாய்க்கு மேல் ஆண்டு வருமானமுள்ளோர் பிற்படுத்தப்பட்டோர் அல்லர் என ஆணை பிறப்பிக்கப்பட்டது.

அரும்பாடுபட்டு, அறப்போர் பல புரிந்து, அய்யாவும் அண்ணாவும் படை திரட்டிப் பாதுகாத்த அந்த சமூகநீதியின் மீது எம்.ஜி.ஆர். ஆட்சியில் விழுந்த சம்மட்டி அடியைத் தடுத்து நிறுத்த தி.மு.கழகமும், சமூகநீதியில் அக்கறை கொண்டவர்களும் களம் அமைத்துக் கிளர்ச்சியில் ஈடுபட்டதைத் தொடர்ந்து - 1980 நாடாளுமன்றத் தேர்தலில் பெற்ற பாடத்தைக் கருத்திற் கொண்டு எம்.ஜி.ஆர். அவர்கள் பொருளாதார உச்ச வரம்பு ஆணையைத்

திரும்பப் பெற்றார். பிற்படுத்தப்பட்டோருக்கு சமூக அடிப்படையில் 35 சதவீதம் எனக் கழக ஆட்சியில் உயர்த்தியதை; 50 சதவீதம் என உயர்த்தியும் அறிவிக்கவேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டது. எனவே, அந்த அறிவிப்பு உணர்வு பூர்வமாக வந்ததல்ல! நாம் மகிழத்தக்க அளவுக்கு வந்தது எனினும்; யாருடைய கோபத்திலோ பிற்படுத்தப்பட்ட மக்களுக்குக் கிடைத்த லாபமாகவே அது அமைந்தது.

1989-ல் மீண்டும் கழக ஆட்சியில் பிற்படுத்தப்பட்டோர் 30 சதவீதம் - மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 20 சதவீதம் - தாழ்த்தப்பட்ட மக்கள் 18 சதவீதம் - மலைவாழ் மக்கள் 1 சதவீதம் என வகுத்து 69 சதவீதம் இடஒதுக்கீடு நிலை நிறுத்தப்பட்டதுடன்; மண்டல் கமிஷன் பரிந்துரையை அமல் நடத்தக் கோரி, பிரதமர் வி.பி. சிங்கை வேண்டிக்கொண்டு, சட்டப்பேரவையில் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. தேசிய முன்னணியிலும் கழகச் சார்பில் வலியுறுத்தப்பட்டது. சமூக நீதிக்காவலரான வி.பி. சிங் அவர்கள், மண்டல் பரிந்துரையை நடைமுறைப்படுத்த நாடாளுமன்றத்தில் அறிவிப்புச் செய்தார்.

அதன் காரணமாகவே; அயோத்தி இராமர் கோயிலைச் சாக்கிட்டு வி.பி. சிங் அவர்களின் ஆட்சியைக் கவிழ்க்க பாரதீய ஜனதாவும், காங்கிரசும் அணி சேர்ந்தபோது, அந்த அணியில் தன்னையும் இணைத்துக் கொண்டு நாடாளுமன்ற வாக்கெடுப்பில் சமூகநீதி ஆட்சியைச் சாய்த்தவர்தான் ஜெயலலிதா அவர்கள்!

அதுமட்டுமல்ல; இடஒதுக்கீடு என்பது பொருளாதார அடிப்படையில் அமைய வேண்டுமென்பதே தனது கருத்து என 1990 ஆம் ஆண்டு இந்து, எக்ஸ்பிரஸ் ஏடுகளுக்கு சிறப்புப் பேட்டி அளித்தவரும் ஜெயலலிதாதான் என்பதை மறந்து விட முடியாது!

ஆனால்; மண்டலை எதிர்த்து அரசியல் நடத்த முடியாது என்ற மக்களின் உணர்ச்சியைத் தெரிந்து கொண்ட பின்னர்; மண்டல் பரிந்துரைப்படி 27 சதவீதம் போதாது 50 சதவீதம் வேண்டும் என்று சட்டப் பேரவையில் தீர்மானம் கூட நிறைவேற்றினார். ஆனால் உண்மையான உணர்வு என்ன? அதனை 1990-ல் அவர் தந்த பேட்டியில்தான் காண வேண்டும்!

இப்போது உச்சநீதிமன்ற தீர்ப்பினால் 69 சதவீதம் மாநில இட ஒதுக்கீட்டுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. 50 சதவீதம் என்ற

தீர்ப்புக்கு ஏற்ப நடைமுறைப்படுத்துகிறோம் என்று நீதிமன்றத்தில் ஒப்புதல் அளித்துவிட்டு; இங்கு 69 சதவீதத்தை வலியுறுத்திப் புதிய சட்டம் மாநில அரசால் நிறைவேற்றப்படுகிறது. அந்தச் சட்டத்தை செல்லுபடியாக்க, நடைமுறைக்குக் கொண்டுவர, எந்தத் தீவிர முயற்சியும் மேற்கொள்ளாமல் - ஏதோ; ஒரு கண்துடைப்பு நாடகம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

என் செய்வது; எங்கெங்கிருந்தோ பஸ்களிலும் லாரிகளிலும் வாடகைக்கு அமர்த்தப்பட்ட கூட்டத்தினரிடம் எழுச்சியும் உணர்ச்சியும் கண்டிட இயலுமோ?

அஃதேபோல் திராவிட இயக்க உணர்வுகளுடன் ஒன்றி வளராதவர்கள் பெரும்பாலோர் இடம் பெற்றுள்ள ஓர் அமைப்பில், ஓரிருவர் அங்கே எடுத்துரைக்கும் அண்ணாவின் கொள்கை, கடலில் கரைத்த பெருங்காயமாகிவிடுகிறது!

இப்போது திடீரென முதலமைச்சர் டங்கல் திட்டத்தை எதிர்த்து வழக்கு தொடரப் போகிறார்! எப்போது? புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பெருச்சாளிக்கு; சுவரில் பொந்து போட்டுத்தருவதற்கு சம்மதம் தந்துவிட்டு, இப்போது அந்த பொந்து வழியாக டங்கல் என்ற சுண்டெலி வரக்கூடாது என்று தடுக்கப் பார்க்கிறார்.

டங்கல்; சுண்டெலியோ - பெருச்சாளியோ - காட்டெருமையோ - காண்டாமிருகமோ -- எதுவாக இருப்பினும்; அதனை எதிர்த்து முரசு கொட்டுவது எப்போது? முறிந்துவிட்டது அ.தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி என்ற முடிந்த முடிவு ஏற்பட்ட பிறகல்லவா முழங்குகிறது போர் முரசு!

டங்கலைப்பற்றி முதல்வர் ஜெயலலிதா முன்பு வெளியிட்ட அறிக்கையில் என்ன கூறியுள்ளார்?

> “117 உலக நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட டங்கல் ஒப்பந்தத்தை முழுமையாக இந்தியா ஏற்றுக் கொள்ளாது என்று அறிவிப்பது இந்திய நாட்டின் நலனுக்கு உகந்தது அல்ல என்பதோடு இந்தியாவின் ஏற்றுமதி - இறக்குமதி வாணிகமும், ஒட்டுமொத்த இந்திய பொருளாதாரமும் பாதிக்கக் கூடிய சூழ்நிலையும் உள்ளன.”

இப்படி அறிக்கை விட்டவர், இப்போது அந்த டங்கல் திட்டத்தையே எதிர்த்து வழக்காடப் போகிறாராம்!

இவற்றையெல்லாம் பார்க்கும்போதுதான் நான் கடிதத்தின் தொடக்கத்தில் குறிப்பிட்டுள்ளவற்றை மீண்டும் நினைவு கூர்கிறேன்.

"எந்த ஒரு செயலிலும் ஈடுபடும் போது அதில் மனம் ஒன்றியிருந்தால்தான் அந்தச் செயல் முழுமையாக நிறைவேறும். அதேபோல உதடு ஒன்று சொல்ல; உள்ளம் ஒன்று நினைத்திட ஊர் உலகத்திற்காகச் செய்யப்படும் காரியங்கள் வெறும் கண்துடைப்பாகவே கருதப்படும். இரத்தத்துடன் கலந்த உணர்வு, இதயத்துடிப்புடன் இணைந்த கொள்கை, இவைகளைச் செயல்படுத்தும்போதும் அல்லது இவற்றுக்காகப் போராடும்போதும் ஏற்படுகிற இயல்பான தன்மை ஒப்புக்குக் கூத்தடிக்கும் போது நிச்சயமாக இருக்காது! இருக்க முடியாது!"

அன்புள்ள,

மு. க.

27-03-1994

2117. கேடு பயக்கும் இந்த மூடுவிழா தேவையா?

உடன்பிறப்பே,

கல்விக் கண் திறந்த காமராசர் என்று தந்தை பெரியார் அவர்களால் அன்றைய முதலமைச்சர் காமராசர் அவர்கள் பாராட்டப் பெற்றமைக்குக் காரணம்; மிகக் குறைந்த மக்கள் தொகை கொண்ட கிராமப்பகுதிகளிலும் எழுத்து வாசனை பரவிட வேண்டுமென்பதற்காக ஆரம்பப்பள்ளிகளை அவர் திறந்ததுதான் என்பதை அனைவரும் அறிவோம். பள்ளிப் பிள்ளைகளின் மதிய உணவு திட்டத்துக்காக ஆசிரியர்களைப் பயன்படுத்தியது போன்ற குறைகள் இருந்தபோதிலும்; பட்டிக்காடுகளின் பக்கம் சுட்டுப்போட்டாலும் கல்வியறிவு இல்லாமற் போன நிலையை மாற்றிய பெருமை பெருந்தலைவர் காமராசர் அவர்களுக்கு உண்டு. அவரது திட்டப்படி கிராமப்புறங்களில் வாழும் மக்கள், தங்களது பிள்ளைகளை நெடுந்தொலைவில் உள்ள பள்ளிகளுக்கு அனுப்புவதைத் தவிர்த்து கூடுமானவரையில் தங்கள் தங்கள் கிராமப் பகுதிகளிலேயே அமைந்த ஆரம்பப் பள்ளிகளில் சேர்த்துப் படிக்க வைக்கும் வாய்ப்பு அரும்பியது.

அந்த அரும்பு, போதாகி, மலரவும் வேண்டுமல்லவா? அதற்காக கழக ஆட்சியில் நகரப் பகுதிகளில் மட்டுமே இருந்த கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள் கிராமாந்திரங்களுக்கு எட்டக்கூடிய பகுதிகளில் ஏராளமாகத் திறக்கப்பட்டன.

எனவே காமராசர் தொடங்கிய ஆரம்பப் பள்ளிகளில் அடியெடுத்து வைத்த கிராமாந்திர ஏழை எளிய மாணவர்கள், நகர்ப்புறங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமின்றி; அதற்கு அடுத்த கட்ட கல்வியறிவையும் - பட்டங்களையும் பெறுவதற்கேற்ப; அந்தக் கல்லூரிகள் வரை சென்றிடும் வாய்ப்பு எளிதாக்கப்பட்டது.

எஸ்.எஸ்.எல்.சி. வரையில் இலவசக் கல்வி எனக் காமராசர் அறிவித்திருந்ததைத் தொடர்ந்து கழக ஆட்சியில், பி.யு.சி. வரையில் இலவசக் கல்வி என வழங்கப்பட்டது.

அதுமட்டுமல்ல; ஏழை நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு இளங்கலைப் பட்டப்படிப்பு வரை இலவசமாக அளித்திட ஈ.வெ.ரா. நாகம்மையார் மகளிர் இலவசப் படிப்புத் திட்டமும் கழக அரசில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர் மரபினர் மாணவ, மாணவியர்க்கு கல்லூரி வகுப்பு வரையில் இலவசக் கல்வித்திட்டம் வருமானத்தைக் கணக்கில் கொள்ளாமல் நீட்டிக்கப்பட்டது.

பெற்றோர் ஆண்டு வருமானம் ரூபாய் 12,000 வரை உள்ள மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர் மரபினர் மாணவரில் முதலாவது மாணவருக்கு தொழிற்கல்வி இலவசமாக்கப்பட்டது.

அதே வருமான அளவுள்ள பிற்படுத்தப்பட்ட இனத்து மாணவரில் முதலாவது மாணவருக்கு பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்கப்பட்டது.

கிராமப்புற கல்வி வளர்ச்சியில் தனி கவனம் செலுத்தப்பட்டது. ஏராளமான பள்ளிகள் மேலும் மேலும் தொடங்கப்பட்டன.

இப்படியெல்லாம் கல்வி வளர்ச்சியில் அக்கறை காட்டப்பட்டு - படிப்பது தடுக்கப்பட்டிருந்த பாதகத்தை உடைத்தெறிந்து - சாதாரண, சாமானிய மக்களும் பெருங் கல்வியாளர்களாக, மேதைகளாக, பட்டம் பதவி பெற்ற பிரமுகர்களாக, அரசாங்கத்தில் பல்துறை அதிகாரிகளாக - இடம் பெறுவதற்கான வழிவகை செய்யப்பட்டது முன்பிருந்த அரசுகளால்!

ஆனால்; இன்றுள்ள ஜெயலலிதா அரசு வரும் கல்வியாண்டில் 1994 - 1995 சுமார் ஐயாயிரம் பள்ளிகளை மூடிவிடப் போவதாக அபாயச் சங்கு ஒலிக்கிறது. அதாவது ஐம்பது பேருக்குக் குறைவான மாணவர்கள் மட்டுமே இருக்கும் பள்ளிகளை மூடிவிட்டு; அங்குள்ள மாணவர்களையும், ஆசிரியர்களையும் வேறு பெரிய பள்ளிகளுடன் இணைத்திடத் திட்டம் தீட்டப்படுகிறது.

எல்லார்க்கும் கட்டாயக் கல்வி என்று அறிவிப்புகளும் - அறிவொளி இயக்க மாவட்டங்கள் என்ற ஆர்ப்பாட்ட விளம்பரங்களும் - ஒருபுறம்! இன்னொரு புறத்தில் இழுத்து

மூடுவோம் ஐயாயிரம் பள்ளிகளை என்று ஒரு நிலையெடுத்தால் - இந்த முரண்பாட்டை என்னென்று வர்ணிப்பது!

ஐம்பது பிள்ளைகளுக்குக் குறைவான பள்ளிகள் கட்டுப்படியாகவில்லை என்று காரணம் காட்டி, ஐயாயிரம் பள்ளிகளை மூடிவிட்டால்; அந்தப் பள்ளியில் பயின்ற மாணவர்கள் யாரும், வேறு பெரிய பள்ளிகளில் மாற்றப்படும்போது அவர்களின் படிப்பைத் தொடருவார்கள் என்பது என்ன நிச்சயம்?

தமிழகக் கல்வித் தருவின் தரம் ஏற்கெனவே தாழ்ந்து போயுள்ள வேளையில் - அந்தத் தருவின் கிளைகள் - கொப்புகள் - இலைகள் - செழிப்பிழந்து விளங்கும் நேரத்தில்; அந்தத் தருவைத் தாங்கிப் பிடித்திருக்கும் வேர்கள் போன்ற கிராமப்புறத்து பள்ளிகளையும் வெந்நீர் ஊற்றி அழித்துவிட்டால்; மேலும் ஒரு தலைமுறைக்கு மேலே தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, சாதாரண, சாமானிய, கிராமப்புறத்து மக்கள் தற்குறிகளாக வளரும் இழிநிலைதான் தமிழகத்தில் தோன்றும்!

ஒரு பள்ளிக்கு ஐம்பது மாணவர்கள் ஏன் வரவில்லை என்பதை ஆராய்ந்து, அதைச் சீர்படுத்த செயல்திட்டம் வகுக்க வேண்டும் - அல்லது ஐம்பதுக்கு குறைவான மாணவர்களே இருப்பினும் - அவர்களுக்கென அந்தப் பள்ளிகள் தொடர்ந்து நடத்திட ஆவன செய்திடல் வேண்டும் - இவ்வாறு நல்லது நினைப்பதை விட்டு விட்டு; ஐயாயிரம் பள்ளிகளுக்கு மூடு விழா எனத் தொடங்கி; அடியோடு அறிவுக்கண்ணைக் குத்திக் குடைந்துவிடக் கூடாது! எனவே; இந்த மூடுவிழா இளைய தலைமுறைக்குக் கேடு பயக்கும் என எச்சரிப்பது நம் கடமை!

அன்புள்ள,

மு. க.

28-03-1994

2118. நற்சான்றிதழை வைத்து நாக்கு வழிப்பதா?

உடன்பிறப்பே,

சமூகநீதிப் புரவலராகத் திகழ்ந்து, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ரட்சகி என்ற பட்டத்துக்கே ஜெயலலிதா அவர்கள்தான் உரியவர் என்றும் - கருணாநிதி ஆட்சி பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விரோதமான ஆட்சி என்றும் கருத்துப்பட மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஓர் அமைச்சர் பேசியிருப்பதாக தினமலர் ஏட்டிலே ஒரு செய்தி கண்டேன். அவர் அப்படிப் பேசியிருப்பார் என்று நான் முழுமையாக நம்பவில்லை. ஏனெனில் நான் பேசியவைகள், கழக முன்னணியினர் பேசியவைகள் தினமலரில் பல நேரங்களில் அப்படியே தலைகீழாகவும் - முரணாகவும் வெளியிடப்பட்டது உண்டு. அதுகுறித்து அந்த இதழின் அலுவலகங்களுக்கு தொலைபேசி மூலமும் தெரிவிக்கப்பட்டது உண்டு. எனவே, அந்த அமைச்சரின் பேச்சும் அதுபோலத் தவறாக வெளியிடப்பட்டிருக்கக்கூடும் என்றே நம்புவோமாக!

தினமலர் செய்தி இவ்வாறிருக்க; இதோ தினமணி நாளேட்டில் வந்துள்ள ஒரு செய்தியைப் பார்ப்போம். 69 சதவீத இட ஒதுக்கீட்டைப் பாதுகாத்திட சட்டம் கொண்டுவந்து; அதனை நடைமுறைப்படுத்திட மத்திய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தி வாதாடக்கூட முயற்சிகளைத் தீவிரமாக மேற்கொள்ளாத அ.தி.மு.க. ஆட்சி; அரசுத்துறை நியமனங்களில் இடஒதுக்கீடு கொள்கையைப் பின்பற்றாமல் ஓராண்டுக் காலமாகவே இரகசியமாகச் செயல்பட்டு வருவதை தினமணி சுட்டிக்காட்டியிருக்கிறது.

மார்ச் 28, 1994 அன்று தினமணியில் வந்துள்ள செய்தி வருமாறு :-

சென்னை, மார்ச் 27-

இடஒதுக்கீடு பற்றி பரவலாகப் பேசப்படும் இந்த நேரத்தில் அரசுத்துறைகளில் ஓசையின்றி அதிகாரிகளின் ஆசியோடு புதிய நியமனங்கள் இடதுக்கீடு இல்லாமலே நடைபெறுகின்றன.

அரசுக்குச் சொந்தமான பல்வேறு துறைகளில் புதிதாக ஆட்களை நியமிப்பது கடந்த ஓராண்டுக்கு மேலாக இரகசியமாக நடைபெற்று வருகிறது.

இதற்காக வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் அங்கு பதிவு செய்தவர்களை தேர்ந்தெடுக்கின்றனர்.

வகுப்புவாரியான இடஒதுக்கீடு கோட்டா இங்கே கிடையாது. ஆனால் வேறுவிதமான கோட்டாக்கள் மூலம் தங்களுக்கு வேண்டியவர்களை அரசாங்க வேலையில் சேர்க்கின்றனர்.

விளையாட்டு வீரர்களுக்கான கோட்டா, அரசாங்கத்திற்கு நிலம் தந்தவர்களுக்கு அரசில் வேலை தருவதில் முன்னுரிமை, உடல் ஊனமுற்றோருக்கான முன்னுரிமை, இசைக் கலைஞர்களின் வாரிசுக்கு வேலை போன்ற பல்வேறு கோட்டாக்கள் மூலம் இது போன்று ஆட்களை நியமிக்கின்றனர்.

வேலை வாய்ப்பு அலுவலகம், புதிதாக ஆட்கள் எந்த துறையில் நியமிக்கிறார்களோ அந்தத் துறை, ஆளும் கட்சி பிரமுகர்கள், வருவாய்த்துறை ஆகிய நான்கு துறைகளும் இதற்கு நான்கு வழியாக உள்ளன.

தகுதி வாய்ந்தவர்கள் இருந்த போதிலும் இந்த நான்கு வழிகளும் நன்கு தெரிந்தவர்கள் மட்டுமே உடனடியாக வேலை பெற்று விடுகின்றனர்.

உதாரணமாக மின்வாரியம், போக்குவரத்துத்துறை, மருத்துவத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இதுபோல் சிலர் வேலைகளில் சேர்ந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

சில வாரங்களுக்கு முன்பு ஒரே பகுதியைச்சேர்ந்த சுமார் 20 பேர் இந்த நான்கு வழியைப் பின்பற்றி போக்குவரத்துத்துறையில் வேலையில் சேர்ந்துள்ளனர்.

செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் ஒரே பகுதியிலிருந்து மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர்கள் வேலை பெற்ற விதம் வித்தியாசமானது.

ஒரு வேலை வாய்ப்பு அலுவலகத்தில் 1983 வரை பதிவு செய்துள்ளவர்களுக்குத்தான் தற்போது இதுபோன்ற வேலைக்கு இன்டர்வியு கார்டு அனுப்பப்படுகிறது. ஆனால் 1991-92-ல் புதிதாக பதிவு செய்தவர்கள் கூட இந்த கார்டை பெற்று தற்போது வேலையில் நுழைந்துள்ளனர். அவர்களுக்கு மட்டும் ஏன் எப்படி கார்டு வந்தது என சிலர் சந்தேகப்பட்டு மேலதிகாரியிடம் முறையிட்டனர். அவர்கள் முன்னுரிமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் பதில் கூறிவிட்டனர்.

இதையடுத்து பலர் அரசுக்கு நிலம் தந்ததாக சான்றிதழ் வாங்கி வந்து தந்து முன்னுரிமை அடிப்படையில் போக்குவரத்துக் கழகங்களில் வேலை பெற்றுள்ளனர். அவர்களில் தருமபுரியில் அரசுக்கு நிலம் தந்ததாக சான்றிதழில் கூறப்பட்டுள்ளது. உண்மையில் அவர்களுக்கு தருமபுரியில் நிலம் இருந்து அரசுக்கு தந்தார்களா அல்லது போலி சான்றிதழ் தந்து சேர்ந்தார்களா என்ற கேள்விக்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை.

தற்போது இதுபோன்று சான்றிதழ் தந்து வேலை பெற முற்படுவோரின் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. வேலை வாய்ப்பகங்களில் அவர்கள் தினந்தோறும் வந்து போவதைக் காண முடிகிறது.

இந்த சான்றிதழ் உண்மைதானா? அப்படி என்றால் அந்த நிலம் தற்போது எதற்கு பயன்படுகிறது? செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த அந்த நபர்கள் அனைவருமே எப்படி தருமபுரியில் நிலம் தந்திருக்க முடியும்? போன்ற கேள்விகளுக்கும் பதில் கிடைக்கவில்லை.

உடன்பிறப்பே, இந்த செய்தியின்படி இடஒதுக்கீடு என்பதில் இந்த ஆட்சியின் தலைவியாருக்கு உணர்வுபூர்வமான ஈடுபாடு இருக்க முடியாது என்பது எல்லோருக்கும் தெரிந்த

தெளிவான உண்மைதான். எனவே இடஒதுக்கீடும் அரசுப் பணி நியமனங்களில் புறக்கணிக்கப்பட்டு - வரிசைக்கிரமமாகவோ, முறைப்படியோ, நீண்ட கவனமாகக் காத்திருப்போருக்கு நியாயமான நியமனங்களும் புறந்தள்ளப்பட்டு - தவறான வழிகளில், தவறான ஆதாயங்களுக்காக - தவறான சான்றிதழ்கள் பெறப்பட்டு - லஞ்சலாவண்ணயங்களின் ஆலவட்டத்துடன் ரகசிய நியமனங்கள் செய்யப்பட்டு வருவதையும் இந்தச் செய்தியின் மூலம் துல்லியமாகப் புரிந்து கொள்ள முடிகிறது.

ஏற்கெனவே கழக அரசில் ஆசிரியர் நியமனங்களில்; அவர்கள் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து கொண்ட வரிசைப்படிதான் நியமனங்கள் நடைபெறவேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால், இந்த ஆட்சியில் அந்த ஆணை, வேறு பல விபரீதமான ஆதாயங்களுக்காகத் திரும்பப்பெறப்பட்டு - பழைய குருடி, கதவைத் திறடி என்ற நிலைமைக்கு வந்துவிட்டது.

தி.மு.க. ஆட்சியாக இருந்தால் ஆசிரியர்கள் வரிந்து கட்டிக் கொண்டு புறப்பட்டிருப்பார்கள் போராட்டத்துக்கு! ஆனால் இப்போது? குரல் எழுப்பிப் பார்த்தார்கள்! பாவம்; அந்தக் குரல் கோட்டைக்கே எட்டவில்லை!

வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட வரிசையின்படி நியமனம் செய்யும் முறையை; ஒருவர், தமது உரிமையாகப் பெறும் போது, இடைத்தரகர்கள் - இலஞ்சங்கள் - பேரங்கள் - எதற்கும் இடமில்லாமற் போய்விடும். கை நீட்டும் சில அதிகாரிகளுக்கோ, கையூட்டுப் பெறும் ஆளுங்கட்சியினருக்கோ அதனால் என்ன பயன்?

நேர்மையான நியமனம் என்ற நற்சான்று கிடைக்கும்! நற்சான்றை வைத்து நாக்கை வழித்துக் கொள்வதா?

நாலைஞ்சை லகரம் கையிலும் - பையிலும் புரள வேண்டுமானால்; நீதி, நேர்மை, விதிமுறை, கொள்கை, இவைகளையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தால் முன்னேற ? முடியுமா?

எவ்வளவு பெரிய பணக்காரன் என்ற கௌரவம் ஊரிலே வரும் தவிர, எப்படி வந்தது இவ்வளவு சொத்து என யார் கேட்பார்! கேட்டாலும் அவர் வாயை அடைத்திட வழியா இல்லை?

அந்தத் துணிவில் - இடஒதுக்கீடாவது மண்ணாங்கட்டியாவது; நேர்மையான வரிசைக்கிரம நியமனமாவது; வெங்காயமாவது அவைகளையெல்லாம் இந்த ஆட்சியில் எதிர்பார்க்காமல் ஆமாம் சாமிகளாக நடித்துக் கொண்டிருப்பவர்களுக்குத்தான் இதுகாலம்! அதுவே அபாரமான கெட்டிக்காரத்தனம்!

அன்புள்ள,

மு. க.

30-03-1994

2119. மார்க்சிஸ்டுகளுக்கு நம் மனமார்ந்த நன்றி!

உடன்பிறப்பே,

இறுதியாகவும் உறுதியாகவும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி; அது ஏற்கெனவே பல மாதங்களுக்கு முன்பு எடுத்திருந்த முடிவை - இடையில் ஏதேதோ சாக்குப் போக்குச் சொல்லி; நான் குடிக்கும் தண்ணீரை நீ கலக்காவிடினும்; உன் பாட்டன் பூட்டன் கலக்கியிருக்கக் கூடும் என்று சொன்ன ஓநாய் ஆட்டுக்குட்டி கதை போல; தி.மு.க.வுடன் தேர்தல் உடன்பாடு இல்லை என்று அறிவித்துள்ள சேதியை ஏப்ரல் முதல் நாள் வெளிவந்துள்ள ஏடுகளில் கண்டிருப்பாய்!

தேதியைக் கருதிப் பார்த்து ஒருவேளை சேதி தவறாக இருக்குமோ என நான் எண்ணியதுண்டு. ஆனால் செய்தி உண்மைதான் என்பதை அவர்களின் கட்சி ஏடே வெளியிட்டு விட்டபிறகு ஐயத்துக்கு இடமில்லை என்று ஆகிவிட்டது.

இப்படி ஒரு முடிவெடுத்து, தி.மு.க. உறவைத் துண்டித்துக்கொண்டு புதிய அணி அமைத்திடும் நோக்கத்துடன் அவர்கள் நீண்ட காலத்திற்கு முன்பே அடித்தளம் அமைத்து விட்டார்கள்.

இராணிப்பேட்டை சட்டமன்றத்திற்கும் பழனி நாடாளுமன்றத்திற்கும் இடைத் தேர்தல் நடைபெற்றபோது; மார்க்சிஸ்ட் கட்சி செய்த பிரச்சாரம் என்னவென்றால் - இராணிப்பேட்டையில் காங்கிரஸ், தி.மு.க.வுக்கு ரகசியமாக விட்டுக்கொடுத்து விட்டது. அதேபோல் பழனியில் காங்கிரசுக்கு, தி.மு.க. ரகசியமாக விட்டுக்கொடுத்து விட்டது என்பதாகும்.

ஆனால் அவர்கள் இட்டுக்கட்டிய அந்தச் செய்தி; வேண்டுமென்றே திட்டமிட்டு கூறப்பட்ட பழிச்சொல் என்பதை இராணிப்பேட்டையிலும், பழனியிலும் காங்கிரசை மூன்றாவது இடத்துக்குத் தள்ளிவிட்டு தி.மு.கழகம் இரண்டாவது

இடத்தைப் பெற்று மிகக் குறைந்த வாக்கு வித்தியாசத்தில்தான் வெற்றி வாய்ப்பை இழந்தது என்ற தேர்தல் முடிவு நிரூபித்துக் காட்டியுள்ளது.

இப்படியொரு அவதூறுப் பிரச்சாரத்தில் ஒரு சிலர் ஈடுபட்டபோது; உடனடியாகக் கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் அதனை மறுத்து இடைத்தேர்தலுக்கு இரண்டு நாளைக்கு முன்பே பழனியில் பத்திரிகையாளர்களுக்கு பேட்டி கொடுத்ததுடன், வேட்பாளர்கள் சார்பிலும் மறுப்பு தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டவுடன் 27.9.93 அன்று கழகத் தலைவர் என்ற முறையில் நான் வெளியிட்டுள்ள அறிக்கையில் - அவதூறுப் பிரச்சாரத்திற்கு எதிரான ஆதாரபூர்வமான விளக்கத்தையும் அளித்திருக்கிறேன். அந்த அறிக்கையை இதோ மீண்டும் நினைவூட்டுகிறேன் :-

> பழனி, இராணிப்பேட்டை தொகுதிகளில் தி.மு.க. வேட்பாளர்களுக்கு கடந்த தேர்தலை காட்டிலும் பெருவாரியான வாக்குகளை வழங்கிய, விழிப்புணர்ச்சி பெற்ற வாக்காளப் பெருமக்களுக்கும், தேர்தல் பணியினைப் - பெரும் உழைப்பை நல்கி ஆற்றிய கழக உடன்பிறப்புகளுக்கும் மற்றும் தோழமைக் கட்சிகளின் செயல் வீரர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுங்கட்சியின் அராஜகத்தால் அவதியுற்ற தோழர்களுக்கு என் ஆழ்ந்த ஆறுதல் வழங்குகிறேன்.
>
> அதே நேரத்தில் மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கை கண்டு அதிர்ச்சியுற்ற நான் பின்வரும் விளக்கத்தையும் முன் வைக்கிறேன்.
>
> செப்டம்பர் 20-ஆம் தேதி நடைபெற்ற இடைத் தேர்தல்களில் இராணிப்பேட்டையில் தி.மு.க.வுக்கு காங்கிரஸ் ஓட்டு போடுவதென்றும், பழனியில் காங்கிரசுக்கு தி.மு.க. ஓட்டு போடுவதென்றும் உடன்பாடு செய்து கொள்ளப்பட்டதாக மார்க்சிஸ்ட் கட்சியின் செயலாளர் நல்லசிவன் விடுத்துள்ள அறிக்கை எவ்வளவு தவறானது என்பது இரு தொகுதிகளிலும்

கழகம் பெற்றுள்ள வாக்குகளைப் பார்த்தாலே விளங்கிவிடும்.

இராணிப்பேட்டை தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் கடைசிக் கட்டத்தில் ஆளுங்கட்சியான அ.தி.மு.க. வீசிய வலையில் தனிப்பட்ட முறையில் விழுந்து விட்டார் என்பதே எங்களுக்குக் கிடைத்த தகவல். இந்தத் தகவல் சரியில்லாமல் கூட இருக்கலாம். ஆனால் அவரது திடீர் வாபஸ் மூலம் காங்கிரஸ் ஆதரவு வாக்குகளின் பெரும்பாலான வன்னிய சமுதாயத்தினரின் வாக்குகள் அ.தி.மு.க.வின் வன்னிய சமூக வேட்பாளருக்குக் கிடைத்துள்ளன. இந்த உண்மையை அ.தி.மு.க. வேட்பாளரே ஒப்புக் கொண்டு தினமலரில் அறிக்கையும் விடுத்துள்ளார்.

பழனி நாடாளுமன்றத் தொகுதியில் 1991 தேர்தலில் இரண்டரை லட்சம் வாக்குகளுக்கு அதிகமான வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்த தி.மு.க. இந்த இடைத் தேர்தலில் மிகக் குறைவான வாக்கு வித்தியாசத்தில் இரண்டாவது இடம் பெற்றிருப்பதும், முதலிடத்திலிருந்த காங்கிரஸ் மூன்றாவது இடத்திற்குப் போயிருப்பதும் தோழர் நல்லசிவன் எம்.பி. அவர்களின் கூற்றினைப் பொய்யாக்கப் போதுமான ஆதாரமாகும்.

கோடிக்கணக்கில் ஆளுங்கட்சி செலவிட்டு, அதிகார துஷ்பிரயோகம் செய்தும், அராஜகம் நடத்தியும், தேர்தல் விதிமுறைகளை மீறியும், தேர்தல் கமிஷனின் ஆணைப்படி அடிக்கடி தேதி மாற்றப்பட்டும் நடத்தப்பட்ட தேர்தலில் தி.மு.க.வுக்கு தேர்தல் பணிக்கு நாட்கள் போதாத நிலையில் குறைவாகச் செலவிட்டு, மிகுந்த எளிய முறையில் தேர்தலைச் சந்தித்து கடந்த தேர்தலைக் காட்டிலும் பெரும் அளவுக்கு வாக்குகளை அதிகமாகப் பெற்றிருப்பது தமிழகத்தில் விரைவில் இருள் விலகுவதற்கான ஓர் அறிகுறியேயாகும் என்பது என் நம்பிக்கையாகும்.

பழனியில் தி.மு.க. பிரச்சாரம் நடைபெறவில்லையென்று நல்லசிவன் கூறியிருப்பது நல்ல கற்பனை.

செப்டம்பர் 10 முதல் 15 இரவு முடிய ஆறு நாட்களில் நான் மட்டுமே பழனித் தொகுதியில் இரண்டாயிரம் கிலோ மீட்டர்களுக்கு மேல் பயணம் செய்து நூற்றுக்கணக்கான கிராமங்களிலும் நகரங்களிலும் மாலை 4 மணி முதல் மறுநாள் விடியற்காலை 4 மணி வரை பிரச்சாரம் செய்துள்ளேன். கழக முன்னணிப் பேச்சாளர்களும் பல கூட்டங்களில் கலந்து கொண்டுள்ளனர்.

இதைப்பற்றிப் பேசவில்லை, அதைப்பற்றிப் பேசவில்லை என்றெல்லாம் அவரது அறிக்கை குற்றம் சாட்டுகிறது. தேர்தல் நேரத்தில் எதைப்பற்றி எப்படிப் பேச வேண்டுமென்றெல்லாம் தி.மு.க. யாரிடமும் பாடம் கேட்க வேண்டிய அளவுக்கு பரிதாபகரமான நிலையில் இல்லை. எந்தப்பிரிவு மக்களுக்கு எதை விளக்க வேண்டுமென்று தி.மு.க. முன்னணிப் பேச்சாளர்களுக்குத் தெரியும்.

வெளியில் வேகமாக எதிர்த்துப் பேசுவதும் அதேசமயம் மேலிடத்துடன் குலாவிக் கொண்டு மறைமுகமாக ஆதரவு வழங்குவதும் போன்ற ரகசிய நடவடிக்கைகள் ஒரு சில அரசியல் கட்சிகளுக்குத்தான் கைவந்த கலை. அந்தக் கலையை தி.மு.க. கற்றுக் கொண்டதுமில்லை, விரும்பியதுமில்லை. தி.மு.க. ஒரு திறந்த புத்தகம். ஒரு ஜனநாயக அமைப்பு. ரகசிய நடவடிக்கைகளில் ஈடுபடும் பழக்கம் அதற்கு கிடையாது என்பதை தமிழ் மக்கள் அறிவர்.

அரசியல் ரீதியாக எடுக்கும் எந்தவொரு முடிவாக இருந்தாலும் அது தமிழகத்தின் வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்தக் கூடியதாக இருக்கவேண்டுமென்றும், இந்திய நாட்டு ஜனநாயகத்தைக் காப்பாற்றக் கூடியதாக இருக்க வேண்டுமென்றும், சிறுபான்மை யினருக்குப் பாதுகாப்பாக அமைய வேண்டுமென்றும், சமூகநீதியை உறுதிப்படுத்துவதாகவும், மதவெறியை மாய்த்து மனிதநேயம் காத்திடக் கூடியதாக விளங்க வேண்டுமென்றும், உழைக்கும் மக்களின் உரிமைகளை நிலைநாட்டக் கூடியதாகத் திகழ வேண்டுமென்றும் எண்ணிச் செயல்பட்டு வருவதுதான் தி.மு.கழகம் எனவே, கழகத்தின் இந்தக் குறிக்கோள்கள்

நிறைவேறிட எடுக்கப்படும் எந்தவொரு முடிவும் கட்சிக்குள் விவாதித்து வெளிப்படையாக அறிவித்து எடுக்கப்படுமேயல்லாமல் ஒளிவுமறைவாக இருக்காது என்பதையும் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இடைத்தேர்தல் குறித்து சில பத்திரிகைகளில் விஷமச் செய்திகள் வெளியிடப்பட்டதை அவ்வப்போது தி.மு.க. சார்பில் மறுத்திருந்தும் அதைக் கண்டு கொள்ளாமலும் அது பற்றிய விவரம் நம்மிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளாமலும் மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு சார்பில் நல்லசிவன் எம்.பி. அவர்கள் இப்படியொரு திசை திருப்பும் அறிக்கை வெளியிட்டிருப்பது உள் நோக்கம் கொண்டதாக இருக்குமோ என்று ஐயுறுகிறேன்.

27.9.93-ல் அளிக்கப்பட்ட எனது இந்த விளக்கத்திற்குப் பிறகும் மார்க்சிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரான நண்பர் உமாநாத் அவர்கள் கழகத்தைக் கடுமையாகச் சாடி ஒரு கூட்டத்தில் பேசினார். அவரது பேச்சு குறித்து 1.10.93 முரசொலியில் ஒரு விளக்கத்தை கேள்வி - பதில் பாணியில் அளித்திருந்தேன். அது வருமாறு :-

கேள்வி :- உங்களுக்கு ஆதரவாக இராணிப்பேட்டையில் வாபஸ் வாங்கும் காங்கிரஸ் உங்களிடமிருந்து எந்தப் பிரதி பலனையும் உத்திரவாதப்படுத்தாமல் வாபஸ் வாங்கியதா என்பதை நண்பர் கருணாநிதி கூறவேண்டும்! என்று சென்னையில் உமாநாத் பேசியுள்ளதை அவரது கட்சி ஏடு வெளியிட்டுள்ளதே?

பதில் :- இரண்டு நாட்களுக்கு முன்பு தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் திரு. வாழப்பாடி இராமமூர்த்தி அவர்கள் அளித்துள்ள பேட்டியொன்றில் இராணிப்பேட்டை தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் தன்னிச்சையாக வாபஸ் வாங்கிவிட்டார் என்றும் கட்சியைக் கேட்டு வாபஸ் வாங்கவில்லை என்றும் கூறியுள்ளார். இராணிப்பேட்டை காங்கிரஸ் வேட்பாளர் ஒரு பஸ் உரிமையாளர் - அது மட்டுமல்ல; வன்னிய சமுதாயத்தைச் சேர்ந்தவர். அவர் தி.மு.க.விடம்

பிரதிபலன் பெற்று வாபஸ் வாங்கினார் என்று வாதத்திற்கு வைத்துக் கொண்டால்கூட அதனால் தி.மு.க.வுக்கு எந்த பயனும் விளையாது என்பது கழகத் தலைமைக்கும் கழக வேட்பாளர் வீராசாமிக்கும் நன்றாகவே தெரியும். எனவே காங்கிரஸ் வேட்பாளருக்கு விழ இருந்த வன்னிய சமுதாயத்து வாக்குகள் சுமார் 15,000 வாக்குகள் அ.தி.மு.க.வுக்கு கிடைத்தன. எனவே திரு. உமாநாத் அவர்கள் குறிப்பிடும் பிரதிபலன் என்பது எதுவாக இருப்பினும் அதுகுறித்த விபரத்தை அவர் அ.தி.மு.க.விடமும், வாபஸ் பெற்ற காங்கிரஸ் வேட்பாளர் துளசி நாயக்கரிடமும்தான் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். இராணிப்பேட்டையில் காங்கிரஸ் வேட்பாளர் தன்னிச்சையாக வாபஸ் பெற்றதால் அனைத்தும் அ.தி.மு.க.வுக்கே விழுந்துள்ளன என்று வெற்றி பெற்ற வன்னிய சமுதாயத்தைச் சேர்ந்த அ.தி.மு.க. வேட்பாளர் தினமலர் ஏட்டில் அறிக்கையே கொடுத்திருக்கிறார். அ.தி.மு.க.விடம் பிரதிபலன் பெற்று வாபஸ் வாங்கியவர்; ஆமாம் நான் அ.தி.மு.க. ஜெயிப்பதற்காகத்தான் வாபஸ் வாங்கினேன் என்று சொல்லியா சிக்கிக் கொள்வார்! இது திரு. உமாநாத்துக்கு தெரியாததல்ல; தெரிந்த உண்மையை மறைத்திட அவர் கற்ற வித்தையைக் காட்டுகிறார். இராணிப்பேட்டையில் காங்கிரஸ் வாபஸ் என்பதால் தி.மு.க.வுக்கு நஷ்டமே தவிர, லாபம் அல்ல! காங்கிரஸ் ஓட்டு கிடைத்ததால்தான் இராணிப்பேட்டையில் தி.மு.க. அதிக ஓட்டு பெற முடிந்தது என்பது சொத்தையான வாதம்! அப்படியானால் பழனி நாடாளுமன்றத் தொகுதியில் தி.மு.க. அதிக வாக்குகளைப் பெற்றிருப்பதற்கும் காங்கிரஸ் ஓட்டு கிடைத்ததுதான் காரணமா? ஆம் என்றால் பிறகு பழனிக்கும் ராணிப்பேட்டைக்கும் ரகசிய உடன்பாடு என்ற பேத்தல் புலம்பலுக்கு பொருள்தான் என்ன?

உடன்பிறப்பே; இவற்றுக்குப் பிறகு, நான் சுற்றுப்பயணம் சென்ற ஊர்களில் எல்லாம் செய்தியாளர்கள் என்னைச் சூழ்ந்துகொண்டு காங்கிரஸ் - தி.மு.க. தேர்தல் உடன்பாடு உண்டா என்று கேட்டபோதெல்லாம் திட்டவட்டமாக இல்லை என்றே கூறியிருக்கிறேன்.

பிரண்ட் லைன் ஆங்கில ஏட்டிற்கு 93-டிசம்பர் 13-ந் தேதியிட்ட இதழ் நான் அளித்த பேட்டியிலும் காங்கிரசுடன் கூட்டணி என்று எப்போதுமே கூறியதில்லை என்பதை விளக்கியிருக்கிறேன். அது மட்டுமின்றி அதே பேட்டியில் -

> எந்த நேரத்திலும், எப்போதும், காங்கிரசுடன் கூட்டணி ஏற்படும் என்று நான் கூறவில்லை. இராணிப்பேட்டை, பழனி இடைத்தேர்தலின் போது காங்கிரசுடன் தி.மு.க. இரகசிய உறவு கொண்டிருந்ததாக மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சி ஒரு தவறான பிரச்சாரத்தைச் செய்தது. ஆனால் இரு தொகுதிகளிலும், தி.மு.கழகத்துக்குக் கிடைத்துள்ள வாக்குகள் மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சியின் பிரச்சாரம் தவறு என்பதை நிரூபித்து விட்டது. அதற்குப் பிறகும் மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சி தன் நிலையை மாற்றிக் கொள்ளவில்லை. அவர்கள் எப்போது மாற்றிக் கொள்வார்கள் என்று எனக்குத் தெரியவில்லை

- என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

அதன் பிறகு 1.2.94 அன்று புதுவையில் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியின் போதும் காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணி ஏற்படுமா? என்ற கேள்விக்கு அதுபற்றிய பேச்சே கிடையாது - என்று திட்டவட்டமாக பதிலளித்திருக்கிறேன்.

அதே பிப்ரவரி மாதம் 13-ந் தேதி - கும்பகோணத்தில் தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி ஏற்படுமா என்று - நிருபர்கள் கேட்டபோது தி.மு.க. - காங்கிரஸ் உறவு ஏற்பட எந்தவிதமான சாத்தியக்கூறும் கிடையாது என்று மேலும் உறுதிபடக் கூறியிருக்கிறேன்.

மார்ச் 4-ந் தேதி மதுரையில் அளித்த பேட்டியிலும் தி.மு.க. - காங்கிரஸ் உறவு என்பதே கிடையாது என்று வாழப்பாடி ராமமூர்த்தி சொல்லியிருக்கிறாரே என்ற கேள்விக்கு வாழப்பாடி அவர்கள் சொன்னதையே திட்டவட்டமாக நானும் சொல்கிறேன் என்று பதிலளித்திருக்கிறேன். நெல்லை நிருபர்கள் கூட்டத்தில் காங்கிரசுடன் உறவு உண்டா என்ற வினா எழுந்தபோது நெல்லையில் சொல்லுகிறேன் இல்லை! என்றே பதிலளித்துள்ளேன்.

மார்ச் 20-ந் தேதி மதுரையில் காங்கிரசுடன் கூட்டணி இல்லை என்று சொல்லி விட்டீர்கள்; இருந்தாலும் மாறி வரும் சூழ்நிலையில்

அதற்கான வாய்ப்பு ஏதும் உள்ளதா? என்ற கேள்விக்கு - காங்கிரசுடன் கூட்டணி இல்லை என்பதை ஏற்கெனவே நான் பலமுறை திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறேன். திரும்பத் திரும்ப அதைச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை என்று மறுத்திருக்கிறேன்.

ஜனதாதளத்துடன் சந்திரசேகர் கட்சியும் அஜீத் சிங் கட்சியும் இணைந்தபோது தான் எனது அதிருப்தியை வெளியிட்டு, தேசிய முன்னணியுடன் பாராளுமன்ற அளவில் உறவு நீடிக்கிறது எனினும்; இப்போது தேசிய முன்னணி இயங்காமல் உள்ள நிலையில் அது குறித்து கழகத்தின் நிர்வாகக் குழுவோ, செயற்குழுவோதான் முடிவெடுக்கு மென்றும் - என்றைக்கும் திரு. வி.பி. சிங்கிடம் கழகத்திற்குள்ள நல்லெண்ணம் மாறாது என்றும் பதில் அளித்திருக்கிறேன்.

இவ்வளவுக்கும் பிறகு; மார்க்சிஸ்ட் கட்சி, திட்டமிட்டு எடுத்த முடிவுக்கு ஏதோ ஒரு காரணம் கூற வேண்டுமென்று தி.மு.கழகம்; காங்கிரஸ் உறவு குறித்து ஊசலாட்டத்தில் இருக்கிறது என்று நண்பர் நல்லசிவன் அவர்கள் கூறியிருப்பது கவைக்குதவாத வாதமாகும்.

பத்தாண்டு காலம் தொடர்ந்து ஓரணியில் நின்று மக்கள் பிரச்சினைகளுக்காக கொள்கை மாற்றத்தில் வலுவில் ஏற்படுத்திக்கொண்டு, தி.மு.கழகத்திடமிருந்து பிரிந்து செல்லும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், அதன் தலைவர்கள், தொண்டர்கள், அனைவருக்கும் - அவர்கள் இதுவரையில் நம்முடன் ஓரணியில் நின்று பணியாற்றியதை மக்கள் விரோத சக்திகளை எதிர்த்துப் போராடியதை நினைவு கூர்ந்து, கழகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்வோமாக!

அன்புள்ள,

மு. க.

02-04-1994

2120. ஓர் ஏமாளிப் பெண்ணின் எலும்புக்கூடு!

உடன்பிறப்பே,

போலி வேடதாரிகளை நம்பாதீர்கள் என்று எத்தனை காலம் - எத்தனை பேர் - பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்தாலும்; ஆண்டவன் பெயரால், ஆன்மீகத்தின் பெயரால், அற்புத சித்து விளையாட்டுக்களைக்காட்டி மக்களை ஏமாற்றும் நாடகம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதானிருக்கிறது. விஷமி ஒருவனின் வேடம் கலைந்த செய்தி விளம்பரமான பிறகும்கூட; சில காலம் இடைவேளைக்குப் பிறகு இன்னொரு எத்தன் தோன்றுகிறான்.

அறிஞர் அண்ணா எழுதிய வேலைக்காரி படத்தின் பண்டாரப் பக்கிரி எனும் கொலைகாரன் ஒருவன், காவி கமண்டலங்களுடன் பக்தர்களுக்குப் பகலில் தரிசனம் கொடுத்துவிட்டு; இரவில் கொடியிடை மாதரின் தரிசனத்துக்காகக் காத்துக் கிடப்பானே; அவனைப்போல எத்தனைபேர் பிரமச்சாரி வேடம் புனைந்து பெண்கள் பலரைக் கற்பழித்துக் கொலையும் புரிந்துள்ளனர் என்ற செய்திகளை அடிக்கடி, நாட்டின் பல திசைகளிலுமிருந்து ஏடுகள் தாங்கி வந்த போதிலும்; அதனைப் படித்து உண்மை உணர்ந்தோர்; சில நாட்கள் கழித்து தமது தலைவலிக்கோ, வயிற்று வலிக்கோ, அல்லது பதவிக்கோ - உத்தியோக உயர்வுக்கோ அத்தகைய போலிச்சாமியார்களை நாடித்தான் சென்று பணத்தையும் இழந்து பகுத்தறிவையும் இழந்து நிற்கின்றனர்.

குமரி முதல் இமயம் வரையில் இந்தச் சாமியார்களின் கால்களில் விழுந்து கிடக்கும் பக்தர்கள் மட்டுமல்ல; குடிசைகள் முதல் டெல்லிக் கோட்டை வரையிலே சாமியார்களின் ராஜகுருத்தனம் வேலை செய்யாமல்; அவர்தம் காலைத்தொட்டு வணங்காமல்; அன்றாட வாழ்க்கையும் அரசு இயந்திரமும் இயங்காது என்ற நிலை இருக்கிறதென்றால் இந்த நாடு உருப்படும் என்பது கனவா? அல்லது கானல் நீரா?

மதச்சார்பற்ற கொள்கை என்பது பகுத்தறிவின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற குறைந்தபட்ச நிலையைக்கூட மேற்கொள்ளாமல்; எந்த மதத்திலிருந்து புறப்படுகிற எத்தகைய எத்தர்களாயிருப்பினும் அவர்களிடம் கோலேந்திகளே குப்புற விழுந்து கும்பிட்டுக் கிடக்கின்றனர் என்கிறபோது; சாதாரண மக்கள் கதி என்ன?

வழிகாட்ட வேண்டியவர்களே வழி தவறிப் போனால்; ஏமாற்றுக்காரர்களின் வேட்டைக் காடாக நாடு மாறிவிடுவதைத் தடுத்திட இயலுமா?

இதோ ஒரு செய்தி; சாமியார் பிரச்சினையில் தொடங்கி, சொத்துப் பிரச்சினையில் சிகரமேறி, கொலை என முடிந்த பயங்கரமான தொடர்கதை பெங்களூரில் நடைபெற்றிருக்கிறது.

ஆணை மயக்கி அடிமைப்படுத்தும் பெண் சாமிகள்; பெண்ணை மயக்கி வலையில் வீழ்த்தும் ஆண் சாமிகள் - பொதுவாக வளமான சொத்துக்களை தம் வசப்படுத்திக் கொள்வதிலேயே குறியாக இருந்து; அதற்காகவே மையலாகினேன் உன் மீதே! மானே! தேனே! கண்ணா! மன்னா! என்றெல்லாம் கொஞ்சிக் குலவி; குறிக்கோள் நிறைவேறி கொள்ளை சொத்துக்களைத் தம் பெயருக்கு மாற்றிக் கொண்டவுடன் கொலையில் கதையை முடிப்பர்! அல்லது உயிருடன் வைத்தே நாள்தோறும் கொலை செய்து கொண்டு இருப்பர்!

இவை, பல வருடங்களாக நடக்கும் பயங்கர மோசடிகள்! பக்தியின் பேரால்! ஆம்; நெற்றி முழுதும் திருநீறு - சந்தனப் பொட்டு - காவி உடை - இப்படி ஆண் வேடதாரிகள்! விரிந்த நுதலில் விபூதிப்பட்டை, குங்குமப்பூச்சு, உதடுகளில் பகவத்நாம உச்சரிப்பு - இப்படிப் பெண் வேடதாரிகள்! இந்த வேடங்களால் பல விபரீதங்கள் விளைந்தும் இன்னும் பாடங்களைப் பெறாத வெகுளிகளாக மக்கள் இருக்கிறார்களே; என்பதுதான் பெருங் கவலை!

இற்றை நாளில் ஏடுகளில் வெளிவந்துள்ள பெங்களூர் செய்தியில் சிரத்தானந்தா என்ற சாமியாரிடம் ஏமாந்து மடிந்த பெண் என்ன; அறியாச் சிறுமியா? பட்டிக்காட்டு மங்கையா? இல்லையே!

ஆஸ்திரேலியாவில் இந்தியத்தூதராக இருப்பவரின் துணைவியார்! நாற்பத்தி ஆறு வயதுள்ள அந்தப் பெண்மணிக்கு நாலு பிள்ளைகள்! சாமி சிரத்தானந்தா அவரை சந்தித்தான்! முதலில் பக்தியில் ஆழ்ந்தனர்! பிறகு பரவசத்தில் ஆழ்ந்தனர்! கணவனையே துறந்து அந்தக் கபடச் சாமியுடன் அந்தப் பெண்மணி காதல் சரசமாடினாள்; ஆம்; நாலு பிள்ளைகளைப் பெற்ற பிறகும் காமவேட்டை; அதுவும் அயலானுடன்! என் செய்வது; ஆண்டவனே சாமியார் உருவில் வந்து ஆட்கொள்ளும்போது!

சொர்க்கத்தைச் சாமியாரிடம் அனுபவித்துக் கொண்டே, ஆறு கோடி ரூபாய் சொத்தை அந்தக் காமுகனிடம் அவள் இழந்தாள்! சொத்து முழுமைக்கும் உரியவனாகும்வரை காத்திருந்தான் அந்தக் கயவன்!

மஞ்சத்தில் அடிக்கடி மயங்கித் தழுவிய அந்த மாதுக்கு ஒரேடியாக மயக்க மாத்திரை கொடுத்தான் - அருந்தினாள் விருந்தென்று; ஆனால் அழுந்தினாள் மண்ணுக்குள் உயிரோடு சமாதியாக!

இரண்டு ஆண்டுகள் முழுமையாக முடிந்து அந்தக் கட்டுடல் கொண்டவளின் எலும்புக் கூடு மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது!

பக்தி மோகம் - பகுத்தறிவை இழந்த மூட நம்பிக்கை - நம்பியிருந்தவனுக்கு இழைத்த துரோகம் - நாலு பிள்ளை பெற்றவளின் நடத்தை கெட்ட தனம் - இத்தனை காரணங்களின் முடிவுதான் அந்த எலும்புக் கூடு எனினும்; இனியும் இந்த அநியாயங்கள்; ஆண்டவன் பேரால், பக்தியின் பேரால் நடைபெறாமல் இருக்க இது போன்ற சாமியார்களின் நடவடிக்கைகளை இந்திய அரசும், மாநில அரசுகளும் கண்காணிக்குமா? அல்லது அவர்களின் காலடிகளே சரணம் எனக் கூறிக்கிடக்குமா?

அன்புள்ள,

மு. க.

03-04-1994

2121. ஆரம்பமே அத்துமீறும் செயலா?

உடன்பிறப்பே,

தேர்தல்கள் நேர்மையாகவும், எள் முனையளவும் ஊழலுக்கு இடமின்றியும் நடைபெறவேண்டுமென்பதில் தலைமைத் தேர்தல் ஆணையம் மிகுந்த அக்கறையுடனும் ஆர்வத்துடனும் தொடர்ந்து அறிக்கைகள் விடுத்தும், நடவடிக்கைகள் மேற்கொண்டும் செயல்பட்டபோதிலும் - பெரும்பாலான இடங்களில் எண்ணற்ற ஊழல்கள், தேர்தல் விதிமுறைகளுக்கு புறம்பான காரியங்கள்; குறிப்பாகவும் சிறப்பாகவும் ஆளுங்கட்சியினரால் துணிச்சலுடன் நடைபெற்றுக் கொண்டுதானிருக்கின்றன.

பழனி நாடாளுமன்றத் தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலின்போது, அரசுத்துறை அலுவலர்களைக் கொண்டே எல்லா மின்சாரக் கம்பங்களிலும், சாலையோரத்து மரங்களிலும் அ.தி.மு.க. கொடியின் படங்களும், அக்கட்சியின் சின்னங்களும் பல்லாயிரக் கணக்கில் எழுதப்பட்டிருந்ததை நேரடியாகவே காண முடிந்தது. மதச் சின்னங்களைப் பயன்படுத்தித் தேர்தல் பிரச்சாரம் செய்யக் கூடாது என்பதற்குமாறாக; எம்.ஜி.ஆர். அவர்களை முருகனாகவும் ஜெயலலிதாவை வள்ளியாகவும் சித்தரித்து அ.தி.மு.க. தேர்தல் சின்னத்துடன் தொகுதி முழுதும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

தேர்தல் நேரத்தில் எந்த அளவுக்கு அ.தி.மு.க. அரசின் அதிகார துஷ்பிரயோகமும் - அமைச்சர்களின் அத்துமீறல் நடவடிக்கைகளும் - அரசு யந்திரங்கள், போக்குவரத்துக் கழக வாகனங்கள் - செய்தித்துறை வாகனங்கள் அனைத்தும் ஆளுங்கட்சித் தேர்தல் பணிக்குப் பயன்படுத்தப்பட்டன என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போன்ற உண்மையே ஆகும்.

காங்கேயம் இடைத் தேர்தலில் இராம. வீரப்பன் அவர்கள் போட்டியிட்டபோது ஏராளமான போலி வாக்குகள் பதிவு செய்யப்பட்டதற்கும் - புதுக்கோட்டையில் உள்ள அ.தி.மு.க.வினர்

காங்கேயம் தொகுதிக்கு வந்து வாக்குச் சாவடிகளில் கியூவில் நின்று வாக்களித்ததற்கும் அவர்களில் சிலர் ஆசிரியர்கள் என்பதற்கும் புகைப்பட ஆதாரங்களே சாட்சிகளாக உள்ளன. அந்தத் தேர்தல் வழக்கிலும், வழக்கு போட்டவரையே காணாத நிலை உருவாக்கப்பட்டு மீண்டும் அந்த வழக்கைச் செலுத்தவிடாமல் நீட்டிக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டிய நிலை!

எனவே பணம், பதவி, அதிகாரம் இவைகளைக் கொண்டு பல் இளிப்பான்களை விலைக்கு வாங்கிடவும் - பாமர மக்களை ஏமாற்றவும் - எப்படியும் வெற்றி பெற எத்தனைச் சித்து வேலைகள் உண்டோ; அத்தனையும் செய்து பார்த்து விடவும், இன்றைக்குள்ள ஆளுங்கட்சி எதைப்பற்றியும், யாரைப்பற்றியும் கவலைப்படாத அளவுக்கு கொம்பிலேறி உட்கார்ந்து கொண்டிருக்கிறது.

இந்த ஆட்சியில் நீதிமன்றங்களே சவாலுக்கு அழைக்கப்படுவதும் - அதைத் தாக்குப் பிடிக்க முடியாமல் நீதி தேவர்களே தவியாய்த் தவிப்பதும் - கெஞ்சினால் மிஞ்சி, மிஞ்சினால் கெஞ்சி; எஞ்சியுள்ள நீதி நெறிமுறைகளும் நிபந்தனையற்ற சரணாகதி அடைவதும் சகஜமாகிவிட்ட சர்க்காரில்; தேர்தலில் விதிமுறைகளாவது மண்ணாவது; எதுவுமே சீந்துவாரற்றுத்தான் போய்விடும்.

தலைமைத் தேர்தல் ஆணையம்; தேர்தல் விதிமுறைகள் மீறப்படக்கூடாது என்பதில் மிகுந்த கண்டிப்பாக இருப்பதற்கான அறிக்கைகள் ஆணித்தரமாக வந்து கொண்டிருக்கும் போதே; இதோ - மைலாப்பூர் இடைத்தேர்தலில் அ.தி.மு.க. அரசு, எத்தகைய முறைகேடுகளுக்கு இப்போதே கால்கோள் நடத்த முன்வந்துவிட்டது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டுதான் தென்சென்னை மாவட்ட செயலாளர் தம்பி சைதை கிட்டு, தேர்தல் கமிஷனுக்கு தெரியப்படுத்தியுள்ள புகாராகும்.

அந்தப் புகாரை அவர் தந்தி மூலம் டெல்லி தேர்தல் கமிஷனுக்கு அனுப்பி வைத்துள்ளார். புகார் என்ன?

மைலாப்பூர் தொகுதியில் உள்ளடங்கிய ஒரு சாலையில் - கடற்கரை அருகேயுள்ள இராணி மேரிக் கல்லூரியிலிருந்து மின்சாரத் தொடர்பு எடுத்து - மிகப்பெரிய மின்னணு விளம்பரமொன்று;

தமிழக அரசு செய்தி மக்கள் தொடர்புத் துறையினரால் கடந்த பத்து நாட்களாக இரவு நேரங்களில் காட்சியாக்கப்பட்டு வருகிறது.

அந்த மின்னணு விளம்பரத்தில் ஜெயலலிதா ஆட்சியின் சாதனைகள் - ஒன்றன்பின் ஒன்றாக ஒளிவிட்டுக் கொண்டு ஓடுகின்றன - ஜெயலலிதாவின் ஏழு விதமான மின் வண்ணப்படங்கள் அந்த விளம்பரத்தில் ஒவ்வொன்றாகச் சுழலுகின்றன. அரசின் துறையின் சார்பில், இடைத்தேர்தல் நடைபெறும் தொகுதியில்; இப்படியொரு சாதனை விளம்பரம்! கட்சி செய்யும் விளம்பரமல்ல! அரசு செய்யும் விளம்பரம்!

அதிலும் இவர்களுக்குக் கடுகத்தனை சம்பந்தமும் இல்லாத சாதனைகளை யெல்லாம்; அந்த விளம்பரச் சரவிளக்குகளில் காட்டி, மக்களை ஏமாற்றுகிறார்கள்.

அந்த மின்னணு விளம்பரத்தில் காட்டப்படும் முக்கிய சாதனைகளில் ஒன்று; ஜெயலலிதா பெயரால் போக்குவரத்துக் கழகம் கண்டது! இது பெரிய சாதனைதான்! உடன்பிறப்பே; சிரிக்காதே! அரசாங்க அலுவலர் இறந்தால் குடும்பப் பாதுகாப்பு நிதி - தி.மு.க. ஆட்சியில் தொடங்கியது; அதை இப்போது ஜெயலலிதாவின் சாதனையாக்கி விட்டார்கள்!

காவல்துறையினருக்குக் குடியிருப்பு வசதியாம்; ஏதோ இவர்கள் வந்துதான் அந்தத் திட்டத்தையே கண்டுபிடித்ததுபோல! பழைய சாதனையிது!

ஆதி திராவிடர், பழங்குடி மக்களுக்கு பத்து அம்ச திட்டமாம்! தி.மு.க. ஆட்சியின் அற்புத சாதனைகளையெல்லாம் சேர்த்து பத்தாகத் தொகுத்து; அதனைத் தங்கள் சாதனை என்கிறார்கள்!

நாமக்கல்லார் மாளிகை என அரசின் பத்து மாடிக் கட்டிடத்திற்குக் கழக அரசு பெயர் வைத்து அவர்கள் நினைவு போற்றியுள்ள நிலையில்; இவர்களும் அவருக்கு நினைவு மண்டபம் கட்டுகிறார்களாம் - அதுவும் ஒரு சாதனையாம்!

1995-ல் உலகத் தமிழர் மாநாடு நடத்தப் போகிற விளம்பரம்; இப்போதே மைலாப்பூர் தொகுதியில்! காரைக்குடியில் கழக ஆட்சி

கட்டிமுடித்த கவிஞர் கண்ணதாசன் மண்டபமும் இவர்களது சாதனைதானாம்!

இந்த சில சாதனைகள்; உதாரணத்திற்காக! மற்ற சாதனைகள் எந்த ஆட்சியில் தொடங்கின என்பதை மக்கள் அறிவார்கள்!

இடைத்தேர்தலுக்குத் தயாராகிக் கொண்டிருக்கும் ஒரு தொகுதியில்; பெரும் செலவில், அரசாங்கத்துறையின் பெயருடன், மிக ஆடம்பரமான மின்னணுத் தொடர் விளம்பரத்தை ஆளுங்கட்சி செய்து வருவதை; மாநிலத்திலே உள்ள தேர்தல் கமிஷன் இதுவரை கவனித்ததாகத் தெரியவில்லை.

மாவட்டச் செயலாளர், தலைமைத் தேர்தல் கமிஷனுக்குக் கொடுத்துள்ள தந்திக்குப் பிறகாவது உரியநடவடிக்கைகள் விதிமுறைப்படி மேற்கொள்ளப்படுமென்று எதிர்பார்ப்போமாக!

அன்புள்ள,

மு. க.

04-04-1994



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

டிசம்பர் 2022